**I think it is a record for all Parliaments, Indian or foreign.**

இந்த மாதிரியான நிலை நம்முடைய சபாநாயகர் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் என்னுடைய வாதமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நடவடிக்கை குறிப்பிலிருந்து 40 நிமிட நிகழ்ச்சிகள் எடுக்கப்பட்டது என்று சொல்லி அதற்காகக்கூட சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அதன் தொடர்பாக அலுவல் ஆய்வுக் குழுவில் நீண்ட நேரம் அது பற்றிப் பேசி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கைவிடுவது என்றும், அது போன்று இனிமேல் நிகழ்ச்சிகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதற்கு அவைத் தலைவர், அமைச்சர்கள் உள்பட எல்லோரும் அலுவல் ஆய்வுக் குழுவில் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பின் அந்தக் காரணத்தை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே காட்டவேண்டிய அவசியம் என்ன ?

திரு. கே. டி. கே. தங்கமணி : நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு காரணங்கள் சொல்ல வேண்டும். நான்கு விஷயங்களிலே இது ஒரு முக்கியமான விஷயம். அன்றைக்கு அந்த விஷயம் அதோடு முடிந்துவிட்டாலும், அந்த சம்பவம் இன்னும் போய்விடவில்லை. ஆனால் அதற்குப் பிறகு ஒரு நல்ல மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தனிப்பட்ட ஒருவருடைய கடிதத்தைப் படிக்கவேண்டுமென்றால், அந்தக் கடிதத்தைப் சபாநாயகர் பார்க்கவேண்டும். சம்பந்தப்பட்ட உறுப்பினரும் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு அதைச் சபைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த நிலை உண்மைதான். 40 நிமிஷம் அழிக்கப்பட்டிருக்கிறதே அந்த சம்பவமும் உண்மைதான்.

அடுத்தாற்போல் இந்தத் தீர்மானம் கொண்டு வருவதற்கு

**What was the immediate cause and what was the provocation.**

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை ரெய்ஸ் பண்ணினார்கள். எந்தப் பாயிண்ட் ஆப் ஆர்டர் அலௌ பண்ணியிருக்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணினால், கடைசியில் அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று கூடச் சொல்லலாம். எப்படி பாயிண்டு ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ண வேண்டும் என்பதற்குச் சில நியதிகளை வைத்திருக்கிறோம். அதற்குப் பிறகு சபாநாயகர்தான் அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும்.

அன்றைக்கு அம்மையார் எழுந்தார்கள், எழுந்தவுடனேயே " நீங்கள் எப்பொழுதும் இந்த மாதிரிதான். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி, வேறு ஏதாவது சொல்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டார்கள். அப்பொழுது நான் கூட சொன்னேன், "பொத்தாம் பொதுவாக ஜெனரலைஸேஷன் கூடாது; எப்பொழுதும் நீங்கள் அப்படித்தான்" என்று சொல்லக்கூடாது என்று சபாநாயகருக்கு ஒத்தாசை செய்வதாக நினைத்துச் சொன்னேன். சபாநாயகர் என்ன சொன்னார்கள், " நாளைக் காலையில் வேண்டு



மானால் சொல்கிறேன், எவ்வளவு முறை நீங்கள் இந்த மாதிரி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து வந்தீர்கள், எவ்வளவு ரிஜெக்ட் பண்ணியிருக்கிறேன் " என்று சொல்கிறேன் என்று கூறினார். உடனே அந்த மாதிரி சொல்லவும் செய்தார்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு சீனியர் மெம்பர், சட்டமன்ற அனுபவம் உள்ளவர். 4, 5 தடவை சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். அனுபவம் உள்ளவர்கள். படித்தவர்களும் கூட. படிப்பு இருக்கிறதோ, இல்லையோ சட்டமன்ற அனுபவம் உள்ளவர்கள். இப்பொழுதெல்லாம் படித்தவர் என்றால் டிஸ்குவாலிபிகேஷன். என்னைக் கூட கூறுவார்கள், 'நீங்கள் கூட பாரிஸ்டர் பட்டம் பெற்றிருக்கிறீர்கள், என்று. குவாலிபிகேஷனை விட்டுவிடுங்கள். சட்டமன்ற விதிகளுக்குட்பட்டு நான் நடந்துகொண்டிருக்கிறவன் என்ற முறையில் சொல்கிறேன். இந்த மாதிரி வரக்கூடிய காலத்தில் அனந்தநாயகி அவர்கள் போன்ற அனுபவம் உள்ளவர்களையே இவ்வாறு நடத்தினால் நாளைக்கு மற்றவர்களுக்கு என்ன நிலைமை ஏற்படும் ? உடனே எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் கலந்து இப்படி ஒரு தீர்மானத்தைக் கொடுத்தோம். இந்தத் தீர்மானத்தில் காரணம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அடுத்தாற்போல, நான் இன்னொரு விஷயத்தைச் சொல்கிறேன். இப்பொழுது ஆளும் கட்சியில் சில பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய சபாநாயகருக்கே தெரியும். சில பேர்கள் அமைச்சரைவிட அதிகமாகத் தாங்கள் சலுகை பெற்றவர்கள் போல எழுந்து நின்றால் யாரும் அவர்களை உட்காரச் சொல்ல முடியாது. அப்படி 2, 3 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனே அனுமதித்துவிடுகிறார்கள். அவர்களை அனுமதிக்காது போனால் அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

அவர்களை அனுமதிக்காவிட்டால் வேறு என்ன கஷ்டம் ஏற்படுமோ என்ற நிலையோ என்னவோ தெரியவில்லை. அந்த முறையில் பல தடவை நடந்திருக்கிறது. நான் கூட கேள்வி நேரத்தில் சில முக்கியமான கேள்வி வந்து, ஏதாவது எனக்கு விவரம் வேண்டுமென்றால், நான் படித்திருந்தால் உப கேள்வி கேட்க கையைத் தூக்குவேன், எனக்கு விஷயம் தெரியாமல் நான் கேட்க மாட்டேன். அந்த மாதிரி சில நேரங்களில் கூட நான் கை தூக்குகிறபொழுது என்னைக் கூப்பிடுவதில்லை. 'ஏன் இந்த மாதிரி நீங்கள் கை தூக்கினால் கூட, உங்களை உட்கார வைத்துவிடுகிறார்கள்; உங்களுக்கே அப்படியென்றால் எங்கள் பாடு என்ன ஆகும் " என்று என்னுடைய கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். அதைப் பற்றி நான் தவறாக நினைக்கவில்லை. எனக்கு சான்ஸ் இல்லையென்றும் சொல்லவில்லை. என் கட்சிக்காரர்கள் சொல்லியதைச் சொல்கிறேன். இந்த மாதிரி நிலைமை இருக்கிறது.

இன்னொரு முக்கியமான விஷயம் நான் சொல்ல வேண்டும். அதி... அரசியல் இருக்கிறது. எங்கே சூடு வந்துவிடுமோ என்னவோ என்று ... இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் இருக்கிறார்கள். எல்லோருக்கும் தெரியும். சில சமயங்களில் என்ன நடக்கிறது தெரியுமா ? இங்கே

பேசும்பொழுது நிகழ்ச்சிக் குறிப்பைப் பார்த்தால் தெரியும். குல்லாய் போட்டவர் அல்லது பவுடர் பூசுகிறவர், நடிகர், கிழ நடிகர் என்று இம்மாதிரியான வார்த்தைகளைக் கேள்விகளில் கொஞ்சம் நாசூக்காக சேர்த்து விடுகிறார்கள். இம்மாதிரி செய்வதை கண்டிப்பாக பார்லிமெண்டில் அனுமதிக்கமாட்டார்கள். பார்லிமெண்டில் அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் இம்மாதிரி வார்த்தைகளை வைத்து கேள்வி கேட்டால் இனிமேல் கேள்விகளை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லிவிடுவார். அந்தத் தலைவரை அந்தக் கட்சியிலுள்ளவர்கள் ரொம்ப மதிக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையை கொடுக்க வேண்டும். முதல் அமைச்சருடைய கொள்கை எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். முதல் அமைச்சர் சொல்வதை சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். முதல் அமைச்சர் பற்றி அரசியல் விமர்சனம் பண்ணலாம். ஆனால் முதல் அமைச்சர் ஆள் குட்டையாக இருக்கிறார், வேறு எப்படியாவது இருக்கிறார் என்ற முறையில் பேசுவது பண்பாடு அல்ல. அப்படிப்பட்ட வார்த்தைகளை இந்த சட்டமன்றத்தில் பயன்படுத்தக் கூடாது.

திரு. துரைமுருகன்: திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொள்கையைப் பற்றிப் பேசலாமே தவிர, ஒரு உறுப்பினர் பற்றித் தனிப்பட்ட வகையில் பேசக் கூடாது என்று சொன்னார்கள். ஆளும் கட்சியிலிருந்து நாங்கள் யாரையும் தொப்பி போட்டவர் என்றோ, கிழட்டு நடிகர் என்றோ, பெயரைக் குறிப்பிட்டு அழைக்கவில்லை. நானும் இந்தச் சபையில் தொடர்ந்து உறுப்பினராக இருக்கிறேன். இந்த அவையிலே அறிவுரை வழங்கும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்கள் சில பேர் பண்பு இல்லாமல் பேசுகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்று உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்கள் முதல் அமைச்சரைப் பற்றிக் கூறினார்கள். அப்பொழுது நான் அதை வன்மையாகக் கண்டிக்கிறேன், எதிர்க் கட்சியினர் பண்போடு பேசவேண்டும் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால் அவருடைய பெருந்தன்மைக்கு மெருகு ஏற்றியதாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர்கள் சொன்னதற்கு நன்றி....

திரு. கோவை செழியன்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. வேலப்பன் அவர்களுடைய பேச்சை இழுத்து திருப்பி திருப்பி அவர் முதல் அமைச்சரைப் பற்றிப் பேசினார் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து அவருடைய பேச்சை ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டும். அதே நிலையிலே எட்மண்ட் அவர்களும் தன்னுடைய கருத்தை எடுத்து சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் முதல் அமைச்சரைப் பற்றி பேசினார் என்று வலிந்து இழுத்து, பேசாத ஒன்றை தயவுசெய்து சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் இப்படி தவறாகப் பேசிவிட்டாலும், அந்தக் கட்சித் தலைவர் தான் அதை கண்டிக்க வேண்டும் என்பதுதான் சாதாரணமாக நடப்பது. சபாநாயகரே தவறு என்று சொல்லியிருக்க வேண்டும்.

என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில், ஜாதிப் பிரச்னை என்பது கிடையாது. உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று அம்மாதிரியாக யாரையும் அழைக்கக் கூடாது என்பதுதான் நாங்கள் கடைப்பிடிக்கக்கூடிய நியதி. திரு. சுப்பையா அவர்கள் முன்பு பாண்டிச்சேரியில் அமைச்சராக இருந்தவர். இப்பொழுது அமைச்சராக இருந்து, இப்பொழுது அந்த மந்திரி சபை போய்விட்டது. நானும் அவரும் ஒரே கமிட்டியில் சேர்ந்து இருந்தோம், 12 ஆண்டுகள் ஆகியும் அவருடைய ஜாதி எனக்குத் தெரியாது. திரு. கே. டி. ராஜு ஜாதி எனக்குத் தெரியாது. எந்தக் காலத்திலும் ஜாதியைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஜாதியினால் ஒருவருக்கு பெருமையோ, சிறுமையோ ஏற்படுவது என்பது கூடாது என்று பல நேரங்களில் எங்களுடைய கட்சித் தலைவர் டாங்கே அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

இன்றைக்கு நாட்டிலே தீண்டாமை இருக்கிறது என்று சொன்னால் என்ன செய்வது என்றெல்லாம் சொல்வார்கள். ஆகவே, இன்றைக்கு ஒரு ஜாதியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்றால், நான் அந்த நேரத்தில் இங்கே இல்லை வெளியே போயிருந்தேன், வந்த பிறகு தெரிந்தது இதிலே ஒன்றும் ரகசியம் இல்லை. உடனே நான் எட்மண்ட் அவர்களிடம் சொன்னேன், இம்மாதிரி அவர்கள் பேசுவது தவறு என்று சொல்ல வேண்டும் என்று கூறினேன். இம்மாதிரி எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டோம். ஒரு கட்சியைச் சேர்ந்தவர் அப்படிப் பேசியது தவறு என்று உகிரங்கமாக இன்னொரு கட்சியினர் சொல்ல முடியாது. அதை ஒரு முறையாகத்தான் சொல்லலாம். பக்குவமாக எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள், அவர்கள் பிரசங்கத்தில் ஒரு பகுதியில் இம்மாதிரி வந்தது பற்றி வருத்தப்படுகிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. அவர்கள் தனிப்பட்ட முறையிலே அவர்களுடைய அங்க லட்சணங்கள் எதையும் பேசக் கூடாது; அரசியல் கட்சிகளைப் பற்றி விமரிசிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நூற்றுக்கு நூறு வரவேற்கிறேன். அவர்களுடைய பேச்சிலே முதலமைச்சரானவர்கள் குட்டையானவர்கள் என்று சொல்லுவதும் கூடாது என்று சொன்னார்கள். அப்படியானால் அவர்கள் என்னைக் குட்டையானவர் என்று இடித்துக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விமரிசனமும் நல்லதா என்று யோசிக்க வேண்டும். (சிரிப்பு).

திரு. கே. டி. கே. தங்கமணி: வெளியிலே யார் யாரோ எதை எதையோ சொல்லுவார்கள். இந்த சட்டமன்றத்திற்குள்ளே அந்த மாதிரியான விமரிசனங்கள் வரக் கூடாது; யாரும் கொண்டுவர வேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. (மணியடிக்கப்பட்டது) இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : உங்களுக்கு அரை மணி நேரம்தான் கொடுக்கப்பட்டது.

திரு கே. டி. கே. தங்கமணி : இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள். சபாநாயகரைப் பதவியிலிருந்து ரிமூவல் பண்ண வேண்டுமென்று சொல்லும்போது அதற்காகச் சில ஏற்பாடுகளை அரசியல் சட்டத்தில் செய்திருக்கிறார்கள்.

ஒரு சபாநாயகரை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால் அரசியல் சட்டத்தின்படி 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். 14 நாள் நோட்டீஸ் கொடுத்ததற்குப் பிறகு, விவாதம் நடைபெற்று பாதி பேருக்கு மேல் சபாநாயகர் போக வேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்தால்தான் நீக்கப்படுவார். அப்படி இல்லாமல் சபாநாயகர் ராஜினாமா செய்கிறார் என்றால் ராஜினாமா கடிதத்தை கவர்னர் இடத்திலே கொடுக்கலாம்; அல்லது பார்லிமெண்டில் ஜனாதிபதியிடம் கொடுக்கலாம். அரசியல் சட்டத்தை நிர்ணயம் செய்யும்போது அப்படிக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதன் பிறகு அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கு மூலகர்த்தாவாக இருந்த டாக்டர் அம்பேத்கார் அவர்கள், சபாநாயகர் ஜனங்களுடைய பிரதிநிதியாக உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகவே, சட்டமன்றத்தில் உறுப்பினர்களிடம்தான் ராஜினாமாக் கடிதத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். உறுப்பினர்களிடம் கொடுக்க முடியாததால், சபாநாயகர் துணை சபாநாயகரிடம் கொடுக்க வேண்டும்; துணை சபாநாயகர் ராஜினாமா செய்வதாக இருந்தால் சபாநாயகரிடம் கடிதத்தைக் கொடுக்க வேண்டும் என்ற நியதி உருவாகியிருக்கிறது. பார்லிமெண்டிலே என்றால் கிளார்க்கிடம் கொடுத்துவிடுவார்கள். கிளார்க் என்றால் அவர் சாதாரணமான கிளார்க் அல்ல. Clerk is a very big Officer. ஆகவேதான், சபாநாயகராக இருக்கக் கூடியவர் ஒருவர், என்ன செய்வார், அவர் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் என்றால் அல்லது அரசியல் சட்டம் என்ன எதிர்பார்க்கிறது என்றால் அரசியல் சட்டத்தின் காரணகர்த்தாவான டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் அல்லது அரசியல் சட்டத்திற்கு முன் மாதிரியாக இருந்து சிறந்த பார்லிமெண்டரி ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுத்த ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் சொன்ன இலக்கணத்தின்படி நடந்துகொள்ள வேண்டும்.

அந்த முறையிலே நாங்கள் கொடுத்திருக்கிற நான்கு விஷயங்களை விதி 234 தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஏதாவது தவறான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டால் அல்லது அப்சீன் வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டால் அந்த வார்த்தைகளை நீக்கிவிடலாம்.

**Word or words will have to be expunged but words would not mean speeches lasting 30 or 40 minutes.**

ஆகவே, ஒன்றிரண்டு வார்த்தைகளை, அல்லது அதோடு இணைந்திருக்கிற ஒன்றிரண்டு சென்டன்ஸை வேண்டுமென்றால் எடுத்துவிடலாம்.



நம்முடைய சட்டமன்றம் ஒரு வருஷத்திலே 50 அல்லது 60 நாட்கள் தான் கூடுகிறது. நான் என்னுடைய தொகுதி மக்களின் பிரதிநிதி. அதைப் போலத்தான் ஒவ்வொருவரும் அந்தந்த தொகுதி மக்களின் பிரதிநிதிகள். அந்தத் தொகுதிகள் பற்றி முக்கியமான விஷயங்கள் எல்லாம் பேச வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். டிமாண்ட் வரும்போது ஒரு டிமாண்டுக்கு 2 அல்லது 3 நாட்கள் விவாதம் வைத்துக் கொண்டால் என்ன என்று கேட்கிறார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்கிறார்கள். இப்போது நாம் முடிவு செய்திருக்கின்ற நாட்கள் போதாது. 50, 60 நாட்களுக்கு மேல் சட்ட மன்றம் நடக்கவில்லை. ஆகவேதான் பல தீர்மானங்களைக் கொடுக்கிறோம்.

**Calling Attention Notice is a privilege given mostly to the members of the Ruling Party.**

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ரூல் 42-ல் நோட்டீஸ் கொடுக்க முடியாது. அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க முடியாது. ஆகவே, ஆளும் கட்சியினர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு கிட்டத்தட்ட சமமாக 'வருகிற காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ்' கொடுக்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு விஷயங்களை உறுப்பினர்கள் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அப்படிக் கொண்டுவரப்படுகிற விஷயங்களை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதா கூடாதா என்று முடிவு செய்கின்ற அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. அப்படிக் கொடுக்கின்ற ஒரு தீர்மானத்திற்கு அனுமதி இல்லை என்று சபாநாயகர் எழுதி அனுப்பினால், அது முக்கியமான பிரச்சினையாக இருந்தால் நாங்கள் திருப்பி சபாநாயகருக்கு அனுப்பி வைக்கிறோம்.

சபாநாயகர் எங்கள் தீர்மானங்களைத் திருப்பி அனுப்புவதற்கு அனந்தநாயகி அவர்கள் சொல்லியபடி ரூல் 45-ன் படி சரியான காரணங்களைச் சொல்ல வேண்டும். இன்னின்ன காரணத்தால் ரிஜக்ட் செய்திருக்கிறேன் என்று சொல்ல வேண்டும்.

சபாநாயகர் ரிஜக்ட் செய்து அனுப்பிய தீர்மானத்தை முக்கியமானது என்று சொல்லி நாங்கள் திருப்பி சபாநாயகருக்கு எழுதி அனுப்பினால், அவர் ஒரு ஆளை அனுப்பி அந்த மெம்பரை அழைத்துவரச் செய்து அதன் முக்கியத்துவம் என்ன என்று கேட்கலாம். அதன் பிறகு அவர் முடிவு செய்வார்.

ஆனால், இந்த சபாநாயகர் ஒரு நாள் கூட அப்படிச் செய்தது கிடையாது. அதையே ஒரு முக்கிய காரணமாகக் கொண்டுதான், இந்தச் சட்டசபையில் சபாநாயகர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

இப்போது நம்முடைய சட்டமன்றத்தில் புதிய புதிய முறைகள் எல்லாம் வருகின்றன. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கிறார்கள். பின்னால் அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அவர்களாகவே ரிமூவல் செய்கிறார்கள்.

அதே மாதிரி டிபுடி ஸ்பீக்கரைப் பிடிக்கவில்லை என்றால் ஆளும் கட்சியின் சார்பிலேயே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து வெளியேற்றுகிறார்கள்.

இப்போது நாங்கள், எதிர்க் கட்சியினர் கொண்டுவந்திருக்கிறோம். எதிர்க் கட்சியினர் பலர் கருத்துக்களைச் சொல்கிறார்கள் என்றால், அது எதிர்க் கட்சியினருக்காக மட்டுமல்ல; ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் எதிர்த்துச் சொல்ல முடியாத நிலையில் இருப்பார்கள். அவர்களுக்காகவும் தான் நாங்கள் சொல்கிறோம். ஆகவே உறுப்பினர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை சபாநாயகர் கேட்டு, நியாயமான தீர்ப்பை வழங்க வேண்டும்.

இந்த சபாநாயகர் அப்படி நடந்துகொள்ளவில்லை என்பதால்தான் எங்களுடைய தீர்மானத்திலே நான்கு குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறோம். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அதற்குப் பல்வேறு விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறிய இந்தக் காரணங்களால் இந்த சபாநாயகரை நீக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, இது மிகவும் முக்கியமானது என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**(6) அறிவிப்பு**

**பேரவை அலுவல் குறித்து.**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) :** இன்று விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகளான 25. சின்கோனா, 44. காட்டு வளத் துறை, 54. காட்டுவள மூலதனச் செலவு ஆகியவை நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்.

நாளை எடுத்துக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகளான 8. தேர்தல்கள், 9. மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், 40. இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, 41. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும், 42. பல்வகை, 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும், 46. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு, மற்றும் 56. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும், ஆகியவை 2-4-1974 அன்று முற்பகல் எடுத்துக் கொள்ளப்படும்.

2-4-1974 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கை 23. கூட்டுறவு அன்று பிற்பகல் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

**(2) பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—தொடர்ச்சி.**

**திரு. மணலி சி. கந்தசாமி :** தலைவரவர்களே, இன்றைய தினம் சபாநாயகராக இருக்கும் புலவர் கோவிந்தன் அவர்கள் மீது கொண்டுவரப்



பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்று சொல்லி, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

மேலும், இன்றைக்கு இந்த சபையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு அவசர நிலையோ, அவசியமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சபை விவாதத்திலே புலவர் கோவிந்தன் பாரபட்சமாக நடந்துகொண்டார்; ஆளும் கட்சிக்கு ஆதரவாக நடந்துகொண்டார், எதிர்க் கட்சிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்ற கருத்துக்கள் எல்லாம் இந்த சபையின் நடவடிக்கைக் குறிப்புகளைப் புரட்டிப் பார்த்தால், அவர் ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில் எவ்வளவு நேர்மையோடு இருந்திருக்கிறார் என்பதைக் காண முடியும். குறிப்பாகத் தி.மு.க. விலிருந்து அ.தி.மு.க. பிரிந்ததிலிருந்து தமிழக அரசியலில் ஒரு புதிய அரசியல் பாதை இன்றையதினம் வளர்ந்து வருகிறது. அது வளர்வதும் தேய்வதும், வளர்வதும், தேய்வதுமாக இப்படிப் பல்வேறு விதங்களிலே கோணிக் கோணி வருகின்ற பாதையைப் பார்க்கிறேன்.

இன்றையதினம் ஆளும் கட்சி ஒரு பெரிய மெஜாரிட்டி கட்சியாக இருக்கிறது. எதிர்க் கட்சி பலவீனமான கட்சியாக இருக்கிறது. பலரும், பல்வேறு எண்ணிக்கையில் இருப்பதனால், எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் முறைப்படி பணியாற்றி வந்தால் ஆளும் கட்சி இன்னும் பயனுள்ள வகையில் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கும் என்பது என்னுடைய கருத்து. அப்படி எதிர்ப்பதற்குப் பதிலாக—கொள்கை அடிப்படையில் எதிர்ப்பதற்குப் பதிலாக எப்படியோ இந்த சர்க்காரைக் கவிழ்க்க வேண்டும் என்கிற முறையில் குறுக்கு வழியில் போவது எனக்குப் பிடிக்கவில்லை. (திருமதி அனந்தநாயகி குறுக்கீடு).

பார்லிமெண்டரி முறை தெரியாமல் குறுக்கிட்டு பேசுவது (Interruption).

**She must be attentive and I am not going to repeat it.**

ஆகவே எனக்குப் போதித்தனை பேச வராது. பெரியோர் வேஷம் போட்டுக்கொண்டு பேசுகிறார்கள். காரியம் வரும்போது பல காரியங்களைச் சாதித்துக்கொண்டு போகிறார்கள்.

மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்கள் சென்ற ஒரு வருஷமாக எவ்வளவு சங்கடமான நிலைமையில் இந்தச் சபையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன்.

கொள்கை அடிப்படையில் இன்றைக்கு முற்போக்கு அணி என்பதாக ஒரு அணியை உருவாக்க முன்வந்தால் நான் அந்த அணியில் இருக்கத் தயாராய் இருக்கிறேன். ஆனால், எப்படியோ சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த மந்திரி சபையைக் கவிழ்த்துவிட வேண்டும் என்கிற அடிப்படையில் அணி திரட்டுவார்கள் என்றால் அதற்கு நான்

தயாராய் இல்லை. என்னைப் பற்றிச் சொல்வார்கள்—ஜாலரா அடிப்பார் என்று சொல்வார்கள்—என்னைப் பற்றிப் பேசப்படுகிற பல்வேறு விஷயங்கள் தெரியும்.

திருமதி. அனந்தநாயகி அவர்களே கொள்கை அடிப்படையில்—நிலச் சீர்திருத்தத்தையே எடுத்துக்கொள்ளுங்கள்—இந்த அரசின் கொள்கையை எதிர்க்க முன்வந்தார்களா? அதற்கு வரவேயில்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : நிலச் சீர்திருத்தம் என்று கோயில் நிலங்களை எல்லாம் எடுத்து ஸ்டேட்டுக்கு நீங்கள் கொடுக்கச் சொல்கிறீர்கள். ஆனால் ஸ்டேட்டுக்கு வேண்டாம், கோயில் நிலங்களாகவே இருக்கட்டும் என்கிறேன். இதில் ஒன்றும் வித்தியாசம் கிடையாது.

திரு. மணலி சி. கந்தசாமி : விஷயம் வெளியாகிவிட்டது. அது தான் வித்தியாசம். (பலத்த சிரிப்பு).

திருமதி. த. ந. அனந்தநாயகி : மனதிலே ஒரு விஷயத்தை வைத்துக்கொண்டு வெளியே ஒன்று பேசுவது எனக்கு பழக்கம் இல்லை. உள்ளதைச் சொன்னேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : நீங்கள் ஒரு வருஷமாக இந்த அவையில் நடந்து வருகிற விஷயங்களை எடுத்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொள்கை அடிப்படையில் இந்த சர்க்காரோடு மோதுவதற்கு—நாட்டு மக்களுக்கு அதனால் நல்ல பலன் விளைவிக்கக்கூடிய விதத்தில் யாராவது முன்வந்தார்களா என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால்—என் அபிப்பிராயம் இல்லை என்பதுதான்.

பாயிண்ட் ஆப் ஆர்டர்களை எடுத்துக்கொள்ளுங்கள். ரெயிலில் சங்கிலி ஒன்று தொங்கிக்கொண்டிருக்கும்—ஆபத்துக் காலத்தில் ரெயிலை நிறுத்த அந்தச் சங்கிலியைப் பிடித்து இழுத்தால் வண்டி நின்றுவிடும்—நவாறாகப் பிடித்து இழுப்பவர்களுக்கு பெனல்டி உண்டு.

இந்தச் சபையிலே நான் பார்க்கிறேன்—பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விடுவது. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்கிற மூன்று வார்த்தைகளைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா என்றால் இதுவரை கண்டு பிடிக்க முடியவில்லை. நானும் இரண்டு தரம் பாயிண்ட் ஆப் ஆர்டர் சொல்லிப் பார்ப்போம் என்று பார்க்கிறேன்—வரமாட்டேன் என்கிறது.

யாராவது பேசிக்கொண்டிருந்தால் அவரது பேச்சை மடக்கவேண்டுமென்றால், உடனே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்பது. நாம் பல ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இந்தச் சபையை நடத்துகிறோம். நாம் போட்டுக்கொள்ள வேண்டிய வேடிக்கைச் சண்டை, விளையாட்டுச் சண்டை எல்லாம் இங்கே தான். இது எந்த அடிப்படையில் என்று பார்க்க வேண்டும்.

நான் பாராளுமன்றத்தில் இருந்ததில்லை. இரண்டு முறை தேர்தலுக்கு நின்றேன். இவர்கள்தான் தோற்கடித்து விட்டார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் தடவை ஜெயிக்கலாம்.



திரு. மணலி சி. கந்தசாமி : அதற்கு நீங்கள் விடமாட்டீர்கள் போல இருக்கே. (பலத்த சிரிப்பு) உங்கள் அணி எப்படி அல்லவா உருவாகிறது.

சர்க்காரைப் பொறுத்த வரையில் கொள்கை அடிப்படையில் மோதுவதற்கு நான் தயார். கொள்கையே இல்லாது—என்னிடம் கூட கையெழுத்து வாங்க வந்தார்கள். அப்பா, நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை—நம்மை விட்டுவிடுங்கள் என்று நான் சொல்லிவிட்டேன்—இவர்களுக்குள்ளே எப்படி அணி உருவாகி இருக்கிறது—ஏதாவது கருத்து ஒற்றுமை உண்டா?

திரு. க. ரா. எட்டப்பன்ட் : மதிப்பிற்குரிய மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது எந்தக் கருத்து ஒற்றுமையால் நான் போது நாங்கள் சேர்ந்திருக்கிறோம் என்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஆளும் கட்சியை ஆதரிக்கிறார்களே, அவர்களோடு இவர்களுக்குக் கருத்து வேற்றுமை உண்டா என்று விளக்க வேண்டும்.

திரு. மணலி சி. கந்தசாமி : எவ்வளவோ இருக்கிறது—இங்கேயே பேசியிருக்கிறேன்—அடிப்படையிலேயே பல கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. அவர்களை வெளியேற்ற வேண்டும். எப்போது எவ்வளவு முற்போக்குக் கொள்கை அடிப்படையில் எதிர்ப்பு அணி உருவாகியிருக்கிறது?

நான் யாருக்கும் எதிரி இல்லை. நிரந்தர நண்பனும் இல்லை. அரசியலில் பர்மனென்ட் விரோதியும் கிடையாது—பர்மனென்ட் நண்பரும் கிடையாது என்று முதல் மந்திரி அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—கொள்கை இல்லாமல் எப்படியோ இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இன்றைக்கு அவர்களை எதிர்க்கிற நீங்களே நாளைக்கு அவர்களை ஆதரிக்கின்ற நிலை வரலாம். அவர்களை ஆதரிக்கின்ற நான் நாளையே அவர்களை எதிர்த்து நிற்கும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியம் இல்லை.

ஏன் சொல்கிறேன் என்றால் உள்ளபடியே சொல்கிறேன்—கொள்கை அடிப்படையில் இந்த அரசைப் பதவியில் இருந்து வெளியேற்ற ஒரு அணி வகுப்பதாகச் சொல்லுங்கள்—நான் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறேன். குறுக்கு வழியில்—ஒரு இருட்டடிப்புச் செய்கிற பாலிசியில் இறங்குவது என்றால் அது உங்களுக்கும் நல்லது அல்ல—எனக்கும் நல்லதல்ல—ஆளுங் கட்சிக்கும் நல்லதல்ல.

மாண்புமிகு புலவர் கோவிந்தனை நீக்க அவர்கள் சொன்னது ஒரு கடிதம்—அப்புறம் அவர் முதலமைச்சரையே பார்த்துக்கொண்டு செய்கிறார் என்பது—இவை எல்லாம் சரியான காரணம் என்று நினைக்கவில்லை.

என்னைப் பொறுத்த வரையில் அவர் புலவர்—கொஞ்சம் கண்டிப்பு இல்லாத அடிப்படையில் மற்றவர்கள் குறுக்கிடும்போது பேசாமல் இருக்கிறார்—கறாராக இல்லை என்பதுதான் என் குறை—நான் ஆடுமாடுபோல உட்கார வேண்டியிருக்கிறது—கொஞ்சம் சத்தம்போட்டுப் பேசுகிறவர்களுக்

குத்தான் இந்தச் சபை என்பது போல போய்க்கொண்டிருக்கிறது—அம்மையார் சொன்னது போல பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளத் தான் நான் வந்திருக்கிறேன். அவர்கள் என்ன சொல்லிக்கொடுக்கிறார்கள்? பார்லிமெண்டரி நிலைமைகளைக் கொஞ்சமாவது தெரிந்துகொள்ள ஏதாவது சொல்லிக் கொடுக்கிறாரா? (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்கள் மாதிரியான ஆட்களை நான் மாணவர்களாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. மணலி சி. கந்தசாமி: அம்மையாரைப் போன்ற ஆசிரியரிடம் படித்தால் எட்டு ஜென்மத்திற்கு உருப்பட முடியாது. (சிரிப்பு).

THIRU K. T. K. TANGAMANI: Sir, this is not a No Confidence Motion against the Government. Many things which the hon. Member has stated, are very interesting but how are they relevant to the matter under discussion?

அவரது பேச்சுக்கும் இந்தத் தீர்மானத்திற்கும் என்ன சம்பந்தம்—சொல்ல வேண்டும். இதுபோலத்தான் சபாநாயகர் எங்கள் பக்கத்திலும் அனுமதிக்கிறார்—அவர்கள் பக்கத்திலும் அனுமதிக்கிறார் என்பது எங்கள் குறை. தயவுசெய்து நீங்களாவது இந்தக் காரியத்தை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: இந்தத் தீர்மானத்தில் அந்த மாதிரியாகப் போயிருந்தால் கூட பேசியிருப்பேன். இது ஒரு நல்லெட்சமாக இருக்கிறது என்று சொல்கிறேன்.

ரொம்ப பார்லிமெண்டரி அனுபவம் பெற்றவர்—டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்றைக்கு என்னவென்றால்—கோவிந்தா கோவிந்தா என்கிறார். இதற்கு என்ன சொல்வது? "நீ போ" என்றால் "நீ போ" என்கிறார். இதுதான் இந்தச் சபைக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையா?

திரு. க. உரொ. எட்மண்ட்: இங்கே சபாநாயகரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகிறது. திரு. மணலி கந்தசாமி அவர்கள் அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச வேண்டும். அல்லது எதிர்த்துப் பேசவேண்டும். ஆனால் அவர் இந்தப் பேரவையில் இவர் அப்படிப் பேசினார், அவர் இப்படிப் பேசினார் என்கிற அளவில் சொல்வது முறைதானா?

திரு. கே. டி. கே. தங்கமணி: சர்க்காரை அவர் முழுக்க முழுக்க ஆதரித்துப் பேசுவது பற்றி எனக்கு ஒன்றும் அபிப்பிராயம் கிடையாது. ஆனால் எட்மண்ட் சொன்னதுபோல் டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிப் பேசினார்கள் என்றெல்லாம் சொல்வது முறை அல்ல என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



திரு. மணலி சி. கந்தசாமி: ஆதரிக்கிறேன், எதிர்க்கிறேன் என்று சொல்வதோடு நிறுத்திவிட வேண்டுமென்று நினைக்கிறார்களா?

மாலை 5-00

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆதரிப்பதற்குக் காரணம் என்ன, எதிர்ப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கூற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு கட்சியின் தலைவர் பேசிக் கொண்டிருக்கிறார். அதிலே நம்மைப் பற்றி பேசும்போது பதில் சொல்லலாம். அதை ஒலிபெருக்கியை விட்டு அப்பால் போய்ப் பேசுவது முறையல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட்: இதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும் சொல்லவேண்டும்.

திரு. மணலி சி. கந்தசாமி: நான் பேசுவது அத்தனையும் இந்த ஆறு மாத காலத்தில் சபையில் நடந்திருக்கிற விஷயங்களைப் பற்றிச் சொன்னேன். நான் ஒன்றும் ஒவ்வாத விஷயங்களைப் பற்றிச் சொல்லவில்லை என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் எவ்வளவோ குழப்பமான சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு மத்தியிலே சபாநாயகர் தன்னுடைய வேலையைச் செய்திருக்கிறார். நானே சொன்னேன். அவர் சில சமயங்களில் ஆளுங் கட்சிக்கு ஆதரவாக நடந்து இருக்கிறார், எதிர்ப்பாகவும் நடந்திருக்கிறார் என்பதைத்தான் சொன்னேன்.

டாக்டர் ஹாண்டேயைப் பற்றிச் சொன்னது, அவர் ஆத்திரப்பட்டுப் பேசுவது இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குகிறது என்பதற்காகத் தானே தவிர, அவர்களைக் கண்டிப்பதற்காக அல்ல. அந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் நடந்துகொண்ட முறையை சுட்டிக்காட்டத்தானே ஒழிய வேறொன்றுமில்லை.

நானும் 7, 8 தடவை இந்த சபையிலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். அப்போது ராஜாஜி இருந்திருக்கிறார், காமராஜ் இருந்திருக்கிறார், அதற்கு அடுத்து பக்தவத்சலம் இருந்திருக்கிறார். இப்போது நம் கலைஞர் அவர்கள் இருக்கிறார். இதையெல்லாம் பார்த்திருக்கிறேன்.

நம்முடைய விவாதங்கள் எல்லாம் கொள்கை அடிப்படையில் விவாதங்களாக இருந்தால் அது நல்லது. ஒரு சில சந்தர்ப்பங்களில் நான் வெளியே கூட உட்கார்ந்துகொண்டு இருப்பேன். அம்மையார் கூடச் சொல்வார்கள் வெளியே உட்காருவதற்கா சம்பளம் கொடுக்கிறார்கள் என்று. நான் வேதனையோடு சொல்கிறேன். பலர் அங்கே வருவார்கள். வேடிக்கையாகப் பேசிக்கொண்டு இருப்பேன். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சாட்டப்பட்டிருக்கிற குற்றம் அது எவராக இருந்தாலும் கூட ஒரு சந்தர்ப்பத்தில் சர்க்காருக்கு சாதகமாகவும், இன்னொரு சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சிக்கு சாதகமாகவும் இருந்திருக்கிறார் என்று சொல்வ

தற்கு இடமிருந்திருக்கிறது. சபையிலே சபாநாயகருக்கு மட்டும்தான் பொறுப்பு என்பதல்ல. சபையிலே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதிலே எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று சொல்கிற அளவிலே ஒரு கொள்கைப் போராட்டம் எதிர்க் கட்சிக்காரர்கள் தங்களுடைய குற்றங் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவ தற்கு அரசியல் சட்டத்திலுள்ள விதி முறைகள் இருக்கின்றன.

சென்ற ஒரு வருஷ காலத்தில் குறிப்பாக அண்ணா தி.மு.க. பிறந்த தற்குப் பிறகு அரசியலிலே ஒரு கொள்கையற்ற சூழ்நிலை உருவாகி யிருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையிலே மிகக் கடினமான சூழ் நிலையிலே அவர் சபாநாயகராக இருந்திருக்கிறார் என்ற காரணத்தாலே இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதற்கில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு மணலி கந்தசாமி பேசும்போது நான் குறுக்கிடக் கூடாது என்பதற்காக பேசாமல் இருந்தேன். எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டுவரும் பாயிண்ட் ஆப் ஆர்டரில் உண்மையான பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவுமில்லை என்று குறிப்பிட்டார். நான் இரண்டு சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : லெஜிஸ்லேச்சர் டிமாண்ட் வரும்போது பேசுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, மிகவும் வேதனை யோடு நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எங்கள் கருத்தைக் கூறு வதற்கு உள்ளவர்களாக இருக்கிறோம். பெரிய பொறுப்பினை வகிக்கின்ற சபாநாயகர் மீது இந்த மாதிரி ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதிலே பேசி ஒரு சில கருத்துக்களைச் சொல்வது என்று சொன்னால் மிக வேதனைக்குரிய விஷயந்தான்.

ஆனால் சபாநாயகர் பதவியிலே இருக்கிறவர்கள் எல்லாம் என்ன முறை யிலே இருக்க வேண்டுமென்று எனக்கு முன்பு பேசியவர்கள் அனைவரும் நல்ல நல்ல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். எதிர்த் தரப்பிலே இருந்து உயர்ந்த கருத்துக்களைச் சொன்னார்கள் உயர்திரு கந்தப்பன் அவர்கள். நானும் அதற்கு எங்கள் கருத்துக்களைக் கூறுகிற வகையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உயர்திரு கந்தப்பன் அவர்கள் அந்தத் தீர்மானத்தை திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும். இது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு உள்நோக்கத்தோடும் செய்யப்பட்டிருக்கிறது என்று பல ஆட்சேபணைக எடுத்துக் கூறினார்கள்.

எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எங்கள் குற்றச்சாட்டை ஸ்பெசிஃபிக்காக, நேரடியாக, அந்தரங்கமாகக் கூற இருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதையெல்லாமல்லாமல் ஒளிவு மறைவில்லாமல் ஒரு உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும்.



பேரவைத் தலைவர் பதவி அரசியல் சட்டப்படி உயர்ந்த பதவியாகும். அதை யாரும் குறைத்துப் பேசுவதற்கு இங்கே வரவில்லை.

ஆனால், அரசியல் சட்ட காவலர் என்ற முறையில் சபை நடக்கிறதா, சபாநாயகர் நடந்துகொண்டிருக்கிறாரா என்று நினைத்து நாமெல்லாம் அந்தரங்க சுத்தியோடு நடந்துகொள்வதுதான் பொறுப்புணர்ச்சியாகும். நான் இந்த சமயத்தில் டெபுடி ஸ்பீக்கர் தேர்வுக்கு ஏன் வழிவகை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு கடமைப்பட்டிருக் கிறேன். இந்த சமயத்தில் அரசியல் சட்டத்தின் 178-வது பிரிவைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**'Every Legislative Assembly of a State shall, as soon as may be, choose two memters of the Assembly to be respectively Speaker and Deputy Speaker theroof and, so often as the Office of Speaker or Deputy Speaker becomes vacant, the Assembly shall choose another member to be Speaker or Deputy Speaker, as the case may be**

என்று இருக்கிறது. ஆனால் இங்கு நேர்மையாக அண்ணா வழியிலே நடக்கிறோம் என்று எப்போதும் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிற நமது ஆளுகிற தரப்பினர்கள் இதை ஒழுங்காக நடத்தியிருக்கிறார்களா என்பதை நீங்கள் அந்தரங்க சுத்தியோடு ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் அமைப்புப்படி டெபுடி ஸ்பீக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் இந்த மன்றத்திலே இன்று தலைமை தாங்கியிருப்பார்கள். ஆனால் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் இந்தச் சபையை தலைமை தாங்கி நடத்த வேண்டியிருக்கிறதே என்று நினைக்கும்போது நான் உள்ளபடியே வருந்து கிறேன்.

ஏனென்றால் அவர்களுக்குக் கொடுத்த தொல்லைகள் எல்லாம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் அதையெல்லாம் நல்ல உள்ளத்தோடு தாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைய நிகழ்ச்சிகள் மாதிரி எத்தனை நாட்கள் நடந்திருக்கின்றன. நம்முடைய சபாநாயகர் அவர்கள் அப்பொழுதெல்லாம் உல்லாசமாக தலைமைப்பீடத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். என்றைக்காவது அவற்றையெல்லாம் கட்டுப் படுத்தியிருக்கிறார்களா ? ஆளுங்கட்சியாக இருந்தாலுஞ்சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலுஞ்சரி சமநீதி என்ற முறையிலே நடத்தப்பட வேண்டுமென்று பலமுறையும் அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கி றோம்.

எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எவ்வளவு மரியாதை யாகவும் கண்ணியத்தோடும் நடந்துகொண்டிருக்கிறோம் என்பது நாடறிந்த உண்மையாகும். இந்த மன்றமும் உணரும், சபாநாயகருக்கே தெரியும்.

ஆளுங்கட்சியிலே ஒரு சில செல்லப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், திரு. வீராசாமி அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார் என்று நினைக்கிறேன், அவர் ஏதோ சூப்பர் அமைச்சர் மாதிரி முந்தரிக்கொட்டை மாதிரி பல நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். நான் அப்படிச் சொல்வதை நீங்கள் பொறுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் அரசாங்கத்திற்காக திறம்பட ஒரு வழக்கறிஞர் போல வாதிட்டுக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு தனிச் சலுகை தரப் படுகிறது, நான் அவர்களுடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் என்னுடைய பெயரை அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகையால் நானும் திருப்பி அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நான் அடக்கத்தோடு சொல்லிக்கொள்வேன். என்னுடைய திறமை எனக்குத் தெரியும். நான் ஒரு பெரிய திறமைசாலி இல்லை. என்னுடைய திறமையை குறைத்துச் சொல்வதற்கு உங்களுக்குப் பூரண உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் ஆளுங்கட்சிக்கு தோழமைக் கட்சியாக இருக்கலாம், வழக்கறிஞராக இருக்கலாம், அரசியல் சட்டத்திலே எல்லாம் பரிபூரணம்பெற்ற ஞானியாகக்கூட இருக்கலாம், அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருக்கு மேலேயோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அவர்கள் உங்களுடைய ஜூனியராக இருக்கிறேன், உங்களை நான் சீனியராக பாவிக்கிறேன் என்று எள்ளிநகையாடக்கூடிய வகையிலே பேசவேண்டாம் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் நல்ல எண்ணத்தோடு திரு. பொன்னப்ப நாடார் அவர்களை மதிப்பவன், நான் அவர்களை எள்ளிநகையாடவேண்டுமென்று நிச்சயமாக உள்ளத்தாலும், சூசகமாகவும் நினைக்கவில்லை. அவர்கள் என்னை எள்ளிநகையாடுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களை நான் என்றைக்கும் மதிக்கிறேன். இவ்வளவு தூரம் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு பேசுவது நல்லதல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் திரு. லத்திப் அவர்களை எந்தவிதமாகவும் இழித்தோ, பழித்தோ பேசவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை. நீங்கள் இந்த மன்றத்திலே நல்ல உறுப்பினராகச் செயலாற்றுகிறீர்கள், ஆனால் மற்ற உறுப்பினர்களைப்பற்றிப் பேசும்போது கொஞ்சம் நிதானமாகப் பேசவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைப்பற்றி ஒரு சில வாசகங்கள் ஆத்திரத்திலே கூறிவிட்டார்கள். இதையெல்லாம் அவர்கள் இப்போது ஆலோசித்துப் பார்த்தால் அவை எவ்வளவு கோபமானவை, எவ்வளவு கடினமானவை, எவ்வளவு ஆத்திரமானவை என்பதை அவர்களே உணர்வார்கள் என்று கூறி அதை அப்படியே விட்டுவிடுகிறேன். அதை மேலும் விவாதிப்பது அதிகப் பயன் தராது.



சபாநாயகரைப் பொறுத்தவரையிலும் பல குற்றச்சாட்டுகளைச் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அரசியல் சட்டப்படி நடந்துகொள்ளத் தவறியிருக்கிறார்கள்.

உதவி சபாநாயகர் அவர்கள் தேர்தலை நடத்த நடவடிக்கைகளை மேற் கொள்ள அவர்கள் தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒழுங்குப்பிரச்னைபற்றி இங்கே காரசாரமாக பலர் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக பெரியவர் மணலி அவர்கள் நாங்கள் எல்லாம் தீர்மானத்திலே கையெழுத்துப் போட்டிருந்தாலும் கொள்கையிலே வேறுபாடு இருக்கிறது, கருத்து வேறுபாடு இருக்கிறது, ஒற்றுமையில்லை என்று சொன்னார்கள்.

கருத்துவேறுபாடுகள் அரசியலில் இருக்கலாம். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதைத் திட்டவட்டமாக ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடியாக உறுப்பினர்கள் இங்கே செயலாற்றி வருகிறோம். அதற்குத் தலைமை தாங்கி காவலராக நம்முடைய உறுப்பினர்களுடைய உரிமைகள் அத்தனையையும் பாதுகாப்பதற்காக சபாநாயகர் ஒருவரை உயர்ந்த பதவியிலே அமர்த்தியிருக்கிறோம். என்ன முறையிலே அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்?

மேனாடுகளிலே, இங்கிலாந்து தேசத்திலே ஸ்பீக்கர் பதவிபற்றி பலவித மான கருத்தோட்டங்கள் முன்பு இருந்தன. அவற்றிலே ஒன்றிரண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே கூறுவது பொருத்தமாக இருக்கும்; பாராளு மன்றத்திலே ஸ்பீக்கரைப் பொறுத்தவரையில்

**He was a stooge of the Monarch, now he is a stooge of the party in power**

என்று சொல்வார்கள்.

அதாவது மன்னருக்கு ஏஜண்டாக இருந்தார்கள் என்று சொல் வார்கள். அதை இப்பொழுது மாற்றி எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக் கிறதோ அந்தக் கட்சியின் ஏஜண்டாக ஸ்டூஜாக இருக்கிறார்கள் என்று ஆங்கிலத்திலே கூறியிருக்கிறார்கள்.

மத்திய பாராளுமன்றத்திலே 1954-ல் ஒரு விவாதம் நடந்தபோது அதைப்பற்றியெல்லாம் நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சபாநாயகர் எப்படி இருக்கவேண்டுமென்பதற்காக இலக்கணங்களை யெல்லாம் பல பெரியவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் படிக்க விரும்புகிறேன்.

**Here is a man who will fight for your right, fight for you without any sense of loyalty to his party,**

என்று கூறியிருக்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 29

அதாவது கட்சிக்கு அப்பாற்பட்டு இந்த மன்றத்திற்காக வேண்டி இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்காகவேண்டி திறம்பட நடத்தக்கூடிய ஒருவராக சபாநாயகர் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

சபாநாயகர் ஒரு வழக்கறிஞராக இருக்கவேண்டுமென்று நான் வாதாட வில்லை. வழக்கறிஞர்களாக இல்லாதவர்கள் எல்லாம் சிறந்த சபா நாயகர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

நல்ல நடுநிலைமையோடு இன்று நடக்கிறதா என்றால் இல்லை, இல்லை, இல்லை என்று கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்பொழுது நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியிலே இருக்கிறோம், நிரந்தரமாக நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சியிலே இருப்போம் என்று ஆளுங்கட்சி நம்பவேண்டாம். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாக வரலாம், ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாக வரலாம்.

சபாநாயகர் இரு சாராருக்கும் நீதியை நடுநிலையோடு வழங்கக்கூடிய நிலைமையிலே இருக்கவேண்டும்.

ஒழுங்குப்பிரச்சினைப்பற்றி நான் முன்பு குறிப்பிட்டேன்.

அடுத்ததாக இன்னொரு கருத்தையும் கூறவேண்டுமென்று நான் நினைக்கிறேன். பலரும் 83-வது விதியின் அடிப்படையிலே ஒழுங்குப் பிரச்சினைகளை எழுந்து, கூற அனுமதிப்பதில்லை. அவர்கள் கூறுவதைக் கேட்டு அதிலே ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறதா இல்லையா என்று பார்த்துவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லலாம்.

அவர்கள் சொல்வதைக்கூடக் கேட்காமல் அதற்கு முன்பாக நிச்சயமாக ஒழுங்குப் பிரச்சினை இதிலே இல்லை என்று சொல்வதற்கு எப்படி முடியும்? ஒரு சில அங்கத்தினர்கள் எழுந்து பேசுவதற்கு முன்னதாகவே There is no point of order என்று மணியடித்து உட்கார வைப்பது நியாயந்தானா என்று கேட்க விரும்புகிறேன். சற்றுப் பொறுமையோடு கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஒரு சில உறுப்பினர்கள் ஆத்திரமாகப் பேசுவார்கள், நான் இல்லை யென்று சொல்லவில்லை, எல்லோரும் இந்த மன்றத்திலே நடைமுறை விதிகளுக்கு உட்பட்டு நடப்பார்கள் என்று நான் சொல்லவில்லை.

திருமதி அனந்தநாயகி போன்ற உறுப்பினர்களைப் பார்த்து பல முறைகள் எப்படி நீங்கள் நடந்துகொண்டிருக்கிறீர்கள் உட்காருங்கள் என்று சொல்லக் கூடிய அளவிலே இந்த மன்றத்தை நடத்தினால் ஒரு வேளை ஆசிரியர் பிள்ளைகளை நடத்துவது மாதிரி இருக்கிறது. அந்த ஆசிரியர் எங்களை மாணவர்களைப் போல் நடத்த வேண்டாம் என்று சபாநாயகர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒரு அடிப்படையான ஜீவாதாரமான பண்டமெண்டல் ரைட் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக்கிறது என்று எம். எஸ். மூர் பாராளுமன்ற உறுப்பினர் 1954-ல் திறம்பட பல ஆதாரங்களோடு மேற்கோள்களோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.



1974 மார்ச் 29] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஆகவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் நேரத்தில் நிதானமாகச் சிந்திக்க வேண்டும். அதில் பாரபட்சம் காட்ட வேண்டாம். ஆளுங் கட்சி என்றோ, எதிர்க் கட்சி என்றோ இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் சபாநாயகருக்கு இல்லை. அவர் எல்லோருக்கும் பிரதிநிதியாக, எங்களுக்குத் தலைவராக இருக்கிறார்கள் என்ற கருத்தை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எதாவது எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டுமென்றால் 83 (8)-லே ஒரு பகுதி இருக்கிறது, அதையும் இந்த மன்றத்திற்கு படித்துக் காண்பிப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

**The Speaker may order the expunction of any portion of proceedings of the House relating to any point of order by the members when in his opinion it is an abuse of the right of raising a point of order.**

அதில் இப்படித் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதே மாதிரி அடுத்தபடியாக எக்ஸ்பங்ஷன் எப்படி இருக்க வேண்டுமென்று ரூல் 235-லே கூறியிருக்கிறது. அந்தக் கருத்தையெல்லாம் எனக்கு முன்னால் பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், மற்ற பெரியவர்களும் வன்மையாகவும், திறமையாகவும் வாதாடி இருக்கிறார்கள். நான் அதை மறுபடியும் அவ்வளவு வேகத்தோடு வாதாட வேண்டுமென்று நினைக்க வில்லை. ஆனால் அதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த விதிகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை.

அந்த விதியில் **expunging of words** என்று இருக்கிறது. அதுமட்டு மல்ல, என்ன. செய்யவேண்டுமென்ற விவரங்களெல்லாம் அதிலே கூறியிருக்கிறார்கள்.

**If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular, he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order.**

என்று கூறியிருக்கிறது. அதற்குப் பிறகு அந்த வழிமுறைகளும் விதி முறைகளும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இங்கு நடப்பது என்ன என்பதை நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும். எக்ஸ்பங்ஷனைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளை என்னால் மறக்க முடியாது. அன்றைக்கு உயர்திரு மதியழகன் அவர்களை சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கம் செய்தபொழுது டெப்டி ஸ்பீக்கர் திரு. சீனிவாசன் அவர்கள் கீழே உட்கார்ந்து, அவர் களுடைய தலைமையிலே நடந்ததையெல்லாம் நான் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று ஒருபுறம் சொல்ல, சீனிவாசன் நடத்திய நிகழ்ச்சிகளெல்லாம் சரி யல்ல, அவைகளை நான் எக்ஸ்பஞ்ச் செய்கிறேன் என்று இவர் சொல்லும் நிகழ்ச்சிகளெல்லாம் இந்த மன்றத்தில் நடந்தது.

அன்றைக்கு நடந்த முறையை என்றால் மறக்க முடியாது. இந்த மாதிரி நம் நாட்டில் வேறு ஒரு சட்டமன்றத்தில் நடந்திருக்க முடியாது.

ஒரு வேளை மற்ற சட்டமன்றங்களிலே பீஹார் போன்ற இடங்களிலே சண்டை சச்சரவுகள் வந்தது என்று பார்க்கும்பொழுது நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

இந்த மாதிரி நிகழ்ச்சி நமது தமிழ் நாட்டிலேயும் வந்துவிட்டதே என்று நாங்கள் எல்லோரும் உள்ளபடியே வருத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். எக்ஸ்பங்ஷன் என்று செய்வதில் ஆர்பிட்ரரியாக உபயோகிக்காமல் "ஜெனரல் டிஸ்கிரிஷன்" என்ற முறையிலே நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 82-வது விதியைப்பற்றி ஒன்று கூற வேண்டுமென்று நினைக்கிறேன். 82-வது விதி என்றால் அமைச்சர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எழுந்து ஸ்டேட்மெண்ட் சொல்வதற்கான சந்தர்ப்பம் நமது ரூலிலே இருக்கிறது என்று நான் கருதவில்லை. அமைச்சர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டுமானால் அதை நமது ஆர்டர் ஷீட்டிலே, லிஸ்ட் ஆஃப் பிசினஸிலே போட்டு, என்ன சொல்லப்போகிறார்கள் என்று மன்றத்தில் அறிவிக்க தாங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அதுவொரு தவறான கருத்திலே கொண்டு சென்றுவிடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது இந்த ரூல் 42-ஐப் பொறுத்தது. நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3-ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்தத் தேர்தலிலே நாங்களெல்லாம் அன்றைக்குத் தேர்தலிலே கலந்துகொள்ளவில்லை என்று ஒருசில காரணங்களுக்காக தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதை நான் திரும்பவும் கூறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இந்த ரூல் 42-ஐப் பொறுத்தவரையில் எவ்வளவு காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை நமது சட்டமன்றத்திலே தந்திருக்கிற, Review புத்தகத்தில் உள்ள ஒருசில தகவலை நான் இந்த மன்றத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகஸ்ட் 2-ஆம் தேதியிலிருந்து 14-ஆம் தேதி வரையில் நடந்த அந்த நிகழ்ச்சியை இந்தப் புத்தகத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

**During the period 140 notices of adjournment of business of the House were brought before the House and the Hon. Speaker withheld his consent to raise the same..**

என்று சொல்லியிருக்கிறார்கள். மூன்று தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானங்கள் எல்லாம் சாதாரணமான காரியங்களா என்றால் நிச்சயமாக இல்லை.

உதாரணத்திற்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7-ஆம் தேதி, 10, 11 உறுப்பினர்கள் சேர்ந்து முக்கிய விஷயத்தை இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

**To discuss about the arrest of members of the Action Committee of the Tamil Nadu Agriculturists' Association on 2nd August 1973 near Fort St. George.**



இம்மாதிரி பல காரியங்களுக்கு, முக்கியமான காரியங்களுக்கு—தனிப்பட்ட காரியங்கள் அல்ல—மாநிலம் முழுதும் பற்றி விவாதிக்கக் கூடிய நல்ல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறது.

ஆனால் அதிலே ஒரு அட்ஜூர்ன்மெண்ட் மோஷனையாவது சபாநாயகர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை.

அதேபோல் அடுத்த தடவை நடந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் தேதி முதல் டிசம்பர் 4-ஆம் தேதி வரையில் நடந்ததிலே நான் இந்த அட்ஜூர்ன்மெண்ட் மோஷனைப் பற்றிய விவரங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**During the period 17 notices of motion for adjourning the business of the House were made before the House and the Hon. Speaker withheld his consent to raise the same.**

என்று சொல்லி 17 நோட்டீஸ்கள் கொடுத்திருக்கிறது. இங்கு கூறுவார்கள் அந்த நோட்டீஸையெல்லாம் அறையிலேயே தள்ளிவிடலாம், அவையிலே அதைப்பற்றிக் கேட்கக்கூடாது என்ற முறையிலே வாதங்களை இங்கே பலமுறையும் தலைவர் கூறியிருக்கிறார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. அதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உதாரணத்திற்குக் கூற வேண்டுமானால், மத்திய பாராளுமன்றத்திலே ஃப்ராங்க் அந்தோனி என்பவர் சபாநாயகர் நீக்கப் பிரச்சினையில் தன்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அதைத் தங்கள் அனுமதியின் பேரில் இங்கே படிக்கலாம் என்று கருதுகிறேன்.

**Practically every adjournment motion was read in the House. Even if it was a frivolous adjournment motion obviously irrelevant adjournment motion, he read it to the House. And I say that it is a right that we should insist on. We have never had it, but it is a right which we should insist on and then all my hon. friends' grievances would be given a complete Quietus that any adjournment motion should be read because it is not sufficient to say that somebody can dispose of it in his Chamber.**

என்ற கருத்தைத் தான் ஃப்ராங்க் அந்தோனியைப் போன்ற திறமையான நல்ல வழக்கறிஞர்களாக இருப்பவர்கள், நல்ல பார்லிமெண்டேரியனாக இருப்பவர்கள், திறமையாக வாதாடுபவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒருவேளை சொல்லலாம், மத்திய பாராளுமன்ற விதிமுறைகளை நிச்சயமாக நாம் பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்று கூறலாம்.

ஆனால் அதிலே உள்ள கருத்தின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனென்றால் ஒரு உறுப்பினர் அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுக்கிறார் என்றால் அது நிச்சயமாக அரசாங்கத்தின் கவனத்தையும், பொது ஜனங்களின் கவனத்தையும் ஈர்ப்பதற்காகத் தான் அந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். "சென்ஷர் மோஷனைப்" போல் எடுத்துக் கொண்டு அதைப்பற்றிக் கூற வேண்டும்.

இங்கே கூறுகிறார்கள், ஆளுங்கட்சியிலே இருப்பவர்களுக்கு சமயம் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை, எதிர்க் கட்சியிலே இருப்பவர்களுக்குத் தான் அதிகச் சலுகையை சபாநாயகர் கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்று உயர்திரு கந்தப்பனைப் போன்ற பெரியவர்கள் கூறுவார்கள் என்றால் உள்ளபடியே நாங்கள் அதற்காக வருத்தப்படுகிறோம். வேதனைப்படுகிறோம். வேண்டுமானால் இந்தச் சட்டமன்றத்தின் காலத்தை இரண்டு மாதங்கள் அல்லது மூன்று மாதங்கள் கூட்டுவதிலே எங்களைப் போன்றவர்களுக்கு ஆட்சேபணை இல்லை.

ஆனால் ஆளுங்கட்சியாக இருக்கின்ற அமைச்சர்கள் அதற்குத் தயாரானால் நாங்களும் தயார், இப்பொழுதும்கூட தயாராக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் தொகுதிப் பிரச்னையை எடுத்துக் கூற முடியவில்லை. நாங்கள் தொகுதிக்குச் செல்ல வேண்டாமா, எங்கள் தொகுதியில் ஓடை இல்லையா, வாய்க்கால் இல்லையா என்றெல்லாம் கேட்டார்கள்.

(மாலை 5·30)

மிகவும் உருக்கமாகக் கேட்டார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. தொகுதியைப் பற்றியெல்லாம் சொல்லுவதற்கு உங்களுக்கு நிரம்ப சந்தர்ப்பம் இருக்கிறது. அதிகாரம் அத்தனையும் உங்களுடைய அமைச்சர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் கையெழுத்துப் போட்டால், உத்தரவு பிறப்பித்தால் நிச்சயமாக நடக்கும். எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் அழுதாலும் எந்த விதமான பிரயோசனமும் இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் இருக்கிறது. ஒருவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால் அவர் தொகுதிக்கு மட்டுமல்ல, ராஜ்யம் முழுவதற்கும் அவர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். He is a representative of the country. பட்மண்ட் பர்க் போன்ற பெரிய மேதைகள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமக்கு ராஜ்யம் முழுமைக்கும் இருக்கும் பிரச்சினைகள் அத்தனையையும் எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகையால் நாம் இந்த ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறோம்; பொது ஜனங்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம். ஆகவே, பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைத் திறம்படப் பிரதிபலிப்பதற்கு முற்பட வேண்டுமென்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அடிப்படையில் பார்த்தால் நமது மன்றமானது அப்படி நடக்கிறதா என்றால் இல்லை. இது இரு கூறு நடந்து கொண்டே இருக்கிறது.



ஸ்பீக்கரைப் பொறுத்தவரை எவ்வளவு பொறுப்பாக, சிறப்பாக இருக்க வேண்டுமென்பதையெல்லாம் இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் நடுநிலைமையாக இருக்க வேண்டுமென்பது மட்டுமல்லாமல் அவர்கள் இந்த மன்றத்தின் உறுப்பினர்களுடைய எல்லா உரிமைகளையும் பாதுகாக்கின்ற காவலராகவும் இருக்க வேண்டுமென்று எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். கேள்வி கேட்பதில் பல சங்கடங்களை எடுத்துக் கூறினார்கள். ஸ்பீக்கருடைய "ஐ"யை காச் பண்ணவேண்டும். Catching the eye of the Speaker பாராளுமன்ற முறைப்படி பல காரியங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முதல்வராக இருந்த பாலடுவின் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள்.

The eye of the Speaker is the most elusive thing nature has ever created என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இருந்தால் இங்கு என்ன முறையில் இருக்கிறது என்று நாமே சற்றுச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக, இந்த மாதிரி பல உறுப்பினர்கள் கேள்வி கேட்பார்கள். எல்லாம் அந்தக் கேள்வியை ஒட்டியதாக இருக்காது. கேள்வியை ஒட்டியதாக இல்லையென்று சொன்னால் ஸ்பீக்கர் மறுப்புத் தெரிவிப்பது கடமை என்பதை உணருகூறும். ஆனால் மன்றத்தில் இருப்பவர்கள் நேர்மாறாக நடந்து கொண்டிருப்பதை கண்டிக்கும் காரியத்தைச் சபாநாயகர் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மன்றத்தில் சத்தம் போடுகிறவர்களுக்கும் சண்டை போடுகிறவர்களுக்கும் தான் இடம் இருக்கிறது என்ற கருத்தை எடுத்துக் கூறினார்கள். அப்படியானால் ஒன்று கூற விரும்புகிறேன். அப்படிச் சத்தம் போடுகிறவர்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும் வன்மையாகக் கண்டிக்க சபாநாயகர் தவறி இருக்கிறார்கள் என்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், அந்தக் காரணத்தாலே சபாநாயகராக இருப்பதற்கு லாயக்கில்லை என்று கூற விரும்புகிறேன்.

இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன. பொதுவாக, இந்த மன்றத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் உற்றுக் கவனித்துப் பார்க்கிறபோது நம்முடைய தரம் குறைந்து கொண்டே போகிறது. மற்றைய மாநிலங்களில் இருப்பது மாதிரி நம்முடைய சட்டமன்றத்தையும் ஆக்கிவிடக்கூடாது. அதிலே நமக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதையும், பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சபாநாயகர் அவர்கள் இன்று ஆளும் கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி என்ற முறையில் நடந்து கொள்ளுகிறார்கள் என்று எங்களுடைய உறுப்பினர்கள் பலமுறை பல தடவை சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் சற்று நிதானத்தோடு குற்றச்சாட்டாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு அதிக அவகாசம் வேண்டும். ஆளும் கட்சியை இடித்துப் பேச எதிர்க் கட்சிகளுக்கு அதிக அவகாசம் வேண்டும். அப்படியானால்தான் ஆட்சியில் இருக்கும் தவறுகள் அத்தனையையும் சுட்டிக்காட்ட சந்தர்ப்பம் ஏற்படும். அதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சபாநாயகர் என்ன முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் பலரும் பல கருத்துக்களைக் கூறினார்கள். அவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரையும் கட்சியிலிருந்து ராஜினாமா செய்யவில்லை என்று எடுத்துக் கூறினார்கள்.

உண்மையில் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தக் கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

சபாநாயகராக இருக்கும் அன்னார் அவர்கள் ஒருசில காலம் அரசியல் வனவாசம் நடத்தினார்கள். நான் அதையெல்லாம் விமர்சிப்பதற்கு வரவில்லை. அதற்கு என்ன காரணமோ, அது உங்கள் கட்சிப் பிரச்சினை. அதைப் பிரச்சினையாகக் கொண்டு வரவில்லை.

டபிள் யார்ட்ஸ்டிக்—இரண்டு நீதி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். பல முறைகளில் குறிப்பிட வேண்டிய நிலைமை இருக்கிறது.

ஒரு மன்ற உறுப்பினரை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால் சற்று ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். Recalcitrant member ஆக இருந்தால் ஜாக்கிரதையாக அதிகாரத்தை உபயோகிக்க வேண்டும். ஒரு வேளை அந்த அங்கத்தினர் பிடிக்காதவராக இருக்கலாம். வேண்டுமென்றே செய்து கொண்டிருக்கிறார் என்றால் ஒரு வார்னிங் கொடுக்கலாம்; இரண்டு வார்னிங் கொடுக்கலாம். அதற்குப் பிறகு வேண்டுமென்றால் இந்த மன்றத்தில் உள்ள தலைவர்கள் அவ்வளவு பேரையும் கூட்டி என்ன கருத்தைச் சொல்லுகிறார்கள் என்று சொல்லி அதிலும் முடியவில்லை என்றால் நிச்சயமாக ஒரு உறுப்பினரை வெளியேற்றுவதில் எங்களைப் போன்றவர்களுக்கு ஆட்சேபணை இல்லை.

ஒரு உறுப்பினர் கொஞ்சம் சூடாக, சுவை இல்லாமல் வாதிட்டாலும் உடனடியாக வெளியேற்ற வேண்டுமென்று சபாநாயகராக இருக்கும் தாங்கள், பெரிய பொறுப்பையும், அவ்வளவு உரிமைகளையும் பெற்றிருக்கிற தாங்கள், வெளியேற்றுவதற்கு உத்தரவு போடுவது பொருத்தமல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

இந்த முறையில் பார்த்தால் எதிர்க் கட்சிகளாக இயங்குகின்றவர்களுக்கு பல கஷ்டங்கள், துன்பங்கள் இருக்கின்றன.



ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும் ஒருசில நபர்கள் எழுந்தவுடனேயே எல்லோரும் சேர்ந்து கொண்டு "என்னடா?" என்று சொல்லக் கூடிய சந்தர்ப்பங்கள் எல்லாம் நடந்தன என்பதற்காக வேதனைப் படுகிறேன்.

எதிர்க் கட்சியில் இருப்பவர்களை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் வலுச் சண்டைக்கு இழுக்கிறார்களே என்று பார்க்கும்போது உண்மையில் வேதனைப்படுகிறேன்.

இந்த மன்றத்தின் மாண்பைக் கட்டிக் காத்திட நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அந்தப் பொறுப்பை நல்ல முறையில் உணர்ந்து சபாநாயகர் அவர்கள் நடந்திட வேண்டும். ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தால் அவர்களை விட்டு விடுவது என்றும், எதிர்க்கட்சியில் இருப்பவர்களாக இருந்தால் வெளியேற்றுவதும் பொருத்தமானது அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அண்மையில் நடந்த விவாதங்களில் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது நீண்ட நாட்களாக நல்ல முறையில் நடந்தது என்றாலும்—அண்மைக் காலத்தில்—இதை அண்டர்லைன் பண்ண வேண்டும்—சரியாக நடக்கவில்லை, மோசமாக நடைபெறுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு ஏதாவது காரணம் இருக்குமென்று நினைக்கிறேன். அதையும் சொன்னால் நல்லது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காரணம் எல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துக்கூறி இந்த மன்றத்தில் எதிர்க்கட்சிகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நாங்கள் மோதிக்கொள்ளத் தேவையில்லை. அந்தச் சண்டையை நாங்கள் வெளியே பார்த்துக்கொள்வோம். அந்தப் பிரச்சினை எங்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த விளக்கத்திலிருந்து நாங்கள் ஒருவாறு புரிந்துகொண்டோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முதலமைச்சரைப் போன்ற திறமைசாலிகளுக்கு உடனடியாகப் புரிந்து விடும். இல்லை என்று சொல்லவில்லை பொதுஜனங்களுக்குப் புரியுமோ என்னவோ தெரியவில்லை.

நான் உள்ளபடியே மிகவும் வேதனையோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன். இந்த மாதிரி நிகழ்ச்சியை நடத்துவதற்குக்

கஷ்டமான நிலைமை இருந்தபோதிலும் நடுநிலைமையைக் காக்க பல தடவையும் தவறி இருக்கிறீர்கள்; எங்களுக்குப் போதுமான அவகாசம் கிடைக்கவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

ஒரு சில நோட்டீஸ்கள் கையில் இருக்கின்றன. எல்லாவற்றையும் படிக்க வேண்டுமென்று நினைக்கவில்லை ஒரு நோட்டீஸைத் தங்களுடைய அனுமதியின்பேரில் படிக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

*Sub*—Notice under Rule 42 of the Assembly Rules re-calculated attempts to damage statues of Gandhiji.

"*Ref.*—Your letter, dated 6–3—1974.

I am to inform you that the Hon. Speaker has withheld consent to raise the matter in the Assembly.....

என்று தந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம், காந்தியடிகள் சிலையை உடைத்ததால் அவர்களுடைய கொள்கையை அழித்துவிட முடியாது என்பதை நம்பக் கூடியவர்கள். ஆனால் சமூக விரோதிகள் இந்த மாதிரியான காரியங்களில் அண்மையில் அதிகமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். சேலத்தில் நடந்திருக்கிறது.

திருநெல்வேலியில் நடந்திருக்கிறது, தென்காசியில் நடந்திருக்கிறது, ஏனைய பகுதிகளிலும் நடந்திருக்கின்றன என்று எல்லா விவரங்களையும் சொல்லி பல தடவைகள் இந்த முக்கியமான விஷயம்பற்றி இந்த சபையில் விவாதிக்கவேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறினோம். ஆனால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதே மாதிரி மின்சாரவெட்டைப் பொறுத்த வரையில் நாங்கள் எல்லாம் ரூல் 41-ன் படி முதலில் ஒரு தீர்மானம் கொடுத்தோம். ஆனால் அதற்குப் பிறகு ரூல் 42-ன் படி பலரும் கொடுத்தார்கள். ரூல் 42-படி கொடுத்ததை ஏற்றுக்கொண்டு, சட்டமன்றத்தில் அந்த அறிக்கை வந்த பிற்பாடு, ஒரு கருத்தைத் தந்தார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : காந்தி சிலை பற்றி கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இங்கே அனுமதிக்கப்படவே இல்லை என்று கூறினார்கள். ஐந்தாறு தீர்மானங்கள் வந்திருக்கலாம். ஆனால் இரண்டொரு தீர்மானங்களுக்கு, காந்தி சிலை உடைப்பு, காந்தி சிலையைக் களங்கப்படுத்திய தீர்மானங்கள் குறித்து இங்கு நான் விளக்கங்கள் அளித்திருக்கிறேன். அதற்குப் பிறகு விவாதித்து அதற்குப் பிறகு அவையை ஒத்திவைக்கவேண்டிய தேவை இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு விடுபட்டிருக்கலாம். ஆனால் அதற்காக காந்தி சிலை உடைப்பு அல்லது காந்தி சிலையைக் களங்கப்படுத்தியது பற்றி இந்த அவையிலே எதுவுமே பேசவில்லை என்ற தவறான கருத்து பொது மக்களிடையே ஏற்படக்கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.





<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : 1974 மார்ச் திங்கள் 6ஆம் நாளன்று கொடுத்துள்ளதுபற்றி என் கையில் விவரம் இருக்கிறது. மற்றவை பற்றி என் கையில் விவரம் இல்லை. மின்சார வெட்டைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சி சார்பாக நான் கொடுத்தேன். வேறு நபர்களும் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் கூறியிருப்பது, என்ன கருத்து கூறப்பட்டது என்றால், "With reference to your letter, I am directed to state that the Hon. Speaker has disallowed the motion given notice of by you on the above subject as the Minister for Electricity has made a statement on 23rd March 1974 on the above subject." என்று சொல்லியிருக்கிறார்கள்.

நாங்களும் இது சம்பந்தமாக தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். இந்தமாதிரி பல நோட்டீஸ்கள் எல்லாம் இருக்கின்றன. நீதி வழங்கப்படக்கூடிய முறையில் சம நீதி வழங்கப்படவேண்டும். Not only justice should be done, but justice should appear to be done என்று சொல்வார்கள்.

அந்த அடிப்படையில் சபாநாயகர் அவர்கள் எங்களுக்கு நீதி வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் பகிரங்கமாக கூற கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எங்களுடைய தீர்மானங்களை எல்லாம் அவையில் படித்து அதற்கு முடிவு செய்யவேண்டும். வேண்டுமானால் அதற்கு அனுமதி மறுக்கலாம். ஆனால் நீங்கள் என்ன காரணங்களைக் கூறுகிறீர்கள் என்பதை நிச்சயமாக சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் எல்லாம் எல்லா விதமான காரியங்களுக்கும் உடனடியாக அவசியம் இல்லாத காரியங்களுக்கெல்லாம் 42-வது விதியை பிரயோஜனப்படுத்துவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமான விஷயங்கள் பற்றி தீர்மானங்கள் கொடுத்தால் ஏதோ அதற்கெல்லாம் அனுமதி மறுப்பது என்றால் இது ஒரு எதேச்சாதிகார ஹிட்லரின் போக்கு மாதிரி இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டு எங்களுடைய திறமைக்கேற்றவாறு ஒரு சில கருத்துக்களை எல்லாம் கூறியிருக்கிறோம்.

அதல்லாமல் கிரிமினல் சட்டப்படி சார்ஜஸ் எப்படி இருக்க வேண்டுமோ அதேமாதிரி இருக்கவேண்டும், இதிலே ஸ்பெசிபிக் சார்ஜஸ் இல்லை; ஆகவே அதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உயர்திரு. கந்தப்பன் அவர்கள் கூறியதுபோல் அந்தமாதிரி எல்லா காரியங்களுக்கும் அந்தமாதிரி சார்ஜஸ் போல் இருக்கவேண்டிய தேவை இல்லை. Charges need not be exhaustive; charge need only be illustrative. என்ற அடிப்படையில் அந்த முறையைத்தான் பின்பற்றியிருக்கிறோம்.

அதெல்லாமல் ஒரு குற்றப்பத்திரிகை மாதிரி 1, 2, 3 என்று சொல்லி குற்றப்பத்திரிகைபோல் கூறவேண்டுமென்று நினைக்கவில்லை. பாராளு மன்றத்தில்கூட இதே சம்பிரதாயந்தான் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த வாதங்களை எல்லாம் அன்றிருந்த ஆணைச் சபாநாயகர் பார்த்து இந்தத் தீர்மானம் ஒழுங்காக இருக்கிறது என்று இந்த மன்றத்திலேயே கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தீர்மானம் சட்டவிரோதமானதல்ல. நாச்சுரல் ஜஸ்டிஸ்க்கு அப்பாற்பட்டதாக எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. ஸ்பெஸிபிக்காக ஒரு சில குற்றங்களைத் தாக்கல் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் கூறுகிறோம். ஒருவேளை பெரும்பான்மை இருக்கிற காரணத்தால் இது நிராகரிக்கப்படுவதாக இருந்தாலும் எதிர்கட்சிகள் எல்லாம் உணர்வோடு அத்தனை எதிர்கட்சிக்காரர்களும் கூறுகிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இதிலே தவறு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த மன்றமும் உணர்ந்து கொள்ளும் என்று கருதுகிறேன்.

எதிர்கட்சிகளும் ஆளும் கட்சியும் இரண்டு அவயவங்கள் ஆகும். இரண்டு கால்களாக இருக்கின்றன. ஒரு காலுக்கு ஊனம் ஏற்பட்டால் அந்த ஊனம் அடுத்த காலிலும் ஏற்பட்டுவிடும். ஆகவே இப்படிப்பட்ட நல்லமுறைகளைக் கையாள்வதற்கு சபாநாயகர் அவர்கள் தவறி இருக் கிறார்கள் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் திரு. வீராசாமி அவர்களைப் பற்றி முந்திரிக்கொட்டை என்று சொன்னார்கள். இது சரிதானா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: வேண்டுமானால் நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். உங்களுக்கு அவ்வளவு ஆத்திரம் இருக்குமானால். வேண்டுமென்று அவரை அப்படிச் சொல்லவில்லை. அடிக்கடி அவர்கள் இங்கு வந்து ஆலோசனையைக் கேட்டுக்கொண்டு அங்கு போய் அவர்கள் இப்படிப்பட்ட விவாதங்களை எல்லாம் கிளப்பியிருக்கிறார்கள். இதெல்லாம் என்னைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் அவைகளை பட்டவர்த்தனமாகச் சொல்ல நினைக்கவில்லை. விளக்கத்திற்கு நன்றி.

திரு. நா. வீராசாமி: என்னைப் பொறுத்தவரையில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போதே கேட்கவேண்டுமென்று நினைத்தேன். அவர்கள் தலைவர். அவர்கள் பேசும்போது குறுக்கிடுவது நன்றாகயிருக் காது என்று அமைதியாக இருந்தேன். ஆனால் அவர்கள் சொன்னார்கள் முந்திரிக்கொட்டை என்று. திரு. பொன்னப்ப நாடார் அவர்களைப் போன்ற பெரியவர்கள் எல்லாம் சட்டமன்றத்தில் அப்படிப்பட்ட வார்த்தை களைப் பயன்படுத்துவதைக் கேட்டு நாங்கள் வருத்தப்படுகிறோம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அவர்களை முந்திரிக்கொட்டை மாதிரி என்று சொன்னேன். அதில் உங்களுக்கு சங்கடம் இருக்கும் என்று நினைத்தால் நான் நிச்சயமாக அதைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன். நான் அந்த மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்த விரும்ப வில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பதவியில் இருந்து நீக்கம் செய்கிற தீர்மானத்தை எதிர்க்கிற வகையில் சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் மீது கருத்துக்களைத் தெரிவித்து அவர்கள் பதவியில் இருந்து இறங்கவேண்டும் என்பதற்குக் குறிப்பிடப்பட்ட காரணங்களும் அதையொட்டி எடுத்துவைக்கப்பட்ட வாதங் களும் அவ்வளவு பொருந்தியவைக் கூடியவையாக இல்லை என்பதை இங்கு மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல் இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி அடிப்படையில் இங்கே கருத்துக்கள் பரிமாறுகிற அளவிற்கு பலரும் எடுத்து வைத்திருக்கிறார்களே தவிர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய நடவடிக்கைகளை எடுத்துச் சொல்கிற வகையில் கூறுகிறபோது அவர்கள் இந்த மன்றத்தின் மரபுகளை மீறினார்கள் என்றோ அல்லது சட்டதிட்ட விதிகளுக்குப் புறம்பாக பார பட்சமாக நடந்தார்கள் என்ற தன்மையின் அடிப்படையில் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் மிக அடக்கமாக இருப்பவர்கள் என்றாலும் ஆன்று அவிந்த கொள்கை சான்றோர்; நிதானமாக காரியங்களை நடத்தி வருபவர்கள் என்பதை பேரவை உணரும். தலைவருக்கு என்று தனி உரிமைகள் எப்போதும் வந்துவிடுவதில்லை. இந்த அவை பார்த்து எந்த மரியாதையையும் மதிப்பையும் தருகிறதோ அந்த மதிப்பும் மரியாதையும்தான் பேரவைத் தலைவருடைய பதவி இடத்தில் இருக்கும்.

இந்த அவையை எப்படி நடத்திச் செல்லவேண்டுமென்பதற்கான விதி முறைகளை நாமே ஒழுங்குபடுத்தித் தருகிறோம். அரசியல் அமைப்புச் சட்டத் தில் விதித்திருக்கிற விதிகளின் அடிப்படையில் இந்த மன்றத்தை எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக நாம் விதிகளை அமைப்பதற்கான குழு ஒன்றை அமைத்து அவ்வப்போது திருத்தங்கள் தந்து இந்த அவை இந்த இந்த விதிகளின் அடிப்படையில் நடைபெறவேண்டுமென்று வகுத்துத் தருகிறோம். அந்த விதிகளின் அடிப்படையில் பேரவையின் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிற வகையிலும் எப்படி எப்படி எல்லாம் ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக அலுவல் ஆய்வுக் குழு ஒன்றை வைத்திருக்கிறோம். அந்த அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது வேறு.

ஆனால் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் இருக்கிற நடைமுறைகளை முழுவதும் எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புகளைக் கையாள்வதற்கான வகையில் அலுவல் ஆய்வுக் குழு அமைந்திருக்கிறது. அதில் எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் என்னென்ன வகுத்துத் தருகிறார்களோ அப்படி வகுத்துத் தந்த விதிகளின் அடிப்படையில்தான் பணிகளையாற்றிச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பேரவைத் தலைவருக்கு என்று ஒரு தனி உரிமைகள் வந்துவிடுவதில்லை.

தலைவருடைய கண்ணோட்டமும் சரி அல்லது இந்த அவையை நடத்திச் செல்கின்ற பாங்குகள் அனைத்தும் சரி அனைவரும் சேர்ந்து தந்த ஒன்றுதான். ஆகவே அவர்கள் இப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று வகையை நாம் வகுத்துத் தருவதைப் பொறுத்து அமைந்திருக்கிறது.

கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு இடம் தரவில்லை, கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்பதற்கு இடம் தரவில்லை, ஒத்திவைப்புத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவில்லை அல்லது அதற்கு இடம் தரவில்லை என்ற காரணங்களுக்காகவே ஒரு பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரமுடியும் என்றால் அப்போது ஒரு அவையும் அவைத் தலைவரும் இருக்க முடியாது.

நடைபெற்றிருக்கிற பல்வேறு தன்மைகளின் அடிப்படையில் பார்க்கும்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் அவர்கள் சரியாக நடந்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் காணலாம்.

காலையிலிருந்து அம்மையார் அவர்கள் தலைமை தாங்கிக்கொண்டு வருகிறார்கள். அந்த இடத்திலிருந்துகொண்டு தலைமை தாங்குவது எவ்வளவு கடினமானது என்பதையும், ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் எந்தெந்தப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன என்பதையும், அதை அடக்குவதற்கு எவ்வளவு சாமர்த்தியம் வேண்டும் என்பதையும், எப்படிப்பட்ட நேரங்களில் உரத்த குரலில் உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்பதையும் இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை விவாதிக்கின்ற நேரத்திலே உடனே உடனே வந்ததை நாம் உணர்ந்தோம். இவ்வளவுக்கும் பேரவைத் தலைவர் எவ்வளவு அமைதியாக இருந்து, சாமர்த்தியமாக இந்த அவையை நடத்திக்கொண்டு இருக்கிறார் என்று கருத வேண்டியிருக்கிறது. நாம் அத்தனைபேரும் சேர்ந்துதான் அந்தப் பெருமையைத் தேடித் தரவேண்டியவர்களாக இருக்கிறோம்.

விதி என்றால் விதிதான் என்று மாண்புமிகு அனந்தநாயகி அவர்கள் கூறினார்கள். விதி என்றால் விதியாக இருக்க வேண்டும். விதியை வகுத்துத் தந்ததும், நாம்தான், பேரவைத் தலைவரிடத்தில் அதைக் கொடுத்து பேரவையை நடத்தச் சொல்வதும் நாம்தான். அவர் அதை எடுத்துச் சொல்லி இந்த அவையை நடத்த வேண்டியிருக்கிறது; நாம் எப்படி இந்த அவை நடக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அப்படி விதி முறைகளை மாற்றித் தாருங்கள், மாற்றிக் கொடுத்தால்



அவர் அந்த அடிப்படையில் அவையை நடத்துகிறார். இதை அவர் பல முறை சொல்லியிருக்கிறார். இந்த அவையை நடத்திச் செல்வதற்கு நாம் வகுத்துத் தந்த விதி முறைகளை வைத்துத்தான் நடத்த முடியும். மீறி வருகிற நேரத்தில் அதை அனுமதிக்கவில்லை என்று சொல்வது முறையாகாது.

அடுத்து, பேரவையில் 45 நிமிடங்களுக்கு மேல் நடந்த நடவடிக்கைகளை குறிப்பேட்டிலிருந்து நீக்க ஆணை பிறப்பித்ததாலும் என்று கூறி, அப்படி ஆணையிட்டது தவறு என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பாராளுமன்ற நடவடிக்கைகளிலும், பல்வேறு சட்டமன்ற நடவடிக்கைகளிலும் நாம் பார்க்கிறோம். பல்வேறு நிகழ்ச்சிகள் நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. எந்தச் சட்டமன்றத்திலும் இந்த நிகழ்ச்சியைத்தான், இந்த சொற்றொடரைத்தான், இந்த வார்த்தையைத்தான் நீக்கலாம் என்று வரையறை இல்லை. ஒரு மணி நேரம் நிகழ்ச்சிகள், 80 நிமிட நிகழ்ச்சிகள் நீக்கப்பட்டிருக்கிற வரலாற்றை நாம் காண்கிறோம். 40—45 நிமிட நிகழ்ச்சிகள் நீக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

விதிக்குப் புறம்பாக இருக்கிறது என்று கருதினால் அதை நீக்கம் செய்ய தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. சில கருத்துக்கள் விதிக்குப் புறம்பாக இல்லையென்றாலும், அவைக்குப் பெருமையளிக்காது, பொது மக்களிடையே நல்ல எண்ணத்தை ஏற்படுத்தாது, அல்லது இந்தக் கருத்துக்களை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு பேசுவதற்காக உள்ள வாய்ப்பாக அமையக் கூடாது என்று கருதினால், அதைப் பேரவை, நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்க அதிகாரம் இருக்கிறது.

எந்தெந்தச் சொற்களை, கருத்துக்களை, எந்தெந்த சொற்றொடர்களை எடுக்க வேண்டுமென்று நாம் கொடுத்திருக்கிற விதியின் படிதான் நீக்குகிறாரே தவிர வேறு எந்தவித அடிப்படையிலும் அல்ல.

இப்படி 40—45 நிமிட நேர நிகழ்ச்சிகளை நீக்கிவிடச் சொன்னார் என்பதால் தங்கள் மீது நம்பிக்கை இல்லை என்று ஒரு காரணத்தைக் காட்டி இருப்பது பொருந்தாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன் மீது ஒரு விவாதம் வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தது போல், அலுவல் ஆய்வுக் குழுவில் இனிமேல் எப்படி நடந்துகொள்வது, எந்த ஒழுங்கு முறையைக் கையாள்வது, முன்னால் வந்த சூழ்நிலையை ஒட்டிப் பல தடவைகள் அலுவல் ஆய்வுக் குழுவில் விவாதிக்கப்பட்டு, அத்தனைக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டு, எதிர்காலத்தில் எப்படி நடக்க வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கிறோம். அந்த முடிவின் அடிப்படையில்தான் இப்போது நாம் செய்து இருக்கிறோம். ஆகவே, அவர் பாரபட்சமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டிற்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதிக்கப் படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவர்கள்

எந்தப் பாணியில் எந்தச் சூழ்நிலையில் ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறார்கள். அது எந்த தொனியில் இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் அவர்கள் ஒழுங்குப் பிரச்னை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு அவர்கள் ஒழுங்குப் பிரச்னைகளுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார் என்பதை நாம் குறிப்பில் காணலாம்.

மாண்புமிகு திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் பேரவைத் தலைவராக இருந்த பாங்கைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. யு. கிருஷ்ண ராவ் அவர்கள் இருந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது இந்த மன்றத்தில் இருக்கும் வாய்ப்பு எனக்கு இல்லையென்றாலும் கூட நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கும் தன்மை இருந்தது.

1962–67-ல் இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்திலும் நான் கவனித்து இருக்கிறேன். மாண்புமிகு மணலி அவர்கள் சொன்னமாதிரி, காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில் ஒழுங்குப் பிரச்னை, ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்திருப்பதைப் பார்த்தால் இந்த அளவுக்கு இல்லை என்பதைக் காணலாம்.

இவ்வளவு ஒழுங்குப் பிரச்னைகளுக்கும் இடம் தந்து, இந்த அவையை நல்ல முறையில் நடத்தியிருக்கிறார்கள். ஒழுங்குப் பிரச்னை எழுப்ப வேண்டுமென்றால், விதி முறைகள் மீறப்படும்போது அதை அவைத் தலைவரின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் எழுப்பலாம்.

சில நேரங்களில் ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதும், அது ஒழுங்குப் பிரச்னை இல்லை என்று தீர்ப்பு வழங்குவதும், குறிப்பிட்ட சொற்றொடர்களை பயன்படுத்திய முறை தொடர்பு இல்லாதது என்று கருதி, சிலர் தன்னிலை விளக்கம் தருவதற்காக ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் கிளப்புகிறார்கள். அதற்கு ஒழுங்கு முறை இல்லை என்று சொல்லலாம்.

அவர் கொடுத்த தீர்ப்பு விதி முறைக்குட்பட்டு இருக்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் விதி என்றால் விதி என்றார்கள். அந்த விதி முறையிலேயே நாம் தெளிவாகச் சொல்லி விடலாம். ஒழுங்குப் பிரச்னை என்றால் என்ன முக்கியத்துவம் தருகிறோமோ, அந்த அளவுக்கு முக்கியத்துவம் பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், பாயிண்ட் ஆப் செல்ப்-எக்ஸ்ப்ளனேஷன், தன்னிலை விளக்கம் போன்றவற்றிற்கும் தர வேண்டுமென்று நாம் விதி முறை வகுத்துத் தந்தால் அந்த அடிப்படையில் அவர்கள் செய்வார்கள்.

தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டுமானால், பேசுகின்ற உறுப்பினர் யீல்டு செய்தால்தான் சொல்லலாம் என்று இருக்கிறது. அப்படி யீல்டு செய்யவில்லையென்றால் பேச முடியாது. அப்படிப் பேசுவதற்கு அனுமதி வேண்டுமென்றால், தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டுமென்றாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால் என்ன முக்கியத்துவம் தரப்படுமோ அந்த முக்கியத்துவம் தரவேண்டுமென்று நம்முடைய விதியை மாற்றலாம்.



ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்பிவிட்டு தன்னிலை விளக்கம் என்று வருகிறபோதுதான் அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய சங்கடமான நிலைமை பேரவைத் தலைவருக்கு ஏற்படுகிறது. அம்மையார் அவர்கள் தலைமை தாங்கும்போது பல பேர் ஒழுங்குப் பிரச்னை, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் நிலை ஏற்பட்டது. அவர் உடனே அமைதிப் படுத்தி, ஒழுங்குப் பிரச்னை இல்லை என்று உட்கார வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதைப் பார்த்தோம்.

ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றுமே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொன்னார்கள். 1962–67-ல் நான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். அவை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சொல்லப்போனால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அப்பொழுது மாலை
எந்த அளவில் வந்தது, திரு. கிருஷ்ண ராவ் காலத்தில் எவ்வளவு வந்தது. 6–00
திரு. சிவசண்முகம் பிள்ளை காலத்தில் எவ்வளவு வந்தது, இப்பொழுது எவ்வளவு வந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்த்தால் அதைவிட அதிகமான அளவுக்கு இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன.

இப்பொழுது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார்கள்.

திரு. செல்லபாண்டியன் காலத்தில் நாங்கள் எதிர்க் கட்சியிலிருந்த பொழுதும் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட அனுமதிக்கப்படவில்லை. அப்பொழுதெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், கொண்டு வருவதற்கான காரணங்களைச் சொல்லிவிட்டு, உட்கார்ந்துவிட வேண்டும். உறுப்பினர்கள் விளக்கம் சொல்லக் கூடாது. மணி அடித்துத் தடுத்து உட்கார வைத்துவிடுவார்கள். குறிப்பைப் பார்த்தால் தெரியும்.

இப்பொழுதெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டால் என்னவெல்லாம் பேசுவார்களோ அதையெல்லாம் பேசி முடிந்த பிறகு, அதற்கு அமைச்சர்கள் என்ன பதில் சொல்வார்களோ அதுவும் சொல்லி முடிந்த பிறகு, ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிப்பதற்கு அவசியமில்லை என்றுதான் பேரவைத் தலைவர் சொல்லக்கூடிய அளவுக்கு, அவ்வளவு தாராளமான போக்கை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கையாண்டு வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதே மாதிரிதான் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்திருந்து வேறு பல கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையும் தன்மையும் நிறைய இருப்பதைக் காணலாம்.

அன்றைக்கு நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்தில் கூட, அதற்குப் போதுமான அளவுக்கு உறுப்பினர்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருக்கிறார்கள்

என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்துங்கூட, அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்தவர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட மறுத்து விட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்று கேட்ட பொழுது, பட்ஜெட்டில் பொது விவாதம் வருகிறது, அதில் உங்களுடைய கருத்துக்களைப் பேசிக் கொள்ளலாம். ஆகவே, அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட அப்பொழுது இருந்த பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை. அனுமதிக்கவில்லை என்ற காரணத்திற்காக நாங்கள் சில பல நாட்களுக்குச் சட்டப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல் கூட இருந்தோம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட பேரவைத் தலைவரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, பதவி நீக்கத் தீர்மானமோ நாங்கள் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை கூட இப்பொழுது இல்லை.

கேள்விக்கு இடம் கொடுக்கவில்லை, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு இடம் கொடுக்கவில்லை, நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து அகற்றப்பட்டது என்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எல்லா சட்டமன்றங்களிலும் இருக்கிற நிலைமைகள்தான். எல்லாப் பேரவைத் தலைவர்களும் கையாள்கின்ற நிலைமைகள்தான். இந்தப் பேரவைத் தலைவர் மட்டுமல்ல, எந்தப் பேரவைத் தலைவர் தலைமை தாங்கினாலும் இத்தகைய நிலைமைகள் வரும் என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம்.

'எதிர்க் கட்சி உறுப்பினர்கள் செயல்படாமல் உரத்த குரலெழுப்பித் தடுக்கவும் ஆளுங் கட்சி உறுப்பினர்களை அனுமதிப்பதாலும்' என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உரத்த குரலை இரண்டு பக்கங்களிலும்தான் எழுப்புகிறார்கள். இன்று காலையிலே கூட உரத்த குரல் எழுப்பப்பட்டது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் தலைமை தாங்கும்போது கூட உரத்த குரல் எழுப்பப்பட்டது. இரு சாராரும் தான் உரத்த குரல் எழுப்பினார்கள். எல்லோரும் தலைவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் உரத்த குரல் எழுப்பினார்கள் என்று சொல்ல முடியாது.

இந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, அந்தப் பக்கமாக இருந்தாலும் சரி, உரத்த குரல் எழுப்பக் கூடாது என்றாலும், இரு சாராரும் சில சமயங்களில் எழுப்பத்தான் செய்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கூட மிக உரத்த குரல் எழுப்ப வேண்டிய ஒரு கட்டம் வந்தது.

எல்லா உறுப்பினர்களும், கடமை உணர்ச்சியோடும், பொறுப்பு உணர்ச்சியோடும் நடந்துகொள்ள வேண்டிய உணர்வைப் பெறவேண்டும்.

உரத்த குரலை இரு சாரார்களும் எழுப்புகிறார்கள்



எதிர்க் கட்சியினராக இருந்தாலும், ஆளும் கட்சியினராக இருந்தாலும் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். ஒரு நேரத்தில் ஒருவர்தான் பேச வேண்டும். பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் பேச வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதித்த பிறகு பேச வேண்டும் என்ற விதி முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

அதற்குப் பிறகுதான் பேரவைத் தலைவர் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்ற தீர்மானத்திற்குவர வேண்டும். உறுப்பினர்களே விதிகளை மீறி நடந்துகொள்கிற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, பேரவைத் தலைவர் சரியாக நடந்துகொள்ளவில்லை என்று அப்படிப்பட்ட குற்றச்சாட்டை எப்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் மீது சாட்டுவது ?

அதே குற்றச்சாட்டு காலையிலிருந்து தலைமை தாங்குகிற அம்மையார் அவர்களுக்கும் வருகிற அளவுக்குத்தான் காலையில் கூட இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தன. எல்லா உறுப்பினர்களும் சில அடிப்படை விதிகளை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

பேரவைத் தலைவர் அனுமதி பெற்றுத்தான் ஒருவர் எழவேண்டும். அவர் சொன்னதற்குப் பிறகு இன்னொருவர் பேரவைத் தலைவர் அனுமதி பெற்று எழவேண்டும். அவர் கேட்டு முடிந்ததற்கு பிறகு மற்றவர்கள் அனுமதி பெற்று எழ வேண்டும். ஒவ்வொருவராகத்தான் தலைவருடைய அனுமதி பெற்று எழுந்து பேசவேண்டும். அப்படிப்பட்ட ஒரு முறையை எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும். தலைவர் அனுமதி பெற்றுத்தான் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. அனுமதி பெறாமல் இரு சாராரும் செய்கிறார்கள். ஒப்புக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியிலிருந்துதான் உரத்த குரல் வருகிறது, எதிர்க் கட்சிப் பக்கம் இல்லை என்ற கருத்து அடிப்படைத் தீர்மானத்தில் தொனிக்கிறது. ஆனால் நிலைமை அப்படியில்லை. எந்தப் பக்கமாக இருந்தாலும், எந்த சபாநாயகர் தலைமை தாங்கினாலும், இந்த மாதிரி நிலைமைகள் இருந்தால் அவர் அவையை நடத்திச் செல்வது கடினமான ஒன்றுதான். ஆகவே, உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் விதிமுறைகளுக்கு மதிப்புத் தந்தால் ஒழிய இந்த நிலைமை சரிபட்டு வராது.

நேரம் ஒதுக்குவதைப் பற்றியும் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கிருஷ்ண ராவ் அவர்கள் இருக்கும்பொழுதும் சரி, திரு. சிவசண்முகம் பிள்ளை இருக்கும்பொழுதும் சரி, ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சியினருக்கும் நேரம் ஒதுக்கும்பொழுது, எதிர்க் கட்சியினரே அதிக நேரத்தைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நேரம் ஒதுக்கியதில்லை.

திரு. செல்லபாண்டியன் அவர்கள் காலத்திலும் ஆளும் கட்சிக்குப் பாதி நேரம், எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம் என்ற தன்மையில் பாதி, பாதி அளவுக்குத்தான் நேரம் கொடுக்கப்பட்டது. பொது விவாதமாக இருந்தாலும் சரி, நிதிநிலை அறிக்கையின் பேரில் விவாதமாக இருந்தாலும் சரி, இப்பொழுது நடைபெறுகிற விவாதமாக இருந்தாலும் சரி,

அதிகமான நேரத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பெறத்தக்க அளவுக்குத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்து வந்தார்கள்.

மாண்புமிகு கந்தப்பனும், மாண்புமிகு வீராசாமியும் குறிப்பிட்டுக் காட்டியது போல ஏற்கனவே நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சி குறிப்புகளைப் பார்த்தால், நேரம் ஒதுக்குகின்ற வகையில் ஒரு கட்சிக்கு இவ்வளவு என்று ஒதுக்குகிற அளவுக்குத்தான் எங்களுக்கு நேரம் கிடைக்கிறது.

திரு. செல்லபாண்டியன் காலத்தில் ஆளும் கட்சிக்குக் கிடைத்த நேரம் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை. எதிர்க் கட்சியினருக்கு 3 மணி நேரம் என்றால், ஆளும் கட்சிக்கு ஒரு மணி நேரம் தான் கிடைக்கிறது. அது தான் நடைமுறையில் வந்திருக்கிறது.

ஆளும் கட்சிக்குப் பாதி, எதிர்க் கட்சியினருக்குப் பாதி என்றாலும், நடைமுறையில் பேரவைத் தலைவர் எப்படி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதிகமான நேரத்தை எதிர்க் கட்சியினர்களுக்குத் தான் கொடுத்திருக்கிறார்கள். 1 : 1 அளவுக்குக் கூட அல்ல.

பெரும்பான்மையாக இருக்கிற ஆளும் கட்சியினருக்குக் குறைவான நேரம், எதிர்க் கட்சியினருக்கு அதிகமான நேரம் ஒதுக்கப்படுகிற வகையிலே தான் பேரவைத் தலைவர் நேரத்தை ஒதுக்கி வந்திருக்கிறார்கள் என்பதை இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிக் குறிப்பை எடுத்துப் பார்த்தால், எந்த ஆண்டு எந்த விவாதத்தை எடுத்துப் பார்த்தாலும், தெரிய வரும். அதுபற்றி புள்ளிவிவரத்தைக் கூட எடுத்துச் சொன்னார்கள்.

திரு. கிருஷ்ணாராவ் அவர்களாக இருந்தாலும் சரி, திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்களாக இருந்தாலும் சரி, செல்லபாண்டியன் அவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை விட பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் தாராளமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

எல்லா உறுப்பினர்களின் சார்பாக எடுத்துச் சொல்கிறேன். எதாவது வகையிலே இந்த விதிகள் சரியாக இல்லை, நமக்கு ஏற்றதாக இல்லை என்றால், நமக்கு அந்த விதிகளை மாற்றுவதற்கு உரிமை இருக்கிறது. விதி முறைகளை நாம் மாற்றிக்கொள்ளலாம் தேவைப்படும் பொழுது.

ஆனால், நடைமுறையில் இருக்கக் கூடிய விதிமுறைகளுக்கு அடங்கித் தான் நடக்க வேண்டும். அதையொட்டித்தான் அவையின் நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும்.



பேரவைத் தலைவருக்கு பாரபட்சமாக நடந்துகொள்வதற்கு அவசியம் இல்லை. பார்க்கப் போனால் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்களும் எடுத்துத் தெரிவித்தது போல, ஆளும் கட்சி உறுப்பினரே தங்களுக்குப் பேச வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள், இடம் கொடுக்கவில்லை என்று குமுறுகிறார்கள். ஆகவே, இத்தகைய நிலைமைகளில் அவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

எந்த அவைத் தலைவரும் சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் பொழுதுகூட புலவர் கோவிந்தன் அவர்கள் சாமர்த்தியமாக சமாளித்திருக்கிறார். நாம் வகுத்துத் தந்த விதிமுறைகளைநிறைவேற்றும் வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் நடந்து வந்திருக்கிறார்கள். அந்த விதிமுறைப்படி எல்லா உறுப்பினர்களும் நடக்க வேண்டும். அந்த அளவுக்கு பேரவைத் தலைவருக்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

பேரவைத் தலைவர் பதவிக்கு நாம் எந்த அளவுக்கு மதிப்புக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்குத் தான் பேரவை நிகழ்ச்சிகள் சுமுகமான முறையில் நடைபெறும். "ஆபீஸ் ஆஃப் ஸ்பீக்கர்" என்ற புத்தகத்திலே 'Philips Laundy' அவர்கள் மிக அழகாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

"Excepting only the Sovereign herself, no personage throughout the structure of British Parliamentary Government occupies a higher Pinnacle of prestige than the Speaker of the House of Commons. He embodies in his own person the dignity of the nation's representative assembly. The honour which is accorded to his office is such as to sustain the authority of any incumbent, weak and strong alike. As in all walks of life some Speakers are better than others, and not every holder of the office has contrived to meet its exacting requirements completely. But the office is above the individual and it is the office which commands the first respect. Whoever assumes the Speaker's historic mantle inherits the dignity that goes with it, a dignity that is unfailingly maintained and enhanced at every opportunty. For the exaltation of the Speaker ship is quite deliberate. It is the guarantee of the independence of the Chair of the House of Commons."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, அந்த அடிப்படையில் பார்க்கிறபொழுது மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அதன் அடிப்படையில் எடுத்துவைக்கப்பட்ட கருத்துக்கள், அதன் சார்பாக சொல்லப்பட்டவைகள் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல.

ஆகவே நாம் எந்த அளவுக்கு அந்தப் பதவிக்கு மதிப்புத் தரவேண்டுமோ அந்த அளவுக்குத் தரவேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் இந்த அவையை நடத்திச் செல்வதில் தன்னால் முயன்ற அளவுக்கு இயன்ற அளவுக்கு முயன்று பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தலைவர் அவர்களே, 1966 நவம்பர் 9-ஆம் தேதி இந்த மன்றத்திலே கடைசியாகப் பேசுகிற வாய்ப்பு பெற்றிருந்தேன் நான். அன்றைள், 1962 முதல் 1966–67 வரையிலும் இந்த மன்றத்திலே பணியாற்றியவர்களை எல்லாம் வாழ்த்தி விடைபெறுகின்ற அந்த நாளான அன்று பேசிய நான் இவ்வளவு இடைவெளிகளுக்குப் பின்னால் இந்த மன்றத்தில் முதல் முறையாக பேசுகின்ற வாய்ப்பை அளித்த நண்பர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்பு ஒருமுறை கொண்டுவந்த போதே இது இந்த அவைக்கு வரவேண்டுமென்று விரும்பினேன். அதற்குக் காரணம் எவ்வளவு தான்—ஐந்தாண்டுக் காலம் சட்டமன்றத்திலே எதிர்க் கட்சி வரிசையிலே இருந்து பணி புரிந்தாலும் பிறகு ஆளும் கட்சியின் சார்பில் நின்று வெற்றிபெற்று இந்த மன்றத்திலே துணைத் தலைவராகவும் பேரவைத் தலைவராகவும் பணி புரிந்தாலும் தெரிந்து கொள்ள வேண்டிய பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்ற காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு கிடைக்குமேயானால் இந்த மன்றத்திலே இருக்கின்ற தலைவர்கள் எல்லாம் மிக அருமையான கருத்துக்களைக் கூறுவார்கள், அதை ஏற்று இந்த மன்றத்திலே இன்னும் சிறப்பாக பணியாற்ற ஒரு வாய்ப்பு இருக்குமென்ற காரணத்தால் அப்போதே வரவேண்டுமென்று விரும்பினேன். "சுடர் விளக்கே ஆயினும் தூண்டுகோலின்றி சுடர் மங்கும்" என்ற கருத்தை உணர்ந்தவன் நான். "அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு" என்ற திருக்குறளை கற்றவன் நான்.

எவ்வளவுதான் படித்து, பண்பு நிறைத்திருந்தாலும் அவர்களிடத்திலும் சிறு குற்றங்கள் இருக்கலாம். அந்த மாதிரியான முறையிலே நம்மிடம் இருக்கும் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டினால் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால் அதை வரவேற்றேன். ஆனால், எனக்கு ஒரு ஏமாற்றம் தான் கிடைத்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே நல்ல முறையிலே நான் நடந்துகொள்வதற்கு எந்தெந்த வகையிலே தவறி இருக்கிறேன் என்று சுட்டிக்காட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் நான்கு காரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். (1) பாரபட்சமாக நடந்து கொள்கிறேன், (2) 45 நிமிடங்களுக்கு மேல் நடந்த நிகழ்ச்சியை எடுத்து விட்டேன், (3) பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு அனுமதி மறுக்கிறேன்,



நான் எந்த அளவுக்கு பாரபட்சமற்ற முறையிலே இந்த அவையிலே நடந்திருக்கிறேன் என்பதற்கான காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கந்தப்பன் அவர்களும், திரு. வீராசாமி அவர்களும், இந்த அவையின் முன்னவர் அவர்களும், மணலி கந்தசாமி அவர்களும் தெளிவாகக் கூறினார்கள். இது எந்த வகையில் பொருத்தமற்ற வாதம் என்று கூறிவிட்டார்கள். இதிலே மிக முக்கியமாக கூறப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் இரண்டு. (1) 45 நிமிடங்களுக்கு மேல் நடைபெற்ற நிகழ்ச்சியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியது, (2) பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப இடம் தரவில்லை என்பது. ஆகவே, இந்த இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு மட்டும் நான் என்னுடைய பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

45 நிமிட நேர நிகழ்ச்சியை குறிப்பிலிருந்து நீக்கலாமா என்பது விவாதத்திலே முக்கிய இடத்தைப் பெற்றது. இப்படி எங்கே நடந்திருக்கிறது என்று கேட்டார்கள்.

பல இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. "வெர்ட் ஆர் வெர்ட்ஸ்" நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்படலாம் என்று விதி இருக்கிறது. வெர்ட்ஸ் என்பதற்கு ஓரிரு வார்த்தைகள் என்று சொல்வது சரியல்ல.

நான் ஏற்கனவே இதைப்பற்றி தெரிவித்திருக்கிறேன். அது இரண்டு சொற்களைத்தான் குறிக்கும் என்று சொல்ல முடியாது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களையும் குறிக்கும். திரு. தங்கமணி அவர்கள் அதைக் குறிப்பிட்டுத்தான் விவாதித்தார்கள். அது பொருந்தாத விவாதம். இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை குறிக்கும் என்பதற்கு நிறைய சான்றுகளை கூறியிருக்கிறேன். நான் அதைப்பற்றி ஒரு தீர்ப்பு கூறும்போது என்னென்ன வகையிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதற்கு பல சான்றுகளை கூற விரும்புகிறேன்.

1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28-ம் நாளன்று நிதி ஒதுக்க மசோதா விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. காளிமுத்து அவர்கள் உரையின் இடையே நீக்கப்பட்டது பற்றி, 1973-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாளில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்கு பிரச்சினைக்கு 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாளில் நான் கீழே வருமாறு விளக்கம் அளித்துள்ளேன்.

"பேரவை நடவடிக்கைகளின் பகுதிகளை நீக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்சனையை எழுப்பினார்கள். அதுபற்றி நான் முடிவு கூறியபோது, இவ்வாறு நீக்கப்படுவது இதற்கு முன்னரும் நடைபெற்றிருக்கிறது. அதற்கான சான்றுகளை இன்று தருவதாகக் கூறினேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் பெருமளவில் நீக்கப்படுவது நம் நாட்டு பல்வேறு சட்டமன்றங்களிலும் நிகழ்ந்த காரணத்தால் 1956-ம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டிலேகூட இது குறித்துப் பெரிய விவாதமே நடைபெற்றுள்ளது. அந்த மாநாடு நம்முடைய சென்னை

யிலே நடைபெற்றது. நாடாளுமன்ற தலைவர் திரு. அனந்தசயனம் ஐய்யங்கார் அவர்களும், மேலவைத் தலைவர் செரியன் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். அந்த மாநாட்டிலே விரிவான விவாதம் நடைபெற்றது. எந்த அளவுக்கு நீக்கலாம், எப்போது நீக்கலாம் என்பதைப் பேரவைத் தலைவரே முடிவுசெய்யவேண்டுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

1958-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் ஆற்றிய உரையில் 20 நிமிடம் பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணராவ் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1964-ஆம் ஆண்டில் ஓர் உறுப்பினரின் உரையில் ஒரு பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1968-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாள் நிகழ்ச்சிகளில் இருபது நிமிட விவாதமும் 1968-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20-ஆம் நாள் நிகழ்ச்சிகளில் 15 நிமிட விவாதமும் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து அறவே நீக்கப்பட்டுள்ளன.

டில்லி மக்களவை, மாநிலங்கள் அவைகளிலும் கூட இவ்வாறு நடவடிக்கைப் பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டதற்கு நிறைய சான்றுகள் உள்ளன. ஓர் உறுப்பினர் ஆற்றிய உரை முழுவதுமாக நீக்கப்பட்ட நிகழ்ச்சியும் அங்கு நிகழ்ந்துள்ளது. ஆகவே, அவ்வாறு நீக்குவது ஒழுங்கற்றதாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

பிற மாநிலங்கள் அவைகளிலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதற்கு சான்று கூற விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தில் திரு. ஜோதி பாசு அவர்கள் தீர்மானத்தை எற்று 1956-ஆம் ஆண்டு பிப்பவரி திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற முழு நடவடிக்கையும் நீக்கப்பட்டுள்ளது.

1955-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ஆம் நாளில் மக்கள் அவையில் பேரவைத் துணைத் தலைவராக இருந்த திரு. அனந்தசயனம் ஐய்யங்கார் அவர்கள் திரு. பர்மன் என்ற உறுப்பினர் ஆற்றிய முழுப் பேச்சையும் நீக்கி உள்ளார்.

அது மட்டுமல்ல. பார்லிமென்டரி பிராக்டிஸ் என்பதையும், நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது



கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒட்டி, அவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் முழு பகுதியையும் நீக்கியிருக்கிறார்கள். மறுநாள் தீர்ப்பு வழங்கும்பொழுது,

**"Yesterday even when I said "nothing will be reorded", the Press has published something, which is not proper. Therefore, when I say that nothing will be taken down, it means absolutely no proceedings and the Press shall not publish anything that has happened at that time. Yesterday some papers have done it. Therefore, I am sorry I have to warn them."**

**Likewise on 25th March 1964 in the Lok Sabha, when a Member continued to interrupt the speech of anothter Member or Minister, the Speaker has directed that interruptions be not reorded** என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக 1964--ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாளில் திரு. எ. கே. சென் அவர்கள் பேச்சின் இடையே பலமுறை குறுக்கிட்டுப் பேசிய திரு. ராம் சேவக் யாதவ் அவர்களின் பேச்சு முழுமையும் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி ராவ் அவர்கள் நீக்கியுள்ளார்கள்.*

* * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்): சபாநாயகர் புலவர் கோவிந்தன் அவர்கள் முன்புதான் இங்கு பேசியதாக குறிப்பிட்ட பேச்சையும் அதைத் தொடர்ந்து இங்கே நடந்த விவாதங்களையெல்லாம் குறிப்பேடுகளிலிருந்து எடுக்குமாறு ஆணையிடுகிறேன். மு.ப. 6·30

புலவர் கா. கோவிந்தன் : (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தலைவரவர்களே, என்னுடைய பேச்சை இந்த அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது என்ற நிகழ்ச்சிக்காக அப்பொழுது நாங்கள் யாரும் மறுக்கவில்லை. அதை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டோம். அதற்காக பேரவைத் தலைவரவர்களின் தீர்ப்பை எதிர்த்து நான் எந்தவிதமான கருத்தையும் சொல்லவில்லை. ஆனால் இந்த நிகழ்ச்சி நான் பேசக்கூடியதுதானா என்று கேட்டார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, *

* * *

இதை எல்லாவற்றையும் அகற்ற வேண்டுமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் மேலும் இந்த விவாதத்தில் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகவே நாங்கள் எங்கள் கட்சியின் சார்பில் வெளியேறத் தீர்மானித்திருக்கிறோம் என்று கூறி வெளியேறுகிறோம்.

(அமைப்புக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.)

திரு. க. உ.ரா. எட்மண்ட் : தலைவரவர்களே, *

* * *

இந்த மன்றத்தின் மரபுகளை அது பாதிப்பதாக இருக்கிறது. அது அங்கத்தினர்களுக்கு பல்வேறு தொல்லைகளுக்கு வழிவகுக்கும் என்பதை ....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்): "டொமான்ஸ்"க்காகத் தான் சொன்னார்கள், படித்தார்கள்.

திரு. க. உ. ரா. எட்மண்ட்: எங்களுடைய எதிர்ப்பைக் காட்டும் வகையில் நாங்களெல்லாம் வெளி நடப்புச் செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தார்கள்) (கூச்சல் குழப்பம்).

புலவர் கா. கோவிந்தன்: (மாண்புமிகு பேரவைத் தலைவர்) : தலைவரவர்களே, ஆக, இந்த மன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியை நீக்குவது முறைதானா என்பதை நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சியிலே உள்ளவர்களெல்லாம் கேட்டார்கள். அது முறை தான் என்பதற்கான காரண காரியங்களையும், அதற்கான முன் நிகழ்ச்சி இருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டினேன்.

இரண்டாவது, அவர்கள் இந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதில் எப்படிப்பட்ட நிலையிலிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு இங்கே பேசிய உறுப்பினர்கள் விளக்கமாகச் சொல்லி, பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதில் முறைகேடான பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது என்றுதான் பேரவைத் தலைவரவர்கள் சொன்னார்களே தவிர, எழுப்பக் கூடாது என்ற கருத்தைச் சொல்லவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படாத குற்றச் சாட்டுகள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த அவை நல்ல முறையில் நடைபெற, நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

CHAIRMAN : (THIRUMATHI JOTHI VENCATACHELLUM) : Under Rule 73 (2) of the Tamil Nadu Assembly Rules, if at the time of putting the question on a motion to the vote of the House, the mover of the motion is absent, it shall be considered to have been withdrawn by him, unless any Member of the House asks that the question on the motion be put.

The hon. Members Thiruvalargal Kovai Chezhiyan, K.T.K. Tangamani, G. R. Edmund, R. Ponnappa Nadar and Thirumathi T. N. Anandanayaki are not in their seats.

No other Member has asked that the question on the motion be put to the vote of the House.

எனவே, இந்தத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவு. நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6-57 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.



## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

*Nil*

### B. Reports, Notifications and Other Papers

@ 135. Housing in Tamil Nadu (Tamil).

@ 136. Co-operative Housing in Tamil Nadu (Tamil).

@ 137. Policy Note on Cinchona Department, 1974-75. (English and Tamil)

@ 138. Commercial Budget on Cinchona Department, 1974-75

@ 139. Policy Note on Forests, 1974-75 (English and Tamil).

@ 140. The Indian Stamp (Tamil Nadu Amendment) Bill 1974 (L.A. Bill No. 11 of 1974) with Annexure.

@@ 141. Eighth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Small Industries Corporation Limited for the year 1972-73.

---

ut Motions circulated separately.

Despatched to Members on 27th March 1974.

@ Laid on the table of the House on 27th March 1974.

(8 ம் பக்கத்தில் 667-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க).

LIST OF TEMPLES IN TAMIL NADU PROTECTED BY CENTRAL GOVERNMENT.

| Serial number. (1) | Locality. (2) | Name of temples/site. (3) |
|---|---|---|
| | *Chingleput district.* | |
| 1. | Big Kancheepuram ... | Iravatheswara Temple. |
| 2. | Big Kancheepuram ... | Sri Matangeswarar Temple. |
| 3. | Big Kancheepuram ... | Sri Kukteswara Swami Temple. |
| 4. | Kalathur ... | Munkudum Eswaran Temple |
| 5. | Kancheepuram ... | Jvarahareswara Swamiar Temp |
| 6. | Madavilagam ... | Large Siva Temple, Tenner. |
| 7. | Mahabalipuram ... | Iswara Temple |
| 8. | Mahabalipuram ... | Mukundanayanar Temple |
| 9. | Mahabalipuram ... | Rock-cut Ganesa Temple |
| 10. | Mahabalipuram ... | Rock-cut Varaga Temple containing Varaga and Vamana incarnations of Vishnu. |
| 11. | Mahabalipuram ... | Shore Temple |
| 12. | Mahabalipuram ... | Small Monolithic Temple |
| 13. | Mahabalipuram ... | Two small monolithic temples |
| 14. | Mahabalipuram ... | Unfinished rock-cut cave temple north of Krishna Mandapa. |
| 15. | Mahabalipuram ... | Old Temple with apsidal gopuram |
| 16. | Parameswara Vinnagaram ... | Vaikuntaperumal temple |
| 17. | Salabogam ... | Kailasanathaswami Temple |
| 18 | Saluvankuppam ... | Rock-cut Siva Temples with three lingas. |



| Serial number. (1) | Locality. (2) | Name of temples/site. (3) |
|---|---|---|
| | *Chingleput district—cont.* | |
| 19. | Saluvankuppam ... | Tiger headed Rock-cut Temple |
| 20. | Tennri ... | Lesser Siva Temple. |
| 21. | Thiruvadanthai ... | Nithya Kalyana Swami Temple |
| 22. | Thirumukkudal ... | Venkatesaperumal Temple |
| 23. | Mahabalipuram ... | Two rock-cut cave temples at the North-east corner of the Konai Palam Tank. |
| 24. | Voyalur | Thirupuleeswarar Temple |
| 25. | Uttiramerur ... | Vaikuntaperumal Temple with adjacent land comprised in part of S. Plot No. 878/286. |
| 26. | Kancheepuram ... | Pirawataneswara Temple. |
| 27. | Oragadam ... | Vadamaleswarar Temple S. No. 409, graping ground |
| | *Coimbatore district.* | |
| 28. | Avanashi .. | Siva Temple |
| 29. | Muttupudur . | Jain Temple |
| 30. | Sirkar Periaya-palaiyam ... | Sugriveswara Temple and Tank |
| 31. | Thirumurugan Poondi ... | Muruganatha Temple |
| | *Kanyakumari district* | |
| 32. | Thirunanthikara .. | Rock-cut Temple together with adjoining land in Survey Plot Nos. 2632/82632/9 and 2632/10. |
| 33. | Arumani Chithara Desam ... | Bhagavathi Temple together with adjacent land comprised in part of S. Plot No. 4752. |

| Serial number. | Locatlity. | Name of temples/site |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | *North Arcot district* | |
| 34. | Kilputhur .. | Svayambunathar Temple |
| 35. | Mahendravadi .. | Monolithic rock-cut temple |
| 36. | Melpadi .. | Choleswara Temple |
| 37. | Melpadi .. | Subramania Temple |
| 38. | Thirumalpur .. | Jain Temple |
| 39. | Thirumalpur .. | Konar Temple |
| 40. | Vellore .. | Jalakanteswara Temple |
| 41. | Nattery .. | Chandramouleeswara Temple |
| 42. | Melpadi .. | Somanatha Temple |
| 43. | Puduppadi .. | Vedanarayana Perumal Temple |
| 44. | Siyamangalam .. | Rock-cut Temple and Sculptures |
| | *Ramanathapuram district.* | |
| 45. | Kunnakudi .. | Boulder stone bed and Brahmi inscriptions on the hill and rock-cut temples with inscriptions at the foot of the hill. |
| | *Salem district.* | |
| 46. | Chinna Kavundanur .. | Fort and Temple on the hill. |
| 47. | Namakkal .. | Temples of Sri Narasimha Swami and Sri Ranganathaswami. |
| 48. | Adamankotta .. | Chemanarayana Perumal Temple together with adjacent land comprised in S. No. 377, 380, 385, 375, 376, 370 and 378. |
| | *South Arcot district.* | |
| 49. | Delavanur .. | Rock-cut Pallava Temple |



| Serial number. | Locaility | Name of temples/site. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | *North Arcot district.* | |
| 50. | Gingee .. | Innerfort Venugopala Temple called the 'Bajanaikudam' with large polished slab and five carved figures in three panels a granary. |
| 51. | Gingee .. | Two granaries, a magazine flag staff, Ranganatha temple, Kamala-Kanniamman Temple and the sacrificial slab in front of it a big cannon, a treasury and the audience hall on the Rajagiri. |
| 52. | Gingee .. | Two granaries, well for storing ghee, well for storing oil, two Temples, and an audience chamber on the Krishnagiri. |
| 53. | Gingee .. | Venkataramana Temple with inscriptions in Tamil Prisoners well. |
| 54. | Mandagapattu .. | Rock cut Pallava Temple. |
| 55. | Narasingarayanpetai .. | Pattabiram Temple. |
| 56. | Srimushnam .. | Nitiswaraswami Temple. |
| 57. | Panamalai .. | Talagiriswami Temple and a cave containing an image of Durga and Pallava inscriptions together with adjacent and land comprised in Survey plot No. 396. |

| Serial number. (1) | Locality. (2) | Name of temples/site. (3) |
|---|---|---|
| | *Tirunelveli District.* | |
| 61. | Seramadevi | Baktavatsala Temple |
| 62. | Thirumalapuram | Two rock-cut Temples with inscriptions in Varanashimalai |
| 63. | Thiruvaliswaram | Valiswarar Temple |
| | *Tiruchirappalli District.* | |
| 64. | Ammankurichi | Whole of the Siva Temple and the inscribed stone in the front Mandapam |
| 65. | Ariyur | Siva Temple |
| 66 | Chettipatti | Ruined Jain Temple |
| 67. | Chittur | Sarangatheeswara Temple known as Thiruvagneeswarar Temple |
| 68. | Gangaikondacholapuram | Brahadisvara Temple |
| 69. | Irrubunadu | Kalabham Udaliyar Temple |
| 70. | Irrumbanadu | Siva Temple and lion pillar |
| 71. | Irrumbanadu | Soundararaja Perumal Temple |
| 72 | Kannanur | Balasubramanya Temple |
| 73. | Keelaiyur | Ruined Siva Temple |
| 74. | Keelathanayam | Uttamadaniswara Temple |
| 75. | Kiranur | Uttamanathaswami Siva Temple |
| 76. | Kodumbalur | Muckundeswara Temple and the tank in front of it |
| 77. | Kodumbalur | Remains of the structual Temple and antiquities |
| 78. | Kudumiamalai | Sikhanathaswami Temple |
| 79. | Kulathur | Iswaran Koil |
| 80. | Kunnandar Koil | Rock cut Siva cave Temple |
| 81. | Letchumanpatti | Jain idol and remains of the Jain Temple |



| Serial number. (1) | Locality. (2) | Name of temples/site. (3) |
|---|---|---|
| | *Tiruchirappalli District—cont.* | |
| 82. | Malayadipatti | Rock cut Siva Temple (Pallava 9th Century A.D.) |
| 83. | Malayadipatti | Rock cut Vishnu cave Temple |
| 84. | Mangathevanpatti | Jain Temple |
| 85. | Mangudi | Siva & Pillaiyar Temple |
| 86. | Malanilaivayal Malanilaipatti | Mannandar Pillaiyar Temple |
| 87. | Melur | Jain Thiruthankara idol and relics of the old Jain Temple |
| 88. | Nangupatti | Thirupperumanandar temple called Madattu Koil |
| 89. | Narathamalai | Amman Koil |
| 90. | Nirpalani | Siva Temple |
| 91. | Panangudi | Siva Temple |
| 92. | Panangudi | Vishnu Temple |
| 93. | Ponnamaravathi | Rajendra Choleeswaram Temple |
| 94. | Puttambur | Jain image and the surrounding Temple called Metta Pillaiyar Koil |
| 95. | Rasipura | Stone idols of Vishnu Devi and Siva Temples. |
| 96. | Sevalur | Sri Bumiswaraswami Temple |
| 97. | Sittannavasal | Rock cut Jain Temple |
| 98. | Suriyur | Thiruvilangudi Siva Temple |
| 99. | Tennangudi | Siva Temple |
| 100. | Thirukkalambur | Sanctum of the Old Siva Temple |
| 101. | Thirukkattalai | Sundareswara Temple with 7 sub-shrines. |
| 102. | Thirumayam | Rock cut Siva Temple and Satyagiswara Shrine |
| 103. | Thirumayam | Rock cut Vishnu Temple Satyamurthi Shrine |
| | Thiruppur | Choliswara Udayar Temple |
| | Thiruverumbur | Siva (Erumbeswaraswami) Temple |
| | Todaiyur | Todaiyur Siva Temple |

| Serial number. (1) | Location. (2) | Name of temples/site. (3) |
|---|---|---|
| | *Tirunelveli District.* | |
| 107. | Valikendapuram | .. Siva Temple |
| 108. | Varappur | .. Siva Temple |
| 109. | Varpet | ... Siva koil on the western bund of .. Enadikan |
| 110. | Vellanur | .. Agastiswara Temple |
| 111. | Vellanur | .. Kailasanatha Temple |
| 112. | Visalur | .. Siva Temple |
| 113. | Valikandapuram | .. Siva Temple |
| 114. | Kannangudi | .. Jain image, stone lion and foundations of a Temple |
| 115. | Kodumbalur | ... Remains of Aivarkoil |
| 116. | Kudumiamalai | ... Malakkoil with Mantapam in front |
| 117. | Srinivasanallur | ... Koil |
| 118. | Mylapatti | ... Jain Thiruthankara-Remain of the Temple |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1974 மார்ச் 30.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

***Diplomas awarded by Madurai Tamil Sangam***

*684 *Q.*—THIRU N. K. PALANISAMY
THIRU N. DENNIS : } Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that it has been decided by the Government not to recognise the diploma of Pulavar in Tamil awarded by the Madurai Tamil Sangam for appointment as Tamil Teachers in schools ;

(*b*) if so, from when ; and

(*c*) the reasons for such a decision ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) 1—4—1976-க்குப் பிறகு.

(உ) மதுரை தமிழ்ச் சங்கம் ஒரு தனியார் நிறுவனம். அரசினராலோ, அன்றி பல்கலைக் கழகத்தாராலோ அதன் தேர்வுகள் கண்காணிக்கப் பெறுததால், இச் சங்கத்தாரால் வழங்கப்படும் பட்டயங்கள் அரசினரால் ஏற்கப்படவில்லை.

திரு என். கே. பழனிசாமி : இந்தச் சங்கத்திலிருந்து முன்பு எந்த அடிப்படையில் அவர்களுக்கு டிப்ளமா கொடுக்கப்பட்டது? அப்படிக் கொடுப்பதில் ஏதாவது தவறுதல் ஏற்பட்டதா? நிறுத்த என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை அரசாங்கத்தாலும் அங்கீகரிக்கப்படாமல் பல்கலைக்கழகத்தாலும் அங்கீகரிக்கப்படாமல் அவர்களே தேர்வு நடத்துகிறார்கள். அங்கே இருப்பவர்களே கேள்வி கேட்கிறார்கள்; அங்கே இருப்பவர்களே திருத்துகிறார்கள்;

அங்கே இருப்பவர்களே தேர்வு அளிக்கிறார்கள். ஆகவே, பல்கலைக் கழகத்திற்கோ, அரசுக்கோ கட்டுப்பட்டு வந்தால் ஏற்றுக்கொள்ள முடியும்; கட்டுப்படாத நிலையில் இருப்பதால் ஏற்றுக்கொள்ள முடியாது. இனி மேல் சேருகிற மாணவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இப்போது சேர்ந்திருப்பவர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்பதற்காகத் தான் 1–4–1976–க்குப் பிறகு அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறோம்.

திரு என். டென்னிஸ்: அங்கு படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இப்போது அங்கே கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் யாவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா? மதுரைச் தமிழ்ச் சங்கத்தின் எதிர்காலம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சில காலம் தமிழாசிரியர்கள் கிடைக்காத காரணமாக விதிகளைத் தளர்த்தி அப்படிப்பட்டவர்களை சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது தகுதி படைத்த தமிழாசிரியர்கள் ஏராளமாக இருப்பதன் காரணமாக அங்கீகரிக்கப் பெறாத நிறுவனத்தைச் சேர்ந்தவர்களைச் சேர்ப்பதற்கில்லை என்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. படித்தவர்கள் அவ்வளவு பேருக்கும் வேலை வாய்ப்புக்கு உறுதி அளிக்க இயலாது. எந்த அளவு தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளுகிறார்களோ அந்த அளவுக்குத் தரப்படும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் எதிர்காலம் பற்றி அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

ஒன்று அவர்கள் அரசாங்கத்தின் நிர்வாகத்திற்குக் கட்டுப்பட வேண்டும் அல்லது பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இரண்டில் ஒன்றை அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு அவர்கள் தரும் பயிற்சி ஏற்றுக் கொள்ளப்படத் தக்க அளவில் அமையும்.

திரு கோ. இளங்கோவன்: சென்னைப் பல்கலைக் கழகத்தால் முறையாக அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளில் படிக்கிறவர்கள் நான்கு ஆண்டுகள் பயின்ற பிறகுதான் புலவர்களாக வருகின்றனர். ஆனால் மதுரைத் தமிழ்ச் சங்கம், மற்றும் சில தனியார் கல்லூரிகளில் இரண்டு, மூன்று ஆண்டு படித்தவர்கள் புலவர்களாக வருவதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றிய தகவல் இல்லை. அப்படி அந்த நிறுவனம் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப் படாத காரணத்தால் இனி அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

புலவர் சி. பழனிசாமி: பிற பட்டப் படிப்பு மாணவர்களைப் போல தமிழ் பயிலும் மாணவர்கள் தமிழ்க் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் பயிலுகிறார்கள். ஆகவே, தமிழ்ப் புலவர் படிப்பு பட்டப் படிப்பாக மாற்றப்படுமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதிலே அரசு எந்த முடிவும் எடுப்பதற்கில்லை. பல்கலைக் கழகந்தான் முடிவு செய்யவேண்டும்.

திரு கே. என். குமாரசாமி: மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இந்தப் படிப்பு சம்பந்தமாக மூன்று ஆண்டா, நான்காண்டா என்ற பிரச்சினையில் அவர்களே முடிவு செய்வதற்குப் பதிலாக அரசாங்கமே அதற்கான திட்டவட்டமான முடிவு அளித்து அதன்படி செயல்பட வேண்டுமென்று கூற முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மற்றைய தமிழ்ப் பயிற்றுவிக்கும் கல்லூரிகள் பல்கலைக் கழகத்தின் அனுமதியோ அல்லது அரசாங்கத்தின் அனுமதியோ பெற்று நடத்துகிறார்கள். இவர்களும் அந்த முறையில் அனுமதி பெறவேண்டுமென்று பல தடவை சொல்லியும் அவர்கள் அனுமதி பெறவில்லை.

அப்படி அனுமதி பெறவேண்டுமென்று சொல்லுகிறபோது அரசோ அல்லது பல்கலைக் கழகமோ சில நிபந்தனைகளை விதிக்கும். அவற்றை நிறைவேற்ற அவர்கள் தயாராக இருக்க வேண்டும். அப்படி அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட பிறகு அதை அங்கீகரிக்கக் கூடிய நிலை ஏற்படும்.

திரு எஸ். முருகையன்: மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்தவர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். ஆகவே, ஒரு காலக் கெடு கொடுத்து குறிப்பிட்ட இந்த ஆண்டுக்கு மேற்கொண்டு படித்தவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லலாம். ஏற்கனவே, அங்கு படித்து வந்திருக்கிறவர்களுக்கு ஓராண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் ஏதாவது பயிற்சியைக் கொடுத்து நிரந்தரமாக வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதை உள்ளடக்கித்தான் 1–4–1976–க்குப் பிறகு அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று தெரிவித்திருக்கிறோம். இப்போது படிக்கும் மாணவர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்றுதான் அப்படி வைத்திருக்கிறோம். 1977–78–க்கு வரும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்போது இருப்பவர்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்றுதான் 1–4–1976 என்று வரையறுத்திருக்கிறோம்.

திரு கே. எ. வகாப்: பண்டைக் காலம் தொட்டு சங்கங்கள் பேர் பெற்றவை. மதுரைத் தமிழ்ச் சங்கம்—முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்று இருந்திருக்கிறது. இறைவனுகவே இருந்தாலும் குற்றம் குற்றமே என்று சொன்ன நக்கீரர் போன்ற புலவர்கள் வளர்த்தது மதுரைத் தமிழ்ச் சங்கம். தமிழ் வளர்க்கும் இந்த அரசு அந்தச் சங்கத்தை அங்கீகரித்து பண்டைய தமிழ்ச் சங்க வரிசையில் நல்ல முறையில் செயல்பட யூனிவர்சிடியின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1974 மார்ச் 30

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ் வளர்ப்பதைத் தடுக்கவில்லை. பண்டைக் காலத்தைப் போல் எந்த வகையில் வேண்டுமானாலும் அவர்கள் தமிழை வளர்க்கலாம். ஆனால், தமிழாசிரியர்களை உருவாக்க வேண்டுமென்றால் அவர்கள் கட்டுத் திட்டத்தின் கீழ் வரவேண்டும். தாங்களே தேர்வு நடத்தி, தாங்களே திருத்தி தாங்களே தேர்வு கொடுப்பது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவேதான் 1–4–1976–க்குப் பிறகு அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மதுரைத் தமிழ்ச் சங்கம் எவ்வளவு ஆண்டு காலமாக புலவர் தேர்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறது ? என்ன நிபந்தனைகளை ஏற்க மறுக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எத்தனை ஆண்டு காலமாகப் பயிற்றுவிக்கின்றார்கள் என்ற தகவல் இல்லை. வெளியிலிருந்து வந்து தேர்வை நடத்த வேண்டும். வினாத்தாள்கள் வெளியிலிருந்து குறிக்கப்பட வேண்டும். திருத்துபவர்கள் வெளியிலிருந்து வரவேண்டும். இப்படி மற்றைய கல்லூரிகளுக்கு உள்ள நிபந்தனைகளை இதற்கும் பல்கலைக் கழகம் விதிக்கிறது. அந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளாது அங்கே இருப்பவர்களே கேள்வி கேட்டு, அங்கே இருப்பவர்களே திருத்தி, அங்கே இருப்பவர்களே தேர்வு அளிக்கும் நிலையை பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ள முடியாது. பல்கலைக் கழக நிபந்தனைப்படி பொதுத் தேர்வில் கலந்து கொள்ள அவர்கள் முன்வராத காரணத்தால் அரசோ பல்கலைக் கழகமோ அதற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை.

பழகு தொழில் ஆசிரியர்கள்.

*685 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வி இலாகாவில் "A" பிரிவில் பணிபுரியும் பணி பயிற்சி பட்டதாரி ஆசிரியர்களின் (Apprentice Teachers) பணிகளை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பழகு தொழில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டோரில் பெரும்பான்மையோருக்கு 197[3] செப்டம்பர் திங்கள் 11-க்கு முன்பே முழுச் சம்பளப் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ளோர் அனைவரும் 1973 செப்டம்பர் திங்கள் 11 முதல் 'ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத்' திட்டப் பதவிகளில் அமர்த்தப்பட்டு முழுச்சம்பளம் பெற்று வருகின்றனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குழு அரசுப் பள்ளி ஆசிரியர் பதவிகளுக்கு ஆள் எடுக்கும்பொழுது விண்ணப்பித்து, அக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவர்கள் முறையாக நியமனம் செய்யப்படுவர். இவ்விதி அரசுப் பள்ளிகளில் உள்ள எல்லா பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் பொதுவான விதியாகும்.



1974 மார்ச் 30]

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் பணி பயிற்சி பட்டதாரி ஆசிரியர்கள் தமிழ்நாடு பூராவும் எவ்வளவு பேர்கள் பணியாற்றிவருகிறார்கள் ? அவர்களில் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? இன்னும் நிரந்தரமாக்கப்பட வேண்டியிருப்பவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொழில் பழகு ஆசிரியர்கள் திட்டத்தின்கீழ் 1970–71, 1971–72, இந்த இரண்டு ஆண்டுகளில் 5,746 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது. ஹையர் கிரேட் ரூ. 100, செகண்டரி கிரேட் ரூ. 125, பி.டி. ரூ. 175 என்று கொடுத்தோம். 1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் வரை நாலாயிரத்துச் சில்லரைப் பேர்கள் முழுச் சம்பளமுடையவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 'ஐந்து லட்சப் பதவித் திட்டத்தின்கீழ்' எஞ்சியவர்களை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது தொழில் பழகு ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட நிலை வருவதற்கில்லை. எல்லோருக்கும் முழுச் சம்பளம் கொடுக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

திரு. என். டென்னிஸ் : அப்ரன்டிஸ் டீச்சர்ஸ் ஆகவும், 10 (ஏ) (1)-ல் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களாகவும் பணியாற்றி வரும் பலரும் ஐந்து ஆண்டுகளாக வேலை செய்துகொண்டு வந்தும் அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு ஓவர் ஏஜ் ஆகியிருக்கிறது. ஆகவே இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணி புரியும் எல்லா ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டமுள்ளதா? தனியார் பள்ளிகளில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வேலை செய்தால் அவர்கள் நிரந்தரமாக்கப்படும் ஒரு நிலை இருக்கிறது. எனவே அந்த முறையை இங்கும் கையாளப்பட்டு அந்த ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதுள்ள விதிப்படி அவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலம்தான் நியமனம் பெறவேண்டும். அப்போதுதான் அவர்கள் நியமனம் ஊர்ஜிதப்படுத்தப்படும். வயது அதிகமாகியிருக்கிறது என்றால், ஓவர் ஏஜ் என்றால், தனித்தனியாக விண்ணபித்து அதற்கு விதிவிலக்கு கேட்டு பெற்றுக்கொள்ளலாம்.

திரு. ந. சோமசுந்தரம் : அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளில் "ஏ" விங்க், "பி" விங்க் என்று இருக்க வேண்டிய அவசியம் என்ன? அதனால் சில நிர்வாக சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே இப்படி இருக்கக்கூடிய இந்த இரண்டு விங்க்ஸ் என்பதைக் கலைக்க அரசு வழி வகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : ஏற்கெனவே ஜில்லா போர்டின் கீழ் இருந்த பள்ளிக்கூடங்கள் "பி" விங்க் ஆகிறது. 1966-ல் இருந்து 1970 வரையில் அவைகள் தனியாக வைத்து கண்காணிக்கப்பட்டன. 1970-ல் அவைகளை எல்லாம் அரசு ஏற்றுக்கொள்வது

என்று முடிவு செய்து அதுவரை இருந்தது "பி" விங் என்றும் பிறகு ஏற்படுபவைகள் "எ" விங் என்றும் வைத்திருக்கிறார்கள். இரண்டையும் ஒன்றாக ஆக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் இரு சாராரும் ஒத்துக்கொள்ளாததால் ஒருவரும் பாதிக்கப்படாத முறையில் எதைக் கையாண்டால் அந்த நிலை நாளுக்குநாள் மாறி ஒரு காலத்தில் எல்லோரையும் "எ" விங் ஆக்கும் முறையைக் கையாளலாம் என்பதைப்பற்றி கல்வித் துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## பள்ளி அபிவிருத்தி கூட்டங்கள்.

*686 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளி அபிவிருத்திக் கூட்டம் (School Improvement Conference) ஆண்டுதோறும் கல்வி இலாகா நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், 1972–73, 1973–74 கல்வி ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எங்கெங்கு இந்தக் கூட்டம் நடைபெற்றது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) 1972–73ஆம் ஆண்டில் பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் உடன்குடி, நாசரேத், வள்ளியூர் என்ற இடங்களில் நடைபெற்றன. 1973–74-ல் ஷை கூட்டங்கள், திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, புதுக்கோட்டை, கடையம், திருவம்பலபுரம், பாப்பன்குளம், சேரன்மாதேவி, விக்கிரமசிங்கபுரம் மற்றும் தூத்துக்குடி என்ற இடங்களில் நடைபெற்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த கான்பரன்ஸில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ? அதனால் ஏற்பட்ட நன்மைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அபிவிருத்திக் கூட்டங்கள் என்று சொல்லி ஆங்காங்கு பொருள்காட்சிகள் எல்லாம் வைக்கிறார்கள். பொது மக்கள் ஆங்காங்கிருக்கிற பள்ளிகளுக்குத் தேவைப்படுகிற நிலங்களைக் கொடையாக வழங்கவும், பள்ளிக்கூடங்களில் பயன்படுத்தும் கருவிகள் போன்றவற்றை தருவதும், நிதி உதவி ஆகியவற்றையெல்லாம் தருகிறார்கள். அந்த வகையில் ஒன்பது ஆண்டுகள் இந்த பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடத்தியதின் மூலம் 513 பள்ளி அபிவிருத்திக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. 12 கோடி 96 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் பல்வேறு வகைகளில் பெறப்பட்டிருக்கின்றன.



திரு. க. உரொ. எட்மண்ட் : இப்படிப்பட்ட மாநாடுகள் நடைபெறும் போது பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்வதற்காக பொதுமக்களால் அல்லது மாநாட்டில் பங்கேற்கிற முக்கியஸ்தர்களால் ஏதாவது ஆலோசனைகள் சொல்லப்படுகிறதா ? அந்த ஆலோசனைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநாடு என்றால் அது ஒரு கருத்தரங்கு என்ற வகையில் அமைவதில்லை. இது சாதாரண விழாவாக நடக்கிறது. பொருள்களைக் கொண்டு காட்சியாக வைக்கிறார்கள். மாநாடுகளில் கலந்துகொள்ள பொதுமக்களுக்கு ஊக்கம் தந்து நன்கொடை தருபவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடைபெறுகிறது. கருத்தரங்கு என்றால் அதில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு யோசனைகள் எல்லாம் பரிசீலிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால் அதை கல்வித் துறை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்று செய்யலாம். ஆனால் அந்தக் கூட்டங்களில் அப்படி யோசனைகள் சொல்லி தீர்மானங்கள் நிறைவேற்ற வாய்ப்பிருக்கிறது. ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை.

## பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு.

*687 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பள்ளிக் குழந்தைகட்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் தமிழ் நாட்டில் எந்தெந்த நகரங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ ஆய்வு செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் திருச்சி, கோயம்புத்தூர், ஆகிய இரண்டு நகரங்களிலும் மற்றும் சென்னை மாநகரிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இதற்காக நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 3,21,738.00.

திரு. நா. வீராசாமி . சென்னை, திருச்சி போன்ற இடங்களில் இப்படிப்பட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக மாணவப் பருவத்திலேயே சில நோய்கள் வருவதாகவும், அப்படி வருகிற நோய்கள், லெப்ரஸி போன்ற நோய்கள் இந்த நாட்டில் மாணவர்களிடையே சராசரி ஐந்தில் இருந்து பத்து சத விகிதம் வரை இருப்பதாகவும் ஸ்கின் ஸ்பெஷலிஸ்ட்ஸ் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான நோய் மாணவப் பருவத்தில்

வருவதன் மூலம் இந்த சமுதாயத்தில் லெப்ரஸி நோயினால் பாதிக் பட்டவர்கள் ஏராளமாகி விடுகிறார்கள். எனவே தமிழ்நாடு முழுவ இப்படிப்பட்ட ஆய்வு செய்வதற்கு, அவர்களுக்கு வேண்டிய மருத் வசதியைச் செய்வதற்கு வேறு எந்த நிதியிலிருந்தாவது நிதி பெற் இந்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு சுருக்கமான விடை திருச்சியிலும், கோவையிலும் 10,000 குழந்தைகளுக்குத் தான் ஒ ஆண்டுக்கு ஆய்வு செய்வதற்கு இந்த ஏற்பாடு இருக்கிறது. சென் நகரத்தில் வேண்டுமானால் அது 25 அல்லது 30 அல்லது 40,00 குழந்தைகளுக்கு அந்த ஆய்வினை நடத்த முடியும். சென்னை நகரி உள்ள எல்லாப் பள்ளி மாணவர்களுக்கும் ஒரு ஆண்டுக்கு ஆய்வு செய் தாக இருந்தால் இப்போது ஆகிற செலவை விட நான்கு மடங்கு பணி யாற்ற வேண்டும். ஆகவே இப்போது ஒதுக்கியிருக்கிற மூன்று லட்ச ரூபாய் என்பது ஒரு வகையில் அந்த முறையைச் செயல்படுத்துவதி இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கா நடைபெறுகிறதே தவிர மூன்று கோடி முதல் ஐந்து கோடி ரூபாய் வரை இருந்தால் தான் தமிழ்நாடு முழுவதும் எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாப் பள்ளிக் குழந்தைகளுக்கும் ஆய்வு செய்கிற ஒரு பணியையாவ ஒரு ஆண்டில் நிறைவேற்ற முடியும். அப்படிப்பட்ட பெரிய திட்டங்களுக் பொது மக்கள் எந்த வகையில்—பிள்ளைகளைப் பெற்றவர்கள் பெற்றுவிட் வளர்க்க முடியாமல் அல்லது வளர்க்கத் தெரியாமல் திண்டாடுகிற பெ றோர்கள் ஏதாவது ஒரு வகையில் அதற்காக ஒரு கட்டணம் செலுத்துவ என்ற முறையில், எதிர்க்கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்போடு, எல்லா பள்ளிக்கூடங்களிலும் ஒரு மாணவருக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு ரூபா தருவது என்றால் மிச்சம் எவ்வளவு செலவானாலும் இந்த அரசு அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளும். இப்படிச் சொல்கிற நேரத்தி இந்த அரசு பெற்றோர்களிடம் வரி வாங்குகிறது என்று எதிர்க்கட்சியின சொல்லி விடுவதால் அதை ஊக்கத்தோடு செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தப் பள்ளிக்கூட மாணவர்களுக் மெடிகல் இன்ஸ்பெக்ஷன் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னா கள். ஏற்கெனவே மருத்துவ மனைகளில் பணியாற்றக்கூடிய டாக்ட களுக்கு நிறைய வேலைகள் மருத்துவ மனைகளில் இருக்கிற காரணத்தா அவர்கள் பள்ளிகளுக்குச் சென்று தக்க முறையில் மாணவர்களை கவனிக்கக்கூடிய நிலை இல்லாதிருப்பதால் வேலை வாய்ப்பு இல்லாதிருக்கு டாக்டர்களை பார்ட் டைம் ஆக Honorarium ஊதியம் கொடுத் இதற்காகப் போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை நகரில் இதற்காக ஆ குழுக்கள் அமைக்கப்பட்டு தனியாக டாக்டர்கள் அந்த வேலைக்கு நியமிக் பட்டிருக்கிறார்கள். குழந்தைகள் நல பரிசோதனைக்காக அவர்கள் சோதனை செய்ததற்குப் பின்னால் அந்தக் குழந்தைகளுக்கு நீண்



சிகிச்சை வழங்கப்படவேண்டும் அல்லது இன்னொரு துறை கவனிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு, ஸ்டான்லி மருத்துவ மனை, கஸ்தூர்பா காந்தி மருத்துவ மனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, குழந்தைகள் நல மருத்துவ மனை, எழும்பூர், இராயப்பேட்டை, மருத்துவ மனை இவைகளோடு இணைக்கப்பட்டிருக்கிற முறையில் அதிகமாகக் கவனிக்கவேண்டிய குழந்தைகளை அந்த மருத்துவ மனைகளுக்கு அனுப்பி ரெபரல் முறையில் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்கிறோம். இதற்காக த்தனிக் குழு இருப்பதால் செலவாகிறது. இந்தப் பரிசோதனை நடத்துகிற வேலையில் மாநகராட்சியில் பணியாற்றுகிற டாக்டர்கள் மாலை நேரத்தில் தனி படி பெற்று அவர்களும் இன்று ஒத்துழைக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்போது ஏராளமான பள்ளிப் பிள்ளைகளுக்குப் பல நோயும் கண் நோயும் வருகின்றன. ஆகவே, இந்த மாதிரி பரிசோதனை செய்கிறபோது டென்டிஸ்டுகளையும் கண் வைத்திய நிபுணர்களையும் அனுப்பி வைத்து அந்தக் குழந்தைகளைப் பரிசோதிக்கிறார்களா ? இல்லை என்றால் அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, டாக்டர்கள் பரிசோதனை செய்கிறபோது, அது பல் சம்பந்தமாக இருந்தாலும், கண் சிகிச்சை சம்பந்தமாக இருந்தாலும் அவர்கள் அதைப் பரிசோதித்து சாதாரண நோயாக இருந்து மருந்து தேவைப்பட்டால் அதைக் கொடுத்து விடுகிறார்கள். அவர்களுக்குச் சிறப்புச் சிகிச்சை தேவை என்று அறிந்தால், ஆங்காங்கே உள்ள சிறப்புச் சிகிச்சை வசதியுள்ள பெரிய மருத்துவ மனை களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

அப்படிப்பட்ட சிகிச்சை தரப்படும் போது என்னென்ன வசதிகள் இந்த நாட்டில் இருக்கின்றனவோ அப்படிப்பட்ட வசதிகளை எப்படியெப்படிப் பயன் படுத்தவேண்டுமோ அந்த முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

## *Artificial Limb Centres*

*688 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to open Artificial Limb Centres in all the hospitals in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம், மருத்துவக் கல்லூரிகளில் மட்டும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற முறையில் நடைமுறைப் படுத்துகிறார்கள். மாநிலத்தில் உள்ள கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் படிப்படியாகவே துணை நிலையங்களைத் தொடங்க இயலும்.

தொடக்கத்தில், சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவ மனை, திருநெல் வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை ஆகிய மருத்துவ மனைகளில் துணை நிலையங்களைத் தொடங்குவதற்கான செயற் குறிப்பு இப்போது இந்த ஆண்டு மருத்துவக் கல்வி இயக்குநரால் தயாரிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதற்காக, எவ்வளவு செலவு செய்யப்படும் ? எந்தெந்த இடங்களில் இந்த பாக்டரி ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆர்டிபிஷியல் லிம்ப்ஸ் சென்டர் என்பது செயற்கை முறை உறுப்புகளை வழங்குகிற அதற்குத் தேவையான கருவிகளைச் செய்யும் அமைப்பு, அது சென்னை பொது மருத்துவ மனையில் இருக்கிறது. துணை நிலையங்கள் குறிப்பாக மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவ மனையிலும், தஞ்சாவூர் ராஜா மிராசு தார் மருத்துவ மனையிலும் அமைக்கப்பட இருக்கிறது. இந்த அமைப்பு களுக்கு ஆகும் செலவு எவ்வளவு என்ற விபரம் என்னிடத்தில் இப்போது இல்லை. படிப்படியாக மற்ற மருத்துவ மனைகளுக்கும் கொண்டு முயற்சி எடுக்கப்படும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இப்போது இருக்கும் இந்த ஆர்டிபிஷியல் லிம்ப்ஸ் சென்டரில் போதுமான அளவுக்கு உறுப்புகள் செய்யப்படுவதில்லை. பெயரை ரிஜிஸ்டர் செய்து விட்டு ஆண்டுக் கணக்கில் பலர் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, வசதிகளை அதிகப் படுத்தி, உற்பத்தியைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உற்பத்தி ஆகும் செலவைப் பார்க்கிறபோது எளிதாக வருமானம் கிடைக்க இப்போது வாய்ப்பு இல்லை. ஆனால், உள்ளபடியே அதற்கான தனி நிதி ஏதாவது ஒரு வகையில் திரட்டி, சிறிய அந்த நிலையங்களை உற்பத்தி மேற்கொள் வதற்கான முறையில் 5-6 இடங்களைத் தலைமை நிலையங்களாக ஆக்க அ நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்போது என்னென்ன செயற்கை உடல் உறுப்புகள் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மிக இன்றியமையாத, வாழ்க்கை நடத்துவதற்கு அவசியமாக இருக்கிற, கை, கால் போன்ற உறுப்புகள் இழந்தவர்களுக்கு, இந்தச் செயற்கை முறை உறுப்புகள் தரப்பட்டு அவர்கள் நடப்பதற்கும், தொழில் செய்வதற்கும் என்ற வகையில் செய்யப்படு கிறது.



திரு. த. சோனையா : தலைவரவர்களே, சென்னைக்கு அடுத்தபடியாக மதுரையிலே இருக்கிற அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பிடல் இருக்கிறது. அங்கே கை, கால் இழந்தவர்களுக்கு இந்த மாதிரி செயற்கை உறுப்புகளைச் செய்து, அந்தப பகுதியில் இருக்கிற மக்களுக்கு உதவி செய்யும் வகையில் அங்கே ஒரு நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போதே அங்கே சப்-சென்டர் துணை நிலையம் என்ற வகையில் இருக்கிறது. அது எதிர் காலத்தில் முதல் நிலையமாக உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

*Ambulance Vans*

*689 Q.—THIRU R. R. MUNUSAMY : Will the Hcn. the Minist r for Health be pleased to state—

(a) the total number of ambulance vans in the Medical College Hospitals in Madras City ; and

(b) the steps taken to increase the number ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ & இ) : பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தலைநகரங்களில் அவசர ஊர்தி இருப்பதைப்போல், வட்டங்களிலும் அமைக்க அரசு முன் வருமா ? பொதுவாக நகரங்களில் பஸ் வசதி, மற்ற வாகன வசதி இருக்கும்போதே இப்படிப்பட்ட அவசர ஊர்திகள் வைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, செஞ்சி வட்டம் 30 மைல் பரப்பளவில் இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் அவசரமாக மருத்துவ மனைக்கு வரவேண்டுமென்றால் அதற்கு ஊர்தி வசதி இல்லை. அந்தப் பகுதியில் பஸ் வசதியும் சரியாக இல்லை. ஆகவே, அந்த செஞ்சி வட்டத்திற்கு, இப்படிப்பட்ட வளர்ச்சியில்லாத இடங்களில் ஊர்தி ஏற்படுத்தித் தந்தால் நாட்டு மக்களுக்கு ஏதுவாக இருக்கும் என் பதை அரசு உணர்ந்து அந்த வட்டங்களில் ஏற்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு உணரவில்லை என்று அங்கத்தினர் கருதக்கூடாது. அரசு உணர்ந்து பார்த்து, பார்த்து செய்ய முடியாது என்ற அளவுக்கு நிதிநிலை இருப்பதால் செய்யவில்லை. இப் போதுள்ள பெரிய தாலூக்கா மருத்துவ மனைகளிலேயே இந்த மாதிரி ஊர்தி வசதி இல்லை. ஒரு வண்டி வாங்க ஏறத்தாழ ரூ. 40,000, ரூ. 50,000 செலவாகிறது. அதற்குப் பின்னால் நடைமுறைச் செலவு ரூ. 40,000, ரூ, 50,000 என்று வருடத்திற்கு ஆகிறது. அதற்கு ஏற்ற அளவுக்கு அங்கே நோயாளிகள், படுக்கை வசதி போன்றவை, அவசர நிலைமைகள் எல்லாம் இருக்க வேண்டும். அப்படி இல்லாத இடங்களில் இவ்வளவு பொருள் செலவு செய்வது என்பது சரியல்ல. சென்னை நகரத் திலேயே பல மருத்துவ மனைகளில் பல முன்னேற்றங்கள் போதிய நிதி வசதி இல்லாததால் செய்யப்படாமல் இருக்கிறது.

@—288ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### Government Hospital, Hosur

*690 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the construction of additional buildings for Government Hospital at Hosur in Dharmapuri district has been completed ;

(b) whether arrangements to provide X-ray facilities there have been made ; and

(c) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தர்மபுரி மாவட்டம் ஒசூரில் 25 படுக்கைகள் கொண்ட ஒரு புது மருத்துவ மனை கட்டுவதற்கான வேலைகள் பொதுப்பணித் துறையினரால் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) & (உ) : 100 எம். ஏ. எக்ஸ் கதிர் வீச்சுக் கருவி ஒன்று வாங்கப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் முடிந்ததும் அந்தக் கருவி பொருத்தப்படும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Health how long will it take to complete the construction work ? It has been going on since two long years and may I know whether additional doctors will be posted, especially lady docteis.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 25 படுக்கைகள் உள்ள மருத்துவ மனை என்று வருகிற போது நிச்சயமாக ஒரு பெண் மருத்துவர் நியமிக்கப்படுவார். கட்டிட வேலைகள் என்று வருகிறபோது சில இடங்களில் சில காரணங்களால் வேலை தடைப்படுகிறது. அரசாங்கம் பல்வேறு இடங்களில் பல்வேறு முறையில் கட்டிடங்கள் கட்டுகிறது. குறிப்பிட்ட காரணத்தால் தாமதம் ஏற்பட்டால், அதைத் தெரிவித்தால், துரிதப்படுத்தப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த மாதிரி எக்ஸ்-ரே சாதனங்கள் திருச்சி மாவட்டத்தில் எத்தனை நியமிக்கப்பட்டு இருக்கிறது ? அவைகள் எந்தெந்த ஊரில் அமைக்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதற்கெல்லாம் தனிக்கேள்வி போடவேண்டும். ஒசூரிலிருந்து திருச்சி கிட்டத்தட்ட ... மைல் இருக்கும் என்று கருதுகிறேன். அவர் விரும்புகிற அந்த எக்ஸ்-ரே கருவிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 691, 692 ஆகியவைகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகின்றன.

### மதுரை மில்லுக்கருகில் மேம்பாலம்.

*693 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, பழங்காநத்தம் மதுரை மில்லுக்கருகில் கட்டப்பட்டு வரும் ரயில்வே மேம்பால வேலையின் மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) அவ்வேலை எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 32·30 இலட்சமென மதிப்பிடப்படுகிறது. (இ) விரைவில் முடிவுறும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, பழங்காநத்தத்திற்கு அருகில் கட்டப்பட்டிருக்கிற ரயில்வே மேம்பாலத்தின் கீழே காலியிடம் இருக்கிற காரணத்தால், அந்த இடங்களைத் தொழில் நடத்தக் கேட்பவர்களுக்கு வாடகைக்கு விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி ஒன்றும் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த மாதிரி மேம்பாலம் கட்டும்போது, அதற்கு மாற்றுப் பாலம் கட்டுகிறார்கள், அப்படிக் கட்டாமல் இருந்தால் அந்த இடத்தைக் கடந்து நடந்து செல்ல முடியவில்லை. அங்கே போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, பாலம் கட்டும்போதே தனியாக ஒரு மாற்றுப்பாதை கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எங்கே பாலம் கட்டுவதாக இருந்தாலும் மாற்றுப் பாலம் கட்டுவதற்கும் சேர்த்துத்தான் மதிப்பீட்டில்

பணம் ஒதுக்குகிறோம். அதைச் செவ்வனே செய்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். செய்யவில்லை என்று தெரிவித்தால் அது குறித்து கவனிக்கலாம்.

### கொந்தகை கண்மாய் கால்வாய்.

694 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், கொந்தகை கண்மாய் கால்வாய் மராமத்துச் செய்யாமல் மேடு பாய்ந்திருப்பது உண்மையா ?

(இ) மராமத்துச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொந்தகைக் கண்மாயின் வரத்துக் கால்வாய் சிறிது மேடு பாய்ந்திருந்தது. கால்வாய் மராமத்து குடி மராமத்து திட்டத்தின்கீழ் செய்ய வேண்டியதால், ஆயக்கட்டுதாரர்களே, மேடு பாய்ந்திருந்ததைச் சரி செய்து கொள்கிறார்கள்.

(இ) இந்தக் கால்வாயை மராமத்து செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, அந்தக் கொந்தகை கால்வாய் ஏறத்தாழ 3,000 ஏக்கருக்குத் தண்ணீர் தேக்கிவைக்கும் கண்மாய். அந்தக் கால்வாயைச் சரி செய்யாததால் 7 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியவில்லை. ஆகவே, அந்தக் கொந்தகைக் கால்வாயை வெட்டிக்கொடுத்து, அந்தப் பகுதி விவசாயிகளைக் காப்பாற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கண்மாய் ஆயக்கட்டின்கீழ் உள்ள நிலம் 3,000 ஏக்கர் என்று சொன்னார்கள். அது தவறு. 1,900 ஏக்கர் தான். இது குடிமராமத்தின்கீழ் செப்பனிட வேண்டியதொன்றாகும். இந்தக் குடிமராமத்து விஷயத்தில் அரசாங்கம் புதிய திட்டம் ஒன்று இருப்பதால்; அதன்படி பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் நன்மைதரும் வகையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.



### *Vilathurai Lift Irrigation Scheme*

*695 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to dismantle and remove the machines installed for Vilathurai Lift Irrigation Scheme ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். மு.ப. 9-30

திரு. என். டென்னிஸ் : இதை மாற்றாமல் அங்கே இயங்க வைத்தால் வரட்சிக் காலங்களில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும். இன்னும் குடி தண்ணீர் திட்டத்திற்கான ஒரு திட்டமும் முன்பு வைக்கப்பட்டிருக்கிறது. குடி தண்ணீர் திட்டத்திற்கும் வரட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு உபயோகமாக இருப்பதற்கும் இந்த இயந்திரங்களை அங்கே மாற்றாமல் இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆயக்கட்டிலிருந்த பூமிகள் சிற்றாறு—பட்டணங்கால் திட்டத்தின்கீழ் பயன்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்களை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றுவதற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

### *Bridge across Kushastali*

*696 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a bridge across the river " Kushastali" on Tiruthani-Nagalapuram Road ; and

(*b*) if so, when the work will be taken up ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : இந்தப் பால வேலையை எடுத்துக் கொள்வது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : சென்ற பட்ஜெட் கூட்டம் முடிந்தபிறகு இந்த வேலைக்கான ஒப்புதலை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது ஓர் ஆண்டு காலமாகியும் இதுவரையில் மத்திய அரசு அதற்கான ஒப்புதலைக் கொடுக்க வில்லை. இது மட்டுமல்ல, எந்தத் திட்டத்தை அனுப்பினாலும், மத்திய அரசின் ஒபபுதல் பெறுவதற்கு ஓராண்டு, இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி, இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை விரைவிலே பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வற்புறுத்த நாம் தவறுவதில்லை. காலதாமதம் ஆவதைத் தவிர்க்க முடியவில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : இந்த குசஸ்தலை ஆற்றின் மீது பள்ளிப்பட்டு அருகே ஒரு பாலம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது, எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி வேண்டும்.

### *Electrical Testing Laboratory, Kakkalur*

*697 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Electrical Testing Laboratory set up in the Functional Industrial Estate at Kakkalur near Trivellore has commenced work ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : திருவள்ளூருக்கு அருகிலுள்ள காக்கலூரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புத் தொழிற்பேட்டையிலுள்ள பொது மின் சோதனை ஆய்வுக்கூடம் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் சுமார் 25 பெருந் தொழில், சிறுதொழில்களுக்குப் பயனுள்ள 350 மாதிரிகளை இந்த ஆய்வுக்கூடம் சோதனை செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : எந்தெந்த விதமான ஆய்வுகள் செய்யப்படுகின்றன அந்தத் தொழிற்சாலையில் என்று சொல்ல முடியுமா?

The Hon. Thiru S. MADHAVAN :

(1) Electric Motors including Fractional Horse Power Motors.

(2) Insulation materials including L.T. Insulators.

(3) Lamp and lamp accessories including fluorescent tubes, starters, chokes, etc.

(4) Fans and

(5) Conductors, Cables and Winding wires.

இதுபோன்ற சாமான்களையெல்லாம் அங்கே வைத்திருக்கிறோம். எலக்ட்ரானிக் இண்டஸ்ட்ரியல் எது எது அவர்களுக்கு டெஸ்டு பண்ணுவதற்கு பெரிய இயந்திரங்கள் இல்லாமல் இருக்கிறதோ அதை இந்த லாபரட்டரி மூலமாக சிறு தொழில் கூடங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.



திரு. நா. வீராசாமி : தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை இருக்கிறது. பல தொழிற்சாலைகளில் இன்ஸ்டால்டு கபாஸிடியை விட அதற்குப் பின்னாலே அரசாங்கத்திற்குத் தெரியாமல் அந்தக் கபாஸிடியை இன்க்ரீஸ் செய்துகொள்கிறார்கள். உதாரணமாக, தொழில் ஆரம்பிக்கிற நேரத்தில் 25 எச். பி. இயந்திரங்களைப் பொருத்துகிறார்கள். அதற்குப் பின்னாலே விரிவுபடுத்துகிற நேரத்தில் 50 எச். பி., 75 எச். பி.யாக இன்க்ரீஸ் செய்துவிடுகிறார்கள். அரசாங்கத்தினிடமோ அல்லது இலாகாவினிடமோ எந்த அனுமதியையும் வாங்காமலே சிறு தொழிற்சாலைகளில் அப்படிச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட இயந்திரங்களையெல்லாம் கண்டுபிடித்து அதற்கான ஆய்வையும் இந்த டெக்னீஷியன்ஸ் செய்வதற்கு ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது லாபரட்டரி. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் இருக்கக்கூடிய தொழில் கூடங்களுக்கு பெரிய இயந்திரங்களைக் கொடுத்து டெஸ்டு செய்ய உதவி செய்யக் கூடிய லாபரட்டரி.

### *Weavers of Chinnalappatti*

*698 *Q.*—Thiru N. DENNIS
Thiru N. K. PALANISAMY : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there has been large scale migration of weavers from Chinnalapatti in Madurai district to other places ; and

(*b*) if so, the action taken to prevent such migration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1973 அக்டோபர் மாதத்தில் சில நெசவாளர் குடும்பங்கள் சின்னாளப்பட்டியை விட்டு வேறு இடங்களுக்கு வாழ வழிதேடிச் சென்றன.

(இ) மாநிலத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து கூடுமானவரை செயற்கைப் பட்டு நூல் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : அவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், அவர்களுக்கு வாழ்க்கை வசதி அளிக்கவும் இன்டரஸ்ட்-ப்ரீ லோன் கொடுக்கவும் லோன் அதிகமாக வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். எத்தனை பேர் அந்தத் தொழிலிலிருந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை என்ற குறை இல்லை. செயற்கைப் பட்டு கிடைக்காத காரணத்தினால் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சி.

திரு. என். கே. பழனிசாமி : அக்டோபர் மாதத்தில் ஒரே நாளில் மட்டும் 2,500 பேர் விழுப்புரத்திலிருந்து சென்னை வந்தவர்களை சர்க்கார் கைது செய்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்தோம். 2,500 பேர்களுக்கும் பின்னர் புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில செய்திகள் மிகவும் மிகைப் படுத்துகின்றன. செயற்கைப் பட்டைப் பொறுத்த அளவில் நாடு முழுவதும் ஏற்பட்ட பற்றாக்குறை நமக்குத் தெரியும். தமிழ் நாட்டில் தேவையான உற்பத்தி இல்லை. வெளி மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, சின்னாளப்பட்டியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை பெற்றது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே சென்று அவர் களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

## *Art Silk Ribbon Industry*

*699 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Art Silk Ribbon Manufacturing Industries at Komarapalayam are facing crisis as a result of the increasing prices of art silk ; and

(*b*) if so, the steps taken to meet the situation ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) செயற்கைப் பட்டின் நடப்பு விலையில் உயர்வு மட்டுமின்றி, ரிப்பன் தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு குறைக்கப்பட்டதாலும், குமாரபாளையத்தில் செயற்கைப் பட்டு ரிப்பன் தொழிலில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

(இ) 1973–74ஆம் ஆண்டில் தமிழ்நாடு வட்டாரக் குழுவிடமிருந்து கட்டுப்பாடான விலையில் 3,000 கிலோகிராம் செயற்கைப் பட்டு குமாரபாளையத் திலுள்ள ரிப்பன் தயாரிப்பாளர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : இதன் மூலமாக எத்தனை பேர் வேலை இழந்து இருக்கிறார்கள், அவர்களுடைய வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலை பாதிக்கப்பட்டிருப்பதாக தகவல் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : செயற்கைப் பட்டு இம் மாநிலத்திற்குப் போதிய அளவு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நெசவாளர்கள்மற்ற தொழிலில் ஈடுபடுகிற அளவுக்குக் கஷ்டமாக இருக்கிற





செயற்கைப் பட்டு தொழிற்சாலை ஒன்றை நம்முடைய மாநிலத்திலேயே கோவாபரேடிவ் அடிப்படையில் உண்டாக்குவது பற்றி அரசு ஆலோசனை யில் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட யோசனை இருக்கிறது ஆனால் இப்பொழுது இடைக்காலத்தில் இந்த நூல் விநியோகத்தை பம்பாயில் உள்ள உற்பத்தியாளர்களும் மில் முதலாளிகளும் மாஸ்டர் வீவர்ஸ் என்ற பெயரில் வியாபாரிகளுடன் சேர்ந்து நடத்துகிற ஒரு முறையை மாற்றி உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக் கின்ற ஒரு கோரிக்கையை நம்முடைய அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்தியிருக்கிறோம். நேற்று இதுபற்றி பேச்சுவார்த்தை இங்கே நடைபெற்றது. அந்த மில் அதிபர்களுடைய சங்கம் நம்முடைய மாநிலத் திற்குத் தேவையான நூலை நம்முடைய மாநிலத்திற்கே வந்து நாம் கொடுக்கின்ற அனைத்துக் கட்சிகளுடைய ஒத்துழைப்போடு கொடுக்கின்ற கார்டுகளின் அடிப்படையில் விநியோகிக்கக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, செயற்கைப் பட்டைக் கொண்டு ரிப்பன் செய்வது ஒரு சிறிய தொழில்தான். அதிக மாக சேலை போன்றவைகள்தான் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக சேலம், சின்னாளப்பட்டி, மதுரை, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் ஆர்ட் ஸில்க் மிகப் பெரிய கைத்தொழிலாக நடந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு செயற்கைப் பட்டு கிடைக்காத காரணத்தினால் மிகுந்த விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பம்பாயில் உள்ளவர்கள் இங்கே உள்ள மாஸ்டர் வீவர்களுக்கு நேரடியாகக் கொடுத்துவந்த காரணத்தினால் பெரிய ஊழல்கள் ஏற்பட்டு, அதனால் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இம் மாதிரி பிரச்னையைச் சமாளிப்பதற்கும், ஆர்ட் ஸில்கின் விலையைக் குறைப்பதற்கும் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் கருத்து முற்றிலும் சரியான கருத்து ஆகும். இதனுடைய காரணம் இதுவரையில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நூல் விநியோகிக்கப்பட்ட பிரச்னைதான். இந்த விநியோகம் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஒப்பந்தம் இங்கே உள்ள வியாபாரிகளுக்கும், நாட்டில் உள்ள வியாபாரிகளுக்கும் மில் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் கூடாது என்பது தான் மாநில அரசின் வாதம். நல்ல காலமாக இந்த மார்ச்சு மாதத்தோடு நாளையோடு இந்த ஒப்பந்தம் முடிவுறுகிறது. ஏப்ரல் மாதத்தில் வியாபாரிகளோடு ஒப்பந்தம் வைத்துக்கொண்டு கொடுக்கக்கூடாது, நேரிடையாக உபயோகப்

படுத்துகிறவர்களுக்கு நூலை வழங்கவேண்டும் என்று நாம் வற்புறுத்தி யிருக்கிறோம். நேற்று நடந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

திரு. கே. என். குமாரசாமி : செயற்கைப் பட்டு நூலுக்கான கோட்டா வைப் பெற்றுக்கொள்கிற மாஸ்டர் வீவர்கள் அதை வெளியே விற்று விட்டு, அந்த பாக்டரியை நடத்துவதே இல்லை. பாக்டரி நடத்துவதாக அவர்கள் கோட்டா பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கண் காணித்து, அப்படி கோட்டா பெற்று தொழிற்சாலை நடத்தாமல் இருப் பவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குறையை நீண்ட காலமாக இந்தப் பக்கத்திலிருந்து, அரசுத் தரப்பிலிருந்து இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இன்றைக்காவது அதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

திரு. த. சோணையா : செயற்கைப் பட்டு இல்லாத காரணத்தினால் நிறைய நெசவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்களின் அவதியைப் போக்குவதற்கு அரசாங்கமே இந்தப் பட்டு தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் நெசவாளர்கள் நிறைய இருக்கும் மதுரை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்த இடம் என்பது பின்னுலே நிர்ணயிக்கப்படும்.

### *Radhapuram sub-taluk*

***700 *Q*.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—**

**(*a*) whether there is any proposal to upgrade the Radhapuram sub-taluk into a main taluk ; and**

**(*b*) if so, the headquarters proposed therefor ?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம், பரிசீலனையில் உள்ளது.

(இ) இது குறித்து தக்க தருணத்தில் முடிவெடுக்கப்படும்.



திரு. டி. கணபதி : தலைவரவர்களே, இந்த நிதி ஆண்டில் இராதாபுரம் துணைவட்டம், வட்டமாக மாற்றி அமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மொத்தம் 40 சப்-தாலுகாக்கள் இருக்கின்றன. இவைகளை படிப்படியாக தாலுகா அந்தஸ் துக்கு உயர்த்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. தாலுகாவாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கார்த்தீசன் : இப்படி பரிசீலனை செய்யப்பட்டால், ராதாபுரம் தாலுகாவாக மாற்றப்படும்போது, அதன் மத்தியில் டவுன்ஷிப் இருப்பதால் அதை மையமாகக்கொண்டு தாலுகா அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் வேறு துணைவட்டங்கள் எதையாவது வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெல்லை மாவட்டத்தில்
5 சப் தாலுகாக்கள் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அவை, ஒட்டப்பிடாரம், சிவகிரி, பாளையங்கோட்டை, ராதாபுரம், சாத்தான் குளம்.

திரு. கோ. செபமாலை : தலைவரவர்களே; விருதாசலம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா ? அதுபற்றி பல நமூனுக்கள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். எப்போது பிரிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எல். கணேசன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தை புதிதாக உருவாக்கியிருப்பதால், அறந்தாங்கி வட்டத்தை சேர்ந்த பேரா வூரணி துணை வட்டத்தை வட்டமாக மாற்றி, பட்டுக்கோட்டை கோட்டத்தை நிலைக்கும்படி செய்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக்கேள்வி திருநெல் வேலி மாவட்டத்தைச் சேர்ந்தது. தனிக்கேள்வி போட்டால் பதில் தரப் படும்.

## செங்கம் வட்டம் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள்.

*701 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், வாணாபுரம், தண்டராம்பட்டு, தானிப்பாடி ஆகிய கிராமங்களில் உள்ள வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் செயல்படாமல் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) ஆம்.

(இ) திருவண்ணாமலை கூட்டுறவு வீட்டு அடமான சங்கத்தின் எல்லையை வாணாபுரம், தண்டராம்பட்டு, தானிப்பாடி ஆகிய கிராமங்களுக்கு விரிவாக்க உத்தேசிக்கப்பட்டு விதி திருத்தத்திற்காக தலைமைச் சங்கத்தின் கருத்து கோரப்பட்டிருக்கிறது. மேலும் திருவண்ணாமலை கூட்டுறவு உப-பதிவாளர், நாராயணகுப்பம் (தானிப்பாடி) தண்டராம்பட்டு ஆகிய கிராமங்களில் உள்ள கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை செயல்படச் செய்ய கடன் மனுக்களை இந்தச் சங்கங்களிடமிருந்து சேகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலைவரவர்களே, 10 ஆண்டுக்கு மேலாக எல்லோரும் கடன் வாங்கி வீடு கட்டியிருக்கிறார்கள். இதுவரை பணம் வசூல் செய்யவில்லை. இரண்டு ஆண்டுக்கு மேல் தொடர்ந்து செயல்படவில்லை என்றால் சட்டப்படி துணைப் பதிவாளருக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருந்தும், இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அதனால் மேற்கொண்டு யாருக்கும் கடன் வழங்க வசதியும் இல்லை. ஆகவே, திருவண்ணாமலைக் கோட்டத்தில் இந்தக் கிராமங்களைச் சேர்த்து எல்லோருக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : திருவண்ணாமலைக் கோட்டத்துடன் சேர்ப்பதற்குக் கூட்டுறவு உப-பதிவாளர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, செயல்படாமல் இருக்கின்ற வீடு கட்டும் சங்கங்களை புதுப்பிக்க வேண்டுமே அல்லாது வேறு சங்கங்களுடன் சேர்க்கக்கூடாது என்று மாநில வீடு கட்டும் சங்கம் சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் இருக்கிற சங்கங்களை புதுப்பிக்காமல் வேறு சங்கங்களை ஆரம்பித்தால் வீடு கட்ட முடியாத நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே, செயல்படாமல் இருக்கின்ற சங்கங்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?





மாண்புமிகு திரு க. இராசாராம் : கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு ஏராளமான பணம் வந்தது. அதனால் மேலும் பல புதுச் சங்கங்கள் உருவாயின. அதற்குப் பின்னால் பழைய சங்கங்கள் தூங்குகின்றன. தூங்குகின்ற சங்கங்களை எழுப்புவதற்கு போதுமான பண வசதி இப்போது இல்லை. ஆகவே, புதுச் சங்கங்களை உருவாக்கி வீடு கட்டுவதற்கு கடன் வசதிகளைச் செய்து கொடுக்க வைத்து, பழைய சங்கங்கள் கொடுத்த கடன்களை வசூல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு தோப்பூர் திருவேங்கடம் : வடாற்காடு மாவட்டம் வேலூர் வட்டத்திலுள்ள வீடு கட்டும் சங்கத்திடமிருந்து வீடுகள் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ? அந்த விண்ணப்பங்களை அரசு பரிசீலனை செய்து உடனடியாக வீடுகள் கட்டுவதற்கு, அந்த வீடு கட்டும் சங்கத்தைச் செயல்பட உத்தரவு வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அது பற்றிய குறிப்பு தற்போது இல்லை ; தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி செங்கம் வட்டத்தைப் பற்றியது. அதைப் பற்றிக் கேளுங்கள்.

திரு கே. என். குமாரசாமி : இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு எல்.ஐ.சி. மூலமாக வழங்குகின்ற கடன்களுக்கு கிட்டத்தட்ட 11½ சத விகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதனால் வட்டி விகிதம் அதிகமாக இருப்பதனால் பல சங்கங்கள் இயங்கவில்லை. ஆகவே, வேறு நிறுவனங்களிலிருந்து குறைந்த வட்டிக்கு நிதி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, வட்டி விகிதம் இதற்கு ஒரு பெரிய பிரச்னை இல்லை. கடன் எங்கே கிடைத்தாலும் வாங்கிக் கொள்கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. குறைந்த வட்டிக்கு எல்.ஐ.சி.யிலிருந்து கிடைக்கிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் பணம் கொடுக்கின்றன என்றாலும் வட்டி விகிதம் கூடுதல். அது மட்டுமல்லாமல் அவர்கள் 7 ஆண்டுகளில் பணத்தை வசூல் செய்துவிடுவார்கள். எல்.ஐ.சி.-யிலிருந்து கொடுக்கின்ற கடனை 20 ஆண்டு காலத்தில் வசூல் செய்கிறார்கள். ஆகவே, நீண்ட காலக் கடனுக்கு எல்.ஐ.சி.யை விட்டால் வேறு வழியில்லை.

திரு ப. முத்துசாமி : தலைவரவர்களே, பல வீடு கட்டும் சங்கங்களிலிருந்து லோன் கேட்டு மனு செய்கிறார்கள். ஆனால் அவை 'ப்ராசஸ்' செய்யப்படுவதில் 'டிலே' ஏற்படுகிறது. அதைத் தடுக்கின்ற வகையில் 'இ.எஸ்.ஆர்.' அதிகாரிகளை அதிகமாக நியமிக்க உத்திரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது எந்தவிதமான காலதாமதமும் ஏற்பட்டிருப்பதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் படவில்லை. எங்காவது தாமதம் ஏற்படுகிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது இருக்கிற அதிகாரிகளே போதுமானது என்று கருதுகிறேன்.

திரு. எஸ். முருகையன்: தலைவரவர்களே, தண்டராம்பட்டு, தானிப்பாடி, வாணபுரம் இவைகள் எல்லாம் செங்கம் வட்டத்தைச் சேர்ந்த கிராமங்கள். இவைகளைத் திருவண்ணாமலை வட்டத்துடன் சேர்க்கப்போவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். திருவண்ணாமலையில் உள்ளவர்களுக்கே மனுச் செய்தும் பணம் கிடைக்க வசதி இல்லாமல் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்தக் கிராமங்களையும் கொண்டுவந்து சேர்த்தால் அங்குள்ளவர்களுக்கு மேலும் கஷ்டமாக இருக்கும்; இங்கிருந்து வருகிறவர்களுக்கும் கஷ்டமாக இருக்கும். ஆகவே, இந்த மூன்று கிராமங்களையும் ஒன்று சேர்த்து ஒரு தனிக் கூட்டுறவு சங்கத்தை ஆரம்பித்து, பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இப்போது தண்டராம்பட்டு கிராமத்தை மட்டும் திருவண்ணாமலை வட்டத்துடன் சேர்ப்பதாகச் சொல்லியிருக்கிறேன். கிராம வீடு கட்டும் சங்கங்களைப் பொறுத்த வரையில் 10,000 ரூபாய் கடன் கொடுக்கிறோம். தண்டராம்பட்டு ஒரு நகரமாகக் கருதப்படுகிறது. ஆகவே, அது திருவண்ணாமலை வட்டத்துடன் சேர்க்கப்பட்டால், 25,000 ரூபாய் கடன் கொடுக்க வசதி ஏற்படும். எத்தனைபேர் மனுச் செய்தாலும் அவர்களுக்குப் பணம் கொடுக்கிற அளவுக்குக் கடன் வசதிகள் செய்யப்படும்.

## *Loans advanced to Pallavan Transport Corporation*

***702 *Q*.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—**

**(*a*) whether it is a fact that the Government had decided to waive the interest on loans granted to the Pallavan Transport Corporation ; and**

**(*b*) if so, the reasons therefor ?**

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(இ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் கேட்டுக்கொண்டதன்மேல், அக்கழகத்திற்கு தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க உதவியாக, 1-1-1972 முதல் 31-3-1974 வரையில் இக்கழகம் செலுத்த வேண்டியுள்ள ரூ. 35·37 லட்சம் வட்டித் தொகயை அரசு தள்ளுபடி செய்தது.





திரு என். கே. பழனிசாமி : சார், இந்த வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்துதான் லாபம் காட்டப்படுகிறதா ? இதேமாதிரி மற்ற டிரான்ஸ்போர்ட்டுகளுக்கும் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனால் சர்க்காருக்கு இழப்பு ஏற்பட்டுவிடும் என்று கருதத் தேவையில்லை. மற்ற போக்கு வரத்துக் கழகங்களுக்கு நாம் கொடுத்த கடனுக்கு வட்டி விகிதத்தை அதிகமாக்கியிருக்கிறோம். பல்லவன் போக்கு வரத்துக் கழகத்திற்கு வட்டித் தொகையை தள்ளுபடி செய்திருக்கிறோம். எப்படிச் செய்தாலும் அரசைப் பொறுத்த வரையில் லாபம் தான்.

திரு ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இப்போது சென்னை மாநகரத்தில் உள்ள போக்கு வரத்தில்—பஸ்களிலே மக்கள் கூட்டம் அதிகமாகி பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க, அதிக பஸ்கள் விட, நம்முடைய அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கோரி இருக்கிறதா ? அவர்கள் கொடுத்திருக்கிறார்களா ? எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் ? எத்தனை ஆண்டு கடனில் கொடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை மாநகர பஸ் போக்கு வரத்தைப் பொறுத்த வரையில் நஷ்டத்தில் நடைபெறுகிறது என்பது உண்மை. 1971-ம் ஆண்டு இந்திய பிரதம அமைச்சர் அவர்கள் மாநகர பஸ்கள் விட எந்த வகையிலே உதவிகள் செய்யலாம் என்று பரிசீலிக்கும்படி திட்டக் கமிஷனிடம் சொன்னார்கள். மாநகரப் பெருந்துகளுக்கு வட்டியில்லாக் கடன் கொடுப்பது, டீசல், இதர துணைப் பொருட்களுக்கு எக்சைஸ் வரி விலக்களிப்பது இவைகள் மூலம் மாநகர பெருந்துகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று திட்டக் கமிஷன் ஸ்டடி குரூப்—ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அந்த அடிப்படையிலே நாம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டோம். இன்னும் பதில் வரவில்லை.

இரண்டாவதாக, டீசலுக்கு மற்ற பெட்ரோலியம் பொருட்களுக்கும் எக்சைஸ் வரியை உயர்த்தினார்கள். அதனால் மாநகரப் பேருந்துகளுக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஆகவே, அதன் மூலம் வருகின்ற கூடுதல் வருமானத்தில் மாநகரப் பேருந்துகளுக்கு உதவி அளிக்க வேண்டுமென்று போக்கு வரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் வற்புறுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலே மத்திய அரசுக்கு கடிதம் எழுதினோம். இன்னும் பதில் இல்லை.

இப்போது கிரடிட் ஸ்க்வீஸ் ஏற்பட்டுவிட்டதால் வங்கிகளிடமிருந்து கடன் பெற முடியவில்லை. அவர்களைக் கேட்டால் ரிசர்வ் பாங்க் கிரடிட் ஸ்கவீஸ் செய்துவிட்டது என்று சொல்கிறார்கள். அதனால் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்திற்குக் கடன் கிடைக்க முடியாத நிலை வந்திருக்கிறது. அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசுக்கு அதை

பற்றிக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இன்னும் பதில் வரவில் இந்த மூன்றின் அடிப்படையிலே போக்குவரத்திற்குப் போதுமான உதவி கிடைக்கவில்லை. ஆனால், கொஞ்ச நாட்களுக்கு முன்னால் மத் அரசின் நிதி இலாகா ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறார்கள்.

In an informal chat with correspondents here the Finan Minister Mr. Y. B. Chavan said that Rs. 1 crore had been sanction for Calcutta, while in the Capital, viz. Delhi, plans were being ma to put more buses on roads. He could not fix any target out of ro collections from petrol for this purpose.

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கல்கத்தாவுக்கு ஒரு கோ கொடுக்க இருப்பதாகவும் டெல்லிக்கு அதிக பஸ்கள் வாங்க உத செய்ய இருப்பதாகவும் நிதி அமைச்சர் அவர்கள் கருத்து வெ யிட்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் எந்தவிதமா தகவலும் இல்லை.

மத்திய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆலோசனைக் கு உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

Giving reasons for loss that is being incurred by Delhi Transp Corporation, Mr. Tripathi said that during the past few months many as 249 new buses had been received.

Another 68 buses were expected by the end of current mo and 90 more during the next month or two.

ஆகவே 407 பஸ்களை அவர்கள் புதியதாகப் போடுகிறார்கள்.

A provision of Rs. 10·33 crores had been made for financial h to the Corporation during 1974–75.

டெல்லிக்கு 10·33 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கிறார் கல்கத்தாவுக்கு 1 கோடி என்று பத்திரிகைச் செய்தியில் இருந்து கி றது. சென்னையைப் பற்றி எந்த விதமான தகவலும் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத் கொடுத்தார்கள். இப்போது போக்குவரத்துத் துணை மானியக் கோரி யில் 3 கோடி ஒதுக்கியிருக்கிறோம். இந்தத் தொகைக்குப் போக்குவ இலாக்கா இன்டரஸ்ட் கொடுக்கிறதா? இன்டரஸ்ட் ப்ரீயா? மத் அரசிடம் கேட்டிருக்கிற பண உதவிக்கு இன்டரஸ்ட் கொடுக்க ஒத் கொண்டிருக்கிறார்களா? அல்லது அவர்களும் இன்ஸ்ட்ரஸ்ட் ப்ரீ கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை முடியுங்கள்.





டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் கொடுத்தார்கள். நான் என் கேள்வியை முடித்து விடுகிறேன். பஸ்கள் அடிக்கடி கெட்டுப்போவதற்கு என்ன காரணம்? மத்திய சர்க்கார் இன்றைக்குப் பணம் கொடுப்பதாக இருந்தால், இன்டரஸ்ட் ப்ரீயாகக் கொடுக்க இருக்கிறார்களா என்கிற விளக்கத்தைச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முதலில் அதைத்தான் நான் விளக்கமாகக் குறிப்பிட்டேன். போக்குவரத்துக் கழகங்களுக்கு எந்த உதவி செய்யவும் மத்திய சர்க்கார் கருதவில்லை. மற்ற போக்குவரத்துக் கழகங்களைப் போல இல்லாமல் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்காவது உதவி செய்யவேண்டுமென்ற கருத்தினை வற்புறுத்தி வருகிறோம். மாநகரப் பேருந்துகளில் அதிகமாக பஸ்களைப் போட வேண்டும். முதலீடு அதிகமாகத் தேவைப்படுகிறது. மேலும் நகரப் பேருந்துகள் நட்டத்திலேயே ஓடுகின்றன. அதனால் எந்த வங்கியும் கடன் கொடுக்க முன்வருவதில்லை. ஆகவே, திட்ட கமிஷனின் பரிந்துரைகளின் மேல் நகர பேருந்துக் கழகத்திற்கு வட்டியில்லாமல் நாம் கடன் கொடுக்கிறோம் என்றால் மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு அதிக வட்டிக்குக் கொடுத்திருக்கிறோம்.

திரு. எம். தேவராசன்: சேரன் போக்குவரத்துக் கழகம் மட்டும் லாபத்தில் நடைபெறுகிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் நட்டத்தில் நடைபெறுகிறது என்றால், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அது நீலகிரி, இது சென்னை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சென்னையில் நடைபெறுகிற போக்குவரத்துக் கழகத்தினால் நெருக்கடியைத் தீர்க்க போதுமான சேசிஸ் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்க வெளி தேசங்களில் இருப்பது போல லாரி பஸ்களை விட அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சேசிஸ் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை. நிதி உதவி கிடைக்கவில்லை என்று சொன்னேன். டெல்லிக்குப் 10 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நமக்கு 5 கோடி கொடுக்கக்கூடாதா என்பது தான் கேள்வி.

திருமதி த. ந. அனந்தநாயகி: வட்டி இல்லாக் கடன், இன்ஷூரன்ஸ் கட்டுவது கிடையாது, இவ்வளவும் இருந்து 40 இலட்சம் ரூபாய் நாலாயிரம் பஸ்களை வைத்துக்கொண்டு தருகிறோம் என்று சொல்கிறார்களே, ஏன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நஷ்டத்தை ஈடு செய்ய 40 லட்சம் தருகிறோம். டெல்லிக்கு 10·33 கோடி மத்திய அரசாங்கம் தருகிறது என்றால், அங்கே எவ்வளவு பெரிய நட்டம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின் செல்திறனை எதிர்த்து இனாம்தாரர் உயர் நீதிமன்றத்தில் 2319/66 ஆம் எண்ணுள்ள ரிட் மனுவை தாக்கல் செய்தது. 8—8—1969 ஆம் நாளிட்ட தனது ஆணையில் உயர் நீதிமன்றம் அந்த ரிட் மனுவை அனுமதித்தது. இந்த முடிவை எதிர்த்து சில உழவர்கள் 531/69 ஆம் எண்ணுள்ள ரிட் மேல்முறையீட்டை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். குடியுரிமை அளிக்கப்பட்டதால் இனாம் தன்மை நீக்கப்படவில்லை என்றும் ஒரு பகுதி கிராம இனாம் எஸ்டேட் என்ற முறையில் இந்த கிராமத்தை மேற்படி சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள விருப்பதாக அறிவிக்க அரசுக்கு உரிமை உண்டு என்றும் கூறி, உயர் நீதிமன்ற ஈராயம் (Division Bench) 14—12—1971 ஆம் நாளிட்ட தமது ஆணையில் இந்த ரிட் மேல்முறையீட்டை அனுமதித்தது. உயர் நீதிமன்றத்தில் ரிட் மேல்முறையீட்டின் மீதான ஆணையால் பாதிக்கப்பட்ட ஆதீனம், 1972-ஆம் ஆண்டின் 986-ஆம் எண்ணுள்ள சிவில் மேல்முறையீடு ஒன்றை தலைமை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. மேல் முறையீடு இன்னும் விசாரணையில் உள்ளது. தடை விதிக்கக் கோரி ஆதீனம் தாக்கல் செய்த சிவில் பல்வகை மனு மீது இந்தியத் தலைமை நீதிமன்றம் 9—3—1973-ல் கீழ்க் கண்ட ஆணைகளைப் பிறப்பித்தது.

"எஸ்டேட்டானது, இடைக்காலத் தடை ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரே, அரசிடம் நிலைப் பெற்றிருந்தது என்று எங்களுக்குச் சொல்லப்படுகிறது. சுவாதீனத்திலிருந்து உடைமையை எடுத்துவிடுவதைப் பொறுத்தவரை இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளன்று உள்ள நிலையை தொடர்ந்துவரும். ஏனைய கூறுகளைப் பொறுத்தவரையில் தடையாணை கிடையாது."

தடை ஆணையின் வரையறையைப் பொறுத்தவரையில் மனுதாரர் ஆதீனத்தின் சுவாதீனத்திலும் ஆதீனத்தின் கீழ் உள்ள நபர்களின் சுவாதீனத்திலும் இருந்த நிலத்தின் சுவாதீனத்தை எடுத்துக்கொள்வது நீங்கலாக, நிலம், எஸ்டேட்டில் பயிர் செய்யும் குத்தகைதாரர்களுக்கு பட்டா வழங்குதல் ஆகியவை தொடர்பாகத் தேவையான நடைமுறைகள் அனைத்தையும் மேற்கொள்ள இந்தியத் தலைமை நீதிமன்றம் அரசை அனுமதிக்கிறது என்று அரசின் சட்ட அதிகாரிகள் அரசுக்குத் தெரிவித்தனர். அதை அடுத்து இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்தும் பணியை மேற்கொண்டும் தொடருமாறு நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகளுக்கு வருவாய் வாரியம் கட்டளைகள் பிறப்பித்தது.

நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தார் விசாரணை மேற்கொண்ட போது இவ்வழக்கு சம்பந்தப்பட்ட கிராமம் தற்போதுள்ள ஓர் இனாம் எஸ்டேட்டோ அல்லது பகுதி கிராம இனாம் எஸ்டேட்டோ இல்லையென்றும், ஆனால் நிலவரியில்லா ரயத்துவாரி நிலவுடைமை என்றும் அல்லது எந்தவிதத்திலும் அது ஒரு சிறு இனாம்தான் என்றும் அறிவிப்புப் பெறுவதற்காக நில உடைமைதாரர்களாகிய ஆதீனம்



1963 ஆம் ஆண்டின் 31 ஆவது சட்டத்தின் 5 ஆவது பிரிவின்கீழ் மதுரை, நிலவரி ஏற்பாட்டு அதிகாரியின் முன் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தார். நிலத்தின் குத்தகை உரிமை 531/69 எண்ணுள்ள ரிட் மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் முன்னரேயே முடிவு செய்யப்பட்டுள்ளபடியாலும் அந்த முடிவு தலைமை உயர் நீதிமன்றத்தில் 986/72 எண்ணுள்ள வழக்கில் விண்ணப்பதாரரால், ஆட்சேபிக்கப்பட்டுள்ளபடியாலும், விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென மதுரை நிலவரி ஏற்பாட்டு அதிகாரி ஆதீனத்திற்குத் தெரிவித்தார். (27-7-73 ஆம் நாளிட்ட பி.3. 14701/73 எண்ணுள்ள கடிதம்) நிலவரி ஏற்பாட்டு அதிகாரியின் இந்த முடிவை எதிர்த்து நில உரிமையாளர் ஆர். ஏ. 43/73ல் திருநெல்வேலி இனாம் ஒழிப்பு நடுவர் மன்றத்தின் முன் மேல்முறையீடு ஒன்றைச் செய்துகொண்டார். நில உடைமையாளராகிய ஆதீனம், இடைக்காலத் தடை ஆணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த இடைக்காலத் தடை ஆணை 8—8—73 நாளிட்ட ஐ. ஏ. 177/73 எண் ஆணையில் வழங்கப்பட்டது. இந்த இடைக்காலத் தடை ஆணையை யாதும் அரசு ஆட்சேபித்தது. நடுவர் மன்றம் 22—12—73 நாளிட்ட தமது ஆணையில் இந்த இடைக்காலத்தடை ஆணையை ரத்து செய்தது. ஆதீனம் இந்த ஆணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் ஆர். பி. 75/74 எண்ணுள்ள வழக்கில் மேல் முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தது.

மேலும், 16—1—74 நாளிட்ட ஐ. ஏ. 446/74 எண்ணுள்ள கோப்பில் நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தாரின் நடவடிக்கைகளை நிறுத்தும் இடைக்காலத் தடை ஆணையையும் பெற்றார். இடைக்காலத் தடை ஆணையை நீக்குமாறு வரைவு எதிர் மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தடை ஆணை மனு 20—3—74 அன்று கேட்புரைக்கு வந்தது.

உயர் நீதிமன்றம் தடைமனுவையும் சிவில் ரிவிஷன் மனுவையும் கேட்புரைக்கும், இறுதி முடிவுக்கும் 8—4—74 அன்று வைத்திட கட்டளையிட்டுள்ளது. தடை ஆணைகளின் காரணமாக நிலவரி ஏற்பாட்டு விசாரணையும் நடவடிக்கைகளும் இக்கிராமத்தில் விரைவாக நிறைவேற்றப்பட முடியவில்லை. பட்டா விசாரணை, நிலங்களில் உகைப்பாடு ஆகியவை இந்த எஸ்டேட்டில் முடிக்கப்பட்ட பின்னரே தீர்வை வசூல், புறம்போக்கு நிலங்களில் வளர்ந்துள்ள மரங்களிலிருந்து பழம் எடுக்கும் உரிமையை குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றைச் செய்ய முடியும்.

மீன்பிடி உரிமையைப் பொறுத்தவரையில் விற்பனையை, நடப்புப் பசலியில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தடை ஆணை நீக்கப்பட்டவுடன் நிலவரி ஏற்பாட்டுத் தாசில்தார் முன் முடிவாகாமல் உள்ள பட்டா நடவடிக்கைகள் நடத்தப்பட்டு மேற்சொன்ன இனங்கள் குறித்து அவசியமான மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பிரச்னைப்பற்றி அடிக்கடி திரு. சங்குமுத்து தேவர் அவர்… கேள்வி மூலமாகவும் கவன ஈர்ப்பு தீர்மானங்கள் மூலமாகவும் கேட்… கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். நா… அடுத்த தடவை அங்கே வருகிறபோது அதைப் பற்றி பரிசீலித்து அதை… பற்றிய நடவடிக்கைகள் எடுக்க யோசிக்கலாம். ஆகவே, அதுவரையி… அவர்கள் இதைப்பற்றிய கேள்விகளைக் கேட்காமல் இருக்க வேண்டுமென்… கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, இந்த கிராம… அரசுடைமையாக்கப்பட்டதற்குப் பிறகு சட்டப்படி கட்டடங்கள், குளம் பாசிகள்… பலன் தரும் விருட்சங்கள் இவற்றையெல்லாம் ஏலம் விடவேண்டு… மென்று சட்டத்தில் இருந்தாலும்கூட, இனாம்தார் கோர்ட்டில் ஸ்டே வாங்கி… கொண்டு புதிய மாறுதல்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். இனாம்… ஒழிப்புச் சட்டம் வந்ததற்குப் பிறகு பனைமரங்கள் வெட்டப்படுகின்றன.

அது மட்டுமல்ல, குடியிருப்பு மனைகளில் பனை மரங்கள் இருக்கின்றன… இவைகள் இனாம்தார்க்குச் சொந்தம் என்றும் ஸ்டே வாங்கிக்கொண்… அவர்கள் அந்த மக்களை இம்சித்துக்கொண்டு பனைமரங்களை வெட்டி… கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே தடை வாங்கப்பட்டது எப்போ… முடிவடையும் ?

அது மட்டுமல்ல, இந்தக் கிராமத்திற்குச் செல்லக் கூடிய சாலை ஒன்று… இருக்கிறது. இது யூனியனிலிருந்து போடப்பட்ட சாலையாகும். இந்த சாலை… இனாம்தார்க்கு சொந்த சாலை என்றும், கோர்ட்டு உத்தரவுப்படி யூனியனி… லிருந்து ஐந்து ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும் என்றும் சொல்கிறார்கள். இந்தக் காரணத்தினால் பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகள் எதுவு… செய்யமுடியவில்லை, ஆகவே சீக்கிரத்திலே இந்தப் பிரச்னையை முடி… அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்… பிரச்னை நண்பர் சங்குமுத்து தேவர் அவர்களுக்கு முன்னால் இ… உறுப்பினர் திரு. தீட்சிதர் காலத்திலிருந்து தொடர்ந்து நடைபெ… கொண்டிருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் சார்பிலே அவர்களும் சரி, இப்பொழுது… கின்ற உறுப்பினர் அவர்களும் சரி அவர்கள் அரசாங்கத்தை அ… பொழுது அதற்காக என்று தனி ஆளை அனுப்பி இந்த பிரச்… கவனிக்க வேண்டுமென்ற முறையிலே ஸ்டேயை ரத்துசெய்து … கொடுத்திருக்கிறோம். அண்மையிலே கூட செய்து கொடுக்கப்ப… கிறது. ஆகவே அரசாங்கத்தினால் எல்லா நடவடிக்கைகளும் எடு… வருகின்றன. ஸ்டே என்ற இடைக்கால உத்தரவின் மூலமாக பல அ… இழைக்கப்படுகின்றன என்பது உண்மைதான். அதற்கு நாங்கள் … பில்லை. 1963 ஆம் ஆண்டுச் சட்டத்திலேயே இப்படி ஸ்டே கொ…



அது செல்லாது என்று போட்டிருக்கிறார்கள். அதனால் தான் தொல்லைகள் வருகின்றன. அதற்கான ஒரு தனிக் குழு போட்டு இதையெல்லாம் ஆராய்ந்து வருகிறோம்.

**(ஆ) திருச்சி மாவட்டத்தில் நெல், அரிசி விலை உயர்வு குறித்து.**

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு அறுவடை சமயத்திலும் நெல், அரிசி விலைகள் கூடுதலான தொகைக்கு விற்கப்படுவதாலும், மேலும் விலை உயரும் சூழ்நிலை உள்ளதாலும் அவ்விலை ஏற்றத்தைத் தடுத்து நிறுத்தவேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இறுதியில் வட கிழக்கு பருவக் காற்று தவறியதன் காரணமாக போதிய அளவு மழை இல்லாமல் உணவுப் பொருள் உற்பத்தி பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் திருச்சிராப்பள்ளி மாவட்டமும் ஒன்றாகும். திருச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு தொடக்கத்தில் அறுவடை ஆகியுள்ள நெற்பயிர் மட்டுமல்லாமல் ஏனைய சிறுதானிய பயிர்களும் ஓரளவு பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நெல் கொள்முதல் விலை உயர்வினாலும் மற்ற இன்றியமையாப் பொருள்களின் விலையேற்றத்தினாலும் பற்றாக்குறை மாவட்டங்கள் பலவற்றில் இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து நெல் விலைகள் ஏறுமுகமாக காணப்பட்டன. திருச்சி மாவட்டத்திலும் 1974 ஜனவரி திங்களில் இவ்வாறான நிலை இருந்து வந்தது. இம்மாவட்டத்தில் 1974 பிப்ரவரி திங்களில் சம்பா பயிர் அறுவடைக்கு வந்தது. அறுவடையையொட்டி அத்திங்கள் முழுவதிலும் நெல்விலைகள் இறங்குமுகமாக இருந்தன. ஆனால் நெல் கண்டு முதலில் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் சந்தைகளில் நெல் வரவில் குறைவு இருந்தமையினாலும் இம்மாத தொடக்கத்திலிருந்து நெல் விலைகள் மறுபடியும் உயரத் தொடங்கின. வழக்கத்திற்கு மாறான இந்நிலையை கண்ணுற்று திருச்சி மாவட்டத்திற்கு தஞ்சை மாவட்டத்திலிருந்து தனி வணிகர்கள் மூலமாக நெல் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இதுகாறும் 5,760 டன் நெல் தஞ்சையிலிருந்து இறக்குமதி செய்ய தற்போதுள்ள உரிமம் பெற்ற வணிகர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நாளது தேதி வரை 747 டன் நெல் இம்மாநிலத்திற்குக் கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டது. தாளடி நெற்பயிர் அறுவடை இம்மாவட்டத்தில் காவிரி பாசனமுள்ள எல்லா இடங்களிலும் தொடங்கியுள்ளது. ஓரளவு ஏறுமுகமாக இருந்த நெல் விலைகள் இப்பொழுது சரிந்து கொண்டு வருகிறது. அறுவடை தொடர்ந்து நடைபெறுவதால் நெல் விலை மேலும் கணிசமான அளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் அறிக்கையில் நெல் விலை சரிந்து கொண்டிருக்கிறது என்று கூறி… …ன். நான் சென்றவாரம்கூட ஊருக்குச் சென்றிருந்த

பொழுது முன்பு கலம் 50 ரூபாய் விற்ற நெல் இப்பொழுது 60 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, உயர்ந்துகொண்டிருக்கும் விலையைத் தடுக்க இனி மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கையெடுத்து தஞ்சாவூரிலிருந்து 5,000 டன்களுக்கு மேல் கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. எப்பொழுதுமே அறுவடைக்கு முன்னால் விலை கொஞ்சம் ஏறும். அதுபோலத்தான் ஏறியிருக்கிறது. சென்ற திங்களை விட இப்பொழுது ஐந்து ரூபாய் குறைந்திருப்பதாக நேற்றுவரை தகவல் இருக்கிறது. நாங்கள் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் வெகு விரைவில் குறையலாம் என்று நம்புகிறேன்.

### 3. அறிக்கை அளித்தல்

#### அரசினர் உறுதிமொழிக்குழுவின் ஆறாம் அறிக்கை

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஆறாம் அறிக்கையை (ஐந்தாம் சட்டப் பேரவை) அளிக்கிறேன்.

### 4. நடைமுறைக் கேள்வி

**பேரவைத் தலைவர் மீது கொடுக்கப்பட்ட உரிமைப்பிரச்சினை அறிவிக்கை குறித்து தகவல் கோரல்.**

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், இன்று காலையிலே மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் மீது ஒரு பிரிவிலெஜ் மோஷனை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இந்த அவைக்குப் புறப்படும் நேரத்தில் மாண்புமிகு தங்கமணி என்று நினைக்கிறேன், என்னுடைய அறைக்கு வந்து கொடுத்திருக்கிறார்கள். அவைக்கு வந்ததற்குப் பிறகு சில உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பார்க்கக் கூட நேரமில்லை. என்ன கொடுத்திருக்கிறார்கள், அது அனுமதிக்கப்படக் கூடியது தானா, பிரிவிலெஜா என்று கூடப் பார்க்கவில்லை. கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அதற்காக பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி, அது என்ன ஆயிற்று என்று கேட்பது முறையல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நானும் திரு. தங்கமணி அவர்களும் கொடுத்திருக்கிறோம். அதைப் பற்றித் தலைவரவர்கள் என்ன சொல்கிறார்கள் நேற்று நடந்ததைப்பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அவைக்குப் புறப்படும் நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே வந்ததற்குப் பிறகு சிலபேர் கொடுத்திருக்கிறார்கள். அது என்ன என்று பார்க்கக்கூட நேரமில்லை



கொடுத்துவிட்டு உடனே என்ன ஆயிற்று என்று இந்த அவையிலே கேட்கக்கூடாது. அது ஆய்வில் இருக்கிறது. பார்த்ததற்குப் பிறகுதான் முடிவெடுக்க முடியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஏனென்றால் சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி நடத்தும் தங்களுடைய நேற்றைய செயலைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்றுகூடப் பார்க்கவில்லை. அது பிரிவிலெஜா அல்லது வேறு ஏதாவதா, யார் மீது என்பதையும் அதைப்பற்றிப் பார்க்காத நேரத்தில், பார்ப்பதற்கு நேரமில்லாத பொழுது அதைப்பற்றி கேட்பது முறையல்ல. நான் அவைகளைப் பார்த்ததற்குப் பிறகு முடிவைத் தெரிவிக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பார்க்கவில்லை என்று சொல்கிறீர்கள். பார்த்து, அதைக் கொடுத்த எங்களிடத்தில், இது எப்படி பிரிவிலெஜ் ஆகும் என்று கேட்டீர்கள், நாங்கள் பதில் சொன்னோம். இத்தனை சொல்லிய பிறகும் தாங்கள் பார்க்கவில்லை என்று . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த பிறகு நான் அறையிலே உட்கார்ந்திருக்க எத்தனை நிமிஷங்கள் ஆகியிருக்கும், எத்தனை பக்கங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அவைகளைப் படிப்பதற்கும் நேரம் இருந்திருக்குமா, நான் அதைப் படித்தேனா ?. அதைப்பற்றி நான் இன்னும் ஆய்வு செய்து முடிவெடுக்கவில்லை என்று சொல்லிவிட்டபிறகு, அதை இந்த அவையில் எழுப்புவது முறையல்ல, விதிமுறையிலிருப்பது அது தான்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order, as per Rule 185, a member may with the consent of the Speaker raise a question involving breach of privilege. Therefore, I have to raise the matter and then you have to decide whether there is *prima facie* question...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியிலே பிரிவிலெஜ் எழுப்புவதைப் பற்றி இரண்டு முறைகள் இருக்கின்றன. **"with the consent of the Speaker. Consent** வேண்டும் என்று கேட்காமல் கேட்கக்கூடாது. அதை பார்ப்பதற்குக்கூட நேரம் தராமல் அதைப்பற்றிப் பேரவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்று கேட்பது முறைதானா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : சாதாரணமாக பார்த்தால் .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைச் சொன்னால் உறுப்பினர்கள் உடனே நான் தப்பாகச் சொல்வதாகச் சொல்கிறார்கள். பிரிவிலெஜ் மோஷன் கொடுத்தால்; அது எப்படி பிரிவிலெஜ் ஆகும் என்று படித்தான தற்குப் பிறகுதான் பிரிவிலெஜ் மோஷனை எடுக்கின்ற வழக்கம் இந்த மன்றத்தில் தொன்றுதொட்டு நடக்கிறது. அப்படியில்லாமல், நான் இவ்வளவு சொல்லிவிட்ட பிறகு இதில் எந்த விதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்குச் சொன்னதையே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இது ஆய்விலே இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, பேரவையின் 184-வது விதியின்படி கீழ்க்கண்ட அவையுரிமை பற்றிய அறிக்கையைத் தங்கள் அனுமதியோடு கூறுகிறேன். நேற்று . . . .

THIRU G. R. EDMUND : On a point of order, Sir, how can he get priority ? I am on a point of order............

THE HON. THIRU K. ANBAZHAGAN : If at all it is a point of order, it should have been raised then and there. No advocacy is possible here after the Speaker's decision.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், கேளுங்கள் திரு. பரந்தாமன் அவர்கள் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நீங்கள் அதை எழுப்பியிருக்க வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை மீறல் பிரச்னையில் நான்கு சொந்து அதில் கொடுத்திருக்கிற . நீங்கள் சில விளக்கங்களை சொன்னீர்கள். அதை உண்மையிலேயே நான் சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். விதிமுறைகள் அப்படித்தான் இருக்கின்றன. நான் கேட்கும் தீர்ப்பெல்லாம், மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் அறையிலே உங்களைச் சந்தித்து உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் வேறு ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டரை பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், பிறகு எழுப்பலாம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் 185-வது விதியிலே உள்ளதைப்பற்றி இங்கே எழுப்பினார்கள். பிரிவிலேஜ் இரண்டு முறையிலே வரும். நடந்த முறைகளைப்பற்றி எழுப்புவது ஒன்று. அவை



நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் எழுப்புவது ஒன்று. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எழுப்பிய 185-வது பிரிவின்படி பார்த்தால் அது அவையிலே நடக்கும்பொழுது உடனே எழுப்புவது பற்றியது. நடந்துபோன நிகழ்ச்சிகளைப் பற்றி எழுப்ப வேண்டுமென்றால் 184-ல்

**A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the speaker a written notice of the matter, proposed to be raised.**

என்று இருக்கிறது. அவர்கள் கொடுத்தார்கள். எந்த நேரத்தில் கொடுத்தார்கள். பேரவைத் தலைவருக்கு அதைப் பார்ப்பதற்கு நேரம் இருக்க வேண்டாமா ? அதைத்தான் நான் சொன்னேன். அந்த நேரம் இல்லாத காரணத்தால் அதைப்பற்றி நான் எதுவும் முடிவெடுக்கும் நிலையில் இல்லை என்றுதான் சொல்கிறேன். 185-வது விதியைக் காட்டி இது இருக்கிறதே என்று சொல்வது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் எழுப்புகின்ற பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வேறு. நீங்கள் படிக்கவில்லை, படிப்பதற்குப் போதுமான அவகாசம் கிடைக்கவில்லை, ஆகவே என்ன கெடுத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை என்று சொன்னீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் தங்களிடம் என்ன எதிர்பார்க்கிறேன் என்றால், திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள், நான் கையொப்பமிட்டிருக்கிறேன், அதைப் பற்றித் தாங்கள் உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்ற அறிவிப்பை இந்த அவையிலே கொடுக்க வேண்டாமா என்பதற்குத் தங்கள் தீர்ப்பைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பியதற்கு, இப்படிக் கொடுத்திருக்கிறார்கள், நான் இன்னும் பார்க்கவில்லை, ஆய்விலே இருக்கிறது என்பதை மட்டும் சொன்னேன். சொல்ல வேண்டுமென்பது இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, காலையில் அறையில் நானும், அவை முன்னவரவர்களும், மற்ற அமைச்சர்களும் கூட இருந்தோம். அப்பொழுது தங்கமணி அவர்களும், சுப்பிரமணியம் அவர்களும் வந்தார்கள். தாங்கள் அவைக்கு நேரமாகி விட்டது என்று புறப்பட்டுக்கொண்டிருந்தீர்கள். அந்த நேரத்தில் உரிமைப்பிரச்சினை என்று கொடுத்தார்கள். அதைத் தாங்கள் இன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடக்கவிருக்கிறது, அதில் பேசிக்கொள்ளலாம் என்ற அளவிற்கு இந்த அவையிலேயே எதுவும் அதைப்பற்றிய பிரச்சினையை எழுப்ப வேண்டிய அவசியமில்லை என்ற அளவிற்கு முடிவெடுத்துக் கொண்டு வந்தோம்.

சபாநாயகர் மீது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல, நேற்று தற்கால தலைவராக இருந்த திருமதி ஜோதி அம்மையார் அவர்களுடைய தீர் எதிர்த்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தது உரிமை மீறிய என்று இன்னொரு உரிமைப் பிரச்சினையும் தரப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையும் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிக்கொள்ளல 10–30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட இருக்கிறது. எனவே, காக நேரத்தைக் கடத்துவது நல்லதல்ல என்பதைமட்டும் தெரிவி கொள்கிறேன்.

*திரு. எ. சுப்பிரமணியம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே இ பற்றி முடிவு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்த சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. நாங்கள் கொ போதே தாங்கள் வாதிட்டீர்கள். எப்படி இது உரிமைப் பிரச்சினை கீழ் வரும் என்று வாதிட்டீர்கள். நாங்கள் பதில் சொன்னோம்.

ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் என் அப்போது சொல்லவில்லை. கிளம்பி வரும்போது அலுவல் குழுவைக் கூட்டலாம் என்று முதலமைச்சர் சொன்னார். இதுபற்றி முடிவு செய்யலாம் என்று எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

நாங்கள் கொடுத்த பிரிவிலேஜ் மோஷனைப் பற்றிச் சொல்லுவதற் தாங்கள் அனுமதிக்கவில்லை.

ஆனால் முதலமைச்சர் அவர்கள் இன்னொரு பிரிவிலேஜ் மோஷ கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி அது பற்றிய விவர முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார் அதேபோன்று இந்த பிரிவிலெஜ் மோஷனைப் பற்றிச் சொல்லுவதற் அனுமதித்தால்தான் சரியாக இருக்கும். முதலமைச்சருக்குத் சலுகை, எங்களுக்குக் குறைவான சலுகை என்று ஏதேனும் உண்டா

முதலமைச்சர் அவர்கள் அந்த விஷயத்தை எடுத்துச் சொன்னார் பேரவைத் தலைவர் நேற்றுப் பேசிய பேச்சில் எக்ஸ்பஞ்ச் போர்ஷ படித்தார் என்பது பற்றி நாங்கள் பிரிவிலெஜ் மோஷன் கொடுத் இருக்கிறோம். இதைப் பற்றி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு வேண்டுமென்று ஒன்றும் கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஒன்றும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக அறையில் நடந்தது ப பலவிதமான கருத்துக்கள் வந்ததால் சொல்ல விரும்புகிறேன். 18 விதிப்படி எங்களுடைய கடமை இந்தச் சபை கூடுவதற்கு





உங்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த முறையில் கொடுத்தோம். அதைக் கொடுக்கும்போது 9-க்கு 2 நிமிஷந்தான் இருந்தது. நாங்கள் கொடுத்த உடனே நீங்கள் எங்களைக் கேட்டீர்கள். எப்படி இது பிரிவிலேஜ் ஆக வரும், நான் கன்சென்ட் கொடுப்பதற்காக விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னீர்கள். நாங்கள் சொல்ல முற்பட்டோம். அதற்குள் நேரம் ஆகிவிட்டது. எழுந்து வந்து விட்டீர்கள்.

அந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கே நாம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று வரும்போதே பேசிக் கொண்டே வந்து இதைக் கூட அங்கு பேசிக் கொள்ளலாம் என்றார்கள்.

நாங்கள் இந்த விஷயத்தை எழுப்பி இருக்கும்போது தாங்கள் எப்படி உதவி செய்யலாம் என்று சொன்னால் "நான் கன்செண்ட் கொடுப்பதற்கு முன்னால் இதைப் பற்றி யோசிக்க வேண்டும்; யோசிக்க அவகாசம் வேண்டும். கன்செண்ட் கொடுப்பதாக இருந்தால் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம்" என்று தாங்கள் சொல்லியிருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவைக்கு வருவதற்கு முன்னால்தான் கொடுத்தீர்கள். அதைப் பார்க்கக்கூட நேரம் இல்லை. என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று படிக்க நேரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: பிரிவிலெஜ் மோஷன் பற்றி உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை தொடங்க இரண்டு நிமிஷத்திற்கு முன்னால்தான் கொடுக்கப்பட்டது என்று நீங்களே சொன்னீர்கள். "புறப்பட்டு விட்டீர்கள்" என்று கூடச் சொன்னீர்கள். இவ்வளவு நெருக்கடியான நேரத்தில் கொடுத்துவிட்டு பேரவையில் முடிவு கூற வேண்டுமென்று கேட்பது முறைதானா?

திரு. கே. டி. கே. தங்கமணி: பிரிவிலெஜ் முக்கியமான விஷயம். முக்கியமான விஷயமாக இருப்பதால் உடனடியாக முடிவு எடுக்கவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான விஷயம் என்றாலும் முறையோடு நடக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த பிரிவிலெஜ் மோஷன் பற்றியும் இன்னொரு பிரிவிலேஜ் மோஷன் பற்றியும் இன்றைக்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியி விவாதிக்கலாம் என்றாலும் பிரிவிலெஜ் மோஷன் வருகிறபோது அதை "வித்ஹோல்டு பண்ணுவது சரியான முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர். மு. கருணாநிதி] [1974 மார்ச் 30

சபாநாயகர் மீது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல, நேற்று தற்காலிகத் தலைவராக இருந்த திருமதி ஜோதி அம்மையார் அவர்களுடைய தீர்ப்பை எதிர்த்து எதிர்க் கட்சிகள் வெளிநடப்பு செய்தது உரிமை மீறிய செயல் என்று இன்னொரு உரிமைப் பிரச்சினையும் தரப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றையும் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிக்கொள்ளலாம். 10-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு கூட இருக்கிறது. எனவே, இதற்காக நேரத்தைக் கடத்துவது நல்லதல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே இதைப் பற்றி முடிவு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்ததாகச் சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல. நாங்கள் கொடுத்த போதே தாங்கள் வாதிட்டீர்கள். எப்படி இது உரிமைப் பிரச்சினையின் கீழ் வரும் என்று வாதிட்டீர்கள். நாங்கள் பதில் சொன்னோம்.

ஆனால் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம் என்று அப்போது சொல்லவில்லை. கிளம்பி வரும்போது அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டலாம் என்று முதலமைச்சர் சொன்னார். இதுபற்றி அங்கே முடிவு செய்யலாம் என்று எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

நாங்கள் கொடுத்த பிரிவிலேஜ் மோஷனைப் பற்றிச் சொல்லுவதற்குத் தாங்கள் அனுமதிக்கவில்லை.

ஆனால் முதலமைச்சர் அவர்கள் இன்னொரு பிரிவிலேஜ் மோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறி அது பற்றிய விவரத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று இந்த பிரிவிலெஜ் மோஷனைப் பற்றிச் சொல்லுவதற்கும் அனுமதித்தால்தான் சரியாக இருக்கும். முதலமைச்சருக்குத் தனிச் சலுகை, எங்களுக்குக் குறைவான சலுகை என்று ஏதேனும் உண்டா ?

முதலமைச்சர் அவர்கள் அந்த விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள். பேரவைத் தலைவர் நேற்றுப் பேசிய பேச்சில் எக்ஸ்பஞ்ச் போர்ஷனைப் படித்தார் என்பது பற்றி நாங்கள் பிரிவிலெஜ் மோஷன் கொடுத்திருக்கிறோம். இதைப் பற்றி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்ய வேண்டுமென்று ஒன்றும் கூறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக அறையில் நடந்தது பற்றிப் பலவிதமான கருத்துக்கள் வந்ததால் சொல்ல விரும்புகிறேன். 184-வது விதிப்படி எங்களுடைய கடமை இந்தச் சபை கூடுவதற்கு முன்னால்



1974 மார்ச் 30] (திரு. கே. டி. கே. தங்கமணி)

உங்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த முறையில் கொடுத்தோம். அதைக் கொடுக்கும்போது 9-க்கு 2 நிமிஷந்தான் இருந்தது. நாங்கள் கொடுத்த உடனே நீங்கள் எங்களைக் கேட்டீர்கள். எப்படி இது பிரிவிலேஜ் ஆக வரும், நான் கன்சென்ட் கொடுப்பதற்காக விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று சொன்னீர்கள். நாங்கள் சொல்ல முற்பட்டோம். அதற்குள் நேரம் ஆகிவிட்டது. எழுந்து வந்து விட்டீர்கள்.

அந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கே நாம் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று வரும்போதே பேசிக் கொண்டே வந்து இதைக் கூட அங்கு பேசிக் கொள்ளலாம் என்றார்கள்.

நாங்கள் இந்த விஷயத்தை எழுப்பி இருக்கும்போது தாங்கள் எப்படி உதவி செய்யலாம் என்று சொன்னால் " நான் கன்சென்ட் கொடுப்பதற்கு முன்னால் இதைப் பற்றி யோசிக்க வேண்டும் ; யோசிக்க அவகாசம் வேண்டும். கன்சென்ட் கொடுப்பதாக இருந்தால் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம் " என்று தாங்கள் சொல்லியிருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவைக்கு வருவதற்கு முன்னால்தான் கொடுத்தீர்கள். அதைப் பார்க்கக்கூட நேரம் இல்லை. என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று படிக்க நேரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரிவிலெஜ் மோஷன் பற்றி உங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை தொடங்க இரண்டு நிமிஷத்திற்கு முன்னால்தான் கொடுக்கப்பட்டது என்று நீங்களே சொன்னீர்கள். " புறப்பட்டு விட்டீர்கள் " என்று கூடச் சொன்னீர்கள். இவ்வளவு நெருக்கடியான நேரத்தில் கொடுத்துவிட்டு பேரவையில் முடிவு கூற வேண்டுமென்று கேட்பது முறைதானா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரிவிலெஜ் முக்கியமான விஷயம். முக்கியமான விஷயமாக இருப்பதால் உடனடியாக முடிவு எடுக்கவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமான விஷயம் என்றாலும் முறையோடு நடக்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த பிரிவிலெஜ் மோஷன் பற்றியும் இன்னொரு பிரிவிலேஜ் மோஷன் பற்றியும் இன்றைக்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியி விவாதிக்கலாம் என்றாலும் பிரிவிலெஜ் மோஷன் வருகிறபோது அதை " வித்ஹோல்டு பண்ணுவது சரியான முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மெரிட்ஸ் அண்டு டிமெரிட்ஸ் பார்த்து பேரவைத் தலைவர் முடிவு செய்யவேண்டும். பேரவைத் தலைவர் இப்படித் தான் தீர்ப்புக் கொடுக்கவேண்டுமென்று பேரவைத் தலைவருக்குச் சொல்லிக் கொடுப்பது முறையல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட் : காலையில் உங்களிடத்தில் கொடுக்கப் பட்டது என்ன என்று தெரியாது என்று இப்போது சொல்ல முடியாது. காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார் கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல் லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயிண்ட் ஆப் ஆர்டரைத்தான் சொல்லு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் அதற்கு விதி முறைகள் இருக்கின்றன. மரபுகள் இருக்கின்றன. விதிப் புத்தகத்தை வைத்துச் சொல்லாவிட்டாலும் இப்படி ஒரு விதி இருக்கிறது, இப்படி ஒரு மரபு இருக்கிறது என்று அதைச் சொல்லிவிட்டு அந்த விதியோ அந்த மரபோ எந்த வகையில் மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லவேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய மன்றத்தில் மரபு, விதி முறைகள் பல இருக்கின்றன. யாராவது ஒரு உறுப்பினர் மீதோ, அமைச்சர் மீதோ உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதாக இருந்தால் பேரவைத் தலைவரைச் சந்தித்துக் கொடுப்பார். பேரவைத் தலைவர் அவைக்கு வந்த பின்னர் இன்னாரைப் பற்றி உரிமைப் பிரச்சினை வந் திருக்கிறது ; அதைப் பற்றி விவாதிக்க நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று தாங்களே பல முறை தெரிவித்திருக்கிறீர்கள். இன்றைக்குக் காலை 9 மணிக்கு முன்னால் தாங்கள் அவைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது இது கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மரபு அல்ல. ஒவ்வொரு முறையும் பேரவைத் தலைவருக்குக் கொடுத்தவுடன் அவ்வாறு தெரிவிப்ப தில்லை, கோவை செழியன் அவர்கள் கூட ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள். நாலைந்து நாட்கள் ஆகிவிட்டன. மறுநாளே கோவை செழியன் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார். நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன் என்று சொல்லவில்லை. சில விளக்கங்களைப் பெற வேண்டியிருக்கிறது.

திரு . க. உரொ. எட்மண்ட் : அதிலே சொல்லாமல் இருக்கலாம் ஆனால் இந்த மன்றத்தில் அப்படி சொன்னதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அதை என்னால் எடுத்துக் காட்ட முடியும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி மரபு இல்லை, இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

## 5. 1974–75–ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### (அ) நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனு.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ரூ. 70,88,800–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

" That the allotment of Rs. 70,88,800 under Demand No. 25, Cinchona be reduced by Rs. 100 ".

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, to discuss policy, I move—

" That the allotment of Rs. 70,88,800 under Demand No. 25, Cinchona be reduced by Rs. 100 ".

திரு பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, காவிரிக் கரைகளில் சின்கோனு மரங்களை அதிகம் பயிரிட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற தொகை ரூ. 70,88,800–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, சின்கோனு தோட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும் ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படாமல் இருப்பது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனுஎன்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 70,88,800–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு கு. அ. பொம்மன் : தலைவர் அவர்களே, சின்கோனா தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மற்ற தனிப்பட்ட தோட்ட முதலாளிகள் தங்கள் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ள வீடுகளைப் போல் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற தொகை ரூ. 70,88,800–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,03,44,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44, Forest Department be reduced by Rs. 100."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss the need to improve the Forest Wealth in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44, Forest Department be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the failure of the Government to take over private forests, I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44 Forest Department be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir, to discuss about the missing of timbers worth several lakhs from the forest of Kanyakumari District in Azhakiapandiapuram range, I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44, Forest Department be reduced by Rs. 100."



THIRU K. H. BOMMAN : Sir, யானைப் பாகர்களுக்குப் பென்ஷன் கொடுப்பது பற்றி—விவாதிக்க I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44, Forest Department be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir,

"திருச்சி மாவட்ட வனத் துறையில் முந்திரிக் கொட்டைகள் ஏலம் விடுவதில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விவாதிக்க."

I move—

"That the allotment of Rs. 3,03,44,000 under Demand No. 44, Forest Department be reduced by Rs. 100"

(இ) நிதிக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்ண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,60,03,900–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 2,60,03,900 under Demand No. 54, Capital Outlay on Forests be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 2,60,03,900 under Demand No. 54, Capital Outlay on Forests be reduced by Rs. 100."

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 2,60, 03,900 under Demand No. 54, Capital Outlay on Forests be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, to discuss the need to institute immediately measures for increasing the forest area of our State by taking active steps for aforestation, I move—

"That the allotment of Rs. 2,60,03,900 under Demand No. 54, Capital Outlay on Forests be reduced by Rs. 100."

திரு கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மேற்கு இராமநாத புரத்திலுள்ள புல் வெளிக் காட்டை விவசாயிகட்கு பிரித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற தொகை ரூ. 2,60,03,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, to discuss the need to ensure the development of Javvadu Hill and Elagiri Hill, I move—

"That the allotment of Rs. 2,60,03,900 underDemand No. 54, Capital Outlay on Forests be reduced by Rs. 100."

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சினகோனாத் துறை, காட்டிலாகாத் துறை ஆகிய மான்ய கோரிக்கைகளின் கீழ் அரசின் மூலம் கொள்கைக் குறிப்புகள்* கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதத்திற்குப் பின்னால் நான் பதில் கொடுக்கிறேன்.

*290—316ம் பக்கங்களில் 'காடுகள் துறை நிதிக் கோரிக்கை குறித்த கொள்கை விளக்க குறிப்பு' இணைப்பு II ஆகவும், சின்கோனாத் துறையைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பு, இணைப்பு III ஆகவும் அச்சிடப்பட்டுள்ளன.



(முற்பகல் 10-30)

*DR. M. MOSES : Mr. Speaker, Sir, may I point out certain flaws in the existing laws which are being exploited by the unscrupulous persons to fur ther their ends at Government expense.

No time limit is fixed for felling of trees in the forest and their transport to the Government Timber Depots.

I have already brought to the notice of the Government large scale theft of timber from the Velimalai Coupe No. 3. An enquiry was held and certain number of logs were listed as missing and the Special Branch C.I.D. was asked to investigate about these missing logs. Those logs listed as being found in the Coupe are being very slowly transported to the Government Timber Depot at Vadasary, Nagercoil.

I request the Government to appoint some competent authority to verify these logs with the original list and to see whether these two tally. It is said (not without foundation) that in many cases the measurements do not tally and even the species are different, so as to say that a deliberate attempt is being made to make up the number.

In July 1973 itself one Sri Ponniah had sent a telegram to the C.C.F. regarding the loss of timber from Velimalai Coupe No. 3 and this was forwarded by the C.C.F. to the D.F.O. for immediate enquiry and action. May I know why he has not taken any action? Only after sending out telegram late in October 1973 was an enquiry ordered and two Rangers and one Forester were placed under suspension.

Extraction work was completed in 1971 itself. Why was this timber not transported immediately?

After 1971, two Contractors had worked in the area, to remove the undersized trees and the firewood. After that this area has been leased out for Tapioca cultivation.

Who is responsible for this long delay? Why the Range Officer who worked there during extraction and who has handed over charge to his successor in early March 1972 should alone be suspended while the higher officials are not taken to task?

[Dr. M. Moses] [1974 மார்ச் 30

The very rich bamboo forests of our Kanyakumari district is being completely destroyed. Felling rules clearly state that in a given area, ⅓ area is not to be touched and in the other ⅔ only bamboos more than one year old must be cut and removed. Here the entire bamboos are cut and even the stumps are uprooted and removed. Why has not the District Forest Officer taken any action in this grave offence? Instead of being a perennial source of income to the Government the bamboo forests of our district are facing complete destruction.

On 10th June 1973 Karimalaigiri Plantation was raided by the District Forest Officer along with his junior officers and subordinates as per instruction from the Conservator.

Valuable Rosewood logs (swan export size) were seized within the premises of the estate which were smuggled into the premises from the adjoining reserve forest. The District Forest Officer had a long private talk with the owner and after that much to the surprise of every one present there he has ordered an immediate, on the spot release of all the seizure saying that he has fined the party Rs. 2,500. The Rule clearly states that in case of royalty trees when such an offence is detected the penalty imposed is 1½ to 2 times the market value of the timber and fine. The market value of one cubic foot of rosewood is Rs. 1,000. What was the quantity of Rosewood seized there? Was it only one cubic feet? Did the District Forest Officer make any attempt to trace the source of these logs? Did he inspect the surrounding Reserve forest areas? Why was such a light penalty imposed? What made him to place orders for immediate on the spot release of all the seizures?

Near Mylar rubber plantation about 150 acres has been encroached and is under Tapioca cultivation. This was brought to the notice of the District Forest Officer by the A.C.F. himself. I would like to point out that if this area is leased out it will fetch at least Rs. 1500 to Rs. 2,000 per hectare which is the rate prevailing in this area. In spite of the report by the A.C.F., the District Forest Officer has not done anything in the matter. Why?

In Government plantation, new coupes are leased out only for the first two years for tapioca cultivation. Under no circumstances has the District Forest Officer powers to extend this period.



1974 மார்ச் 30] [Dr. M. Moses]

in Paraliar, Kodayar and Petchiparai, the District Forest Officer has given for the third year. In the interest of the Plantation the Conservator during his field inspection has given specific orders not to lease out these areas for the third year. The A. C. F. has reported this matter to the District Forest Officer. In spite of it he has not taken any action. Why has he openly defied the orders of his superior?

About three months ago, the A.C.F. has reported the omission of the forest area lying between Mylar coupe No. 79 and the Kane settlement and has stated that unless this area is also included in coupe No. 79 it will be encroached. Agreeing with the A.C.F. the District Forest Officer has charge-sheeted the range officer for not including this area.

Later we find that this area was wantonly left out of coupe No. 79 by the District Forest Officer and the area is already encroached upon and is under tapioca cultivation. An immediate inspection of this area by a competent authority other than the forest official will substantiate the fact.

In the name of Kane areas, a lot of Government forest is encroached upon by other individuals and is under tapioca cultivation now. Each kane family is allotted two acres per year and in Kulasekaram range the total area will not exceed about 100 acres. If the Government be pleased to order the survey department to survey the area under tapioca cultivation in the name of Kane land, we will be staggered to know that several hundreds of acres are being encroached in the name of Kanes by others.

This again the A.C.F. has reported to the District Forest Officer. But he has not taken any action. Why? It is said that for every lorry load of tapioca that is removed Rs. 300 to Rs. 400 is paid to the forest officers. The annual income of the officers from this illicit gratis in Kulasekaram range alone runs to several thousands and is being shared by the top officers of the District.

One Sherif who was working as a lorry driver for the past seven years drawing a salary of Rs. 180 was ousted out for want of vacancy when his lorry was sent to the workshop for repairs. He is on

approved probationer and instead of ousting him he must have been posted in the peon's vacancy that was existing at that time. Later the District Forest Office has appointed a junior Jeep driver as the lorry driver and has appointed Sheriff as a Jeep Driver at a lower salary of Rs. 150 which is highly irregular and against the rules.

Coupes in Nangunery range were auctioned on 24th January 1974 without computing proper survey maps. The survey Department in the D.F.O. Office have objected to the maps stating that there were gross mistakes and a resurvey has to be done. The D.F.O. ignoring all these have conducted the auction. When the matter was brought to the notice of the higher authorities by me on 14th February 1974 the Conservator inspected the files. But the D.F.O. manipulated the file in a such way that the Note File was not shown to him. If the entire file is called for immediately and inspected, it will substantiate these facts.

The D.F.O. is a highly paid Gazetted officer, is given conveyance and other amenities and is empowered with enough powers to control and supervise the work of his Junior officers. He is supposed to do depot inspection at least twice a year. But when the above facts were brought to the notice of the Government, only two Junior officers and lower staff have been placed under suspension, while the Chief culprit, the D.F.O. continues to be in that place. The presence of this officer in power in this area will definitely hamper an impartial enquiry since he will use the position and power to safeguard him and others in whom he is interested and will tamper with all the files.

In view of the above facts, I demand the Hon'ble Minister to transfer the erring officer immediately before he could manipulate the record and tamper the files and to order an immediate enquiry by a competent officer from any department other than the forest department and if any one of my allegations is proved to be wrong by him I am prepared to resign from the Assembly.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தக் காட்டுவளத் துறை மானியத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

இந்தத் துறை மிகமிக இன்றியமையாத துறை என்பதை யாரும் மறுக்க இயலாது. இத் துறை பல தொழில்களுக்கு மூலப் பொருள்களைத் தருவதுடன் மண்வளப் பாதுகாப்பிற்கும் சுற்றுப்புறக் காற்றுக் கெடாமல் இருக்கவும், இந்தத் துறை மிகவும் உதவி வருகிறது.





(திரு குழ. செல்லையா தலைமை)

ஆனால் தமிழகத்தில் காடுகள் இருக்க வேண்டிய அளவில் இல்லை என்ற குறைபாட்டை பலமுறை நான் இந்த மன்றத்தில் வற்புறுத்தி உள்ளேன். அமைச்சர் அவர்கள் தந்துள்ள கணக்குப்படியே காடுகள் 33 சத விகிதம் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், இருப்பதோ 16 சத விகிதம்தான். இதை எப்படி அதிகரிப்பது என்று சிந்திக்கிற நேரத்தில் அதைப் புரிந்துகொள்ளாமல், காட்டு வளத்தை அறிந்துகொள்ளாமல், இருக்கிற காட்டு நிலங்களை எல்லாம் எடுத்து விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லாதவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனால் ஏற்படக்கூடிய பெரிய பயங்கரமான விளைவுகளை எதிர்காலத்தில் எந்த அளவிற்கு இந்த நாடு பாதிக்கப்படும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

நல்ல வேளையாக மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கூடிய அந்த மாநில உயர்மட்டக் குழு காட்டு நிலங்களை வழங்குவதில்லை, நிலம் இல்லாத ஏழைகளுக்கு அந்த நிலங்களை வழங்குவதில்லை என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

முக்கியமாக நீலகிரி மாவட்டந்தான் இந்தத் துறையில் மிகவும் சிறந்து விளங்குகிறது. பல அணைக் கட்டுகள் நிரம்பிய இடமாக அது திகழ்கிறது. அதைத் தமிழ் நாட்டுக்கே மின் ஒளி வாரி வழங்கும் மாவட்டம் என்றால், அது மிகையாகாது.

நான் பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அங்கும் கூட இந்தக் காட்டு மரங்களை வரன்முறையற்ற முறையில் வெட்டித் தள்ளுகிறார்கள். இயற்கை மரங்களை வெட்டி வெட்டி அங்கு கற்பூர மரங்களையும் நிலார் மரங்களையும் போடுகிறார்கள். அந்த மரங்களினால் எந்தவிதப் பயனும் கிடையாது.

சவுத் இந்தியன் விஸ்கோஸ், டான் இந்தியா இவற்றிற்கு அந்தக் கட்டைகளைத் தருகிறார்கள். ஆனால் அங்குள்ள அணைக்கட்டுகள் எல்லாம் இன்று வரண்டு கிடக்கின்றன என்றால், சரியானபடி மழை பெய்யவில்லை என்றால், இப்படி மரங்களை அடிக்கடி வெட்டுவதுதான்.

இயற்கையான மரங்கள் அந்தக் காலத்தில். எங்கு பார்த்தாலும் இருந்தன. அந்த மரங்களை எல்லாம் வெட்டுவதைப் பார்த்தால் நம் நெஞ்சம் எல்லாம் குமுறுகின்றன.

[திரு. எம். தேவராசன்] [1974 மார்ச் 30

அதுவும் இந்த சவுத் இந்தியன் விஸ்கோஸ்க்கு மிகக் குறைந்த விலையில் கட்டைகள் சப்ளை செய்கிருர்கள். அப்படிக் குறைந்த விலையில் ஏன் கொடுக்கிருர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. என்ன ஒப்பந்தம்? இந்த ஒப்பந்தத்தை யார் செய்தது ? அவ்வளவு பெரிய அளவில் லாபம் வரும் அந்தக் கம்பெனிக்கு ஏன் இவ்வளவு குறைந்த விலையில் மரங்களை சப்ளை செய்ய வேண்டும் ? அதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

பிர்லா அங்கு இந்த மாதிரி மரங்களைப் போட்டு கேரளாவில் ஒரு தொழிற்சாலை வைத்து அதற்கு வேண்டிய மரங்களை எல்லாம் இங்கிருந்து கொண்டு செல்கிருர்கள். எதற்காக அப்படிச் செய்கிருர்கள் என்பதைக் குறித்து அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, வன விலங்குகளின் உய்விடம். நம் நாட்டில் ஆறு வன விலங்குகள் உய்விடங்கள் இருக்கின்றன. அவற்றில் முதுமலைதான் தலை சிறந்து விளங்குகிறது. உதகை நகரிலிருந்து முப்பது நாற்பது மைல் தூரத்தில் சாலை ஓரத்தில் இந்த மாதிரி அமைந்துள்ள இடம் இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. வசதியாக அங்கு சென்று வர நல்ல வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன.

யானைகள், காட்டெருமைகள், மலைப்பாம்புகள், மான்கள், புலிகள் போன்ற பலவகை வன விலங்குகள் அங்கு நிறைந்து காணப்படுகின்றன. ஆனல் என்ன காரணத்திலோ அங்கு புலிகள், மிகவும் குறைந்து இருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன என்று நாம் ஏற்கனவே கூறியிருக்கிறேன். வன விலங்குகள் உய்விடத்தைச் சுற்றிக் கிராமங்களே இருக்கக் கூடாது. குறைந்தது ஒரு ஆறு மைல் சுற்றளவில் எங்கும் கிராமமே இருக்கக் கூடாது. அந்தக் கிராமங்களிலுள்ள ஆடு மாடுகளைப் புலிகள் கொன்றுவிடுவதன் காரணத்தால் புலிகளுக்கு விஷம் வைத்துக் கொன்று விடுகிருர்கள்.

அதன் காரணமாக புலிகள் எல்லாம் இன்று அற்றுப்போய்விட்டன. எனவே, ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தாவது வன விலங்குகளின் இருப்பிடங்களைச்சுற்றி 6 மைல் சுற்றளவில் கிராமங்களே இருக்கக் கூடாது என்று செய்யவேண்டும்.

அந்தப் பகுதிகளில் ஆடுமாடுகளை அதிகமாக வளர்த்து வருகிருர்கள். காட்டு விலங்குகளுக்குள்ள புல் பூண்டுகளை இந்த மாடுகள் தின்று தீர்த்து விடுகிறது. எனவே, இந்த விலங்குகளுக்கு புல் கிடையாது. தண்ணீர் கிடையாது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதில் சற்று கவனம் செலுத்தி கண்காணிக்க வேண்டும்.

டைகர் ப்ராஜக்ட் என்ற ஒரு புதுத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்திருக்கிறது. அதற்கு ஒரு 12 இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். ஆனல் அதில் எப்படி முதுமலை விடுபட்டது என்று தெரியவில்லை. பந்திப்பூர் அந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறது. ஆனல் முதுமலை ஏன்



1974 மார்ச் 30] [திரு. எம். தேவராசன்]

அதில் சேரவில்லை என்று தெரியவில்லை. இரண்டும் கண்டிக்வஸ் ஆக இருக்கிறது. ஆகவே, முதுமலையையும் இந்த டைகர் ப்ராஜக்டில் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

முதுமலை, பந்திப்பூர், வயநாடு இந்த மூன்றையும் சேர்த்து ஒரு நாஷனல் பார்க் ஏற்படுத்துவது என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் வெகு விரைவாகச் செயல்படுத்த நமது அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நல்லவேளையாக மோயாறு திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாகச் சொல்லியிருக்கிருர்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அந்த மோயாறு திட்டம் வந்தால் அங்குள்ள அத்தனை நிலங்களும் நீரில் அமிழ்ந்து போகும் என்றும், முதுமலை வனவிலங்கு உய்விடமும் அழிந்து போகும் என்றும் சொன்னேன். நம் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட இதைப்பற்றி நம் அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லியிருக்கிருர்கள். அதற்காக நான் நமது அரசைப் பாராட்டுகிறேன்.

இங்கே முக்கியமாக இலங்கை அகதிகளைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறது. மறுவாழ்விற்காகத் தமிழகத்திற்கு ஓடிவந்துள்ள அந்த அகதிகள் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கிருர்கள். 456 குடும்பங்கள் அங்கே இருக்கின்றன. ஆனல், அவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. மனிதாபிமானம் அற்ற அதிகாரிகள் அங்கே இருந்துகொண்டிருக்கிருர்கள் ; அவர்களைக் கொடுமைப்படுத்துகிருர்கள்.

இந்த நேரத்தில் கலைஞர் அவர்கள் "பராசக்தி" படத்தில் எழுதிய வசனம் தான் என் நினைவுக்கு வருகிறது. "அகதிகளாக வந்தோம். இங்கே ஆண்டிகளாகிவிட்டோம்" என்ற நிலையில்தான் அவர்கள் குடும்பம் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் 7, 8 பேர் வேலை செய்வதற்குத் திறன் படைத்தவர்களாக இருந்தும் ஒருவருக்குத் தான் வேலை கொடுக்கிருர்கள். இதனல் அவர்கள் வாரத்தில் டல நாட்கள் பட்டினி கிடக்க வேண்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே இதைச் சொல்லியிருக்கிறேன்.

தமிழ் அபிமானமுள்ள, இனப்பற்றுள்ள அதிகாரிகளைப் போட்டால் தான் அவர்களைச் சரிவர கவனிக்க முடியும். ஏதோ தாங்கள் அகதிகளுக்குச் செய்கிரேம் என்பதற்காக அவர்களைக் கொடுமைப்படுத்துவது மிக மிக மோசமான செயல். இதை நான் எத்தனையோ முறை நேரில் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். சமீபத்தில் நம்முடைய அரிசன நல இலாகா அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோதுகூட அந்த மக்கள் அவர்களிடத்தில் சொன்னர்கள். ஆனல், நிலைமை சீர்திருந்துவதாக இல்லை. இந்த விஷயத்தில் அமைச்சர் அவர்கள் நல்ல கவனம் செலுத்தி, அங்கே ப்ராஜெக்டில் உள்ள அதிகாரிகள் எல்லாம் நல்ல தமிழ்ப் பற்றுள்ளவர்களாக, இனப்பற்றுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்ற முறையில் அமைக்க வேண்டுமென்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

DR H. V. HANDE : Hon. Chairman, I rise in support of the cut motions given on behalf of our party and I would like to offer a few remarks in connection with the demands that are before the House.

Firstly, I would like to draw the attention of the Hon. Minister to the fact that in the last three or four years, though there has been a fairly good amount of increase in the foreign exchange earned by the Cinchona Department, a great deal could have been done had it not been for the failure on the part of the Government to do much more than what they have done.

The fact that they have earned a little amount of foreign exchange was purely accidental. Many hon. Members may not know the truth behind. This was because of the Indonesian War and War that was going on in South East Asia.

In those areas, malarial parasites were discovered, to be not sensitive to paludrin; and later on it was found that they were sensitive to quinine and this information was taken possession of by our Government sufficiently a long time back and the Cinchona Department which was sleeping quietly was brought back to life and revived their activities.

Then quinine was produced by the Department. It was producing quinine before, but was sleeping in the middle temporarily and then again started producing quinine.

It was found that the South East Asian countries required large quantities of quinine, as it was found that malarial parasites were sensitive to quinine. After the revival, we have had substantial profits in that department. My submission is that if this had been planned properly and if effective steps had been taken by the Government, if the department had been goaded to further heights, both quantitatively and qualitatively, then it would have been possible for the Government to have earned at least two or three crores more of foreign exchange and that unfortunately has not taken place.

Government had not properly appreciated this milching cow, KAMA DHENU which was at their disposal.

I would suggest to Government to buck up and see that the department is properly enthused and the department helped both financially and departmentally so that more work is extracted, more quinine is extracted and more quinine is exported.



I bring this to the attention of the House and place it before the Government. If this is properly done, the entire district of the Nilgiris would become a veritable gold mine and it can itself look after the needs of its poor Harijans, the poor Scheduled Castes and poor Depressed Class persons and the backward community. That is why I place this for the consideration of the Government.

Then, with regard to the Forest Department, I am sorry to say that all is not well with that department.

I have given some very frightening cut motions about the manner in which cashewnuts are being taken away without the knowledge of the officials in the district of Tiruchirappalli. What answers the Hon. Minister nas with him, I do not know. That is why purposely I gave notice of my cut motions sufficiently in advance so that the Hon. Minister may not be caught napping, but may come with information and not say 'I have no information' which is likely to be said. It was only to help the Hon. Minister to come with answers I had given advance notice of my cut motions so that he may give information during his reply or place it on the table of the House.

The entire episode of the cashewnut, collecting, disposing and all other mal-practices that are going on should be informed to the House by the Government. This has to be viewed in the context of the working of the Forest Department.

It will be seen that the entire Forest Department has to be toned up and a lot of things has to be improved in that department. The Forest Department is given a step-motherly treatment. That is one of the reasons why I have chosen specifically to speek on this Demand as I want to impress upon the Government that the Forest Department is a very very important department and it should be properly looked after.

There was a Second Pay Commission and it gave its recommendations. These were accepted by the Government in its G.O. No. 222, Finance Department, dated 8th February 1971. They have accepted the entire recommendations of the Pay Commission in respect of the Forest Department in toto, but they have not been properly put into practice. Nobody knows. As far as the Government is concerned, they may say what they have done.

But so far as I am concerned, I learn that 90 per cent of the recommendations of the Pay Commission's recommendations have not at all been properly implemented.

One of the recommendations was that the Watchers be made permanent and they be brought under pensionable service conditions; that they be made eligible for all benefits like fixed travelling allowance, washing allowance, etc. That has not been done. This has to be properly viewed.

At the top of the department, at the pinnacle we have the Chief Conservator of Forests. Then to help him we have 70 District Forest Officers; to help these District Forest Officers, we have 360 Forest Rangers; to help these Forest Rangers, we have 900 Foresters, to help these Foresters we have 1,200 Forest Guards; to help these Forest Guards, we have 1,200 Forest Watchers. This is the entire set-up of the department.

From top to bottom, if we see, the base has been neglected. Who is responsible for this? The Forest Watchers who are at the base of the set-up, pyramid, most of them have crossed the age limit of 35 years and are for long eligible for promotion. Though they have made representations to the Government,—I think the hon. Member Thoppur Thiruvenkadam also made suggestions at the last Budget Meeting, he made some very valid points—nothing has been done.

I am saying this only to strengthen my argument and so that the Hon. Minister might look at it in an objective spirit. Nothing has been done so far. The reasons for not implementing the recommendations in respect of pay, F.T.A., etc., are not known.

Then with regard to direct recruitment. Sixty per cent of the departmental people are eligible for promotion and they are waiting for their chances. But every year, direct recruitment is resorted to through the Tamil Nadu Public Service Commission. This obstructs the promotion of the cadres. This has created in the rank and file of the staff terrible demoralisation.

If we demoralise the workers and staff at the base, any amount of help to those at the pinnacle will not help. No Government, no Ministers can carry on without taking into confidence their staff. Without taking the N.G.Os. into confidence, the officers alone cannot do much. Proper justice should be done to the staff. That has not been done here.



There are a number of things, but I would not take much of the time of the House. Suffice it for me to say that there is a large-scale discontentment among the rank and file of the departmental people and the Hon. Minister should do something with regard to these things.

For the last 2 or 3 years, a lot of malpractices are going on in Forest Department. Each person has to be paid a sum of Rs. 100 as T. A. according to the recent order. Originally, the T. A. was less than Rs. 25. Now the T.A. amount has been increased. மு.ப. 11-00

The employees in the lowest cadre are not getting that extra amount. This is the complaint which I have received from them; but at the same time, if you examine few receipts, you will know that nearly Rs. 1,300 has been drawn. This amount has not gone to the actual persons who are picking the cashewnuts, though the Government have passed orders. If this was not properly looked into the workers may go on a warfare. Therefore, I want to bring this to the attention of the Hon. Minister to enable him to take immediate action.

In Jayankondan, 1,70,000 kilograms of cashewnuts was collected. For each kilo, 18 paise has to be paid. But what happened was this. They have not received 18 paise, but they have received only 10 paise for each kilo, and 8 paise has not been given to the workers but they have been taken by the intermediaries. That is why I have given a cut motion on this point.

(Mr. Chairman sounded the gong) I am the only member speaking from Anna D.M.K. Being the Whip of the party, the Chairman knows it, four Cut Motions 1228, 1229, 1230 and 1231 have been given notice of by me and they all specifically relate to this subject. This has to be properly looked into. The amount involved in this is Rs. 4,800 and the same has not reached the actual workers.

Then again, I would like the Hon. Minister to examine certain documents in this connection. There is a register for 'H. Forms'. That has to be examined by him. There is also another register with regard to 'C Forms' and that also has to be examined by the Hon. Minister. There are also Officers' Report Books. These are the documents which have to be examined by the Hon. Minister to know the malpractices existing there.

Another important thing is this. The files in the Forest Department do not move at all. Under the benign Leadership of our Hon.

Minister, most of them remain at his table. They do not move at all for years together. What is the reason for this inefficiency ?

When I say ' inefficiency ', the Hon. Minister will get angry with me. The other day, the Hon. Minister and Members know that when I quoted something with regard to Minister for Food, he immediately got angry with me. I do not want to rouse the feelings of the Hon. Minister for Electricity. He is very sensitive. Let him not take it in that sense. Some of them are super sensitive.

Most of the files are piling at his table and they have not seen the light of the day. For instance, I can quote particular instance, with regard to a file relating to appointment of 16 Forest Rangers. In October 1972,the Public Service Commission has given the green signal for the finalisation of the list of 16 Forest Rangers. That file was brought to the notice of the Hon. Minister for Electricity and is pending on his table.

After the Service Commission has given its green signal, the Hon. Minister has only to pass orders. All these sixteen posts were kept vacant till the Dindigul Election. I am placing it for the consideration of the Hon. Minister. I understand that there was some connection with Dindigul Election.

I have received a complaint that money was demanded from 16 members for election purposes. The complaint is that money was demanded for election purposes as Election Funds from these persons. I would like to level this charge against the Hon. Minister. If I level this charge, then it would unnecessarily rouse bitterness. I am prepared to supply further information to the Hon. Minister. Is it a fact or is it not a fact is the matter to be replied by the Hon. Minister. I am leaving at that.

The appointent of 16 Forest Rangers have been held up due to the Dindigul Election campaign. Why was it held up for such a long time ? For this the Hon. Minister must give a proper explanation.

With regard to cashewnut dealings, one particular Officer was involved.

Mr. CHAIRMAN (Thiru KUZHA CHELLIAH) : Please wind up your speech.

Dr. H. V. HANDE : The Chairman is very strict with regard to me. I am very happy about it.



Now this particular officer is being protected by the Government. The Officer was involved in a serious sandalwood offence and the Ulundurpet Court has clearly mentioned that this Officer was at fault. He was involved in that case and some adverse strictures were passed against that officer by the Court at Ulundurpet. Such an Officer has been placed in a pivotal point. Looking at all these things, it would clearly substantiate my statement that the Chief Conservator of Forests and the Hon. Minister have failed to look into such matters. Why this has happened is my question.

Finally, I would like to refer to what Mr. Moses has brought to the notice of the Hon. Minister. What Mr. Moses has said is a serious allegation. I was really shocked. That is a serious allegation. He has also quoted certain orders which pertain to that serious allegation. I do not know how the Government can be complacent about it. The lower and Junior Officers have pointed out certain defects but they have been ignored by the Officers above them. This only shows how the Forest Department is functioning.

It was for this reason, I have given a specific cut motion with regard to afforestation of forests. The afforestation of forests have been held up for a long time.

The Forest Department is completely demoralised. The Officers are terribly afraid of bringing them to the notice of the Government because they will be taken to task.

Mr. Moses has brought to the notice of the Government the thinning of forests and disappearance of 1,000 logs of Wood in Kanyakumari district. All these things only substantiate our allegation.

All is not well in the Forest Department. The Hon. Minister is not controlling the Department in a proper way, in an effective way and in an efficient manner. He is not exercising his control over the Department for po'itical reasnos. All these allegations must be answered by tl.e Hon. Minister properly without telling ...

வழக்கம்போல டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்தில் ஏதோ சில குற்றச்சாட்டுகளைக் கிளப்பியிருக்கிறார்கள் என்று சொல்லி விடாமல், "அவருடைய குற்றச்சாட்டு ஒன்று, அதற்கு இது என்னுடைய பதில்" என்ற அளவில் விரிவான பதில் ஒவ்வொன்றுக்கும் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பதினைந்து நிமிஷம் ஜாஸ்தியாக எடுத்துக்கொண்டாலும் கூட, அவைத் தலைவர் அதை அனுமதிப்பார் என்று நான் கருதுகிறேன். எல்லாவற்றிற்கும் விரிவான பதிலை நான் மந்திரி அவர்களிடம் எதிர்பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு, என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சின்கோனா மான்யக் கோரிக்கையின் மீது டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது, மலேரியா நோய்க்கு இன்னும் என்ன தான் புது மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் குயினைன் மருந்து போல சிறந்த மருந்து கிடையாது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், வால்பாறையில் இருக்கிற இந்த சின்கோனா பாக்டரியை விரிவுபடுத்தி, அதாவது இன்னும் பெரிய அளவில் குவினைன் தயாரிக்கின்ற தொழிலை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும்.

அது நம் நாட்டிலிருக்கிற மருந்தகங்களுக்கு உபயோகப்படுவது மாத்திரமல்லாமல் ஏராளமான அன்னியச் செலாவணியை சம்பாதித்துத் தருகின்ற ஒரு பொருளாகவும் இருக்கிறது. அன்னிய நாடுகளில், குறிப்பாக மேற்கு ஜெர்மனி, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் குவினைனுக்கு நிறைய கிராக்கி இருக்கிற காரணத்தினால் நிறைய அன்னியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கிற குவினைன் பாக்டரியை விரிவுபடுத்தி இன்னும் பரவலான முறையிலே இந்த சின்கோனா மரங்களைப் பயிர் செய்து, அதிலிருந்து அந்த மருந்தைத் தயாரிக்கவேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

புள்ளிவிவரங்களைப் பார்த்தால்கூட ஏற்றுமதி அளவு குறைந்திருக்கிறது. 1972–73-ம் ஆண்டில் ரூ. 61,97,000 ஆக இருந்த ஏற்றுமதி, 1973–74-ம் ஆண்டில் ரூ. 44 லட்சம் அளவுக்குத் தான் இருக்கும் என்ற அளவுக்குக் குறைந்து காணப்படுகிறது. நல்ல முறையிலே அந்நியச் செலாவணி தருகின்ற பொருள், மனிதனுடைய உடலிலே வருகின்ற வியாதிகளைப் போக்குகின்ற பொருள் உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு குறையாமல், அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டு வளத்தைப் பொறுத்த வரையில், நாட்டின் பொருளாதாரத்திற்கு மனிதனுடைய நல்வாழ்வுக்கு காட்டினுடைய இன்றியமையாத தேவையை நாம் உணர்ந்திருக்கிறோம். நாட்டிலே இருக்கின்ற தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் காடுகளிலிருந்துதான் கிடைக்கின்றன. அப்படி இருக்கும்போது காட்டிலாகாவினுடைய புள்ளிவிபரத்தின்படி நாட்டிலே இருக்கின்ற நிலப்பரப்பில் 1/3 பாகம் அதாவது 33 சதவிகிதம் காட்டுப் பகுதியாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது.



தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 16 சதவிகிதம் தான் காடு இருக்கிறது. இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட ஆர்வத்தின் காரணமாக தங்கள் தொகுதி மக்களுக்கு வீட்டுமனை கொடுப்பதற்கு, விவசாயக் காரியங்களுக்கு கொடுப்பதற்கு காட்டு நிலத்தை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் கூட அப்படிச்சொல்லியிருப்பேன். இருந்தாலும் நாட்டின் மொத்த நலனைக் கருத்திற்கொண்டு அப்பேர்ப்பட்ட முயற்சிகளைச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

காடு இருப்பதினால் சமுதாயத்திற்கு நிரம்ப நன்மை இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற காடுகளை பாதுகாப்பதோடு மேலும் காடுகளை வளர்க்க வேண்டும். எதிர்காலத்திலே மேலும் காடுகளை வளர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகரங்களில் இருக்கின்ற "ஏர் பொல்யூஷன்" பற்றிச் சொல்கிறார்கள். அதைக் கூட மரங்களை அதிகமாக வளர்த்தால் தடுக்கலாம். அதை உணர்ந்துதான் டில்லி பெருநகரின் மையத்தில் "சிட்டி பாரஸ்ட்" என்று வைத்திருக்கிறார்கள். சென்னை நகரிலும் அப்படிப்பட்ட சிட்டி பாரஸ்ட் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு வனத்துறை பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை நகரத்தில் அதற்கு ஏற்ற இட வசதி இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகையால், சென்னை புறநகர்ப் பகுதிகளில் "சிட்டி பாரஸ்டு"களை உருவாக்க வேண்டும். அப்படி செய்தால் காற்றின் தூய்மையைப் பாதுகாக்க முடியும்.

அதைப்போலவே மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களிலும் நகரத்தின் மையத்தில் சிட்டி பாரஸ்டுகளை உருவாக்க முடியாவிட்டால் புறநகர் பகுதிகளிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வனத்துறை தான் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களிடம்தான் காடு வளர்ப்பு பற்றிய நுட்பமான தகவல்களை அறிந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படிச் செய்தால் நல்ல பலன் கிடைக்கும்; அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் காடுகளிலிருந்து கிடைக்கின்றன. குறிப்பாக பேப்பர் மில்லுக்கு வேண்டிய மூங்கில் மரங்களும் மற்ற மரங்களும் கிடைக்கின்றன. தோல் பதனிடுவதற்கான பொருட்கள் கிடைக்கின்றன. அது மட்டுமல்லாமல் இன்றைக்கு நாட்டிலே எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. விறகு பஞ்சம் அதிகமாகி இருக்கிறது. கிராமப்புறங்களில் கூட விறகு விலை அதிகமாகி விட்டது. ஒரு மணுவுக்கு 2 ரூபாய், 2¼ ரூபாய் ஆகிறது. அதனால் காடுகளில் விறகுக்கு பயன்படுகின்ற மரங்களை அதிலும் குறுகிய கால மரங்களை அதிகமாக வளர்த்து, எரிபொருள் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் வீடு கட்டுவதற்குப் பயன்படுகின்ற தேக்கு மரம், வைர மரம் போன்றவைகளைத் தனிப்பட்ட வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கி அதிகமான விலைக்கு விற்கிறார்கள். அதன் தொடர்பாக இந்த அரசுக்கு

நான் ஒரு ஆலோசனையை சொல்ல விரும்புகிறேன். பாரஸ்டு டிபார்ட்மெண்ட் விலை உயர்ந்த மரங்களை தனிப்பட்டவர்களுக்கு விற்காமல், வீடு கட்டுவதற்கு ஏற்ற வகையில் அவைகளை சீராக அறுத்து, ஆங்காங்கே இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் ஹெட்க்வார்டர்ஸில் "ரீட்டேல் ஷாப்பு"கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்தால் மக்களுக்கும் குறைந்த விலையில் கிடைக்கும், வனத் துறைக்கும் நல்ல லாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களிலும் சரி, நகரப்புறங்களிலும் சரி யார் வீடு கட்டினாலும் அவர்களுக்கு வேண்டிய, கதவு, ஜன்னல்களை வனத்துறையே கிடைக்கின்ற மரங்களைக் கொண்டு செய்து கொடுக்கலாம். இப்போது தனிப்பட்டவர்கள் 100 ரூபாய்க்கு ஒரு தேக்கு மரத்தை வாங்கி, அதை அறுத்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்று விடுகிறார்கள். 9, 10 மடங்கு கூட்டி விற்கிறார்கள். இந்தத் துறையின் மூலமே விற்றால், விலையைக் கட்டுப்படுத்த முடியும். அதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு சேஷசாயி பேப்பர் மில்லுக்கு மூங்கில் மரங்களை மிகக் குறைந்த விலைக்கு 51,000 டன் வழங்க 1972–73ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஒப்பந்தம் ஏதாவது செய்திருந்தால், அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, மூங்கில்களை ஏலத்தில் விட்டுவிட வேண்டும். அவர்களுக்கு வேண்டுமானால் ஏலம் எடுத்துக்கொள்ளட்டும். அப்படிச் செய்தால் அரசாங்கத்திற்குப் பெருமளவில் லாபம் கிடைக்கும்.

இப்போது பொதுமக்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமங்களில் குடியிருக்கிற ஏழை மக்களுக்கு வீடு கட்டுவதற்குக் கூட மூங்கில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கிடைத்தாலும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. கூரை போடுவதற்குக்கூட கிடைப்பதில்லை. இப்படி இருக்கும்போது பேப்பர் மில்லுக்கு ஏன் மிகக் குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டும்? அப்படி கொடுப்பதைவிட சேஷசாயி பேப்பர் மில்லை தேசியமயமாக்கி விடலாம். தேசியமயமாக்கி, காகித உற்பத்தியைப் பெருக்கினால் நாட்டு மக்கள் வரவேற்பார்கள். காகிதப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இந்தக் காலத்தில் அந்த மில்லை தேசியமயமாக்கினால் மக்களின் தேவைக்கு ஏற்றபடி காகித உற்பத்தியைப் பெருக்க முடியும்; தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் பகுதியில் சிறுமுகையில் உள்ள விஸ்கோஸ் ரெயான் தொழிற்சாலைக்கு ஏராளமான அளவில் கற்பூர மரங்களை சப்ளை செய்கிறோம். ஆனால் இந்த காடுகளிலிருந்து கேரளத்திலே இருக்கின்ற பிர்லாவுககுச் சொந்தமான ரெயான் தொழிற்சாலைக்கு ஏராளமான மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள். இங்கே அவர்களுக்குச் சொந்தமான காடுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தக் காடுகளிலிருந்து தான் மரங்களை வெட்டிச் செல்கிறார்களா அல்லது பக்கத்திலுள்ள நமக்குச் சொந்தமான காடுகளிலிருந்து வெட்டிச் செல்கிறார்களா என்பதை காட்டிலாகா கண்காணிக்க வேண்டும்.



அடுத்தபடியாக, ஒரு சில நாட்களுக்கு முன்னால் சத்தியமங்கலம் பகுதியில் சந்தனத் தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். பல்வேறு உறுப்பினர்கள் அந்த தொழிற்சாலையை தங்கள் தங்கள் தொகுதிக்குக் கொண்டுபோக முயற்சி செய்வார்கள். அப்படி முயற்சி செய்தாலும் சத்தியமங்கலம் பகுதியில் தான் அந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: சந்தன மரங்கள் இன்றைக்கு 80 சதவிகிதம் நாங்கள்தான் கொடுக்கிறோம் ஜவ்வாது மலையிலிருந்து. 80 சதவிகிதம் சந்தன மரத்தை அவர்கள் கொடுத்தால் அங்கே ஏற்படுத்துவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எங்களுடைய காடுகளிலிருந்து சந்தன மரங்களை வேறு எங்கும் கொண்டுசெல்லக் கூடாது என்பது எங்கள் கருத்து.

*திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறுவதைப்போல எந்தெந்த இடங்களில் அதிகமாக சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றனவோ, அதிகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதோ அங்கே சந்தனத் தைலத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். ஆனால், சத்தியமங்கலத்தில் கொள்கை அடிப்படையில் ஆரம்பிக்கலாம் என்று சொல்வது வருந்தத்தக்கது. பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு நீலகிரியில் வைப்பது நியாயமல்லவா?

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கோவை மாவட்டத்தில் கோபி, பவானி போன்ற வட்டங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகள். அங்கே உள்ள மக்கள் பெரிதும் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். சத்தியமங்கலம் தொழில்துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கே வேண்டும் என்று நான் கேட்கிறேன். 6 மாதம் தான் விவசாய வேலை இருக்கும். மீதமுள்ள 6 மாதம் அவர்களுக்கு வருமானம் கிடையாது. இதுபோன்ற பாக்டரி அங்கே இருந்தால் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் போக மீதமுள்ளவர்களுக்கு அதில் வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனால்தான் அங்கே வேண்டுமென்று சொல்கிறேனே அல்லாமல் வேறு எந்தவிதமான தப்பு அபிப்பிராயமும் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னும் நீலகிரி மலை, ஆனமலை போன்ற இடங்களில் தொடர்ந்து மரங்களை நட்டு, காடுகளை விரிவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வனத்துறையில் வேலை செய்கின்ற கடைநிலை ஊழியர்களது சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தால் நல்லது. காடுகளில் அவர்கள் எல்லாம் பல்வேறு சூழ்நிலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் சம்பளம் அலவன்சைச் கூட்ட வேண்டும். இன்னும் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, இலங்கையிலிருந்து வந்திருக்கிற அகதிகள் 500 பேர்களுக்கு தேயிலைத் தோட்டங்களிலும், கன்னியாகுமரி ரப்பர் தோட்டங்களிலும் வேலை அளிக்கிறோம் என்றாலும் இன்னும் எதிர் காலத்தில் வரக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க—ரப்பர் பிளான்டேஷனையும், தேயிலை பிளான்டேஷனையும் விரிவு படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கையில் இருந்து வருகிற அகதிகளுக்கு புனர்வாழ்வு அமைக்க கூடலூர் பகுதியில் காட்டுப்பகுதிகள் இருக்கின்றன. அங்கே அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்துத் தர யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வன விலங்குகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். முதுமலை போன்ற இடங்களில் உள்ள வனவிலங்குகளை—சாதாரண ஏழை எளிய மக்களும் சென்று பார்த்து வர ரோடு வசதிகள்—வாகன வசதிகள்—அவர்கள் அங்கே தங்குவதற்கான விடுதி வசதிகள் ஆகிய யாவும் செய்து தரப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூரில் ஸூவலாஜிகல் பார்க் ஏற்படுத்த இருப்பதை வரவேற்கிறேன். சென்னை சென்டிரலுக்கு அருகில் உள்ள ஸூவில் கூட—ரெயில் புகையினால் மிருகங்கள் பாதிக்கப்படுகின்றன—இதைத் தவிர்க்க அந்த முயற்சியைத் தீவிரப்படுத்தி இதை அந்த இடத்திற்கே கொண்டுபோக ஏற்பாடு செய்யவேண்டும்.

மத்திய அரசாங்க சட்டத்தை ஒட்டி நமது அரசும் 1974-ம் ஆண்டு சனவரித் திங்கள் 1-ம் நாள் முதல் மிருகங்களைச் சுடக்கூடாது—மிருகங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்கிற சட்டத்தை இங்கே நிறைவேற்றியிருப்பதை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

நம் மாநிலத்தில் உள்ள மொத்தப் பரப்பில் 16 சத விகிதம்தான் காடுகள் உள்ளன என்பதை அவரது உரையில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் எப்படி இந்த 16 சத விகிதத்தை அபிவிருத்தி செய்வது என்பதைப்பற்றியும் நமது வன இலாக்காவில் இருக்கின்றவர்கள் தீவிரமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இப்போது ரெவின்யூ இலாக்காவில் உள்ள நிலங்கள் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் சாகுபடிக்கு லாயக்கற்ற புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் காட்டு இலாக்காவினிடத்தில் கொடுத்துவிடலாம்.



அதுபோலவே, சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் காட்டு இலாக்காவினிடம் இருக்கின்றன. அவற்றை அவர்கள் விவசாய இலாக்காவிடத்தில் கொடுத்தால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். கிவ் அண்டு டேக் ( give and take ) பாலிசிப்படி—இப்படி சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களைக் கொடுத்து வாங்கிக்கொள்கிற முறையைப் பின்பற்ற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டு இலாக்கா இதுவரை இருந்ததுபோல இல்லாமல் இன்னும் துரிதமாகச் செயல்பட ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அதற்காக பல்வேறு திட்டங்கள் அமைக்கப்படுவதை வரவேற்கிறேன். தொழில் துறைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை இந்த இலாக்காதான் அளிக்கிறது. குறிப்பாக காகிதம், அட்டை, ரயான், தோல் பதனிடும் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை காட்டு இலாக்கா அளிக்கிறது. மேலும் வனத்துறையில் இருந்துதான் தழை உரங்கள் அதிகமாக அளிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் பாசனக் கால்வாய்களில் மரங்களை உற்பத்தி செய்து அந்தப் பகுதியில் அவை நல்லமுறையில் பயன்படச் செய்கிறார்கள்.

குறிப்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் காட்டு இலாக்கா மூலமாக விவசாயப் பண்ணைகளை அமைத்து—தேக்கு, புளி, மா, பலா போன்ற கனி தரும் மரங்களையும், விறகு மரங்களையும் சாகுபடி செய்வதற்கு வேண்டிய செடிகளைக் கொடுத்து உதவி செய்யவேண்டும்.

அதேபோல இன்றையதினம் சாலை ஓரங்களில் பொதுப்பணித் துறையினர் மரங்களை நடுகிறார்கள். இந்தக் காரியத்தை வன இலாக்காவிடமே ஒப்படைத்து விடலாம். அதுபோல வன இலாக்காவினர் தங்கள் துறைக்கான கட்டிடங்களை அவர்களே கட்டிக்கொள்கிறார்கள்—அப்படியின்றி இந்தக் கட்டிடங்களைக் கட்டும் பொறுப்பை பொதுப்பணித் துறையினரிடமே விட்டுவிடவேண்டும்.

இன்னும் காட்டு இலாக்காவில் பணியாற்றுகிறவர்களுக்கு தினக்கூலி 2 ரூபாய் கொடுக்கப்படுகிறது. பொதுப்பணித்துறையில் பணியாற்றுகிற தினக்கூலிகளுக்கு 4 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதுபோலவே வனத் துறையில் பணியாற்றுகிற தினக்கூலிகளுக்கும் 4 ரூபாய் கொடுக்க வேண்டும்.

இன்னும் வனத்துறையில் நடைபெறுகிற திருட்டுகளைத் தடுக்க ரேஞ்சு ஆபீசர்களுக்கு ஜீப்புகள் வேண்டும். இன்றைக்கு வாகன வசதி கிடையாது. 91 டெரிடோரியல் ரேஞ்சுகள் இருக்கின்றன. ஆக இங்குள்ளவர்கள் திறமையாகப் பணியாற்ற ஜீப்புகள் வழங்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பலமுறை இந்த வனத்துறையைப் பற்றிப் பேசுகிறபோது அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இன்றையதினம் 2-வது ஊதியக் கமிஷனின் பரிந்துரைகள் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். வனத்துறை அதிகாரிகளும் போலீஸ்துறை அதிகாரிகளைப்போலவே பணியாற்றுகிறார்கள். போலீஸ் துறை காவலர்களுடைய நிலைமையை ஆராய்ந்தறிய கமிஷன் போட்டது போலவே இவர்களுக்கும் ஒரு கமிஷன் போட்டு—இவர்களது சம்பளத்தை எல்லாம் உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத்துறையில் கிடைக்கிற சந்தன மரங்களில் மூன்றில் 2 பங்கு சந்தன மரங்கள் வடாற்காடு மாவட்டத்தில் கிடைக்கின்றன. இது அனைவருக்கும் தெரிந்தது. நூற்றில் 80 சத விகிதம் வடாற்காடு மாவட்டத்தில்தான் கிடைக்கிறது. அது திருட்டுப்போகாமல் இருக்க சந்தன மரத் திருட்டைக் கண்டுபிடிக்கிற வனத்துறை அதிகாரிகளை உற்சாகப்படுத்த வேண்டும்.

இன்றைக்கு பரிசாக 25 ரூபாய் கொடுப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் அதை உயர்த்தித்தர யோசிப்பதாக சென்ற ஆண்டே சொன்னார்கள். இதுவரை எந்த உத்தரவும் பிறப்பித்திருப்பதாகத் தெரியவில்லை.

மெரிட் சர்டிபிகேட் கொடுத்துப் பயன் இல்லை. இதுபோன்ற சந்தன மரத் திருட்டுகளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு மெரிட் சர்டிபிகேட்டோடு—பதவி உயர்வு, சம்பள உயர்வு—இன்னும் முதலமைச்சர் நிதியில் இருந்து மூவாயிரம் ரொக்கப் பரிசு என்கிற அளவில் கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஹைப்ரீட் யூகலிப்டஸ் மரங்களை தொழிற்சாலைக்கு டன் 22 ரூபாய் வீதம் கொடுப்பதாகத் தெரிகிறது. அது வெளியில் 50 ரூபாய் விலை. அதன் விலையைக் கொஞ்சம் உயர்த்திப் பெறுவதற்கு காட்டு இலாக்கா முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட ஃபாரஸ்ட் ரிசர்வ் வாச்சர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று கூறினார்கள். நண்பர் பழனியப்பன் கூட அதைப்பற்றி கூறினார்கள். அந்த கோரிக்கைகள் இரண்டாவது ஊதியக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அமைச்சர் அவர்கள் அந்தக் குறைகளையெல்லாம் போக்குவார்கள் என்று கருதுகிறேன்.

ஃபாரஸ்டு கார்டுகள் நேரடித் தேர்வுக்கு எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்களை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஃபாரஸ்டர் பதவிக்கு நேரடி தேர்வு செய்யும்போது கல்வித் தகுதி பி.யு.ஸி. என்று உயர்த்துதல் வேண்டும். இதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போலவே பாரஸ்டர்களுக்கும், பாரஸ்ட் ரேஞ்சர்களுக்கும் இடையில் டெபுடி ரேஞ்சர் என்ற ஒரு பதவியை உருவாக்கலாம். இதைச் செய்தால் அது நிர்வாகத்திற்கு வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பாரஸ்ட் ரேஞ்சர்களை கெசட்டட் ஆபீசர்களாக அறிவிப்பதற்கு எந்த விதமான நிதிப் பிரச்னையும் குறுக்கிடவில்லை. ஆகவே இதை அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இப்போது வனத்துறையை மேலும் முனைப்புடனும், வனப்புடனும் ஆக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நான் பாராட்டுகிறேன். அதோடு வனத்துறை வருவாயைப் பெருக்கவும், வனத்துறையில் மேலும் வேலை வாய்ப்பை உருவாக்கும் விதத்திலும் நல்ல திட்டங்களை உருவாக்கி செயல்பட வேண்டுகிறேன்.

பாரஸ்ட் இலாகாவில் பாரஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற இலாகாவை உருவாக்குவதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். பாரஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனை உருவாக்கி அதன்மூலம் நல்ல தொழிற்சாலைகளையும், வேலை வாய்ப்பையும் உருவாக்குவதற்கு அந்த இலாகாவை அமைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

வேலூருக்கு அருகிலுள்ள அமிர்தி மலையில் பிராணியியல் பூங்கா ஒன்றை அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை அமைத்தால் சுற்றுலா செல்பவர்களுக்கு கவர்ச்சியாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

அதைப்போலவே ஜவ்வாது மலையிலும் ஒரு பிராணி இயல் பூங்காவை ஏற்படுத்தவேண்டும்.

வனத்துறையின் வருவாய் 1972–73-ல் 491 லட்சம் ரூபாயாக இருந்தது. 1973–74-ல் அதாவது 515 லட்சம் ரூபாய் கிடைக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. இவ்வாறு வனத்துறை லாபகரமாக இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன்.

மேலும் சில ஆலோசனைகளை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் செடிப் பண்ணைகள் நிறுவி அதிலிருந்து கனி தரும் மரங்களையும், விறகுக்கான மரங்களையும் உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

நண்பர் பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ( Forest Timber Depot ) பாரஸ்ட் டிம்பர் டிப்போக்களை நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மாவட்டந்தோறும் பாரஸ்ட் பர்னிச்சர் ஒர்க்ஸ் (Forest Furniture Works) வனத்துறை மரத் தொழிற்சாலை மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் ஒரு பெரிய தொழிற்சாலையாக நிறுவுவதன் மூலம் காட்டிலாகா மரங்களைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும்.

சந்தன மரத்திலிருந்து பல்வேறு வாசனைப் பொருள்களைத் தயாரித்து அதன் மூலம் வனத் துறையின் லாபத்தைப் பெருக்கிக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு ஆலையை ஏற்படுத்தி அதிலே வாசனைப் பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னியச் செலாவணி ஈட்டு வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சில தனியாரிடத்திலிருக்கிற காடுகளையெல்லாம் வன இலாகாவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதைப்போலவே சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களில் முந்திரி மரங்களை வைத்துப் பயிரிட வேண்டும்.

வனங்களில் வேட்டையாடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்படி தண்டித்தால்தான் வனத்துறைக்கும், வனவிலங்குகளுக்கும் தக்க பாதுகாப்பு இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு வளம் பெருகினால் நாட்டு வளம் பெருகும் என்பதைக் கருத்தில் கொண்டு மேலும் காட்டிலாகாவை நாட்டு மக்களுக்குப் பயன் தரும் ஒரு இலாகாவாக்க புத்துணர்ச்சியும், புது வேகமும் அளித்து உருவாக்க வேண்டும்.

மேலும், வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு ( **Promotion** ) பல ஆண்டுகளுக்குப் பிறகுகூட கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்றி இந்த இலாகாவிலும் மற்றத் துறைகளில் உள்ளதைப் போல் விரைவில் பதவி உயர்வுகள் அளித்து வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒடுகத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் (**Primary Health Centre** ) கட்டுவதற்கு ஒரு இடத்தைக் காட்டிலாகா அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் நிலத்தைக் கொடுத்து உதவுவார்கள் என்று நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு இந்த வனத்துறை மானியத்தை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : தலைவரவர்களே, இந்த அவையின் முன்னிருக்கும் இந்த மானியங்கள் மீது, குறிப்பாக சிங்கோனா துறையைப் பற்றி நான் எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.



சிங்கோனா துறையைப் பற்றி அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்தத் துறைக்கு வேண்டிய ஊக்கம் தருவதாக அதைப் பற்றியெல்லாம் அதிலே விளக்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும் கூட, இந்தத் துறைக்குக் கொடுக்கும் ஊக்கம் போதுமா என்று பார்க்கும்போது இதிலே நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன் ஏனென்று சொன்னால், சாதாரணமான ஒரு வனத்துறையாக ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட தற்போது இந்த ஸ்தாபனத்திற்கு இருக்கிற முக்கியத்துவம் வரவர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த ஸ்தாபனத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டக்கூடிய வகையிலே நாம் செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக மலேரியாவுக்கு வேண்டிய மருந்தைத் தயாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை இன்றையதினம் மேலும் விரிவடைந்து நம் நாட்டிலே இருக்கிற மருந்துகள், ஆயில் சீட்ஸ் இவைகளை உற்பத்தி செய்கிற வகையிலே விரிவடைந்து வருகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையில் விரிவுபடுத்தி அதன் மூலம் நம் நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகப்படுத்துவதற்கு அதிக வேகம் தர வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். நம் நாட்டிலே ஏராளமான மூலிகைகள் இருந்தன. அதை வைத்துக்கொண்டு அசாதாரணமான மருந்துகளையெல்லாம் கண்டுபிடித்து விட்டார்கள். இப்போது அவை இங்கே கிடைக்கவில்லை. அவையெல்லாம் ஜெர்மனியிலே இருக்கிறவர்கள் கண்டுபிடித்து அவர்கள் இங்கே கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம்.

அந்த நிலைமை மாறி நம் நாட்டிலேயே இருக்கிற அரசு அலுவலர்கள் அந்த ஆராய்ச்சித் துறையிலே அதிகம் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். இந்தத் துறையை மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது, அதற்கு நாம் வேலி போட்டுவிடாமல் இன்னும் அதிகமான உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கு இதுவரையில் என்ன செய்திருக்கிறோம் என்று பார்க்கும்பொழுது ஒன்றுமேயில்லை என்றுதான் தெரிகிறது.

நடுவட்டத்திலே இருக்கிற ரிசர்ச் ஸ்டேஷனை நாங்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். அங்கே மருந்துப் பொருட்கள், வாசனைத் தைலங்கள் தயாரிக்கிறார்கள். விஞ்ஞானிகள்கூட கண்டுபிடிக்க முடியாத பொருள்களையெல்லாம் தயாரிக்கிறார்கள்.

அதைப்போலவே மாவட்டந்தோறும் பாரஸ்ட் பர்னிச்சர் ஒர்க்ஸ் (Forest Furniture Works) வனத்துறை மரத் தொழிற்சாலை மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் ஒரு பெரிய தொழிற்சாலையாக நிறுவுவதன் மூலம் காட்டிலாகா மரங்களைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும்.

சந்தன மரத்திலிருந்து பல்வேறு வாசனைப் பொருள்களைத் தயாரித்து அதன் மூலம் வனத் துறையின் லாபத்தைப் பெருக்கிக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு ஆலையை ஏற்படுத்தி அதிலே வாசனைப் பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னியச் செலாவணி ஈட்டு வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சில தனியாரிடத்திலிருக்கிற காடுகளையெல்லாம் வன இலாகாவே எடுத் துக் கொள்ள வேண்டும்.

அதைப்போலவே சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களில் முந்திரி மரங்களை வைத்துப் பயிரிட வேண்டும்.

வனங்களில் வேட்டையாடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்படி தண்டித்தால்தான் வனத்துறைக்கும், வனவிலங்குகளுக்கும் தக்க பாதுகாப்பு இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு வளம் பெருகினால் நாட்டு வளம் பெருகும் என்பதைக் கருத் தில் கொண்டு மேலும் காட்டிலாகாவை நாட்டு மக்களுக்குப் பயன் தரும் ஒரு இலாகாவாக்க புத்துணர்ச்சியும், புது வேகமும் அளித்து உருவாக்க வேண்டும்.

மேலும், வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு ( Promotion ) பல ஆண்டுகளுக்குப் பிறகுகூட கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்றி இந்த இலாகாவிலும் மற்றத் துறைகளில் உள்ள தைப் போல் விரைவில் பதவி உயர்வுகள் அளித்து வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒடுகத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலை யம் (Primary Health Centre ) கட்டுவதற்கு ஒரு இடத்தைக் காட் டிலாகா அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் நிலத்தைக் கொடுத்து உதவுவார்கள் என்று நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு இந்த வனத்துறை மானியத்தை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : தலைவரவர்களே, இந்த அவையின் முன்னிருக்கும் இந்த மானியங்கள் மீது, குறிப்பாக சிங்கோனா துறையைப் பற்றி நான் எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.



சிங்கோனா துறையைப் பற்றி அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக் கையைப் படித்துப் பார்த்தேன். அந்தத் துறைக்கு வேண்டிய ஊக்கம் தருவதாக அதைப் பற்றியெல்லாம் அதிலே விளக்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும் கூட, இந்தத் துறைக்குக் கொடுக்கும் ஊக்கம் போதுமா என்று பார்க்கும்போது இதிலே நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டு மென்று குறிப்பிட விரும்புகிறேன் ஏனென்று சொன்னால், சாதாரண மான ஒரு வனத்துறையாக ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப் பட்டாலும் கூட தற்போது இந்த ஸ்தாபனத்திற்கு இருக்கிற முக்கியத்துவம் வரவர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த ஸ்தாபனத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டக்கூடிய வகை யிலே நாம் செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

சாதாரணமாக மலேரியாவுக்கு வேண்டிய மருந்தைத் தயாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை இன்றையதினம் மேலும் விரிவடைந்து நம் நாட்டிலே இருக்கிற மருந்துகள், ஆயில் சீட்ஸ் இவைகளை உற்பத்தி செய்கிற வகையிலே விரிவடைந்து வருகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையில் விரிவுபடுத்தி அதன் மூலம் நம் நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகப்படுத்துவதற்கு அதிக வேகம் தர வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். நம் நாட்டிலே ஏராளமான மூலிகைகள் இருந்தன. அதை வைத்துக்கொண்டு அசாதாரணமான மருந்துகளையெல்லாம் கண்டுபிடித்து விட்டார்கள். இப் போது அவை இங்கே கிடைக்கவில்லை. அவையெல்லாம் ஜெர்மனியிலே இருக்கிறவர்கள் கண்டுபிடித்து அவர்கள் இங்கே கொண்டுவந்து கொடுக் கிறார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம்.

அந்த நிலைமை மாறி நம் நாட்டிலேயே இருக்கிற அரசு அலுவலர்கள் அந்த ஆராய்ச்சித் துறையிலே அதிகம் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். இந்தத் துறையை மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது, அதற்கு நாம் வேலி போட்டு விடாமல் இன்னும் அதிகமான உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கு இது வரையில் என்ன செய்திருக்கிறோம் என்று பார்க்கும்பொழுது ஒன்றுமே யில்லை என்றுதான் தெரிகிறது.

நடுவட்டத்திலே இருக்கிற ரிசர்ச் ஸ்டேஷனை நாங்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். அங்கே மருந்துப் பொருட்கள், வாசனைத் தைலங்கள் தயாரிக்கிறார்கள். விஞ்ஞானிகள்கூட கண்டுபிடிக்க முடியாத பொருள் களையெல்லாம் தயாரிக்கிறார்கள்.

அதைப்போலவே மாவட்டந்தோறும் பாரஸ்ட் பர்னிச்சர் ஒர்க்ஸ் (**Forest Furniture Works**) வனத்துறை மரத் தொழிற்சாலை மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் ஒரு பெரிய தொழிற்சாலையாக நிறுவுவதன் மூலம் காட்டிலாகா மரங்களைப் பயன்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும்.

சந்தன மரத்திலிருந்து பல்வேறு வாசனைப் பொருள்களைத் தயாரித்து அதன் மூலம் வனத் துறையின் லாபத்தைப் பெருக்கிக்கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு ஆலையை ஏற்படுத்தி அதிலே வாசனைப் பொருள்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னியச் செலாவணி ஈட்டுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சில தனியாரிடத்திலிருக்கிற காடுகளையெல்லாம் வன இலாகாவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதைப்போலவே சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களில் முந்திரி மரங்களை வைத்துப் பயிரிட வேண்டும்.

வனங்களில் வேட்டையாடுபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். அப்படி தண்டித்தால்தான் வனத்துறைக்கும், வனவிலங்குகளுக்கும் தக்க பாதுகாப்பு இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டு வளம் பெருகினால் நாட்டு வளம் பெருகும் என்பதைக் கருத்தில் கொண்டு மேலும் காட்டிலாகாவை நாட்டு மக்களுக்குப் பயன் தரும் ஒரு இலாகாவாக்க புத்துணர்ச்சியும், புது வேகமும் அளித்து உருவாக்க வேண்டும்.

மேலும், வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு பதவி உயர்வு ( **Promotion** ) பல ஆண்டுகளுக்குப் பிறகுகூட கிடைப்பதில்லை. இந்த நிலையை மாற்றி இந்த இலாகாவிலும் மற்றத் துறைகளில் உள்ளதைப் போல் விரைவில் பதவி உயர்வுகள் அளித்து வனத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒடுகத்தூரிலே ஆரம்ப சுகாதார நிலையம் (**Primary Health Centre**) கட்டுவதற்கு ஒரு இடத்தைக் காட்டிலாகா அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அதற்கு அவர்கள் நிலத்தைக் கொடுத்து உதவுவார்கள் என்று நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு இந்த வனத்துறை மானியத்தை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : தலைவரவர்களே, இந்த அவையின் முன்னிருக்கும் இந்த மானியங்கள் மீது, குறிப்பாக சிங்கோனா துறையைப் பற்றி நான் எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.



சிங்கோனா துறையைப் பற்றி அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்தத் துறைக்கு வேண்டிய ஊக்கம் தருவதாக அதைப் பற்றியெல்லாம் அதிலே விளக்கியிருக்கிறார்கள்.

இருந்தாலும் கூட, இந்தத் துறைக்குக் கொடுக்கும் ஊக்கம் போதுமா என்று பார்க்கும்போது இதிலே நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன் ஏனென்று சொன்னால், சாதாரணமான ஒரு வனத்துறையாக ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட தற்போது இந்த ஸ்தாபனத்திற்கு இருக்கிற முக்கியத்துவம் வரவர அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த ஸ்தாபனத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டக்கூடிய வகையிலே நாம் செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக மலேரியாவுக்கு வேண்டிய மருந்தைத் தயாரிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துறை இன்றையதினம் மேலும் விரிவடைந்து நம் நாட்டிலே இருக்கிற மருந்துகள், ஆயில் சீட்ஸ் இவைகளை உற்பத்தி செய்கிற வகையிலே விரிவடைந்து வருகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையில் விரிவுபடுத்தி அதன் மூலம் நம் நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகப்படுத்துவதற்கு அதிக வேகம் தர வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். நம் நாட்டிலே ஏராளமான மூலிகைகள் இருந்தன. அதை வைத்துக்கொண்டு அசாதாரணமான மருந்துகளையெல்லாம் கண்டுபிடித்து விட்டார்கள். இப்போது அவை இங்கே கிடைக்கவில்லை. அவையெல்லாம் ஜெர்மனியிலே இருக்கிறவர்கள் கண்டுபிடித்து அவர்கள் இங்கே கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம்.

அந்த நிலைமை மாறி நம் நாட்டிலேயே இருக்கிற அரசு அலுவலர்கள் அந்த ஆராய்ச்சித் துறையிலே அதிகம் ஈடுபடுவதற்காக அவர்களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். இந்தத் துறையை மேலும் மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒன்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறது, அதற்கு நாம் வேலி போட்டு விடாமல் இன்னும் அதிகமான உற்சாகத்தை ஏற்படுத்துவதற்கு இது வரையில் என்ன செய்திருக்கிறோம் என்று பார்க்கும்பொழுது ஒன்றுமே யில்லை என்றுதான் தெரிகிறது.

நடுவட்டத்திலே இருக்கிற ரிசர்ச் ஸ்டேஷனை நாங்கள் எல்லாம் போய்ப் பார்த்தோம். அங்கே மருந்துப் பொருட்கள், வாசனைத் தைலங்கள் தயாரிக்கிறார்கள். விஞ்ஞானிகள்கூட கண்டுபிடிக்க முடியாத பொருள்களையெல்லாம் தயாரிக்கிறார்கள்.

நான் ஏற்கனவே சொன்னேன், நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள பல மூலிகைகளைக் கொண்டுபோய் வெளி நாட்டுக்காரர்கள் மருந்துகளை நமக்கு அனுப்பி வருகிறார்கள். ஆகவே, நம்முடைய நாட்டிலிருந்து மேல் நாடுகளுக்கு அனுப்பி, அங்கே அவர்கள் கண்டுவர ஏற்பாடு செய்தால் அதன் மூலம் அவர்களுக்கு உற்சாகமும் ஏற்படும்.

அது மட்டுமல்ல, நமக்கும் நமது நாட்டிற்கும் அதிகமான நன்மைகள் கிடைக்கும்.

ரிசர்ச் துறையிலே அவர்கள் மூலிகைகளை உற்பத்தி செய்வதன் மூலமாக நல்ல முறையிலே மூலிகைகளை உற்பத்தி செய்வதற்கும், மேலும் அதிகமான மருந்துகளைத் தேடிப் பிடிப்பதற்கும் வாய்ப்பு இருக்கும்.

அது மட்டுமல்ல, எந்த எந்த மூலிகைகளையெல்லாம் பயிர் செய்வதற்கு அனுமதிக்க முடியும் என்பதையும் ஆராய வேண்டும். இதுவரையிலே பழங்காலத்திலே எப்படி இருந்ததோ அதே மாதிரிதான் இப்போதும் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள். இன்னும் அதிகமான ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்க வேண்டும்.

அமைச்சர் அவர்கள் நான் சொல்வதைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையிலே பிளான்டேஷன்ஸ், மருந்துத் தைலங்கள், வாசனைத் தைலங்கள் கிடைக்கிற பயிர்களைப் போடுகிறோம். மூலிகைகளையும் தயார் செய்யக் கூடிய, பயிர் செய்யக்கூடிய முறை இருக்கிறதா என்று ஆராய்ந்து அந்த முறையிலேயும் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும்.

நண்பர் லத்தீப் அவர்கள் அடிக்கடி இங்கே அவர்களுடைய ஜவ்வாது மலையைப் பற்றிச் சொல்வார்கள். நண்பர் அவர்கள் டெங்கனிக்கோட்டாவைப் பற்றிச் சொல்வார்கள். இரண்டு இடங்களிலேயும் மூலிகைகள் புதிதாகப் பயிர் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

மதுரை ஜில்லாவிலேயும் பல மலைகள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் இந்த பிளான்டேஷன்களைக் கொண்டுவர முயற்சியெடுக்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு முன்னால் என்ன வசதி இருந்தது, இப்பொழுது என்ன வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது, இனிமேல் என்ன வசதிகளைக் கொடுக்கப் போகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் இதிலே இருக்கிறதா என்று பார்த்தேன், ஒன்றும் இல்லை.

அரசுத் துறையிலே இதை ஒரு வணிக ஸ்தாபனம் என்று பார்க்கக் கூடாது. அரசுத் துறையிலே வணிக ஸ்தாபனத்திலே லாபம் ஈட்டப்படுவதில்லை என்று சொல்வார்கள். இதிலே 5·11 லட்சம் லாபம் என்று கொடுத்திருக்கிறார்கள். மற்ற எல்லாவற்றையும் சேர்த்து 33 லட்சம் ரூபாய் லாபம் என்று கூட சொன்னாலும் இது லாபத்திலே நடத்தப்பட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதை ஒரு வணிக ஸ்தாபனமாக



வைத்துக்கொள்வதை விட ரிசர்ச் ஸ்தாபனமாக மாற்ற வேண்டும். அந்த வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, காட்டு இலாகா சம்பந்தமான அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிற டிமாண்டின் பேரிலே என்னுடைய கட்சியின் சார்பிலே சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டு இலாகா தேசிய செல்வத்தைக் கொடுக்கக் கூடிய, வளர்க்கக் கூடிய, அன்னிய செலாவணியை அதுபோன்ற செல்வங்களைக் கொடுக்கக் கூடிய ஒரு மானியமாக இருந்தாலும் அதே நேரத்திலே பல மூலப் பொருட்களைக் கொடுத்து நம்முடைய தொழில்களை உருவாக்குகின்ற ஒன்றாக இருக்கிறது என்பதை எனக்கு முன்பே பேசிய நண்பர்கள் எல்லாம் தெளிவாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள், நம்முடைய காடுகள் இன்றைக்கு இருக்க வேண்டிய அளவிற்கு இல்லை. காரணம், பூமியினுடைய மொத்த பரப்பு நிலத்திலே ஒரு பங்கு காடாக இருக்க வேண்டும், இரண்டு பங்கு விவசாய நிலமாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இயற்கையின் சூழ்நிலைக்கொப்ப நல்ல மழை பெய்து அதனால் இரண்டு பங்கு விவசாய நிலங்களை விவசாயம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள்.

பதினாறு சதவீதம் காடுகள் இங்கே இருக்கிறது என்று சொன்னார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையிலே மனிதன் கால் வைக்கக்கூடிய அளவிற்கு எங்காவது ஒரு குறுகிய இடம் கிடைத்தாலும் போதும், அங்கே அந்தக் காட்டையழித்து விவசாயம் செய்யக்கூடிய முறை அதிகமாகப் போய் விட்டது. அதை யாரும் தடுக்கவில்லை. அதனால் வனங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன என்பது உண்மை. அதைப்பற்றி அமைச்சர் அவர்களோ அல்லது அந்தத் துறை அதிகாரிகளோ கண்காணிப்பதில்லை. இதனுடைய விளைவு என்ன ஆகும்?

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே 1962 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டுவரையில் மழைபெய்த ஒரு கணக்கைப் பார்த்தால் 1962 ஆம் ஆண்டிலே 400 அங்குல மழை பெய்தது. இன்றைக்கு 84 அங்குல மழை அளவிற்குத்தான் பெய்கிறது என்று பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் காடுகள் அழிக்கப்பட்டதுதான்.

சிறுவாணித் தடத்திலேயும், வெள்ளயங்கிரி மலையிலே குறுக்கே ஒரு ஆறு ஓடியது முன்பு. இன்றைக்கு அந்த ஆறே வறண்டு போய்விட்டது. அங்கே ஒரு பாரஸ்டே அழிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஆண்டுக்காண்டு காடுகளுடைய சேதம் அதிகமாகி அதிகமாகி 10 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிறபோது தான் அது எவ்வளவு அத்தியாவசியம் என்பது தெரியவரும். அதைப்பற்றி முக்கியமான கவனம் எடுத்துக் கொண்டு காடுகளை வளர்ப்பதற்கு நம்மால் முடியவதில்லை.

சில நிபுணர்கள் சொல்கிறார்கள். ஊட்டி மலையிலே கற்பூர மரங்களை விளைவிப்பதால் அந்த மரங்கள் பூமிக்கடியில் 150 அடி ஆழத்திலிருந்து தண்ணீரை—அந்த மரங்களுக்கு ஈரப்பசையை இழுக்கக்கூடிய சக்தி இருக்கிறது என்று சொல்கிறார்கள்—இழுத்து வெளியே விடுகின்றன என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஈரப்பசையை இழுக்கின்ற மரங்களை அங்கே தொடர்ந்து விளைவித்தால் அதனால் அந்தப் பகுதியிலே வறண்ட பகுதியாக வந்துவிடும். ஆகவே, அப்படிப்பட்ட மரங்களைப் பயிரிடக் கூடாது என்ற முறையிலே தடை செய்ய வேண்டும்.

ரேயான் பேக்டரிக்கு கூழ் உற்பத்தி செய்கிற நிலைமை பல்வேறு மரங்களிலேயிருந்து கிடைப்பதாகத் தெரிகிறது. நாம் அந்த மரங்களை இரண்டாயிரம் ஏக்கர், மூவாயிரம் ஏக்கர் என்ற அளவிற்குத்தான் கொடுக்கிறோம். ஆனால், அதை வாங்கி தயாரித்து விற்கிற அந்த பேக்டரிக்கு ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் கிடைக்கிறது லாபம் என்று சொன்னால்-அது நல்ல கணக்காக இருந்தால்தான், திருட்டுக் கணக்காக இருந்தால் எத்தனை கோடி லாபமோ தெரியாது—நாம் மூலப் பொருள்களைக் கொடுக்கிறோம்.

நாம் அந்த மூலப்பொருள்களுக்கு விலையை அதிகப்படுத்தக் கூடாதா என்பதைப் பார்க்க வேண்டும். காடுகளிலே ஏராளமான சந்தனக் கட்டைகள் உற்பத்தியாகின்றன. லட்சக்கணக்கான கட்டைகள் கடத்தப்படுகின்றன. அதை இலாகா தடை செய்வதில்லை. விஜிலன்ஸ் இலாகா பிடித்தாலும் எப்படியாவது கேஸ் இல்லாமல் செய்வதும், அதிகாரிகளை மாற்றம் செய்வதும் இப்படி ஏராளமான சந்தனக் கட்டைகள் கடத்தப்படுவதாக பொது மக்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதை எப்படித் தடுக்க முடியும்?

காட்டிற்கு, பரந்த காடுகளுக்கு ஒரு வேலி போட்டுத் தடுத்து நிறுத்த முடியாது. அதைத் தடுக்க புது முறைகளைக் கண்டுபிடித்து தடுத்து நிறுத்தியாக வேண்டும். காண்ட்ராக்டர்கள் இருக்கிறார்களே அவர்கள் காடுகள் தங்களுடைய சொத்து என்று நினைத்துக்கொள்கிறார்கள்.

அவர்கள் வறண்ட மரங்களைத் தான் வெட்ட வேண்டுமே தவிர இளம் மரங்களை வெட்டக் கூடாது. ஒரு வயது குறிப்பிட்டிருக்கிறார்கள் மரங்களுக்கு. அந்த வயதிற்கு மேல் தான் வெட்ட வேண்டும். ஆனால், அவர்கள் காய்ந்த மரங்களையா வெட்டுகிறார்கள். ஒரு லாரிக்கு பர்மிட் வாங்கிக் கொண்டு 20 லாரிகளில் கொண்டு போகிறார்கள். பகலிலே வெட்டிவிட்டு இரவு 12 மணிக்கு மேலே கடத்துகிறார்கள்.

ஒரு லாரிக்கு பர்மிட் வைத்துக்கொண்டு 15, 20 லாரிகளில் கடத்துகிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள். அதைக் கேட்பதற்கு ஆள் இல்லை. இப்படிக் கொள்ளையடிக்கிறார்கள். மூங்கிலை சேஷசாயி பேப்பர் மில்லுக்கு குறைந்த விலைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அந்த மில்லில் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஏன் அங்கு குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டும் என்றால் உற்பத்தித் தொழில் நடப்பதற்காகக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள்.



அவர்கள் கொள்ளையடிக்கின்ற லாபம் அரசாங்கத்திற்கு வருகிறதா என்றால் இல்லை. அப்படி அவர்களுக்குக் குறைந்த விலைக்கு அரசாங்கம் கொடுப்பதைவிட அரசாங்கமே மூலப்பொருட்களை உண்டாக்கிச் செய்தால் லாபம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும். இந்த சந்தன மரத் தொழிற்சாலைகளை அரசாங்கம் உண்டாக்கினால் எவ்வளவோ லாபம் கிடைக்கும். அதைத் தனி நபர்களுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு 50,000 டன் மரங்களுக்கு நாம் அனுமதி கொடுத்தால் அவர்கள் அதில் புகுந்து விளையாடுகிறார்கள். அவர்கள் 60,000 டன் எடுத்துக் கொண்டு சென்றால்கூட கேட்பதற்கு ஆள் இல்லை. எல்லாம் கணக்குதான். ஆனால் அவர்கள் காட்டை அழிக்கிறார்கள். இதற்கு ஒரு கட்டுமானம் கிடையாதா?

காட்டிலே உள்ள மரங்களில் வறண்ட மரங்களைத் தான் வெட்ட வேண்டுமே தவிர பலன் தரும் மரங்களை வெட்டக்கூடாது.

புளிய மரங்களை காட்டிலிருந்து வெட்டி வருகிறார்கள். அது பலன் தரும் மரமல்லவா? அதற்கு ஏன் அனுமதிக்கிறார்கள்? ஏராளமான புளி நமக்குக் காட்டிலேயிருந்து கிடைக்கிறது. அது தமிழகத்தின் உணவுப் பொருட்களில் சம்பந்தப்பட்டது. அந்தப் புளிய மரங்கள் அழிக்கப்படுகின்றன. அதை விறகுக்காக வெட்டிக் கொண்டு போகிறார்கள். பலன் தராத மரங்களை வெட்டுவதைப் பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் பலன் தருகின்ற மரங்களை வெட்டினால் அதைத் தடுப்பதற்கு காட்டி லாக்கா என்ன செய்கிறது? இதைக் கண்டிக்காமல் இருப்பது சரிதானா? ஏராளமான லாபம் கிடைக்கிறது, வரவு—செலவுத் திட்டத்தில் லாபகரமாக இருக்கும் தொழில் என்று அரசாங்கம் மெச்சினால், அமைச்சர்களும் லாபம் வந்துவிட்டது என்ற முறையில் சொன்னால் காடுகளைப் பாதுகாத்து வளர்க்கின்ற திட்டத்திலிருந்து நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டோம் என்ற பொருளே தவிர, கணக்குச் சொல்வதில் பயனில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காடுகளுக்குப் பக்கத்தில் நிலம் கிடைத்தால் விவசாயம் செய்யலாம் என்று விவசாயிகள் நினைக்கிறார்கள். அப்படி அவர்கள் நினைப்பதிலும் தப்பு இல்லை. ஆனால் விவசாயம் செய்வதற்காக மரங்களை மட்டும் வெட்டிக்கொண்டு போனால் காடுகள் சுருங்கிக்கொண்டு போகுமே தவிர காடுகள் வளராது.

காடுகள் பதினாறு சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் கூட நாளைக்குப் போனாலும் போகலாம். ஏராளமான பூமி இருக்கிறது. அங்கெல்லாம் தண்ணீர் சம்பந்தமான பிரச்னைகளை உருவாக்கினால் அங்கேயே விவசாயம் செய்வதற்குத் தயாராக இருப்பார்கள், மலைகளுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. ஆனால் பூமி வறட்சிப் பகுதியாக இருப்பதால்தான் அங்கே போகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். பெரிய கூடலூர் ஃபாரஸ்டை அழித்தாகிவிட்டது. விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தாகிவிட்டது.

[திரு. கே. என். குமாரசாமி] [1974 மார்ச் 30

இப்படி ஃபாரஸ்ட் அழிந்துவிட்டால் மழை கிடையாது. கேரளாவில் ஒரு ஃபாரஸ்ட் இருந்தது. நமக்குப் பக்கத்தில் வாளையார் ஃபாரஸ்ட் அது பாலக்காட்டில் இருந்தது, அழிக்கப்பட்டு விட்டது. இப்பொழுது அந்த ஃபாரஸ்ட் அந்தஸ்தில் இல்லை. எதிர்காலத்தில் காடு எவ்வளவு முக்கியத்தும் வாய்ந்தது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். ஏனென்றால் வனம் வளர்ந்து குளிர்ச்சியாக இருந்தால்தான் மழையும் அதிகமாகப் பெய்யும்.

சேலத்திற்குப் பக்கத்தில் பாலமலை என்ற அந்தப் பகுதியில் பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள் என்றால் அவர்களுக்கு ரோடு வசதியில்லாமல் இருக்கிறது. அங்கே போகிறவர்கள் பழைய தடங்களிலேயேதான் போகிறார்கள். ஒரு மைல் அளவில் போகும் அளவில் ரோடுகளைப் போடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கினால் அவர்களுக்கு வழி அளிக்கக் கூடிய நிலையிருக்கும்.

முதுமலைக் காட்டில் தொழிலாளர்கள் குடிசைகளில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து சுகாதாரமான வழியை நம்மால் உண்டாக்க முடியவில்லை. அவர்கள் மூங்கில் அரிசியைத் தான் குத்தி சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு என்ன கூலி என்றால் இரண்டு ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு ரூபாயிலே அந்தக் காட்டில் உட்கார்ந்துகொண்டு எப்படி ஜீவிக்க முடியும்? அதை உயர்த்தினால் நஷ்டம் வந்துவிடுமா என்ன?

விறகுக்காக வெட்டுபவர்கள் அடிக்கின்ற கொள்ளையைச் சொல்ல முடியாது. அதன் மூலமாக வருகின்ற ஏராளமான வருமானம் சில நபர்களுக்குத் தான் போகிறது. சர்க்காருக்குப் பணம் கிடைக்கக் கூடிய இப்படிப்பட்ட நிலைமைகளில் இன்றைக்குத் தனிப்பட்டவர்கள் கொள்ளையடிப்பதைச் சொல்லி முடியாது. 40 ஏக்கர், 50 ஏக்கர், ஏன் 200 ஏக்கர் என்று குத்தகை எடுக்கிறார்கள். 200 ஏக்கர்கள் என்றால் என்னென்ன மரங்கள், சந்தன மரம் ஒன்று இருந்தால் போதுமே. அந்தச் சந்தன மரங்களையும் சேர்த்து வெட்டி விற்று விடுகிறார்கள். ரேஞ்சர் எப்படி பாதுகாக்க முடியும்? எனவே அப்படிப்பட்ட சந்தன மரங்களை வெட்டுவதைத் தடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு அதற்கான நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிம்பம் பகுதியில், கொள்ளேகாலம் போகும் வழியில் உள்ள மரங்களை வெட்டி விவசாயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு போய் கொடுத்தாகிவிட்டது. இனி எப்படி நீங்கள் காடுகளை வளர்க்கப் செய்கிறீர்கள்? எங்கே பார்த்தாலும் காடுகளை அழித்து விவசாயம் அளவில் நிலைமைகளை உருவாக்கிவிட்டார்கள். சந்தன மரங்கள் தான் நிற்கின்றன. விவசாயிகள் பயிர் செய்யும் இடங்களில் சந்தன மரங்கள் தான் நிற்கின்றன.

சந்தன மரங்களை வெட்டவில்லை, சர்க்காருக்குச் சொந்தம், ஆகவே அதை வெட்டாமல் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த மரங்களும் ஒவ்வொன்றாகப் போய்க்கொண்டிருக்கிறது.



1974 மார்ச் 30] [திரு. கே. என். குமாரசாமி]

எதற்காக அந்த இடத்திலே விவசாயத்திற்கும் கொடுத்தீர்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் அதைக் கொடுக்க வேண்டும்? மிருகங்கள் இருக்கும் பகுதி. விவசாயத்திற்குக் கொடுப்பதற்காகக் காட்டை அழித்து விட்டோம் என்று இப்படிப் பல காரணங்களைச் சொல்ல முடியும். அந்த அளவிற்கு ஃபாரஸ்ட் அழிக்கப்படுகிறது. ஏதோ காரணங்கள் சொல்லப்படுகின்றன.

மூலப்பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன என்றால் அது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் காடுகளை அழிக்காமல் இருப்பதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்காமல் இருந்தால் இன்னும் காடுகள் அழிக்கப்படும். அழிக்கப்பட்ட இடங்களில், ஃபாரஸ்ட் இல்லாத இடத்திலே நாமே மரங்களை நட்டு காடுகளை உருவாக்க வேண்டும்.

அதில் வருகின்ற வருமானத்தை காடுகளை அதிகப்படுத்துவதற்காகச் செலவழிக்கலாம். அதைச் செய்ய நம்மால் முடிவதில்லை. பலயிடங்களில் மலைப் பகுதிகள் சும்மாதான் கிடக்கின்றன. அவைகளை விவசாயத்திற்குக் கொடுக்கிறோம் என்று கொடுக்கிறார்கள். அங்கு ஃபாரஸ்ட் இலாக்கா மரங்களை நட்டு வளர்ப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கலாமே.

இன்றைக்கு தேக்கு மரங்களின் விலை என்ன? அந்தத் தேக்கு மரங்களை உற்பத்தி செய்தால் பலன் கிடைக்கும். அதற்கு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள், ஒன்றுமில்லை. சேலம் போகும் வழியில் புளிய மரங்களை ஏராளமாக வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். புளிய மரச் சோலை இருக்கிறது, ஃபாரஸ்ட் நிலம், அதை யார் பாதுகாக்கிறார்கள்? அதை விட்டுவிட்டு தீக்குச்சிக்காக மரங்களைப் பயிர் செய்கிறார்கள். ஃபாரஸ்ட் இலாக்கா பார்த்து காடுகளை வளர்க்க முயற்சியெடுக்கவேண்டும், அரசாங்கமும் கண்காணிப்பாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். இந்த மூலப்பொருட்களைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதை மறுபரிசீலனை செய்து எந்த அளவிற்கு அந்த மூலப் பொருட்களுக்கு இன்னும் அதிக விலை வாங்க வேண்டுமோ அந்த அளவிற்கு உயர்த்த வெண்டும்.

பேப்பர் மில்களில் 5,000 டன், 6,000 டன், 10,000 டன் என்று செலவாகிறது. என்ன ஒப்பந்தத்தில் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அது சம்பந்தமான விவரங்கள் அறிக்கையில் இல்லை. இப்படி தனி முதலாளிகளுக்கு, தனிப்பட்டவர்களுக்கு இந்தக் காடுகள் பயன்படுகிறது. அதைத் தவிர்த்து அதிக லாபத்தை அரசாங்கம் பெற்று அதன்மூலம் சமுதாயத்திற்கு நன்மைகள் செய்ய முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்தக் கற்பூர மரத்தின் மூலமாக கேடு ஏற்படுகிறதா என்பதைப்பற்றி நிபுணர்களைக்கொண்டு பரிசீலனை செய்து, அப்படியிருக்கிறது என்றால் முன் முயற்சி எடுத்து அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00] [1974 மார்ச் 30

**திரு. ந. தர்மலிங்கம்**: தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒருசில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன். இந்த மானியக் கோரிக்கைகள் பற்றி நல்ல பல கருத்துக்களை முன்னால் பேசிய அருமை நண்பர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னைப் பொருத்தவரையில் இந்த துறை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் நல்ல இளைஞர், துடிப்புள்ளவர், நல்ல முறையில் திட்டங்களைத் தீட்டி எப்படி செயல்படுத்தினால் வருமானம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு நன்றாக அறியும், இந்தச் சட்டமன்றமும் அறியும். இ

வனத் துறை இலாகாவிலே தமிழகத்தைப் பொறுத்தவரை 16 சத விகிதந்தான் காடுகள் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த 16 சத விகிதத்திலே அரசாங்கத் திற்கு வருமானம் தரக்கூடிய காடுகள் 12 சத விகிதந்தான். மீதி இருக்கும் அத்தனையும் பொட்டல் காடுகளாகவே இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று 1972-73-ல் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 70 சதுர கிலோ மீட்டர் அளவுள்ள நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுக்கலாம் என்று புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் கூடிய குழு இப்போது நிலம் இல்லாத ஏழைகளுக்கு காட்டு நிலங்களை எடுத்துக் கொடுக்கக்கூடாது என்று முடிவு எடுத்து ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதி தென்னார்க்காடு மாவட்டத்தில் காடுகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பொட்டல் காடுகளாக இருக் கின்றன. அதையெல்லாம் அழித்து ஏழை விவசாயிகளுக்கு விவசாயத்திற் காக அந்த நிலங்களைக் கொடுக்கலாம். அரசுக்கு அதுபற்றி எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் அந்த விவசாயிகளுக்கு அந்த நிலம் ஒப்படை செய்யப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரியில் ரப்பர் மரங்கள், நீலகிரியில் தேயிலை, சேலத்தில் மூங்கில், பாபநாசத்தில் ஈத்தன் கழிகள் கிடைக்கின்றன. இவையெல்லாம் அரசுக்கு வருவாய் தரக்கூடிய மரங்கள். இந்த மாதிரிக் காடுகளை நல்ல முறையில் வளர்ப்போமானால் நல்ல லாபம் அரசுக்கு கிடைக்கும். அங்கெல்லாம் காட்டு வளத்தைப் பெருக்க முடியும். அதை விட்டு விட்டு பொட்டல் காடாக இருக்கும் எங்கள் பகுதியிலுள்ள நிலங்களை விவசாயத் திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று அங்கிருக்கும் அதிகாரிகள் தடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் மாவட்டத்தில் கல்ராயன் ஹில்ஸ் இருக்கிறது. பழைய ஜமீன் பகுதி. குறும்புகொண்டான் மலை என்று இருக்கிறது. அரிய கவுண்டன், சடைய கவுண்டன் ஜாகீர்கள் இருக்கிறார்கள். அங்கு ஏராளமான மூங்கில்கள்





கிடைக்கின்றன. அந்தப் பகுதியில் சர்க்கரை ஆலைகளும் இருக் கின்றன. அங்கே கரும்புச் சக்கைகள் வீணாகப் போகின்றன. அந்தச் சக்கைகளையும் இந்த மூங்கிலையும் பயன்படுத்தி மூங்கில்துரைபட்டில் ஒரு காகிதத் தொழிற்சாலையை அமைத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்குவதோடு மட்டுமல்லாமல் அரசுக்கும் நல்ல வருமானம் வரும்.

ஜவ்வாது மலையைப் பற்றி அருமை நண்பர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலையில் மட்டும் சந்தன மரங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். எங்களுடைய பகுதியில் கல்ராயன் ஹில்சிலும் சந்தன மரங்கள் இருக் கின்றன. குறும்பக்கவுண்டன், சடையக் கவுண்டன் மலையிலும் ஏராளமான சந்தன மரங்கள் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்தி சங்கராபுரத்தில் ஒரு சந்தன பவுடர் பாக்டரி அமைத்துக் கொடுத்தால் வேலை வாய்ப்பு ஏற்படவும், வருமானம் பெருகவும் வழி ஏற்படும்.

என்னுடைய தொகுதியில் மருவூரிலிருந்து கூளாங்குறிச்சி வழியாக கள்ளக்குறிச்சிக்குச் செல்ல வேண்டுமென்றால் வழியில் காடுகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் காட்டுப் பகுதியில் சாலை அமைக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சாலை அமைத்துத் தரவேண்டுமென்று பல முறை அதிகாரிகளையும், அரசையும் கேட்டும் அமைத்துத் தரப்படவில்லை.

மருவூரிலிருந்து கூடலூர் செல்லும் வழியிலும் காடுகள் இருக்கின்றன. இங்கும் காட்டு இலாகா உத்தரவு பிறப்பித்தால் சாலை போட முடியவில்லை. கூத்தக் குடியிலிருந்து நின்னையூர் செல்லும் வழியிலும் காடுகள் இருக் கின்றன. அங்கும் சாலை போட முடியவில்லை. இந்தச் சாலைகளை எல்லாம் போட்டுத்தர அரசு இனியாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விரியூர் கிராமத்தில் கிட்டத்தட்ட 250 ஏழை அரிசனங்கள் வசிக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்குக்கூட ஒரு சென்ட் நிலம் கூடக் கிடையாது. அங்கிருக்கும் பொட்டல் காடுகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஒப்படை செய்து கொடுப்பார்கள் என்ற ஆவலோடு அந்த மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இதுவரை விமோசனம் கிடைக்கவில்லை. இதிலே எந்தவிதமான முடிவும் அரசு இதுவரை எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மலைக்கோட்டாலம் என்ற காடு இருக்கிறது. அந்தக் காட்டு நிலங்களை ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு முன்னாலே இருந்த சட்டமன்ற உறுப்பினர் முதல் இதுவரை 16 தடவை சட்டமன்றத்தில் பேசி இருக்கிறோம். இதுபற்றி எந்தவிதமான நடவடிக் கையும் இந்த அரசு இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை. இனியாவது நடவடிக்கை எடுத்து ஏழை பாட்டாளி மக்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அருமை நண்பர் தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் நல்ல கருத்தைச் சொன்னார்கள். காட்டிலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்களைப் பற்றிச் சொன்னார்கள்.

எங்கள் தொகுதியில் காட்டுப் பகுதி நிறைய இருக்கிறது. அந்தக் காட்டுப் பகுதிக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் வாச்சர்கள், கார்டுகள். அவர்கள் காட்டைச் சுற்றிச் சுற்றி வர வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு 5,000 காடுகள் முதல் 20,000 காடுகள் வரை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வெயில் என்றும், மழை என்றும், பனி என்றும் பாராது தன்னுடைய பணி செய்து வருகிறார்கள்.

அந்த ஊழியர்கள் தங்களுக்கும் சம்பள உயர்வு வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது அரசு பரிசீலனையில் இருப்ப தாகச் சொல்லுகிறார்கள். விரைவில் அவர்களுக்கு நல்ல ஊதியத்தையும் பதவி உயர்வையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கும் இந்த அரசு சலுகை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடிய விலங்குகள், மரங்களைத் திருட்டுத்தனமாக வெட்டிக்கொண்டு போகக்கூடிய கொடிய மனிதர்களுக்கிடையே இருக்கவேண்டியிருப்பதால் அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தக்க ஆயுதங்கள் அளிக்கப்பட வேண்டும். ஆங்கிலேயர் காலத்தில் இருந்த முறைப்படி இன்றும் அவர்கள் காக்கிச் சட்டை அணிந்து வருகிறார்கள். போலீஸ்காரரா, காட்டு இலாகா அதிகாரியா என்று தெரியவில்லை. எனவே, அவர்களுடைய உடையை மாற்ற வேண்டுமென்று பல முறை கேட்டும் இன்னும் மாற்றப்படவில்லை.

காவல் துறையினருக்கும், ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுத்திருக்கிறார்கள். இந்தக் காட்டு இலாகா ஊழியர்களுக்கும் செலக்ஷன் கிரேடு கொடுத்து பதவி உயர்வு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கொடுக்க வேண்டும்.

அவர்கள் மரம் வெட்டும் குற்றவாளிகளைக் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்வதற்காகத் தனியார் பஸ்ஸாக இருந்தாலும் அரசாங்க பஸ்ஸாக இருந்தாலும் கையைக் காட்டினாலும் நிற்காமல் போய்விடுகிறார்கள். இதனால் கோர்ட்டுக்குக் குற்றவாளிகளை அழைத்துச் செல்ல தாமத மாகிறது. இதன் காரணமாக மேலதிகாரிகளின் வெறுப்புக்கு அவர்கள் ஆளாகிறார்கள். ஆகவே, தனியார் பஸ்களிலும், அரசாங்க பஸ்களிலும் காவல் துறையினருக்கு அளிக்கப்படுகிற சலுகை போன்று இவர்களுக்கு அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதனால் நான் போலீஸ் துறையைக் குற்றம் சொல்லு வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகளும் வாய்ப்புகளும் இவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று தான் கூறுகிறேன்.



எப்.டி.ஏ. ரேஞ்சர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதேபோல் எப்.டி.ஏ. மாநில அளவில் இந்த வாச்சர்களுக்கும், கார்டுகளுக்கும் கொடுக்க வேண்டும். மேல் அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி சில வாச்சர்கள், கார்டுகள் அடிக்கடி வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். அவர்களுக்கும் குழந்தை குட்டிகள் உள்ளன. அந்தக் குழந்தைகளும் நல்லமுறையில் படித்து சமுதாயத்தில் நல்ல நிலைமைக்கு வரவேண்டாமா? ஆகவே குறைந்தபட்சம் வன இலாகாவில் பணி புரிகிறவர்களை ஐந்தாண்டு களாவது ஒரு இடத்திலிருந்து மாற்றாமல் இருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, என் பகுதி காடுகள் நிறைந்த பகுதியாக இருந்தாலும் அங்கு கனி வளங்களும் காணப்படுகின்றன. காப்பர் கிடைக்கிறது. அந்தச் செம்பைப் பயன்படுத்திக்கொண்டு என் பகுதியில் ஒரு பெரிய தொழிற் சாலையை உருவாக்கித்தந்தால் கிட்டத்தட்ட ஆயிரம் பேர்களுக்காவது வேலை வாய்ப்புக் கிடைக்கும். (மணியடிக்கப்பட்டது.) அப்படி ஒரு திட்டம் அரசிடம் இருப்பதாக அறிகிறேன். ஆகவே அப்படி ஒரு தொழிற்சாலையை அங்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு பொதுப்பணித்துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பில்லா விட்டாலும், தொழில்துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் வனத்துறை மானியத்தின் மீதாவது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு எல்லாத் துறைகளையும் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லலாம் என்றால் தலைவர் அவர்கள் மணி அடித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

என் தொகுதி பற்றிய ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முசுகுந்தா, மையூரா, மணிமுக்தா நதிகளில் குறுக்கே பாலங்கள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள்தான் அனுபவிக்கிறார்கள் என்று எதிர் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். ஆனால் அப்படி இதுவரையில் நாங்கள் அனுபவித்ததாகத் தெரியவில்லை. தன் கடமையைத்தான் செய்கிறது இந்த அரசு. டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு ஏழை மக்களுக்காக நல்ல முறையில் தன் கடமையைச் செய்து வருகிறது. ஒரு இளைஞரை இத்துறைக்கு அமைச்சராக போட்டிருக்கிறார்கள். இன்னும் பல நல்ல திட்டங்களை அவர்கள் வெற்றிகரமாக முடித்துக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மலைகொட்டாலம் காட்டு நிலங்களை நிலவொப்படை செய்து தீர்த்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. அ. பொம்மன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வனத்துறை, சின்கோனா இந்த மானியங்களின் பேரில் எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களை நான் இந்த அவை முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்துக்குத் தேவைப்படும் காட்டின் பரப்பளவு ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது. வனத் துறையின் கீழ் உள்ள காட்டு நிலங்களின் மொத்தப் பரப்பு 20,926 சதுர கிலோ மீட்டர் என்றும், அதில் 17,258 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகள் என்றும், 3,668 சதுர கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்களுமாகும் என்று அமைச்சர் அவர்கள் தந்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வனம் என்று சொன்னால் அது எப்படி இருக்க வேண்டும் என்பதை நாம் முதலில் சிந்திக்க வேண்டும். இயற்கை வனத்தில்தான் ஈரப் பசை நிற்கக்கூடிய சக்தி உள்ளது. இயற்கை வனம்தான் தூயக் காற்றைக் கொடுக்கக் கூடியது. அதனால் மக்கள் சுகாதாரம் நல்ல முறையில் இருக்கவும் மழை பெய்யவும் வாய்ப்பிருக்கிறது.

திரு. குமாரசாமி அவர்கள் சொன்னார்கள், நீலகிரி மலைகளில் கற்பூர மரங்களை நடுவதால் அவை நீரை உறிஞ்சி அதன் காரணமாக மழை பெய்வது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் இப்போது சொல்லவில்லை, முதலில் இருந்தே சொல்லிக்கொண்டு வருகிறேன். நல்ல வல்லுனர்களைக்கொண்டு ஆராய வேண்டும். கர்ப்பூர மரத்தின் வேர் அறுபது அடிக்குக் கீழே செல்கிறது. ஒரு நாளைக்கு நான்கு காலன் நீரை அது உறிஞ்சி எடுக்கும் என்று சொல்கிறார்கள். நம் காடுகளில் அப்படிப்பட்ட கர்ப்பூர மரங்களைப் போட்டிருக்கிறார்கள். நமது அணைக்கட்டுகளில் தண்ணீர் இல்லை, நாளுக்குநாள் அது குறைந்துகொண்டே வருகிறது.

மிலாறு விளைகிற பூமியில் புல் கூட விளைவதில்லை. அதன் தழைகள் கறுப்பாக இருக்கும். எருவிற்குத்தான் அது பயன் உள்ளதாக இருக்கும். ஆகவே காடுகளை வளர்க்க இந்தமாதிரி மிலாறுகளைப் போடுவதை விட மென்மரங்களை வைத்து வளர்ப்பது நல்லது. இன்று இயற்கைக் காடுகளை எல்லாம் அழித்துக்கொண்டு வருகிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் அந்த மரங்களை அழிக்க வேண்டும் என்று வனத் துறையில் ஒரு விதி இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த மரங்களை வெட்டியவுடன் கர்ப்பூர மரங்கள், மிலாறு மரங்களை நடுகிறார்கள். நீர்ப் பிடிப்பு இடங்களில் அத்தகைய மரங்களைப் போட்டால் அவை நீரை உறிஞ்சிவிடுகின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதைக் கவனிக்க வேண்டும். காடுகளை நாம் நல்ல முறையில் வளர்க்க வேண்டும்.

இப்போது கற்பூர மரங்களைப் போட்டு அதை விஸ்கோஸ்க்குக் கொடுக்கிறார்கள். டான் இந்தியாவிற்கு மிலாறு மரங்களைக் கொடுக்கிறார்கள். ராஜபாளையத்திற்கு தொழிற்சாலைக்கு மென்மரங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் இவைகளை என்ன விலையில் கொடுக்கிறார்கள் என்று பார்த்தால் மிகக் குறைந்த விலைகளில்தான் கொடுக்கிறார்கள். இதற்கு ஏதாவது ஒப்பந்தம் இருக்கிறதா ? அப்படி ஒப்பந்தம் இருந்தால் ஏன் இந்தக் குறைந்த விலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது ? தொழிற்சாலை உருவாவதற்குக் குறைந்த விலையில் இந்த மரங்களைக் கொடுக்க





ஒப்பந்தம் செய்யப்பட்டதா ? அதன் காரணமாக நம் வனத் துறை வருவாய் குறைகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதை இந்த இலாகா நல்ல முறையில் பரிசீலனை செய்திருக்கிறதா என்றால் இல்லை. ஏன் அந்த ஒப்பந்தத்தை மாற்றிக்கொள்ளக் கூடாது ? அந்தத் தொழிற்சாலைகளின் முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். அவர்களிடமிருந்து நாம் அதிகத் தொகை பெற்றால் அதைக் கொண்டு நாம் வேறு காரியங்களைச் செய்யலாமே.

அடுத்தபடியாக, முதுமலை பற்றிச் சொன்னார்கள். வன விலங்கு உய்விடங்கள் நம் மாநிலத்தில் ஆறு இடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். வன விலங்கு உய்விடங்கள் இருக்க வேண்டியதுதான். அவற்றை அந்நிய நாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகள் வந்து பார்க்கிறார்கள்.

நீலகிரி மாவட்டம், கூடலூர் முதுமலை சரணாலயத்தில் பயணிகள் வந்து தங்குவதற்கு இரண்டு விடுதிகள்தான் இருக்கின்றன. அதாவது ஒன்று—அபயாரண்யம், மற்றொன்று தெப்பக்காட்டில். அயல் நாட்டினர் அல்லது வசதி படைத்தவர்கள் வந்துவிட்டால் நடுத்தர மக்களுக்கு அங்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே நடுத்தர மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கு சிறந்த முறையில் குறைந்த வாடகையில் கார்குடியிலாவது, தெப்பக்காட்டிலாவது நல்ல பல விடுதிகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சரணாலயத்திற்கு வந்து செல்கிறவர்கள் திரும்பிப் போவதற்கு மைசூர் போகவோ அல்லது உதகை போகவோ பஸ்களைத்தான் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆகவே சரணாலயத்திற்கு முன்னால் மழைக் காலங்களில் பஸ்ஸுக்குக் காத்திருக்கும்போது மழையால் நனைந்து விடுகிறார்கள். ஆகவே அந்த இடத்தில் வன இலாகாவில் இருந்து ஒரு வெயிட்டிங் ஷெட் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மைசூர், உதகை செல்லும் பஸ்களை பிரயாணிகளின் நன்மைக்காக அங்கு குறைந்தது பத்து நிமிடங்களாவது நிறுத்தி வைக்க வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் பெருகியிருக்கிற இடங்களில் கர்ப்பூர மரங்களை நடுகிறார்கள். உதாரணமாக, நஞ்சநாட்டில் கர்ப்பூர மரங்களை ஊருக்குப் பக்கத்தில் நட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்போது அந்தக் கிராம மக்கள் கால்நடை மேய்ச்சலுக்கு அந்த இடம் வேண்டுமென்று கேட்டார்கள். மண்வள அதிகாரியிடமும் சொல்லியிருக்கிறார்கள். என்ன முடிவாயிற்று என்று தெரியவில்லை. ஆகையால் ஊருக்குப் பக்கத்தில் மரம் நடுவது என்றால் அந்த இடங்களில் கர்ப்பூர மரங்களை நடாமல், மென்மரங்களை நட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்ப்பூர மரம் நடுவதால் பல கெடுதிகள் ஏற்படுகின்றன. முக்குருதித் தீர்த்தத்தில் பல மிலாறு மரங்களைப் போட்டு இருக்கிறார்கள். ஒரு மரம் கூட சரியான நிலையில் இல்லை. ஆகவே, மென்மரங்களை நட்டு அதன் மூலம் நல்ல பலனை அடைய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாடு காடுகளை ஒட்டி, அண்டை மாநிலங்களாக உள்ள கேரளம், மைசூர் இருப்பதால் சந்தன மரங்கள் அங்கே கடத்தப் படுகின்றன. இதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இது குறித்து சட்ட சபையில் நான் பல தடவை அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இதுவரை அதைத் தடுக்க ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே வேலை செய்யும் சர்க்கார் பணியாளர்கள் இதைச் சரிவரக் கண்காணிக்கவில்லை, அல்லது கண்காணிக்கிற அளவுக்கு பணியாளர்கள் இல்லை என்றும் இருக்கலாம். அவர்கள் ஒழுங்கான முறையில் இருந்தால் இப்படிக் கள்ளத்தனம் செய்ய முடியாது.

இது தொடர்ந்து பல காலமாக நடைபெற்று வருகிறது. மஞ்சளிக்குடி என்ற ஊரில் பொதுக்கூட்டத்திலேயே வந்து பொதுமக்கள் என்னிடத்தில் இந்த மாதிரியாகக் கள்ளத்தனம் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். இது கண்காணிக்க வேண்டியதொன்றாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டுத்தான் இப்படிக் கள்ளத்தனம் நடைபெறுவதாகவும், அந்த அதிகாரி மீது கேஸ் இருப்பதாகவும் சொல்கிறார்கள். இந்தக் கள்ளத்தனத்தை தடுத்து நிறுத்தினால் இந்த சந்தனக் கட்டைகள் மூலம் நமக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

இந்தச் சந்தன மரத்தை வளர்ப்பதற்காக 1974–75–ம் ஆண்டில் 100 ஹெக்டேரில் ரூ. 2 இலட்சம் செலவிட பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பயிரிடுவதால் மட்டும் போதாது. அது கடத்தப்படாமல் இருப்பதற்கும் பார்த்துக்கொள்ள வேண்டும். அண்டை மாநிலத்திலிருந்து வந்து இரவோடு இரவாகக் கள்ளக் கடத்தல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. ஒரு பெரிய ரோஸ் வுட்டை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள், அது கேரளாவில் உள்ள ஷிப்யார்டில் பிடித்து இருக்கிறார்கள். அதனுடைய விலை ரூ. 60,000 என்று சொன்னார்கள். ஆகவே, நல்ல முறையில் கண்காணிப்பு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலை வசதி, குடி தண்ணீர் வசதி பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் பணியர், குரும்பர் என்ற வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. அவர்கள் தண்ணீர் வேண்டுமானால் அருகில் உள்ள மோயார் கால்வாயிலிருந்துதான் எடுத்துக்கொள்கிறார்கள். இது சுத்தமான தண்ணீர் அல்ல. அவர்களுக்கு அரசாங்கம் இது வரையில் ஒரு வசதியும் செய்து கொடுக்கவில்லை. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆதிவாசிகள் முன்னேற்ற நலத் திட்டம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்காக 5-ஆவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவர்களில் யானைப் பாகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மொத்தமாகச் சேர்த்தால் ஒரு 30—35 பேர்கள்தான் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்குக் கூலியாக ரூ. 2 கொடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கணக்கு விவரம் சரியாகத் தெரிவதில்லை என்பதால் சரியான படி அந்தத் தொகை, அதிகாரிகள் அந்தந்தத் தொழிலாளிக்கு கொடுக்கப்படவில்லை என்று குறை சொல்கிறார்கள். இதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பு இப்போது கிராசிவுடி கொடுத்து வருகிறார்கள். அன்னவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகத் திட்டங்கள் என்ற அடிப்படையில் நீலகிரி மாவட்டத்தில் 1974–75-ம் ஆண்டில் 200 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டமும், குமரி மாவட்டத்தில் 139 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டமும் பயிரிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

அங்கே புருஷன், பெண்சாதிக்குத்தான் வேலை தருகிறார்கள். வீட்டில் வேறு யாராவது வேலை செய்யும் தகுதியுடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வேலை கொடுப்பது இல்லை. அவர்கள் இருவருக்கும் கிடைக்கும் ரூ. 4-ஐ வைத்துக்கொண்டு அவர்கள் எப்படிக் குடும்பம் நடத்த முடியும்? ஆகவே, அவர்களுக்கு மாற்று வேலை தந்து அவர்களின் வாழ்க்கை வளம் பெறத் தேவையான திட்டத்தையாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சின்கோனா பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சின்கோனா ரொம்ப விலை உயர்ந்தது. பாலுடிரின் கொண்டு வந்தவுடன் குனைன் மருந்துக்கு மதிப்பு குறைந்து விட்டது. இப்போது அதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில்லை. ஆகவே, இப்போது சின்கோனாவிற்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

இந்த சின்கோனா சரியான முறையில் பயிர் செய்யப்படவில்லை. இதிலே சங்கடம் என்னவென்றால், எங்கே சின்கோனா பயிர் சரியாக வராதோ அந்த இடத்தில் சின்கோனா பயிர் செய்கிறார்கள். ஆகவே, இப்படி சின்கோனா சரியாகப் பயிர் செய்ய முடியாத இடங்களை வனத்துறைக்குக் கொடுத்து, வனத்துறையின் சின்கோனா பயிரிடக்கூடிய நிலங்களை எடுத்துக்கொண்டு அங்கே சின்கோனா பயிர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதனால் நல்ல பலன் கிடைக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்,

இந்த சின்கோனு தொழிலாளர்களுக்கு (அரசுத் துறையில் இருப்பவர்களுக்கு) தனியார் தேயிலை, காப்பித் தோட்டங்களில் கிடைக்கும் வசதிகள் கொடுக்கப்படவில்லை. தனியாரிடத்தில் அவர்கள் இருந்தால் குடியிருப்புகள் மற்ற ஏனைய வசதிகள் செய்து தருகிறார்கள். ஆகவே, தனியாரிடத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றனவோ அவற்றை அரசுத் துறையில் பணி புரியும் தொழிலாளிக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரி குஞ்சம்பனை என்ற இடத்தில் ஒரு காட்டு யானை 5 மலைவாசிகளைக் கொன்று விட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கூட இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். அந்த இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஏதாவது பண உதவி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டில் விவசாய நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் விவசாயம் செய்வதற்குக் கொடுக்கவேண்டுமென்று திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்வதை நான் ஆதரிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் கூடிய ஒரு உயர் மட்டக் குழு வனவியல் அல்லாத நிலங்களை விவசாயிகளுக்கு அளிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அதனால் இந்த நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் மக்களுக்கு மட்டும் இன்னும் காட்டு நிலம் ஒதுக்கவில்லை. காட்டு நிலம் என்று சொல்லி கொடுக்காமல் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் காட்டு நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்கு கொடுத்துவிட்டு, நீலகிரி மாவட்டத்தில் மட்டும் கொடுக்கவில்லை என்று சொன்னால் இந்த சர்க்கார் நீலகிரி மாவட்டத்து மக்களிடம் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. எஸ். முருகையன்** : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வனத்துறை மிகச் சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்றாலும், இதிலே இன்னும் நல்ல முறையில் கவனம் செலுத்தியிருந்தால், நல்ல முறையில் பணியாற்றியிருந்தால் இதனுடைய வருவாய் இப்போது இருப்பதை விட இரண்டு மடங்கு உயருவதற்கு வழி வகை இருக்கிறது.

சென்ற ஆண்டில் இந்த மானியத்தின் மீது பேசுகிறபோது கூட நான் சொல்லி இருக்கிறேன். நல்ல வழிவகைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் குறிப்பிலே மொத்தமாக 5 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் என்று எதிர்பார்த்தாலும், ரூ. 2 கோடிக்கு மேல் சந்தனமரத்தில் வருமானம் வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகளும்



மற்ற சிப்பந்திகளும், இந்த அளவுக்கு வைத்துக்கொண்டு இந்த அளவுக்கு வருமானால், இன்னும் இதே அளவுக்கு இந்தச் சிப்பந்திகளையும், அதிகாரிகளையும் ஏற்படுத்தினோமானால் நிச்சயமாக இதை விட இரண்டு மடங்கு அளவில் வருமானம் உயரும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு சந்தன மரத்தில் மட்டும் 273 லட்ச ரூபாய் வருவாய் இருக்கிறது. உண்மை என்னவென்றால் ஏறத்தாழ 5—6 கோடி ரூபாய் அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய சென்னை மாநிலத்தில் சந்தன மரம் உற்பத்தி இருக்கிறது.

இருப்பினும் அரசாங்கத்தின் வருவாய் குறைகிறது. என்றால், அந்தத் துறையில் இருக்கும் சிப்பந்திகள் குறைவாக இருப்பதால் தான். அந்த சந்தன மரம் வெளியே கடத்தப் படுவதால் தான் என்று சொல்லிக்கொள்கிறேன். எவ்வளவுதான் கண்காணிப்போடு இருந்தாலும் அதைத் தடுக்கமுடியாது. காரணம், சம்பந்தப்பட்ட சிப்பந்திகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தின் விஸ்தீரணம் அதிகமாக இருக்கிறது.

அவர்கள் எவ்வளவுதான் விழிப்போடு இருந்தாலும் கூட அந்த சந்தன மரங்களைத் தமிழ்நாட்டிலிருந்து வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வத்தை தடுக்க முடியவில்லை. இந்தச் சந்தன மரங்கள் தமிழ் நாட்டில் எல்லையோரப் பகுதிகளில்தான் அதிகமாக விளைகிறது. இந்தப் பகுதி ஆந்திரா, கர்நாடகத்தை ஒட்டிய பகுதியாக இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சந்தன மரத்தில் ஏறத்தாழ 80 சதவீதம் வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையில் தான் விளைகிறது. இது கடத்தப்படுகிறது வெளி மாநிலங்களுக்கு அதிகமான அளவில், அதனால் தான் நம்முடைய வருமானம் குறைகிறது.

இதற்கு முதற் காரணம், சிப்பந்திகள் குறைவாக இருப்பது தான். இந்தச் சிப்பந்திகளை எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தி அதிகாரிகள் மட்டத்தில் இல்லாவிட்டாலும், சிப்பந்திகள் மட்டத்திலாவது உயர்த்தி நல்ல முறையிலே கண்காணிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

[ பிற்பகல் 12-30 ]
(திரு குழ செல்லையா தலைமை)

இந்த சநதன மரம் உற்பத்திக்காக இநதத் துறையிலே ஏதாவது அதிகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. வழக்கம் போல ஒதுக்கப்படுகிற பணத்தைதான் ஒதுக்கியிருக்கிறார்கள். எவ்வளவுதான் அதற்கு பணத்தை ஒதுக்கிக் கொடுத்தாலும், அதிகமாக உற்பத்தி செய்தாலும், நிச்சயமாக பணத்தால் மட்டும் ஆகக்கூடிய காரியம் அல்ல.

ஏனென்றால் சந்தன மரங்களில் இருக்கக்கூடிய பழங்களெல்லாம் பட்சிகள் சாப்பிட்டு, எச்சல் உமிழும்போது அதிலே மரங்கள் உற்பத்தியாகிறது. எவ்வளவு கஷ்டப்பட்டு சந்தன மரங்களைப் பயிர் செய்தாலும் கூட,

100 செடிகள் வைத்தால் 10 செடிகள் கூட நல்ல முறையில் வளர்வது கிடையாது. பட்சிகள் அந்தப் பழங்களைச் சாப்பிட்டு எச்சல் உமிழ்வதன் மூலமாகத் தான் ஏராளமான சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றன.

அம்மாதிரி சில நேரத்தில் மலை மேல் இருக்கக்கூடிய பகுதிகளில் பட்டா நிலங்களில் உற்பத்தியாகிறது. தனிப்பட்டவர்கள் பட்டா நிலங்களில் உற்பத்தியானாலும் கூட அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்று இப்பொழுது இருக்கக்கூடிய சட்டத்தில் இருக்கிறது. பட்டா நிலங்களிலுள்ள மரங்களுக்கு, கடைசியாக அது மரமாகும் வரையில் அதற்குப் பாதுபாப்பு அளிக்கவேண்டிய நிலையில் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். ஏதாவது ஒரு கிளை திருட்டுப்போய்விட்டால் கூட சொந்தக்காரர்களைப்பிடித்துக்கொண்டு போய் அவர்கள் மீது வழக்குகள் போடக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது.

மலைப் பகுதியிலே சந்தன மரங்கள் பட்டா நிலங்களில் இருந்தாலும் கூட ஓரளவுக்கு ஒரு பகுதியை அவர்களுக்கு ஒதுக்கித் தருகிறார்கள். ஒரே மலையிலே ஒரு பகுதியை, சந்தனமரம் பட்டா நிலங்களில் இருந்தால், அந்த நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் மற்றப் பகுதிகளில் அம்மாதிரி கொடுப்பது கிடையாது. அப்படி கொடுக்காத காரணத்தினால் மற்ற பகுதியிலுள்ள பட்டா நிலங்களில் என்ன செய்கிறார்கள் என்றால், செடிகளாக இருக்கும்பொழுது ஏர் ஓட்டி அழித்துவிடுகிறார்கள். நான் ஏற்கெனவே சென்ற முறை இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நன்றாகச் சிந்தித்துப் பார்த்து இந்த சில மாற்றங்கள் செய்வார்களேயானால் நிச்சயம் இந்தத் துறையிலே வருவாய் ரூ. 275 கோடியாக இருப்பதை, அதைப் போல் இன்னும் ஒரு மடங்கு அல்லது $1\frac{1}{2}$ மடங்கு அதிகரிப்பதற்கு வேண்டிய வாய்ப்புகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். சந்தன மரங்களை எண்ணெய் ஆக்கக்கூடிய தொழிற்சாலைகள் இந்தியாவிலேயே 8 இடங்களில் இருக்கின்றன. தமிழகத்தில் இரண்டு இடங்கள் இருக்கின்றன. மேட்டூரில் ஒன்று, சேலத்தில் ஒன்று, திருவண்ணாமலையில் ஆரம்பித்து வேலை நடந்துகொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களில் அங்கங்கே ஒன்றி பண்டாக இருந்து கொண்டிருக்கிறது. அண்மையிலே உள்ள கர்நாடக மாநிலத்தில் இரண்டு சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மரங்கள் நம்முடைய மாநிலத்திலிருந்து கடத்தப்பட்டால், நிச்சயம் அங்கே சென்று எண்ணெயாய் ஆகிறது. ஒரு டன் சந்தன மரம் ரூ. 27,000, 28,000 அல்லது 30,000 அளவுக்கு ஏலம் போகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 275 கோடி வருமானம் என்று சொன்னார்கள். 275 லட்சம்......

**திரு. எஸ். முருகையன் :** கோடி அல்ல, 275 லட்சம் தான். மற்ற மாநிலங்களுக்குச் சென்று அது எண்ணெயாக வெளியே சென்று விற்கப்



படுகிறது. நம்முடைய மாநிலத்தில் எந்த அளவுக்கு சந்தன மரம் உற்பத்தியாகிறதோ, அதே அளவுக்குத் தான் கர்நாடக மாநிலத்திலும் உற்பத்தியாகிறது.

ஆனால் கர்நாடக மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய எண்ணெய் வெளியே உலக மார்க்கெட்டுக்குப் போகிறது. சந்தன மர எண்ணெய் தொழிற்சாலை வைத்து வெளிநாட்டுச் சந்தைக்கு அனுப்பும் பெருமை கர்நாடக மாநிலத்தைச் சார்ந்திருக்கிறது. உலக மார்க்கெட்டில் சந்தன எண்ணெய் விலை நிர்ணயம் செய்வது எண்ணெய் அனுப்புவது கர்நாடக மாநிலம் தான் என்று உலக நாடுகள் பெரிதாக நினைக்கின்றன.

கர்நாடக மாநிலத்தில் சந்தன மரம் எந்த அளவுக்கு உற்பத்தியாகிறதோ அந்த அளவுக்குத் தமிழகத்திலும் உற்பத்தியாகிறது. ஆனால் இந்த மாநிலத்திலிருந்து ஒரு பகுதி மரம் கடத்தப்படுகிறது. வெளி மாநிலத்திலிருந்து இங்கே ஏலத்தில் எடுத்துக்கொண்டு போகிறார்கள். ஆகவே, மற்ற மாநிலங்கள் இதிலே லாபத்தை அடைகின்றன. அரசாங்கத் தரப்பில் ஒரு சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பித்தால், நாம் அதிக லாபம் அடைய முடியும். நான் 1962-ஆம் ஆண்டிலிருந்து இந்தச் சட்ட மன்றத்தில் பல தடவை இதைச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன்........

**திரு. ஜே. ஜேம்ஸ் :** வன இலாகா மான்யம் விவாதிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. வன இலாகா அமைச்சர் அவர்களைக் காணவில்லை. இது அவையை அவமதிப்பதாகாதா என்று தங்கள் மூலம் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் இங்கு தான் இருந்தார்கள். உறுப்பினர்களுடைய பேச்சை நான் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறேன். உறுப்பினர் கவலைப்படவேண்டியதில்லை.

**திரு. எஸ். முருகையன் :** மற்ற மாநிலங்களுக்குச்சந்தன மரம் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு நான் ஒரு யோசனையைச் சொல்லிக்கொள்கிறேன்.

சந்தன மரத்தைக் கடத்திக்கொண்டு போனால், எண்ணெய்த் தொழிற்சாலைகள் உள்ள இடங்களுக்குத் தான் கொண்டுபோக முடியுமே தவிர, வேறு வழியில் அதை உபயோகப்படுத்த முடியாது.

இந்தியாவிலேயே மொத்தம் 8, 9 சந்தன எண்ணெய்த் தொழிற்சாலைகள் தான் இருக்கின்றன. மத்திய அரசின் சென்டிரல் எக்சைஸ் மூலம்—அது சம்பந்தமாக மற்ற மாநிலங்களுக்குச் சென்று நாம் எதுவும் செய்ய முடியாது. ஆங்காங்கு இருக்கும் எண்ணெய்த் தொழிற்சாலையில் ஒரு அதிகாரியை நியமித்து, எவ்வளவு சந்தன மரம் எங்கிருந்து வாங்கப்பட்டது என்று கணக்கு எடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு மிக வசதியாக இருக்கும். ஆகவே, இதில் இந்தத் துறை அமைச்சர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். முருகையன்] [1974 மார்ச் 30

அதே நேரத்தில் காடுகள் சில பகுதிகளிலே தரைக்காடுகளாக ஏராளமாக இருந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய பகுதியில் ஒரு இடத்தில் 14,000 ஏக்கர் ரிசர்வ் பாரெஸ்ட் இருந்துகொண்டிருக்கிறது. அதிலிருந்து இந்தத் துறைக்கு ஏதாவது ஒரு பைசாவாவது வருமானம் வருகிறதா என்றால், நிச்சயம் கிடையாது. நான் இதுபற்றி இந்தத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதி அனுப்பியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். 14,000 ஏக்கர் தரைக்காடாக அந்தப் பகுதியில் இருந்துகொண்டிருக்கிறது. நான் அதை விவசாயிகளுக்குப் பயிர் செய்வதற்காகக் கொடுக்கச் சொல்லவில்லை. ஆங்காங்கு உள்ள விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வீதம் ஒதுக்கித் தந்து, அரசாங்கத்திற்கு வருவாய் வரக்கூடிய நல்ல மரங்களை வைத்து, புளியன், மா போன்ற மரங்களை ஆங்காங்கு வைத்து, 10 ஆண்டு காலத்தில் பலன் கொடுக்கிறது என்றால், 10 ஆண்டு காலம் அவர்கள் அனுபவித்துக் கொள்ளலாம், பிறகு 20 ஆண்டுகளுக்குப் பின்னால் அரசாங்கமே அவைகளை எடுத்துக் கொண்டு அதிலிருந்து வருகிற வருவாயைப் பெறலாம். அம்மாதிரி செய்தால் ரூபாய் 5 கோடி, 6 கோடி அளவுக்கு அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

சாதாரணமாக, இந்தத் துறையில் இருப்பவர்கள் இருக்கக் கூடிய காடுகளில், யாரோ எடுத்துக் கொண்டு போகிறார்கள், போனது போக பாக்கி இருக்கக்கூடிய வருவாயை வைத்து நிர்வாகத்தை நடத்துகிறார்கள். இந்தத் துறையிலுள்ளவர்கள் இதிலே அதிக கவனம் செலுத்துகிறார்களா என்றால், நிச்சயமாகக் கிடையாது.

ஏதாவது செய்யவேண்டுமென்றால் நீலகிரி மரங்களை வைத்துவிடுகிறார்கள். அந்த நீலகிரி மரங்களை வைப்பதால் ஏதாவது கணிசமான அளவுக்கு வருவாய் வருகிறதா என்றால், நிச்சயமாக கிடையாது. இந்தத் துறையில் இருப்பவர்கள் நிச்சயமாக அதிக கவனம் செலுத்தவேண்டும்.

இந்தத் துறையிலே இன்னும் அதிகப்படியாக கீழ் மட்டத்தில் சிப்பந்திகளை நியமித்து, இந்தத் துறையை நல்ல முறையில் நடத்தி, ஒன்றுக்கு நான்கு மடங்கு வருவாய் வரக்கூடிய துறையாக இதைச் செயல்படச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. அபுசாலி :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே இந்தக் காட்டு இலாகா மான்யத்தை ஆதரித்து எனக்குத் தெரிந்து இரண்டொரு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் என்ன சொல்ல வேண்டுமென்று நினைத்தேனோ, அதைப் பற்றி மற்ற உறுப்பினர்களெல்லாம் நிறையப் பேசி விட்டார்கள். அதையே நான் திரும்பவும் பேசி இந்தச் சபையின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1974 மார்ச் 30] [திரு. எஸ். ஏ. அபுசாலி]

என்னுடைய தொகுதியிலே பிச்சவரம் காடு என்று ஒன்று இருக்கிறது. அதை மற்ற உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பார்க்காவிட்டால்கூட, அந்தக் காட்டை ஒரு முறை அவசியம் பார்க்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

காரணம், 1962-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் காட்டுக்குச் சென்று அங்கு கிள்ளை என்ற ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தில் அவர் எழுதிய ஒவ்வொரு பொருளையும் பார்த்தால் அது பொன் எழுத்துக்களாக இருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட பொன் எழுத்துக்களை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அண்ணா சொல்லியிருந்த ஒவ்வொரு கருத்தையும் பொன்போல எடுத்துக்கொண்டு இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பிச்சவரத்தைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அது மட்டுமல்ல. மறைந்த ஜாகிர் உசேன் அவர்கள்—நான் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இல்லை என்றிருந்தாலும்—அங்கே வந்து சுற்றிப் பார்த்தார்கள். அவர்களுடன் நானும் போட்டில் சென்றிருந்தேன். அந்தக் காட்டை மூன்று மணி நேரம் சுற்றிப்பார்த்தார்கள். இப்படி ஒரு அற்புதமான காட்டைத் தமிழ்நாட்டிலே பார்க்கவில்லை என்று கூறினார்கள்.

அப்படிப்பட்ட அந்தக் காட்டில் ஒரு உல்லாச விடுதி கட்டி, பல்வேறு உலகத்தவர்களும் அங்கே வந்து தங்கி, உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதற்கு வசதி செய்யலாம் என்று சொன்னார்கள்.

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள்கூட அந்த இடத்தை வந்து பார்த்திருக்கிறார்கள். கவர்னர் ஷா அவர்கள் சென்ற ஆண்டு வந்து பார்த்துவிட்டு அங்கே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்த இடத்தில் ஒரு உல்லாச மாளிகை கட்டவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு இடத்தில் ஒரு உல்லாச மாளிகை கட்டுவதற்கு இந்த 1974-75-ம் ஆண்டு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை என்றாலும் 1976-லேயாவது கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எங்களுடைய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாகத் தாழ்மையோடு வேண்டி கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, இந்த வனத்துறை மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வனத்துறையை பணத்துறையாக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முருகையன் அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். அதைப்போல நான் சார்ந்திருக்கும் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் திரு. தங்கமணி அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் நானும் இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். அந்தத் தீர்மானங்களை ஒட்டி நான் சொல்லுகின்ற சில ஏற்பாடுகளையும் செய்தால் பெரும் பணத்துறையாக இந்தத் துறை மாறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய காட்டிலாகா சம்பந்தப்பட்ட வரையில் பல் வேறு வகைகளிலே மரங்கள் வெட்டப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் காட்டு வளத்தைப் பெருக்கத் தக்க அளவுக்கு திட்டமிட்டு மரங்களை வளர்த்தாக வேண்டும். இப்போது பொதுப்பணித் துறையின ரால் ஆற்றங்கரை ஓரங்களிலும் வாய்க்கால் கரைகளிலும் மற்ற மற்ற இடங்களிலும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அந்தப் பொறுப்பை வனத் துறையே ஏற்று செய்தால் நல்லது என்பது என்னுடைய கருத்து.

மரங்களை அதிக அளவில் வளர்ப்பதன் மூலம் மழை பெய்யவைக்க லாம், உணவுப் பஞ்சத்தைப் போக்கலாம், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்களைக் கொடுக்கின்ற மரங்களை நட்டால் மூலப்பொருள் பற்றுக் குறை போகும் என்பதை எல்லாம் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கம் இவற்றை ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் கோடிக்கரை, தலைஞாயிறு காடுகள் இருக்கின்றன. அங்கே காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு அர சாங்கம் முன்வந்தால், அந்தத் தொழிலுக்கு ஏற்ற பல்வேறு வகையான மரங்களை ஏராளமாக வளர்க்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

அரசாங்கக் காடுகளில் சந்தன மரங்கள் களவு போகாமல் இருக்க தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு அரசு காவல்துறை மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக வனத்துறையில் பணியாற்றும் சிப்பந்திகளையே பார்த்துக்கொள்ளச் செய்யலாம். அதற்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களுக்கு களவு போகும் பொருட்களைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், அந்த பொருட்களின் மதிப்பில் 10 சதவிகிதம் கொடுப்பதாக—சன்மானமாகக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் நிச்சயமாக சந்தன மரங்கள் களவு போகாமல் இருக்க உதவி புரிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்கோனா தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று பல்வேறு மாநாடுகளிலே சொல்லி வருகிறார்கள். அதைக் கவனித்து அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக்கொடுக்க அர சாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனா தோட்டத் தொழிலாளர்கள் லீவ் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்று பல்வேறு விஷயங்கள் மூலமாக எடுத்துக் காட்டியிருக்கிறேன். மற்றச் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படுவதுபோல் இவர் களுக்கும் லீவ் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, சின்கோனா தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் சீரான நிலையில் இல்லை என்று அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் கல்வி பெறுவதற்கு நம்முடைய அரசாங்கம் குறிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்குத் தனியார் காடு என்று எடுத்துக் கொண்டால், நீலகிரி மாவட்டத்தில் ஓவாலியில் பிர்லாவுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக் கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அம்மாதிரியான நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்தி காட்டு வளங்களைப் பெருக்கினால் நிச்சயமாக இந்தத் துறை பணத்துறையாக மாறிவிடும்.

இன்றைக்கு பிர்லா எங்கே இருக்கிறார். நிலம் எங்கே இருக்கிறது? காடு எங்கே இருக்கிறது? தொழிற்சாலை எங்கே இருக்கிறது? என்று பார்க்க வேண்டும்.

தனியார் காடுகளைக் கையகப்படுத்துவதே சாலச் சிறந்தது.

கேரள அரசாங்கம் தனியார் காடுகளைக் கையகப்படுத்தியது. அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள். கோர்ட்டிலே வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்ற விபரத்தையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, தனியார் காடுகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது போல உள்ள சலுகைகள் தனியார் தோட்டத் தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. அந்த அளவுக்குச் சம்பளமும் கொடுப்ப தில்லை. அதுபற்றிய பல கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. நம் முடைய வன இலாகா அமைச்சரவர்கள் அதைப் பரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத் துறையிலே பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்கள் தங்கள் ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த மாநாட்டிலே அமைச்சர் ஓ. பி. ஆர். அவர்களும் கலந்துகொண்டு, அவர்களுடைய கருத்தைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொள்ளிடம் கரையில் வன இலாகாவுக்குச் சம்பந்தப்பட்ட இடத்தை விவசாயத்திற்குத் தந்திருக்கிறார்கள், குத்தகைக்கு. அதில் அரிசனங் களுக்குக் கிடைக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. எனவே, அதைப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி வன இலாகா சம்பந்தப்பட்ட வரையில் நாம் பல்வேறு விஷயங்களை எடுத்துக்கொண்டால், காட்டு வளத்தைப் பாதுகாக்க வேண்டும். வருமானம் வரத்தக்க வகையில் பல்வேறு மரங்களை வளர்க்க வேண்டும். சந்தன மரங்கள் களவு போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். தனி யாருக்கு மரங்களைக் குத்தகைக்கு விடுவதை விட இந்த இலாகாவின் மூல மாகவே விற்பனை செய்தால் நல்லது.

[திரு. எஸ். வடிவேல்] [1974 மார்ச் 30

50,000 ரூபாய்க்கு குத்தகை எடுத்து 4 லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்கிறார்கள். மரத்தைக் கழிக்க வேண்டுமென்று சொல்லித்தான் குத்தகை விடுகிறோம். குத்தகை எடுப்பவர்கள் அந்த மரங்களை அடியோடு வெட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் பல மரங்கள் விருத்தியாகாமல் போய் விடுகின்றன.

அது மட்டுமல்லாமல் மழை வளமும் குறைந்து விடுகிறது. அதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். கே. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற காட்டிலாகா மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாட்டினுடைய பொருளாதாரத்தில் காடுகள் இன்றையதினம் மிக முக்கியமான இனமாக இருக்கின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலே ஏராளமான காடுகள் மலைப் பகுதிகளிலே இருந்தாலும், தமிழ்நாட்டில் அது போதுமான அளவுக்கு இல்லை என்பதையும், சற்றுக் குறைவாகவே உள்ளது என்பதையும் நாம் உணருகிறோம். தமிழ்நாட்டினுடைய காட்டிலாகாவிலிருந்து அரசாங்கத்திற்குப் பெருமளவில் வருமானம் கிடைப்பது சந்தன மரங்களிலிருந்துதான். ஆகவே, இந்தச் சந்தன மரங்களை நமது காடுகளில் இன்னும் அதிகமான அளவுக்கு வளர்க்க நடவடிக்கை எடுத்தால் அதிகமான வருமானம் நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காடுகளிலே இருந்து வாழ்க்கை வசதிகளுக்கு வேண்டிய பொருட்களும் வாசனைத் திரவியங்களும் கிடைக்கின்றன. மிளகு, நீலகிரி தைலம், இலவங்கம் போன்ற பொருட்கள் எல்லாம் இன்றையதினம் விலை உயர்ந்து கிடைப்பதே அரிதாகிவிட்டது. அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

**திரு. எஸ். கே. சுப்பிரமணியம் :** பர்மா, கானடா போன்ற நாடுகளை இன்றையதினம் நாம் பார்க்கிறோம். அந்த நாடுகளிலே காடுகள் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. காடுகளும் மிக அடர்த்தியாக இருக்கின்றன. அப்படி அடர்த்தியான காடுகளாக இருந்தாலும், நிலம் சம பரப்பளவாக இருப்பதால் போக்குவரத்து வசதிகளும் நல்லமுறையிலே இருக்கின்றன. அங்கே வருகின்ற காட்டாறுகள் மூலமாக அவர்கள் போக்குவரத்துக்கு வசதி செய்துகொள்கிறார்கள்.

ஆனால், நம் நாட்டிலுள்ள காட்டுப் பகுதிகள் அடுத்துள்ள மலைகளாகவும், ஆழ்ந்த பள்ளங்களாகவும் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இப்படி இருக்கிற காரணத்தினால் போக்குவரத்து வசதிகள் மிகவும்



1974 மார்ச் 30] [திரு. எஸ். கே. சுப்பிரமணியம்]

கஷ்டமாக இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அந்த நிலைமைகளைக் கவனித்து, அந்தக் காடுகளில் பாதை அமைப்பதற்கான வேலையை நம் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வருகிற விஞ்ஞான முன்னேற்றத்தில் இன்று நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் சர்க்கார் பல இனங்களை அபிவிருத்தி செய்கின்றன. அது வரவேற்கக் கூடியதாகும். அப்படி வரவேற்கின்ற நிலைமை இருந்தாலும்—காடுகளில் தீ இடுதல், மரங்களைத் திருடுதல் போன்ற காரியங்கள் நடைபெறாமல் இருக்க போதுமான கண்காணிப்பு அவசியம் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட குற்றங்களைச் செய்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வனவிலங்கு பாதுகாப்பை முன்னிட்டு 6 வனவிலங்கு சரணாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இன்றையதினத்தில் நாம் பார்க்கிறோம். இன்னும் சர்க்காருடைய சட்டத்தை மீறி சிலர் வனவிலங்குகளை அழிக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். அப்பேர்ப்பட்டவர்களைத் தண்டித்து வனவிலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சத்தியமங்கலம் தொகுதி ஏறத்தாழ முழுப்பகுதி காட்டு இலாகாவுக்குச் சொந்தமான பகுதியாக இருக்கிறது. தாளவாடி வட்டாரம், கத்தியாத்தூர் மலைப் பகுதியில் சந்தன மரங்கள் கிடைக்கின்றன. சத்தியமங்கலத்தில் பல்லாண்டு காலமாக சந்தன மரக் கிடங்கு இருந்து வருகிறது.

மிகவும் பின்தங்கிய பகுதியாகிய சத்தியமங்கலம் நகரத்தில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அண்டை மாநில எல்லையோரப் பகுதியில் உள்ள அதற்கு நமது சர்க்கார் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல இந்தத் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து அந்தப் பகுதியிலுள்ள காட்டு நிலங்களைக் கடந்த வருடம் விவசாயம் செய்வதற்குச் சில பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மாவட்டத்தைச் சேராத வேறு பல பகுதிகளில் இருந்து வந்தவர்களுக்குக் கொடுத்த காரணத்தினால் இன்றைய தினத்தில் அந்த நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் கிடக்கின்றன.

அந்த நிலங்களை அந்தப் பகுதியிலேயே இருக்கிற ஏழை எளியவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுப்பார்களானால் விவசாயம் செய்ய வசதியாக இருக்கும். உற்பத்தியும் பெருகும். அந்த வகையில் எங்களுடைய பகுதி நிலங்களை, எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து அந்தப் பகுதியில் யானையினுடைய தொந்தரவு விவசாயிகளுக்கு அதிகமாக இருந்து வருகிறது. கடலில் செல்கிறவர்கள் இறந்து போனால் உதவித்தொகை வழங்குகிறோம்.

மலைப் பகுதியில் வாழ்கிற மக்களுடைய உடைமைகள் யானைகளினால் அழிக்கப்படுகின்றன. அதோடு சிலர் உயிரையே இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறபோது அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு சர்க்கார் உதவித் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து, என் பேச்சை இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். இனி பேசுகிற உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்கு மேல் போகாமல் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து திரு. கோதண்டராமையா பேசுவார்.

*THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I request you to give me at least seven minutes, because I come from a Forest area. Five minutes are not sufficient.

I take this opportunity to say a few words in support of my Cut Motion No. 185 on Demands—Cinchona and Forests.

As per the notes given to us, the income derived from Forests is very meagre compared to the vast area of forests in our State and also the number of good costly trees in the forests. There is good scopo for increasing the forest income.

With regard to the forests in Dharmapuri district like fenkanikottah and Hosur, I have to say a few words. Compared to other forests in our State, the forests in Dharmapuri district have a separate and special significance, separate fascination and importance. They stand in Mysore table land. There are lakhs of acres under forests. One-fourth of the area of Dharmapuri district are covered by forests. In Hosur and Denkanikottah, there are about two lakh acres of forests. They have beautiful and costly trees. They bring good wealth to the Government. The forest adjoin vast areas along the Cauvery banks. The Cauvery flows in the southern border of Denkanikottah taluk close to Hogenakkal-Cauvery for 30 miles. The water flows into the Mettur. The whole mettur aroa is covisod with silt The whole surface area is washed into Cauvery by rivers and going into Mettu Dam. Unless proper steps are taken, the Government is going to face a difficult situation with regard to removal of silt in Mettur



Dam. Separate arrangements should be made to construct contoury bunds and other bunds in order to see that the surface soil is not washed away and deposited in the Mettur Dam.

With regard to borest income, the hon. Member Thiru Murugaiyan has made suggestions with regard to sandalwood trees. The same thing holds good with regard to sandalwood trees in our area also. For instance, in our areas, the trees are on hill slopes and they are likely to be washed away. There are a good number of beautiful sandalwood trees and the Government can get a lot of money from them. When we have such good forests and beautiful sandalwood trees, why should we not have a factory there ?

We have been planning and planning but nothing concrete has been done. We are not able to start even a small factory. In Denkanikotta we have been pleading for a factory for so many years. In spite of our various representations, the factory has not been started there. There is also good scope to increase the number of trees in that area. I request the Hon. Minister to take early steps to start a factory there.

Another thing is this. Just now we are introducing teakwood plantation in our forests there. The teak plantation and cinchona plantation should be increased. The cutting of trees is going on. The trees are cut and taken away. These things should be taken into consideration by the Hon. Minister.

I would like to say a word with regard to forest roads.

Ours is a forest area and there are a number of roads in the forests. A number of roads pass through forests. Whenever the roads are to be laid in the villages through them the Forest Officers do not give permission and they ask the party to contact the Collector for necessary permission. The Collector says that the Forest Officers have to give permission because they come under forests. They do not come to any conclusion. Due to that, our difficulty is increasing and we are not able to get roads at all. Therefore, the question should be considered separately and wherever necessary permission should be given to formation of roads so that the buses can pass through such roads from village to village and this human problem can be solved easily.

Then with regard to Bamboo, there are a lot of good variety of bamboos in our area. During question hour, the Hon. Minister for Forests replied that there is a proposal to start a paper factory somewhere. We have been pleading with the Government for more than 25 years that the paper industry should be started in Denkanikottah Town. We have very good variety of bamboos in large numbers. But I am surprised to find that they are going to have a factory somewhere else. When the State and Central Governments have declared Dharmapuri district as a backward area, why not the Government start this factory in Denkanikottah or in Hosur in Dharmapuri district. This question may be taken into consideration.

There is also good scope for lac industry in our taluks. Nearly 30 years back, when our revered Rajaji was Chief Minister, lac industry was in prosperous condition in our taluks. But, later on, the industry was given up. I do not know the reason. They can start the lac cultivation and put up a factory in Dharmapuri district. The lac produced in Dharmapuri district is the best. This question was raised by me at the District Development Council meetings. If a lac industry is started there, it will give some income to ryots and good income to the Government. It will be a main source of income for the Government.

Next I come to the poor people. There are large quantities of dried sticks and leaves in the forests. Poor people want them because it is very difficult to get firewood. Wherever they are available, they can be given to these poor people free of cost.

Then, in the forests, there are plenty of meadows and pasture grounds. The pastures are used by the cattle in the Hosur taluk and the neighbouring areas and they go to the Denkanikottah forests during summer because they get plenty of grass there and so they should be encouraged to graze in the pasture grounds but at the same time it should be seen that meadows are not destroyed.

Then I come to the theft of trees. It is a very serious thing. Every day, every week and every month sandalwood trees and other trees are cut down and they are converted into charcoal and sent to the Karnataka State. If these trees are cut indiscriminately, I think within half a century there will not be a single forest in the Denkanikottah and Hosur taluks. As these are forest and border areas, just like the smuggling of rice, wood is also being smuggled



to the Karnataka State. Therefore, the Government should make special arrangements to see that trees are not cut down.

(Mr. Speaker sounded the gong).

Then with regard to rubber, rubber plantations should be introduced along the Cauvery borders. There is plenty of scope for these plantations. As there are more forest areas in the Hosur and Denkanikottah taluks and as these forests are fascinating and are full of utility, the Government should increase the area of these plantations. With these words, I close my speech.

6. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு இன்று கூடி கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது.—

| | |
|---|---|
| **1-4-74** (திங்கள்) .. | கேள்வி நேரம் இல்லை.<br>தேர்தல்கள்.<br>மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.<br>இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>பல்வகை.<br>இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.<br>ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.<br>மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| **2-4-1974** (செவ்வாய்). | மாவட்ட நிர்வாகம்.<br>நிலவரித் துறை.<br>மாநில ஆயத் தீர்வை.<br>முத்திரைத் தாள்கள். நிர்வாகம்.<br>பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிர்வாகம். |
| **3-4-1974** (புதன்) .. | சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. |
| **4-4-1974** (வியாழன்) | பால் வழங்குத் திட்டங்கள்.<br>1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.<br>கதர். |

முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி நம்முடைய மாநிலத்திற்கு அதிகக் கோட்டா வழங்கவேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

அடுத்து, பாரஸ்டு டிபார்ட்மெண்டில் கார்டு கிளார்க்குகள் இருக்கிறார்கள். அவர்களை ரேஞ்சர் அளவுக்குப் பதவி உயர்த்த வேண்டும்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் அமைச்சரவர்களுக்குத் தெரியும். மேட்டுக்கடை அஞ்சுகாலிப்பட்டி ரோடு, கன்னியாபுரம் அஞ்சுகாலிப்பட்டி ரோடு இவைகளை வன இலாகா சாலையாக மாற்றிவிட்டால் அதற்கருகில் மலை இருக்கிறது, அங்கேயிருந்து போய்வர மிகவும் சவுகரியமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. எம். ஏ லத்தீப் :** தலைவர் அவர்களே, வனத்துறை, சிங்கோனாத் துறைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துறை செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. சுமார் 130 லட்சம் ரூபாய் அளவிற்கு அன்னியச் செலாவணி பெற்றிருக்கிறோம். லாபத்திலே நடைபெறுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு அறிவித்து இருக்கிறார்கள், அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இந்தத் துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நாம் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே நம்முடைய மதிப்பீட்டுக்குழு பரிசீலித்து அந்தத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்த்தப்பட வேண்டும், வீட்டு வசதிகள் செய்யப்பட வேண்டும், அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவர்களைப் படிக்கச் செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும், குளிர் பிரதேசத்திலே வாழ்கிறவர்கள் என்ற காரணத்தினாலே வால்பாறை போன்ற இடங்களிலே உள்ள தொழிலாளர்கள் குளிரால் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினாலே அவர்களுக்கு சத்துணவு அதிகமாகத் தேவைப்படுகிறது, குளிர் பிரதேசங்களிலே இருப்பவர்களுக்கு அவர்களுடைய உடம்பிலே அதிகமான சூடு இருக்க வேண்டும், அப்படி சூடு இருக்கச் செய்வதற்கு அவர்களுக்கு நல்ல உடைகள் கொடுக்கப்பட வேண்டும், நல்ல சத்துணவு கொடுக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று மதிப்பீட்டுக்குழு பரிந்துரைகளைச் செய்திருந்தும் கூட அதைச் செய்யாமல் இருப்பதை—நான் கூட அங்கு சென்று அவர்களுடைய நிலைமைகளைப் பார்த்திருக்கிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் குடிசைகள்கூட சரியாக இல்லை—ஒரு நடவடிக்கை கூட எடுத்துக் கொள்ளாமல் இருப்பதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன்.



அந்தத் தொழிலாளர்களின் நலன்களில் அதிக அக்கறை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். தனியார் துறையிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்யாவிட்டால் நாம் அவர்களைக் கண்டிக்கிறோம். ஆனால் பொதுத் துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு மதிப்பீட்டுக்குழு செய்த பரிந்துரைகளை நிறைவேற்றவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் எங்களைப் போன்றவர்கள் வருத்தம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை எல்லாம் அவர்களுக்கு செய்து கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காட்டுத் துறையை எடுத்துக் கொண்டால், நாம் இந்த அறிக்கையிலே பார்க்கிறோம், நிலப்பரப்பு விஸ்தீரணத்திலே இன்றைக்கு நம்முடைய தேவை 33 சதவீதம் என்று இருந்தாலும்கூட அதிலே பாதியளவுக்குக் கூட இல்லாமல் 16 சதவீதம் என்ற அளவிற்குத் தான் காடு இருக்கிறது. அந்தப் பகுதிகூட ரெக்கார்டுகளிலே, ரெவின்யூ ரிக்கார்டுகளிலே, சர்க்கார் ரெக்கார்டுகளிலே இருக்கலாமே தவிர இன்றைக்கு அந்தக் காடுகளில் பெரும்பகுதி அழிந்துவிட்டன, அழிந்துவருகின்றன என்பதை நாம் கவனித்தாகவேண்டும். நீங்கள் இதற்காக ஒரு சர்வே செய்யக்கூடிய முறையிலே இந்தத் துறையிலேயே ஒரு தனிக் குழுவை அமைத்தோ அல்லது ஒரு தனித்துறையை அமைத்தோ இந்த மாநிலத்திலே எந்தெந்த இடங்களிலே காடுகள் ரிக்கார்டு செய்யப்பட்ட முறையில் எவ்வளவு இருக்கின்றன, எவ்வளவு அழிக்கப்பட்டிருக்கின்றன, விஸ்தீரணம் என்ன, நாம் இன்னும் அழிவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும், இன்னும் காடுகளை வளர்க்க என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆராய்ந்து நம்முடைய தேவை 33 சதவீதம் என்று இருப்பதால் குறைவாக இருக்கக் கூடிய நிலைமையை மாற்ற மேலும் எந்த எந்த நிலங்களைக் காடுகளாக மாற்றலாம் என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து அதைப்பற்றி ஒரு அறிக்கை அவர்கள் அரசுக்குத் தந்தால் அந்த அறிக்கையின் அடிப்படையிலே அரசு துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காடுகள் இல்லைவிட்டால் நாடு அழிந்து விடும். அது நமது நம்பிக்கை மட்டுமல்ல, நாட்டு வளத்திற்கு முக்கியமானதும் கூட. காடுகள் போனால் மழை போய்விடும், கார் போய்விடும், காட்டுவளம் குறைந்துவிட்டால் நாட்டு வளம் குறைந்து விடும்.

வனமகோத்சவம் கொண்டாடுகிறோம். எங்காவது ஒரு செடியை நட்டுவிட்டு மறுநாளே அந்தச் செடி அழிந்துவிடுகிறது. இருக்கின்ற காடுகளை மரங்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லையென்பதுதான் என்னுடைய வருத்தமாகும். நான் இதைக் குற்றச்சாட்டு என்ற முறையிலே சொல்லவில்லை, ஆதாரம் இருக்கிறது, என்னுடைய தொகுதியிலே காடுகள் அதிகமாக இருக்கின்றன, அங்கே மிருகத்தனமாகக் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் அறிவேன். அதையெல்லாம் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்,

ரிசர்வ் காடுகள், அன்ரிசர்வ்டு காடுகள் என்று இரண்டு விதமாகப் பிரிக்கிறார்கள். ரெவின்யூ துறையினுடைய காடுகள், இனாம் காடுகள், ஜமீன் காடுகள் என்றெல்லாம் பிரித்துவைக்காமல் ஒரே அளவில் எல்லாவற்றையும் வனத்துறையிலே எடுத்துக்கொண்டு அவர்களே கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வ் காடுகள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. அதை வனத்துறையினர் கவனிப்பதில்லை, அவர்களைக் கேட்டால் அது எங்களுடைய ஜூரிஸ்டிக்ஷனில் வராது என்று சொல்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க வேண்டும்.

நம்முடைய உறுப்பினர் அவர்கள் சந்தன மரங்களையொட்டி இருப்பவர், எப்பொழுதும் அவற்றைச் சந்தித்துக் கொண்டிருப்பவர், அவர்கள் ஜவ்வாது மலைப் பகுதியின் ஓரத்திலே இருப்பவர்கள், அவர்களுடைய தொகுதிக்குட்பட்டும் அது வருகிறது. அவர்களுக்கு அதிலே அக்கறை உண்டு, நுணுக்கங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும் அடுத்த தொகுதியிலே இருக்கிற எனக்கும் தெரியும். இப்பொழுது இருக்கின்ற சந்தன மரங்களில் 99 சதவீதம் தனியாகவே எடுத்துக்கொண்டு போகிறார்கள். மீதியிருக்கிற ஒரு சதவீதத்திலே தான் அரசுக்கு வருமானம் வருகிறது என்று தான் சொல்ல முடியும். அதைத் தடுப்பதற்கு என்ன என்ன முறைகளைக் கையாள்கிறோமோ அதைவிடச் சிறந்த முறைகளை திருடுகிறவர்கள் கையாள்கிறார்கள்.

திருடர்களுக்கு ஒத்துப் போகக் கூடிய அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதிகாரிகளைப் போடுகிறோம், ரேஞ்சு ஆபீஸர்களைப் போடுகிறோம், ஆனால் அவர்கள் அந்தத் திருடர்களோடு ஒன்றிவிடுகிறார்கள். ஒட்டிப் போய்விடுகிறார்கள், அதனால் திருடு போவதைத் தடுக்க முடியவில்லை. அதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய பகுதிக்கே வேண்டுமென்று நான் வாதாடவில்லை. எங்கள் பகுதியிலே விளைகிற காரணத்தினால் எங்கள் பகுதியிலே தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையிலே நான் சொல்லவில்லை, அப்படிச் சொன்னால் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்டம் போட்டி என்ற நிலைமை எல்லாம் வரும். ஆகவே அந்த அடிப்படையிலே நான் இல்லை. அங்கே வைக்காமல் வேறு இடத்திலே வைத்தால் சந்தனக் கட்டைகளை எல்லாம் அங்கே எடுத்துச் செல்வதற்கு டிரான்ஸ்போர்ட் சார்ஜ் எவ்வளவு செலவாகும், எவ்வளவு பிராக்டிக்கல் டிபிகல்டிஸ் அதைப் போன்று வரும் என்பதைப் பார்க்க வேண்டும். அவையெல்லாம் இல்லாதமுறையிலே மூலப்பொருள் கிடைக்கின்ற இடத்திலேயே தொழிற்சாலை வைப்பதுதான் பொருத்தமாகும்.

அது மட்டுமல்ல அந்தப் பகுதி பொருளாதாரத்திலே பின்தங்கிய பகுதி, ஆலங்காயம் பகுதியிலோ அல்லது வேறு பகுதியிலே அங்கே ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



கடைசியாக ஒரு வார்த்தை, இந்த கூப் காண்ட்ராக்ட் முறையை அடியோடு ஒழிக்க வேண்டும், காண்ட்ராக்ட் என்று எடுக்கிறார்கள் ஜவ்வாது மலையிலே மின்சாரம் கொடுக்க கம்பங்களை மரங்களை வெட்டுகிறோம், அவர்கள் காண்ட்ராக்ட் என்ற பெயராலே எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு போய்விடுகிறார்கள், வெட்டப்பட்ட மரங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் அந்த லைசென்ஸை வைத்துக்கொண்டு, ஆகவே கூப் காண்ட்ராக்ட் முறையை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதனால் வருகின்ற வருமானம் தேவையில்லையென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சின்கோனா, வனம் ஆகிய துறைகளைப்பற்றி . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வளவு நேரம் வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : 20 நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றரை மணிக்குள் முடித்துவிடுங்கள்.

திரு. நா. வே. குருசாமி : சைனிங் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சைனிங் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : என் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வனத் துறையிலேயிருந்து வருகின்ற வருமானமானது எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால் இந்த மாநிலத்திலே இருக்கிற அனைத்துச் செலவுகளுக்கும் வருவாயைத் தரக்கூடிய ஒரு துறையாகக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற துறையாக இருக்கிறது.

வனத்தின் பரப்பு எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு நமக்கு இல்லை என்றாலும் கூட இன்றைய தினம் 33 சதவீதம் வேண்டுமென்று சொன்னாலும் கூட 16 சதவீதம் தான் இருக்கிறது என்றாலும் தொடர்ந்து இதிலே அதிக வருமானத்தை எதிர்பார்க்கக் கூடிய நிலைமையிலேதான் நாம் இருக்கிறோம்.

வனம் எந்த அளவிற்கு இன்றைக்குப் பாதுகாக்கப் படுகிறது என்று சொன்னால் அதைப் பாதுகாக்கத் தவறியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பகுதியிலிருந்து வனம் அழிக்கப் பட்டு வருகிறது. பல்வேறு பிளான்டேஷன்களுக்காக மரங்களை வெட்டுவதன் மூலமாக வனங்கள் அழிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையால் நமது மாநிலத்தில் இயற்கை வளம் குறைகிறது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 30

அது மட்டுமல்லாமல், வனத்தையொட்டியிருக்கின்ற அணைப்பகுதிகள் நிரப்பப்பெற்று விவசாயம் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதை இந்த அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நமது வனப் பரப்பை இன்னும் அதிக அக்கறையோடு காக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாம் அடிக்கடி தீ விபத்தால் பாதிக்கப்படுகிறது என்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். ஏப்ரல், மே மாதங்களில் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப வனத்தைப் பாதுகாப்பதற்குத் தவறுவதால் அடிக்கடி இயற்கையாக வருகின்ற தீயினால் பல இலட்சம் ரூபாய் பெறுமானத்திற்கு தீ விபத்திற்குள்ளாகி பாழாகிறது.

ஆகவே, இதற்கு முன்னெச்சரிக்கையாக, "பிரிவென்டிவ் மெஷர்ஸ்" என்ற வகையில் குலசேகரப் பட்டிணத்திலேயாவது அல்லது தடிக்காரன் கோணத்திலேயாவது ஒரு தீ அணைப்பு நிலையத்தை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்படாமல் பாதுகாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கேயுள்ள ஒன்றிரண்டு சிரமங்களைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். பி. டப்ளியூ.டி.ஐயைச் சேர்ந்ததும், ரெவின்யூ இலாக்காவைச் சேர்ந்ததுமான சில பகுதிகள் ஃபாரஸ்டு இலாக்காவோடு சேர்ந்திருக்கிறது. பல்லாண்டுக் காலமாக, அந்தப் பகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் கைவசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வன இலாக்காவைச் சேர்ந்தவர்கள் அது தங்களைச் சார்ந்தது என்று "ஃபோர்சபிள் பொசஷன்" எடுப்பதால் வன இலாக்காவிற்கும், ஏழை எளியவர்களுக்கும் இடையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ரெவின்யூ இலாக்கா சொல்கிறது, அது ரெவின்யூ இலாக்காவைச் சேர்ந்தது என்று. ரெக்கார்டுகளிலும் ரெவின்யூ இலாக்காவை சேர்ந்தது என்றுதான் இருக்கிறது. ஆனால் வன இலாக்கா அதைப் பலாத்காரமாகப் பிரித்தெடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அதில் நன்றாகப் பரிசீலனை செய்து வன இலாக்காவைச் சாராத நிலம் ஏழை எளியவர்களின் கைவசம் இருந்தால் அதை வைத்து உழுது கொண்டிருக்கிறார்கள், அதை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வன இலாக்காவைச் சார்ந்த தடுப்புச் சாவடிகள் வனத்திற்கு 20 மைல்கள் அல்லது 30 மைல்களுக்கு வெளியே இருக்கிறது. வனத்திற்கும் அந்தத் தடுப்புச் சாவடிக்கும் இடையில் பட்டா நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. இன்றைக்குள்ள சட்டத்தின்படி அந்தப் பிரதேசத்திலிருந்து தனியாருக்குச் சொந்தமான தழை, உரம் போன்றவற்றை செக் போஸ்டைத் தாண்டி எடுத்துச் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் ஃபாரஸ்ட் ஆபீசரிடமிருந்து ஃபார்ம்-2 லைசென்ஸ் பெற வேண்டும்.



1974 மார்ச் 30] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பத்து ரூபாய் பெறுமானமுள்ள வண்டி விறகைக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னாலும்கூட குலசேகரத்திலிருந்து 70 மைல்களுக்கு அப்பால் இருக்கும் திருநெல்வேலிக்குச் சென்று டி.எஃப்.ஓ. விடமிருந்து பர்மிட் வாங்கி விறகைக் கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதற்காக இருக்கின்ற சட்டத்தை மாற்றி தனியார் தோட்டங்களிலிருந்து தங்கள் சொந்தத் தேவைக்காகக் கொண்டுசெல்கின்ற தழை, உரம், விறகு போன்றவற்றிற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாதவாறு அந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வனத்தில் மலைஜாதி மக்கள் தங்கள் உற்பத்திக்காக வனத்தைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கின்ற காணிக்காரர்கள் என்ற சமுதாயத்தினர் வனத்தில் வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சட்ட ரீதியாக வனத்தில் ஒரு பகுதியில் விவசாயம் செய்து வாழ்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன. ஆனால் இன்றையதினம் அவர்கள் இந்த அரசின் அதிகாரிகளால் அதிகமாகத் துன்புறுத்தப்படுகிறார்கள்.

சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிலப்பரப்பளவு அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் நாம் ஆங்காங்கே பிளான்டேஷனுக்காக வனத்தை ஒதுக்குவதால் அந்தப் பக்கத்து காணிக்காரர்களுக்கு அவர்கள் அனுபவித்த நிலம்கூட கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இன்றையதினம் அவர்களுக்கு எந்த அளவில் தேவைப்படுகிறதோ அந்த அளவிற்கு வனத்தில் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

சில காணிக்காரர்கள் தங்களுக்கு இயலவில்லை என்றால் உதவிக்காக வேறு கூலிக்காரர்களை வைத்து விவசாயம் செய்ய அதிகாரிகள் அனுமதிக்க மறுக்கிறார்கள். ஆனால் அந்த அதிகாரிகளுக்கு மாமூல் கொடுப்பது என்ற முறை இருக்கிறது. மாமூல் கொடுத்துத்தான் அவர்கள் மற்றவர்களை வைத்து விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது.

காணிக்காரர்கள் என்றால் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டப்படி விவசாயம் செய்வதற்கு உரிமையிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு உதவிக்காக மற்றவர்களை அனுமதிக்கக் கூடாது என்ற முறையை நிச்சயமாக இந்த அரசு மாற்றியாக வேண்டும்.

அவர்கள் செய்யும் விவசாயத்தின் பலனை அவர்கள் வெளி மார்க்கெட்டிற்குக் கொண்டு சென்று விற்கக்கூடாது என்ற ஒரு முறையும் இருக்கிறது. அப்படி விற்கவேண்டுமென்றால் 70 மைல்களுக்கு அப்பால் உள்ள நெல்லையிலிருந்தும் டி.எஃப்.ஓ. விடமிருந்து அனுமதி வாங்கினால்தான் முடியும். அது அவர்களால் இயலுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

ஒரு வேளை சில தவறுகள் ஆங்காங்கே ஏற்படலாம். அதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, இந்த அரசில் இருக்கும் அதிகாரிகளுக்கு இருக்கிறதே தவிர, காணிக்காரர்களால் அவ்வளவு தூரம் சென்று டி.எஃப்.ஓ. வைப் பார்த்து அனுமதி வாங்கி இந்த விளைபொருள்களைச் சந்தையில் விற்பது என்பது இயலாத காரியமாகும்.

ஆகவே, நியாயமான விலையில் விற்பதற்கு வழிவகை இல்லாமல் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இதற்காக இல்லறைக்கிருக்கிறது சட்டதிட்டங்களைப் பரிசீலித்து தேவைப்பட்ட மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்கேயுள்ள இரப்பர் பிளான்டேஷனில் இந்த அரசுக்கு எவ்வளவு வருவாய் வருகிறது, இன்னும் எந்த அளவிற்கு வர இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். அந்த இரப்பர் ப்ளான்டேஷனைல் இந்த அரசு அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். இப்பொழுதுள்ள முறை ஒருவேளை திருப்திகரமாக இருந்தாலும் இன்னும் அதை ஸ்பெஷலைஸ் செய்ய ஒரு கார்ப்பரேஷன் அமைக்க இருக்கிறதா என்பது தெரியவில்லை. ஒருவேளை கார்ப்பரேஷன் அமைத்தால் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதன் தலைவராக வாவதற்கு வழியில்லாமல் இருக்கிறதோ என்னவோ இதுவரை கார்ப்பரேஷன் அமைக்காமல் இருக்கிறது. அப்படி ஒரு கார்ப்பரேஷனை அமைத்தாலும் சரி, அமைக்காவிட்டாலும் சரி இரப்பர் ப்ளான்டேஷனைப் பொறுத்தவரையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ப்ளான்டேஷனில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியம் இப்பொழுது கொடுக்கப்படவில்லை. கேரள மாநிலத்தில் இதே தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதை விட மிகவும் குறைவாகத்தான் இவர்களுக்குக் கொடுக்கிறோம் என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட தனியார் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தைக் கூட அரசு தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நாம் கொடுக்கவில்லை என்பதும் இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். அதோடு போனஸ் சட்டம் குறுக்கே இருப்பதால் நம்முடைய அரசுத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க மறுக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் தனியார் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு (மணி யடிக்கப்பட்டது) எனக்கு 15 நிமிஷங்களாவது கொடுக்க வேண்டும். எனவே, 15 சத விகிதம் போனஸ் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது சொல்கிறார்கள். அது அத்தனையையும் ஒரே டிவிஷனாகப் பார்த்தால் யீல்ட் தொடங்கி 7 ஆண்டு களுக்குப் பிறகுதான் போனசுக்கு அவகாசம் இருக்கிறது என்று சொல் கிறார்கள். முழுவதையும் ஒரே யூனிட்டாக எடுத்தால் நாம் இன்னும் ஒவ்வொரு வருஷமும் அந்த ப்ளான்டேஷனை விஸ்தரித்துக் கொண்டு போகிறோம். நிச்சயமாக அடுத்த காலத்தில் அதை நிறு[illegible] போன



தில்லை. ஆகவே, போனஸ் கொடுக்கக்கூடாது என்ற நிலைதான் ஏற்படும் எனவே, ஒவ்வொரு டிவிஷனையும் ஒரு யூனிட்டாகக் கருதி எந்த ஆண்டு யீல்ட் வந்ததோ அதிலிருந்து 7 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுள்ள சட்டத்தின்படி போனஸ் கொடுக்க வழியில்லை என்றால் அரசாங்கத்தில் "எக்ஸ்கிரேஷியா பேமெண்ட்" கொடுப்பது போல் அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த வன இலாக்காவில் பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன என்பதை நான் கழிந்த ஆண்டு இந்த மன்றத்தில் கூறியிருக்கிறேன். ஆனால் இதுவரையிலும் அவற்றிற்கு எந்தவிதமான பரிகாரமும் தேடியதாகத் தெரியவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றி என்னுடைய நண்பர் டாக்டர் மோசஸ் அவர்கள் விரிவாகக் கூறினார்கள். அமைச்சரவர்கள்கூட அதற்கு மறுப்போ அல்லது அதற்குக் குறுக்கீட்டோ ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, இந்த அரசு அத்தனை ஊழல் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக் கொண்டதாகத்தான் தெரிகிறது. மறுக்கவும் இல்லை.

ஏனென்றால் விஜிலன்ஸ் எஸ்.பி., சி.ஐ.டி. போன்ற இலாக்காக்கள் விசாரித்து அறிக்கை கொடுத்திருக்கிறது. ஏன் அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். நடவடிக்கை எடுத்து இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது ஏன் நீங்கள் நடவடிக்கை மேற் கொள்ளத் தயங்குகிறீர்கள்? இதிலிருந்து நான் கூறுவது என்ன வென்றால், அமைச்சர் உட்பட இந்த அரசில் உள்ள பல்வேறு அதிகாரிகளும் இந்த ஊழலுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: தலைவரவர்களே, இந்த மாதிரி குற்றச்சாட்டைச் சாட்டக்கூடாது என்பது விதிமுறைகளைப் பார்த்தால் தெரியும். அமைச்சர் உட்பட அதிகாரிகள் ஊழலுக்கு உடந்தை என்று சொல்வது தவறு. தனிப்பட்ட முறையிலே ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால் தெளிவாகச் சொல்ல வேண்டும். பல முறை இந்த சட்டமன்றத்தில் சொல்லியாகிவிட்டது, அவர்கள் வழக்கறிஞர்.

[பிற்பகல் 1-30]

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் இந்தக் குற்றச்சாட்டை சொல்ல வேண்டுமென்றால் டாக்டர் மோசஸ் கூறியதைத் திரும்பவும் விரிவாகச் சொல்ல வேண்டும்.

திரு ஜே. ஜேம்ஸ் : என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் சன் பேப்பர் மில்லுக்கு அரசாங்கத்திலிருந்து ஈத்தல் குறைந்த விலைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால் அதை விட்டுவிட்டு குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே.

திரு. ஜே. ஜேம்ஸ்: **I am really sorry that the Han. Speaker wants me to explain. My charge is that it is given at a lower rate.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : லோயர் ரேட் என்று சொல்லுகிறீர்கள். எவ்வளவு பேர் என்னென்ன ரேட்டில் கேட்டார்கள். அப்படிக் கேட்டதில் குறைவான ரேட்டுக்குக் கேட்டவரை விட்டுவிட்டு கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

**Thirumathi T.N. Anandanayaki : We got reports that it has been given to the Minister concerned or his contractor. To ask that were the tenders, whether they have given it to the highest or lowest tendered—all these informations will be in the hands of the Hon. Minister**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினரைப் பற்றியோ, ஒரு அமைச்சரைப் பற்றியோ குற்றம் சாட்டுகிற நேரத்தில் மன்றத்தில் ஒரு மரபு கடைப்பிடிக்கப்படுகிறது. அது பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். இன்னாரைப் பற்றிக் குற்றம் சாட்டப்போகிறேன் என்று முதலில் கூறி அனுமதி பெற்ற பிறகுதான் குற்றச்சாட்டைக் கூற வேண்டும். அநியாயமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள் ? நான்கு பேர் டெண்டர் கேட்டார்கள், நியாயமான டெண்டருக்குக் கிடைக்கவில்லை என்பதற்கு ஆதாரம இருக்கிறதா ? ஆதாரம் இல்லாமல் பேசுவது முறையல்ல.

திரு ஜே. ஜேம்ஸ்: நான் சொன்னது குறைந்த ரேட்டுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது, இன்று இருக்கும் மார்க்கெட் நிலவரத்தை விடக் குறைந்த ரேட்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்க்கெட் ரேட் இதுதான் என்று டிசைட் பண்ணுவது யார் ? இது குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று யார் டிசைட் பண்ணுவது ?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த மாதிரிக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கிற சமயத்தில் 'ஐ சார்ஜ்' என்று சொல்லக்கூடாது.

(குறுக்கீடு—எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டும்).

திரு ஜே. ஜேம்ஸ் : எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டுமென்றால் பண்ணிக் கொள்ளுங்கள். அதுதான் நடந்துகொண்டே இருக்கிறதே. இன்று இருக்கும் மார்க்கெட் விலையில் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றம் சாட்டுகிற நேரத்தில் சாட்டு கிறவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்க வேண்டும். அதற்கான ஆதாரம் இல்லாமல் தொடர்ந்து பேசுவது முறையல்ல. வேறு ஏதாவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : அடுத்து, பள்ளகுளம் எஸ்டேட்டில் உள்ள 9,000 எக்கர் நிலம் பற்றி வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது......

திரு கே. டி. கே. தங்கமணி : ஒன்றரை மணிக்கு மேலாகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் நாம் உட்கார போகிறோம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடலாம்.

திரு ஜே. ஜேம்ஸ் : சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. என் பொஸஷனை இன்னொருவரிடத்தில் விட்டுக் கொடுத்தோம் ? இன்றைய தினம் அந்த 9000 எக்கர் நம் கைவசம் இருக்கிறதா இல்லையா ? அப்படி இல்லையென்றால் நம் கைவசம் எடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை. (மணியடிக்கப்பட்டது).

கடைசியாக வனங்களிலிருந்து தங்கள் சொந்த உபயோகத்துக்காக சிறிய சுள்ளி மூட்டைகளை தலைச்சுமடாக எடுத்துக்கொண்டு போக இது வரையில் ப்ரீ பாஸ் கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப் போது அதை நிறுத்தியிருக்கிறார்கள். எவ்வளவோ நடக்கின்றன. அதை எல்லாம் விட்டுவிட்டு ஏழைகள் தங்கள் உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டு போகிற சுள்ளிகளுக்கு பாஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டது நியாயமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து இதுவரையில் யார் யார் தங்கள் சொந்த உபயோகத்திற்காக ஹெட்லோட் விறகு எடுத்துக்கொண்டு சென்றிருந்தார்களோ அவர்களுக்கு அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சின்கோனா, காட்டுவளம் ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கைகளின் பேரில் நம் மாமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு நல்ல கருத்துரைகளை ஆற்றியிருக்கிறார்கள்.

[திரு. ஓ. பி. இராமன்] [1974 மார்ச் 30

பேப்பர் மில்களுக்கு, எந்தெந்த மில்களுக்கு எவ்வளவு கொடுக்கிறோம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மூங்கில் டன் ஒன்றுக்கு ரூ. 2 என்ற அளவில் கொடுக்கிறார்கள். ஈத்தா ப்ளான்டேஷன் போல் வளர்ப்பதல்ல. மூங்கிலைக் கூட வளர்க்கிறோம்.

இந்த ஈத்தா என்பது ஒரு விதமான புல். அது தானாகவே வருகிறது. அதை எடுக்காவிட்டால் காய்ந்து போய் விடும். அதை யார் வேண்டுமென்று கேட்டாலும் ஸன்பேப்பர் மில்ஸ்க்கு கொடுக்கிற அதே விலையில் தாராளமாகக் கொடுக்கலாம். ஆகவே, வேண்டுமென்றே அமைச்சருக்குச் சொந்தமான மில், ஆகவே குறைந்த விலையில் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமுடையதல்ல. யார் வேண்டுமானாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மூங்கில் டன்னுக்கு ரூ. 2 என்று கொடுக்கிறார்கள். ஆகவே, நோக்கம் கற்பித்து, வேண்டியவர் ஆகவே வேண்டுமென்று இப்படிக் குறைந்த விலையில் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வது தவறு.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். அமைச்சர் அவர்கள் மூங்கில் டன்னுக்கு 2 ரூபாய் என்று கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு மூங்கிலுக்கு நான்கு ரூபாய் என்று சொல்கிறார்கள் மதுரையில். டன்னுக்கு இரண்டு ரூபாய் என்பது புரியவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நம் மாநிலத்தில் அல்ல. அண்டை மாநிலத்தில் அப்படிக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தன்னிலை விளக்கம். ஸன் பேப்பர் மில்லில் மூங்கில் பயன்படுத்துவதில்லை. மூங்கில் பயன்படுத்துவது வேறு. ஒரு கே. ஜி. கூட மூங்கில் பயன்படுத்துவதில்லை. பேப்பருக்காக அங்கு மூங்கில் வாங்கவும் இல்லை.

எனக்கு பங்கு இருக்கிறது என்று கருத வேண்டாம். என் உறவினர்களுக்கு இருக்கிறது. மூங்கிலைத் தவிர வேறு எந்தவிதமான மூலப் பொருளைக் கொண்டு பேப்பர் தயாரிக்க முடியும் என்று 1942-ல் பல சோதனைகள் செய்து பார்த்தோம். சாதாரணமாக நெல்லை மாவட்டத்தில் பக்கத்து மாவட்டத்திலும் விறகாக எரிக்கப்படுவது உடை மரம். அந்த உடை மரமானது பேப்பருக்குத் தகுந்ததாக இருக்கிறது என்று கண்டுபிடித்தது காங்கிரஸ் ஆட்சியில் தான். எத்தனை தூரம் அந்த உடை மரத்தை பேப்பருக்காகப் பயன்படுத்துவது என்பது இடையூறாக இருந்தது. அப்படி இடையூறு இருந்தபோது வேறு சிலர் வந்து எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிறார்களே என்று சொன்னபோது திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொன்னார்கள். ஒரு மாதம் தருகிறேன், உங்களில் வேறு யாருக்காவது உடை மரத்தைப் பயன்படுத்தி பேப்பர் ஆக்க முடியும் என்று சொன்னால் எடுத்துக்கொள்ளுங்கள் என்று. அப்படி 6 மாதம் பொறுத்திருந்த பிறகுதான் கடைசியில் அந்த உடை மரம் ¼ பங்கு இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.



1974 மார்ச் 30]

டாக்டர் எச். வி. ஹாண்டே : நாங்கள் வேறு கேட்டோம். நீங்கள் வேறு ஏதோ இர்ரெலவண்டாகப் பேசுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் இர்ரெலவண்டாகப் பேசவில்லை. ஜேம்ஸ் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்குத் தன்னிலை விளக்கம் கொடுத்தார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்த உடை மரம் காட்டிலாகாவிலிருந்து வாங்கப்படுவது இல்லை. உடை மரம் என்பது தனியார் காடு நிலத்திலிருந்து பெறப்படுவது. காட்டிலாகாவில் உடை மரம் வளர்க்கப்படுவதும் இல்லை. வாங்கப்படுவதும் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அங்கத்தினர் கேட்டபோது, மூங்கில் இல்லை, ஈத்தா என்று திருத்திக் கொண்டேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, பொதுவாக காட்டிலாகாவிலிருந்து தொழிற்சாலைகள் பெறக்கூடிய மரங்கள் எந்த அளவுக்குப் பட்டுவாடா செய்யப்படவேண்டும் என்பதை உணர்ந்து, தொழிற்சாலைகள் உருவாக்கவேண்டுமென்பதற்காக அரசு கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்து இருக்கிறது. இது இன்று நேற்று அல்ல. 10, 15 ஆண்டுகளாக இது செயல்பட்டுவருகிறது.

இந்த மாநிலத்திலே மட்டுமல்ல, எல்லா மாநிலத்திலும் கொடுத்து வருகிறார்கள். தமிழ்நாட்டிலும் 6, 7 தொழிற்சாலைகளுக்கு ரா-மெட்டீரியல்ஸ் என்று கருதப்படும் காரியங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. சேஷசாயி பேப்பர் மில்ஸ், டான் இந்தியா லிமிடெட், சௌத் இந்தியா விஸ்கோஸ், சன் பேப்பர் மில்ஸ் என்று இப்படிப் பல தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கிறோம். இதையெல்லாம் அவர்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொடுப்பது அல்ல. சீராகக் கலந்துகொண்டு ஆண்டுக்கு இவ்வளவு கொடுக்கமுடியும் என்று விவாதித்து அந்தத் தொழிற்சாலை வளர வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. இதிலே தனிப்பட்ட எந்தவித நோக்கமும் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் காட்டு இலாகாவைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு அதனுடைய வருவாய் சென்ற ஆண்டைக் காட்டிலும் $1\frac{1}{2}$ கோடி அதிகமாக இருக்கிறது. இந்த வருவாயை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் புனைப்புத் திட்டங்கள் போட்டு எந்த அளவுக்குக் காட்டு நிலங்களை வளர்க்கலாம் என்பதற்கும் திட்டங்கள் போட்டு, அதை நிறைவேற்றி வருகிறோம்.

காட்டு மரங்களில் இரண்டு வகை; ஒன்று தானாக வளருபவை. மற்றொன்று, பிளான்டேஷன் முறை, நாமாகவே வளர்ப்பது. இந்த முறையில் காட்டிலாகா நல்ல முறையில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. பல லட்சக்கணக்கான நிலங்களில் பல்வேறு விதமான பயிர்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், அரசாங்கத்தின் மூலம் வளர்க்கப்படும் நிலங்கள்......

தேக்கு 8301 எக்கர், மாட்ச் உட் 8,000 எக்கர், யூகாலிப்டஸ் 28,000 எக்கர், ப்ளூகம் 7,500 எக்கர், பேம்பூஸ் 6,000 எக்கர். சந்தனமரம் 1,000 எக்கர், பார்ம் பாரஸ்ட்ஸ் 39,000 எக்கர், முந்திரி 7,500 எக்கர், ரப்பர் 6,000 எக்கர், தேயிலை 506 ஹெக்டேர் என்ற அளவில் செய்கிறோம். இப்படி மொத்தமாகப் பார்த்தால் 1 லட்சத்து 432 ஹெக்டேர் பயிரிடு கிறோம். அதாவது கிட்டத்தட்ட 2½ லட்சம் எக்கர் பயிரிடுகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டும் போதாது, இன்னும் இருக்கின்ற தரிசு நிலங்கள்—மலைப் பகுதிகளில் இருப்பவை—ஆகியவற்றையும் உபயோகித்து மரம் நடலாம் என்ற திட்டம் ஒன்றையும் உருவாக்க இருக்கிறோம். இந்த ஆண்டு—சென்ற ஆண்டே அமைச்சரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன, அமைச் சரவை ஒப்புதல் கொடுக்கப்பட்ட "பாரஸ்ட் கார்ப்பரேஷன்"—ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதன் மூலம் பல உப பொருள்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு இருக்கிறோம்.

திருச்சியை மையமாகக் கொண்டு, இராமநாதபுரம், திருச்சி, புதுக் கோட்டை, தென்னுற்காடு ஆகிய நான்கு மாவட்டங்களில் அடங்கிய காடு களைக்கொண்டு ஒரு "பாரஸ்ட் கார்ப்பரேஷன்" 1½ லட்சம் எக்கர் பரப்பளவில் பிளான்டேஷன் செய்ய இருக்கிறது.

இதன் மூலமாக, மூங்கில், கேஷுனட், யூகலிப்டஸ், சவுக்கு முதலிய மரங்கள் வளர்க்கப்படும். இது வளர்க்கப்பட்டால் ஒரு காகிதத் தொழிற் சாலை ஆரம்பிப்பது என்ற திட்டத்தையும் உருவாக்கியிருக்கிறோம் என் பதை இந்த நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக முக்கியமான பிரச்னை ஒன்றை திரு. தங்கமணி அவர்கள் சென்ற ஆண்டு பேசினார்கள், இந்த ஆண்டு வடிவேல் அவர்களை விட்டுப் பேசச் சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். தனியார் நிலங்களை எடுக்க வேண்டும். சென்ற ஆண்டே சொன்னார்கள், கேரளத் தில் எடுத்து இருக்கிறார்கள். இங்கே எடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். இந்த அரசு கொள்கை அளவில் தனியா நிலங்களை எடுப்பது என்பதில் மறு யோசனை கிடையாது. எப்படியும் "பிரைவேட் பாரஸ்ட்" நிலங்களை எடுப்பது, அதிலே எந்த விதமான மாற்று அபிப்பிராயமும் கிடையாது.

அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. இனம் நிலங்கள், ஜன்மி நிலங்கள் என்று இருக்கின்றன. இந்த ஜன்மி ஆக்டை 9-வது ஷெட் யூலில் சேர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் நடப்பு ஆண்டிலேயே திருத்தம் கொண்டு வர இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கேரளத்தில் தனியார் காடு நிலங்களை எடுப்பதற்கு அவர்கள் நிறைவேற்றிய சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டு, அவர்கள் அதைச் சரி என்று சொல்லியிருக்கிறார்கள். அது மாதிரிச் சட்டம் கொண்டு வர ஏற்பாடு உண்டா ?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சட்டம் 9-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டால் நல்லது என்று நம்முடைய சட்ட இலாக்கா சொன்ன பிறகு, மத்திய அரசுக்கு எழுதினோம். இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலேயே சேர்த்துவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது கான்ஸ்டிடியூஷனல் முறைப்படி 9-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : ஜன்மி ஆக்டைப் பற்றிச் சொல்லி விட்டு, கேரள ஆக்டைப் பற்றிச் சொல்லலாம் என்று நினைத்தேன். அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு என்ன காரியத்துக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை.

அதன் மூலம் 40,000, 50,000 எக்கர் நிலங்களை தனியார் வைத்திருந் தாலும், அந்த நிலத்தை விவசாயப் பொருள் உற்பத்தியைத் தவிர வேறு எதற்கும் உபயோகிக்கக் கூடாது. இந்தச் சட்டத்திலுள்ள வித்தியாசம் இது தான்.

9-வது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டால் காட்டுப் பாதுகாப்பு நிலமாகவும் வைத்துக் கொள்ளலாம். விவசாயத்திற்கும் உபயோகித்துக் கொள்ளலாம். விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய வகையில் எந்தெந்த நிலம் வரு கிறதோ அதை விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டு, மற்ற நிலங்களை காட்டிலாக்கா நிலங்களாக வைத்துக்கொள்ளலாம்.

அந்த அடிப்படையில் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் காத்திருக் கிறோம். இரண்டாண்டு காலமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதிலே சட்டச் சிக்கல் வந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் ஆலோ சித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஓரிரு ஆண்டுகளிலே முடிவு செய்து விடுவோம். அப்படிப் பார்த்தால் காட்டிலாகா நிலங்கள் அதிக மாக இருக்கிறது. 4 லட்சம் எக்கருக்கு மேல் பிரைவேட் பாரஸ்ட் லேண்ட் இருக்கிறது. இன்றைக்கு ஒன்றும் அவர்களை அந்தக் காடுகளை அழித்து விடமுடியாது.

ஓவாலி எஸ்டேட் பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். அது பிர்லாவுக்குச் சொந்தம் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லித்தானா ஓவாலி எஸ்டேட் பிர்லாவுக்குச் சொந்தம் என்று தெரியும்.

This has already been notified under the Private Forests Protection Act.

அவர்கள் அழித்து க்கொண்டு போக முடியாது. நம்முடைய அனுமதி இல்லாமல் அவர்கள் அதை அழித்துவிட முடியாது. ஆகவே, 9-வது ஷெட்யூலில் உருகிறபோது அல்லது நாம் எடுக்கிறபோது அந்த நிலங்கள் கிடைக்கிற உத்தரவாதம் இருக்கிறது. தனிப்பட்ட பாரஸ்டாக இருந்தாலும் அழிக்க முடியாது.

(பிற்பகல் 2-00)

அடுத்தபடியாக இந்த சின்கோனாவைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். சின்கோனாவைப் பொறுத்த அளவில் இந்த ஆண்டு கிட்டத்தட்ட ரூ. 5½ லட்சம் லாபகரமாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். 5,000 ஏக்கரில் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில் இப்பொழுது தான் அதற்கு மார்க்கெட் வந்திருக்கிறது. இந்த ஆண்டு 1973-74-ல் 15 லட்சம் வரும் என்று அதிகாரிகள் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். இடையிலே ஏற்பட்ட இடர்ப்பாடு காரணமாக கிராக்கி இல்லாமல் இருந்தது. அதனால் வெளி நாடுகளில் விற்கமுடியாமல் இருந்தது. இப்பொழுது மீண்டும் அதற்கு மார்க்கெட் வந்து, கிராக்கி வந்திருக்கிறது. மேலும் வெளி நாடுகளிலிருந்து பட்டையை இறக்குமதி செய்து அதை பினிஷ்டு ப்ராடக்டாக செய்து வெளி நாடுகளுக்கு அனுப்பக் கூடிய முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி இந்தத் தொழிற்சாலை மிகவும் விருத்தி அடைவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

ரப்பர் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். கன்யாகுமரியில் 5,000 ஏக்கர் பயிர் செய்யப்படுகிறது. சின்கோனா, ரப்பர் ஆகிய தோட்டங்களில் 1,000 தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

மற்ற தனியார் தோட்டங்களில் கொடுக்கக்கூடிய அளவுக்குக் கொடுப்பதில்லை என்றும் சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் சம்பள உயர்வு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் பார்த்து அதன் அடிப்படையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரம் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுகிற அளவுக்கு உத்தரவு பிறப்பிப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பொதுவாக உறுப்பினர்கள் பேசிய எல்லாப் பிரச்னைகளுக்கும் நான் பதில் சொல்லாவிட்டாலும்கூட—நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் நான் அதிகம் பேச விரும்பவில்லை—இந்த மான்யத்தின் மீது உறுப்பினர் சொன்ன கருத்துக்களை யெல்லாம் நல்ல அறிவுரைகளாக ஏற்றுக்கொண்டு, இந்த இலாகா விருத்தி அடைவதற்கு என்ன யோசனைகளைச் சொன்னார்களோ அதையெல்லாம் திட்டத்தின் மூலம் செய்து கொடுக்க முயல்கிறேன் என்ற உறுதியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இடையிலே கூடப் பேசினார்கள், நமது ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். ஏதோ 16 ரேஞ்சர்கள் பிரமோஷன் ஃபைல் அரை ஆண்டுக்கு ஃபைலை நிறுத்தி வைத்துவிட்டோம், திண்டுக்கல் எலெக்ஷனுக்காக பணம் கேட்டோம் என்றெல்லாம் குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். நான் இதைப் பற்றி அதிகாரிகளிடம் கேட்டதில் 16 ரேஞ்சர் பிரமோஷன் ஃபைல் என்று





அப்படி ஒரு ஃபைலே இல்லை என்று தான் சொல்கிறார்கள். மேலும் விவரம் தெரிந்து சொன்னால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பொதுவாக இந்த மன்றத்தில் நாங்கள் குற்றம் சாட்டினால் ஆதாரத்தை வைத்துக் கொண்டு வந்திருக்கக்கூடிய தகவல்களை வைத்துக் கொண்டு சொல்கிறோம். அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அப்படி இல்லை யென்று சொல்கிறார்கள். ஏதோ அதிகாரிகள் சொல்வதை மட்டும் வைத்துக் கொண்டு பதில் சொன்னால் நாங்கள் இங்கே பேச வேண்டிய தேவை இல்லை. ஏதாவது குற்றச்சாட்டு சொன்னால் அமைச்சர் அவர்கள் அதில் கொஞ்சம் தீவிரமாகக் கவனம் செலுத்தி விவரங்களை அறிந்து பதில் சொல்ல வேண்டும். எனக்குக் கிடைத்திருக்கக் கூடிய தகவல் 16 ரேஞ்சர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கக்கூடிய ஃபைலை 6 மாதம் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்குச் சம்பந்தம் இல்லாத அந்த இலாகாவிலுள்ள உயர் அதிகாரி ஒருவரை அனுப்பி விசாரித்தால், மேலும் அமைச்சர் அவர்களுக்குத் தகவல் கிடைக்கும்.

நான் சோர்ஸைச் சொல்ல முடியாது. ஏனென்றால் அவர்கள் கஷ்டப்படுவார்கள்.

மதுரையைப்பற்றி நான் முதல் அமைச்சர் அவர்களுக்குப் பதில் கொடுத்தாகிவிட்டது. மறுபடியும் உங்களுக்குப் பதில் கொடுக்கத் தேவையில்லை. அதை மறுபடியும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். உதயகுமார்............

திரு. என். கணபதி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிறபொழுது ஏதோ அவர்களுக்கு வருகிற தகவல் உண்மையான தகவல்கள் போலவும், அதிகாரிகள் கொடுக்கின்ற தகவல்கள் தவறான தகவல்கள் போலவும், அந்தத் தகவலை அமைச்சர் அவர்கள் சொல்வது கூடாது என்று குற்றம் சாட்டிக் கொண்டு வருகிறார்கள். அது எந்த வகையிலே நியாயம் என்பதற்கு தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் கொடுக்கின்ற தகவல் தப்பு என்று நான் சொல்லவில்லை. எங்களுக்குக் கிடைக்கக்கூடிய தகவல்களை வைத்துக் கொண்டு நாங்கள் குற்றச்சாட்டைச் சொன்னால், அதை மொட்டையாக இல்லை என்று சொல்லாமல்—அரசாங்கம் நல்ல வகையில் நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் கிடையாது—முதல் அமைச்சருக்கும் எனக்கும் நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லியாகி அது முடிந்துபோய் விட்டது.

பிறகு அவர் எலக்ட்ரிஸிடி பற்றி பேசுவது உண்மை இல்லை என்று நான் சொல்லவேண்டி வரும். அதைப்பற்றி யெல்லாம் மறுபடியும் பேசாமல் பாயிண்டைப்பற்றிப் பேச வேண்டும்...........

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் சொல்வதற்குக் காரணம், 16 ரேஞ்சர்ஸ் பிரமோஷன் ஃபைல், அதை நிறுத்தி வைத்து, தேர்தலுக்கு பணம் கேட்டேன் என்று என்னை இழுத்துப் பேசிய காரணத்தினால் தான் விடை சொல்ல வேண்டும் என்று சொன்னேன். அப்படி ஒன்றும் ஃபைல் இல்லை என்றுதான் கூறினேன். மேலும் விவரம் சொன்னால் அதைப் பற்றி விசாரிக்கிறேன்.

ஆனால் ரேஞ்சர் பிரமோஷன் ஃபைல் நிறுத்தி வைக்கப்பட்டது, அதிகாரிகளிடம் தேர்தலுக்குப் பணம் கேட்டேன் என்றெல்லாம் குற்றம் சொல்வது பொருத்தமற்ற குற்றச்சாட்டாகும். அந்த மாதிரியெல்லாம் ஒன்றுமே இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய நல்ல ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு காட்டு இலாக்கா மேலும் செவ்வனே பணியாற்றும் என்று சொல்லி, பலவிதமான கருத்துக்கள் பேசப்பட்டிருக்கின்றன, அவற்றிற்கெல்லாம் நேரம் இல்லாத காரணத்தினால் பதில் சொல்லவில்லை. உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியங்களை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : பிர்லாவுக்குச் சொந்தமான ஓவாலி எஸ்டேட் பற்றி—14,000 எக்கர் இருக்கிறது—அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது0 அது அவர்களுடைய பொசஷனில் இல்லை, நம்முடைய பொசஷனில் தான் இருக்கிறது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுடைய பொசஷனில் இருந்தாலும் நம்முடைய கண்ட்ரோல் இருக்கிறது என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : It has been notified under the private Forets Protection Act. அவர்கள் வெட்டிவிட முடியாது. இலாக்கா அனுமதியின்றி அவர்கள் மரங்களை வெட்டிவிட முடியாது. மரங்களை வெட்டி அழித்துவிட முடியாது.

திரு. எஸ். வடிவேல் : அவர்கள் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மினிஸ்டர் சொன்னது—நாம் நோடிஃபை பண்ணியிருக்கிறோம். நம்மை அறியாமல் வெட்ட முடியாது. எந்தவிதமான காட்டையும் அழிக்க முடியாது.

திரு. எஸ். வடிவேல் : அமைச்சர் அவர்கள் நம்முடைய பெர்மிஷன் இல்லாமல் வெட்ட முடியாது என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், நம்முடைய பர்மிஷன் இல்லாமல் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் பொசஷன் இருப்பது போலவே எல்லாம் நடக்கிறது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வெட்டக் கூடாது. வெட்டினால் நடவடிக்கை எடுக்கிறோம்.



திரு ஜே. ஜேம்ஸ் : ரப்பர் பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு சம்பள உயர்வு கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், போனஸ் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். போனஸ் பிரச்னை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதியதாக ஒன்றும் சொல்ல வேண்டாம்.

திரு ஜே. ஜேம்ஸ் : நான் அப்பொழுதே சொன்னேன். ஆக அரசாங்கம் அவர்களுக்கு போனஸ் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் எக்ஸ் கிரேஷியா பேமெண்ட் கொடுப்பதற்கு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : ஏற்கனவே டீ, சிங்கோனா ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறேன். இந்த ரப்பர் தொழிலாளர்களிடமிருந்து உயர்வு கொடுக்க வேண்டும் என்ற விண்ணப்பம் இன்னும் வரவில்லை. எக்ஸ் கிரேஷ்யா பேமெண்ட் கொடுக்கிற நிலை இப்பொழுது இல்லை. தொழில் விருத்தி அடைந்து கொண்டு வருகிறது. விருத்தி அடைவதைப் பொறுத்து, லாபகரமாக வருமானால், அரசாங்கம் அதன் அடிப்படையில் சம்பள உயர்வு கொடுக்கும்.

மாண்புமிகு போவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி, திரு. பெ. சௌந்திரபாண்டியன் ஆகியோர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 25-க்குக் கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், எஸ். வடிவேல், கு. அ. பொம்மன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

"நிதிக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,88,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. சௌடி எ ஓ. சுந்தரபாரதி இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண். 44-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி...

திருமதி த. ந. அனந்தநாயகி, திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ், கு. அ. பொம்மன், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரைவயின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,03,44,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 54–க்கு கொடுக்கப்பட்டிருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, கே. டி. கே. தங்கமணி, எம். ஏ. லத்தீப், ஆகியோர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,60,03,900–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறு நாள் 1–4–1974 திங்கட்கிழமை யன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 2–09–யளவில் ஒத்திவைக்கப்பட்டது.**

---



## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

'Nil.'

### *B. Reports, Notifications and other Papers.*

142. Notification issued with G.O. Ms. No. 7569, Revenue, dated the 27th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deed to be executed in favour of the Government by the Madura Mills Company, Limited, Madurai.

143. Notification issued with G.O. Ms. No. 7218, Revenue, dated the 3rd December 1973 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deeds to be executed in favour of the Mudaliar Educational Trust Erode.

144. Notification issued with G.O. Ms. No. 4880, Revenue, dated the 14th August 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the Endowment deed to be executed in favour of the Sree Ayyappa College, Managing Committee, Kanyakumari District.

145. Notification issued with G.O. Ms. No. 7359, Revenue, dated the 13th December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 on the instruments of transfer of debentures to be issued in the form of stock Certificate and Promissory notes by the Tamil Nadu Housing Board.

146. Notification issued with G.O. Ms. No. 7571, Revenue, dated 27th December 1973 in regard to remission of stamp duty and registration fees in respect of the Mortgage deeds to be executed in favour of the Government by the licensees of arrack shops for thel ease year 1973–74.

*147. Note on Demands under Land Revenue (English and Tamil).

*148. The TamilNadu Appropriation, Bill 1974 (L.A. Bill No.12 of 1974).

149. Sixth Report of the Committee on Government Assurances (Fifth Assembly).

---

* Cut Motions Circulated Separately.

[illegible] Members on 28th March 1974.

# இணைப்பு I.

(175-ம் பக்கத்தில் 689-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க).

(அ) சென்னை மாநகரிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலுள்ள அவசர மருத்துவ ஊர்திகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

| | மருத்துவமனையின் பெயர். | அவசர மருத்துவ ஊர்திகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | அரசினர் பொது மருத்துவ மனை, சென்னை .. | 3 |
| 2. | அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை | 2 |
| 3. | அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை. | 2 |
| 4. | அரசினர் மனநோய் மருத்துவ மனை, சென்னை | 1 |
| 5. | அரசினர் கண்நோய் மருத்துவ மனை, சென்னை | 1 |
| 6. | அரசினர் ராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை | 2 |
| 7. | அரசினர் கஸ்தூரிபாய்காந்தி மகளிர்—குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை. | 1 |
| 8. | அரசினர் ராஜா சர் ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவ மனை, சென்னை. | 1 |
| 9. | மகப்பேறு—மகளிர் நோய் இயல் நிலையம்(Institute of Obstetrics and Gynaecology) அரசினர் பெண்கள், குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை. | 2 |
| 10 | குழந்தைகள் நல நிலையம்—குழந்தைகள் மருத்துவ மனை, சென்னை. | 1 |
| 11. | அரசினர் காசநோய் நலம்பேண் மருத்துவமனை, தாம்பரம். | 1 |
| | | 17 |

(இ) சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்குத் தேவை ஏற்படும்போது அவசர மருத்துவ ஊர்திகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த மருத்துவமனைகள் அனைத்திலுமுள்ள வண்டிகளின் எண்ணிக்கையை ஒருசேர உயர்த்துவதற்கு அதிகச் செலவாகும்; எனவே, முன்னுரிமை அடிப்படையில் இந்த வண்டிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளது.



*(a) Details of Ambulance Vans available in the Teaching Hospitals in Madras City.*

| | *Name of the Institution.* | *Number of Ambulance Vans.* |
|---|---|---|
| 1. | Government General Hospital, Madras .. | 3 |
| 2. | Government Stanley Hospital, Madras .. | 2 |
| 3. | Government Kilpauk Medical College Hospital, Madras .. .. .. .. .. .. | 2 |
| 4. | Government Mental Hospital, Madras .. | 1 |
| 5. | Government Opthalmic Hospital, Madras .. | 1 |
| 6. | Government Royapettah Hospital, Madras .. | 2 |
| 7. | Government Kasturiba Gandhi Hospital for Women and Children, Madras .. .. | 1 |
| 8. | Government Raja Sir Ramaswamy Mudaliar's Lying-in-Hospital, Madras .. .. .. | 1 |
| 9. | Institute of Obstetrics and Gynaecology, Government Hospital for Women and Children, Madras .. .. .. .. | 2 |
| 10. | Institute of Child Health and Hospital for Children, Madras .. .. .. .. | 1 |
| 11. | Government Tuberculosise Sanatorium, Tambaram .. .. .. .. | 1 |
| | | 17 |

(b) Steps will be taken to increase the number as and when quired by the institutions Concerned. Since the cost will be gh in increasing the number of vehicles in all the institutions one stretch, it will have to be considered on a priority basis.

[1974 மார்ச் 30

# இணைப்பு II

(208-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## காடுகள் துறை மானியக் கோரிக்கை

### கொள்கை விளக்கக் குறிப்பு

**1973-74-ல்** காடுகள் துறையின் நிர்வாகம் குறித்த முக்கிய கூறுகளும், 1974-75-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்.

காடுகள் முக்கியமானதும், புதுப்பித்துக் கொள்ளத் தக்கது மானவொரு இயற்கை வளத்தினை உடையது. காடுகள் நாட்டின் பொருளாதாரத்திலும், மக்களின் நல்வாழ்விலும் மிக முக்கிய மானதொரு பங்கு வகிக்கின்றன. மனித சமுதாயத்திற்குத் தேவையான தடிமரம், விறகு, பசுந்தழை உரம், பசை, குங்கிலியம் தோல் பதனிடத் தேவையான பொருட்கள், முக்கியமான எண்ணெய் வகைகள், உணவு பண்டங்கள், விதை மற்றும் பல வகையான பொருட்களையும் அவை தருகின்றன. காகிதம், அட்டை, ரேயான், தூள் அட்டை, தோல் பதனிடும் பொருள், வாசனைத் திரவியங்கள் போன்ற பல வகைப்பட்ட தொழில்களுக்கும் மரம் அறுக்கும் ஆலைகளுக்கும் இன்னும் பல தொழிற்துறைகட்கும் தேவையான மூலப் பொருட்களைக் காடுகள் தருகின்றன. இதுபோன்ற பல நேரடி நன்மைகள் பயப்பதுவும் தவிர, முக்கியமாக நிலவளப் பாதுகாப்பிற்கும், நிலத்தில் ஈரப் பசையைக் காப்பதற்கும், சுற்றுப்புறக் காற்று பாழ்படுதலைத் தடுக்கவும் காடுகள் பணிபுரிகின்றன. எனவே காடுகளைப் பாதுகாக்கவும், அவற்றை மேம்பாடு செய்யவும் முதன்மை முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

#### பரப்பு.

வனத் துறையின்கீழ் உள்ள காட்டு நிலங்களின் மொத்தப் பரப்பு 20,926 சதுர கிலோ மீட்டர். இதில் 17,258 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகளும், மீதமுள்ள 3,668 சதுர கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்களுமாகும். தேசிய வனக்கொள்கைப்படி குறைந்த பட்சம் 33 சதவீத நிலப்பரப்பு சீரான பொருளாதாரத்தின் பொருட்டு காடுகளாக இருக்க வேண்டும். ஆனால், இந்த மாநிலத்தில் 16 சதவீதம் மட்டுமே காட்டு நிலப்பரப்பாக உள்ளது.

#### காட்டு நிலங்களைப் பிற நோக்கங்களுக்கு பயன்படுத்துதல்.

1972-73-ல் 70 சதுர கிலோமீட்டர் காட்டு நிலங்கள் நிலமில்லா ஏழைகளுக்கெனவும், மற்ற வனவியல் சம்பந்தப்படாத தேவைகளுக்கெனவும் அளிக்க ஆணையிடப்பட்டது. விவசாயத்திற்கெனவும், மற்றும் வனவியல் அல்லாத பிற நோக்கங்களுக்கெனவும்



1974 மார்ச் 30]

காட்டு நிலங்களைத் தரவேண்டி இடைவிடாத பலமான கோரிக்கை இருக்கிறது. இருப்பினும், மாநிலத்தின் குன்றிய வன வளத்தைக் கருத்திற் கொண்டும், காட்டுப் பகுதிகளில் மேலும் ஊடுருவலைத் தடுக்க வேண்டிய தேவையினைக் கருதியும், மாண்புமிகு முதல் அமைச்சரின் தலைமையின்கீழ் கூடிய "மாநில உயர் மட்டக் குழு" மேலும் காட்டு நிலங்களை வனவியல் அல்லாத நோக்கங்களுக்கு குறிப்பாக நிலமில்லாத ஏழைகட்கு, தருவதில்லையென முடிவு செய்திருக்கிறது.

#### வரவும், செலவும்.

காடுகளிலிருந்து 1972-73ஆம் ஆண்டு கிட்டிய வருவாய் ரூபாய் 491 லட்சம்; 1973-74ஆம் ஆண்டு ரூபாய் 515 லட்சத்திற்கும் மேல் வருவாய் கிட்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. கிட்டத்தட்ட ரூபாய் 276 இலட்சம் வருவாய் தந்து சந்தனமரம் வருவாயில் பெரும் பங்கு தரக் காரணமாயிருந்தது. 1972-73-ல் தடி மரங்கள் மூலம் ரூபாய் 111 இலட்சமும், விறகு மூலம் ரூபாய் 101 இலட்சமும் கிட்டியது.

காடு வளர்ப்பு நீண்டகாலத் திட்டமாகும். இவைகளின் வளர்ப்புக்கு முதலீடு செய்து பயன் பெறுவதற்கு நீண்டகாலம் ஆகும். இருந்தும் முந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களின் வாயிலாக நமது மாநில வருவாயும், தொழில் வளர்ச்சியும் பெரிதும் மேம்பாடு அடைய அவை வழிகோலியுள்ளன. 1973-ல் முந்திரித் தோட்டங்களிலிருந்து ரூபாய் 27 இலட்சம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசினர் இரப்பர் தோட்டங்கள் வருவாய் தரத்துவங்கி, 1972-73-ல் இரப்பர் விற்பனை மூலம் ரூபாய் 14·27 லட்சம் கிடைத்துள்ளது. 1973-74-ல் ரப்பர் தோட்டங்களிலிருந்து ரூபாய் 25 லட்சம் வருவாய் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. வரப்போகும் ஆண்டுகளில் ரப்பர் பால் எடுக்கும் பரப்பு இன்னும் அதிகரித்து இதன் மூலம் குறிப்பிடத்தக்க அளவிற்கு வருவாய் அதிகரிக்கும். காடுகளின் அடிப்படையில் இயங்கி வரும் தொழில்களான காகித ஆலை, ரயான் தொழிற்சாலை போன்றவற்றிற்குத் தேவைப்படும் மூலப் பொருள்களான நீலகிரித் தைல மரம், கற்பூர மரம், சீகை, மூங்கில்கள் முதலியவற்றை காடுகள் தொடர்ந்து தந்து வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துவங்கிய கிராம நலக்காடுகள் இப்போது பயன்தரத் துவங்கியுள்ளன. கிராம மக்களுக்கு வேண்டிய விறகு, வெட்டு மரம் போன்ற தேவைகளை அவை பெரிதும் நிறைவு செய்து வருகின்றன.

1972-73-ல் வனத் துறையின் மொத்தச் செலவு ரூபாய் 427 இலட்சமாகும். 1973-74-ல் ரூபாய் 547 லட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச் செலவின் பெரும்பகுதி உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்தோடு காடுகளின் மேம்பாட்டுத்

திட்டங்களுக்கு என முதலீடு செய்யப்பட்டுள்ளது. தடி மரம், விறகு, தொழில்களுக்குத் தேவையான மரம் மற்றும் முக்கியமான காட்டுப் பொருள்கள் போன்றவற்றின் வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்யக் கருதி பெரிய அளவில் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. வளர்ச்சித் திட்டங்களுக்கென, 1972-73-ல் ரூபாய் 135 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் ரூபாய் 93 இலட்சம் மாநிலத் துறையின்கீழ் தொழில் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த தோட்டங்களை வளர்க்கவும், வனப் பண்ணைத் தோட்டங்கள், வனவள ஆராய்ச்சி வனத்திட்ட அலுவல்கள், விலங்குகளைப் பாதுகாத்தல், வைகை, மேட்டூர் அணைக்கட்டுத் திட்டப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு போன்ற இன்ன பிற பணிகளைச் செய்ய செலவிடப்பட்டது. மத்திய அரசு ஆதரவு அளிக்கும் திட்டங்களின்கீழ் 1972-73-ல் ரூபாய் 42 இலட்சம் செலவிடப்பட்டது. வன வள ஆய்வு, முந்திரித் தோட்டங்களில் பயிர்ப்பாதுகாப்பு, குந்தா, கீழ் பவானி அணைத் திட்டப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு, முந்திரித் தோட்டங்களைத் தீவிரமாக பேணுதல், முந்திரித் தோட்டங்களை மேலும் விரிவு படுத்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் வரட்சியால் பாதிக்கப்படும் பகுதிகட்கான திட்டத்தின்கீழ் காடு வளர்ப்பு பணிகள் ரூபாய் 11·94 இலட்சம் செலவில் 1972-73-ல் மேற்கொள்ளப்பட்டன. இதுவும் மத்திய அரசு ஆதரவு திட்டமாம்.

ஸ்ரீலங்கா அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டமும் வளர்க்க வனத்துறை முனைந்துள்ளது. இந் திட்டங்களுக்கு மத்திய அரசு நீண்டகாலக் கடனுதவி தருகிறது. இந்த மறு வாழ்வுத் திட்டங்களின்கீழ் 1972-73-ல் ரூபாய் 60·10 இலட்சம் செலவாகியது. இத்திட்டத்தில் 1973-74-ல் 486 ஸ்ரீலங்கா அகதிகளின் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

### காடுபடு பொருள்களைச் சார்ந்த தொழில்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கல்.

மாநிலத்திலுள்ள சில பெரிய தொழிற்சாலைகளுக்கு காடுகள் மூலப் பொருள்களை வழங்குகின்றன. 1972-73-ல் 50,896 டன் உலர்ந்த மூங்கில் சேலம் மாவட்டம், பள்ளிப்பாளையத்திலுள்ள சேஷசாயி காகித ஆலைக்கு வழங்கப்பட்டது. காகிதம் உற்பத்தி செய்ய தைலமரம் போன்ற கடின மரங்களையும் பயன்படுத்துவதில் இக்காகித ஆலை நாட்டம் செலுத்தி வருகிறது. 1972-73-ல் 20,000 டன் தைல மரக் கட்டைகள் வழங்க உத்திரவிடப்பட்டது. பாபநாசம் குன்றுகளிலிருந்து 'ஈத்தா' கழிகள் எடுத்துச் செல்ல திருநெல்வேலியிலுள்ள 'சன் காகித ஆலை' அரசுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. 1972-73-ல் இந்த ஆலை



5,332 டன் 'ஈத்தா' கழிகள் எடுத்துச் சென்றுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் சிறுமுகை என்னுமிடத்திலுள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார் ரேயான் கூழ் தயாரிக்க கற்பூர மரக்கட்டைகளையும், மிலாறு மரக்கட்டைகளையும் பயன்படுத்துகின்றனர். 1972-73-ல் நீலகிரி, கோடைக்கானல் குன்றுகளில் 1,292 ஏக்கர் கற்பூர மரத் தோட்டங்களும், 3,649 ஏக்கர் மிலாறுத் தோட்டங்களும் இந்தத் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டன. மேட்டுப்பாளையத்திலுள்ள டான் இந்தியா நிறுவனத்திற்கு தோல் பதனிடும் தொழிலுக்குத் தேவையான மிலாறுப் பட்டைகளையும் இத்துறை வழங்குகிறது. 1972-73ல் 5,794 டன் மிலாறுப் பட்டைகள் இந்தத் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது.

இவை தவிர ராஜபாளையத்திலுள்ள ''மதுரூஸ் சிப் போர்ட்ஸ்'' நிறுவனத்திற்கு இத்துறை மென் மரம் வழங்கியது. 357·50 டன் மென் மரம் வழங்கப்பட்டது.

### காடு வளர்ப்புக்கலைப் பயிற்சி.

வைகை அணையிலுள்ள காடுவளர்ப்புப் பயிற்சிக்கூடம் இத்துறையைச் சேர்ந்த வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. 1972—73-ல் 120 வனப் பணியாளர்களுக்கும், 59 வனக் காப்பாளர்களுக்கும் இப்பள்ளி பயிற்சி அளித்தது.

வனச்சரக அலுவலர்கட்கும், வன அலுவலர்கட்கும் மத்திய அரசினரால் முறையே கோவையிலும், டேராடூனிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### வன ஆராய்ச்சி.

வனத் துறையில் நல்ல முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படையாக நன்கு அமைக்கப்பட்ட சிறந்த ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அவசியமென கருதப்படுகிறது. வன ஆராய்ச்சிக்குப் பொறுப்பு வகிக்கும் மாநில வன இயல் பிரிவு, மர வளர்ப்பு பற்றியும் சில முக்கியமான மர வகைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறது. காடுபடு பொருள்களை மூலமாகக் கொண்டு செயல்படும் தொழில்களின் தேவையை நிறைவு செய்ய வெளிநாட்டு மர இனங்களைப் பெரிய அளவில் வளர்க்கும் சாத்தியக்கூறு பற்றி ஆராயும் பொருட்டு பல்வேறு இடங்களில் வெளிநாட்டு மர இனங்கள் பயிரிடப்படுகின்றன.

### வன விலங்குகள்.

தமிழ்நாடு எழில் மிக்க வன விலங்குகளையும், பறவைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கீழ்க்கண்ட ஆறு வன விலங்கு உய்விடங்கள் நமது மாநிலத்தில் உள்ளன :—

(1) முதுமலை வன விலங்கு உய்விடம்.

(2) முண்டந்துறை வன விலங்கு உய்விடம்.

(3) கோடிக்கரை வன விலங்கு உய்விடம்.

(4) கிண்டி மான் பூங்கா.

(5) வேடந்தாங்கல் நீர்ப்பறவைகள் உய்விடம்.

(6) ஆனைமலை வன விலங்கு உய்விடம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கிளிக்கூடு என்ற கிராமத்தில் ஒரு முதலைப் பண்ணையும் உள்ளது. இவ்வுய்விடங்கள் சரியானபடி பராமரிக்கப்படின், பெரிய அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வாய்ப்புடையன. ஆகவே இவர்களுக்குத் தேவையான பல வசதிகளை, முக்கியமாகத் தங்கும் விடுதிகள், சாலைகள், போக்குவரத்து வசதிகள் போன்றவைகளை இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு புதிய அளவில் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஹைதராபாத்தில் உள்ள பிராணியியல் பூங்காவை ஒத்திருக்கும் வகையில், வண்டலூர் ஒதுக்கக் காட்டுப் பகுதியில் வனத் துறையின் நிர்வாகத்தின்கீழ் ஒரு பிராணியியல் பூங்கா ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ஒரு தனி அலுவலர் இதற்கான திட்டமொன்றினைத் தயாரிக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டின் வன விலங்குகளுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிக்க, இந்திய அரசு 1972-ல் வன விலங்கு (பாதுகாப்பு) சட்டத்தை [1972-ன் மத்திய சட்டம் 53] இயற்றியுள்ளது. இச் சட்டத்தை இம்மாநிலத்திலும் கடைப்பிடிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த சட்டம் 1974 சனவரி 1–ஆம் தேதி முதல் இம்மாநிலத்தில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வனத்துறை, வன விலங்கு வார விழாவை 1973 அக்டோபர் திங்களில் வழக்கம்போல சென்னையிலும், மாவட்டங்களிலும் கொண்டாடியது. இவ்விழா வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியது.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல வளர்ச்சிப் பணிகள் இத் துறையால் மேற்கொள்ளப்பட்டன. நாம் இப்போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை துவக்க இருக்கிறோம். 1974–75 ஐந்தாம் திட்டத்தில் முதலாவது ஆண்டாகும். காடுகளைச் சார்ந்திருக்கின்ற தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைத் தருவதற்குகந்த தோட்டங்கள் மற்றும் விறகுக்கு பயன்படும் தோட்டங்கள் முதலியனவற்றை காட்டு நிலங்களிலும் காட்டுப் பகுதிகளன்றி வெளிப்புறத்தேயுள்ள கிராமத் தரிசு நி[illegible]



கள், குளங்கள் முதலிய இடங்களிலும் அதிக அளவில் வளர்ப்பது ஐந்தாம் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். வன விலங்கு பாதுகாப்பு மற்றும் மேம்பாடு முதலியனவும் தக்க இடம் பெற்றுள்ளன.

ஐந்தாம் திட்டத்தில் வனத் துறைத் திட்டங்களுக்கென மாநில அரசு திட்டங்களின்கீழ் ரூ. 800 இலட்சமும், மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்களின்கீழ் ரூ. 125 இலட்சமும் தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கென ரூ. 130 இலட்சம் மாநில அரசு திட்டங்களின் கீழும், ரூ. 85 இலட்சம் மத்திய அரசு உதவி தரும் திட்டங்களின் கீழும் ஒதுக்கப்பட்டுள்ளன. நான்காம் திட்ட காலத்தில் வனத் துறைத் திட்டங்களுக்கு மாநில அரசுத் திட்டங்களின்கீழ் ரூ. 396 இலட்சமும் மத்திய அரசு உதவி தரும் திட்டங்களின்கீழ் ரூ. 16 இலட்சமும் செலவிடப்பட்டன. மேலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கென மாநில அரசுத் திட்டங்களின்கீழ் ரூ. 65 இலட்சமும் மத்திய அரசு உதவி தரும் திட்டங்களின்கீழ் ரூ. 25 இலட்சமும், ''வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின்கீழ்'' மொத்தம் ரூ. 57 இலட்சமும் செலவிடப்பட்டன.

1974–75-ல் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் விபரம் வருமாறு :—

### காடுகள்.

1. விறகு மரக் காடுகள்.—நகர்புற மக்களின் எரிபொருள் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மக்கட் பெருக்கம் நிறைந்த நகரங்களின் அருகாமையில் உள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரத் தோட்டங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

1973–74-ல் ரூ. 24·61 லட்சம் செலவில் 3,080 ஹெக்டேரில் தோட்டங்கள் வளர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 1973–74 வரை 7,065 ஹெக்டேரில் ரூ. 47·39 இலட்சம் செலவில் தோட்டங்கள் வளர்க்கப்பட்டன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 31,000 ஹெக்டேரில் தோட்டங்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 220 லட்சம். 1974–75-ல் 4,700 ஹெக்டேரில் ரூ. 31·60 இலட்சம் செலவில் விறகு மரத் தோட்டங்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

2. தொழில் மற்றும் வாணிகப் பயன் உள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள்—(அ) தேக்கு.—இம்மாநிலத்தில் வெட்டு மர வகைகளின் வளத்தைப் பெருக்க வேண்டி தகுந்த இடங்களில் தேக்கு மரங்களையும் ஏனைய கடின மரங்களையும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் 500 ஹெக்டேரில் ரூ. 3·49 இலட்சம் செலவில் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1973—74 வரை 2,231 ஹெக்டேரில் தேக்கு மரத் தோட்டங்கள் ரூ. 9·67 இலட்சம் செலவில் வளர்க்கப்படும். ஐந்தாம் திட்ட காலத்தில் 2,500 ஹெக்டேரில் தேக்கு மற்றும் இதர கடின மரத் தோட்டங்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ. 15 இலட்சம். 1974—75-ல் தேக்கு இதர கடின மரங்களை 500 ஹெக்டேரில் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக ரூ. 3·29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மென் மரம்.—தீப்பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள்களை வழங்க மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தகுந்த இடங்களில் மென்மரம் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973—74-ல் 270 ஹெக்டேரில் மென்மரங்கள் வளர்க்கப்படும். எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 0·82 இலட்சம். நான்காம் திட்ட காலத்தில் 1973—74 வரை 1,377 ஹெக்டேரில் ரூ. 3·16 இலட்சம் செலவில் மென் மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4·00 இலட்சம் செலவில் 1,000 ஹெக்டேரில் மென் மரங்கள் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. 1974-75-ல் மென் மரங்கள் 200 ஹெக்டேரில் வளர்க்கப்படும். இதற்கு ஆகும் செலவு ரூ. 1·03 இலட்சம்.

(இ) மிலாறு.—மரங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களான கூழ் தயாரிக்கும் தொழில்களுக்கும், தோல் பதனிடும் தொழில்களுக்கும் மிலாறு மரமும் அதன் பட்டையும் மிக முக்கியமான மூலப்பொருளாகும். இத் திட்டம், நீலகிரி, மேல் பழனி மலைகளில் மிலாறு மரங்களை வளர்க்க வகை செய்கிறது.

1973—74-ல் 1,600 ஹெக்டேரில் மிலாறு மரம் வளர்க்கப்படும். இதற்கு எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 7·07 இலட்சம். நான்காம் திட்ட காலத்தில் 1973—74 முடிய ரூ. 24·94 இலட்சம் செலவில் 5,797 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் வளர்க்கப்பட்டிருக்கும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10,000 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் வளர்க்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 35·00 இலட்சம். 1974-75-ல் ரூ. 7·50 இலட்சம் செலவில் 2,000 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) விரைவில் வளரும் மரங்கள்.—காகிதம், ரேயான் போன்ற மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களின் மூலப் பொருள் தேவையை ஈடு செய்ய விரைவில் வளரும் இனத்தைச் சேர்ந்த கற்பூரத் தைல மரம், மூங்கில் போன்றவற்றை அதிக அளவில் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.



1973—74-ல் 3,650 ஹெக்டேரில் ரூ. 24·57 இலட்சம் செலவில் விரைவில் வளரும் மரங்களை வளர்க்க திட்டமிடப் பட்டுள்ளது. 14,663 ஹெக்டேரில் ரூ. 98·75 இலட்சம் செலவில் இம் மரங்களை வளர்ப்பது நான்காம் திட்ட கால சாதனையாகவிருக்கும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீட்டோடு 18,000 ஹெக்டேரில் விரைவில் வளரும் இனத் தோட்டங்களை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ரூ. 23·52 இலட்சம் செலவில் 3,400 ஹெக்டேரில் விரைவில் வளரும் இனத் தோட்டங்கள் வளர்க்கப்படும்.

(உ) சந்தனம்.—காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு சந்தன மர விற்பனையின் மூலம் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன் இத் திட்டத்தின்கீழ் செயற்கை முறையில் சந்தன மரங்களை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1973—74-ல் ரூ. 1·48 இலட்சம் செலவில் 120 ஹெக்டேரில் சந்தன மரம் வளர்க்கப்படும். நான்காம் திட்ட காலத்தில் 764 ஹெக்டேரில் ரூ. 4·95 இலட்சம் செலவில் சந்தன மரம் வளர்க்கப்படும்.

ஐந்தாவது திட்ட காலத்தில் 500 ஹெக்டேரில் சந்தன மரம் வளர்க்கப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 8 இலட்சம். 1974—75-ல் 100 ஹெக்டேரில் ரூ. 2 இலட்சம் செலவில் சந்தன மரம் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடுகள்.—வெட்டு மரங்களை அதிக அளவு பெறுவதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும் தேக்கு மரங்களையும், பொருளாதார மதிப்புள்ள பிற மரங்களையும் வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் இதற்கான இலக்கு 1,000 ஹெக்டேர், எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·22 இலட்சம். நான்காம் திட்ட காலத்தில் 3,249 ஹெக்டேரில் ரூ. 12·91 இலட்சம் செலவில் இம் மரங்கள் வளர்க்கப்படும்.

ஐந்தாம் திட்டக் காலத்தில் 5,000 ஹெக்டேரில் இம் மரங்களை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 25 இலட்சம். 1974—75-ல் 1,000 ஹெக்டேரில் இம் மரங்கள் வளர்க்கப்படும். இதற்கு எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·50 இலட்சம்.

(எ) ரப்பர்.—ரப்பரைச் சார்ந்த தொழில்கள், மோட்டார் தொழில் போன்றவற்றின் பெருக்கத்தால் ரப்பரின் தேவையும் விரைவாகப் பெருகும் என எதிர் பார்க்கப்படுகிறது. அரேபிய

நாடுகளிலிருந்து எண்ணெய் வருவது தடைப்பட்ட காரணத்தாலும், எண்ணெய் விலை வெகுவாக ஏறிவிட்ட காரணத்தாலும் செயற்கை ரப்பர் உற்பத்தி பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த சில மாதங்களுக்குள்ளாக இயற்கை ரப்பரின் விலை உலகச் சந்தையில் பன்மடங்கு அதிகரித்துள்ளது. நமது தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் தான் ரப்பர் மரங்களை வளர்க்கத் தகுதியுடைய சூழ்நிலை கொண்டதாகவுள்ளது.

தற்போதுள்ள இரப்பர் தோட்டங்களின் மொத்தப் பரப்பளவு 2,544·60 ஹெக்டேர்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 800 ஹெக்டேர்கள் பரப்பளவில், இத் தோட்டம் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆக ஐந்தாவது திட்டத்தின் முடிவில் இத் தோட்டத்தின் மொத்த பரப்பளவு 3,344·60 ஹெக்டேர்களாக இருக்கும்.

இதைத் தவிர, ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 800 ஹெக்டேர்களில் இரப்பர் தோட்டம் பயிரிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1973—74-ல் ரூ. 18·78 இலட்சம் செலவில் 200 ஹெக்டேரில் ரப்பர் மரம் வளர்க்கப்படும். நான்காம் திட்ட காலத்தில் ரூ. 62·84 இலட்சம் செலவில் 739 ஹெக்டேரில் ரப்பர் மரம் வளர்க்கப்படும்.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 800 ஹெக்டேரில் ரூ. 50·00 இலட்சம் செலவில் ரப்பர் தோட்டம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. 1974—75-ல் இலக்கு 160 ஹெக்டேர். எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 10·50 இலட்சம்.

3. காடுகளை நில ஆய்வு செய்தல்.—ஏறத்தாழ 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை வனத் துறை தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளது. இவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்க இக்காடுகளை நில அளவை செய்து முறையாக எல்லை வரையறை செய்து தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் ஒதுக்கக் காடுகளாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

1973—74-ல் நில அளவை, எல்லை வரையறை முதலிய வேலைகள் ரூ. 0·94 இலட்சம் செலவில் செய்யப்படும். நான்காம் திட்ட காலத்தில் ரூ. 1·19 இலட்சம் இத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5·00 இலட்சம் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-க்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1·15 இலட்சம்.





**4. வன விலங்கு உய்விடங்கள் மேம்பாடு.**—காடுகள் பல்வகையான விலங்குகளையும், பறவைகளையும் தன்னகத்தே கொண்டது. இருப்பினும் கண்மூடித் தனமாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் விலங்குகளைச் சுட்டுக்கொல்வதாலும், பொறி வைத்துப் பிடிப்பது, நஞ்சிட்டுக்கொல்வது போன்ற செயல்களினாலும், காடுகளை வேளாண்மை, நீர் மின் திட்டங்கள், பாசனத்திட்டங்கள், தொழில் நிறுவனங்கள் இவற்றின் தேவைக்காக அழிக்க முற்படுவதாலும் வனத்திலுறையும் விலங்குகளின் எண்ணிக்கை வெகு வேகமாகக் குறைந்து வருகிறது. எனவே விலங்குகளைப் பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் வன விலங்கு உய்விடங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வுய்விடங்கள் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்வதாகவும் உள்ளன. எனவே மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டத்தில் வன விலங்கு உய்விடங்களை மேம்படுத்த முக்கியத்துவம் தருதல் வேண்டும்.

1973—74-ல் பாதை போடுதல், ஓய்வு விடுதி கட்டுதல், போக்குவரத்து வசதிகள், குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல வேலைகளும் செய்யப்பட்டுள்ளன. இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 5·10 இலட்சம்.

நான்காம் திட்ட காலத்தில் இத் திட்டத்தின்கீழ் ரூ. 14·88 இலட்சம் செலவிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வன விலங்கு உய்விடங்களை மேம்பாடுசெய்ய ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் அபிவிருத்திப் பணிகளுக்கும், பயணிகளுக்கு வசதிகள் செய்து தருவதற்கும் ரூ. 5·08 இலட்சம் மதிப்பீட்டு செலவில் திட்டம் செயல் படுத்தப்படும்.

**5. மரம் வெட்டும் பணிகள்.**—இது ஒரு பல நோக்குத் திட்டம். இதன் குறிக்கோள்கள் வருமாறு:—

(1) கட்டைகளை வெட்டுதல், மரங்களை வெட்டி அகற்றுதல் முதலிய முறைகளில் அபிவிருத்தி செய்தல்.

(2) வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்.

(3) மேம்பாடடைந்த மரம் வெட்டும் முறையில் வனத் துறைத் தொழிலாளர்களுக்குத் தொடர் பணிப் பயிற்சியளிக்க வகை செய்தல்.

1973—74-ல் இத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 2·15 இலட்சம். நான்காம் திட்ட காலத்தில் இத் திட்டத்தின்கீழ் ரூ. 6·26 இலட்சம் செலவிடப்படும்.

[1974 மார்ச் 30

ஐந்தாவது திட்டத்தில் மரம் வெட்டும் கருவிகள் வாங்குவதற்கும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும், வனப் பணியாளர்கட்கு மரம் வெட்டுவதில் பயிற்சி தரவும் இத் திட்டத்திற்கென ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் இத் திட்டத்திற்கென ரூ. 0·71 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. வன ஆராய்ச்சியும், கல்வியும்.—வன இயல் ஆராய்ச்சி, வன இன வழியியல், மரம் வளர்ப்புக் கலை, மண் வளம், மரநோய்க் குறியியல் போன்றவை குறித்து ஆராய்ச்சிகள் நடத்தும் பொருட்டு ஆராய்ச்சி நிறுவனத்தைப் பலப்படுத்துதல் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் கோவையில் வன ஆராய்ச்சிக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான கருவிகள் வாங்கப்படும். இதற்கு எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 1·89 இலட்சம். நான்காம் திட்டத்தில் வன ஆராய்ச்சிக்காக ரூ. 5·07 இலட்சம் செலவிடப்படும்.

வன ஆராய்ச்சிக்காக ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ஆராய்ச்சித் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும். கோயம்புத்தூரில் ஆராய்ச்சிக்கூடம் நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·00 இலட்சம்.

7. போக்குவரத்து வசதிகள் (சாலைகள்).—வெட்டப்பட்ட மரங்களையும், ஏனைய காடுபடு சிறு பொருள்களையும் விரைந்து எடுத்துச் செல்ல வசதியளிக்கும் பொருட்டு காட்டுப் பகுதிகளில் ஏற்கனவேயுள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகள் அமைப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் இந்த வேலைகளுக்காக ரூ. 9·43 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நான்காம் திட்ட காலத்தில் ரூ. 18·80 இலட்சம் மொத்த செலவாகும்.

ஐந்தாம் திட்ட காலத்தில் ரூ. 32 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் இத் திட்டத்தின்கீழ் ரூ. 5·00 இலட்சம் செலவிடப்படும்.

8. கட்டிடங்கள்.—காடுகளின் மத்தியில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட இத் திட்டம் வகை செய்கிறது. தேவைப்படுகிற இடங்களில் ஓய்வுவிடுதிகளும், அலுவலகக் கட்டிடங்களும் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1973—74-ல் இத் திட்டம் ரூ. 5 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். நான்காம் திட்ட காலத்தில் ரூ. 15·48 இலட்சம் செலவு செய்யப்படும்.



1974 மார்ச் 30]

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20 இலட்சம் இத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ரூ. 4·22 இலட்சம் செலவில் இத் திட்டம் செயல்படும்.

9. வனத்துறைப் பணியாளர்கட்கும் தொழிலாளர்கட்கும் வசதிகள்.—காடுகளில் பணிபுரியும் வனத்தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் கம்பளி வழங்குதல், குடியிருப்புகள் கட்டுதல், மருத்துவ வசதி, குடிநீர் வசதி அளித்தல் முதலிய பணிகளைச் செய்வதற்கான திட்டம் இது.

1973—74-ல் இத் திட்டம் ரூ. 2·03 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். நான்காம் திட்ட காலத்தில் இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 5·08 இலட்சம்.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. [illegible] இலட்சம் இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ரூ. 3·89 இலட்சம் செலவில் இத் திட்டம் செயல்படுத்தப்படும்.

10. காடுகள் பற்றிய பிரச்சாரம்.—நாட்டு நலன் காக்கும் பணியில் காடுகளும், வன விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும் அவற்றைக் காப்பதன் அவசியம் குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன் வனத்துறையில் பிரச்சாரப் பிரிவு ஒன்றினை அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் பெரிய அளவில் விளம்பரப் பலகைகள், ஓவியங்கள், திரைப்பட விளம்பர ஆடிகள், அவரொட்டிகள் முதலியவற்றின் மூலம் வனப் பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான செலவு ரூ. 0·67 இலட்சம். நான்காம் திட்ட காலத்தில் ரூ. 2·03 லட்சம் செலவாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத் திட்டத்திற்கென ரூ. 5·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-க்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1·17 இலட்சம்.

11. வனப் பாதுகாப்பு.—தீ விபத்துக்களிலிருந்தும், ஏனைய இடையூறுகளிலிருந்தும் வனங்களைக் காப்பதற்கான வழிவகைகளை வகுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973—74-ல் இத் திட்டம் ரூ. 2·11 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

நான்காம் திட்ட காலத்தில் ரூ. 3·75 இலட்சம் செலவிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 10 லட்சம் இத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**12. செயல் திட்டங்கள்.**—ஒவ்வொரு வனக் கோட்டத்தின் நிர்வாகமும் செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. செயல் திட்டங்களைத் தயாரிப்பதற்கென ஒரு தனி நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தை வலுப்படுத்துவதற்கும், செயல் திட்டங்களை விரைவாகவும், திறமையுடனும் தயாரிக்கவும் தேவையான சாதனங்களை வாங்குவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது. 1973—74-ல் ரூ. 1·90 இலட்சம் செலவில் இத் திட்டம் செயல்படும். நான்காம் திட்ட காலத்தில் ரூ. 3·63 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5·00 இலட்சம் இந்தத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ரூ. 0·12 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படும்.

**13. காடுபடு சிறு பொருள்கள்.**—புளி, கொக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூரம், தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள், கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை வளர்ப்பதன் மூலம் காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால் இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல் காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்கள் 600 ஹெக்டேரில் வளர்க்கப்படும். ரூ. 3·81 லட்சம் இதற்கு எதிர்பார்க்கப்படும் செலவு. நான்காம் திட்டகாலத்தில் ரூ. 9·54 இலட்சம் செலவில் 1,922 ஹெக்டேரில் வளர்க்கப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை 2,500 ஹெக்டேரில் ரூ. 20·00 இலட்சம் செலவில் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1974—75-ல் 782 ஹெக்டேரில் ரூ. 3·72 இலட்சம் செலவில் இவ்வகை மரங்களை வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**14. திட்டம், புள்ளி விவரப் பிரிவு.**—வனங்கள் குறித்த புள்ளி விபரங்களைத் திரட்டவும், விளைபொருள்கள் முதலியன குறித்து புள்ளி விபரங்களைத் தொகுக்கவும், அங்காடி குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவும் தற்போதைய, வருங்காலத் தேவைகளை மதிப்பிடவும் ஒரு பிரிவினை அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதற்கென நான்காம் திட்டத்தில் ரூ. 2·50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1973—74-ல் ரூ. 0·57 இலட்சம் செலவில் திட்டம் தொடரப்படும். நான்காம் திட்ட காலத்தில் இதுவரை ஆன செலவு ரூ. 1·03 இலட்சம்.

ஐந்தாம் திட்ட காலத்தில் இத் திட்டத்திற்கென ரூ. 5·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**15. சிரமைப்பு.**—காடுகள் குறித்து பணிகள் விரைந்து பெருகி வருவதால், திறம்பட மேற்பார்வையிட இயலாத அளவிற்குப் பரந்து விரிவடைந்துள்ள வன வட்டாரங்கள், கோட்டங்கள், சரகங்கள் ஆகியவற்றின் நிர்வாக எல்லைகளை மாற்றி அமைப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973—74-ல் ரூ. 0·83 இலட்சம் செலவில் இத் திட்டம் தொடரப்படும். புதியதாக உண்டாக்கிய நீலகிரி தெற்கு கோட்டம் தொடர்ந்து செயல்படும். நான்காவது திட்ட கால செலவு ரூ. 1·57 இலட்சம் ஆகும்.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத் திட்டத்திற்கென ரூ. 5·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் இத் திட்டம் ரூ. 0·98 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**16. வனப் பகுதிகளில் முந்திரித் தோட்டங்கள்.**—பொருத்தமான பகுதிகளில் முந்திரித் தோட்டங்களை வளர்த்தல், உரங்களைப் பயன்படுத்துதல், பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல் போன்ற செறிவு சாகுபடி முறைகளை மேற்கொள்ளுதல் மூலம் தற்போதுள்ள முந்திரி தோட்டங்களில் உற்பத்தியைப் பெருக்குதல் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

1973—74-ல், 1,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,310 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள மரங்களைப் பேணி பாதுகாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ரூ. 15·67 இலட்சம் செலவாகும். நான்காவது திட்ட காலத்தில் ரூ. 59·85 இலட்சம் செலவில் 6,172 ஹெக்டேரில் பயிரிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படும். 1974—75-ல் ரூ. 23·20 இலட்சம் செலவில் 900 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படும்.

**17. ஆதிவாசிகள் முன்னேற்ற நலத் திட்டம்.**—ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆதிவாசிகளின் நலனுக்காக ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**18. காடுகளை விஸ்தரித்தல்.**—கிராமங்களிலும் கிராமங்களைச் சுற்றிலும் அமைந்த அரசு தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும் கிராமத் தோட்டங்களை வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். கிராமங்களுக்கு அன்றாடம் தேவைப்படும் விறகு வெட்டுமரம், உரம், தீவனம் ஆகிய தேவைகளை இக்கிராமக் காடுகள் நிறைவு செய்யும். 1973—74-ல் 5,500 ஹெக்டேர் பரப்பளவில் தரிசு நிலங்களிலும், குளக்கரைகளிலும் ரூ. 19·47 லட்சம் செலவில் பயிரிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 90 லட்சம் செலவில் 25,000 ஹெக்டேர் பரப்பளவில் இக்காடுகள் வளர்க்கப்படும். 1974—75-ல் 7,500 ஹெக்டேர் பரப்பளவில் கிராமக் காடுகள் வளர்க்கப்படும். இதற்கு ரூ. 9 இலட்சம் செலவாகும்.

19. **அரக்கு உற்பத்தி பெருக்கம்.**—மதுரை தெற்கு கோட்டத்தில் வண்ணுத்திப்பாறையில் உள்ள அரக்கு பண்ணையில் அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973—74-ல் 30 ஹெக்டேர் பரப்பளவில் அரக்கு பற்று மரங்கள் ரூ. 0·43 இலட்சம் செலவில் பயிரிடப்படும். நான்காவது திட்ட காலத்தில் 140 ஹெக்டேர் பரப்பளவில் அரக்கு பற்று மரங்கள் ரூ. 2·47 இலட்சம் செலவில் பயிரிடப்படும்.

ஐந்தாவது திட்ட காலத்தில் ரூ. 5 லட்சம் செலவில் 150 ஹெக்டேர் பரப்பில் அரக்குப் பற்று மரங்கள் வளர்க்கப்படும். 1974—75-ல் ரூ. 0·71 இலட்சம் செலவில் 30 ஹெக்டேர் பரப்பில் அரக்கு பற்று மரங்கள் வளர்க்கப்படும்.

**வனத் திட்டங்கள்—மத்திய அரசு ஆதரவு பெற்றவை.**

1. **வன வள ஆய்வு.**—வன வளங்களை நன்முறையிலும் அறிவார்ந்த வகையிலும் பயன்படுத்தத் திட்டமிடுவதற்காக வன வளங்களின் விரிவான ஆய்வினை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வன வளங்களை ஆய்வு செய்யும் கோட்டங்கள் இரண்டு, சென்னை, மதுரை ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு, இயங்கி வருகின்றன. கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆய்வு வேலைகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஆய்வு வேலை முன்னேற்ற நிலையிலுள்ளது.

1973—74-ல் ரூ. 2·36 இலட்சம் செலவில் 1,200 சதுரமைல் பரப்புள்ள பகுதிகள் ஆய்வு செய்யப்படும். நான்காவது திட்ட காலத்தில் ரூ. 7·07 இலட்சம் செலவில் 3,754 சதுர மைல்பரப்புள்ள பகுதிகள் ஆய்வு செய்யப்படும். ஐந்தாவது திட்ட காலத்தில் ரூ. 25 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் இத்திட்டத்திற்கு ரூ. 2·15 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. **முந்திரித் தோட்டங்களில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.**—இது மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகும். பயிர்ப் பாதுகாப்பு, பயிர் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் முந்திரி விளைச்சலைப் பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1973—74-ல் ரூ. 0·89 இலட்சம் செலவில் 1,400 ஹெக்டேர் பரப்பில் பயிர் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். நான்காவது திட்ட காலத்தில் ரூ. 9 லட்சம் செலவில் 13,814 ஹெக்டேர் பரப்பில் பயிர் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.





3. **தீவிர முந்திரி சாகுபடி திட்டமும் முந்திரித் தோட்ட பரப்பை விரிவுபடுத்தலும் (மத்திய அரசு ஆதரவு பெற்றது).**

மத்திய அரசு 3 வருடங்களுக்கு முந்திரி தோட்டங்களில் தீவிர சாகுபடி நடவடிக்கை எடுக்கவும், முந்திரித் தோட்டங்களை விரிவுபடுத்தவும் ரூ. 20 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி தோட்டங்களும், மேலும் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் புதிய முந்திரி தோட்டங்களும் தீவிர சாகுபடி முறையில் பயிரிடப்படும். 1973—74-ல் 1,310 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள பழைய முந்திரி மரங்களை பாதுகாப்பதற்கு ரூ. 4 இலட்சம் செலவாகும். நான்காவது திட்ட காலத்தில் ரூ. 16·08 லட்சம் செலவில் 1,103 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி தோட்டங்கள் எழுப்பப்படும். மற்றும் 1,310 ஹெக்டேரில் உள்ள பழைய முந்திரி மரங்களுக்கு பாதுகாப்பு பணிகளும் செய்யப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக கிராமப்புற மக்களின் எரி பொருள் தேவையை நிறைவு செய்யும் நோக்கோடு ஒரு இலட்சம் ஹெக்டேர் பரப்பு கொண்ட தரிசு நிலங்கள், பஞ்சாயத்து நிலங்களில் பலஜாதி தோட்டங்களை வளர்க்க மத்திய அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 5,000 ஹெக்டேரில் ரூ. 27·00 இலட்சம் செலவில் தோட்டங்கள் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1974—75-ல் ரூ. 5·97 லட்சம் உத்தேச செலவில் 1,000 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இது மத்திய அரசிடமிருந்து முழு உதவி பெறும் ஒரு மத்திய அரசின் திட்டமாகும்.

தரம் தாழ்ந்துபோன காட்டுப் பகுதிகளில் மீண்டும் மரங்களை வளர்ப்பதற்கு, 50 சத விகிதம் மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்த, ஒரு திட்டம் உள்ளது. இத்திட்டத்தின் நோக்கம், கிராமப்புற, மற்றும் புற நகர்ப் பகுதிவாழ் மக்களின் எரி பொருள் தேவை மற்றும் சிறு வெட்டுமரம் போன்ற தேவைகளை நிறைவு செய்வதாகும். 1973—74-ல் வட ஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் 1,200 ஹெக்டேரில் இத்திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தத் தனியே இரண்டு கோட்டங்கள் தேவையாக உள்ளன. இதற்கு உத்தேச நிதி ஒதுக்கீடு ரூ. 20·92 இலட்சம்.

**மண் வளப் பாதுகாப்பு—மாநிலத் திட்டங்கள்.**

(1) **வைகை ஆற்று நீர் கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு.**—நீர்த் தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் ஏற்படும் மண் அரிப்பையும் தூர் வடிதலையும் தடுக்கும் பொருட்டு,

வைகை ஆற்றின் நீர்க்கோள் பகுதிகளில் மண் வளத்தைப் பாது காப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1973–74-ல் சுமார் 450 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 3·53 லட்சம் செலவில் இப்பணி களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டக் காலத்தில் 1,772 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 13·70 இலட்சம் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ரூ. 20 லட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1974–75-ல் 600 ஹெக் டேரில் இத்திட்டம் செயல்படும். ரூ. 5·40 இலட்சம் இப்பணிக் காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**2. மேட்டூர் ஸ்டான்லி நீர்த் தேக்கத்தின் நீர்க்கோள் பகுதி களில் மண் வளப் பாதுகாப்பு.**—மண் அரிப்பையும் நீர்த் தேக் கத்தில் வண்டல் படிவதையும் தடுப்பதற்காக மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் நீர்க்கோள் பகுதிகளில் பலவகை மண் வளப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வது இத்திட்டத்தின் நோக்க மாகும். 1973–74-ல் 700 ஹெக்டேரில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 7·83 இலட்சம். நான்காவது திட்ட காலத்தில் 2,844 ஹெக்டேரில் இத்திட்டம் ரூ. 24·99 இலட்சம் செலவில் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 30 லட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் 750 ஹெக் டேர் பரப்பளவில் ரூபாய் 9·83 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**3. கடுமையான வனப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணி.**— கடுமையான மண் அரிப்புக்கு உள்ளாகக் கூடிய வனப் பகுதி களில், மண் வளப்பாதுகாப்புப் பணிகளை நிறைவேற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1973-74-ல் ரூ. 1·80 லட்சம் செலவில் நீர்த் தேக்கங்களில் தூர்படிவது குறித்து ஆய்வுப் பணி களை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கு ரூபாய் 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் ரூபாய் 1·[illegible] லட்சம் செலவில் நீர்த் தேக்கங்களில் தூர் படிவது குறித்தும் மண் அரிப்பை தடுப்பது குறித்தும் ஆய்வு பணிகள் மேற் கொள்ளப்படும்.

**1. மண் வளப் பாதுகாப்பு—மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டம்.**

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்ட நீர்க்கோள் பகுதி களில் மண் வளப் பாதுகாப்பு, ஈரத்தன்மை பாதுகாப்பு, நீர்த் தேக்கங்களில் தூர் படிவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



1973-74-ல் ரூபாய் 10·68 லட்சம் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். 450 ஹெக்டேர் பரப்பளவில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். 2,264 ஹெக்டேர் பரப்பளவில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வதற் காக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூபாய் 43·38 லட்சம் செலவிடப்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு ரூபாய் 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1974-75-ல் ரூபாய் 10·02 இலட்சம் செலவில், 500 ஹெக் டேரில் இத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**2. கீழ் பவானித் திட்டம் நீர்க்கோள் பகுதியில் மண் வளப் பாதுகாப்பு.**

கீழ் பவானித் திட்ட நீர்க்கோள் பகுதியில் மண்வளப் பாது காப்பு நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொள்வதே இத் திட்டத் தின் நோக்கமாகும்.

1973-74-ல் 1,300 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளப் பாது காப்பு பணிகள், ரூபாய் 8·74 லட்சம் செலவில் மேற் கொள்ளப் படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,508 ஹெக் டேர் பரப்பளவில் ரூபாய் 21·58 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கு ரூபாய் 70 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1974-75-ல் 1,150 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் வளர்த்தல், மேடுபள்ள அடுக்கு நிலச்சுவர்கள் அமைத்தல், நீர்க்கசிவுக் குட்டைகள் நீர் அரிக்காவண்ணம் சரிவான படிகளை அமைத்தல், நீர்க்கால் அமைத்தல் போன்ற [illegible] பாது காப்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக ரூபாய் 12·92 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**3. வாலாயமாக வறட்சியால் பாதிக்கப்படும் இடங்களுக்கான சிறப்புத் திட்டம்.**

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கையாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்கு இந்திய அரசு முழு உதவித் தொகை அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் காடுகள் வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், நீர் வாயில்களை மேம்படுத்துதல், சாலைகள் அமைத்தல் ஆகிய பணிகள் வனத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வறட்சி நிலை கட்டுப்

படுத்தப்படுகிறது. 1972-73வரை இத் திட்டத்திற்கு ரூபாய் 18·80 லட்சம் செலவிடப்பட்டது. 1973-74-ல் இத் திட்டத்திற்கு ரூபாய் 7·44 லட்சம் செலவிடப்படும். நான்காவது திட்டத்தில் 4,150 ஹெக்டேர் பரப்பளவில் காடுகள் வளர்ப்பு திட்டம் செயல்படும். இத்திட்டத்திற்கு ரூபாய் 26·24 லட்சம் செலவு செய்யப்படும்.

**ஸ்ரீ இலங்கா அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள்.**

ஸ்ரீ இலங்காவிலிருந்து தாயகம் அனுப்பப்படும் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இத்துறை (1) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டம் பயிரிடுவதற்கான திட்டம், (2) கன்னியாகுமரியில் ரப்பர் தோட்டங்கள் பயிரிடும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இத் திட்டங்களுக்கு இந்திய அரசு நீண்ட கால கடன் மூலம் நிதி உதவி அளிக்கிறது.

1. **நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள்.**—இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 6,74·93 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத் திட்டம் 1967-68-ல் தொடங்கப்பட்டது. இதுவரை 556 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 371 இலங்கை அகதிக் குடும்பங்கள் இத் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்டுள்ளன. 720 பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இது தவிர 72 ஸ்ரீ இலங்கா அகதிகள் அரசாங்க ஊழியர்களாகவும் பணிபுரிகின்றனர். 1974-75-ல் 200 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் வளர்க்கப்படும். இதற்காக ரூபாய் 60 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 226 அகதி குடும்பங்கள் 1974-75-ல் குடியமர்த்தப்படும்.

2. **ஸ்ரீ இலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக குமரிமாவட்டத்தில் ரப்பர்தோட்டங்கள் வளர்த்தல்.**—இத் திட்டத்தின்கீழ் குமரி மாவட்டத்தில் ரூபாய் 81·48 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 1970-71-ல் தொடங்கப்பட்டது. இதுவரை 661 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளது. 115 இலங்கை அகதிக் குடும்பங்கள் இத் திட்டத்தின்கீழ் குடியமர்த்தப்பட்டுள்ளன. 217 பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். மேலும் 18 பேர் அரசு ரப்பர் தோட்டங்களில் வேறு பணிகளில் பணியாற்றுகின்றனர். 1974-75-ல் 139 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிரிடப்படும். இதற்காகத் திட்டமிடப்பட்ட செலவு ரூபாய் 19·85 லட்சம். கூடுதலாக 42 குடும்பங்கள் 1974-75-ல் குடியமர்க்கப்படும்.



வெட்டு மரங்கள், விறகு, தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள், ஏனைய காடுபடு பொருள்கள் இவைகளின் தேவை நாளுக்கு நாள் விரைவாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. காடுகளின் பரப்பு காடுபடுப் பொருள்களின் விளைச்சல் இவற்றை ஒப்பிட்டு நோக்குங்கால் தமிழ்நாட்டில் காடுகள் செல்வம் குறைவுதான். மேலும், மேலும் பெருகிவரும் மக்கட் தொகையாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதாலும் இப்பற்றுக்குறை, இன்னும் அதிகமாகத்தான் செய்யும். ஆகவே, தற்போதுள்ள காடுகளைக் கவனமாகப் பாதுகாப்பதும், அவற்றில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான தீவிர வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுவதும் இன்றியமையாததாகும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியிலும் மக்களின் நல்வாழ்விலும் காடுகள் இவ்வாறு முக்கியப் பங்கினைப் பெறமுடியும்.

# இணைப்பு III

(208-ஆம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பை காண்க.)

## தமிழ்நாடு சின்கோனுத் துறையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### அ. பிரிவு.

1. தமிழ்நாடு அரசின் வணிக நிறுவனமான சின்கோனுத் துறை, 1972–73 ஆம் ஆண்டில் மூலதன வட்டிக்காக ரூ. 16·91 இலட்சத்தையும் தள்ளி வைக்கப்பட்ட வருவாய்ச் செலவினைச் சரிக்கட்டுவதற்காக ஏற்படுத்தப்படும் சேம நிதிக்கு ரூ. 11·84 இலட்சத்தையும் ஒதுக்கி வைத்தது போக, ரூ. 5·11 இலட்சம் நிகர ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1973–74, 1974–75 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் நிகர ஆதாயம் ஏறத்தாழ முன்னைய ஆண்டுகளில் ஈட்டிய நிகர ஆதாயத்தைப் போலவே இருக்கும்.

2. மருந்து பொருட்கள், மற்றும் வாசனைத் தைலத் துறையில் சின்கோனுத் துறையானது நிறைவுணர்வு பெறுவதற்கான காரணங்கள் உள. இத் துறையில் தயாரிக்கப்படும் கொய்னுப் பொருட்களுக்கு அவற்றின் தரம் காரணமாக அந்நியச் சந்தைகளில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மேற்கு ஜெர்மனி, சோவியத் யூனியன், இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் குறிப்பிடத் தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது உற்சாகம் நிறைந்ததோர் காலகட்டத்தையும், நம் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் இப் பொருட்கள் மென்மேலும் ஈடுபட்டுள்ளதையும் சுட்டிக் காட்டுகிறது. 1972–73 ஆம் ஆண்டில் இத் துறை ஈட்டிய அந்நியச் செலாவணி ரூ. 61,97,790 ஆகும். 1973–74, 1974–75 ஆகிய இரண்டாண்டுகளுக்குமாகச் சேர்த்து ரூ. 95·00 இலட்சம் அந்நியச் செலாவணி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் (1969–73) இத் துறை ஈட்டிய மொத்த அந்நியச் செலாவணி ரூ. 1,29·82 இலட்சமாகும்.

3. பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இத் துறை பாராட்டத்தக்க வளர்ச்சியினை எட்டியுள்ளது.





4. 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை, இத் துறைத் தோட்டங்களில் சின்கோனு மற்றும் இதர பயிர்கள் பயிர் செய்யப்பட்டுள்ள பரப்பளவுகளின் விவரம் வருமாறு :—

| தொடர் எண். | பயிரின் பெயர். | நீலகிரியில் உள்ள பரப்பளவு (ஹெக்டேர்களில்). | ஆனைமலையில் உள்ள பரப்பளவு (ஹெக்டேர்களில்). | மொத்தம் (ஹெக்டேர்களில்). |
|---|---|---|---|---|
| 1 | சின்கோனு .. | 409·93 | 1,969·26 | 2,379·19 |
| 2 | மருந்து மற்றும் நறுமணச்செடிகள். | 675·32 | 301·72 | 977·04 |

5. தொழிற்சாலைகள்.

(அ) வால்பாறைக்கு அருகில் ஆனைமலையிலிருக்கும் சின்கோனுவில் உள்ள அரசினர் கொய்னுத் தொழிற்சாலை.

இத் தொழிற்சாலையானது இத் துறையைச் சேர்ந்த தோட்டங்களில் சேகரிக்கப்படும் சின்கோனுப் பட்டையைப் பதப்படுத்திக் கொய்னுப் பொருட்களைத் தயாரிக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட கொய்னுப் பொருட்களின் அளவு பற்றிய விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண். | பொருளின் பெயர். | ஆண்டு. 1971–72. | 1972–73. | 1973–74 (மதிப்பிடப்பட்டது). |
|---|---|---|---|---|
| | | கி.கிராம். | கி.கிராம். | கி.கிராம். |
| 1 | குயினைன் சல்பேட் தூள் .. .. | 11,067 | 8,925 | 9,000 |
| 2 | சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜ் தூள் .. | 10,342 | 8,007 | 7,200 |
| 3 | குயினைன் ஹைட்ரோகுளோரைடு தூள் (உற்பத்தி செய்யப்பட்ட குயினைன் சல்பேட்டிலிருந்து தயாரிக்கப்படுவது) .. | 2,678 | 1,541 | 1,000 |
| 4 | குனிடின் சல்பேட் தூள் .. .. | 22 | 91 | 180 |
| 5 | சின்கோனு ஃபெப்ரிஃப்யூஜ் மாத்திரைகள் (எண்ணிக்கையில்) .. | — | 1,50,000 (மாத்திரைகள்) | .. |

[1974 மார்ச் 30

(ஆ) நீலகிரியில் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலை.

நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலத் தொழிற்சாலைப் பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைப் பரிசோதித்து தூய்மையாக்கி, தரம் பிரித்து சிப்பம் செய்து விற்பனைக்கனுப்புவதில் வழக்கம்போல் ஈடுபட்டுள்ளது. இது தவிர, நறுமணத் தைலங்களின் உற்பத்தி அவற்றின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இத் தொழிற்சாலையால் தூய்மைப்படுத்தப்பட்டு, தரம் பிரிக்கப்பட்டு, சிப்பம் செய்து விற்பனைக்கனுப்பப்பட்ட தைலங்களின் மதிப்பு பின்வருமாறு :—

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1971–72 | .. | .. | 5,03,500 |
| 1972–73 | .. | .. | 7,64,600 |
| 1973–74 (மதிப்பிடப்பட்டது). | .. | .. | 13,29,000 |

6. விற்பனைகளும் வருமானமும்.

(அ) கொய்னாப் பொருட்களின் விற்பனை

1964 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டுச் சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்கான தேவை சீராக அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களிடையே உள்ள போட்டிகளின் காரணமாக, ஏற்றுமதி விலைகள் ஏறுமுகமாக உள்ளன. கொய்னாப் பொருட்கள் விற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் வருமாறு :—

| ஆண்டு. | | ஏற்றுமதி (ரூபாய் இலட்சத்தில்). | உள்நாட்டு விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| 1971–72 | .. | 20·06 | 12·88 | 32·94 |
| 1972–73 | .. | 61·97 | 10·24 | 72·21 |
| 1973–74 (மதிப்பிடப்பட்டது). | .. | 41·00 | 7·00 | 51·00 |



1974 மார்ச் 30]

(ஆ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் வருமாறு :—

| ஆண்டு. | | | விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| 1971–72 | .. | .. | 5·58 |
| 1972–73 | .. | .. | 9·90 |
| 1973–74 (மதிப்பிடப்பட்டது). | .. | .. | 11·00 |

7. மருந்து மற்றும் நறுமணச் செடிகள் குறித்த ஆராய்ச்சி

மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிட்டு அவற்றைப் பதப்படுத்துவது தவிர, பல்வேறு மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் பயிரிடும் முறைகளை மேம்படுத்துதல், உயர் விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடிவகைகளை வளர்த்தல், அவற்றைப் பதப்படுத்தல் ஆகியவைப்பற்றிய ஆராய்ச்சியையும் இத் துறை மேற்கொண்டுள்ளது.

8. திட்டப் பணிகள்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் வருமாறு :—

(1) மருந்து மற்றும் நறுமணப் பயிர்களை விற்பனைக்காகப் பெருமளவில் பயிர் செய்வதை விரிவு படுத்துதல்.

(2) மருந்து மற்றும் நறுமணச் செடிப் பொருட்களைப் பதப்படுத்தும் முன்னோடித் திட்டம்.

(3) மருந்து மற்றும் நறுமணச் செடிகள் பற்றிய முனைப்பான ஆராய்ச்சியும் வளர்ச்சியும்.

(4) அதிக அளவில் கொய்னாவையும் குனிடினையும் தரவல்ல மேம்பாடான சின்கோனாச் செடிவகைகளைக் கிளை நடு முறைகள் மூலம் வளர்த்தல்.

(5) இத் துறையின் அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்குக் கட்டிட வசதிகள், சாலை வசதிகள் மற்றும் இதர வசதிகள் செய்து கொடுத்தல்.

(6) இத் துறையின் இரு தொழிற்சாலைகளுக்குத் தேவையான சாதனங்களை வாங்குதல்.

(7) மருந்து மற்றும் நறுமணப் பயிர்களுக்குப் பாசனமளிப்பதை மும்முரமாக்கும் திட்டம்.

9. இத் துறையின் நிதியமைப்பு.

1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு சின்கோனாத் துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூ. 3,01,04,200 ஆகும். இந்த இருப்புகள் பற்றிய விவரம் வருமாறு :—

நிலையான இருப்புகள்.

| | ரூ. |
|---|---|
| (அ) சின்கோனா தோட்டங்கள் .. .. | 64,68,100 |
| (ஆ) விறகு மரங்கள், மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகள் .. .. .. .. | 21,73,000 |
| (இ) கட்டிடங்கள், சாலைகள், இயந்திரத் தளவாடங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற இதர இருப்புகள் .. .. .. .. | 71,01,200 |

தற்காலிக இருப்புகள்.

| | |
|---|---|
| பண்டசாலைகள், இருப்புகள் தயாரிப்பு நிறைவு பெற்ற பொருட்கள் முதலியன .. .. | 1,43,61,900 |
| மொத்தம் .. | 3,01,04,200 |

10. இத்துறை ஈட்டிய ஆதாயம்.

தமிழ்நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் தணிக்கைச் செய்யப்பட்ட, 1972–73-ஆம் ஆண்டுக்கான இத் துறையின் கணக்குகள் ரூ. 5·11 இலட்சம் நிகர ஆதாயத்துடன் முடிவு பெற்றன. 1973–74-ஆம் ஆண்டுக்கும் இதே நிகர ஆதாயம் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆ. பிரிவு.

இத் துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்.

அனைத்து நாட்டுச் சந்தைகளில் இப்போது நிலவி வரும் போக்குகள் இம் மாநிலத்தின் கொய்னாப் பொருட்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்கின்றன.

சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவு 2,630 ஹெக்டேராக இருக்கவேண்டும் என்று மாநில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 30–9–1973-ஆம் நாளன்றுள்ளபடி சின்கோனா பயிரிடப்பட்டுள்ள



பரப்பளவு 2,379·19 ஹெக்டேராகும். இதைத் தேவையான அளவுக்குக் கொண்டு வருவதற்காக புதிய பரப்புகளில் சின்கோனா பயிரிடப்பட்டு வருகிறது.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைக் கொடுக்கும் பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் இத்துறையின் வருவாய் கூடுதலாகிறது. இப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவுச் சீராக அதிகரித்து வருகிறது. உற்பத்தி முறைகளை மேம்படுத்தி செலவுகளைச் சிக்கனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பயிர்கள் மீதான மும்முர ஆராய்ச்சித் திட்டம் இந்நோக்கத்தைக் கொண்டுள்ளது.

இத்துறை எய்திய குறிப்பிடத்தக்க சாதனைகளிற் சில பின் வருமாறு :—

(1) சின்கோனா ஃபெப்ரிஃப்யூஜிலிருந்து குவினைன் சல்பேட்டையும் குனிடின் சல்பேட்டையும் தயாரித்தல்.

(2) சின்கோனைன், சின்கோனிடின் அல்கலாய்டுகளை முன்னோடி அளவில் பிரித்தெடுத்தல்.

(3) மேலும் சிறந்த முறையில் (B.P.) (I.P.) வகை யூகலிப்டஸ் தைலங்களைத் தயாரித்தல்.

(4) மூடுபனியை எதிர்த்து நிற்கவல்ல ஜெரேனியம் பயிர் வகையைப் பிரித்தெடுத்து அவற்றின் பெருக்கத்திற்காகப் பயிரிடுதல்.

இ. பிரிவு.

1973–74 ஆம் ஆண்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வேலைத் திட்டம் வருமாறு :—

(1) 84·5 ஹெக்டேரில் மருந்து மற்றும் நறுமணப் பயிர்களைப் புதிதாகப் பயிரிடுதலும், ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள 333·75 ஹெக்டேரில் நிலைப்படுத்தலும்.

(2) 31 ஹெக்டேரில் சின்கோனாப் பயிரைப் புதிதாகப் பயிரிடுதலும், அது ஏற்கனவே பயிரிடப்பட்டு வெட்டப்பட்ட 128·10 ஹெக்டேரில் நிலைப்படுத்துதலும்.

(3) கிளை நடுமுறையில் ஆறு இலட்சம் சின்கோனாச் செடிகளை உற்பத்தி செய்தல்.

(4) ரூ. 13·29 இலட்சம் மதிப்புடைய 5,500 கிலோ யூகலிப்டஸ் தைலம், 1,230 கிலோ ஜெரேனியம் தைலம், 2,520 கிலோ யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம், 4,440 கிலோ

ஜாவா சிட்ரனல்லா தைலம், 50 கிலோ கற்பூரத் தைலம், 190 கிலோ லெமன் கிராஸ் தைலம், 28 கிலோ விண்டர் கிரீன் தைலம், 5 கிலோ பச்சௌலி தைலம், 3,00,000 கற்பூர வில்லைகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(5) ஏறத்தாழ ரூ. 55 இலட்சம் மதிப்புள்ள 9,000 கிலோ குனைன் சல்பேட், 7,200 கிலோ சின்கோனா ஃபெப்ரிஃப்யூஜ், 180 கிலோ குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(6) ஏறத்தாழ 500 கிலோ இஞ்சி சார் தயாரித்தல்.

யூகலிப்டஸ் தைலம் காய்ச்சியெடுக்கப்பட்ட பின் படியும் மீதப் பொருளிலிருந்து ''சின்ஃப்ரெஷ்'' என்னும் நாற்றம் போக்கி இவ்வாண்டில் தயாரிக்கப்பட்டது.

### ஈ. பிரிவு.

1974–75 ஆம் ஆண்டுக்கான இத்துறையின் வேலைத் திட்டம் வருமாறு :—

(1) ஏற்கனவே சின்கோனா பயிரிடப்பட்டுள்ள 100 ஹெக்டேரில் நிலைப்படுத்துதல்.

(2) புதிதாக 60 ஹெக்டேரில் சின்கோனா பயிரிடுதல்.

(3) (சேலம் மாவட்டம் கொல்லிமலைகளில் 20 ஹெக்டேரில் ஜெரேனியமும், 10 ஹெக்டேரில் சிட்ரோனெல்லா புல்லையும் பயிரிடுதல் உட்பட) புதிதாக 115 ஹெக்டேரில் மருந்து மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுதல்.

(4) ஆறு இலட்சம் மேம்படுத்தப்பட்ட சின்கோனாச் செடி வகைகளைப் பெருக்குதல்.

(5) ரூ. 66 இலட்சம் மதிப்புள்ள 10,000 கிலோ குனைன் சல்பேட், 8,000 கிலோ சின்கோனா ஃபெப்ரிஃப்யூஜ், 200 கிலோ குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல்.

(6) ரூ. 14 இலட்சம் மதிப்புள்ள யூகலிப்டஸ் தைலம் (B.P.) (I.P.) வகைகள், ஜெரேனியம் தைலம், சிட்ரோனெல்லா தைலம், யூகலிப்டஸ் சிட்ரியோடோரா தைலம் போன்ற பல்வேறு மருந்து மற்றும் நறுமணத் தைலங்களைத் தயாரித்தல்.

(7) ஆனைமலையிலும், நீலகிரியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் மூன்றைக் கட்டுதல், ஏற்கனவே உள்ள குடியிருப்புகளைத் திருத்தியமைத்தல், நவீன சுகாதார வசதிகளை வழங்குதல்.

(8) 500 கிலோ இஞ்சிச் சத்து தயாரித்தல்.



### கூட்டு ஆராய்ச்சித் திட்டம்.

புதுடெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், மாநில அரசும் சரிபாதி செலவை மேற்கொண்டுள்ள கூட்டுத் திட்டமான யூகலிப்டஸ் சிட்ரியோடோரா மீதான ஆராய்ச்சித் திட்டம் நீலகிரித் தோட்டங்களில் இத்துறையினால் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### திட்டப் பணிகள்.

திட்டப் பணிகளின் இலக்குகள் இவ்வாண்டில் எய்தப்படும்.

**ஆனைமலையில் இப்போதுள்ள சின்கோனாத் தோட்டங்களில், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோருக்குப் புதுவாழ்வு அளிக்கும் திட்டம்.**

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோரைக் குடியமர்த்த, ஆனைமலை, அரசினர் சின்கோனாத் தோட்டங்களை விரிவுபடுத்தவும் வசதிகளை மேம்படுத்துவதற்குமான திட்டம் ஒன்றுக்கு அரசு வருவாய்த் துறையினால் 1973 ஏப்ரல் திங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய அரசு ரூ. 5 இலட்சம் நேரடியான கடனை வழங்கியுள்ளது. 125 அகதிக் குடும்பங்களிலிருந்து 250 அகதிகளை வேலைக்கமர்த்துவது என்ற இலக்கின்கீழ் இதுவரை 55 குடும்பங்களிலிருந்து 157 அகதிகளுக்கு ஆனைமலை, அரசினர் சின்கோனாத் தோட்டங்களில் வேலை தரப்பட்டுள்ளது.

### நிதி நிலை.

1974–75 ஆம் ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட வருவாய் ரூ. 65 இலட்சமாகும். அவ்வாண்டில் இத்துறையின் கணக்குகள் ரூ. 5 இலட்சம் நிகர ஆதாயத்துடன் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### முடிவுரை.

இத்துறையின் விரைவான வளர்ச்சிக்குத் தொழில் அமைதி இன்றியமையாதது. நாம் கடைப்பிடிக்கும் தொழிலாளர் கொள்கை தொழில் அமைதி பேணுதல் என்ற உயரிய நோக்கத்தைக் கொண்டதாகும். எனவே, சின்கோனாத் துறையானது திட்டப் பணிகள், திட்டத்தில் சேராத பணிகள் ஆகியவற்றைச் செயலாக்குவதில் பயிற்சி பெற்றோர், ஓரளவே பயிற்சி பெற்றோர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோருக்கு எல்லா நிலைகளிலும் பெருமளவு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## திங்கட்கிழமை 1974 ஏப்ரல் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்.

### வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 22-ம் விதியின் கீழ், முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள்" என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்து உள்ள "மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்" என்றுள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் முன் மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

### 2. நடைமுறைக் கேள்வி.

### வினா நேரத்தை நிறுத்தி வைக்க பேரவை அனுமதியளிக்கும் முன்னரே, வினா நேரம் இல்லை என உறுப்பினர்களுக்கு மடல் அனுப்பியது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Yesterday, we had received a communication from the Assembly Office that the Question Hour would be suspended and probably that was discussed in the meeting of the Business Advisory Committee and I am not going into it. The normal practice is that such a communication is not sent to us before the House decides that the Question Hour should be suspended. As such a communication has been sent to us before the decision of the House, it would amount to almost a contempt of the House. I am just bringing this to the attention of the Hon. Speaker to point out that it was irregular on the part of the Department to have sent as a communication that the Question Hour would be suspended.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

இப்பொழுது பேரவை முன்னவர் தீர்மானம் முன் மொழிந்தது சரி தான். அது பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் சரிதான். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறேரும். ஆனுல், முன் கூட்டியே எங்களுக்கு அனுப்பியது சரியல்ல. அது ஹைலி இர்ரெகுலர். It will even amount to contempt of the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற இந்தத் தாக்கீதில் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றிய விவரங்கள் தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர வேறல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக் கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முடிவுகளைக் கூட இங்கே அவையின் மரபுப்படி மாற்றிவிடக் கூடும். ஆகவே, இதை ஒழுங்குப் பிரச்னையாக எடுத்துக்கொள்ளாமல் அவை நடவடிக்கைகளை நடத்து வதற்கு உதவிகரமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப் பட்ட முடிவுகள் நேற்று முன்தினமே அவையில் அறிவிக்கப்பட்டுவிட்டன. ஒரு வேளை டாக்டர் ஹாண்டே அப்பொழுது அவையில் இல்லாமல் இருந்தி ருக்கலாம். அது அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டாக்டர் ஹாண்டே எழுப்பியதில் எந்த விதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

## 3. 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,45,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**Thiru P. SOUNDARAPANDIAN**: Sir, to discuss policy, I move—

" That the allotment of Rs. 18,45,300 under Demand No. 8—Elections be reduced by Rs. 100."

**Thiru J. JAMES** : Sir to discuss policy, I move—

" That the allotment of Rs. 18,45,300 under Demand No. 8—Elections be reduced by Rs. 100. "

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, ஓட்டுச் சாவடிகளை அமைக்கும்போது தற்பொழுது உள்ள தூரத்தைக் குறைத்து அலை மைலுக்கு அதிகம் போகாமல் செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—



"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,45,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அமைச்சர்கள் உப தேர்தல்களில் பிரச்சாரத்தில் பங்கு எடுக்கக்கூடாது என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 18,45,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,32,66,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகளில் ஸ்தல சட்ட மன்ற உறுப்பினர்கள் பங்கெடுக்க ஏற்பாடில்லா விடில் அமைச்சர்கள் பங்கெடுப்பது முறையற்றது என்பதை விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 11,32,66,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியத்தின் அமைப்பை மாற்றி அமைப்பது குறித்தும், வருவாய்த் துறை வாரியம் எடுக்கப்பட்டுவிடும் என்று அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது குறித்தும் விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 11,32,66,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

**Dr. H. V. HANDE** : Sir, to discuss about the maintenance of accounts in regard to construction of sets in the Institute of Film Technology, Adyar, I move—

That the allotment of Rs. 11,32,66,300 under Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, தலைமையிடப் பணியாளர்களின் சொத்து விவரங்களை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விசேஷக் கமிட்டி ஒன்றை நியமித்து பரிசீலனை செய்யவேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 11,32,66,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

## (இ) நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன் :

"நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,54,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, பருவ மழை தவறிய காலங்களில் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்படாமல் இருக்கும் முறையில் பொது ஜன ஸ்தாபனங்களின் ஆலோசனைப்படி உடனுக்குடன் துயர் தணிப்புப் பணி நடைபெற வழி வகுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,54,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகின்றேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to assess and increase the quantitative and qualitative assistance to the victims of the recent fire accident at Gudiyatham, I move—

"That the allotment of Rs. 1,54,14,000 under Demand No. 40—Relief on account of natural calamities be reduced by Rs. 100."

திரு. கே. பி. கோபால் : தலைவர் அவர்களே, தீ விபத்து நிவாரணத் தொகை எண்பது ரூபாய் என்பதை இருநூறு ரூபாய் என்று உயர்த்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,54,14,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



## (ஈ) நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,19,92,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss the need to grant full D.A. to all pensioners, on a par with the serving personnel, I move—

'That the allotment of Rs. 8,19,92,100 under Demand No. 41—Pensions and other retirement benefits be reduced by Rs. 100.'

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, சமூகத்தின் அடித்தளத்தில் ஆதரவற்று நலிந்து வாடும் வயோதிகர் அனைவருக்கும் குறைந்தது ரூபாய் ஐம்பது மாதந்தோறும் கொடுக்க ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,19,92,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, எந்தவிதமான வருமானமும் இல்லாத முதியோர் உதவித் தொகை பெறத் தகுதி பெற்ற அனைவருக்கும் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்காததைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,19,92,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு வயதான காலத்தில் பலன் பெற இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வருவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,19,92,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 42—பல் வகை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,48,56,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை 42—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 24,48,56,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy I move—
'That the allotment of Rs. 24,48,56,300 under Demand No. 42—Miscellaneous-be redued by Rs. 100'.

(ஊ) நிதிக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,42,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU J. JAMES : Sir, to discuss policy I move—
'That the allotment of Rs. 10,42,88,000 under Demand No. 45—Compensations and Assignments-be reduced by Rs. 100'.

D.R H. V. HANDE: Sir, to discuss policy I move—
'That the allotment of Rs. 10,42,88,000 under Demand No. 45—Compensations and Assignments—be reduced by Rs. 100'.

(எ) நிதிக் கோரிக்கை எண் 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :



"நிதிக் கோரிக்கை எண் 46—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,73,00,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்".

DR. H. V. HANDE : Sir, to discuss Policy I move—
'That the allotment of Rs. 1,73,00,100 under Demand No. 46—Compensation to Zamindars—be reduced by Rs. 100'.

(ஏ) நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,94,01,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU P. SOUNDARAPANDIYAN : Sir, to discuss policy I move—
I 'That the allotment of Rs. 35,94,01,200 under Demand No. 56—Loans and Advances by the State Government—be reduced by Rs. 100'.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, பலனளிக்காத கிணறுகளுக்குக் கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 35,94,01,200ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள்பற்றிய குறிப்புகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் அடிப்படை மேலும் நல்ல முறையிலே இந்தத் துறைகள் செயல்படுவதற்கான அரிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியங்களைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், உயர் அதிகாரிகள் ஆகியவர்களின் பிரச்சனைகளைப் பற்றி இந்த மன்றத்திலே பல நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அந்த கருத்துக்கள் நல்ல முறையிலே ஆராயப்பட்டு, அவைகளின் மீது அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

பொதுவாக தலைமைச் செயலகத்தைப் பொறுத்த வரையில், பல மாநிலங்களிலே உள்ள செயலகத்தையும் நம்முடைய செயலகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல குறைகளை நம்மால் சொல்ல முடியும். பொதுவாக நம்முடைய தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற இடத்தைப் பார்த்தால், அங்கே பணியாற்றுகின்றவர்கள் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. பணியாற்றுகின்ற அதிகாரிகள், இதர ஊழியர்களின் நிலைமைகளைப் பார்த்தால் நமக்கு அனுதாபம் ஏற்படுகின்றது.

அவர்கள் எவ்வளவு எவ்வளவு பரிதாபகரமான நிலையிலே இருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். பட்டியிலே அடைத்து வைத்திருக்கின்றமாதிரி இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அலுவலர்களுக்கு இடம் இல்லாமல், பல இடங்களில் மேஜை, நாற்காலி இல்லாமல், ஒரு டேபிளிலே 4, 5 பேர் பணியாற்றுகின்ற பரிதாபகரமான நிலைமைகளைப் பார்க்கிறோம்.

இடம் இல்லாமல் வராந்தாவிலே மின்விசிறி வசதிகூட இல்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள்.

தனியார் நிறுவனங்களிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அலுவலர்கள் பார்ப்பதற்கு மிகவும் நல்ல முறையிலே இருக்கிறார்கள்; உடல் வலிவோடு ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்றவர்கள் பணிக்கு வந்து சேர்ந்து கொஞ்ச நாட்களிலேயே கூன் விழுந்து, தலை நரைத்து, நடமாடுவதற்கே கஷ்டப்படுகின்ற காட்சியைப் பார்க்கிறோம். அவர்களைக் கேட்டால் பல குறைகளைச் சொல்கிறார்கள். குறிப்பாக எடுத்துக் கொண்டால் ஊழியர்களுக்கு காப்பி, டீ அருந்துவதற்கு கான்டீன் வசதி சரியாக இல்லை என்கிறார்கள். "அதிகாரிகளுக்கு நல்ல காப்பி, டீ கொடுக்கிறார்கள். எங்களுக்கு காப்பி என்ற பெயரில் விளக்கெண்ணெய் மாதிரி குடிப்பதற்கு ஏதோ ஒரு திரவத்தைக் கொடுக்கிறார்கள்", என்று சொல்கிறார்கள்.

குடிப்பதற்கு தண்ணீர் வசதி கூட இல்லை.

இயற்கைக் கடன்களை முடிப்பதற்கு ஏற்ற வகையில் வசதிகள் இல்லை. இப்படி பல பல குறைகளைச் சொல்கிறார்கள்.



அதே நேரத்தில் மற்ற இடங்களில் இருக்கின்றவர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் எல்லாம் நல்ல முறையிலே இருப்பதால்தான் அவர்கள் நன்றாக இருக்க முடிகிறது என்ற கருத்தைப் பல நேரங்களிலே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே இருக்கின்ற ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் பல பேர் தலைமைச் செயலகத்திலேயே நீண்டகாலமாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி பணியாற்றிக்கொண்டிருக்கின்ற பலர் இன்னமும் ஜில்லாக்களிலே கலெக்டர் ஆகாமல் தலைமைச் செயலகத்திலும் மற்ற இடங்களிலும் இருக்கிறார்கள். சமீபத்தில்தான் சொந்தாற்போல் பல ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை கலெக்டர்களை மாற்றி இருக்கிறார்கள். நீண்டகாலமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஆளும் கட்சித் தலைவர்களை, அமைச்சர்களை திருப்திப் படுத்திவிட்டால் அங்கே இருக்கின்றவர்கள் தொடர்ந்து அங்கே கலெக்டராக இருக்க முடியும் என்ற நிலை இருப்பதால் பல அதிகாரிகள் கலெக்டர்களாக நீண்டகாலமாக மாற்றப்படாமல் இருக்கிறார்கள்.

ஆனால் சமீபத்தில் மாற்றியிருக்கிறார்கள். அப்படி இல்லாமல் கலெக்டர்களாகப் பணியாற்றுகின்ற வாய்ப்பை பரவலாக பலருக்கும் தரவேண்டும். ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் அரசியல் செல்வாக்கு பெற்றுவிட்டால் எந்த காரியத்தையும் சாதிக்க முடியும் என்ற நிலைமையை நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். இந்த நேரத்தில் இதற்கு ஒரு சின்ன உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊட்டியிலே இருந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி மாவட்ட ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர். தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார் என்று அவர் மீது குற்றச்சாட்டு வந்தது. அந்தக் குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக விஜிலன்ஸ் துறையில் ஒப்படைத்தார்கள். அவர்கள் விசாரித்து ஒரு ரிப்போர்ட்டை அரசாங்கத்திடம் சமர்ப்பித்த பின்பும் எந்தவிதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்பட வில்லை. அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவர் ஒரு உயர்ந்த வாரியத்திற்கு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அறிகிறோம். இதற்கான விளக்கத்தை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே தருவார்கள் என்று நம்புகிறேன்.

இத்தகைய உயர்ந்த மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள் தவறு செய்யும்போது, அது எந்த நிலையில் இருப்பவர்களால் செய்யப்பட்டாலும், உடனடியாக விசாரணை செய்து, ரிப்போர்ட் வந்த பின்னால் தண்டிக்கப்பட்டால்தான் கீழே இருப்பவர்களுக்கு பயம் ஏற்படும். உயர்ந்த மட்டத்தில் இருக்கிறவர்கள் குறிப்பிட்ட ஒரு சூப்பர் மார்க்கெட்டை ஊட்டியிலே கட்டினார். அதில் பல ஊழல்கள் ஏற்பட்டன என்று குற்றச்சாட்டு வந்த பின்னால் தான் விசாரிப்பதற்காக விஜிலன்சுக்கு அனுப்பினார்கள். அது என்ன வாயிற்று என்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற என்னைப் போன்றவர்கள் அறிந்துகொள்ள மிகுந்த ஆவலாக இருக்கிறோம்.

அதேபோல் டில்லியிலே இருக்கின்ற நம்முடைய தமிழக அரசுக்குச் சொந்தமான 'தமிழகம்' என்ற விடுதி இருக்கிறது. அங்கே பணியாற்றுகின்ற அதிகாரி கிட்டத்தட்ட 50,000 ரூபாய்க்கு மேல் தவறு செய்துவிட்டார் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆடிட் ரிப்போர்ட் சொன்ன பிறகும் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள இந்த மன்றம் ஆவலாய் இருக்கிறது.

இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் உயர்ந்த மட்டத்தில் இருப்பவர்கள் தவறு செய்தால் கண்டிப்பாக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்படியானால்தான் கீழ் மட்டத்தில் இருக்கிறவர்கள் தவறு செய்ய பயப்படுவார்கள்.

இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது ? ஏதாவது ஒரு லைசென்ஸ் அல்லது பெர்மிட் அல்லது வேறு ஏதாவது ஒரு காரியத்திற்கு விண்ணப்பம் போடுகிறார்கள் என்றால், அந்த விண்ணப்பம் செக்ரடேரியட்டுக்கு வந்த பின்னால் அடி மட்டத்திலே இருக்கிற கிளார்க்கிலிருந்து மேல்மட்டம் போகின்ற வரையில் நெம்புகோல் போட்டுக்கொண்டே போனால்தான் பைல் நகர்கின்றது என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. பலர் அதைத்தான் சொல்கிறார்கள்.

சென்னைக்கு ஏன் போகிறீர்கள் என்று கேட்டால், பைல் போயிருக்கிறது, கொஞ்சம் வேலை செய்தால்தான் பைல் உடனடியாக தகுந்த நேரத்தில் நல்ல பலன் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது ; ஆகவே சென்னைக்கு செல்கிறேன் என்று சொல்கிறார்கள். இல்லை என்றால், 4, 5 வருஷமாக கவனிக்கப்படாமல், முடிவு செய்யப்படாமல் இருக்கின்ற பைலை செக்ரடேரியேட்டிலே பார்க்கிறோம்.

ஒரு பைல் வந்தது என்றால் இவ்வளவு காலத்திற்குள்ளாக டிஸ்போஸல் ஆகவேண்டுமென்ற ஒரு நடவடிக்கையைக் கொண்டுவந்தால்தான், அது இவ்வளவு காலத்திற்குள்ளாக தீர்க்கப்பட வேண்டும் என்ற உத்தரவு இருந்தால்தான் அதிகாரிகளுக்கு பயம் இருக்கும்.

கீழே இருக்கிறவர்களுக்குத் தூண்டுகோல் போட்டால்தான் சாதிக்க முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது. ஒரு சின்னச் செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். தயவு செய்து பெரிதுபடுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகளுக்கே தெரியாமல் பல நேரங்களில் பைல்கள் வெளியே கொண்டுவரப்படுகின்றன. எனக்குத் தெரிந்த ஒரு நிகழ்ச்சி ரெவின்யூ போர்டு சம்பந்தப்பட்ட பைல்கள்—ஒரு தங்கும் உணவு விடுதிக்குக் கொண்டுவரப்பட்டு—அங்கிருந்த ஒருவருக்குக் காட்டப்பட்டது.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆபீஸ் பைல்களைப் பற்றிப் பேசுகிறார்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.



திரு. கோவை செழியன் : நான் இருக்கிற நிலைமைகளைச் சொல்கிறேன். தயவு செய்து தவறு இருந்தால் எடுத்துக் காட்டுங்கள். மன்னிப்பு வாங்கிக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நடைபெறுகிற ஒழுங்கீனங்கள் தடுக்கப்பட வேண்டுமென்றால் அது போல நடந்து கொண்டது யார் என்பதை—இந்தச் சட்டசபையில் உள்ள அமைச்சர்களுக்கு வேண்டுமானால் சொல்ல வேண்டாம்—அந்த இலாக்கா தலைமை அதிகாரிக்காவது தெரியப்படுத்தினால்தான் அதுபோல மேற்கொண்டு நடைபெறாமல் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். பொறுப்புள்ள அங்கத்தினர்கள்—அதுபோல தவறு நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்று விரும்பினால் அந்த இலாக்கா அதிகாரிக்கு எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான் தவிர்க்கலாமே தவிர, அவர் பெயரைச் சொல்லமாட்டேன் என்பதனால் தவிர்க்க முடியாது.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி சமீபகாலத்தில் நடைபெற்றதுதான். அந்த பைல் உணவு விடுதியில் கொண்டுவந்து காட்டப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிச் செய்தது யார் என்கிற விவரத்தை இங்கே அமைச்சர்களிடத்தில் தெரிவிக்காவிட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்திலாவது தெரிவிக்கத் தயாராய் இருக்கிறாரா ?

திரு. கோவை செழியன் : நான் அந்தப் பெயரை ஒரு உத்தரவாதம் கொடுக்கப்பட்டால் அமைச்சர்களிடத்திலும் தெரிவிக்கத் தயாராய் இருக்கிறேன். இன்றைக்கு லைசென்சு கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த விவரத்தைச் சொல்வதன் மூலம் அந்த லைசென்சு ரத்து செய்யப்படுமானால் இதுபோன்ற விவரங்களை எங்களிடத்தில் யாரும் தரமாட்டார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : லைசென்சு முறைப்படி வழங்கப்பட்டிருந்தால் அதை இந்த அரசு எப்போதும் மாற்றாது. சட்ட விரோதமாக கொடுக்கப்பட்டிருந்தால், அதைக் கொடுப்பதற்கு முறை தவறான காரியங்கள் நடைபெற்றிருந்தால்—பணம் வாங்கப்பட்டிருந்தால், பைல் வெளியில் எடுத்துக் கொண்டு போகப்பட்டிருந்தால்—என்ன என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக்கொள்கிற போதுதான் ஒழுங்கை ஏற்படுத்த முடியும். நிர்வாகத்தில் ஒழுங்கு ஏற்பட வேண்டுமென்று கருதினால் மாண்புமிகு உறுப்பினர் அந்த விவரங்களைச் சொல்வதுதான் முறை.

திரு. கோவை செழியன் : அதைத்தான் நான் சொன்னேன். உரியவரிடத்தில் சொல்லத் தயார். அப்படிச் சொல்வதன் காரணமாக ஏற்கெனவே வழங்கப்பட்ட லைசென்சு ரத்து செய்யப்படுமானால் இது

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினருக்கு ஒழுங்கு நிலை நிறுத்தப்படவேண்டுமென்ற அக்கறை இருந்தால்—எந்தவிதத்திலும் நிர்வாகத்தில் தவறு நடைபெற இடமளிக்கக் கூடாது என்கிற அக்கறை இருக்குமானால் தவறு செய்பவர்களை தண்டிப்பதன் மூலம் தான் அதனை ஏற்படுத்த முடியும்—தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசுக்கு நம் ஒத்துழைப்பைத் தர முன்வர வேண்டும்.

திரு. கோவை செழியன் : தாராளமாகச் சொல்கிறேன். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட செய்திகள் வருகிறபோது, பாதகமான விளைவுகள் வந்தால், யாரும் எங்களிடம் சொல்லமாட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இவ்வளவு வெளிப்படையாகச் சொல்கிற காரணத்தினால் தவறு செய்தவர்களுக்கு, சொன்னவர்களுக்கு, பாதகம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலைதான் உருவாகி விடுகிறது. இப்படி ஒரு தகவல் தெரிந்தவுடன்—யாருக்கும் தெரியாமல் தொலைபேசி மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ என்னிடம் சொல்லி யிருந்தால்—கோவை செழியன் சொன்னார் என்பது கூட வெளியில் தெரியாமல்—நடைபெற்ற குற்றத்தை விசாரித்து, நடவடிக்கை எடுத் திருப்பேன். இன்றைக்கு இந்த விஷயத்தையும் கூட என்னிடம் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்கிற உத்தரவாதத்தைக் கேட்காமல்—என்ன நடந்தது என்பதை வந்து மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் உடனே நான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயார். என்ன நடந்தது என்பதை என்னிடம் வந்து பிறகாவது விளக்கிச் சொல்ல வேண்டும்.

திரு. கோவை செழியன் : நான் அதைத் தாராளமாகத் தெரிவிக் கிறேன். பொதுவாக "குறுக்கு வழியில் சென்றால்தான் காரியங்கள் நடைபெறும், நியாயமான காரியங்கள் கூட" என்கிற நிலைமையை நிர்வாகத்தில் உருவாக்காமல் இருந்தால்தான் இதுபோன்ற வழிகளைப் பின்பற்றமாட்டார்கள்.

யாராவது மனு செய்தால் காரியத்தைச் செய்கிறோமோ, இல்லையோ உடனடியாக இரண்டில் ஒன்று பைசல் செய்யப்பட வேண்டும். இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அவர்களுக்கு பதில் தந்துவிடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தினால்தான் குறுக்குவழிகளைப் பின்பற்ற மாட்டார்கள்.

அடுத்து, இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பலயிடங்களில் தலைமை ஸ்தாபனத்தில் இருக்கிறார்கள். அவர்கள் நிர்வாகத் திறன் மிக்கவர்கள் என்றால் நிர்வாகத் துறையில் அவர்களைத் தலைமை அதிகாரிகளாகப் போடுவது சரி. ஆனால் தொழில் நுட்பத் திறன் தேவைப்படுகிற நிர்வாகங்களிலும் அவர்களைத் தலைமை அதிகாரிகளாகப் போடுகிறோம். தொழில் நுட்பம் தெரிந்தவர்களை இந்த நிர்வாகங்களில் தலைமை அதிகாரிகளாகப் போட்டால்தான் அவை நல்லமுறையில் செயல்படும்.

குறிப்பாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டைரி பார்ம் பற்றித் தெரிந்தவர ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை வெளிநாட்டுக்கு



அனுப்பினோம். அவர் அங்கே பயிற்சி பெற்று வந்து இந்த நிர்வாகத்தில் இரண்டொரு வருடம் கூட பணியாற்றாமல் வேறு துறைக்கு மாற்றப்பட்டார். இதனால் யாருக்கு என்ன லாபம்?

அரசாங்கப் பணத்தைச் செலவழித்து வெளிநாடுகளுக்கு அனுப்பு கிறோம். இவரைப் பிற துறைக்குப் போட்டுவிடுவதனால் இந்தத் துறையும் பயன் அடைவதில்லை. அங்கும் அவருக்கு வெளிநாடு சென்று பெற்ற அனுபவம் பயன் தருவதில்லை.

ஒரு துறைக்கு ஒரு அதிகாரியைப் போட்டால் இரண்டு, மூன்று வருஷங் களாவது மாற்றக் கூடாது. அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டில் ஒருவரைப் போட்டு 6 மாதங்களுக்குள் அவரை வேறு இடத்திற்கு மாற்றினால் என்ன பயன்? அந்தத் துறையைப்பற்றித் தெரிந்துகொள்ளவே 6 மாதங்க ளாகும். அதை அவர் தெரிந்து கொள்வதற்குள் வேறு துறைக்கு மாற்றப்பட்டுவிடுகிறார். இதுபோன்று மாற்றங்கள் செய்யக்கூடாது.

அடுத்து, பல வருடங்கள் நல்லமுறையில் பணியாற்றுகிற சீனியர் Non I. A. S. அதிகாரிகளுக்கு சீனியாரிடி படி ஐ. ஏ. எஸ். கன்பர்ம் பண்ணுவதில்லை. அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள் சிலரை சீனியாரிடி பார்க்காமலேயே ஐ. ஏ. எஸ். கன்பர்ம் பண்ணுகிற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட மனக்குறைக்கு இடமளிக்காது—சீனியாரிடிபடி ஐ.ஏ.எஸ். கன்பர்ம் பண்ணுவதற்கு ஏற்பாடு செய்தால்தான் வேலை செய்கிறவர் களுக்கு உற்சாகம் இருக்கும்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கண்காணித்து வேலை வாங்குகின்ற பொறுப்பில் அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் அடிக்கடி டூர் போகாமல் தலைமையகத்தில் இருக்கவேண்டும். தங்கள் கீழ் இருக்க கூடியவர்கள் விஷயத்தில் கவனிப்பும் இருக்கவேண்டும். பொதுவாக அது இருப்பதில்லை.

மேலும் நான் ஆளுங்கட்சியில் இருந்தபோதே பார்த்திருக்கிறேன்.—எல்லோரும் அல்ல—சிலர் அமைச்சர்களாக ஆகிறவரையில் சகஜமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சரானவுடன் எங்கிருந்தோ குதித்து வந்தாற்போல—பிறவியிலேயே அமைச்சர் ஆனது போல் வந்துவிட்டுப் போகிறார்கள். எல்லோரையும் சொல்லவில்லை. ஒருசிலரைத்தான் சொல் கிறேன். இன்னும் அந்த அமைச்சர்களை இல்லத்தில் பார்க்கலாம் என்றால் அமைச்சரை பார்த்தால் சுலபமாகப் பேசிவிடலாம். ஆனால் பி.ஏ.க்கள் அங்கே உட்காருங்கள், இங்கே உட்காருங்கள் என்று ஆட்டி வைத்து விடுகிறார்கள். பி.ஏ.க்களுக்கு அந்த அமைச்சர்கள் கொஞ்சம் சொல்லி வைக்க வேண்டும்—உறுப்பினர்களைப் பண்போடு நடத்தச் சொல்லித்தர வேண்டும்.

அடுத்ததாக, பார்லிமெண்டில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டுகள் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டுகள் பொதுவாக தமிழ்நாடு சட்ட மன்றத்தில் வைக்கப்படுவதில்லை.

(முற்பகல் 9–30) [1974 எப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றத்திலே வைப்பதுண்டு. அதன் மேல் விவாதம் நடத்த வேண்டுமென்று உறுப்பினர்கள்தான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த மன்றத்திலே அது வைக்கப் படுகிறது.

திரு. கோவை செழியன் : அதைப்பற்றி விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்திலே வைத்தவுடனே விவாதம் வேண்டுமென்று உறுப்பினர்கள்தான் கேட்கவேண்டும். அரசுத் தரப்பினராலே அது கொண்டுவரப்படுவதில்லை.

திரு. கோவை. செழியன் : பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் சில தவறுகள் நடைபெறுகின்றன. அந்த செலக்ஷனிலே பல குறைகளை நாம் பார்க்கிறோம். உதாரணத்திற்கு நான் ஒன்று சொல்கிறேன். எனக்குத் தெரிந்த ஒருவர்—நான் பெயரை தனியாக முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட எழுதித் தரத் தயாராக இருக்கிறேன்—சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கு தகுதியில்லை என்று விலக்கப்பட்டவர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொன்னால், அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே தவருன நிகழ்ச்சி நடந்தது என்று சொன்னால், எப்படி பதில் சொல்லமுடியும். நீங்கள் குறிப்பாகச் சொன்னால் தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

திரு. கோவை செழியன் : நான் பேசுவதாலே யாருடைய வாழ்க்கையும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் நான் அப்படிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : யாருடைய வாழ்க்கையும் பாதிக்கப் படக்கூடாது என்று அவ்வளவு அக்கறை உள்ள அங்கத்தினர் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்பது தனித் தகுதியுடையது, அவர்களே தீர்மானித்துக் கொள்கிற உரிமை பெற்றிருக்கிற ஒன்று, நிர்வாகக் குறைகளாக இருந்தாலும்கூட அரசாங்கம் அதுபற்றிச் சொல்லமுடியாது. செமி ஜூடிஷியல் பாடி போன்றதாகும். அந்தக் குறைகளை அவர்களேதான் நிவர்த்திக்க வேண்டும். ஆகவே அப்படிப்பட்ட கருத்துக்களை ஆலோசனைகளாகக் கூறலாமே தவிர குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடாது. ஆலோசனைக்கு விடும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : சார், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட் என்பது நான் அறிந்த வரையிலே அரசுதான் விவாதத்தை அதன்மீது நடத்திவைக்கிறார்கள். காரணம் அது அதிகாரப்பூர்வமான ரிப்போர்ட்டாக இருக்கிறதாலே. இங்கேயும் அரசே அந்த விவாதத்தைத்



1974 எப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை யோசிக்கலாம், செழியன் 25-வது நிமிடத்தில் முடிக்கவேண்டியது, 35-வது நிமிடத்திலாவது முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கோவை செழியன் : நிறைய பாய்ண்ட்ஸ் இருக்கின்றன.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கலாம், நேரமில்லையே, என்ன செய்வது?

திரு. கோவை செழியன் : ஆகவே எஸ். ஐ. யாகக்கூட தகுதியில்லாதவர் டி.எஸ்.பி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அது ''அட்டானமஸ் பாடி'', அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்களே இந்த சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள் 98 பேரும் குரூப் 1 சர்வீஸிலே பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது இந்த காலத்திலே நடைபெற்று இருக்கிறது என்று சொன்னேனே தவிர நாங்கள் தேர்ந்தெடுத்தோம் என்று சொல்ல வில்லை.

திரு. கோவை செழியன் : ரிக்கார்டு இருக்கிறது, எடுத்துப் பாருங்கள். அப்படிச் சொல்லி அரசாங்கம்தான் பெருமை எடுத்துக்கொண்டதே தவிர சர்வீஸ் கமிஷனுக்குப் பெருமை வரவில்லை.

98 பேரும் பிற்பட்ட வகுப்பினருக்குத் தந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அது அரசாங்கத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும்சரி, சர்வீஸ் கமிஷனைச் சேர்ந்ததாக இருந்தாலும் சரி, பிற்பட்ட வருப்பினருக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும். இதைபோல தாழ்த்தப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும்.

ஆனால் அதற்காக முற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பதவி கூட தரவில்லை என்று சொல்லக்கூடாது. "நாங்கள் என்ன பாவம் செய்தோமோ, முற்பட்டஜாதியிலே பிறந்துவிட்டோம்" என்று அவர்கள் எண்ணுகிறார்கள் ஆகவே அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது.

நான் முதலமைச்சர் அவர்களைப் பலமுறை கேட்டுக்கொண்டேன். என்னுடைய கொங்கு வேளாளர் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று பலமுறைகள் கேட்டுக்கொண்டேன். காரணம் பிற்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கப்படுவதற்கு என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டுமோ அதைவிட அதிகமாக இருக்கின்றன தகுதிகள்.

சர்வீஸ் கமிஷனிலே மைனாரிட்டி குரூப்புக்குக் கொடுக்கிறீர்கள், மெஜாரிட்டி குரூப்புக்குக் கொடுக்கிறீர்கள், ஆனால் எங்கள் இனத்தவரைச் சேர்ந்தவர் ஒருவரைக்கூடப் போடவில்லை. இனிமேலாவது முதலமைச்சர் அவர்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எலக்ஷனைப்பற்றி சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். பை எலக்ஷன் நடைபெறுகின்றபோது அமைச்சர் அவர்கள் போய் உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்களும் கட்சி வேலைக்காகப் போகிறார்கள் என்று சொன்னாலும் அவர்களுடைய அதிகாரம், அவர்களுடைய அந்தஸ்து இவையெல்லாம் மறைமுகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு இடத்திற்கு அமைச்சர் செல்கிறார் என்றால் அதிகாரிகள் புடைசூழ, போலீஸ் துறையினர் காவல்வர செல்கிறார்கள்.

அதனால் அங்கங்கேயிருக்கிற மக்கள் பயந்து கொண்டுவிடுகிறார்கள். அந்த அச்சத்தின் காரணமாக ஜனநாயக முறையிலே நியாயமாக நடைபெற்றாகவேண்டிய எலக்ஷன் பயத்தின் காரணமாக மக்கள் அவர்களுடைய எண்ணங்களை மாற்றிக்கொள்கிற நிலைமை ஏற்படுகிறது. எந்தக் கட்சியாக இருந்தாலும்சரி அமைச்சர்களாக இருப்பவர்கள் தேர்தல் வேலைகளில் கலந்துகொள்ளக்கூடாது என்று முடிவு எடுக்கவேண்டும்.

நான் கோவையிலே பார்த்தேன். அமைச்சர்கள் சிலர் அங்கே முகாமிட்டுக்கொண்டு வீடு வீடாகச் சென்று பணியாற்றினார்கள். அவர்கள் அமைச்சர்கள் என்ற அந்தஸ்திலே செல்கின்ற காரணத்தினாலே அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

எலக்ஷன் நடந்து முடிந்ததற்குப் பிறகு ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதைப்பற்றி அரசாங்கமோ அதிகாரிகளோ கவனிப்பதில்லை. உடனடியாக அரசாங்கம் போலீஸ் அதிகாரிகளுக்கு உத்திரவிட வேண்டும். ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் குறைகள் இருந்தால் அவை உண்மையானவைதானா என்பதைக் கவனித்து நேர்மையான தீர்ப்பு அளிக்க முன்வரச் செய்யவேண்டும். ஆளுங் கட்சிக்கு ஒரு சலுகை, எதிர்க்கட்சிக்கு ஒரு சலுகை என்றால் வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதையேதான் பின்பற்றுவார்கள். அந்த முறை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். அமைச்சர்கள் பை எலக்ஷனில் கலந்துகொள்வதில்லை என்று நீங்களே முடித்துவிடவேண்டும். அப்படிச் செய்தால் நீங்களே ஜனநாயகத்திற்கு நல்ல மரியாதை காட்டுகிறீர்கள் என்று பொருள் ஆகும்.

பென்ஷன்தாரர்களுக்கு ரிடையர் ஆகி 2, 3 ஆண்டுகளாகியும்கூட இன்னும் பென்ஷன் வரவில்லை. சட்டம் என்ன சொல்கிறது என்றால் அவர்கள் ரிடையர் ஆவதற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே அவர்களுடைய பைல்களை, பேப்பர்களை தயாராக வைத்திருக்க வேண்டும் என்று சொல்கிறது. ரிடையர் ஆனவுடன் அவர்களுக்கு பென்ஷன், பிராவிடண்ட் பண்ட் எல்லாம் கிடைக்கவேண்டும். அவையெல்லாம் உடனே கிடைக்காததால் அவர்கள் அலுத்து அலுத்து அந்த அலுப்பிலேயே பலபேர்கள் செத்துவிடுகிறார்கள். ஆகவே, யெதானவர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கருணைகூர்ந்து ரிடையர் ஆவதற்கு முன்னாலேயே இப்படிப்பட்ட வாய்ப்புகள் எல்லாம் அவர்களுக்கு இடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.





திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நண்பர் கோவை செழியன் அவர்கள் தேர்தல்களிலே அமைச்சர்கள் பங்குபெறக்கூடாது என்று சொன்னார்கள். அது மாநில அமைச்சர்களுக்கு மட்டுமா அல்லது மத்திய அமைச்சர்களுக்கும் சேர்ந்ததா ?

திரு. கோவை செழியன் : அமைச்சர்கள் என்றால் எல்லா அமைச்சர்களும்தான். இந்தியப் பிரதம அமைச்சராக இருந்தாலும்சரி, அல்லது வேறு எந்த அமைச்சராக இருந்தாலும்சரி, யாராக இருந்தாலும் அப்படிக் கலந்துகொள்வது ஜனநாயகத்திற்கு உகந்தது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

10 மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தேர்தல்கள், அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தலைமையிடப் பணியாளர்கள், ஓய்வூதியம் இவை போன்ற மானியங்களை மனமார வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் குறைகளைச் சொல்ல வேண்டுமென்ற காரணத்தினால் சொன்னாலும் இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களிலே தமிழ்நாட்டுத் தேர்தான் சீராக ஓடிக்கொண்டு இருக்கிறது என்பதையும், அதற்குக் காரணம் தமிழ்நாட்டுத் தேரை ஓட்டிக்கொண்டிருக்கிற ம்தேரோட்டிகள்தான் என்பதையும் மறுக்க முடியாது.

தேர்தல்கள் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே பல்வேறு இடைத் தேர்தல்கள் வந்த காலத்திலே கட்சியின் வேட்பாளர்களை ஆதரிக்கக்கூடிய வகையிலேதான் அமைச்சர்கள் கலந்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் வட மாநிலங்களைப் பொறுத்த வரையிலும் பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. தேர்தல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டம் கூட்டமாகச் சிலபேர்கள் வந்து வன்முறை காட்டி தங்கள் கையிலே இருக்கிற வாக்குப் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு போனார்கள் என்றும், வாக்குச் சீட்டுக்களைப் பறித்துக்கொண்டு போனார்கள் என்றும், ஒருவரே பல வாக்குச் சீட்டுக்களைப் பெட்டியிலே திணித்தார் என்றும் பத்திரிகைகளிலே வந்தபடி நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைப் போல தமிழ்நாட்டிலே நடைபெறவில்லை. இங்கு மிகவும் சீராக நடைபெற்றிருக்கின்றன.

வேண்டுமானால் நாகர்கோவில் தேர்தலின்போது சில அமைச்சர்கள் இருந்த இடங்களிலே கற்கள் வந்து விழுந்த நிகழ்ச்சிகள் இருக்கலாமே தவிர வேறு எந்தவிதமான நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. புதுவையாக இருந்தாலும் அங்கே ஆளுங் கட்சித் தொண்டர் தான் கொலை செய்யப்பட்டாரே தவிர, வேறு நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர் தலைமையிடத்திற்கு வேண்டிய இடம் வசதியாக இல்லை, நெரிசலாக இருக்கிறது என்று கூறினார்கள். ஏறத்தாழ 450 கோடி, 460 கோடி ரூபாய் வருமானத்தில் எது எதற்குச் செலவழிக்க வேண்டுமோ அவைகளுக்கு அமைச்சரவை முழு அளவில் கவனம் செலுத்தி செலவழிக்கிறது. இங்கேயுள்ள சட்டமன்றத்திற்கும் சரி, அமைச்சரவைக்கும் சரி, தலைமையிடப் பணியாளர்களுக்கும் சரி, இட வசதி தேவை என்பதை ஒத்துக்கொண்டாலும் இன்றைக்குக் கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நாட்டின் வருமானத்தில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கை பள்ளிக்கூடக் கட்டிடங்களைக் கட்டுவதற்குச் செலவழிக்கிறோம். அதற்காக இன்றையதினம் இவ்வளவு பணத்தைச் செலவழிப்பதற்குக் காரணம் என்னவென்றால் யார் நேரிடையாக வாக்களித்தார்களோ அந்த மக்கள் சிரமப்படாமல் இருக்க அவர்களது துயரத்தை முதலில் போக்க வேண்டுமென்றுதான் இந்த ஆட்சி அவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இருந்தாலும் இன்றைக்கு இந்த ஆட்சித் துறையைப் பற்றி நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சரவையைப் பற்றி இங்கே கூறினார்கள். இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற முதலமைச்சரானாலும் சரி, அவரோடு இணைந்து கூட்டுப் பொறுப்போடு இயங்குகின்ற மற்ற அமைச்சர்களானாலும் சரி, எல்லாப் பிரச்சினைகளிலும் எவ்வளவு உன்னிப்போடு, கவலையோடு ஆய்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், ஒரு ஆண்டிலே ஏறத்தாழ 10 அல்லது 12 முறை அமைச்சரவைக் கூட்டங்களைக் கூட்டுகிறார்கள், மணிக்கணக்கில் கலந்து பேசுகிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து வெட்டுத் தீர்மானம் ஒன்றில் கூடக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்கள் அதிகமாகச் சுற்றுப் பிரயாணம் செல்கிறார்கள், அது குறைக்கப்பட வேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கூடக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நான் ஒன்றைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எப்பொழுதும் நடக்காத அளவில் அமைச்சரவைக் கூட்டங்கள் இந்த அமைச்சரவையிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, பல மணி நேரம் கருத்துக்களைக் கலந்து பேசுகிறார்கள். அவரவர்கள் துறையைப் பற்றிய கருத்துக்களை அமைச்சர்கள் எடுத்துக் கூறுகிறார்கள், முதலமைச்சரவர்கள் விளக்கம் தருகிறார்கள் என்ற முறையில் இன்றையதினம் நல்ல கூட்டுப் பொறுப்போடு இந்த அமைச்சரவை இயங்குவதால்தான் நாம் பல்வேறு சாதனைகளைப் பார்க்க முடிகின்றது. நான் இதை, காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று மட்டும் பேசவில்லை, நான் வெளிப்படையாகவே சொல்கிறேன், இன்றைக்கு மற்ற மாநில அமைச்சரவைகளைக் காட்டிலும் நம்முடைய தமிழ்நாட்டு அமைச்சரவை எந்த வகையிலே சொத்தையாக, சோடையாக இருக்கிறது என்பதை எனக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலில், மக்களுக்கு வயிறார உணவு அளிக்க வேண்டுமென்பதிலே—தமிழகத்தில் உள்ள மக்களுக்கு மட்டும் வயிறார உணவு அளிப்பது மட்டுமல்ல—பல்வேறு மாநிலங்களுக்கும் அளிக்கிறது என்ற அந்தச் [illegible] பெருமையை இந்த அரசு பெற்றிருக்கிறது. அதற்கடுத்தபடியாக [illegible] உறையுள் வழங்கப்பட வேண்டும். அப்படிப் பார்க்கின்றபொழுது [illegible]



அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு ஏழை, எளிய மக்கள் அதிலும் வீடற்ற, நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை 5 இலட்சம், 6 இலட்சம் என்ற அளவிற்கு மனைப் பட்டாக்களைக் கொடுத்து மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது.

அமைச்சர்கள் வெளியே போக வேண்டாமென்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள ஒரு சிறிய மாவட்ட, மான கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுத் துறையில் சில சிக்கல்கள் ஏற்பட்ட நேரத்தில் இங்கே உணவு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு மன்னை அவர்கள் அங்கே போய் உட்கார்ந்துகொண்டு, எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே அதிகமாக இடம் பெற்றிருந்தாலும் கூட அவர்களையெல்லாம் வரவழைத்து மணிக்கணக்கில் பேசி பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்று கருதுகிறார்கள். எத்தனை முறை கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்த சிக்கலைத் தீர்ப்பதற்காக அவர்கள் நேரத்தை ஒதுக்கிக்கொண்டார்கள் என்பதை எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் மனதைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, எந்த வகையிலே எடுத்துக்கொண்டாலும் இன்றைய அமைச்சரவை மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இங்கே ஒன்றைச் சொன்னார்கள். அமைச்சர்களின் தலையீடு அல்லது ஆளுங் கட்சிக்காரர்களின் தலையீடு இருக்கலாம் என்று எனக்குப் பின்னால் வருபவர்கள் கூடப் பேசலாம்.

ஒரு வேடிக்கை இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலும் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக அரசியலில் சில சம்பவங்கள் நாட்டிலே நடைபெறுகின்றன. அதிலே ஒரு சம்பவம்தான் இந்த நாட்டினுடைய முதலமைச்சர் பேசப்போன, சேலம் வேலூருக்குப் போன ஒரு நிகழ்ச்சியில் அவர்களே கூட கலந்துகொள்ள முடியாத அளவிற்கு, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள டிரான்ஸ்ஃபார்மர் போன்றவைகளை உடைத்து நொறுக்கி அந்த வட்டாரமே இருட்டில் மூழ்கியது மட்டுமல்ல அவர்களே கூட பேச முடியாமல் திரும்புகின்ற அளவிற்கு எதிர்க் கட்சிகள் ஜனநாயக உரிமையைப் அதிகமாகப் பயன்படுத்துவது இந்த நாட்டிலேதான் நடக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் மன்னை அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது அவருடைய முகத்திலே கல்லெறிகின்ற சூழ்நிலையும், அந்தக் கல்லடியைப் பெற்று அவர்கள் திரும்பும் சூழ்நிலையும் இந்த நாட்டிலேதான் நடக்கலாமே தவிர, ஒருவேளை எதிர்க் கட்சிகளை ஒடுக்க வேண்டுமென்று எண்ணியிருந்தால் இன்றைக்கு இப்படிப்பட்ட வாய்ப்புகள் ஏற்படுமா என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அளவிற்கு ஆளும் கட்சிக்காரர்களாகிய நாங்கள்தான் தாக்கப்படுகிறோமே தவிர, நாங்கள்தான் இப்படிப்பட்ட அராஜகங்களை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்கிறதே தவிர, மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறதா ? இன்றைக்குக்கூட பழம் பெரும் தலைவர் நேருவிற்கு அடுத்த மிகப் பெரும் அரசியல் தலைவர் என்று சொல்லப்படுகின்ற ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் வெளிப்படையாகவே ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சிகளின் கோரிக்கைகளுக்காக, மாணவர்கள் ஊர்வலம் நடத்துவதற்குக்கூட அனுமதிக்கப்படாத ஒரு சூழ்நிலை பீகார் மாநிலத்தில் இருக்கிறது என்று பழைய தலைவராக, பெரும் தலைவராக இருக்கின்ற ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பகிரங்கமாக அறிக்கை கொடுத்து, இப்படி இந்திரா காங்கிரஸ் ஆளும் மாநிலத்தில் சூழ்நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் இங்கே, "சிகப்பு நாடா", "ரெட் டேப்பிஸம்" இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. திரு. செழியன் போன்றவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். இந்த அமைச்சரவை முடிந்த அளவிற்கு வேகமாகக் காரியங்கள் ஆற்ற வேண்டுமென்று விரும்பினாலும்கூட எவ்வளவோ ஃபைல்கள் இந்தக் கோட்டையிலேயே முடிவதாக இல்லை. உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால், ஒரு குடிநீர்த் திட்டத்திற்கு தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே ஒரு பைப்—குழாய்—அமைக்கவேண்டுமானாலும் சரி, அல்லது சிறிய கல்வர்ட் கட்ட வேண்டுமானாலும் சரி, இரண்டு பக்கத்திலும் வெட்டி அந்தக் குழாயை அமைத்துவிட்டால் ப்க்கத்திலேயே இருக்கும் தண்ணீர் எதிரிலே உள்ள ஊருக்குப் போய்விடும். ஆனால் அதற்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள டெல்லிக்குப்போய் அனுமதி பெற்ற பிறகுதான் சாதாரண குழாய் அமைக்கும் திட்டம்கூட முடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கின்ற மிகப் பெரிய கோளாறை நீக்கினால்தான் வேலை வேகமாக முடிவாகலாமே தவிர, காரியம் நடைபெறவில்லை என்று கேட்டுக்கொண்டிருப்பதில், பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் கூறப்படுகிறது. இங்கே ஆட்சியில் இருப்பவர்களின் தலையீடு இருக்கிறது என்று இங்கே இருப்பவர்கள் சொல்வார்கள். நமது தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தையே கொண்டு வந்தார்கள். ஆட்சியிலே இருப்பவர்களானாலும் சரி, ஆட்சிப் பொறுப்பிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, மேலவை உறுப்பினர்களானாலும் சரி, அல்லது முக்கியமான பொறுப்பிலே இருப்பவர்களானாலும் சரி, அதிகாரிகள் மாற்றம் அல்லது ப்ரொமோஷனுக்காக அணுகக்கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து அவர்கள்



கடுமையாக அறிவுரைகளை கட்சி நண்பர்களுக்கு வழங்கியது மட்டுமல்லாமல் கட்சித் தொண்டர்களே அதை நிறைவேற்றும் அளவிற்குத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

இன்னும் சொல்லப்போனால், அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடாக இருந்தாலும் சரி, மாவட்ட போலீஸ் அதிகாரிகளின் மாநாடாக இருந்தாலும் சரி இதற்கு முன்பிருந்த முதலமைச்சர்கள் அறிவிக்காத வகையில் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், நீங்கள் மிகப் பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள், ஆகவே, உங்களிடத்திலே காரியங்கள் ஆளும் கட்சியிலே இருப்பவர்கள் சொன்னாலும் சரி அல்லது வேறு எவ்வளவு பெரிய இடத்திலே இருப்பவர்கள் சொன்னாலும் சரி, அதிலுள்ள நியாய அநியாயத்தை, தகுதியை எண்ணிப் பார்த்து அதில் தீர்வு காண வேண்டுமே தவிர, கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அவைகளை நிறைவேற்ற வேண்டாமென்று பகிரங்கமாக அறிவித்தார்கள். அது பத்திரிகையிலும் இடம் பெற்றது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதற்கு முன்னால் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் இப்படிப்பட்ட அறிவிப்பைச் சொன்னார்களா, இப்படிப்பட்ட நிலைமைகள் வளர்ந்ததா, என்பதற்காகச் சொல்கிறேன்.

ஆக மொத்தத்திலே இங்கேயுள்ள 15 அமைச்சர்களைப் பற்றியும் நான் 15 மணி நேரம் பேச வேண்டுமானால்கூடப் பேசமுடியும். ஆனால் அதற்கு சபாநாயகரவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரியும். ஒவ்வொரு அமைச்சரின் சாதனைகளையும் மணிக்கணக்கில் பேசும் அளவிற்கு ஒவ்வொரு துறையிலும் சிறப்பான இடங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களது பணி இன்னும் செம்மையாக நடைபெற வேண்டும். அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் இதே கோட்டை மைதானத்தில் கூட்டி வைத்து அமைச்சர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும்—அது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளானாலும் சரி, மற்ற அதிகாரிகளானாலும் சரி—சொன்னார்கள், நாங்கள் இப்பொழுது இந்த நாட்டினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். உங்கள் ஆதரவில்தான் இந்நாட்டின் எதிர்காலப் பணி இருக்கிறது என்று உருக்கமாகக் கூறினார்கள். அதே வழியில் நின்று கலைஞர் அவர்கள் சிறப்பான வகையில் இந்த ஆட்சித் தேரை நடத்துகிறார்கள். இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நிலையான ஆட்சியை, நிம்மதியான ஆட்சியை, வளமான ஆட்சியை, எல்லோரும் பாராட்டத்தக்க ஆட்சியை நடத்தும் இந்த அமைச்சரவையைப் பாராட்டி அமர்கின்றேன். வணக்கம்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின்முன் வைத்திருக்கும் தேர்தல் மற்றும் உள்ள மானியங்கள் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரை அண்மையில் நடந்த கோவை தேர்தலைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 ஏப்ரல் 1

கோவை தேர்தலை இந்த அரசு ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். மூன்று கட்சிகள் போட்டியிட்டதில் இந்த அரசு சார்ந்திருக்கும் கட்சி மூன்றாவது இடத்தைத்தான் பெற்றிருக்கிறது என்பதை நான் கூறாமலே இந்த அரசு அறிந்திருக்கிறது. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை பொது மக்கள் எந்த அளவுக்கு இந்த அரசின்மீது அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அதனால் இந்த அரசு உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

ஆனாலும் எந்த அளவுக்கு இந்த அரசின்மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒருவேளை சட்ட மன்றத்திலே நம்பிக்கை இருந்தாலும் பொது மக்களிடம் நம்பிக்கை இல்லை. கோவை தேர்தலில் ஆளும் கட்சிக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது என்ற காரணத்தால், நடைபெறவேண்டிய நகர சபைத் தேர்தல்களையும், சென்னை கார்ப்பரேஷன் தேர்தலையும் ஒத்திப் போடாமல் உடனடியாக அந்தத் தேர்தல்களை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அரசுக்கு நகரங்களிலும் மற்றப் பகுதிகளிலும் செல்வாக்கு இருக்கிறதா என்பதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இன்று போகின்ற போக்கைப் பார்த்தால் தனக்கு எஞ்சியிருக்கும் இரண்டாண்டு காலத்திற்கு அந்தத் தேர்தல்களை நடத்துவார்களா என்ற ஐயப்பாடு மக்களிடத்தில் இருக்கிறது. அந்த ஐயப்பாட்டை நீக்குகின்ற முறையில் இப்போதிருக்கும் நகரசபை கவுன்சில்களின் ஆயுட்காலத்தை மேலும் நீடிக்காது உடனடியாகத் தேர்தல்களை நடத்த இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பெட்ரோல் விலை மிகவும் ஏறியிருக்கிறது. இனிமேல் தேர்தலில் நிற்கின்ற கேண்டிடேட்ஸ் நிச்சயமாக கார்களை உபயோகப்படுத்த முடியாது. அது இயலாத காரியம். இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க ஓட்டுச் சாவடிகளை அதிக தூரத்தில் அமைக்காது ½ மைலுக்கு ஒரு சாவடி வீதம் அமைத்து மக்கள் நடந்து வந்து வாக்களிக்கும் முறையில் அதிகமான வாக்குச் சாவடிகளை அமைத்திடல் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் வேட்பாளர்கள் வாக்காளர்களைக் காரில் அழைத்துச் செல்லுகிறார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு பேசுகிறாரா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறியது வாக்காளர்கள் காரில் வரக்கூடிய நிலை இருக்கக்கூடாது என்பதுதான். அதனால் வேட்பாளர்கள் ஏற்பாடு செய்து கொடுக்கிறார்கள் என்று அர்த்தமில்லை. வாக்காளர்கள் தங்கள் காரில் வரலாம் அல்லது நண்பர்கள் காரில் வரலாம். பெட்ரோல் விலை ஏறிவிட்டதால் அவர்கள் கார்களை உபயோகப்படுத்தக்கூடிய நிலை இல்லை.



1974 ஏப்ரல் 1] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்து, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற மானியத்தின் மீது கருத்துக்களைக்கூற நான் விரும்புகிறேன். பொதுவாக, தலைமை அலுவலர்கள் இந்தச் சட்டமன்றம் நடைபெறுகிறபோது அதிகமாகச் சென்னையில் இருப்பதில்லை. என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் 500 மைலுக்கு அப்பாலிருந்து அடிக்கடி சென்னைக்கு வருவது என்பது கூடாத காரியம். சட்டமன்றம் நடைபெறுகிறபோதுதான் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுவிட்டு மற்ற அலுவலகங்களுக்குச் சென்று காரியங்களைக் கவனிக்க வாய்ப்பாக இருக்கும்.

இந்த அதிகாரிகளைத் தேடிச் செல்லும்போது சாதாரணமாகப் பார்க்க இயலுவதில்லை. தேனாம்பேட்டையிலுள்ள அலுவலகத்திற்குப் போனால் அந்த அதிகாரிகள் தலைமைச் செலயலகத்திற்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இங்கு விசாரித்தால் காம்ப் போயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். மேலும் விசாரித்தால் டில்லிக்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

சட்டமன்றம் நடைபெறுகிறபோது அமைச்சர்கள் கன்சல்ட் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் வகையிலும், அங்கத்தினர்கள் அவர்களைச் சந்தித்துப் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் தலைமை அதிகாரிகள் சென்னையில் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் மானியம் கோரப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கடலரிப்பால் கடலோரப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்காக இந்த அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால், உண்மையிலேயே அந்தத் திட்டத்தை அதிகத் தீவிரமாகச் செயல்படுத்தவில்லை என்று சொன்னால் அந்தப் பகுதியில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டு விடும். அந்த மக்களுக்குப் பெருஞ்சேதம் ஏற்படும். ஆகவே, அந்தத் திட்டத்தை அதிகத் தாமதமின்றி உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின்கீழ் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எல்லைப் பகுதி, தமிழ் மொழி ஆகியவற்றுக்காகப் போராடிய தியாகிகளுக்கு மானியம் வழங்குவதாகச் சொன்னார்கள். அதற்கான ஆக்க வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று அன்றைய தினம் சட்டமன்றத்தில் கூறினார்கள். இந்த வேலையை வெகு வேகமாகச் செய்து தியாகிகளுக்குக் கொடுக்க வேண்டிய பென்ஷனைச் சீக்கிரமாகக் கொடுத்தால் நிச்சயமாகப் பயனுள்ளதாக இருக்கும்.

ஏனென்றால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அந்த மாவட்டம் தாயகத்தோடு சேருவதற்காக அன்றிருந்த மலையாள ஆதிக்கத்தோடு போராடி பல இளைஞர்கள் உயிர்நீத்தார்கள். உயிர்நீத்த தியாகிகளின் குடும்பங்கள் இன்னும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதோடு போலீஸ் தாக்குதலுக்கு உட்பட்ட பல தியாகிகளும் இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆண்டுக்கு இருவர், மூவர் வீதம் இறந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மானியத்தை உடனடியாகக் கொடுத்தாலொழிய இதனால் பலன் இல்லாமல் போய்விடும்.

சில நாட்களுக்கு முன்பு கேரளச் சட்டமன்றத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தை மீண்டும் கேரளத்தோடு இணைக்க வேண்டுமென்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. ஒருவேளை அங்கிருக்கும் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னாலும் அங்கிருக்கும் சில தலைவர்கள் நம்முடைய தமிழகத்தில் இருக்கும் சில எல்லைப் பகுதிகளைக் கேரளத்தோடு சேர்க்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தமிழகத்தில் இருக்கும் சில அரசியல் தலைவர்கள்கூட ஆதரவு கொடுக்கிறார்கள் என்பதை இந்த அரசு நன்றாக அறியும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, கேரளத்தவர் கன்னியாகுமரியை மீண்டும் கேரளத்தோடு சேர்க்க வேண்டுமென்று முயற்சிக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அதை அவருடைய கட்சியும், அந்தப் பகுதி பிரதிநிதிகளும் ஒத்துக் கொள்ளுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாங்கள் போராடி உயிர்நீத்துப் பெற்ற அந்தச் சுதந்திரத்தை நிச்சயமாக இழப்பதற்கு அனுமதிக்க மாட்டோம். கடைசிச்சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் இன்னும் வேண்டுமென்றாலும் போராடத் தயார் என்பதை அந்தக் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறியது எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் மட்டும் அல்ல. வேறு சில எல்லைப் பகுதிகளையும் கேரளத்தோடு சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்குள்ள சில அரசியல் தலைவர்கள் யத்தனம் செய்கிறார்கள். அதற்கு ஆதரவாக இங்கிருக்கும் சில அரசியல் தலைவர்களும் பேசுகிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்கள் இதை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. மா. வே. கரிவேங்கடம் : இங்குள்ள அரசியல் தலைவர்கள் ஆதரவு தருவதாகச் சொன்னார்கள். அந்த அரசியல் தலைவர்கள் யார் ?



திரு. ஜே. ஜேம்ஸ் : பெயரைச் சொல்லுவது சரியாக இருக்காது. கேரளத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள். அந்த அரசியல் தலைவர்கள் இந்த நோக்கத்திற்கு ஆதரவு கொடுப்பது இயல்பு. இந்தப் பெரும் ஆபத்திலிருந்து தாயகத்தைக் காக்க வேண்டிய கடமை இருக்கிறது.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரளத்தைச்சார்ந்த அரசியல் தலைவர்கள் இங்கே இருக்கிறவர்கள் கன்னியாகுமரியைக் கேரளத்தோடு சேர்ப்பதற்கு ஆதரவு தருவதாகச் சொன்னார்கள். அது யார்? எந்த இடத்தில், என்ன சொன்னார் என்று பெயரைச் சொல்லிவிட்டால் நல்லது. விளக்கமாகச் சொல்லாவிட்டால் தவறான கருத்தை நாட்டு மக்களுக்குச் சொன்ன பழிக்கு ஆளாவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேரள சட்டமன்ற நடவடிக்கையைப் பத்திரிகையின் வாயிலாகக் கவனமாகப் பார்த்து வந்திருப்பார்களானால் நிச்சயமாக இந்தச் சந்தேகம் வந்திருக்காது.

(முற்பகல் 10-00)

சமீபத்தில் நடைபெற்ற கோவை தேர்தலில்கூட கேரள ராஜ்யத்தின் ஒரு சக்தி இங்கே செயல்பட்டதாக நாங்கள் அறிகிறோம். ஆகவேதான் நாங்கள் கூறுகிறோம், தமிழ்நாட்டு அரசாங்கம் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று.

அடுத்ததாக, காம்பன்சேஷன் அண்டு அசைன்மெண்ட் என்று இருக்கிறது.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். நான் ஒரு கேள்வியை எழுப்பி இருக்கிறேன் ஆகவே, அதை அங்கத்தினரவர்கள் விளக்கமாகச் சொல்ல வேண்டும் அந்தத் தலைவர்களின் பெயரைச் சொல்ல வேண்டும். அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்லாதீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பல்வேறு அரசியல் கட்சிகள் இங்கே இருந்தாலும் அ.தி.மு.க. உறுப்பினரவர்களுக்கு ஏன் இந்தச் சந்தேகம் எழுகிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அவர்களுக்கு இதற்குமேல் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கன்னியாகுமரி—திருவனந்தபுரம் ரெயில் பாதை அமைக்கவிருக்கிறது. அதற்காக அரசு நிலங்களைக் கைப்பற்றி இருக்கிறது. ஆனால் அதற்காக இதுவரையிலே காம்பன்சேஷன் கொடுக்கப்படவில்லை. இதனால் ஏழை மக்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் அதற்காக ஒரு சங்கம் அமைத்து தங்களது கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ½ ஏக்கர் அல்லது 1 ஏக்கர் நிலம்தான் இருக்கும். அந்தக் குறுகிய நிலத்தைக் கூட அரசாங்கம் எடுத்துவிட்டது. அவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதோடு நான் விசாரித்ததில் ரெவின்யூ போர்டு பல நிபந்தனைகளை விதித்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த நிபந்தனைகளின்படி 4 அல்லது 5 ஆண்டுக்குள் காம்பன்சேஷன் கொடுக்கக் கூடிய நிலையில் இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே அரசாங்கம் எவ்வளவு குறுகிய காலத்தில் அந்த விவசாயிகளுக்கு காம்பன்சேஷன் கொடுக்க இயலுமோ அவ்வளவு குறுகிய காலத்தில் அந்த விவசாயிகளுக்கு காம்பன்சேஷன் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு, இன்றிருக்கிற விலைவாசி உயர்வை எடுத்துக் கொண்டால் அங்கே நஞ்சை நிலம் ஏக்கர் 40,000 அல்லது 50,000 ரூபாய் வரையில் விற்கிறது. ஆனால் அரசு 10,000 ரூபாய்க்கு மேல் நிர்ணயிக்கவில்லை என்றுதெரிகிறது. ஆகவே, ஏழை மக்கள் பலரும் கோர்ட்டுக்குச் சென்றுதான் காம்பன்சேஷனை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த நிலைமைக்கு அவர்களை ஆளாக்காமல் அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல் என்ற அந்த ஒப்பற்ற வாக்கியத்திற் கிணங்க இன்றைக்கு நம்முடைய அமைச்சர் பெருமக்களெல்லாம் நம்முடைய ஆட்சிக்கு வரவிருக்கின்ற நன்மைகளையும், தீமைகளையும் அது அண்டை மாநிலங்களிலேயிருந்து வந்தாலும் சரி அல்லது அது மத்தியிலே யிருந்து வந்தாலும் சரி, அவைகளையெல்லாம் உணர்ந்து அதற்கேற்றவாறு இன்று மிக திறமையாக இந்த ஆட்சியை நடத்திச் செல்லுகிறார்கள் என்பதிலே இங்கே யாருக்கும் ஐயமிருக்க முடியாது.

அது மட்டுமல்ல. இயற்கையினால் ஏற்படுகிற சீற்றங்கள் அவர்களுடைய அதிகாரத்திற்கு மீறி அது வருமேயானால் அவர்கள் கட்டுப்படுத்த முடியாதே தவிர அதிகாரத்திற்குட்பட்டு எவையெவை இந்த நாட்டை அழிக்க நினைக்கிறதோ அவைகளையெல்லாம் கட்டுப்படுத்திய பெருமை இந்த அரசைச் சாரும் என்பதிலே நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் என் பகுதியிலே காவிரியாறு பாய்ந்து கொண்டிருக்கிறது. அது அடிக்கடி சீற்றம் கொள்ளும். அதன் காரணமாகப் பக்கத்து கிராமங்களெல்லாம் அழிந்து போகும். ஆனால் இப்போது மழை எங்கெங்கே பெய்கிறதோ அந்த நேரத்திலெல்லாம் காவிரியாற்று நீரைக்கட்டுப்படுத்தி ஆங்காங்கே வெள்ளம் வராமல், சீற்றம் வராமல் பாதுகாக்கிற பெருமை நம் அமைச்சரவையைச் சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல புயல் வந்தாலும் அமைச்சர்கள் நேரடியாகச் சென்று ஆறுதல் கூறி நல்ல பணிகளை திறமையாகச் செய்து வருகிறார்கள் என்பதை மக்கள் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே இருக்கிற வயதானவர்கள், ஓய்வு பெற்றவர்கள் இவர்களும் இந்த அரசை வாழ்த்துகிற அளவிற்கு நல்ல பயனை அடைந்திருக்



கிறார்கள். ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டால் அவருடைய ஓய்வு ஊதியத்தைப் பெறுவதற்கு முன்பெல்லாம் ஏறத்தாழ 2 அல்லது 3 ஆண்டுகள் ஆகும். ஆனால் ஓய்வுபெற்ற அடுத்த மாதமே ஆங்காங்கே இருக்கிற அதிகாரிகளிடத்திலே அதிகாரம் பெற்று, அனுமதி பெற்று அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலைமையை இன்று நமது அமைச்சர்கள் உருவாக்கி யிருப்பது அந்த வயோதிகப் பெருமக்களுக்கு நல்ல நிலைமை என்பதை கூறிக்கொள்கிறேன்.

நம் மாவட்ட ஆட்சித் தலைவர்களைப்பார்ப்பது என்றாலே முன்பெல்லாம் ஒரு வாரம் அல்லது 10 நாட்களாகும். அவர்கள் எங்கே இருக்கிறார்கள், எந்த இடத்தில் இருக்கிறார்கள், கோடை வாசஸ்தலத்தில் இருக்கிறார்களா என்பதையெல்லாம் பார்த்துத்தான் அவர்களைப் பார்க்க முடியும். ஆனால் இன்று அவர்கள் அந்தந்தப் பகுதிக்கே வந்து மனுநீதி என்ற முறையிலே மக்களுடைய குறைகளையெல்லாம் பெற்றுச்சென்று ஆவன செய்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் பெருமைப்படுகிறோம். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலேதான் இன்றைய தினம் மாவட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தியாவில் இருக்கின்ற வேறு எல்லா மாநிலங்களிலும் 4 அல்லது 5 மாவட்டங்கள் தான் இருக்கின்றன.

ஆனால் இங்கேதான் பெரிய மாவட்டங்கள் அதிகஅளவில் இருக்கின்றன. இதில் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் அந்த மாவட்டங்களைக் குறுக்கி 4 அல்லது 5 மாவட்டங்களாக ஆக்கினால் நல்ல முறையில் செயல் படுவதற்கு வழிவகை பிறக்கும்.

நம்முடைய அரசில் அனைவரும் நல்ல பயனை அடைகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள், நெசவுத் தொழிலாளர்கள் அத்தனை பேருமே பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சரவைக்கு ஒத்துழைப்புத் தர அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் 1 அல்லது 2 ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் மிகவும் கீழ் நிலையிலே இருக்கிறார்கள். அவர்களை கொஞ்சம் கை தூக்கிவிட வேண்டிய பொறுப்பு நமது அரசாங்கத்திற்கு இருக்கிறது.

நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் 1 ஏக்கர் அல்லது 2 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எந்தக் கடனைப் பெற்றிருந்தாலும் அல்லது அவர்கள் எங்கே யிருந்து பெற்றிருந்தாலும் அவைகளை வஜா செய்தால் அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசை வாழ்த்துவார்கள் என்பதிலே ஐயமில்லை. தயவு செய்து பொருளாதார ரீதியிலே அதைப் பரிசீலித்து ஆவன செய்யவேண்டுமென்று இந்த அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

தேர்தல்கள் நம்முடைய மாநிலத்தில்தான் அமைதியான முறையில் நடைபெறுகின்றன. ஆர்ப்பாட்டம் அதிகமில்லாத முறையிலே நடைபெறுகிறது என்ற பெயரை நாம் எடுத்திருக்கிறோம். எந்தத் தேர்தலாக இருந்தாலும் மற்ற மாநிலங்களோடு நாம் ஒத்துப் பார்க்கிறபோது நம் மாநிலத்திலே அரசியல் மாச்சரியங்கள் இருந்தாலும், அப்போதுதான் அதை உபயோகப்படுத்தி தேர்தல் முடிந்த பிறகு நாம் சகோதர மனப் பான்மையோடு நடந்து கொண்டிருக்கிறோம்.

அந்த முறை மேலும் வலுவடையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் பெருமக்கள் இன்று தேர்தல்களில் கலந்துகொள்ளக் கூடாது, இடைத் தேர்தல்களில் கலந்து கொள்ளக்கூடாது என்றெல்லாம் நண்பர்கள் விவாதிக்கிறார்கள். அது எந்த வகையில் பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை.

தேர்தலில் நாம் எத்தனையோ வாக்குறுதிகளைத் தருகிறோம். 'கொள்கைகளின் அடிப்படையில், கட்சியின் அடிப்படையில் நாம் வாக்குறுதிகளைத் தருகிறோம். முடிந்தால் அவற்றை நாம் நிறைவேற்றுகிறோம். இல்லாவிடில் இன்ன இன்ன காரணத்தால் இவற்றை நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்கிறோம்.

ஆனால் இன்றைக்கு மக்கள் பல வகைகளில் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லாமல் இருக்கமுடியாது. சிலபல தலைவர்கள் சொல்கிறார்கள், ஜனநாயகத்திற்குப் புறம்பான சிலவற்றையெல்லாம் சொல்கிறார்கள். அது எந்த ஜனநாயகத்திற்கு உட்படும் என்று எனக்குப் புரியவில்லை.

அண்மையில் நடந்த தேர்தலில் சொல்லியிருக்கிறார்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் ——மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் ஐந்தாண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்பதுதான் நம் தேர்தல் விதிமுறை, அதுதான் ஜனநாயக முறை.

ஆனால் இப்போது ஒரு விசித்திரமான ஜனநாயகம் நம் நாட்டில் தோன்றியிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடுத்த ஆண்டு அல்லது அடுத்த மாதம் எந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த வாக்காளர்கள் அத்தனை பேரும் அவர்களை வேண்டாம் என்று சொல்லக்கூடிய ஒரு தேர்தல் நடத்தி அதன் காரணமாகத் தோற்றுப்போனால் அவர்கள் இராஜிநாமா செய்யவேண்டும் என்ற முறையில் இப்போது சில தலைவர்களால் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அது எந்த அளவிற்கு ஜனநாயகத்திற்கு உகந்தது என்பது யாருக்கும் புரியாத ஒரு நிலையில் இருக்கிறது.

இப்படி அநாவசியமான முறையில் மக்களிடையே பிரசாரம் செய்வதை விட, எந்தெந்தப் பிரசாரங்களைச் செய்யவேண்டுமோ அதைச் செய்து தங்கள் கொள்கைப்படி உள்ள உத்தரவாதங்களை எந்தெந்த முறையில்



தரவேண்டுமோ அவற்றைத் தந்து ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்ற முறையில் ஜனநாயகத்தை வளர்க்கவேண்டும், காப்பாற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும், நம்முடைய அமைச்சர்கள் அல்லும்பகலும் பாடுபடுகிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்றுள்ள அமைச்சர் பெருமக்களை, ஒவ்வொருவராகப் பார்க்கிறோம், யாரும் கோபம் இல்லாத முறையில்நான் தங்கள் தங்கள் அலுவல்களைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். நான் கூட முன்பு பயந்தேன். சிலபேர்கள் கூட என்னிடம் கேட்டார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் கோபக்காரராயிற்றே, அவர்கள் எப்படி சமாளிக்கிறார்கள் இவைகளையெல்லாம் என்றெல்லாம் என்னிடம் கேட்டார்கள். நான் சொன்னேன். அவர்கள் அண்மையில் மேலவையில் சொன்ன உதாரணத்தைக் சுட்டிக்காட்டி அவர்கள் முன்புதான் கோபக் காரராக இருந்தாரே தவிர இப்போது அப்படி அல்ல. அவர்கள் அதை தாங்கித்,தாங்கி புண்பட்டுப்போய் இன்று அவர்களுடைய உள்ளத்தில் ஒரு பெரிய சுமையோடு உட்கார்ந்திருக்கிறார்கள். எது வந்தாலும் சரி அதைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று நாங்கள் இன்றைக்குச் சொல்லிகொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு எல்லா அமைச்சர்களும் யார் வந்தாலும் சரி, எதிர் கட்சிக்காரர்கள் வந்தாலும் சரி அல்லது ஆளும் கட்சிக்காரர்கள் வந்தாலும் சரி எதைச் சொன்னாலும் அவற்றைக் கேட்டு உடனுக்குடன் ஆணைகள் பிறப்பிக்கிற திறமை படைத்த இந்த அமைச்சரவையை விட வேறு எந்த அமைச்சரவையும் இந்த நாட்டுக்கு இனி ஏடுபடாது, மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டிவிட்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த தேர்தல் சம்பந்தமாக நான் பல தடவை இந்த மன்றத்தில் ஒரு சில கருத்துக்களை வற்புறுத்தி வந்திருக்கிறேன். இப்போதுள்ள தேர்தல் முறையில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால் 43 சத விகிதம் வாக்குகள் பெற்று மத்திய அரசின் இந்திரா காந்தி அம்மையார் காங்கிரஸ் கட்சி மூன்றில் இரண்டு பங்கு எம்.பி.க்களை அங்கு பெற்றிருக்கிறார்கள். 43 சத விகிதம் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் 71 சத விகிதம் உறுப்பினர்களை அவர்கள் பெற்று ஆட்சி நடத்தி வருகிறார்கள் என்ற ஒரு நிலையை நாம் காண்கிறோம். மாநிலத் தேர்தல்களில்கூட பெறக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கைக்கும் சட்டமன்றத்தில் பெறக் கூடிய பிரதிநிதித்துவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாத ஒரு நிலையைக் காண்கிறோம். நாடாளுமன்றத்திலும் அந்த நிலைதான்.

[திரு. வா. மை, அப்துல் ஜப்பார்]

இதுகுறித்து நாட்டிலுள்ள மிகப் பெரிய அறிவாளிகள் எல்லாம் என்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்றால் திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் கூட ப்ரப்போர்ஷனல் ரெப்ரசன்டேஷனை வற்புறுத்தியுள்ளார்கள். அதேபோல் ஜனசங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் கூட குறிப்பாக சொல்லியிருக்கிறார்கள். லிஸ்ட் ஸிஸ்டம் என்ற முறையில் தேர்தல் முறையை அமைக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

இந்தியத் திருநாட்டின் மிகப் பெரிய வழக்கறிஞர், சட்ட மேதை என்று போற்றக்கூடிய திரு. பால்கிவாலா அவர்கள் கூட இந்தத் தேர்தல் முறை முற்றிலும் மாற்றியமைக்கப்படவேண்டும், ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன் முறையில் இந்த நாட்டுத் தேர்தல் முறை இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போதுதான் சிறுபான்மை மக்கள், அல்லது மொழிவாரி சிறுபான்மை மக்களுக்கு நியாயமான ஒழுங்கான முறையில் பிரதிநிதித்துவம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டின் அரசியல் சாஸனம் வரையறுக்கப்பட்ட நேரத்தில் கண்ணியம் மிக்க காய்தே மில்லத் அவர்கள் ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன் முறையை மிகவும் வலியுறுத்தினார்கள்.

அப்போது மஸானி போன்ற அறிஞர்கள் கூட ப்ரப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன் அரசியல் சாஸனத்தில் வேண்டும் என்ற தீர்மானத்தைக் கூட கொண்டு வந்தார்கள். அன்றிருந்த ப்ரூட் மெஜாரிட்டி காரணமாக காங்கிரஸ் கட்சியினர் அதை அன்று ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் என்று மஸானி போன்ற பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இன்றுள்ள தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும்.

குறிப்பாக மொழிவாரி சிறுபான்மையினருக்கும், மத அடிப்படையில் உள்ள சிறுபான்மை மக்களுக்கும் அவர்களுடைய உண்மையான பிரதிநிதிகளை சட்டமன்றங்களுக்கோ அல்லது நாடாளுமன்றத்திற்கோ அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை சென்ற இருபத்தைந்தாண்டுகளில், ஐந்து தேர்தல்களில் நாம் கண்டுவிட்டோம். ஆகவே, இந்தத் தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். மத்திய அரசுதான் அதைச் செய்ய வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால், மாநில அரசு அதற்குரிய சிபார்சை வற்புறுத்த வேண்டும். அதில் நம் மாநிலம் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன்.

அடுத்து, அமைச்சர்கள் தொகுதிக்கு வருவதைப் பற்றிச் சொன்னார்கள். எனக்கு அந்தப் பாக்கியம் கிடையாது. முதல் அமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் இனியாவது என் தொகுதிக்கு வருவார்கள் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறேன். முன்பு அவர்கள் வருவார்கள் என்று காலையில் எட்டு மணியிலிருந்து இரவு 12 மணி வரையில் கூரைகளில் எல்லாம் மக்கள்



உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். வந்துவிட்டார்கள், வந்துவிட்டார்கள் என்று நினைத்து வெய்யிலில் காத்துக் கிடந்தார்கள். பின்னர் முதல் அமைச்சர் அவர்களுக்கு உடல் நலம் குன்றிவிட்டதால் அவர்கள் வர மாட்டார்கள், திரும்பிவிட்டார்கள் என்று செய்தி வந்தது. இந்த மூன்ருண்டுக்காலத்தில் முதல் அமைச்சர் அவர்கள் என் தொகுதியை எட்டிப் பார்க்கவே இல்லை.

என் தொகுதியின் நிலையை அறிந்தவர்களும் அல்ல. (குறுக்கீடு)

அதேபோல்தான் என் நண்பர் லத்தீப் அவர்களின் தொகுதியும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆகவே, இனியாவது முதல் அமைச்சர் அவர்கள் இதுமாதிரியுள்ள சற்று சாமானிய உறுப்பினர்களுடைய தொகுதிகளுக்கும் வருகை தந்து அங்குள்ள மக்களின் குறைகளை அறிந்து அதற்கான பரிகாரங்களைத் தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> சாமானிய உறுப்பினர்கள் என்றால் என்ன ? வேறு பலமான உறுப்பினர்கள் என்றால் என்ன ? இவர்களுக்கிடையில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ?

<u>திரு எம். ஏ. லத்தீப் :</u> அனந்தநாயகி அம்மையார் அவர்களையும் எங்களையும் பார்த்தால் அதன் வித்தியாசம் தெரியும்.

<u>திரு வா. மை. அப்துல் ஜப்பார் :</u> அதற்குரிய ஒழுங்கான பதிலை லத்தீப் அவர்கள் தந்துவிட்டார்கள்.

அடுத்து, அமைச்சர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சம்பளம் குறித்து ஒரு வார்த்தை. அவர்களைத் திருப்தி செய்வதற்காகச் சொல்லவில்லை. ஒவ்வொரு ஆண்டும் நான் சொல்லிக்கொண்டுவருகிறேன். உண்மையில் இதில் பெரிய கௌரவம் அல்லது அந்தஸ்து என்று நினைக்க வேண்டியதில்லை. குறைந்த சம்பளம் அமைச்சர்கள் பெற்றுக்கொள்வது சட்டபூர்வமாகத் தவறானதாகும். அதை நான் எதிர்க்கிறேன்.

பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு நியாயமான அளவிற்கு சம்பளம் இருக்க வேண்டும். ஒரு பெரிய வழக்கறிஞருக்கு இன்று மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ. 20,000 வருமானம் வருகிறது. ஆனால், அமைச்சர்கள் முழு நேரமும் , 24 மணி நேரமும் உழைத்து அவர்கள் பெறும் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்றால் அது உண்மையிலே ஜனநாயகத்தை கேலி செய்வதாகத்தான் கொள்ள முடியுமே தவிர, அவர்கள் தியாகம் செய்கிறார்கள் என்றால், வயிற்றில் அடித்துத்தான் தியாகத்தை வெளியில் காட்ட வேண்டும் என்றால் அது தேவையில்லாத தியாகம். ஆகவே, அமைச்சர்கள் நியாயமான வருமானத்தைப்

பெறுவதுதான் ஜனநாயகத்தை மதிப்பதாகும் என்று என் கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலில் இன்னொரு அம்சம் என்னவென்றால், செலவுக் கணக்கை காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ரூ. 12,000 தான் சுருராக கணக்குக் காட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் கேட்கிறேன், இந்தியாவிலேயே பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உண்மையிலேயே இந்தக் கணக்குகளைக் காட்டுகிற அளவுக்குத்தான் செலவு செய்கிறார்களா ? இது ஜனநாயகத்தைக் கேலி செய்வது போல் இருக்கிறது. இப்படிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனே செய்கிற முதல் காரியம் ஹிபோகிரசி. கொடுக்கும் கணக்குக்கும் செலவு செய்கின்ற கணக்குக்கும் தொடர்பு உண்டா என்பதை எல்லோரும் அறிவார்கள். இப்படி ஒரு சட்ட விரோத கணக்கைக் காட்ட வேண்டுமென்பதில்........(குறுக்கீடு).

திரு. எம். ஏ. லத்தீப் : செலவு தேவைக்கதிகமாக இருந்தாலும் நாம் குறைத்துச் செலவிட வேண்டிய அவசியம் இப்போது இருக்கிறது என்பதைத்தான் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், ஒரு கிளாரிபிகேஷன். இது வரையில் எவ்வளவு செலவழிக்கலாம் என்பதற்கு விதி முறை இருக்கிறது. அதைக் கூட்டவேண்டுமென்று சொல்கிறாரா, அல்லது குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்களா ? நீங்கள் அந்த விதி முறைக்கு உட்பட்டு நடந்தீர்களா ? உங்கள் கணக்கு ஒழுங்காக இருந்ததா என்பதை விள்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு, வா. மை. அப்துல் ஜப்பார் : மிகுந்த கண்ணியத்தோடு பொன்னப்ப நாடார் அவர்கள் என்னை வலையில் சிக்க வைக்கப் பார்க்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு முறை இதே மன்றத்தில் திரு சி. சுப்பிரமணியம் அவர்களே தேர்தல் கணக்குகள் எதுவும் சரியானதல்ல என்பதை ஒப்புக்கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகவே, அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஆக. நாட்டின் வழக்கத்திற்கொப்ப நானும் கணக்குக் காட்டியுள்ளேன் என்று அதைப் பற்றி நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொகை ரூ. 12,000 என்பது மிகக் குறைவு. அதைக் குறைந்தபட்சம் ரூ. 50,000 என்று மாற்றலாம். அல்லது கணக்குக் காட்ட வேண்டுமென்ற இந்த பார்மாலிடி தேவையில்லை என்று சொல்லலாம்.



ஒவ்வொரு கட்சியினரும் பல கோடி ரூபாய்களை மறைமுகமாக வாங்கி தேர்தல் செலவு செய்கின்றனர். பெரிய பெரிய கம்பெனிகள் இப்படி அவர்களுக்குக் கொடுக்கின்றனர். அந்தப் பணத்திற்கு அவர்கள் கணக்குக் காட்ட வேண்டிய தேவையில்லை. ஆனால் எங்களைப் போன்ற சிறிய கட்சிகளுக்கு பெரிய இண்டஸ்டிரியிடமிருந்து தேர்தல் நடத்த பணம் கிடைப்பது இல்லை. ஆனால் என்ன பார்க்கிறோம் என்றால், ஆளும் பெரும்பான்மையான கட்சிக்கு மிகப் பெரிய கம்பெனிகள் மறைமுகமாகக் கொடுக்கிறார்கள். அவர்கள் உறுப்பினர்களுக்குத் தேர்தல் நிதியாக வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, கணக்குக் காட்டுகிற இந்த பார்மாலிட்டி தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த முனிசிபல் தேர்தல் உடனடியாக வைக்க வேண்டுமென்று அவசியம் இல்லை. அது ஒழுங்கான முறையில் வார்டு பிரிக்கப்பட்டு, பிறகு ஒரு ஆறு மாதம், ஒரு வருடம் கழித்து வைத்துக்கொள்ளலாம் என்ற ஆலோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாச்சுரல் கலாமிடிஸ் என்பதில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நானும், லத்தீப் அவர்களும் குடியாத்தத்திற்கும், விழுப்புரத்திற்கும் சென்று வந்தோம். இரண்டு பகுதிகளையும் சுற்றிப் பார்த்து வந்தோம். உண்மையிலேயே மிகச் சோகம் தரும் காட்சி. நாங்கள் எங்களுடைய வாழ்நாளிலேயே—குறிப்பாக இங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் யாருடைய தனிப்பட்ட வாழ்நாளிலேயே – அப்படிப்பட்ட கோரமான தீ விபத்தைப் பார்த்து இருக்க முடியாது.

குடியாத்தத்தில் அப்படிப்பட்ட தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. பல கோடி ரூபாய்க்கான பொருள்கள் நஷ்டமாகியிருக்கின்றன. ஏறத்தாழ 300–க்கும் அதிகமாக உள்ள குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்கிறார்கள். திடீரென்று மழை ஏற்பட்டால் அவர்கள் ஓடி ஒதுங்கக்கூட இடமில்லாமல் அந்தக் குடும்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற ஏனைய அமைச்சர்களும் சேர்ந்து வேண்டிய வசதிகளைச் செய்து இருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் நேற்று வரை சீரான வாழ்க்கை வாழ்ந்து வந்தவர்கள். அவர்களுக்கு ஒரு பெருத்த அளவில் இந்த அரசாங்கம் உதவியைச் செய்யவேண்டும். ஒரு நிரந்தரமான வகையில் இதற்கு வழிவகை தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்காக என் ஆலோசனை ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். பட்டா இல்லாதவர்களும் இங்கே வீடு கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஸ்டேட் பாங்க் கடன் வழங்க மறுக்கிறது. சில புறம்போக்கு நிலங்களிலும் இந்த ஏழை எளிய மக்கள் வீடு கட்டியிருக்கிறார்கள். இவர்கள் மறுபடியும் வீடு கட்டிக்கொள்வதற்கு கடன் இல்லையென்றால் அவர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டிய பரிதாபகரமான நிலைமை வந்து விடும். ஆகவே, இந்த வங்கிகள் வழங்கும் கடன் தொகை முழுமைக்கும் அரசே பொறுப்பேற்றுக்கொண்டு மொத்தமாகக் கடனைப் பெற்று அந்த வீடு இழந்த எல்லோருக்குபேங்கு கொடுத்து அவர்கள் புனர்வாழ்வு அடைய உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் இதற்காக ஒரு செஸ் வரி போட்டு மக்களிடமிருந்து வரி வசூலித்து அந்தப் பணத்தை இப்படி இழப்பு ஏற்பட்டுள்ள மக்களுக்குக் கொடுத்து உதவி செய்தால் கூட நான் அதை வரவேற்பேன். இதை ஒரு மனிதாபிமானமிக்கச் செயலாகக் கருதிக்கொண்டு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதிரி நெருப்பாலோ, அல்லது வெள்ளத்தாலோ திடீரென்று பாதிக்கப்பட்டு நேற்றுவரை நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்து இன்று காலையில் பிச்சைக்காரர்களாய், கையேந்துபவர்களாய், அடுத்த வேளை சோற்றுக்கு காத்து இருக்கும் நிலையில் அவர்கள் இருக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதற்கு என்ன செய்தாலும் தகும். இது மனிதாபிமான செயல். இது குறித்து அரசு தகுந்த கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்று சொல்வார்கள். இந்த குடியாத்தம் தீ விபத்தை வைத்துக்கொண்டு சிலர் அப்படிச் செய்ய முயலுகிறார்கள். இந்த தீ விபத்து சம்பந்தமாக ஒரு ஜாதி மக்கள் மீது அபாண்டமாக பழி சுமத்தி இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். இதை எந்த நோக்கத்தோடு செய்தார்களோ அது தமிழ் நாட்டிலுள்ள மக்களிடத்தில் நடக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்து மக்களிடம் மதத்தின் அடிப்படையில் வேறுபாடு இடையாது. இந்த மாதிரி பயங்கரமான காரியங்களைச் சில அரசியல் சூதாடிகள், அரசியல் லாபம் கருதி செய்து வருகிறார்கள். அவர்களைக் கண்டுபிடித்து, முனைப்புடன் இருந்து வேலை செய்து, அவர்கள் யாராக இருந்தாலும் உயர்ந்தபட்ச தண்டனையை இந்த மிருகத்தனமாக உள்ள காரியங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு சிபார்சு செய்கிறேன்.

விழுப்புரத்திலும் இது மாதிரி 18 வீடுகள் அழிந்து விட்டன. ரூ. 500 மானியமாக கொடுத்து உதவவேண்டும். அதற்காக ஸ்பெஷலாக நிதி திரட்டி தந்து உதவவேண்டும். அங்கேயுள்ள மக்கள் ஏழை மக்கள். அன்றைக்கு அன்றைக்கு சம்பாதித்து சாப்பிட்டுக்கொண்டிருப்பவர்கள். பட்டா இல்லாத நிலத்தில் குடிசை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கும் அரசாங்கம் இரக்கம் காட்டவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது கன்னியாகுமரியையும், நாகர்கோவிலையும் கேரளத்தோடு சேர்க்கவேண்டுமென்று பிரச்னை வந்தது. நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன். தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகள். பல்வேறு காரணங்களால் அவை கேரளத்தோடு இணைந்து இருக்கின்றது. அதையும் தமிழ்நாட்டோடு இணைத்து அங்கேயுள்ள தமிழர்களும், தமிழ் நாட்டில் வாழ்வதற்கு வகை செய்யவேண்டும். அதற்கு இந்த அரசு சாத்வீகமான முறையில் ஒரு நல்ல ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டுகோள் விட்டுக்கொள்கிறேன்.



அதே போன்று, புதுநகரம், சேலக்கரை, புதுக்கோடு, கொடுவாயூர், ஆலத்தூர், தத்தமங்கலம், கொளிஞ்சாம்பாரை போன்ற பகுதிகள் பாலக்காட்டின் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளும் தமிழர் வாழும் பகுதிகள்தான். தமிழ் பேசும் பகுதிகளில் உள்ள மக்கள் தமிழ்நாட்டில் இருக்கவேண்டுமென்பதற்காக, கேரள அரசாங்கத்தோடு இந்த அரசு முயற்சி எடுத்து அதை நம் தமிழ்நாட்டோடு சேர்துக்கொள்ள வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொளுகிறேன்.

ஏனென்றால் ஒரே மொழிபேசுகின்ற எல்லோரும் ஒரே நாட்டில் வாழவேண்டுமென்று எல்லா இடங்களில் உள்ளவர்களும் விரும்புகிறார்கள். இதை அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். கேரளத்துக்காரர்கள் இங்கே இருந்தால் அவர்கள் நாட்டோடு சேர்த்துக்கொள்ளப்பார்க்கிறார்கள். கன்னடத்துக்காரர்கள் மகாராஷ்டிரம் பேசும் மாநிலத்தில் இருந்தால், அதை கன்னட நாட்டோடு இணைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆகவே, தமிழ் மொழி பேசுகின்றவர்களும் தமிழ்நாட்டோடு சேர வேண்டுமென்று விரும்புவது இயற்கையே. ஆகவே, இதற்குச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுகிறேன்.

ஓய்வூதியத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த ஓய்வூதியத்தைப் பரிசீலிக்க ஏ. ஜி. ஆபீசில் உடனடியாக நடவடிக்கை எடுப்பது இல்லை. மூன்று ஆண்டுகள்கூட காலதாமதமாகி விடுகிறது. இதனால் பென்ஷன் கொடுப்பதில் ரொம்ப காலதாமதம் ஆகிறது. ஏ. ஜி. ஆபீஸ் மீது நம்முடைய அரசுக்கு அதிகாரம் கிடையாது என்பது எனக்குத் தெரியும்.

இருந்தாலும் எந்த முறையில் அதைச் செய்யவேண்டுமோ அந்த முறையில் செய்து இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாமதம்என்றால் ஒரு, மாதம் இரண்டு மாதம் ஆகலாம் மூன்று ஆண்டுகள் ஆவது என்பது மிகவும் அதிகமானகாலம். அவர்கள் அந்த பென்ஷன் தொகை பெற்றுத்தான் வாழ்க்கை நடத்தவேண்டும். வயதும் ஆகிவிட்டது. உழைத்துச் சம்பாதிக்கும் நிலையும் அவர்களுக்கு இல்லை. ஆகவே, அரசு இந்த விஷயத்தில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இது வரையில் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. க. மு. இராசகோபால்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியங்களை ஆதரித்து, அதன் மீது என்னுடைய இரண்டொரு கருத்துக்களைச் சொல்லலாம் என்று விழைகிறேன்.

இங்கே, குறிப்பாக, இயற்கைச் சேதத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இயற்கைச் சேதம் வெள்ளமோ அல்லது பெரும் தீ விபத்தோ ஏற்படுகிறபோது, குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

பகுதிகளில் உதவி வழங்க இரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. ஊர்களை வெள்ளம் தாக்கினால், அதற்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு முழு மானியம் எடுத்துக்கொடுப்பது இல்லை. ஆனால் நிலங்களில் தாக்குகிற போது அரசே முழுப்பொறுப்பையும் ஏற்று அந்தத் தொகையைத் தருகிறது. இப்படி இரண்டு முறை இருக்கிறது. காரணம், ஊராக இருப்பதாலே, அந்த ஊரின் பங்குத் தொகை என்று 4-ல் ஒரு பகுதி பங்கு ஊர் மக்கள் கட்டினால்தான் அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு மானியம் கொடுக்கிறது.

(முற்பகல் 10–30)

குறிப்பாக என்னுடைய தொகுதியிலே பாலாறும் செய்யாறும் குறுக்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. இரண்டு ஆறுகளும் வாலாஜாபாத், ஆவலூர், ஒட்டிவாக்கம் ஆகிய பகுதிகளை பெரும் பகுதி தண்ணீரினால் அரிக்கப்படுகிறது. செய்யாறு பெரு நகரத்திலிருந்து கிட்டத்தட்ட எனது தொகுதி வரை அரித்துத் தள்ளிக்கொண்டு போகிறது. காவாந்தண்டலம், இளையாவலூர், கொல்லம்பாக்கம் போன்ற பகுதிகள் 20, 30 ஆண்டுகளாக பெரும் சேதத்திற்குள்ளாகி அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கொண்டு போய் காண்பித்தேன். பின்னாலே அவரிடமிருந்து வருகிற தாக்கீது இது ஊருடையது என்று சொல்லப்படுகிறது, ஆகையினால் அதற்கு முதலீடு கிடையாது, பொது மக்களிடமிருந்து பணம் வசூல் செய்தால்தான் இது கட்டிக்கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இந்த நிலையை மாற்றவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஜமீன் நஷ்ட ஈடு என்று சொல்கிறார்கள். விவசாயத்தைப்பற்றி—

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு."

என்று வள்ளுவன் கூறியிருக்கிறான். இந்த நாட்டில் விவசாய மக்களுக்கு இருக்கிற நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. தெரியுமோ தெரியவில்லையோ, செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த தென் பகுதியிலே கொஞ்சம் மழை பெய்ததாகச் சொல்கிறார்கள். செங்கற்பட்டை ஒட்டிய வட ஆற்காடு பகுதிகளில் இரண்டு ஆண்டுகளாக மழையே கிடையாது.

மழை பெய்யாத காரணத்தினால் குடிக்க நீர் கிடையாது. விவசாயிகளுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுத்த கடன்களையெல்லாம் கொஞ்சம் தள்ளி வைத்து வசூல் செய்ய வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற நிலையை பார்க்கிறபொழுது விவசாயிகள் வாழ்வதே முடியாது. மற்றவர்களுக்கு இருக்கிற சலுகைகள் விவசாயிகளுக்கு இருக்கிறதா என்றால், எந்த வகையிலும் இல்லை. மின்சாரப் பற்றுக்குறையினால் பெரும் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்கூட்டியே சொல்லாத காரணத்தினால் அவர்கள் பெரிதும் தவிக்கிறார்கள்.



விவசாயிகளின் கஷ்டமான நிலைமையை எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். 6 மாத காலத்திற்கு அவர்களுடைய தேவைகள் பூராவும் வைத்திருந்தால்தான் ஒரு விவசாயி அவனுடைய வாழ்க்கையை நடத்த முடியும். அந்த அளவுக்கு விவசாயிகளின் நிலைமை இருக்கிறது. ஆகையினால் விவசாயிகள் வாங்கியிருக்கிற எந்தக் கடனாக இருந்தாலும், அதை வசூலிப்பதை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தியாகிகளின் நிலைமையைப் பார்க்கிற பொழுது எல்லா தியாகிகளும் எப்படி மதிக்கப்படுகிறார்களோ, அப்படி பென்ஷன்தாரர்களும், வயதான தாய்மார்களும் மதிக்கப்படுவதில்லை. அவர்கள் தாலூகா அலுவலகங்களுக்கு மனுக் கொடுத்தால் நீண்ட நாள் பரிசீலனை ஆகாமல் இருக்கிறது. காரணம், மேல் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் நல்ல நிலையில் இருந்தாலும், ஒரு சில கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் சரியாக கவனிக்காமல் இருப்பதால் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. உடனுக்குடன் அந்த மக்களுக்கு பணம் போய்ச் சேரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கு, உயிர் நீத்தவர்களுக்கு, இந்தி எதிர்ப்பில் எந்தெந்த வகையில் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இந்த அரசு அவர்களை தியாகிகள் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு ஒரு சிறு தொகை மானியமாக வழங்குகிறார்கள். அதனால் வருங்கால சந்ததிகளுக்கு மொழியைக் காப்பாற்றிய பரம்பரை என்ற ஒரு நல்ல பெயர் வரும். இந்த நாட்டில் இருக்கும் மக்கள் வேறு எதிலும் அதிலே ஈடுபட்ட நண்பர்களைப்போல அதிகமாக ஈடுபடவில்லை. இந்த நாட்டிலிருந்து மனிதனுக்கு முதன் முதலாக மொழி முக்கியம். அந்த மொழியை அழிக்கின்ற வேறு மொழியை எதிர்த்து, அந்த மொழியில் இருக்கிற பற்றின் காரணமாக, பேரறிஞர் அண்ணா இந்த நாட்டில் எழுப்பிய பெரிய புரட்சியின் காரணமாக, தன்னுடைய உயிரையே மதியாது தன்மீது பெட்ரோல் ஊற்றி கொளுத்திக் கொண்டு செத்தார்கள். இந்த மாதிரி வேறு எந்த நாட்டிலும் கிடையாது. பின்னாலே மற்ற இடங்களில் இந்த மாதிரி செத்தார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்தது. அத்தகைய தியாக உள்ளம் படைத்தவர்களுக்கெல்லாம், இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் எல்லோருக்கும் இந்த அரசு அதிக மானியம் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையைப்பற்றி சொன்னார்கள். குறிப்பாக ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவோ அமைச்சர்கள், முதல் அமைச்சர்கள் இங்கே ஆண்டுவிட்டுச் சென்று விட்டார்கள். அத்தனை பேர்களும் உயர்ந்த ஜாதிக்காரர்கள். இன்னும் சொல்லப் போனால் மெஜாரிட்டி இனத்தவரைச் சேர்ந்தவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும்....

__திருமதி த. ந. அனந்தநாயகி__: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே ஜாதியைப் பற்றி பேசுவதை அனுமதிப்பது சரியா என்பதை கனம் சபாநாயகர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான் முக்கியமாகத் தெரிவிப்பது என்னவென்றால், இந்த தேர்தல் செலவுகளுக்கு கொஞ்சம் பணத்தை கூடுதலாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*<u>திரு. நா. வெ. குருசாமி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தேர்தல் காலங்களில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது சில ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன. ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் போது ஒரு வாக்காளருக்கு வாக்களிக்கின்ற உரிமை இருக்கிறது. அதே நேரத்தில் அந்த வாக்காளருக்கு சட்டமன்றத் தேர்தல் நடக்கும் போது ஓட்டுப்போட முடியாத நிலை ஏற்படுகிறது. வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயர் இல்லாமல் போய்விடுகிறது. இது எப்படி நடைபெறுகிறது என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட குறைகளைப் போக்கி, நல்லமுறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

சில சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்கள் கூட சில நேரங்களில் விடுபட்டுப் போகிறது. வாக்காளர் பட்டியலில் சேர்க்காமல் விட்டுவிடுகிறார்கள். அதேமாதிரி ஊராட்சி மன்றத் தலைவர்களின் பெயர்களும் கூட வாக்காளர் பட்டியலில் இல்லாமல் போய்விடுகின்றன. இனிமேல் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது, இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு சிறந்த முறையில் பெயர்கள் விடுபடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரங்களில் மலைப் பிரதேசங்களில் ஓட்டுச் சாவடிகளை அமைக்கும்போது அதிகத் தூரம் இடைவெளி விடுகிறார்கள். அதனால் வாக்காளர்களுக்கு ஓட்டுப்போடச் செல்வது கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்க, அரை மைலுக்கு ஒரு வாக்குச் சாவடி வீதம் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உப தேர்தல்கள் நடக்கும்போது பொதுவாக பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்கள் மூலமாக ஆளும் கட்சியை ஆதரிக்கிற முறையில் சில இடங்களில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. அதற்கு அரசாங்கத்தின் பணத்தைச் செலவிடுகிறார்கள். அரசாங்கத்தின் பணத்தை வைத்து, ஆளும் கட்சிக்கு விளம்பரம் செய்வது முறையற்ற செயல் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகள் நடக்கும்போது சில இடங்களில் அமைச்சர்கள் கலந்துகொள்ளும்போது சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை. அதனால் சம்பந்தப்





பட்ட சட்டமன்ற உறுப்பினர் அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. அமைச்சர்கள் எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும்—அதாவது அதிகார பூர்வமான எந்த நிகழ்ச்சிக்கு செல்வதாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அப்போதுதான் அங்கே இருக்கின்ற உண்மையான நிலைமைகளை அமைச்சர்களுக்குத் தெரிவிக்க முடியும்.

அங்கே இருக்கின்ற சில சூழ்நிலைகளை வைத்து, நிகழ்ச்சி நடத்துவது பொருத்தமல்ல என்று சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தால் கூடுமானவரையில் அமைச்சர்கள் அந்த அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் சில சம்பவங்கள் அங்கே சில வேளைகளில் நடைபெற்றுவிடுகின்றன ; அதுபற்றி பல புகார்கள் வருகின்றன. ஆகவே, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பாத அதிகார பூர்வமான நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பங்கள் அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்வதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக பதில் அனுப்பப்படுவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதாவது ஒரு பிரச்சனைக்கு விண்ணப்பம் அனுப்பினால் அதற்கு உடனடியாக பதில் அனுப்ப வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் மோசமான நிலையில் நடத்தப்படுகிறார்கள். குறிப்பாக, நான் இந்த மார்ச் மாதம் 16 ஆம் தேதி எழிலகம் கட்டிடத்தில் இருக்கின்ற ஒரு ஆபீசுக்குப் போயிருந்தேன். நான் காலை 11-45 மணிக்கு சென்றிருந்தேன். 12-45 மணி வரையில் பேட்டி கிடைக்கவில்லை. கடைசியாக இந்தமாதிரி ஏன் ஒரு மணி நேரத்திற்கு மேலாக எங்களைப் போன்றவர்களுக்கு பேட்டி கொடுக்க மறுக்கிறீர்கள்; பேட்டி கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அந்த அதிகாரி, "நான் இப்படித்தான் செய்வேன், யாரிடம் வேண்டுமானாலும் போய் சொல்லிக்கொள்ளுங்கள்" என்று சொன்னார். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் விண்ணப்பம் அனுப்பியிருக்கிறேன். அந்த அதிகாரி மீது புகார் கொடுத்தும், இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை.

தீ விபத்துக்கள் ஏற்படும்போது ஒரு வீட்டுக்கு 80 ரூபாய் என்று இப்போது கொடுக்கிறார்கள். அது தற்சமயம் உள்ள விலைவாசிக்குக் காணாமல் போகிறது. ஆகவே, குறைந்தது 200 ரூபாயாவது தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டுக்குக் கொடுக்க வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. என்னுடைய தொகுதியில் சில்வார்பட்டி, மற்றும் பெரியகுளம் தொகுதியில் தேவதானப்பட்டி ஆகிய இடங்களில் தீ விபத்து அதிக அளவில் நடைபெற்றிருக்கிறது. அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் அவர்களுக்கு அந்த வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு அதிகக் கடன் கொடுத்து உதவி செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. ஆனால் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. அதற்குத் தகுந்த ரிக்கார்டுகள் கிடைக்காததுதான் காரணம் என்று சொல்கிறார்கள். 20, 30 வருடங்களுக்கு முன்னால் சிறைச்சாலைகளில் இருந்தால் இப்போது அந்த ரிக்கார்டுகள் அழிக்கப்பட்டிருக்கும். அதனால் பலருக்குத் தகுந்த ரிக்கார்டுகள் கிடைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

ஆகவே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கக்கூடியவர்களின் கையெழுத்து இருந்தாலும் போதும் என்ற முறையில் சொல்லி, அவர்களுக்கு உதவித் தொகையை கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர்களுக்குக் கொடுக்கின்ற 20 ரூபாய் உதவித் தொகை, இந்த விலைவாசியில் அவர்களுக்குப் போதாது. ஆகவே, இந்த 20 ரூபாயை 50 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் திறமையான ஆட்சி நடைபெறுகின்ற மாநிலம் நம்முடைய மாநிலம். இந்த மாநிலத்திலேதான் தேர்தல்கள் எல்லாம் நல்ல முறையிலே நடைபெறுகின்றன என்று பல மாநிலங்களில் உள்ளவர்கள் பாராட்டுகின்ற அளவுக்குச் சிறப்பான முறையிலே இங்கே தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

1967–ஆம் ஆண்டுக்குப் பின்னால் நடைபெறுகின்ற பொதுத் தேர்தல்கள் ஆனாலும், இடைத் தேர்தல்கள் ஆனாலும் அவை எவ்வளவு சிறப்பான முறையில் நடைபெறுகின்றன என்பதை நாமும், நாட்டு மக்களும் உணர்ந்திருக்கிறோம்.

குறிப்பாக, 1967–க்கு முன்னால் நடைபெற்ற தேர்தல்களிலே—அந்த நேரத்திலே எதிர்க் கட்சித் தொண்டர்கள் எல்லாம் ஜெயிலிலே இருப்பார்கள். தொண்டர்கள் ஜெயிலிலே இருக்க, தேர்தல்கள் நடைபெற்றதை நாம் பார்த்தோம். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமைகள் மாற்றப்பட்டு,





தேர்தலினுடைய தத்துவம் என்ன என்பதை மக்களுக்கு விளக்கும் வகையிலே நேர்மையாக, நியாயமாக நம்முடைய தமிழக அரசு தேர்தல்களை நடத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இன்றைக்குத் தேர்தல் நடக்கும்போது பல வினோதங்கள் நடைபெறுகின்றன. 1962–லே அண்ணா அவர்கள் தேர்தலிலே தோற்றுப் போனார்கள். இந்த நாட்டினுடைய இதயத் தெய்வமாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தோற்றுப்போன செய்தி அறிந்து மிகுந்த வேதனையில் நாமெல்லாம் இருந்தோம். அப்படி 1962 தேர்தலிலே தோற்றதைப் பற்றி அண்ணா குறிப்பிடும்போது, நான் யாரிடமும் தோற்றுப் போகவில்லை ; வெங்கடேச பெருமாளிடம்தான் தோற்றுவிட்டேன் என்று சொன்னார்கள். இன்னும் அப்படிப்பட்ட சில வெங்கடேசப் பெருமாள்கள் தான் தேர்தலிலே முன் நிற்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தொடர்ந்து இந்த நிலை நீடிப்பதை நம்முடைய அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே அறியாத மக்கள், தெரியாத மக்கள் இன்னும் புரியாத மக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தேர்தல் என்றால் என்ன என்ற உண்மையை நாம் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தேர்தல் முறைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எத்தனையோ தேர்தல்களைச் சந்தித்து, தமிழ்நாட்டு வாக்காளர்கள்தான் இன்றைக்கு அகில இந்தியாவிலே சிறப்புக்குரிய வாக்காளர்கள் என்ற பெயரைப் பெற்றிருக்கும்போது, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது, வெங்கடேசப் பெருமாள்கள் வரும்போது சங்கடமான நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய அமைச்சர்கள்—முதலமைச்சர் உள்பட அத்தனை பேர்களும் சாதாரணமான முறையில் நடந்துகொள்வதைப் பார்க்கிறோம். குறிப்பாக இன்றைய தினம் நமது முதலமைச்சர் அவர்கள் அம்பாசிடர் காரில் போகிறபோது யார் வருகிறார் என்பதை ஜனங்களால் தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. அவர் அடக்கத்தின் காரணமாக—பெருந்தன்மை காரணமாக அம்பாசிடர் காரில் வரலாம். ஆனால் இது மக்களிடத்தில் சில சங்கடங்களை ஏற்படுத்துகிற காரணத்தால் அவர் அந்தப் பதவிக்கு ஏற்ற—அந்த அந்தஸ்துக்கு ஏற்ற முறையிலான காரை—மற்ற வசதிகளைப் பயன்படுத்துவதில் எந்தவிதமான தவறுதல்களும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அமைச்சர்கள் வாங்குகிற சம்பளம் போதாது. வெளி மாநிலங்களில் அமைச்சர்கள் வாங்குகிற சம்பளம், படியோடு நம் மாநில அமைச்சர்கள் வாங்குகிற சம்பளம், படியை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும். இது மிக மிகக் குறைவு. ஆகவே, மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல இங்குள்ள அமைச்சர்களது சம்பளம், படியை உயர்த்த வேண்டும். அதுபோல இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சொல்ல விரும்புகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பற்றி இன்னொரு நாள் பேசிக்கொள்ளுங்கள்.

**திரு வை. பாலசுந்தரம் :** அன்றைக்கு பேச வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ என்ற காரணத்தினால்தான் இன்றைக்கே சொல்லிவிடுகிறேன்—இவர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் போதாது.

அமைச்சர்களுக்கு பல தொல்லைகள் இருக்கின்றன என்றாலும் எங்களைப் போன்றவர்கள் அமைக்கிற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகிற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக இன்றைய தினம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் ஊராட்சித் தலைவருக்கு 1958-ல் இருந்த பயண விகித அடிப்படையில் 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், போன்ற இடங்களில் எல்லாம் 300 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அந்த அளவுக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு—இன்றையதினம் அவர்தான் கிராமப் பகுதியில் முக்கியமானவராகக் கருதப்படுகிறார்—300 ரூபாய் அளவுக்காவது மாதம் பயணப் படி தரவேண்டும். அதுபோல பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

அடுத்து, கடன் வகைகளைப் பற்றிப் பேசுகிறபோது—சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சில கடன்கள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்—பலர் அதைச் சொல்லாமல் இருக்கலாம்—திருமணம் ஆகாதவர்கள்—திருமணம் செய்துகொள்கிற நிலை வருகிறபோது—சட்டமன்ற உறுப்பினர்களுக்கு திருமணக் கடன் வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் இடையில் செத்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது—பதவிக் காலம் முடிய சம்பளம்—அவர்களது குடும்பத்தார்களுக்குக்—கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு கொடுப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் அவர்களது நிலங்களை எடுத்துக்கொண்டுவிட்டோம் என்றாலும்—இன்றையதினம் அவர்களால்தான் பல தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. விசாரித்துப் பார்த்தால் தெரியும். ஒரு நிலச்சுவான்தார் தன் நாயின் பேரில் பட்டா எழுதி வைத்திருக்கிறார்—வீட்டில் உள்ள முருகன் படத்தின் பேரில் பட்டா எழுதி வைத்திருக்கிறார். ஆகவே, நிச்சயமாக இந்த ஜமீன்தார்களுக்கு அளிக்கப்படுகிற நஷ்ட ஈட்டை நிறுத்தினால்தான் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இயற்கை சீற்றங்களைப் பற்றி ஒரு வார்த்தை—குறிப்பாக இன்றைய தினம் எனது தொகுதி அச்சரப்பாக்கம்—மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு பகுதி ஆகியவை எல்லாம் சீற்றங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அது வறட்சிப் பிரதேசமாக மாறிக்கொண்டிருக்கிறது.



உடனடியாக அந்தப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, இங்கே முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கின்ற 8 மானியங்கள் மீது கருத்துக்களைச் சொல்வதற்கான நேரம் கிடைக்காது என்று கருதி—முதலில் இருக்கிற தேர்தல்கள்—அடுத்தாற்போல இருக்கிற மாநில ஆட்சித் தலைவர்கள்—அமைச்சர்கள் என்கிற கோரிக்கைகளின் மீதும், எனது வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்கிற விஷயங்களைப் பற்றியும் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

இங்கே அமைச்சர்களாக வருகிறவர்களும் ஒரு தொகுதியில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். தேர்தல்கள் என்பதில் பிரதான கவனம் செலுத்துவோமானால்—அமைச்சர்கள் சரியாக நடந்து கொள்வது அடித்தளத்தில் இருந்து சரியாக அமைந்தால்தான் முடியும்.

இன்றைய தினம் தேர்தல் என்பது பெரும் பணச் செலவை ஏற்படுத்துகிற ஒரு நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. ஏழையாக இருக்கிறவர்கள்—எத்தனை தான் அந்தத் தொகுதி மக்களிடத்திலே செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் தேர்தலில் நிற்க முடியாத சூழ்நிலை உருவாகிற ஆபத்து இந்த ஜனநாயகப் போக்கில் இருந்து வருகிறது. இதை மாற்ற ஏதாவது செய்ய வேண்டும்.

(திரு. கே. எ. வகாப் அவர்கள் தலைமை)

பணம் படைத்தவர்கள் தான் தேர்தலில் நிற்கலாம் என்கிற நிலைமை உருவாவது தவறு என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வாக்காளர்களைக் கூட்டி வருவது, விளம்பரம் செய்வது போன்றவற்றுக்கே அதிகமாகச் செலவாகின்றன.

ஆகவே வாக்காளர்கள் கட்டாயமாக வோட்டுபோடவேண்டுமென்ற விதியை தேர்தல் சட்டத்திலேயே ஏற்படுத்தலாம் என்று கருதுகிறேன். இது ஜனநாயக தத்துவத்திற்கு விரோதமானதும் அல்ல.

அடுத்து, தேர்தலில் அதிகமான மக்களின் ஆதரவு வாக்குகள் பெறுகிறவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிறபோது அதிக வோட்டுகள் வாங்குகிறவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் அதிக எண்ணிக்கையை இது பிரதிபலிப்பதாக இல்லை. இதைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இது இரண்டு பற்றியும்—இன்னும் பல இருக்கின்றன என்றாலும் உடனடியாக—நாம் சிந்தித்து அவசரமாக, அவசியமாக செயல்பட வேண்டிய நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11–00)

ஆகவே மத்திய அரசும், மாநில அரசும், எலக்‌ஷன் கமிஷனும் சேர்ந்து இதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டு பிடித்தாக வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். அடுத்து, இந்த மான்யத்தை

எடுத்துக்கொள்கிறபோது அமைச்சர்களெல்லாம் இன்றைய தினம் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, லஞ்சம், ஊழல் என்று ஊரெல்லாம் பேசப்பட்டு அவர்களுக்கிருந்த மதிப்புக் குறைந்திருக்கிறது என்பதிலே சந்தேகமில்லை. அதே நேரத்தில் இந்த அமைச்சர்கள் ஜாதி, மதம் போன்றவைகளை எதிர்த்து வாதாடுகிற பகுத்தறிவு வாதிகளின் வழியிலே வந்தவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அந்த முறை இன்று மாறி வருகிற நிலைமை இருக்கிறது. பகுத்தறிவுவாதிகள் ஒரு காரியம் செய்கிறார்கள் என்றால் அந்தக் காரியத்திற்குரிய அடிப்படை காரணங்களை ஆராய்ந்து செயல்படுவதுதான் நல்ல முறையாகும். ஆனால் இன்றைய தினம் அம்மாதிரி காரியங்களுக்குரிய காரணங்களை ஆராயாமல் அந்தக் காரியம் எந்தக் கட்சிக்காரர்களுக்காக செய்யப்படுகிறது என்பதை மட்டுமே கருத்திற்கொண்டு காரியங்கள் ஆற்றப்படுகின்றன.

இன்றைய தினம் நாம் பார்க்கிறபோது இந்த சட்ட மன்றத்தில் கூட ஜாதியும், மதமும் மிகத் தீவிரமாக வேலை செய்வதைப் போன்றதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. இது ஜனநாயகத்திற்கு உதவியாக இருக்க முடியுமா என்று ஆராய்கிற போது நிச்சயமாக அது இருக்க முடியாது என்பது தான் அறிஞர்களுடைய முடிவாகும். இந்தச் சூழ்நிலை எப்படி உருவானது என்று பார்க்கிறபோது ஆளுகிறவர்கள் லஞ்சத்திற்கும், ஊழலுக்கும் உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அப்படி உடந்தையாக இருந்தவர்கள் இன்று அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அவ்வாறு ஆசைப்படுகிறவர்கள் இன்று பலஹீனமாக, சக்தியற்றவர்களாக இருப்பதையும் நான் இங்கே பார்க்கிறேன். எனவே, இந்தத் தீமைகளை எப்படி களைவது என்று பார்க்கிற போது இன்றையதினம் சுற்றறிக்கைகள் கூட விடப்படுகின்றன. எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் எந்த அதிகாரியிடத்திலும் அதிகாரம் செலுத்தக் கூடாது என்று சுற்றறிக்கை விடப்படுகிறது. ஆனால் நடைமுறையிலே பார்த்தால் அதன்படி காரியங்கள் நடைபெறவில்லை.

பல அதிகாரிகளிடத்தில் நான் பேசுகிறபோதுகூட அவர்கள் மனம் திறந்து சொல்கிறார்கள். நாங்கள் சுதந்திரமாக காரியங்கள் ஆற்றமுடியவில்லை என்று அவர்கள் குறைப்படுகிறார்கள். ஆகவே சட்டத்திற்குட்பட்டு, சுதந்திரமாக காரியத்தை ஆற்றுகிற ஒரு சுதந்திரத் தன்மை அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இருக்க வேண்டும். ஆனால் இன்று அப்படியில்லை.

எல்லா விவகாரங்களிலும் எல்லா அமைச்சர்களும் தலையிடுகிறார்கள். இந்த நிலையில் அதிகாரிகளுடைய அறிவெல்லாம் மழுங்கிப் போய் அவர்கள் ஆற்றல் இல்லாமல் இருக்கிறார்கள்.



அதே மாதிரி ஒருவர் ஒரு கடிதம் எழுதுகிறார், அல்லது ஒரு விண்ணப்பம் கொடுக்கிறார் என்றால் கொடுப்பவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி மற்றவர்களாக இருந்தாலும் சரி அந்தக் கடிதங்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் பதில் கூட எழுதாத பல இலாக்காக்கள் இங்கே இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவன் ஒரு குறையைச் சொல்கிறான் அல்லது கோரிக்கையை வைக்கிறான் என்றால் அதை யாரிடம் சொல்வது ? அரசாங்கத்திடம் தானே சொல்ல வேண்டும். அப்படிக் கூறும் போது அவனுக்கு உன்னுடைய இந்தக் குறை மீது இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று கூட சொல்லக் கூடாதா ? அது தானே ஜனநாயகமாகும். ஆனால் மனு நீதித் திட்டம் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே தரப்படுகிற விண்ணப்பங்கள் கூட ஒரு சம்பிரதாயத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர உண்மையிலேயே அவை பரிசீலிக்கப்பட்டு காரியங்கள் நடைபெறுகின்றன என்ற நிலையில்லை. ஆகவே இந்தத் தன்மைகளையெல்லாம் மனதிலே கொள்ள வேண்டும்.

இந்த ஆட்சியாக இருந்தாலும் சரி அல்லது எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, சட்டசபை இருக்கத்தான் போகிறது, அங்கத்தினர்களும் இருக்கத்தான் போகிறார்கள். ஆகவே ஜனநாயக ரீதியில் காரியங்கள் நடைபெறுகிற அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே இந்தத் தவறுகள் நடந்திருக்கின்றன என்பதும் அதை நீக்குவதிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்றும் நான் கருதுகிறேன். அந்த உறுதி நிலையானதாக இருக்க வேண்டுமென்று கேட்டு, நான் அமர்கிறேன்.

**THIRU K. S. KOTHANDARAMIAH**: Hon. Chairman, Sir, I rise to say a few words on Demand No. 8—Elections moved by the Hon. Chief Minister.

Elections have become the fundamental basis for the functioning of democratic administration. Therefore, they are unavoidable and also very important. Now elections in the country have assumed gigantic proportions and reckless election battles have caused repercussions after the elections. The devastation it causes is horrible and it takes at least two or three months for the constituencies to come to normal conditions. Moreover, election is a fiery ordeal. The successful conduct of the election is almost a miracle. Therefore the State and Central Governments must sit together and think properly about it and find out the methods to see that elections are simplified as far as possible and also not so costly.

Coming to polling stations, nowadays people have lost glamour and interest to go to the polling stations. Especially educated people refuse to go there. Also, if the polling stations are at a

distance, it is very difficult for them to go there. Especially ladies do not go there in large numbers. Moreover, every member of a family requires a vehicle to go there. Otherwise, it is very difficult for them to go there. Therefore, polling stations should be increased and they should set up very close to each other so that people can go easily and come back. Otherwise, a good percentage of poor people will not go there and cast their votes.

As regards election expenses, they have increased. I do not know why the State Government and the Central Government should not think of meeting the minimum expenditure incurred with regard to the printing of posters ? At least the posters can be supplied by the Government. They need not give them propaganda literature.

Also some minimum amount for the vehicles should be given by the Government.

Now we are spending a lot of amount for elections but we are asked to give a return for only a particular and definite amount.

We are giving false returns which give a wrong impression to the people. I may show the election expenditure as Rs. 50,000. Others may show Rs. 1 lakh or 2 lakhs. Therefore, by giving false returns, the candidates need not deceive themselves and the Government also need not deceive themselves.

Therefore, the Government should come forward to meet the minimum expenditure of at least poor candidates.

Officials must not identify themselves with this or that party. Now 70 per cent of them say they belong to this or that party. Care should be taken to see that they do not identify themselves like this.

Denkanikota is a hilly place. People have to cross river to come to polling booth. If there is rain, they cannot cross the river. So in such hilly places, either increase the number of polling booths or provide mobile polling booths. I say this because the people in such tracts do not own vehicles to come to polling booths.



Regarding electoral rolls in bilingual areas, it is necessary that it should be in Tamil and Telugu. Otherwise there will be confusion in pronunciation and legitimate person will not be able to exercise his vote, because of wrong spelling in another language.

Now, I want to say one thing about Ministers. One is a Minister normally for five years, (if he serves the full term) and every day so many people come for donations. They expect a minimum of Rs. 100 donation and not Rs. 5 or Rs. 10, with the result, the poor Minister has very little at the end of the month. He has family to support. Because of his duties, he is not able to attend to his family work. After the five year period, he may not again become a Minister or M.L.A. Nothing can be said certainly. So what I say is, for one who has served as Minister for five years, let the Government provide proper pension because of the work he had done for the public as Minister previously, sacrificing the interest of his family.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Regarding pensioners, many of them are so old and not able to walk and receive pension in the office. Their pension might be sent by M.O. to their houses. With these words, I close my speech.

DR. H. V. HANDE : Mr Speaker, at the outset I would like to impress on the Chief Minister the need to appoint a commission to enquire into the deplorable economic condition of the pensioners. I have brought it to the notice of the House several times. The economic conditions of the pensioners who had retired before 1970 is really deplorable. Most of them have sent petitions to Government but Government had not properly assessed their problem. The marginal benefit of Rs. 10 announced by the Chief Minister recently is totally inadequate to meet the deplorable condition of the pensioners. That is one of the points I would like the Hon. Chief Minister to attend to.

Because of lack of time, I am only touching upon the points.

I would like to pass a stricture on the working methods of the Public Service Commission of our State. I would like to say that things are not all right with regard to our Public Service Commission. There are several omissions and commissions in the department. With facts and figures I can mention. Apart from that, I would like to say that members of the Commission who are appointed by Government must be hale and healthy and must be physically

fit to discharge their work. While it is a great tragedy that the Chairman of the Public Service Commission had recently passed away, I would like to say that members of the Commission must be physically fit enough to do the work.

About the working, I would like to pass the following stricture. Recently about a month ago, interview for selection of shoool assistants took place. One of the members of the Public Service Commission (I shall give the name to the Hon. Chief Minister if he wants it or he can himself find it out since there are only three or four members in charge of this, was a member of the Board and each candidate was interviwed for 40 minutes. Immediately after the interview is over, the marks are prepared and the mark list is given to the Secretary. My information is that this Member kept the mark list with him for a considerable period, without it getting into the hands of the Secretary. It has not seen the light of the day. After a number of days, the appointments had been made. If this is going to be the practice, it will give room to lot of ministerial interference and corruption.

It is the duty of the Government to see that the method, by which Service Commission selects, is properly controlled by Government, properly watched by Government so that such omissions and commissions do not take place. Otherwise it will give room for ministerial influence and corruption and other temptations in the matter of selection of persons by the Service Commission.

Recently, there was a notification inviting applications for the posts of Executive Officer, Grade III in the Hindu Religious and Charitable Endowments Department. The marks for theory was 300 but the interview marks were for 400. This is something which is unheard of. This has never been the practice of any Service Commission throughout the length and breadth of India. Theory marks used to be 3 or 4 times that of the interview mark.

Even for selection by Union Public Service Commission for Indian Administrative Service, the marks for interview had been considerably reduced. It was high in the past but not so high as in the present case. That had been reduced and normally the mark for the interview is onefourth of what it is for theory. It is because one should not be thrown out in the interview when he had been strong



in theory. But here the interview was for 400, a thing unheard of. I hope and trust that the Hon. Chief Minister will give a categorical assertion that the entire functioning of the Public Service Commission will be properly examined, that it will be completely pruned, and that the aegean's tables will be completely cleaned. That is the duty of the Hon. Chief Minister.

Written tests are conducted for selection of candidates for Deputy Collectors, Deputy Superintendents of Police, etc. As soon as the answer papers are received in the office, the numbers will be removed and dummy numbers will be given. This is the practice for a long time and this is to ensure that no one knows which is the particular number of any candidate. But for the past three or four years, I understand that the old practice had been given up and no dummy numbers are being given. This will lead to suspicions, among the people regarding the working of the Public Service Commission. The method adopted should be foolproof and above suspicion. I hope the Chief Minister will properly look into the matter and do the needful.

A number of other things also I can mention in this House.

For instance, the functioning of the Cabinet, The functioning of the Cabinet is far from satisfactory. We had occasion to find that the Chief Minister's orders had not been communicated or implemented. Recently we had an occasion.

The members of the Cabinet are not at all working properly and the Cabinet is in a chaotic condition and there is no proper understanding from the Chief Minister down to the last Minister. I make a valid and serious charge with facts and figures.

Recently, the Hon. Industries Minister placed on the table of the House the Performance Budget for 1974–75. That had contained paragraphs and paragraphs of strictures against the Hon. Minister O. P. Raman's Department. What does it mean ?

It means that the Industries Department is dissatisfied with the Electricity Department. If you take those words in the Performance Budget, you will find a lot of things which in a way are strictures and they all amount to strictures against the Electricity Department. It has been said that because the Electricity Department had failed and the Industries Department also has failed so that was the information, that is the confession that was dis

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருப்பதால் சட்டமன்றத்திற்கு என்று சொன்னேன். இன்னும் தாராளமாக இரண்டாண்டுக் காலத்திற்கு அவர்கள் நிச்சயமாக எம். எல். ஏ.-வாக இருக்கலாம். அதில் எந்தவிதமான பயமும் அவர்கள் கொள்ளத் தேவையில்லை.

இப்படி அடிக்கடி தேர்தல்களை வைத்து, அவர்களை வாக்குச்சாவடிக்கு அடிக்கடி அழைத்துப் போவதால் அவர்கள் வேதனைப்படுகிறார்கள். ஆகவே, தேர்தல்களை ஒருமுகப்படுத்தி, பாராளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், பஞ்சாயத்து தேர்தல், பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல் இவைகள் எல்லாவற்றையும் ஒன்றாக வைத்து நடத்தினால் அது சாலச் சிறந்ததாக இருக்குமா என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து தலைவர் தேர்தல் நடக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தல் நடக்கிறது. ஆனால், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தலை நடத்தி, அதில் வருகின்ற அவர்களுக்கு வசதிகள் மிகவும் குறைவாக இருக்கிறது. நானும் ஒரு பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் என்ற முறையில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 100 ரூபாய் கொடுக்கிறார்கள். டெப்டி ஸ்பீக்கராக இருந்த திரு. சீனிவாசன் அவர்களும் சேர்மனாக இருக்கிறார்கள், அவர்களுக்கும் சேர்த்துத்தான் நான் பேசுகிறேன். 100 ரூபாய் அவர்களுக்குப் போதாது. 400 ரூபாய் கேட்கிறார்கள். அப்படிக் கேட்பது நியாயம்தான். அதைக் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்கிறேன். அடுத்து பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டை எடுத்துக் கொண்டால் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது சம்பந்தப்பட்ட மானியம் வரும்பொழுது பேசிக்கொள்ளலாமே.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : அதிலே பேச சந்தர்ப்பம் கிடைக்காது என்பதால் இதிலேயே சொல்லிவிடுகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியத்தினுடைய கூட்டத்திற்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் வருகிறார் என்றால் அவருக்கு 2 ரூபாய் "சிட்டிங் ஃபீஸ்" என்று கொடுக்கிறார்கள். கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியையோ, கோவாப்பரேட்டிவ் இன்ஸ்டிட்யூஷன்களையோ எடுத்துக்கொண்டால் அங்கே 15 ரூபாய், 20 ரூபாய் அளவிற்கு கொடுக்கிறார்கள், போக வர செலவெல்லாம் கொடுக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் மானியம் வரப்போகிறது, அன்றைக்குப் பேச விடமாட்டார்கள். ஆகவே, இன்றைக்கே அதைப்பற்றிப் பேசுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்குக் கொடுக்கும் அலவன்சை 100 ரூபாய்க்குப் பதில் 300 ரூபாயாவது கொடுக்க வேண்டும். சிட்டிங் ஃபீஸ் 2 ரூபாய் என்று கொடுப்பதற்குப் பதிலாக பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டிற்கு 15 ரூபாயாவது கொடுக்க வேண்டும். அவர்கள் கோவாப்பரேட்டிவ்



அவர்களும் சொஸைட்டியிலுள்ளவர்களைவிட குறைந்தவர்கள் அல்ல, அவர்களும் மக்களின் பிரதிநிதிகள்தான் என்பதை இந்தத் தேர்தல் என்ற தலைப்பில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இருக்கின்ற உறவைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்தால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால், நான் சபாநாயகராக இருக்கும் தங்களோடு ஒரு முறை சட்டமன்றத்தில் இருந்தேன், பிறகு பாராளுமன்றத்தில் 4 ஆண்டுகள் இருந்தேன், மீண்டும் இப்பொழுது சட்டமன்றத்தில் இருக்கிறேன்.

இங்கேயுள்ள முறைகளுக்கும் பாராளுமன்றத்தில் உள்ள முறைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை கொஞ்சம் யோசனை செய்தால் நல்லது என்று கருதுகிறேன். அங்கேயிருப்பவர்களும் மந்திரிகள்தான், இங்கேயுள்ளவர்களும் மந்திரிகள்தான். ஆனால், அங்கேயுள்ள மந்திரிகளைப் போல இங்கேயுள்ள மந்திரிகளும் நடக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். காரணம் என்னவென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றியோ வேறு பொது விஷயம் பற்றியோ மந்திரிகளுக்குக் கடிதம் எழுதினால் அமைச்சரே கையெழுத்துப் போட்டு பதில் அனுப்ப வேண்டும். பாராளுமன்றத்தில் ஒரு பார்லிமெண்ட் மெம்பர் எழுதினால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியானாலும்சரி அல்லது பெரிய அமைச்சர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்குக் கடிதம் எழுதும் பொழுது "மை டியர் ஸ்ரீ சவான்" என்று எழுதுவார்.

(முற்பகல் 11–30).

அதே போல இந்திரா காந்தி அம்மையாருக்குக் கடிதம் எழுதினாலும் சரி "மை டியர் இந்திராஜி" என்று டி. ஓ. லெட்டர் ஃபாரமில்தான் போகும். மனு கொடுப்பது போல் கலெக்டர் ஆபீசில் குடிமகன் கொடுப்பது போன்ற நிலைமை இருக்காது.

பார்லிமெண்ட் மெம்பர்கள் மந்திரிகளுக்கு லெட்டர் எழுதினால் இப்படித்தான் எழுதுவார்கள். அங்கிருக்கும் முறையை இங்கும் பின்பற்ற வேண்டும். மிகச் சிறந்த முறை அது. பார்லிமெண்ட் உறுப்பினர் கடிதம் எழுதினால், "தங்களுடைய கடிதம் கிடைக்கப் பெற்றது, அதற்குண்டான பதில் விரைவில் அனுப்புகிறேன்" என்று அமைச்சரே கையெழுத்துப்போட்டு அக்னாலெட்ஜ்மெண்ட் வரும். பிரைவேட் செகரடரி போடமாட்டார். செகரடரி போடமாட்டார், அசிஸ்டெண்ட் செகரடரி போடமாட்டார், மந்திரியே கையெழுத்து போட்டு அக்னாலெட்ஜ்மெண்ட் அனுப்புகிறார்.

சொல்லுகின்ற காரியம் எதுவாக இருந்தாலும் சரி பதில் அனுப்புகிறார்கள். பொதுப் பிரச்சினை மட்டுமல்ல, தனிப்பட்ட பிரச்சினை—அதாவது ஒரு அதிகாரியை எக்ஸைஸ் கலெக்டரை வேறு ஒரு ஊருக்கு அவருடைய சவுகரியத்தை முன்னிட்டு மாற்ற வேண்டுமென்று சிபாரிசு செய்ய

லாம். அவர்கள் தவருக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஒரு அதிகாரியைப் பற்றிக் கண்டித்து எழுதி அவரை மாற்ற வேண்டுமென்றும் எழுதலாம். அதற்கெல்லாம்கூட "இது இயலும், இது இயலாது" என்று அமைச்சரே கையெழுத்திட்டு பதில் அனுப்புகிருர்கள்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு எழுதக்கூடிய கடுதாசிகளை இதே முறையில் பரிசீலிக்க வேண்டும். அதற்காக அக்னுலெட்ஜ்மென்ட் எழுத வேண்டுமென்று சொல்லவில்லை. பதிலாவது அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுத வேண்டும். அப்படிப் பட்ட முறையை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது நம்மை நாமே உயர்த்திக் கொள்வதாக இருக்கும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி</u>: மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதம் எழுதுவதை மாத்திரமே தங்களுடைய வழக்கமாகக் கொண்டால் அமைச்சர்களுக்கு அவற்றுக்குப் பதில் எழுதுவதை வழக்கமாகக் கொள்ளலாம். இங்கு உட்கார்ந்திருக்கும்போது பார்த்தாலே இந்தப் பக்கம் ஒரு கையை நீட்ட வேண்டியிருக்கிறது ; அந்தப் பக்கம் ஒரு கையை நீட்ட வேண்டியிருக்கிறது. கடிதங்கள் என்ற பெயராலே இப்படி வந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் விவரமாகப் பதில் எழுதவேண்டுமென்ருல் அது இயலாத காரியம். உடனடியாகக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். அப்படி இல்லாமல் கடிதங்களுக்குப் பதில் எழுதிஞல் போதும் என்று சொன்ஞல் அது வரவேற்கத்தக்கது ; சிலாக்கியமான முறையாக இருக்கும். நயவுசெய்து எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப்பட்ட முறையை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் பணியாற்ற வசதியாக இருக்கும்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u>: பார்லிமென்ட் முறையைப் பற்றிச் சொன்னதால் சொல்ல விரும்புகிறேன். அங்கு எந்த உறுப்பினரும் கடிதம் எழுதுகிறபோது தனக்கு வந்த விஷயத்தின் சுருக்கத்தைச் சேர்த்து கடிதம் எழுதிஞல் அந்தக் கடிதத்திற்குப் பதில்—பிரதமர் ஜவஹர்லால் நேரு காலத்திலேயே 12 மணி நேரத்திற்குள் வருகிற நிலை இருக்கிறது. அந்தப் பிரச்சினையிலே என்ன நடந்தது என்பதை அவர்களே கையெழுத்திட்டு அனுப்புகிருர்கள்.

இங்கு இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று, மனுக்களை அனுப்புகிரேம். இன்னென்று, கடிதம் எழுதி நேரடியாக கொடுக்கிரேம். கடிதங்களுக்குப் பதில் வரும் நிலைமை இருந்தால் மொத்தத்தில் மகஜரில் உள்ள முக்கியமான விஷயங்களைக் குறித்து எழுத முடியும். அந்த முறை ஏற்பட்டால் விஷயத்தைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு எழுத வாய்ப்பாக இருக்கும்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: அப்படிக் கடிதம் எழுதிஞல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் " நீங்கள் எல்லாம் எழுதிய கடிதம் என்னுடைய கையில் இருக்கிறது " என்று சட்டசபையில் சொல்லுவார்கள்.



<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி</u>: அப்படிப்பட்ட கடிதங்களை எழுதாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u>: (நெல்லிக்குப்பம்) மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை. காரணம் என்ன? நம்முடைய எம்.எல்.ஏ.-க்களிடமும் கொஞ்சம் ரெஸ்ட்ரெயின்ட் இருக்கவேண்டும். சில எதையெதைச் சொல்லுவது என்று பார்த்துச் சொல்லவேண்டும். சில எம்.எல்.ஏ.-க்களைப் பார்க்கிறேன். தபால்காரர் வேலை பார்ப்பது மாதிரி ஒவ்வொரு மந்திரிக்கும் 10 கடுதாசி எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிருர். இங்கிருக்கும் என்னுடைய மிக நெருங்கிய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொரு மந்திரிக்கும் 10 கடுதாசியைக் கொடுத்துக் கொண்டே போகிருர். எப்படி மதிப்பு இருக்கும் ?

<u>திரு. பெ. சீனிவாசன்</u>: இப்படியும் சொல்லுகிருர் ; அப்படியும் சொல்லுகிருர்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u>: (நெல்லிக்குப்பம்) என்னுடைய அருமை நண்பர் சீனிவாசன் அவர்கள் ஏற்கனவே அப்படித்தான் செய்தார்கள். இப்போது செய்யமாட்டார்கள். கடுதாசி கொடுக்கும்போது கத்தை கத்தையாகக் கொடுப்பது விரும்பத்தக்கதல்ல. ஆனுல் எழுதக்கூடிய முக்கியமான காரியங்களுக்கு எங்களுக்கு பதில் அனுப்ப வேண்டும். மக்களை எங்கள் மூலமாகவும் நீங்கள் பார்க்கவேண்டும். எம்.எல்.ஏ.-க்களை மதிக்கவேண்டும்.

மக்களுடைய கோரிக்கைகளுக்காக நாங்கள் ரெப்ரசண்ட் பண்ணுகிரேம். இந்த இந்த ஊரில் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கோ, ரெவின்யூ மினிஸ்டருக்கோ அல்லது புட் மினிஸ்டருக்கோ எழுதிஞல் " இந்தக் காரணத்தால் இந்த வருஷ பட்ஜட்டில் இல்லை ; அடுத்த வருஷத்தில் சேர்த்துக் கொள்ளுகிரேம் " என்று அமைச்சர்களே கையெழுத்துப் போட்டு அனுப்பிஞல் நாங்கள் கண்ணுடி போட்டு, ஃப்ரேம் போட்டு மக்களிடத்தில் காட்டிவிடுவோம். நாங்கள் சொல்லி விட்டோம் ; மினிஸ்டர் இந்த மாதிரிச் சொல்லுகிருர் ; அடுத்த வருஷம் வரை பொறுத்திருங்கள் என்று சொல்லிவிடுவோம்.

அப்படிச் சொல்லிவிட்டால் மக்கள் எங்களை உதைக்காமல் இருக்கும் நிலை ஏற்படும். ஒரு பெட்டிஷனை ரெவின்யூ அமைச்சரிடம் கொடுத்தால் அவர்கள் வாங்கி இனிஷியல் போடுகிருர்களோ என்னவோ தெரியவில்லை, " செகரடரி " என்று போட்டு அனுப்பிவிடுகிருர்கள். செகரடரி கையெழுத்துப் போட்டு போர்டு ஆப் ரெவின்யூவுக்குப் போகிறது ; போர்டு ஆப் ரெவின்யூவிலிருந்து கலெக்டருக்குப் போகிறது ; கலெக்டரிடமிருந்து ஆர்.டி.ஓ. வுக்குப் போகிறது ; ஆர்.டி.ஓ. தாசில்தாருக்கு அனுப்புகிருர் ; தாசில்தார் டெபுடி தாசில்தாருக்கு அனுப்புகிருர் ; டெபுடி தாசில்தார் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்புகிருர்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் " மந்திரியிடம் கொடுத்த கோரிக்கை பரிசீலிக்கப் பட்டது. அது நத்தம் புறம்போக்கு என்று பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஆட்சேபிக்கிறார்" என்று பதில் அனுப்பிவிடுவார். மந்திரியிடம் கொடுத்த கடிதத்திற்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கடைசியில் பதில் எழுதுகிறார். எப்போது ? 9 மாதங்கள் கழித்து இந்த நிலை. எம்.எல்.ஏ. கொடுத்த கடிதத்திற்கு இவ்வளவு மரியாதை இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அமைச்சரிடம் கொடுக்கும் கடிதம் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குச் சேருவதற்கான காலத்தைப் பற்றிச் சொன்னார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரே பதில் சொல்லுவதாக இருந் தால் ஆறு மாதத்தில் பதில் கிடைக்கிறது. மந்திரி மூலமாக அரசாங் கத்தின் பதில் வரவேண்டுமென்றால் மறுபடியும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கலெக்டருக்கு அனுப்பி, கலெக்டர் அதிகாரிக்கு அனுப்பி, அந்த அதிகாரி அமைச்சருக்கு அனுப்பி அமைச்சர் சட்டமன்ற உறுப்பினருக்குப் பதில் அனுப்ப வேண்டும். அந்தக் காலதாமதத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தால் அந்த முறையைப் பின்பற்றலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : (நெல்லிக்குப்பம்) அந்த முறையைப் பின் பற்ற வேண்டிய அவசியம் இல்லை. காரணம்—அட்ஜர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தால் 24 மணி நேரத்தில் பதில் வருகிறது; கட்மோஷன் கொடுத்தால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விளக்கங்கள் வருகின் றன. ட்ரங்க்கால் போடுகிறார்கள் ; டெலிபோன் செய்கிறார்கள் ; ஒயர்லெஸ் மூலம் பெறுகிறார்கள் ; எந்த முறையிலாவது விவரங்கள் வந்துவிடு கின்றன.

அந்த முறையில் எம்.எல்.ஏ.-க்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் ரெப்ரசன்டேஷனை மந்திரியிடம் கொடுத்தால் அதை நேரடியாகக் கலெக்டருக்கு அனுப்பி பத்து நாளைக்குள் பதில் வரவேண்டுமென்று டைம் லிமிடேஷன் செய்ய முடியாதா ? இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிட்டுப் போகட்டும். நாங்கள் அதை எடுத்துக்கொண்டு போய் மக்களிடத்தில் காட்டிவிடுவோம்.

சிட்டியில் இருக்கும் அதிகாரிகளை அலுவலகத்தில் பார்க்கவே முடிவ தில்லை. அவர்களுக்கு எங்காகிலும் வீடு கட்டவேண்டிய வேலை இருக்கும்; அல்லது சொந்த வேலை இருக்கும். எப்போது போனாலும் "செக்கரடே ரியட்டுக்குப் போயிருக்கிறார்" என்று பதில். பத்து மணிக்குப் போனவர் ஐந்துமணிக்காவது வருவாரா என்று கேட்டால் "சொல்ல முடியாது" என்று பியூன் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. செக்ரட்டேரியட்டில் எந்த மினிஸ்டரிடம் போனார்? "தெரியாது." நான் பெயரிட்டுக் கூட அந்த அதிகாரிகளைக் கூறமுடியும். சிடி அதிகாரிகள் அந்த மாதிரி இருக்கிறார் கள். செகரடேரியட்டுக்குப் போனால் யாரிடத்தில் போனார்கள், எப்போது திரும்பி வருவார்கள் என்று அபிஷியலாக எழுதி வைத்து விட்டு வர வேண்டும். இல்லாவிட்டால் பர்சனல் கிளார்க்காவது சொல்லவேண்டும். பியூனை விட்டுச் சொல்லச் சொல்லுகிறார்கள்., இந்த நிலைமை தவிர்க்கப் படவேண்டும்.



கடைசியாக ஒன்றே ஒன்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். நேரம் அதிகம் இல்லை. எக்ஸ்–செர்விஸ்மேன் பற்றி ஒரு வார்த்தை.

யுத்தம் வருகிறது என்றால்தான், சைனாக்காரன் சண்டைக்கு வந்தால், பாகிஸ்தான்காரன் சண்டைக்கு வந்தால் அப்போதுதான் ராணுவ வீரர் களைப் பற்றி நினைத்துப்பார்க்கிறோம். ராணுவ வீரர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு; அவர்கள்தான் நாட்டைக் காப்பாற்றுகிறார்கள்; அதிலே உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபாய் தருகிறோம். பத்தா யிரம் ரூபாய் தருகிறோம் என்று அப்போது சொல்வதோடு சரி. சண்டை நின்றவுடன் அவர்களைப் பற்றி மறந்து விடுகிறோம், அவன் துப்பாக்கி யைக் கீழே போட்டவுடன் அவனுடைய பிரச்சினையையும் நாம் கீழே போட்டு விடுகிறோம்.

ராணுவத்திலிருந்து வந்தவன் நிலம் கேட்டால், குளம் குட்டையில் ஒரு எக்கரோ இரண்டு எக்கரோ ஒதுக்கலாம் என்றால் பஞ்சாயத்து யூனியன் தலைவரும், ஊரில் இருப்பவர்களும் உதைக்கிறார்கள். நிலம் கிடையாது என்று சொல்லுகிறார்கள். கணக்குப் பிள்ளை, மணியக்காரர் அவர்களுக்கு நிலம் கொடுக்க ஒத்துழைப்பதில்லை. அவர்களுக்கு நிலம் கொடுக்கும் பிரச்சினையையே அரசாங்கம் மறந்துவிட வேண்டும். நிலம் இருந்தால் அல்லவா கொடுப்பதற்கு? காங்கிரஸ்காரர்கள்தான் இருந்த நிலத்தை யெல்லாம் அவர்களே பட்டா செய்து கொண்டு விட்டார்களே ! இப்போது நிலமும் கிடையாது, ஒன்றும் கிடையாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : யார் பட்டா செய்து கொண்டது, குளம் குட்டைகளை எல்லாம் பட்டா செய்து கொண்டது நீங்கள்தான். தியாகிகளுக்குக் கொடுக்கக்கூட நிலம் இல்லை என்று சொல்லுகிறீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிகுப்பம்) : நீங்கள் பண்ணிய மிச்சத்தை நாங்கள் பண்ணிக் கொள்ளுகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காங்கிரஸ்காரர்களே அவ்வளவு நிலத்தையும் பட்டா போட்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அண்மையில் உங்களுடைய அமைச்சர்கள் எல்லாம் ஆங்காங்கு சென்று பட்டா போட்டு விட்டோம் என்று விளம்பரம் எல்லாம் போடுகின்ற காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நான் ஆதாரத்தோடு பேசுகிறேன். என்னுடைய மாமாவேஒரு தியாகி. அவர் ஐந்து எக்கர் பட்டா பண்ணிக் கொண்டார். தியாகிகள் என்று சொல்லி குளம் குட்டைகளை 1949ஆம் ஆண்டிலேயே பட்டா செய்து முடித்தாகிவிட்டது.

இப்போது பி.டப்ளியூ.டி., ஏரிகள்தான் புறம்போக்கு. பாக்கி யெல்லாம் முன்பே போய் விட்டன. அப்போது கொடுத்திருந்தால் இந்த ஏரிகளையும் தீர்த்திருப்பார்கள். இந்த எக்ஸ்–சர்வீஸ்மென்க்கு நிலம் கொடுக்கும் பிரச்சினையை விட்டுவிட்டு பர்மா அல்லது சிலோன்

ரிப்பார்ட்ரியேட்ஸ்க்குக் கொடுப்பதுமாதிரி இந்த எக்ஸ்–சர்வீஸ்மென்னுக்கு குறைந்தபட்சம் ஒரு ஐயாயிரம் ரூபாய் காஷாகக் கொடுங்கள். அவர்கள் ஒரு பெட்டிக் கடை வைத்துக்கொண்டு பிழைக்கட்டும். அல்லது மிட்டாய் கடையோ அல்லது வெற்றிலைப் பாக்குக் கடையோ அல்லது ஒரு சிறிய பங்கோ வைத்துக்கொண்டு பிழைக்கட்டும்.

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்திருந்தபோது இங்கு பேசினார்கள். என் மாநிலத்தில் உள்ளவர்கள்தான் மிலிடிரியில் நிறையப் பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்று. இப்படிச் சொல்கிறார்களே தவிர எக்ஸ்–சர்வீஸ்மென்னுக்கு சரியான உதவிகளைச் செய்வதில்லை. ஆகவே இந்த எக்ஸ் சர்வீஸ்மென்-க்கு ஒரு ஐயாயிரம்ரூபாய் காஷ்–காம்பன்சேஷன் கொடுக்கவேண்டும். அதை பூராவும் மத்திய அரசே கொடுக்க வேண்டும். மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி அதைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்த எக்ஸ்-சர்வீஸ்மென் கஷ்டப்படாமல் இருந்தால்தான் இன்றைக்கு இராணுவத்தில் பணிபுரிபவர்கள் நல்லமுறையில் அல்லும் பகலும் பணியாற்றுவார்கள். யுத்தம் வந்தால்தான் நம்மைப் பற்றி நினைக்கிறார்கள். யுத்தம் நின்று விட்ட பிறகு நம்மை மறந்து விடுகிறார்கள் என்ற ஒரு ஏக்கம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே மிலிட்டிரியில் இருந்து ரிட்டயரானவர்கள் அல்லது அங்க ஊனமுற்றோர் இவர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 5,000 இந்த மாநில அரசு கொடுத்து விட்டு மத்திய அரசிலிருந்து அதை ரி-இம்பர்ஸ்செய்து வாங்கிக்கொள்ளவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது நான் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக இந்த நாட்டின் அமைப்புக்கே அஸ்திவாரம் தேர்தல்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்றுள்ள தேர்தல் விதிகள், நடைமுறைகள் அவற்றை அமல்படுத்தும் விதம் இவற்றிலுள்ள ஊனங்களை நிவர்த்தி செய்வதன் மூலம்தான் தேர்தலில் நியாயமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதத்தில் இன்றைய தேர்தல் சட்டங்களை, தேர்தல் முறைகளை மாற்றியமைக்க தமிழக அரசு முயற்சி எடுத்து செயல்பட வேண்டுமென்று என் வேண்டுகோள். லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யும் விதத்தில் இன்று ஒரு திருவிழா மாதிரி இருக்கிறது நம் தேர்தல் முறை. இன்றைய தேர்தல்களில் ஜாதிப் பிரச்சினை தாண்டவமாடுகிறது.

அரசியலுக்கு வேலை இல்லாத அளவிற்கு மற்றப் பிரச்சினைகள்தான் முன்னுக்கு வருகிறது தேர்தல்களில். இன்றைய தேர்தல் முறையில் தகுதி இல்லாத பலரும் பெரிய பதவிகளுக்கு வரும் வாய்ப்பிருக்கிறது என்றால் இதையெல்லாம் தவிர்ப்பதற்கு என்ன செய்ய முடியும் என்று



சிந்தித்து புதிய தேர்தல் முறைகளைக் கொண்டு வர இந்த அரசாங்கம் இந்திய அரசாங்கத்தோடு ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதை நான் சொல்லும்போது எந்தக் கட்சிக்காகவும் சொல்லவில்லை, எந்தக் கட்சியைக் குறித்தும் சொல்லவில்லை. பொதுவாக வரப்போகிற காலத்தில் என்ன என்ன செய்யவேண்டும் என்ற திட்டத்தை பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் இன்றைய தேர்தல் முறை அமையவில்லை.

சில பேர்கள் சொல்கிறார்கள் திருப்பி அனுப்பும் உரிமை வேண்டும் என்று. எத்தனை வருடங்களில்? அதில் எவ்வளவோ பிரச்சினைகள் வரும். ஆகவே அதை எல்லாம் விட்டுவிட்டு எந்த முறையில் தேர்தல் முறைகளை வகுத்தால் சிறந்த முறையில் நாட்டு மக்களுக்கு பயன்படும், எந்த முறையில் தேர்தல் முறைகளை வகுத்தால் நல்லபடி நிர்வாகத்தை அமைக்கமுடியும், எப்படிச் செய்தால் நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறும் என்று பார்த்து அதற்கேற்ற முறையில் தேர்தல் சட்டத்தை, தேர்தல் முறையை மாற்றியமைக்கவேண்டும்.

இப்போதிருப்பதுபோல், இந்தக் கூட்டுச் சேருவது என்பதே தப்பானது. வியாபாரம் போல் அமைந்துவிடுகிறது இந்தக் கூட்டுச் சேருவது என்பது. தனிப்பட்ட அரசியில் கட்சிகள் கொள்கை அளவில், அவர்கள் செய்யக்கூடிய சேவையின் அடிப்படையில் கட்சிகள் வளர்ந்து தேர்தலில் போட்டியிட்டு வரவேண்டும். ஆகவே இந்தக் கூட்டுச் சேருவது என்பது தவிர்க்கப்பட வேண்டும். அதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னக் கட்சியோ, பெரிய கட்சியோ மக்களுக்கு சேவை செய்து காலப்போக்கில் வளர்ந்து, ஜனநாயகத்திற்கு நல்ல அஸ்திவாரமாக அமைய வேண்டுமென்றால் இத்தகைய கூட்டு சேரும் முறை சரியல்ல என்பதுதான் என் அபிப்பிராயம். தேர்தல்களில் செலவு என்பதில், இந்தத் தேர்தல் செலவுகளை சர்க்காரே ஏற்றுக்கொள்வதன் மூலம் நிச்சயமாக நல்லவர்கள் தேர்தல்களில் ஜெயித்து வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட முடியும். இல்லாவிடில் பணப்போட்டியாக இருக்க முடியுமே தவிர தேர்தல் போட்டியாக இருக்கமுடியாது.

ஐந்து லட்சம் ரூபாய் செலவழிப்பது என்றால், ஏகப்பட்ட பணத்தைச் செலவு செய்வது என்றிருந்தால் ஏழைமக்களுக்கு தேர்தலில் நின்று வெற்றி பெற வாய்ப்பில்லாத முறையில்தான் இன்றையதேர்தல் முறைகள் இருக்கின்றன. நீ இப்படி செலவு செய்யவில்லையா, நீ இப்படி செலவு செய்யவில்லையா என்று ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், அறிக்கைகள் அடிப்பது, நோட்டீஸ் அச்சிடுவது போன்ற குறைந்தபட்ச தேர்தல் செலவுகளை சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றச் செலவுகளை எல்லாம் சட்டவிரோதமாக்கினால் இந்த நாட்டில் தேர்தல்களினால் நல்ல விளைவுகள் ஏற்படலாம்.

அதிகாரிகளைப் பற்றி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளுக்கு கடமை உண்டு என்பது தெரியும். அவர்கள் கடைமைகளைச் சரியாகச் செய்கிறார்களா என்று நாம் ஓயாது பார்க்க வேண்டும். அதிகாரிகள் நினைத்தால் ஒரு அரசைக் காப்பாற்றவும் முடியும். கவிழ்க்கவும் முடியும். நாம் அதைப் பார்த்திருக்கிறோம். அதிகாரிகள் குறிப்பாக அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பணியாற்றினால்தான் நல்லது. குறிப்பாக விஜிலென்ஸ் இலாகா நல்ல முறையில் செயல்பட வேண்டும். அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

விஜிலென்ஸ் எந்த அளவுக்குச் சிறப்பாக செயல்படுகிறதோ, அந்த அளவுக்கு நல்ல முறையில் திட்டம் செயலாற்றுவதற்கு உத்தரவாதம் கொடுக்கும் அளவில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தேர்தல் முறையில் அடிப்படையான மாறுதல் தேவை, அதற்கு நம்முடைய மாநிலம் முன்கை எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மானியக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற குறிப்பில் நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் இந்த அரசாங்கம் சாதனை செய்து இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்கு, வீட்டு மனை இல்லாத வீதியில் இருந்துகொண்டு வாழ்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம், இந்த அரசு 7 ஆண்டு காலத்தில் எவ்வளவு சாதனைகளைச் செய்து இருக்கிறது என்பதை நான் இங்கே புள்ளி விவரங்களோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

1947 முதல் 1967 வரை 20 ஆண்டு காலத்தில் ரூ. 1.15 இலட்சம் பேருக்குத்தான்—காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்—அவர்கள் பட்டா கொடுத்து இருந்தார்கள். ஏறக்குறைய ரூ. 2.88 இலட்சம் ஏக்கர் நிலம் 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கொடுத்து இருந்தார்கள். ஆனால் 1967 முதல் 31—1—1974 வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னாலே 3.34 இலட்சம் மக்களுக்கு பட்டா கொடுத்து இருக்கிறோம். 6.52 இலட்சம் ஏக்கராக அது உயர்ந்து இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் அவர் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. திரு. கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ்காரர்கள் இருந்த நிலத்தைப் பட்டா போட்டுக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது இவர் 6 இலட்சம் ஏக்கர் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், நாங்கள் எதை ஏற்றுக்கொள்வது ?



திரு. நா. வீராசாமி : திரு. வி. கிருஷ்ணமூர்த்தி சொன்னதில் உண்மை இருக்கிறது. நல்ல நிலங்களையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பங்கு போட்டுக்கொண்டார்கள். மற்ற நிலங்களைத்தான் நாங்கள் போட்டு இருக்கிறோம். 6 லட்சம் ஏக்கர் நிலத்தை நாங்கள் ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்திருப்பது உண்மை. சந்தேகம் இருந்தால் கலெக்டரைப் பார்த்துக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வீட்டு மனைப்பட்டா வழங்குவதில் 1947 முதல் 67 வரையில்—காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது காலத்தில்—63.770 பேர்கள் பயன் அடைந்தனர். 2673.82 ஏக்கர் நிலத்தை மனைப்பட்டா போட்டுக் கொடுத்திருந்தார்கள். ஆனால் முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வந்த பின்னால் 1967 முதல் 1973 வரை 4,54,286 பேர்கள் பயனடைந்தனர். 14,736 ஏக்கர் நிலத்தை மனைப்பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறோம். 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தின் கீழ் 1,71,870 வீட்டு மனைப் பட்டாக்களை நாம் இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப் பட்டவர்களுக்குக் கொடுத்து இருக்கிறோம்.

அது போலவே, விவசாயிகள், கிராமப் பகுதிகளில் இருக்கும் மக்கள் அவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்பதற்காக 1969-ம் ஆண்டு மனுநீதித் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த திட்டத்தின் கீழ் 7,50,885 மனுக்கள் பெறப்பட்டன. 6,97,945 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே நாம் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறோம். இது வரையில் அதிகாரிகளிடம் கொடுக்கப் பட்ட மனுக்களில் 93 சத விகிதம் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் அரசின் நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறிய முடியும்.

நிர்வாகத்தை இன்னும் செம்மைப்படுத்த புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கியிருக்கிறோம். இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். வடஆற்காடு மாவட்டம் மிகப்பெரிய மாவட்டம், அதை இரண்டாகப் பிரித்து, வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆற்காடு தாலுக்காவாக ஆக்கியிருக்கிறோம். அங்கே சிறப்பான வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. கட்டிடங்கள் கட்ட வேண்டும். தனியாக தாலுக்கா சப்ளை ஆபீசர் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் புயல், வெள்ள நிவாரணம் போன்ற பணிகளுக்காக இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் கவனம் செலுத்தி வருகிறது. கடந்த ஆண்டு தென்ஆற்காடு மாவட்டத்தில் பயங்கரமான வெள்ளம் ஏற்பட்டது. மத்திய அரசு எஸ்டிமேட் போட்டார்கள் ரூ. 14.25 கோடி என்று சொன்னார்கள். ஆனால் நமக்கு மத்திய அரசாங்கம் கொடுத்து இருப்பது என்னவென்றால் 87 இலட்சம் மானியமாகவும் 3.89 கோடி கடனுதவியாகவும் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால், மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதிகாரிகளைப் பற்றி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதிகாரிகளுக்கு கடமை உண்டு என்பது தெரியும். அவர்கள் கடைமைகளைச் சரியாகச் செய்கிருர்களா என்று நாம் ஓயாது பார்க்க வேண்டும். அதிகாரிகள் நினைத்தால் ஒரு அரசைக் காப்பாற்றவும் முடியும். கவிழ்க்கவும் முடியும். நாம் அதைப் பார்த்திருக்கிறோம். அதிகாரிகள் குறிப்பாக அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் பணியாற்றினால்தான் நல்லது. குறிப்பாக விஜிலென்ஸ் இலாகா நல்ல முறையில் செயல்பட வேண்டும். அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பதற்காக அல்ல.

விஜிலென்ஸ் எந்த அளவுக்குச் சிறப்பாக செயல்படுகிறதோ, அந்த அளவுக்கு நல்ல முறையில் திட்டம் செயலாற்றுவதற்கு உத்தரவாதம் கொடுக்கும் அளவில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, தேர்தல் முறையில் அடிப்படையான மாறுதல் தேவை, அதற்கு நம்முடைய மாநிலம் முன்கை எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மானியக் கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற குறிப்பில் நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டில் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் இந்த அரசாங்கம் சாதனை செய்து இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிருர்கள். நிலமற்ற ஏழைகளுக்கு, வீட்டு மனை இல்லாத வீதியில் இருந்துகொண்டு வாழ்கிற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம், இந்த அரசு 7 ஆண்டு காலத்தில் எவ்வளவு சாதனைகளைச் செய்து இருக்கிறது என்பதை நான் இங்கே புள்ளி விவரங்களோடு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

1947 முதல் 1967 வரை 20 ஆண்டு காலத்தில் ரூ. 1.15 இலட்சம் பேருக்குத்தான்—காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்—அவர்கள் பட்டா கொடுத்து இருந்தார்கள். ஏறக்குறைய ரூ. 2.88 இலட்சம் ஏக்கர் நிலம் 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் கொடுத்து இருந்தார்கள். ஆனால் 1967 முதல் 31—1—1974 வரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னலே 3.34 இலட்சம் மக்களுக்கு பட்டா கொடுத்து இருக்கிறோம். 6.52 இலட்சம் ஏக்கராக அது உயர்ந்து இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் அவர் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. திரு. கிருஷ்ணமூர்த்தி, காங்கிரஸ்காரர்கள் இருந்த நிலத்தைப் பட்டா போட்டுக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். இப்போது இவர் 6 இலட்சம் ஏக்கர் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், நாங்கள் எதை ஏற்றுக்கொள்வது ?



திரு. நா. வீராசாமி: திரு. வி. கிருஷ்ணமூர்த்தி சொன்னதில் உண்மை இருக்கிறது. நல்ல நிலங்களையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் பங்கு போட்டுக்கொண்டார்கள். மற்ற நிலங்களைத்தான் நாங்கள் போட்டு இருக்கிறோம். 6 லட்சம் ஏக்கர் நிலத்தை நாங்கள் ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுத்திருப்பது உண்மை. சந்தேகம் இருந்தால் கலெக்டரைப் பார்த்துக் கேட்டுக்கொள்ளுங்கள்.

வீட்டு மனைப்பட்டா வழங்குவதில் 1947 முதல் 67 வரையில்—காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்தில்—63,770 பேர்கள் பயனடைந்தனர். 2673.82 ஏக்கர் நிலத்தை வீட்டுமனைப் பட்டாவாகக் கொடுத்திருந்தார்கள். ஆனால் முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர் 1967 முதல் 1973 வரை 4,54,286 பேர்கள் பயனடைந்தனர். 14,736 ஏக்கர் நிலத்தை மனைப்பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறோம். 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தின் கீழ் 1,71,870 வீட்டு மனைப் பட்டாக்களை நாம் இன்றையதினம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் கொடுத்து இருக்கிறோம்.

அது போலவே, விவசாயிகள், கிராமப் பகுதிகளில் இருக்கும் மக்கள் அவர்களுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்பதற்காக 1969-ம் ஆண்டு மனுநீதித் திட்டம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த திட்டத்தின் கீழ் 7,50,885 மனுக்கள் பெறப்பட்டன. 6,97,945 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே நாம் நல்ல வெற்றியைக் கண்டிருக்கிறோம். இது வரையில் அதிகாரிகளிடம் கொடுக்கப் பட்ட மனுக்களில் 93 சதவிகிதம் பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் அரசின் நிர்வாகம் செம்மையாக நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அறிய முடியும்.

நிர்வாகத்தை இன்னும் செம்மைப்படுத்த புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கியிருக்கிறோம். இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். வடஆற்காடு மாவட்டம் மிகப்பெரிய மாவட்டம், அதை இரண்டாகப் பிரித்து, வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆற்காடு தாலுக்காவாக ஆக்கியிருக்கிறோம். அங்கே சிறப்பான வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. கட்டிடங்கள் கட்ட வேண்டும். தனியாக தாலுக்கா சப்ளை ஆபீசர் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் புயல், வெள்ள நிவாரணம் போன்ற பணிகளுக்காக இன்றைய தினம் நம்முடைய அரசாங்கம் நல்ல முறையில் கவனம் செலுத்தி வருகிறது. கடந்த ஆண்டு தென்னாற்காடு மாவட்டத்தில் பயங்கரமான வெள்ளம் ஏற்பட்டது. மத்திய அரசு எஸ்டிமேட் போட்டார்கள் ரூ. 14.25 கோடி என்று சொன்னார்கள். ஆனால் நமக்கு மத்திய அரசாங்கம் கொடுத்து இருப்பது என்னவென்றால் 87 இலட்சம் மான்யமாகவும் 3.89 கோடி கடனுதவியாகவும் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு கொடுத்து இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

1972-73-ல் இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்ட நேரத்தில் ஆந்திராவிற்கு ரூ. 37 கோடி கொடுத்திருக்கிறது மத்திய அரசு. பீகாருக்கு 13.35 கோடி கொடுத்திருக்கிறது. குஜராத்திற்கு 14 கோடி கொடுத்திருக்கிறது. மைசூருக்கு 16.50 கோடி கொடுத்திருக்கிறது. மகாராஷ்டிரத்திற்கு 83.43 கோடி கொடுத்திருக்கிறது. ஆனால் பரிதாபமிக்க தமிழ்நாட்டிற்கு மட்டும் 4.76 கோடி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது மத்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனை, தமிழ்நாடு அரசாங்கம் என்று ஒன்று இருக்கக்கூடாது என்பதற்காகச் செய்து இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : ஆந்திராவிற்கு இவ்வளவு, பீகாருக்கு இவ்வளவு என்று சொன்னீர்கள். ஒரிஸ்ஸாவிற்கு எவ்வளவு கொடுத்தார்கள் என்று தெரியுமா ? இங்கே தமிழ் நாட்டிற்கு 4.76 கோடி என்றால், ஒரிஸ்ஸாவிற்கு 5.25 கோடி கொடுத்திருக்கிறார்கள். இதிலே என்ன வித்தியாசம் என்று தெரியவில்லை. அரசியலுக்கு என்று செய்கிறார்கள் என்றால் ஒரிஸ்ஸாவிற்கு அதிகம் போய் இருக்காது.

திரு. நா. வீராசாமி : மத்திய பிரதேசத்தில் பஞ்சம் வரவில்லை. எதுவும் வரவில்லை. ஏதோ கொஞ்சம் வெள்ளம் வந்தது. அதற்குக் கொடுத்திருக்கிறார்கள். மகாராஷ்டிரத்திற்கு 83.43 கோடி தருகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிற்கு 4.76 கோடி தான் தருகிறார்கள். இதைக் கேட்டால் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குக் கோபம் வருகிறது. பாவம், என்ன செய்வது, அங்கே எஜமானர் இருக்கிறார்கள். அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் அதே நேரத்தில் தமிழ் நாட்டையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் என்று சொன்னாலே விசேஷங்களும், வேடிக்கையும் ஆகிவிட்டது. உண்மையான தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர்கள் வந்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நாட்டு அமைச்சர்கள் வந்ததைப் பற்றிச் சொன்னால் சரி. சமீபத்தில் கோயம்புத்தூரில் நடைபெற்ற தேர்தலுக்கு கேரளாவிலிருந்து முதல் அமைச்சர் வந்தார். கேரள கம்யூனிஸ்ட் கட்சி, கேரள அரசாங்க ஜீப்புக்கள் வந்து வேலை செய்தன. கேரள சர்க்கார் கார் வந்து வேலை செய்தது. மத்திய அரசாங்கம் கார் வருகிறது. இன்னொரு வேடிக்கை....................

திரு. கோவை செழியன்: சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேரள அரசாங்கத்தின் ஜீப்புகள், கார்கள் வந்து எலெக்‌ஷன் வேலை செய்ததாகச் சொன்னார்கள். அதை அவர்களால் நிரூபிக்க முடியுமா, தவறான கருத்துக்களை இந்த மன்றத்தில் அவர் சொல்லலாமா ?

(நண்பகல் 12·00)

திரு. நா. வீராசாமி: கார் நம்பர் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும் கொடுக்கிறேன். நான் அப்பொழுது அங்கே இருந்தேன். கார், ஜீப்புகளுடைய நம்பர்களை நான் குறித்து, மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன்



அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். நான் ஒரு நகல வைத்துக் கொண்டிருக்கிறேன். அரசாங்கத்திற்கும் ஒரு புகார் கொடுக்கவேண்டுமென்றுதான் இருந்தேன். ஆனால் இரு அரசாங்கங்களுக்குமிடையே ஏதோ கலகம் மூட்டுவது போல இருக்கும் என்று நிறுத்திவிட்டேன்.

இதற்கு ஆதாரம் கண்டுபிடிக்க முடியாது என்பது அல்ல. கோவையிலுள்ள பெட்ரோல் பங்கிலிருந்து பில் புக் பூராவும் கொண்டுவந்தால் எவ்வளவு கேரள ரிஜிஸ்டிரேஷன் கொண்ட அரசாங்க கார்கள், அரசாங்க ஜீப்புகள் கோவையில் தேர்தல் நேரத்தில் அங்கு வந்திருக்கின்றன என்ற கணக்கைச் சுலபமாக எடுத்துவிடலாம். அதே நேரத்தில் அங்கிருந்து சில ரௌடிகளையும் கொண்டுவந்து [illegible] என்று பத்திரிகையிலே வந்த அறிக்கையையும் படித்தேன். அது மட்டுமல்ல.

* * * *

தேர்தல் காலத்தில் எல்லா தலைவர்களுக்கும்தான் தேர்தல் நேரத்தில் ஏதோ நடக்காத போகும்பொழுது சில நேரத்தில் ஆபத்து ஏற்படுகிறது. ஒரு கட்சித் ஒரு நிகழ்ச்சிக்கு பெரிய விளம்பரம் கொடுக்கப்பட்டது. பீதியை தலைவர் தாக்கப்பட்டார் என்று பெரிய விளம்பரம் செய்யப்பட்டு, எப்படி உண்டுபண்ணிவிட்டார்கள். இப்படியெல்லாம் செய்தால் நாட்டிலே சட்டம் ஒழுங்கு காக்கப்படும் ?

ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சித் தலைவர் பவனி வரும்பொழுது பூ வீசினார்கள், அதற்குப் பின்னாலே கல்லால் அடித்தார்கள், பூவில் கல் இருந்தது என்றெல்லாம் என்னென்னவோ சொல்கிறார்கள். நல்ல காலம் கல்லில் பூ இல்லை. இந்த மாதிரி ஒரு கட்சித் தலைவர் நடந்து கொண்டால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படி பாதுகாக்கப்படும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு [illegible] இருப்பதினால் பல்வேறு தேர்தலுக்கு மன்றுவர் இரண்டு மாத காலம் [illegible] எலெக்‌ஷன் மாதிரி பிரச்சினைகள் வருகின்றன. பஞ்சாயத்து [illegible]. முதல் நாள் நான்கு நாட்களுக்குள் [illegible], மூன்றாவது நாள் நாமினேஷன், இரண்டாவது நாள் [illegible] என்று அப்படி பொதுத் வித்டிராயல், நான்காம் நாள் எலெக்‌ஷன், இந்த நாட்டிலுள்ள தேர்தலையும் நான்கு நாட்களில் நடத்தினால், மக்கள் அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளை வைத்துக்கொண்டு வோட்டுப் போடுவார்கள். அப்படிச் செய்தால் பல பிரச்சினைகளைத் தவிர்த்துவிட முடியும். (மணி அடிக்கப்பட்டது) இந்த நிமிடத்தில் நான் முடித்து விடுகிறேன்.

* * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. நா. வீராசாமி] [1974 ஏப்ரல் 1

1972-73-ல் இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்ட நேரத்தில் ஆந்திராவிற்கு ரூ. 37 கோடி கொடுத்திருக்கிறது மத்திய அரசு. பீகாருக்கு 13.35 கோடி கொடுத்திருக்கிறது. குஜராத்திற்கு 14 கோடி கொடுத்திருக்கிறது. மைசூருக்கு 16.50 கோடி கொடுத்திருக்கிறது. மகாராஷ்டிரத்திற்கு 83.43 கோடி கொடுத்திருக்கிறது. ஆனால் பரிதாபமிக்க தமிழ்நாட்டிற்கு மட்டும் 4.76 கோடி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது மத்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனை, தமிழ்நாடு அரசாங்கம் என்று ஒன்று இருக்கக்கூடாது என்பதற்காகச் செய்து இருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : ஆந்திராவிற்கு இவ்வளவு, பீகாருக்கு இவ்வளவு என்று சொன்னார்கள். உ. பிக்கு எவ்வளவு கொடுத்தார்கள் என்று தெரியுமா? இங்கே தமிழ் நாட்டிற்கு 4.76 கோடி என்றால், உ.பிக்கு 5.25 கோடி கொடுத்திருக்கிறார்கள். இதிலே என்ன வித்தியாசம் என்று தெரியவில்லை. அரசியலுக்கு என்று செய்கிறார்கள் என்றால் உ.பிக்கு அதிகம் போய் இருக்கும்.

திரு. நா. வீராசாமி : மத்திய பிரதேசத்தில் பஞ்சம் வரவில்லை. எதுவும் வரவில்லை. ஏதோ கொஞ்சம் வெள்ளம் வந்தது. அதற்குக் கொடுத்திருக்கிறார்கள். மகாராஷ்டிரத்திற்கு 83.43 கோடி தருகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிற்கு 4.76 கோடி தான் தருகிறார்கள். இதைக் கேட்டால் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குக் கோபம் வருகிறது. பாவம், என்ன செய்வது, அங்கே எஜமானி இருக்கிறார்கள். அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் அதே நேரத்தில் தமிழ் நாட்டையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தல் என்று சொன்னாலே விநோதங்களும், வேடிக்கையும் ஆகிவிட்டது. உண்மையில் தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும்மென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர்கள் வந்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நாட்டு அமைச்சர்கள் வந்ததைப் பற்றிச் சொன்னால் சரி. சமீபத்தில் கோயம்புத்தூரில் நடைபெற்ற தேர்தலுக்கு கேரளாவிலிருந்து முதல் அமைச்சர் வந்தார். கேரள கம்யூனிஸ்ட் கட்சி, கேரள அரசாங்க ஜீப்புக்கள் வந்து வேலை செய்தன. கேரள சர்க்கார் கார் வந்து வேலை செய்தது. மத்திய அரசாங்கம் கார் வருகிறது. இன்னொரு வேடிக்கை..................

திரு. கோவை செழியன்: சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேரள அரசாங்கத்தின் ஜீப்புகள், கார்கள் வந்து எலெக்ஷன் வேலை செய்ததாகச் சொன்னார்கள். அதை அவர்களால் நிரூபிக்க முடியுமா, தவறான கருத்துக்களை இந்த மன்றத்தில் அவர் சொல்லலாமா?

(நண்பகல் 12·00)

திரு. நா. வீராசாமி: கார் நம்பர் கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும் கொடுக்கிறேன். நான் அப்பொழுது அங்கே இருந்தேன். கார், ஜீப்புகளுடைய நம்பர்களை நான் குறித்து, மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன்



1974 ஏப்ரல் 1] [திரு. நா. வீராசாமி]

அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். நான் ஒரு நகல வைத்துக் கொண்டிருக்கிறேன். அரசாங்கத்திற்கும் ஒரு புகார் கொடுக்கவேண்டுமென்றுதான் இருந்தேன். ஆனால் இரு அரசாங்கங்களுக்குமிடையே ஏதோ கலகம் மூட்டுவது போல இருக்கும் என்று நிறுத்திவிட்டேன்.

இதற்கு ஆதாரம் கண்டுபிடிக்க முடியாது என்பது அல்ல. கோவையிலுள்ள பெட்ரோல் பங்கிலிருந்து பில் புக் பூராவும் கொண்டுவந்தால் எவ்வளவு கேரள ரிஜிஸ்டிரேஷன் கொண்ட அரசாங்க கார்கள், அரசாங்க ஜீப்புகள் கோவையில் தேர்தல் நேரத்தில் அங்கு வந்திருக்கின்றன என்ற கணக்கைச் சுலபமாக எடுத்துவிடலாம். அதே நேரத்தில் அங்கிருந்து சில ரௌடிகளையும் கொண்டுவந்து குவித்தார்கள் என்று பத்திரிகையிலே வந்த அறிக்கையையும் படித்தேன். அது மட்டுமல்ல.

* * * *

தேர்தல் காலத்தில் எல்லா தலைவர்களுக்கும்தான் தேர்தல் நேரத்தில் ஏதோ நடக்காத போகும்பொழுது சில நேரத்தில் ஆபத்து ஏற்படுகிறது. ஒரு கட்சித் ஒரு நிகழ்ச்சிக்கு பெரிய விளம்பரம் கொடுக்கப்பட்டது. பீதியை தலைவர் தாக்கப்பட்டார் என்று பெரிய விளம்பரம் கொடுக்கப்பட்டு, உண்டுபண்ணிவிட்டார்கள். இப்படியெல்லாம் செய்தால் நாட்டிலே எப்படி சட்டம் ஒழுங்கு காக்கப்படும்?

ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சித் தலைவர் பவனி வரும்பொழுது பூ வீசினார்கள், அதற்குப் பின்னாலே கல்லால் அடித்தார்கள், பூவில் கல் இருந்தது என்றெல்லாம் எதை எதையோ சொல்கிறார்கள். நல்ல காலம் கல்லில் பூ இல்லை. இந்த மாதிரி ஒரு கட்சித் தலைவர் நடந்து கொண்டால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படி பாதுகாக்கப்படும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நான் முதல் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தேர்தலுக்கு முன்னால் இரண்டு மாத காலம் இருப்பதினால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. பஞ்சாயத்து போர்டு எலெக்ஷன் மாதிரி நான்கு நாட்கள்தான் அவகாசம் கொடுக்க வேண்டும். முதல் நாள் நாமினேஷன், இரண்டாவது நாள் ஸ்குருட்டினி, மூன்றாவது நாள் வித்டிராயல், நான்காம் நாள் எலெக்ஷன் என்று அப்படி பொதுத் தேர்தலையும் நான்கு நாட்களில் நடத்திவிட்டால், இந்த நாட்டிலுள்ள மக்கள் அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளை வைத்துக்கொண்டு ஓட்டுப் போடுவார்கள். அப்படிச் செய்தால் பல பிரச்சினைகளைத் தவிர்த்துவிட முடியும். (மணி அடிக்கப்பட்டது) ஐந்து நிமிடத்தில் நான் முடித்து விடுகிறேன்.

* * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். அதை விட்டு விடுங்கள்.

திரு. நா. வீராசாமி : அது வேண்டாமென்றால் அதை விட்டுவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : * * * * * * * * என்னுடைய இந்த வேண்டுகோளையும் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * * * என்று மாற்றிக்கொள்ள வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன் : * * என்று சொன்னார். எந்தக் கட்சிக்காக வந்தார்கள் என்று கூடச் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வீராசாமி அவர்களுடைய பேச்சில் * * * என்ற அது சம்பந்தமான பகுதியும், * * குறிப்பிட்ட பகுதியும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர்கள் பற்றி சொல்கிறார்கள். (குறுக்கீடு) நான் விட்டுவிட்டேன். பக்கத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களுக்கு நிறைய பாதுகாப்புத் தேவை. இந்த மன்றத்தில்கூட பாதுகாப்பு இல்லை. அமைச்சர் ஒரு நாள் வராவிட்டால் பள்ளி மாணவர்களைப் போல லீவ் லெட்டர் இருக்கிறதா, எழுதி அனுப்பியிருக்கிறாரா என்றெல்லாம் கேட்கிறார்கள்.

அப்படியிருக்கும்பொழுது அமைச்சர்களுக்கு இன்னும் சில வசதிகள் தேவை என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரே இடத்தில் எல்லா அமைச்சர்களுக்கும் ஒன்றாக வீடுகள் கட்டிக்கொடுத்துவிட்டால் எல்லா அமைச்சர்களையும் ஒரே இடத்தில் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு அமைச்சரையும் ஒவ்வொரு இடத்திற்குத் தேடிக்கொண்டு போக வேண்டியிருப்பது கஷ்டமாக இருக்கிறது.

அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தால் மட்டும் போதாது. விலைவாசி ஏற்றத்தில் அவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும். அமைச்சர்களுக்குக் கொஞ்சம் சம்பளம் உயர்த்திக்கொடுப்பதில் தவறு இல்லை.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





அது மட்டுமல்ல, அமைச்சர்கள் காரில் போகிறார்கள் என்றால் அவர்களுக்கும் பெட்ரோல் ரேஷன், 6 லிட்டர் பெட்ரோல். 6 லிட்டர் பெட்ரோலை வைத்துக்கொண்டு ஒரு அமைச்சர் எப்படி தன்னுடைய கடமையைச் சரிவர செய்ய முடியும் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். அமைச்சர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதல் அமைச்சருக்கும் 6 லிட்டர் தான்.

திரு. நா. வீராசாமி : குறைந்தது ஒரு அமைச்சருக்கு 25 லிட்டர் பெட்ரோலாவது கொடுக்க வேண்டும். பெட்ரோலை யாரும் குடிக்கப்போவதில்லை. பொது மக்களுக்குத்தான் பணியாற்றப்போகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் டாங்கை ஃபுல் பண்ணிக்கொள்ளட்டும். அமைச்சர்களுக்கு 25 லிட்டர் பெட்ரோல் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்ய முடியும். விதவைகள்......................(மணி அடிக்கப்பட்டது)

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். அங்கத்தினர் மாண்புமிகு அமைச்சர்களுக்குப் பரிந்து பேசுகிறார்கள். அமைச்சர்களை காக்காய் பிடிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : காக்காய் பிடிக்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஜேம்ஸ் அவர்கள் யார் யாரை காக்காய் பிடிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர் பேசும்பொழுது சொன்னார். எங்கேயோ அதிகாரிகளைப் போய்ப் பார்த்தால் அதிகாரிகள் இல்லை என்று சொன்னார். நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று பேசுகிறார்கள் எதிர்க் கட்சிக்காரர்கள். உறுப்பினர் அதிகாரிகளைத் தேடிப் போகிறார்கள்.......

திரு. கே. டி. கே. தங்கமணி : அவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மான்யத்தின் பேரில் எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்ட வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இன்றைய மான்யங்கள், அவர் பொறுப்பேற்றிருக்கிற அன்று நடந்த போலீஸ் மான்யம், நமது கல்வி அமைச்சர் மான்யம் ஆகியவைகளுக்காக கொடுத்திருக்கிற தொகைகளைக் கூட்டிப் பார்த்தால் மொத்தம் நாம் இங்கு செலவழிக்க வேண்டியதற்கு என்ன தொகை ஒதுக்குகிறோமோ அதிலே கிட்டத்தட்ட பாதியை இந்த இரண்டு அமைச்சர்களும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் சில முக்கியமான கொள்கைப் பிரச்சினைகள் வருகின்ற காரணத்தினால், அந்த விஷயங்களைப்பற்றி அரசினுடைய முடிவு என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 1

முன்பு ரெவின்யூ அமைச்சராக மதியழகன் இருந்த காலத்தில் இதே மன்றத்தில் ரெவின்யூ போர்டு இனிமேல் இருக்காது, வருவாய்த்துறை வாரியத்தை நாங்கள் எடுத்துவிடப்போகிறோம் என்று தெளிவாகச்சொன்னார்கள். ஒரு ஆண்டு காலமாக இதை எழுப்பிக்கொண்டிருக்கிறோம். ஏதாவது சமாதானம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில் அட்மினிஸ்ட்ரேடிவ் ரெபார்ம்ஸ் கமிஷனில் இதைப்பற்றி பரிசீலனை நடக்கிறது என்று சொல்கிறார்கள். என்ன நிலைமை என்பதை இந்தத் தடவையாவது தெளிவாகச் சொல்லவேண்டும். ரெவின்யூ போர்டு இனிமேல் இருக்காது என்ற ஒரு நிலையை எடுத்துச் சொல்வார்களேயானால் இங்கே நாங்கள் திருப்பித் திருப்பி அதைப்பற்றி சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. ஏற்கனவே அஷ்யூரன்ஸ் கொடுத்ததினால்தான் நாங்கள் இதை இங்கே எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறோம். நான்கு, ஐந்து வெட்டுத் தீர்மானங்கள் அதுபற்றி வந்திருக்கிறது. அதைப்பற்றி I expect categorical reply from the Hon. Chief Minister in his reply.

அடுத்து, தேர்தல்கள் சம்பந்தமாக நான் சில புதிய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நாங்கள் ஏற்கனவே இம்மாதிரி உப தேர்தல்கள் நடக்கிறபொழுது அந்த மாநிலங்களுடைய அமைச்சர்கள் பங்கு எடுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். பொதுத் தேர்தலில் அமைச்சர்கள் பங்கு எடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. உப தேர்தல்கள் என்று சொல்லும்பொழுது அந்த மாநில அமைச்சர்களால் சில காரியங்கள் செய்யப்படுகின்றன, அமைச்சர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு.

ஆகவேதான் இந்த உப தேர்தல்களுக்கு வரக்கூடாது என்று சொல்லுகிறோம். பொதுத் தேர்தலுக்கு முன்னால் கூட ராஜிநாமா செய்யவேண்டும் என்று பெருந்தலைவர்கள் எல்லாம் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு ஏற்ப 1957-ம் ஆண்டு கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி இருந்த பொழுது, மிக முக்கியமான உப தேர்தல் நடந்தது. அந்த உப தேர்தலில் ஜெயித்தால் ஓரளவுக்கு லீட் கிடைக்கும் என்ற நிலைமை இருந்தும்கூட எந்த கம்யூனிஸ்டு கட்சி அமைச்சரும் உப தேர்தலில் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை.

இன்றைக்கும் கேரளத்தில் நடக்கக்கூடிய உப தேர்தல்களில் அங்கு அமைச்சர்கள் பங்கு எடுத்துக்கொள்வதில்லை. கேரள அமைச்சர்கள் இங்கே வந்து பேசுவது வேறு விஷயம். இங்கே அவர்கள் வந்து பேசுவதால் உடனே அதைக்கேட்டு எதுவும் செய்யப்போவதில்லை. கேரள அமைச்சர்கள் இங்கு வந்து பங்கு எடுத்தாலும், தமிழ் நாட்டில் உப தேர்தல் நடக்கும்பொழுது தமிழ் மாநில அமைச்சர்கள் பங்கு எடுத்துக் கொண்டால் எந்த அளவுக்கு அவர்கள் அதிகாரிகளைத் தங்களுக்கு ஆதரவாக, ஒரு தவறான நிலைக்கு எடுத்துச் செல்ல முடியும், உதவி செய்ய முடியும் என்ற கருத்தோட்டத்தில் நாங்கள் இந்த வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.



1974 ஏப்ரல் 1] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் இருக்கிற மேலவை வேண்டுமா, வேண்டாமா என்று நாம் முடிவு செய்து, அதற்குத் தகுந்த மாதிரி அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு நமக்கு இன்றைக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில் மேலவை வேண்டியதில்லை, இரண்டு சபை வேண்டியதில்லை என்ற கருத்து வருகிறபொழுது, நாங்கள் முன் நின்று வங்காளத்தைப் பொறுத்த வரையில் மேல் சபை வேண்டாம் என்று சொல்லி, அங்கே கடைசியில் மேல் சபை இல்லாமல் போய் விட்டது. அந்த மாநிலத்தில் மேல் சபை உறுப்பினராக இருந்த எங்கள் கட்சியின் அமைச்சர் அவருடைய பதவி போகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்ட போதிலும் கொள்கை ரீதியிலே அதைச் செய்திருக்கிறோம். அதைப்பற்றி இந்த அரசின் கருத்து என்ன, மேல் சபை இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்களா தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் என்று ஒரு முடிவு செய்து தமிழ் நாட்டில் மேல் சபை இருக்கவேண்டியதில்லை என்று முடிவு எடுத்துவிட்டால் அதை அமல் நடத்துவதற்குப் போதிய அதிகாரம் நமக்கு இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு முறையான மாற்றத்தை அரசியல் சட்டத்தில் செய்துவிட முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல்களைப் பொறுத்தவரையில் (திரு. மொய்தீன் குறுக்கிடு) அவர்கள் டில்லி மேல் சபையைப் பற்றிக் கேட்கிறார்கள். டில்லி மேல் சபையைக் கலைப்பதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது. அவர்கள்தான் அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். நம்முடைய மேல் சபையைக் கலைப்பதற்கு இங்கே அதிகாரம் இருக்கிறது. நான் அதைத்தான் சொல்கிறேன்.

தேர்தல் செலவுகளைப் பொறுத்தவரையில், இப்போது மற்ற நாடுகளுக்கும் இந்தக் கவலை வந்து விட்டது. தேர்தல் நடக்கிறது என்றால் சாதாரண மாணவர்கள் இனி தேர்தல்களில் போட்டிபோட முடியாதுபோல் இருக்கிறது, சாதாரண கட்சிகளும் போட்டியிட முடியாது.

புதுவையில் நடந்த தேர்தலைப் பார்க்கும்போது அந்த எண்ணம்தான் வருகிறது. 10,000 ஓட்டுக்கள் உள்ள ஒரு தொகுதியில் செய்த செலவைப் பார்த்தால் தமிழ்நாட்டில் இனிமேல் கோடீஸ்வரர்கள்தான் தேர்தலில் நிற்கமுடியும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

சில நாடுகளில் பஸ் வைக்க, கார் வைக்க, மைக் வைக்க—இவைகளுக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்கிறது. இந்த மாதிரியான தேர்தல் செலவுகளை இங்கும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டால் உதவிகரமாக இருக்கும். அதற்குரிய முழு அதிகாரம் இல்லாவிட்டாலும் அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல்களை எந்தக் காரணத்தினாலும் ஒத்திவைக்கக்கூடாது. முனிசிபல் தேர்தல் ஆனாலும் சரி, கார்ப்பரேஷன் தேர்தல் ஆனாலும் சரி, மற்ற தேர்தல்கள் ஆனாலும் சரி, எந்தத் தேர்தல்களையும் ஒத்திவைக்கக் கூடாது. காலாகாலத்தில் தேர்தல் நடக்க வேண்டும். தேர்தல் என்று

விடுகிறார்களா என்பதும் தெரியவில்லை. அந்த கமிஷன் என்ன செய்து கொண்டிருக்கிறது, அவர்களுடைய நடவடிக்கையை எந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற விபரத்தை இந்த மன்றத்திற்கு தெரிவித்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

இன்னொரு விஷயமும் நம்முடைய கவனத்திற்கு வருகிறது. 20 லட்சம் ரூபாய்க்குமேல் இருந்தால்தான் கான்ட்ராக்ட் விடாமல், அரசாங்கப் நேரடியாகவே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இப்போது 5 லட்சம் ரூபாய்க்கு மேலே இருந்தாலே அரசாங்கப் பொறுப்பில் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற விலை யேற்ற நிலவரப்படி, முன்னால் 20 லட்சம் என்று இருந்தது இன்றைக்கு ஒரு கோடிக்குமேல் இருக்க வேண்டுமென்று வந்திருக்க வேண்டும். ஆனால் அது 5 லட்சம் என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்போது, அரசாங்கமோ அல்லது அரசாங்கத்தின் பொறுப்பி லுள்ள அமைச்சர்களோ நேரடியாகச் செய்ய வேண்டுமென்று வருகிறபோது அதிக அளவில் தலையீடு வருவதற்கு ஒரு போக்காக இருக்கிறது. 2—1—1970-ல் இதுபற்றிய ஒரு ஜீ.ஓ. வந்தது என்று நினைக்கிறேன். அதன்பிறகுதான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இப்படி பல காரியங் களில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். இதுபோல பல விஷயங்கள் இருக்கின்றன.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ∴ பங்ஷனி லும் கலந்துகொள்வது வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி என்னுடைய கருத்தைச்சொல்கிறேன். எல்லா ∴ பங்ஷன்களிலும் உறுப்பினர்கள் கலந்து கொள்வது என்பது இயலாது. அமைச்சர்கள் வருகிறார்கள். ∴ பங்ஷனை நடத்துகிறார்கள், போகிறார்கள். அந்த ∴ பங்ஷன்களில் எல்லாம் என்னைப் போன்றவர்கள் கலந்துகொள்வது என்றால் செலவு அதிகமாகிறது. அதற்கு வேண்டிய வாகன வசதிகள் எல்லாம் வேண்டும். மற்றவர்களைப் போல இன்னொருவர் வண்டியில் ஏறிக்கொள்ளும் பழக்கம் எனக்கு இல்லை. ஆகவே பல கஷ்டங்கள் இருக்கின்றன.

ஆனால் அமைச்சர்கள் வருகிறபோது, அந்தத் தொகுதி உறுப்பினர் களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வசதிப்பட்டால் கலந்து கொள்ளட்டும். அவர்கள் எந்தக் காரணத்தினாலும் புறக்கணிக்கப்படக் கூடாது. ஆனால் எங்களைப் போன்ற உறுப்பினர்களைக் கூப்பிடுவது இடையாது. என்றைக்கு இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பது என்று எங்கள் கட்சி முடிவு செய்ததோ அன்றிலிருந்து எங்களை அழைப்பது இடையாது. யார் யாரையோ அழைத்து வைத்து விழாக்களை நடத்துகிறார்கள்.

சமீபத்தில் கோவில்பட்டியில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கில் யார் யாரெல்லாமோ வந்திருந்தார்கள். ஒரு அமைச்சர்கூட கலந்து கொண்டார். ஆனால் அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால் அவர் அழைக்கப்பட வில்லை காரணம் நாங்கள் ஆளும் கட்சிக்கு உதவியாக இல்லை.



கூடியவரையில் சம்பந்தபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும். இப்போது அழைப்பிதழ் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. பங்கேற்கும் பொறுப்பு அவர்களுக் கும் அளிக்கப்பட வேண்டும். விழா நிகழ்ச்சியில் அவர்கள் பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது அரசாங்கத்திற்கும் அது உதவிகர மாக இருக்கும்.

பென்ஷனைப்பற்றி பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். பலர் பேசியிருக்கிறார்கள். ஓய்வுபெற்றவர்கள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். சோசலிஸ்ட் நாடுகளில் அதிகக் கவனம் செலுத்து கிறார்கள். நான் ஏற்கனவே அதைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன்.

ஓய்வு பெற்றவர்கள் விதவைகளாகவோ அல்லது விதவர்களாகவோ (சிரிப்பு) இருப்பார்களேயானால், அவர்கள் பிள்ளைகள் இல்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்குத் தனி ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறார் கள். அவர்களுக்கு என்று தனியாக ஆஸ்டல் வைத்து நடத்துகிறார்கள். யாரும் யாரையும் சுரண்டக்கூடாது என்பது அவர்கள் எண்ணம். அந்த ஆஸ்டலில் சினிமா எல்லாம் காட்டுகிறார்கள். சனிக்கிழமை, சனிக் கிழமை பள்ளிக்கூடத்து பிள்ளைகள் அங்கே வந்து விளையாடுகிறார்கள். அப்போது வயதானவர்கள் அந்தக் குழந்தைகளோடு சேர்ந்து விளை யாடுகிறார்கள். குழந்தைப் பாசம் — ஹ்யூமன் அன்டர்ஸ்டாண்டிங் —இருக்கவேண்டும் என்கிற நிலையிலான ஏற்பாடு அங்கே இருக்கிறது.

திரு. கோவை செழியன்: ஒரு விளக்கம் தேவை—தாங்கள் புல வராக இருக்கிற காரணத்தினால் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்—விதவை என்ற சொல்லுக்கு ஆண்பாலில் என்ன வார்த்தை ?

திருமதி த. ந. அனந்தநாயகி: முதியோர்களுக்கென்றே அங்கே விடுதிகள் இருக்கின்றன. அதில்போய் பள்ளிக் குழந்தைகள் விளை யாடுகிறார்கள். ஆனால் நம் நாட்டில் நம் வீட்டிலேயே முதியோர்களை வைத்துக்கொள்கிறோம். பேரன் பேத்திகளுடன் பொழுதுபோக்குவதையே இவர்கள் பெரிதும் விரும்பி சந்தோஷப்படுகிறார்கள். இங்கும் முதி யோர்களை விடுதிக்கு அனுப்பிவிட வேண்டும் என்று விரும்புகிறாரா ?

திரு. கே. டி. கே. தங்கமணி: குடும்பத்தோடு இருக்க முடியாத வர்களுக்குத்தான் சொன்னேன். குடும்பப் பாசம் இருக்கவேண்டும் என்று அங்கே அப்படிச் செய்கிறார்கள். இன்னும் ஜெர்மெனியில் ஒரு இலாக்காவில் இருந்து ஒரு அதிகாரி ரிட்டையராகிவிட்டால் அவரது பிறந்த தினத்தை அவரது இலாக்காவில் கொண்டாடுகிறார்கள். வரு டத்தில் சில நாட்கள் வரவழைத்து அவரது ஆலோசனைகளைக் கேட்கிறார்கள்—ஓய்வு பெற்றவர்களுக்கு இங்கே சீட்டுக் கிழிக்கிற மாதிரி யான நிலைமை இல்லை. அதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

விடுகிறார்களா என்பதும் தெரியவில்லை. அந்த கமிஷன் என்ன செய்து கொண்டிருக்கிறது, அவர்களுடைய நடவடிக்கையை எந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற விபரத்தை இந்த மன்றத்திற்கு தெரிவித்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயமும் நம்முடைய கவனத்திற்கு வருகிறது. 20 லட்சம் ரூபாய்க்குமேல் இருந்தால்தான் காண்ட்ராக்ட் விடாமல், அரசாங்கம் நேரடியாகவே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இப்போது 5 லட்சம் ரூபாய்க்கு மேலே இருந்தாலே அரசாங்கப் பொறுப்பில் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற விலையேற்ற நிலவரப்படி, முன்னால் 20 லட்சம் என்று இருந்தது இன்றைக்கு ஒரு கோடிக்குமேல் இருக்க வேண்டுமென்று வந்திருக்க வேண்டும். ஆனால் அது 5 லட்சம் என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும்போது, அரசாங்கமோ அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள அமைச்சர்களோ நேரடியாகச் செய்ய வேண்டுமென்று வருகிறபோது அதிக அளவில் தலையீடு வருவதற்கு ஒரு போக்காக இருக்கிறது. 2—1—1970-ல் இதுபற்றிய ஒரு ஜீ.ஓ. வந்தது என்று நினைக்கிறேன். அதன்பிறகுதான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. இப்படி பல காரியங்களில் அரசாங்கம் நேரடியாகத் தலையிடுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம். இதுபோல பல விஷயங்கள் இருக்கின்றன.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ∴ பங்ஷனிலும் கலந்துகொள்வது வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி என்னுடைய கருத்தைச்சொல்கிறேன். எல்லா ∴ பங்ஷன்களிலும் உறுப்பினர்கள் கலந்து கொள்வது என்பது இயலாது. அமைச்சர்கள் வருகிறார்கள். ∴ பங்ஷனை நடத்துகிறார்கள், போகிறார்கள். அந்த ∴ பங்ஷன்களில் எல்லாம் என்னைப் போன்றவர்கள் கலந்துகொள்வது என்றால் செலவு அதிகமாகிறது. அதற்கு வேண்டிய வாகன வசதிகள் எல்லாம் வேண்டும். மற்றவர்களைப் போல இன்னொருவர் வண்டியில் ஏறிக்கொள்ளும் பழக்கம் எனக்கு இல்லை. ஆகவே பல கஷ்டங்கள் இருக்கின்றன.

ஆனால் அமைச்சர்கள் வருகிறபோது, அந்தத் தொகுதி உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வசதிப்பட்டால் கலந்து கொள்ளட்டும். அவர்கள் எந்தக் காரணத்தினாலும் புறக்கணிக்கப்படக் கூடாது. ஆனால் எங்களைப் போன்ற உறுப்பினர்களைக் கூப்பிடுவது கிடையாது. என்றைக்கு இந்த அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பது என்று எங்கள் கட்சி முடிவு செய்ததோ அன்றிலிருந்து எங்களை அழைப்பது கிடையாது. யார் யாரையோ அழைத்து வைத்து விழாக்களை நடத்துகிறார்கள்.

சமீபத்தில் கோவில்பட்டியில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அந்தக் கருத்தரங்கில் யார் யாரெல்லாமோ வந்திருந்தார்கள். ஒரு அமைச்சர்கூட கலந்து கொண்டார். ஆனால் அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பதால் அவர் அழைக்கப்படவில்லை காரணம் நாங்கள் ஆளும் கட்சிக்கு உதவியாக இல்லை.





கூடியவரையில் சம்பந்தபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட வேண்டும். இப்போது அழைப்பிதழ் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. பங்கேற்கும் பொறுப்பு அவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். விழா நிகழ்ச்சியில் அவர்கள் பெயரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது அரசாங்கத்திற்கும் அது உதவிகரமாக இருக்கும்.

பென்ஷனைப்பற்றி பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். பலர் பேசியிருக்கிறார்கள். ஓய்வுபெற்றவர்கள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். சோசலிஸ்ட் நாடுகளில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். நான் ஏற்கனவே அதைப்பற்றி இங்கே சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன்.

ஓய்வு பெற்றவர்கள் விதவைகளாகவோ அல்லது விதவர்களாகவோ (சிரிப்பு) இருப்பார்களேயானால், அவர்கள் பிள்ளைகள் இல்லாதவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்குத் தனி ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக ஆஸ்டல் வைத்து நடத்துகிறார்கள். யாரும் யாரையும் சுரண்டக்கூடாது என்பது அவர்கள் எண்ணம். அந்த ஆஸ்டலில் சினிமா எல்லாம் காட்டுகிறார்கள். சனிக்கிழமை, சனிக்கிழமை பள்ளிக்கூடத்து பிள்ளைகள் அங்கே வந்து விளையாடுகிறார்கள். அப்போது வயதானவர்கள் அந்தக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடுகிறார்கள். குழந்தைப் பாசம் — ஹ்யூமன் அண்டர்ஸ்டாண்டிங் —இருக்கவேண்டும் என்கிற நிலையிலான ஏற்பாடு அங்கே இருக்கிறது.

திரு. கோவை செழியன்: ஒரு விளக்கம் தேவை—தாங்கள் புலவராக இருக்கிற காரணத்தினால் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்—விதவை என்ற சொல்லுக்கு ஆண்பாலில் என்ன வார்த்தை ?

திருமதி த. ந. அனந்தநாயகி: முதியோர்களுக்கென்றே அங்கே விடுதிகள் இருக்கின்றன. அதில்போய் பள்ளிக் குழந்தைகள் விளையாடுகிறார்கள். ஆனால் நம் நாட்டில் நம் வீட்டிலேயே முதியோர்களை வைத்துக்கொள்கிறோம். பேரன் பேத்திகளுடன் பொழுதுபோக்குவதையே இவர்கள் பெரிதும் விரும்பி சந்தோஷப்படுகிறார்கள். இங்கும் முதியோர்களை விடுதிக்கு அனுப்பிவிட வேண்டும் என்று விரும்புகிறாரா ?

திரு. கே. டி. கே. தங்கமணி: குடும்பத்தோடு இருக்க முடியாதவர்களுக்குத்தான் சொன்னேன். குடும்பப் பாசம் இருக்கவேண்டும் என்று அங்கே அப்படிச் செய்கிறார்கள். இன்னும் ஜெர்மெனியில் ஒரு இலாக்காவில் இருந்து ஒரு அதிகாரி ரிட்டையராகிவிட்டால் அவரது பிறந்த தினத்தை அவரது இலாக்காவில் கொண்டாடுகிறார்கள். வருடத்தில் சில நாட்கள் வரவழைத்து அவரது ஆலோசனைகளைக் கேட்கிறார்கள்—ஓய்வு பெற்றவர்களுக்கு இங்கே சீட்டுக் கிழிக்கிற மாதிரியான நிலைமை இல்லை. அதைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 ஏப்ரல் 1

1970 பிப்ரவரி மாதத்திற்கு முன்னால் ஓய்வுபெற்றிருந்தால் பஞ்சப்படி பாதி என்கிற நிலையில் குறைகிறது என்கிறார்கள். அவர்களுக்கு அதற்குப் பிறகு கொடுக்கிற முறையில் 50, 60 ரூபாய் ஜாஸ்தியாக வரும் என்கிறார்கள். அவ்வாறு ஓய்வுபெற்றவர்கள் கம்மியாகத்தான் இருப்பார்கள். நல்ல உள்ளத்தோடு இதனையும் பரிசீலனை செய்து, அவர்கள் சம்பந்தமாகவும் நல்ல உத்தரவை அனுப்புவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்களைப் பொறுத்து திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்ன கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர்கள் என்றால் ஒரு தனி பந்தா—இந்த லாபியில் உட்கார்ந்திருக்கிறபோது அந்தப் பக்கம் அமைச்சர் யாராவது வந்துவிட்டால் உடனே பலர் எழுந்துவிடுகிறார்கள். நாம் உட்காருகிறபோது ஒரு காம்பிளக்ஸ் — அமைச்சர்கள் மேல் சாதி போன்ற நிலை — பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் அப்படி இல்லை — அமைச்சர்கள் உறுப்பினர்களைத் தேடி வருவார்கள் — இங்கே நாங்கள் அவர்களைத் தேடிப் போகிறோம் — லாபியில் வந்து உறுப்பினர்களோடு உட்கார்ந்து பேசுகிற பழக்கம் இருந்தால் — கொடுக்கவேண்டிய கடிதங்களை அங்கேயே கொடுக்கலாம் — ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகுகிற வாய்ப்பு ஏற்படும்.

நமக்குச் சரியான லாபி இல்லை. லாபியில் வந்து யார் உட்காருகிறார்கள் என்பதே தெரியமாட்டேன் என்கிறது — லாபியில்தான் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் உட்கார்ந்து மனம்விட்டுப் பேசுகின்ற நிலை — கோபமாகப்பேசிவிட்டாலும் அது அப்படி இல்லை என்று பேசி —ஹீட்டை தணித்துக்கொள்கிற நிலை இருக்கும்.

இன்னும் மெம்பர்களுக்காகப் போகிற பஸ்ஸை எடுத்துக்கொண்டால் மெம்பர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் ஏறுகிறார்கள். வேண்டுமென்றால் ஒரு முறை மெம்பர்களுக்கும், ஒரு முறை மெம்பர் அல்லாதவர்களுக்கும் என்றாவது விடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களோடு தொகுதியில் இருந்து வருகிறவர்களை ஏற்றிக்கொண்டு போயிருக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தொகுதியைச் சேர்ந்தவர் யாரையும் நான் இதுவரை அதில் ஏற்றியதில்லை.

திரு. துரைமுருகன் : தொகுதியில் இருந்து வருகிறவர்களை இந்த பஸ்ஸில் வரக்கூடாது என்றால் எங்களை விட்டு விட்டுப்போய்விட்டார் என்று சொல்வார்கள். ஆகவே அவர்களையும் கூட அழைத்துப் போக வேண்டிய நிலை இருக்கத்தான் செய்கிறது.

அடுத்து, அமைச்சர்கள் லாபியில் வந்து உட்காரத்தான் செய்கிறார்கள், உறுப்பினர்களோடு பேசுகிறார்கள். உறுப்பினர்களைப் பார்த்து அவர்கள் புறக்கணிப்பதுபோல பேசுவது சரியல்ல.



1974 ஏப்ரல் 1]

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒதுங்கி இல்லாது மற்றவர்களுடன் கலந்து பேசுகிற வாய்ப்புகள் அதிகப்படவேண்டும் என்கிற கருத்தில்தான் சொன்னேன்.

துயர் தணிப்பு என்பது — துயர் தடுப்பு என்று இருக்கும் முறையில் பணிகள் நடக்க வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீட்டில் இன்றைய தினம் 50 சதவிகிதம் காண்டிராக்டர்களுக்கும், அதிகாரிகளுக்குமே சென்று விடுகிறது.

வறட்சி—பஞ்சம் ஏற்பட்டாலும் நாக்குப் பிடிக்கும் நிலையில், குடி தண்ணீர் பஞ்சம் ஏற்படாதிருக்க—பாசனக் கிணற்றில் தண்ணீர் வறண்டு போகாமல் இருக்க—சீரான கண்மாய்-கால்வாய் பராமரிப்பு, மழைக்கால தண்ணீர் கடலுக்கு வீணாகப் போகாது தடுக்க ஆங்காங்கு தேக்கி வைக்கும் முறையில் கண்மாய், குளம், குட்டைகள் அமைப்பது நடந்து முடியச் செய்ய வேண்டும்.

முன்பு காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்தது வயோதிக பென்ஷன் திட்டம். தகுதிபெற்ற அனைவருக்கும் கொடுக்க, அப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவுபேர்களுக்குக் கொடுத்து வந்தார்களோ அவ்வளவு பேர்களுக்குத்தான் இப்போதும் கொடுக்கப்படுகிறது. யாரேனும் செத்துவிட்டால் அதற்குப் பதில் ஒருவரைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அதற்காக ஒதுக்கி யிருக்கிற 1 கோடி போதாது. இன்னும் 1 கோடி ஒதுக்கி—தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் பென்ஷன் கிடைக்க விதிகளைத் திருத்த வேண்டும்.

விவசாயிகளுக்குக் கொடுத்த கடனில் கிணறுவெட்டி பலனளிக்காத கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயப் போராட்ட காலத்திலே இது ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கையாகும்.

கடன் வசூலில் விவசாய பம்புசெட்டு, மாடுகள் போன்ற விவசாயக் கருவிகள் ஜப்தி செய்யப்படுவது தடுக்கப்படவேண்டும்

குடியாத்தத்தில் நெருப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றி பல கட்சி உறுப்பினர்களும் வெட்டுத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நமது சர்க்கார்—முதலமைச்சர் நிதியில் இருந்து 1 லட்சம் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன் அதேமாதிரி இந்தியப் பிரதமர் நிதியில் இருந்தும் 1 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்தாபன காங்கிரஸ் 10 ஆயிரம் அளித்திருக்கிறது. இதை எல்லாம் வரவேற்கிறேன்—என்றாலும் இது போதுமானதல்ல.

இந்த மாதிரி நிவாரணம் அளிக்க—தனியாகவே ஒரு நிவாரண நிதியை ஏற்படுத்த முடியாதா ? அப்படி ஏற்பாடு செய்தால் உடனுக்குடன் இதுபோன்ற நேரங்களில் நிவாரண உதவியை அளிக்க வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக சமீபத்தில் ஜில்லா கலெக்டர்கள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதை நல்லதாகத்தான் கருதுகிறேன் என்றாலும், சில அதிகாரிகளை 10 வருஷங்களுக்கும் மேலாக ஓரிடத்தில் இருந்து மாற்றாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, மதுரையில் இருக்கிற டிரஷரி ஆபீசர் 10 வருஷத்திற்கு மேலாகிறது—அந்த இடத்தில் இருந்து மாற்றப்படவில்லை. அவர் இன்றைக்கு சிப்பந்திகளை, மேலும் அங்கு வரக்கூடியவர்களை தொந்தரவு பண்ணுவதாகச் சொல்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒருவரை ஓரிடத்தில் வைக்கக்கூடாது. அது போலவே 3 ஆண்டுகளுக்குள் மாற்றவும் கூடாது.

மதுரையில் திரு. லட்சுமிகாந்தன் பாரதி கலெக்டராக இருந்த காலத்தில் குறிப்பிட்ட நாட்களில் தாலுக்கா தலைமையிடங்களுக்குப் போய்விடுவார். அடுத்து வந்திருக்கிற கலெக்டரால் அப்படி முடியவில்லை. கேட்டால் "எங்களால் ப்ரொக்கிராம் போட முடியவில்லை. பல்விதமான ப்ரொக்கிராம் எங்களுக்கு வருகிறது" என்கிறார். அமைச்சர்கள் வருவதுதான் இருக்கும். அவர்கள் ஒவ்வொருவரும் வருவதற்கு இரண்டு நாட்கள் முன்புதான் அறிவிக்கப்படுகிறது. முன்கூட்டி கலெக்டர் ப்ரொக்கிராம் போட்டிருந்தால் அது பாதிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அமைச்சர்கள் வரும்போது, கலெக்டர்களோ, மற்ற அதிகாரிகளோ கண்டிப்பாக இருக்கவேண்டுமென்ற உத்தரவு கிடையாது. முன்பு இருந்த உத்தரவு கூட மாற்றப்பட்டு—வருகின்ற அமைச்சருக்கு முக்கியமான காரியமாக இருந்து, அந்த முக்கியமான காரியத்தில் தொடர்பு இருக்குமானால் அந்த அதிகாரி மட்டும் இருந்தால் போதும்—மற்ற அதிகாரிகளோ—மாவட்ட ஆட்சியாளரோ அமைச்சர்களுக்காக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : வெளிநாட்டில் இருந்து வருகிற டிஸ்டிங்க்விஷ்டு விசிடர்களைத் தவிர—அமைச்சர்கள் வரும்போது இப்படி இருக்கக்கூடாது என்பது சரியாகும். மாவட்ட ஆட்சியாளர்களது ப்ரொக்கிராம் முன்கூட்டியே ஜனங்கள் மத்தியில் தருவது உதவியாக இருக்கும்.

இன்னும் அமைச்சர்கள் வரவில்லை என்ற காரணத்தினால் சில கட்டப்பட்ட கட்டிடங்கள்கூட திறக்கப்படுவதில்லை. உதாரணமாக, உத்தமபாளையம் தாய்-சேய் நலவிடுதி கட்டி ஒரு வருஷம் ஆகிறது; இன்னும் திறக்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட கட்டிடங்களுக்குத் திறப்பு விழா செய்ய அமைச்சர்களோ, வேறு அதிகாரியோ வரவேண்டும் என்று காத்திருக்கத் தேவையில்லை. ஒன்றியத்தில் உள்ளவர்களையே வைத்துக்கொண்டு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அங்குள்ளவர்கள் குறிப்பிட்டவர் வரவேண்டும் என்பதற்காகக் காத்து இருக்கிறார்கள். அப்படி காத்திருக்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.





(பிற்பகல் 12–30)

திரு. கே. டி. கே. தங்கமணி : அமைச்சர்களே எல்லாவற்றையும் திறக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. சீனாவிலே குறிப்பிட்ட தொழிற்சாலையைத் திறப்பதற்கு அந்தத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளியை வைத்துத்தான் திறக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பக்ராநங்கல் அணையை ஜவஹர்லால் நேரு அவர்கள் வயது முதிர்ந்த ஒரு தொழிலாளியைத்தான் திறக்கச் சொன்னார்கள். ஆனால், இங்கே அப்படியில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரமாகிவிட்ட படியால் முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கோடிக் கணக்கான ரூபாய் வழங்கப்பட்டிருக்கும் இந்த மானியத்தின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தேர்தல்கள் என்ன முறையில் நடக்கவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் சீரிய முறையிலே இங்கே பல அங்கத்தினர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

இடைத் தேர்தல்களிலே என்ன முறைப்படி அமைச்சர்கள் நடந்து கொள்ளவேண்டும், அதிலே அவர்கள் பங்கு கொள்ளலாமா, கொள்ளக் கூடாதா என்பதையெல்லாம் பற்றி இந்த மன்றத்திலே சொன்னார்கள். சமீபத்தில் நடந்து முடிந்த கோவைத் தேர்தலிலே என்னென்ன நடந்தது என்பதுபற்றி இந்த மன்றத்தில் இருப்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றாகத் தெரியும்.

இந்த இடைத் தேர்தல்களிலே அரசாங்கம் நடுநிலையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக, பப்ளிசிட்டி டிபார்ட்மெண்டிலே இருக்கிற ஒரு சில அதிகாரிகள் அரசாங்கச் சார்பிலே தீவிரமாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டு எங்களுக்கு வந்த வண்ணம் இருக்கிறது.

பப்ளிசிட்டி டிபார்ட்மெண்டில் இருக்கிற அதிகாரிகள் வண்ண வண்ண சுவரொட்டிகளை ஒட்டித் தேர்தல் வேலையில் தீவிரமாக இருந்தார்கள் என்ற தகவல் எங்கள் கையில் இருக்கிறது. அதிலே கூறுவார்கள், எந்த ஆட்சியானாலும் சரி இது நடக்கும் என்றெல்லாம் சொல்வார்கள்.

சாதாரணமாக, இந்த ஆட்சி சாமானியர்களின் ஆட்சி என்று சொல்லக் கூடிய நிலையில் இருக்கிறது. இந்தச் சர்க்காரின் கண்ணொளி வழங்கு விழா, ரிக்ஷா வழங்கும் விழா இதற்கெல்லாம் விளம்பரம் செய்து கொள்வதிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், இது ஒரு கட்சியின் சாதனை என்ற முறையிலே நடக்கிறதே தவிர ஆட்சியின் சாதனை என்ற நிலையில் நடைபெறவில்லை.

ஆகவே, இந்த நிலையைத் தவிர்க்கவேண்டும். இன்று அமைச்சர்களாக இருப்பவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது அவர்களுடைய பல கருத்துக்களை அள்ளி அள்ளி வீசினார்கள். பப்ளிசிட்டி ஆபீசர்களைப் பற்றி என்னென்ன கூறினார்கள் என்பதைப்பற்றி எனக்கு நன்கு தெரியும்.

திரு. பூவராகவன் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்தபோது அவரைப்பற்றி என்னென்ன கூறினார்கள் என்றும் எனக்குத் தெரியும். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கிற வட்டச் செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும்தான் பப்ளிசிட்டி ஆபீசர்களாக இருக்கிற நிலைமை இருக்கிறதே தவிர அங்கு அதிகாரிகள் இல்லை. ஆகவே, பப்ளிசிட்டி டிபார்ட்மெண்ட் என்பது கட்சியின் ஒரு பகுதியாகத்தான் இயங்கி வருகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேர்தலில் ப்ரபோர்ஷனல் ரெப்பரசெண்டேஷன் வேண்டுமென்று இங்கே கூறினார்கள். இது சம்பந்தமாக பல அரசியல்வாதிகள் பல கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையில் நமது தேர்தல் முறையை மாற்றி அமைத்தால் அதற்கு ஆட்சேபனை எதுவும் இருக்காது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்சஸ் அடிப்படையிலே தொகுதி அமைக்கும் உத்தேசம் மத்திய அரசிடம் இருக்கிறது. ஆகவே, இதில் மத்திய அரசோடு மாநில அரசும் சேர்ந்து கவனிக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு ஒரு கமிட்டி நிறுவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அந்த கமிட்டி எப்போது கூடிற்று, என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து,பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப்பற்றி கூறினார்கள். அதிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு இருக்கிற அதிகாரத்தை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரு சில உத்தியோகங்களுக்கு மட்டும்தான் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஆள் எடுக்கப்படுகிறது. ஆகவே, மாநிலஅளவிலே எல்லா உத்தியோகங்களுக்கும் நியமிக்கும் அதிகாரம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் எல்லோருக்கும் சமநீதி கிடைக்கும்.

இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே நியமனம் பெறவேண்டுமானால் ஒரு சில அரசியல் கட்சிகளுக்கு நல்ல பிள்ளையாக இருக்கவேண்டுமென்ற நிலைமை இருக்கிறதாகத் தெரிகிறது. இந்த நிலையை நல்லபடியாக மாற்றி அமைக்க வேண்டும்.

இப்போது சர்வீஸ் கமிஷன் என்பது ஒரு தனி அமைப்பாக இருக்கிறது. அதை நிர்வகிக்கும் பொறுப்பு அமைச்சர்களுக்கு இருக்கிறது. அதிலே ஒரு புகார் வந்தது. அதைப்பற்றி இங்கே சொல்ல விரும்புகிறேன். அண்மை





யிலே குரூப் 4 தேர்வானது 28, 29 டிசம்பரிலே நடந்தது. அப்போது கேள்வித் தாள்களெல்லாம் வெளியானது என்ற புகாரை எங்களுக்குத் தந்தார்கள். அது மட்டுமல்லாமல், அதற்குரிய விடைகளும் அங்காடியிலே விற்பனை செய்யப்பட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. இது உண்மையானால் நிச்சயமாகக் கண்டிக்கத்தக்கது. ஆகவே, இதை அரசாங்கம் பரிசீலித்து இதற்கு யார் பொறுப்பு என்பதையும் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே யார் அங்கத்தினர்களாக இருந்தாலும் அவர்கள் நீதிபதியைப் போன்று செயல்படவேண்டும். அந்த வகையிலே அதை அமைத்து எந்தவிதமான தவறுக்கும் இடம் தராமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்களைப்பற்றி ஒரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அவர்களைப் பொறுத்தவரையில் இங்கே 15 பேர் இருக்கிறார்கள். இதற்கு முன்பெல்லாம் 8 அல்லது 9 பேர் இருந்தார்கள். இப்போது 15 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இலாகாக்களைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு அமைச்சர் கூறுகிறார். நான் போடுகிற உத்தரவை நிறைவேற்ற அதிகாரி இல்லை என்ற நிலையில் இருக்கிறது என்று சொன்னால் அந்த அமைச்சருக்குப் பொதுமக்களிடத்தில் எவ்வளவு மதிப்பு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, முதல்தர அமைச்சர்கள், இரண்டாம் தர அமைச்சர்கள் என்ற நிலை இல்லாமல், அதிகாரிகளும் பாகுபாடு இல்லாமல் நடந்து கொள்ளவேண்டும். எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடில்லாமல் ஆட்சி நடக்கவேண்டுமென்ற எண்ணத்தில் இதைக் கூறிக்கொள்கிறேன்.

அண்மையில் டிரான்ஸ்போர்ட் அமைச்சர் ஒரு நாள் சட்டமன்றத்திற்கு வரவில்லை. அப்போது பல சர்ச்சைக்குரிய விஷயங்கள் இங்கே எழுப்பப்பட்டன. கடைசியாக முதலமைச்சரவர்கள் அதற்காக வெளியே பத்திரிகையில் அறிக்கை விடவேண்டியும், இங்கே பதில் கூறவேண்டியும் வந்ததை நாம் அறிந்திருக்கிறோம்.

ஆகவே, அமைச்சரவையில் ஒருமித்த கருத்து இல்லாமல் இருக்கிறது. எனவே, இதில் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி என்று சொல்லக்கூடிய வகையிலே நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து அமைச்சர்களைப்பற்றி பல கருத்துகளை இங்கே கூறினார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தை வேண்டுமானால் உயர்த்திக் கொள்ளலாம்.

"பர்க்விசிட்ஸ்" என்ற முறையிலே எவ்வளவு இருக்கிறது என்று அமைச்சர்கள் விளக்கினால் அது நல்லதாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு அமைச்சரும் எவ்வளவு போன் கால் செய்திருக்கிறார்கள், டெபுடி ஸ்பீக்கர், ஸ்பீக்கர் போன்றவர்கள் எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் கொடுத்தால், எவ்வளவு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தால் நன்றாக இருக்கும்.

ஏனென்றால் சம்பளம் குறைவாக இருக்கலாம். ஆனால் பர்க்விசிட்ஸ் என்ற அளவிலே அதிகமான சலுகைகள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் மந்திரிகள் என்ற உணர்வு பொதுமக்களிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமை நீடிக்க விடுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் எல்லாம் இப்பொழுது சிறு கார்களிலே போகிறார்கள், 6 லிட்டர் பெட்ரோல்தான் கொடுத்திருக்கிறார்கள் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இது போதாது என்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் கிடையாது. ஸ்டாப் கார்கள் எவ்வளவு இருக்கின்றன? அதற்கு எவ்வளவு பெட்ரோல் செலவாகிறது? அந்த லாக் புக்கை எடுத்துப் பார்த்து என்ன என்ன விதிமுறைகள் போட்டிருக்கிறார்கள், அதற்கு ஏற்ப நடந்துவருகிறார்களா? யார் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள், அதிகாரிகள் பயன்படுத்துகிறார்களா அல்லது பொது வேலைக்குப் பயன்படுத்தப்படுகிறதா அல்லது தனி வேலைக்குப் பயன்படுத்துகிறார்களா என்பதையெல்லாம் கண்காணிக்கவேண்டும்.

ஒவ்வொரு அதிகாரிக்கும் எத்தனை ப்யூன்கள் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள், சிப்பந்திகள் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மற்றவர்களையெல்லாம் சமதர்மம் சிருஷ்டிக்க வேண்டுமென்று சொல்லி முனைப்பாக இருக்கிற நேரத்திலே உண்மையிலேயே சமதர்மம் ஏற்படுத்துவதற்கு சாமானியர்களுடைய பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலே இதைச் சிந்திக்கவேண்டும்.

முன்பு பேசிய கருத்தைத்தான், மறுபடியும் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சியினுடைய அலுவலகத்தை ஏர்கண்டிஷன் செய்திருக்கிறார்கள். அதேமாதிரி மற்ற கட்சிகளுடைய அலுவலகங்களையும் ஏர் கண்டிஷன் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா?

அவர்களுக்கு பல பர்னிச்சர்கள் எல்லாம் அதிகமாக வாங்கிக் கொடுக்கிறார்கள். அதேமாதிரி மற்ற கட்சிக்காரர்கள் கேட்டால், அல்லது ரிப்பேர் செய்யவேண்டுமென்றால் செய்து கொடுக்கப்போகிறார்களா என்பதையும் கூறவேண்டும்.



அதிகாரிகளை மாற்றுவதைப்பற்றிப் பலரும் இங்கே பல கருத்துக்களைக் கூறினார்கள். புதுக்கோட்டையிலே இருந்தவர் அண்மையிலே மாற்றப்பட்டிருக்கிறார். அண்மையிலேதான் ஆரம்பிக்கப்பட்ட புதிய மாவட்டம். ஒன்றிரண்டு மாதங்கள்வரை இருந்திருக்கிறார், அந்த அதிகாரியை மாற்றிவிட்டு புதிய அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். மக்கள் அதைப்பற்றி தந்திகளும் மகஜர்களும் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். புதிய, உடனடியான மாற்றம் ஏற்படுகிறது என்று சொல்கிற நேரத்திலே அவர்கள் தங்களுடைய ஜில்லாவிற்குப் போதிய வளர்ச்சி ஏற்படுத்தக்கூடாது என்ற ஐயப்பாட்டில் போடப்பட்டிருக்கிறார்களா என்று சந்தேகப்படுகிறார்கள் பொதுமக்கள். இப்படி ஒரு மாதம், இரண்டு மாதம் என்ற அளவிலே டிரான்ஸ்ஃபர் செய்வது சரியல்ல.

எங்களுடைய மாவட்டத்திலே ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அங்கே ஒரு கலெக்டர் வந்தார். இப்பொழுது மாற்றி வேறு ஒரு வேலைக்குப் போட்டிருக்கிறார்கள். ஒருவேளை அவருக்கு புரமோஷன் என்ற அளவிலே கூடப் போட்டிருக்கலாம். அந்த ஜில்லாவைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டிருக்கின்ற அதிகாரிகள் புரிந்து செயல்படுவதற்குள் வேறு ஒரு அதிகாரியைப் போட்டுவிடுகிறார்கள். யாராவது நல்ல எண்ணம் படைத்த ஒருவர் வந்தால் பரவாயில்லை என்று நினைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பலமுறைகள் நடந்திருக்கின்றன. இம்மாதிரி எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும்.

இன்னொரு விவரம் நான் முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து தெரிந்துகொள்வதற்கு ஆசைப்படுகிறேன். ராயப்பா வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே வந்தது. அந்த வழக்கிற்காக அரசாங்கப் பணம் எவ்வளவு செலவழித்தார்கள் என்று தெரிவித்தால் நல்லது. அந்த வழக்கிலே ஆஜரானவர்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே அட்வொகேட் ஜெனரல் போயிருக்கிறார், எம். கே. நம்பியார் போயிருக்கிறார், கவர்ன்மெண்ட் ப்ளீடர் போயிருக்கிறார், திருச்சி ஜில்லாவிலிருந்து அதிகாரி போயிருக்கிறார், சீப் செக்கரட்டரி போயிருக்கிறார், இப்படிப் பல அதிகாரிகள் போயிருக்கிறார்கள். இவ்வளவு வழக்கறிஞர்கள் தேவையா? எவ்வளவு பணம், அரசாங்கப் பணம் செலவானது என்று தெரிவித்தால் நல்லது.........

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: திடீரென்று ஒரு வழக்கைக் குறிப்பிட்டு அதற்கு எவ்வளவு செலவாயிற்று என்று கேட்டால் உடனடியாகப் பதில் சொல்ல முடியாது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு கேள்வி அது குறித்துப் போடலாம், அதை சபாநாயகர் அவர்கள் அனுமதிப்பாரானால் கேள்வி நேரத்திலே துணைக் கேள்வி மூலமாகப் பெறலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: இந்த விவரங்களையெல்லாம் இலாகாவிலிருந்து தெரிந்துகொள்வதில் அவ்வளவு கஷ்டம் இருக்கும் என்று தோன்றவில்லை. அதிகாரிகளுக்கு எவ்வளவு செலவானது, சுப்ரீம்

கோர்ட் வழக்கறிஞர்களுக்கு எவ்வளவு பணம் செலவானது என்று சொன்னால் இந்த மன்றத்திலே அது உதவிகரமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இளைஞர் அணியைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இளைஞர் அணியிலே இருக்கக்கூடியவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கவேண்டுமென்பது பற்றி பாலிசி அடிப்படையிலே அந்த விஷயத்தை நான் கிளப்ப விரும்புகிறேன். 3,000 பேர்கள் இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் கூறியிருக்கிறது.

பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே வேலைகொடுக்கும்போது அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதையும் கூறவேண்டும். ஓய்வூதியம் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

ஓய்வு பெற்றவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்கள் ஓய்வு பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அவர்களுடைய பென்ஷனை நிர்ணயித்தாகவேண்டும். அவர்களுக்கு முழுமையாகப் பென்ஷன் கொடுக்கமுடியாவிட்டாலும் கூட இண்டரிம் பென்ஷனாவது கொடுக்கவேண்டும்.

திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து மாற்றப்பட்டு வந்தவர்கள் இன்னும் பழைய காலத்திலே உள்ள பென்ஷனைத்தான் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். பல ஆசிரியர்கள் திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கே உள்ள விதிகளின்படி பென்ஷன் கொடுக்கப்படவில்லை. பள்ளிக்கூடங்களிலே வேலைபார்த்த தலைமையாசிரியர்களாக இருந்தவர்களுக்கு பி.எஸ்.எஸ். ஸ்கீம் பழைய திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து வந்த விதிகள் இருக்கின்றபடியால் அவர்களுக்கு அவர்களுடைய வயது 58, 60 என்று ஆனாலும்கூட அவர்களுக்கு பென்ஷன் 50 ரூபாய்க்கும் குறைந்துதான் வருகிறது. அது போதுமா ? அதை வைத்து அவர்கள் வாழ்க்கையை நடத்தமுடியுமா ? தள்ளாத வயதிலே இம்மாதிரி அவல நிலைமையை அவர்களுக்கு உண்டாக்குவது சரியல்ல. அவர்களைக் கவனிக்கவேண்டும்.

தேவஸ்வம் போர்டிலே அஸிஸ்டெண்ட் கமிஷனர்களாக இருக்கின்றவர்களுடைய வசதிகள் இன்னும் சீர்திருத்தப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. அவர்களும் திருவிதாங்கூர்—கொச்சியிலே ரெவின்யூ இலாகாவிலே வேலை செய்தவர்கள்தான் என்ற காரணத்தினாலே அவர்களுடைய பிரச்னையையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காம்பன்சேஷன்பற்றி திரு. ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக்கூறினார்கள். ரயில்வேக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் இன்னும் அவர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்கப்படவில்லை. மத்திய அரசாங்கம் பணம் கொடுத்திருந்தாலும் நம்முடைய அதிகாரிகள் வேண்டுமென்றே தாமதம் செய்கிறார்கள். அங்கே இருக்கின்ற பனைமரங்கள், மற்ற மரங்களையெல்லாம் அப்புறப்படுத்திவிடுகிறார்கள் ............



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி நில ஆர்ஜிதம் பற்றி இருப்பதால் நான் சில விவரங்களைச் சொல்லிவிடுவது உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதற்காக ஸ்பெஷல் ஸ்டாப் போடப்பட்டிருக்கிறது. 953 ஏக்கர் வரையில் நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதிலே 550 ஏக்கர்களுக்கு அவர்கள் சம்மதம் கொடுத்துவிட்டார்கள். லேண்ட் அக்விஸஷன் ஆக்ட் இருக்கிறது. அதன்கீழே நிலங்கள் ஆர்ஜிதப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. 824·83 ஏக்கர் 65 பேர்களுக்குச் சொந்தமானது—4 (1) நோடிபிகேஷனில் இருக்கிறது. 436·48 ஏக்கர்கள் 34 பேருக்குச் சொந்தமானது—செக்ஷன் 5—ன்கீழ் இருக்கிறது. 15 பேர்களுக்குச் சொந்தமான 211·62 ஏக்கர் நிலம் செக்ஷன் 6—ன்கீழ் இருக்கிறது. 29 பேருக்குச் சொந்தமான 412·35 ஏக்கர் நிலம் பற்றி விலை மதிப்பு பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. விதிமுறைகளைப் பின்பற்றித்தான் கொடுக்கப்பட வேண்டும். சில நாட்களுக்கு முன்பு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இதிலே "கன்செண்ட் ஃபார்ம்" வாங்குவதிலே பல முறைகேடுகள் இருக்கின்றன. இரயில்வே ஊழியர்கள் மிரட்டுகிறார்கள். ஏழைகளாக இருப்பவர்களை, 25 செண்ட், 15 செண்ட், 10 செண்ட் வைத்திருப்பவர்களை மிரட்டி ஃபாரத்தில் கையெழுத்துப் போடவில்லை என்றால் பணம் கிடைக்காது என்று மிரட்டுவதால்தான் இந்தப் புகார்கள் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் "கன்செண்ட்" கொடுத்த தேதியிலிருந்து வட்டி கொடுக்க வேண்டும். 4 (1) நோட்டிபிகேஷன் என்று சட்டபூர்வமாக நடக்கிறது என்று சொன்னாலும், நடைமுறையில் பார்த்தால் சரியாக நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : "கன்செண்ட்" வாங்குவதில் "ஸ்டேட் அஃபிஷியல்ஸ்" தான் வாங்க வேண்டுமே தவிர, இரயில்வே அதிகாரிகள் கன்செண்ட் வாங்குவதற்கு உரிமை இல்லை. அப்படி எங்கேயாவது நடந்திருந்தால் அதைக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

பொதுப்பணித்துறை அதிகாரி மூலம், நம் மாநில அதிகாரிகள் செய்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட புகார் வரவில்லை.

பணம் சீக்கிரமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். பணத்தைச் சீக்கிரமாகக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று கேட்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள், துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தென்னந் தோப்புகளை இழந்தவர்கள் இருக்கிறார்கள், வீடுகளை இழந்தவர்கள் இருக்கிறார்கள், நஞ்சை நிலங்களை இழந்தவர்கள் இருக்கிறார்கள். இரண்டு வருஷ காலமாகப் பணம் கிடைக்காதவர்கள் இருக்கிறார்கள். இதை அந்த இலாகாவின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே அதிகாரிகளும் கூடப் போகிறார்கள் ரெவின்யூ அதிகாரிகளோடு. ஆகவேதான் இந்தப் புகார்களை நான் கூறுகிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நெய்யூர் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் சுமார் 40 ஏக்கர் நிலத்தை எடுப்பதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஆனால் இதுவரையில் பணம் கொடுக்கவில்லை. நிலத்தில் மண்ணைப் போட்டுள்ளார்கள். வீடுகளை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள், தென்னை மரங்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் பணம் கொடுக்கவில்லை. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகிகளைப் பொறுத்தவரையில் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மானியம், அவர்களுக்கு உதவி செய்யப் போகிறோம் என்று பல முறையும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறோம். ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கொடுப்பதற்கு மனமிருந்தால் கொடுத்துவிடுங்கள் நல்ல மனதோடு. இல்லையென்றால் இல்லை என்று மறுத்துவிட்டால் எங்களைப் போன்றவர்கள் எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்ல மாட்டார்கள். இந்தப் பிரச்னையை இவ்வளவு காலமாக இழுத்தடிக்கத் தேவையில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, விடுதலை தியாகிகளுக்குக் கொடுக்கும் ஊதியத்தைப் பொறுத்தவரையில் ஒரு சில காரியங்களைக் கூறுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். இந்தப் பட்டயம் கிடைத்தவர்கள் அத்தனைபேருக்கும் உதவ வேண்டும். தாமிரப் பத்திரம் கிடைத்தவர்கள், 6 மாதம் சிறைச்சாலைக்குச் சென்றவர்கள், 3 மாதம் சிறைச்சாலைக்குச் சென்றவர்கள் என்ற பாகுபாட்டையெல்லாம் சற்றுத் தளர்த்த வேண்டும்.

மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பல தியாகிகள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சிறைச்சாலைகளில் இருந்ததற்காக போதிய சான்றுகள் கிடைப்பதில் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர்களோடு ஜெயிலில் இருந்தவர்களின் சர்டிபிகேட் வேண்டுமென்ற விதியும் இருக்கிறது. அந்த மாதிரி சான்றிதழ் கிடைப்பதில் சிலருக்குக் கஷ்டம் இருக்கிறது. அதைப்பற்றி என்ன செய்ய முடியும் என்று சற்றுப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீ விபத்து ஏற்பட்ட குடியாத்தம் பகுதியில் இன்னும் நிலைமைகள் நல்லமுறையில் ஏற்படவில்லை. அவர்களுக்கு இந்தக் கடன்களை மனமுவந்து அரசாங்கத்தில் கொடுப்பதாகத் திட்டமிட்டாலும், பட்டா இல்லாதவர்கள், சொத்து இல்லாதவர்கள், இந்தத் தறிகளையெல்லாம்





இழந்தவர்கள் இப்படிப்பட்டவர்களுக்குப் பணம் கிடைப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆதலால் அவர்களுக்கு என்ன செய்ய முடியுமென்று அதிகாரிகள் மூலமாகப் பரிசீலித்து அவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடைசியாக, இந்த மானியத்திலே நாம் பல காரியங்களைப்பற்றியெல்லாம் திட்டமிட்டிருக்கிறோம். நிலச் சீர்திருத்தத்திலே எவ்வளவு ஏக்கரா நிலம் நமக்குக் கிடைத்திருக்கிறது, அதையெல்லாம் காம்பன்சேஷன் கொடுத்துவிட்டு மறுபடியும் அவர்களுக்கு ஒப்படைத்திருக்கிறார்களா என்ற விவரத்தைக் கூற வேண்டும். அதேபோல் டிரஸ்ட் சொத்துகளுக்கு 20 ஸ்டாண்டர்ட் ஏக்கரா நிலம் வைத்துக்கொள்ள முடியும், எஞ்சிய நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து இருந்தால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறைகளெல்லாம் இப்பொழுது இருக்கிறது. அதற்கு ஏதாவது விதிவிலக்கு அளிக்கப் போகிறார்களா என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் விளக்கமாகத் தர வேண்டும்.

ஏனென்றால், மடங்கள், மடத்தின் நிலங்கள், அதேபோல் வேறு தர்ம ஸ்தாபன நிலங்களை ஆயிரக்கணக்கான நிலங்களை அவர்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குத்தகைதாரர்களையெல்லாம் அவர்கள் அடிக்கடி கஷ்டப்படுத்திக்கொண்டு அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியான காரியங்களிலே உடனடியாகக் கவனம் செலுத்தி, வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, மன்றத்தின் முன்னால் விவாதிக்கப்பட்டுள்ள இந்த மானியத்தின் கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிக உன்னிப்பாகக் கவனித்து அரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவாதத்தைத் தொடங்கி வைத்த நண்பர் செழியன் அவர்கள், தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்ற அலுவலாளர்களின் வசதிகள், அவர்களுடைய இருப்பிடங்கள், அவர்களுக்குத் தரப்பட்டுள்ள கருவிகள் இவைகளெல்லாம் நல்லமுறையிலே அமைக்கப்பட வேண்டுமென்பதையும், காற்றோட்டமான இடங்களில் அவர்கள் இருந்து அலுவல் புரிவதற்கான வாய்ப்புகளை அரசு உருவாக்கித் தர வேண்டுமென்பதையும் எடுத்துக் காட்டினார்கள். நான் இந்த முறையீட்டை வைத்த நண்பர் செழியன் அவர்களுக்குத் தலைமைச் செயலக அலுவலாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் தலைமைச் செயலகம் இந்த இடத்திலேயிருந்து மாற்றப்பட்டு வேறொரு இடத்திலே வசதியாக தலைமைச் செயலகம் கட்டப்பட வேண்டுமென்கின்ற ஒரு கருத்து அரசின்பால் நிலவி, அந்தக் கருத்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 1

இங்கொன்றும் அங்கொன்றுமாக வெளிவந்தபொழுது அப்படிப்பட்ட ஒரு பெரிய கட்டிடம் கட்டத் தேவையில்லை என்ற மாறுபட்ட கருத்துக்களெல்லாம் வெளிவந்தன. அந்த மாறுபட்ட கருத்துக்களுக்கு நாம் மதிப்பு அளித்தோமா இல்லையா என்பதைவிட நம்முடைய நிதி ஆதாரங்கள் எந்த அளவிற்கு அதிக உதவி செய்யும் என்பதை எண்ணிப் பார்த்து, உடனடியாக பெரிய அளவிலே வேறொரு இடத்திலே, 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய கட்டிடத்தை தலைமைச் செயலகத்திற்காகக் கட்டுவது என்பது இயலாத காரியம் என்கின்ற முடிவிற்குத் தற்காலிகமாக வந்து, இப்பொழுது இருக்கின்ற நம்முடைய தலைமைச் செயலகத்தையே கொஞ்சம் விரிவுபடுத்திக் கட்டலாம் என்பதற்காக 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிற்கு, அதற்காக டெண்டர்கள் விடப்பட்டு, முடிந்து, பொதுப்பணித் துறையின் மூலமாக அந்த வேலைகள் ஏப்ரல் திங்களில் தொடங்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பிறகு தலைமைச் செயலக அலுவலாளர்களுக்கான வாய்ப்பு வசதிகள் அவர்கள் பணிபுரியும் அளவில் நிச்சயமாகப் பெருகும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பேசிய உறுப்பினர்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், முஸ்லிம் லீக் கட்சியின் உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்களும், செழியன் அவர்களும் ஓய்வூதியம் பெறுகின்ற அரசு அலுவலாளர்களுக்கு மேலும் பல சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்குத் தரப்படுகின்ற அகவிலைப்படியை இன்னும் உயர்த்தித் தர வேண்டுமென்கின்ற கருத்தை ஹாண்டே அவர்கள் மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்தில் வலியுறுத்தினார்கள்.

பொதுவாக, ஓய்வூதியம் பெறுகின்ற அரசு அலுவலாளர்களுக்கு இந்த ஆட்சி அமைந்ததற்குப் பிறகுதான் அதிகச் சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை இந்த மன்றத்திலே வீற்றிருக்கின்ற உறுப்பினர்கள் யாரும் மறுத்திட மாட்டார்கள் என்றே நான் திண்ணமாக நம்புகின்றேன். அகவிலைப்படி ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தருவது என்ற முறையை கடந்த 3, 4 ஆண்டுக் காலத்திற்கு முன்புதான் இந்த அரசு மேற்கொண்டு ஓய்வு பெறும் பென்ஷன்தாரர்களுக்கு அகவிலைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு வழங்கியுள்ள சலுகைகளை நாம் எண்ணிப் பார்த்தால், அரசுப் பணியாளர்களுடைய பணியின் கடைசி 12 திங்களில் வாங்கிய சம்பளத்தின் அடிப்படையில் இதுவரை கணக்கிடப்பட்டு வந்தது. இப்பொழுது 10 திங்களில் வாங்கிய சராசரி சம்பளத்தின் அடிப்படையில் அந்த ஓய்வூதியம் கணக்கிடப்படுவதால் ஓரளவு ஓய்வூதியம் கூடுகிறது என்பது மட்டுமல்ல, கணக்கிட்டு வரும் முறைகளும் எளிதாக்கப்பட்டிருக்கின்றன.

பணி இடையீடுகள் (பிரேக் இன் சர்வீஸ்) கண்டோன் செய்யப்படுகிறது. இதனால் இடையீட்டுக்கு முந்திய பணியும் ஓய்வூதியத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படும் முறையில் சலுகை அளிக்கிறது.



1974 ஏப்ரல் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

[பிற்பகல் 1-00]

அரசு ஊழியர் ஒருவர் வயதுப்படி ஒரு திங்களில் எந்த நாளில் ஓய்வு பெற்றாலும் அவர் அத்திங்களின் கடைசி நாளில் ஓய்வு பெற்றதாகவே கருதப்படுவர் என்ற புதிய ஏற்பாடும் 1—4—1974 முதல் வந்திருக்கிறது. ஒருவர் ஜனவரி 2-ம் தேதி ஓய்வு பெறுகிறார் என்றால் அவர் ஓய்வு பெற்றவராக அறிவித்து விடாமல் ஜனவரி திங்கள் முழுமையும் பணியாற்றச் சொல்லி ஜனவரி திங்களில் இரண்டு நாளைக்குரிய சம்பளத்தைத் தருவதற்குப் பதிலாக அத்திங்களுக்குரிய சம்பளம் முழுவதும் தருகிற அந்தச் சலுகையையும் இந்த அரசு அவர்களுக்கு வழங்கி இருக்கிறது. இதனால் அவருடைய சராசரிச் சம்பளம், தகுதிப் பணிக் காலம் ஆகியவற்றைக் கணக்கிடுவது எளிதாகிறது.

நிலையான பதவி வகிக்காதவரும் (நான்-பெர்மனெண்ட் கவர்ன்மெண்ட் சர்வண்ட்ஸ்) 1—10—1969 முதல் ஓய்வூதியம் பெற உரிமையுள்ளவர்கள் ஆவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வூதியம் 1—3—1970-ல் குறைந்தபட்ச ஊதியம் 30 ரூபாயாக இருந்ததை 1—4—1972-ல் 40 ரூபாயாக உயர்த்தி, 1—4—1973-ல் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டு, 1—10—1973-ல் அகவிலைப்படி உள்ளிட்டு 55 ரூபாயாக உயர்த்தினோம். 1—4—1972-ல் அகவிலைப்படி 5 ரூபாயாக இருந்தது; 1—4—1973-ல் 10 ரூபாயாகவும், 1—10—1973-ல் 15 ரூபாயாகவும்-, 1—4—1974-ல் 20 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஓய்வூதியத் தொகையை அவர்களுக்கு மணியார்டர் மூலம்—பண அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு முதலில் சென்னை மாநகரத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் அமலாக்கப்பட்டு வந்த இந்தத் திட்டம் 1974-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் செங்கற்பட்டு, மதுரை, கோவை, தென்னாற்காடு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படுவது பற்றி முயற்சிகள் எடுக்கப்படும்.

ஓய்வூதியத்திற்கு இருந்த மேல் வரம்பும் நீக்கப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் வழங்கும் திட்டம் அரசிதழ் பதிவில்லாத ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இறப்பு அல்லது ஓய்வுக்கால கிராசுடி குடும்ப ஓய்வூதியத்திற்காகப் பிடித்துக்கொள்ளப்படும் தொகை இரண்டு மாத ஊதியத்திலிருந்து ஒரு மாத ஊதியமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவச் சலுகைகள் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

பதவியிலிருந்து ஓய்வு பெறுகிற அரசு அலுவலர்கள் தாங்கள் கடைசியாகப் பணிபுரிந்த இடத்திலிருந்து தங்கள் சொந்த ஊருக்குச் செல்ல பயணப்படி அளிக்கும் வசதியை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வூதியக் கோப்புகள்—அந்த ஃபைல்கள்—விரைந்து முடிவு எடுக்கப்படுவது இல்லையென்ற குறைபாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதற்காகத்தான் ஒரு இடைக்கால ஏற்பாடாக ஓய்வு பெறும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் (அரசிதழ் பதிவு பெற்றவர்களுக்கும்) அவர்கள் ஓய்வு பெற்றவுடனேயே தற்காலிக ஓய் வூதியம், இறப்புக் ஓய்வுக்கால பணிக்கொடை கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் தேதி முதல் ஓய்வு பெற்றவர்களுக்கு இரண்டு திங்கள் ஆகியும் பணிக்கொடை கொடுக்கப் படாமல் இருந்தால் அவர்களுக்குச் சேரவேண்டிய தொகைக்கு 8 சதவீதம் வட்டியும் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்ற மாற்றத்தையும் நாம் ஏற்படுத்தி இருக்கிறோம்.

தாராள ஓய்வூதிய விதிகளின் நலன்களைப் பொறுத்தவரை அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும் அதே நன்மைகளை மானியப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் பெறுகிறார்கள். இவர்களுக்கும் ஓய்வூதியத் தைப் பெறுவதில் இருக்கும் சங்கடங்களைக் குறைக்க அரசு எடுத்திருக்கும் முக்கியமான முயற்சி கெசட் பதிவு இல்லாத அரசு அலுவலாளர்கள் ஓய்வு பெற்றவுடனே அந்தந்த அலுவலகத்தின் தலைமை அதிகாரியே புரொவிஷனல் ஓய்வூதியத்தையும், பணிக்கொடையையும் (கிராசுவிடி) கொடுக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். கெசட் பதிவு பெற்ற அலுவலாளர்களாக இருந்தால் முழு ஓய்வூதியத்தில் 80 சதவிகிதமும் கிராசுவிடியும் துறைத் தலைவர் கொடுக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

மேலும் தற்போது நடைமுறைச் சிக்கல்களைக் குறைப்பதற்காக மாநிலக் கணக்காய்வுத் தலைவரோடு (ஏ.ஜி.) கலந்தாலோசித்து ஏற்ற முடிவுகளை எடுக்க அரசு முயற்சித்து வருகிறது. ஓய்வூதியம் கிடைக்க வேண்டிய நாளில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு 8 சதவிகிதம் வட்டி வழங்க ஆணையிட்டிருக்கிறோம் என்றாலும் கூட இடையில் மாவட்ட அளவில் ஏற்பட்டு விடுகிற தாமதங்களை எப்படித் தவிர்ப்பது என்ற பிரச்சினைகளை எல்லாம் ஆராய சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, அவர் ஏ.ஜி-யுடன் தொடர்பு கொண்டு தாமதங்களைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளை எப்படிச் செய்யலாம் என்றும் யோசிக்கப் பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். சொர்விஸ் ரெக்கார்டுகள் உடனடியாகக் கிடைக்காமல் போகிற காரணத்தால் அதிலே அதிகாரிகள் குழப்பிக்கொண்டு அந்த





ரெக்கார்டு வரவில்லை, இந்த ரெக்கார்டு வரவில்லை என்ற காரணம் காட்டி ஓய்வூதியம் பெறத் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன்—சொர்வீஸ் ரெக்கார்டுகள் உடனடியாகக் கிடைக்காமல் தாமதம் ஏற்பட்டாலும் ஆங்காங்கு இருக்கும் அதிகாரிகள் அதைப் பொருட்படுத்தாமல் கடைசியாக வேலை செய்த ஆண்டு சொர்வீஸ் ரெக்கார்டு விவரங்கள் இருந்தால் அதை மாத்திரம் வைத்து 80 சதவிகித பென்ஷனை உடனடியாகக் கொடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன்.

இந்த மானியத்தில் மிக முக்கியமாக விவாதிக்கப்பட்ட இன்னொன்று புயல், வெள்ளம். இவைகளின் காரணமாக நம்முடைய மாநிலத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு எந்தெந்த வகையில் எல்லாம் நிவாரண உதவிகளை அளித்திருக்கிறது என்பதை நண்பர் காமாட்சி அவர்களும், நண்பர் வேழவேந்தன் அவர்களும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 1972-73-ம் நிதியாண்டில் 684 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1973-74-ம் ஆண்டில் 579 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

புயல், வெள்ள நிவாரணத்திற்காக மாத்திரம் நாம் 1974-ம் ஆண்டில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணமாகவும், வீடு கட்ட உதவித் தொகையாகவும், உணவு வழங்க ஆகிய செலவும் 152 லட்சம் ரூபாய் ஆகும்.

கடந்த வெள்ளத்தின்போது புயலின் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும் தென்னாற்காடு மாவட்டத்திலும் குறைந்த அளவுக்கு தஞ்சை மாவட்டத்திலும் மொத்த 13,000 ஏக்கர் நிலம் மண் மேடிட்டு விட்டது. நிலம் இருந்த இடமே தெரியவில்லை. அந்த அளவுக்கு ஆறுகள் எல்லாம் திசை மாறி பாய்ந்து நிலங்கள் மண்ணுக் குள்ளே போய்விட்டன. அந்த மண்ணை வாரி எடுத்து மீண்டும் தாங்கள் பயிர் செய்த நிலங்களைக் காண்பதற்கு விவசாயிகள் அழுது புலம்பிய போது—ஏற்கெனவே அதை விவசாயிகள் தாங்களே செய்து கொள்வதற் காக அரசு கருவிகளை அளிக்கும், அதற்குரிய தொகையைப் பெற்றுக் கொள்ளும் என்ற நிலை போய், இன்றைக்கு அந்த 13,000 ஏக்கர் நிலத்திலும் மண்ணை வாரி மீண்டும் நிலத்தைக் கண்டுபிடித்து பயிர் செய்யப் பக்குவமாகக் கொடுக்க ஏக்கருக்கு 85 ரூபாய் செலவை இந்த அரசு தானாகவே ஏற்றுக் கொண்டு விவசாயிகளுக்கு எந்தச் செலவும் வைக்காமல் முதல் முதலாக, இந்த மாநிலத்திலேயே, இந்தியாவிலேயே, முதல் தடவையாக விவசாயிகளுக்கு அந்தப் பேருதவியை இந்த அரசு செய்திருக்கிறது. (ஆரவாரம்).

அதை போலவே சிறிய நீர்ப்பாசன வசதிகளைச் சீர்படுத்தவும், பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைகளைச் சீரமைக்கவும் 532 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 1

நடுத்தர நீர்நிலைகளைச் சீர்படுத்த 265 லட்சம் ரூபாயும், பாதிக்கப்பட்ட கட்டடங்களைச் சீரமைக்க 9 லட்சம் ரூபாயும், முனிசிபல் சாலைகளைச் சீர்படுத்த 38 லட்சம் ரூபாயும், சென்னை மாநகராட்சி சாலைகளைச் சீரமைக்க 37 லட்சம் ரூபாயும், விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட தக்காவிக் கடன்கள் வகையில் 145 லட்சம் ரூபாயும், 1974 மார்ச்சு மாதத்தில் எதிர்பார்க்கப்படும் செலவு 117 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 13 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

வீராசாமி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள், இதற்காக 14 கோடி ரூபாயை மத்திய அரசிடத்தில் கேட்டபோது அவர்கள் முதலில் தருவதாக வாக்களித்தார்கள். நான் இந்த மன்றத்தில் கூடச் சொன்னதாக நினைவு. அப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். 14 கோடி ரூபாய் தருவதாக முதலிலே ஒப்புக்கொண்ட மத்திய அரசு அந்தத் தொகையைத் தரவில்லை. 4 கோடி ரூபாய் அளவுக்குத்தான் மத்திய அரசு நமக்கு இந்த வெள்ள நிவாரண நிதியை வழங்கிற்று என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதைச் சொல்லும்போது ஏற்கெனவே ஒருமுறை 17 கோடி ரூபாயை வெள்ள நிவாரணத்திற்காக மத்திய அரசு தரவில்லையா என்று சில பேருடைய கண்கள் என்னைப் பார்த்துக் கேட்கின்றன. அது 1971-க்கு முன்பு.

1971-க்குப் பிறகு ஏற்பட்ட இந்த கொடிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக நாம் கணக்கிட்டுத் தந்த 14 கோடி ரூபாயைத் தருவதாக ஒத்துக்கொண்டு 4 கோடி ரூபாய்தான் அளித்திருப்பது என்பது வேதனைக்குரிய செய்தி என்று தெரிவித்துக் கொள்வேன்.

வெள்ள விபத்துக்களைப் போல் தீ விபத்துக்கள் பற்றியும் இங்கே பேசப்பட்டது. குறிப்பாக குடியாத்தம் தீ விபத்து பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது.

குடியாத்தம் தீ விபத்தில் பிரதமர் அவர்களும், தமிழக அரசும் மற்றும் பல்வேறு கட்சிகளும் எந்தளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டு பொதுமக்கள் தங்களுடைய வள்ளல் தன்மையைக் காட்டியதன் வாயிலாக அந்த மக்களுக்கு போதிய நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது என்றாலும் மேலும் பல நிவாரணங்களை நிரந்தரமாக கையாள வேண்டும் என்ற கோரிக்கையை இங்கு பேசியவர்களும் குறிப்பிட்டார்கள்.

அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நண்பர் துரைசாமி அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இன்று நம் முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் என்னிடம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அவையில் இருக்கிற இந்திரா காங்கிரஸ், ஸ்தாபன



1974 ஏப்ரல் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, மற்ற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதேபோன்ற முறையீடுகளைத் தந்து உடனடியாக நல்ல நிரந்தரமான நிவாரணத்தை அங்கு அளிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதையும் சில பேர்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அரசியல் கண்ணோட்டத்தோடு நடத்துவதற்கு முனைந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இரண்டு மதங்களுக்கிடையே சண்டைகளை வளர்த்துவிடலாம் என்ற ஒரு முயற்சி. அப்போது நான் சட்டசபையில் பேசும்போது சொன்னேன். ஒருசிலயிடங்களில் பணம் கிடைக்கிறது என்பதற்காக மிகச் சாதாரண சிறிய குடிசைகளை தாங்களே கொளுத்திக்கொள்கிற சூழ்நிலையும் இருக்கிறது, அவர்களை நாம் எல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். குடியாத்தத்தைத்தான் அப்படிச் சொன்னார்கள் குடியாத்தத்தில் உள்ளவர்கள்தான் அதைக் கொளுத்திக் கொண்டார்கள் என்று நான் சொன்னதாக பெரிய துண்டு அறிக்கைகள் எல்லாம் கூட வெளியிட்டு வீட்டுக்கு வீடு அவர்கள் வழங்கி வருவதாக—நம் திரு. லத்தீப், திரு. ஜப்பார், திரு. வகாப் போன்றோர் அங்கு சென்று பார்த்தபோது அங்கு வீட்டில் உள்ளவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் இப்படிச் சொன்னார்களாமே, எங்களது குடிசைகளை நாங்களே கொளுத்திக்கொண்டோம் என்று சொன்னார்களாமே என்று கேட்டு, இவர்கள் நான் சட்டசபையில் சொன்னதை விளக்கிய பிறகு அவர்கள் ஆறுதல் பெற்றிருக்கிறார்கள்.

இதுபோல் மனிதாபிமானத்தோடு அணுக வேண்டிய காரியங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சிகள், அரசியல் வேடிக்கை விளையாட்டுக்கள் இவற்றிற்கு யாரும் இடம் தந்துவிடக்கூடாது.

அவர்களுக்கு மிக முக்கியமான தேவையாக இருப்பது தறிகள். அந்தத் தறிகளை உடனடியாகச் செய்து கொடுப்பதற்கு சைதாப்பேட்டைப் பகுதியிலும் காஞ்சிபுரத்திலும் உரிய முயற்சிகள் எல்லாம் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன.

அவைகளன்னியில் இன்னும் எந்தெந்த வகைகளில் அவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஆராய மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் ஒரு குழு, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிற ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முடிவுகளை அறிந்து அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்வேன்.

அதேபோல் விழுப்புரம் தீ விபத்து பற்றி ஜப்பார் அவர்கள் பேசினார்கள். அங்கு பாதிக்கப்பட்டது 18 குடிசைகள். நிவாரணம் அளிக்கும்படி தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அதுபற்றிய அறிக்கை தரும்படி கேட்டிருக்கிறோம். அந்த அக்கை விரைவில் வந்ததும் ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

வெள்ளம், தீ, இவைகள் அன்னியில் ஏற்கெனவே இந்த மன்றத்தில் 1969-ம் ஆண்டு நான் அறிவித்ததையொட்டி கடலில் மீன் பிடிக்கச் செல்கிற மீனவர்கள் காணாமல் போய்விடுவார்களானால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் நிதி வழங்கப்படும் என்று அறிவித்ததையொட்டி 1969 முதல் அந்த மானியம் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அப்படி உதவி பெற்ற குடும்பங்களுடைய எண்ணிக்கை 139.

அதை அறிவித்தபோது ஆயிரம் ரூபாய்தானே, நாலைந்து பேர்கள் சாவார்களா, இது என்ன பெரிய செலவு அரசுக்கு என்று கூடச் சொல்லப்பட்டது. ஆனால் 1.39 லட்சம் ரூபாய் 139 குடும்பங்களுக்கு 69-க்குப் பிறகு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் பனைமரத்தில் ஏறுகிறவர்கள் கீழே விழுந்து இறந்துவிட்டால் அல்லது ஊனமுற்றால் அல்லது சிறு காயமுற்றால் என்று பிரித்து காதி இலாகா வழியாக அவர்களுக்கு பண உதவி செய்யப்படும் என்று இந்த மன்றத்தில் நான் அறிவித்திருக்கிறேன்.

இறந்து போனால் அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய், ஊனமுற்றால் ரூ. 500, சிறு விபத்து ஏற்பட்டால் ரூ. 100 என்றும் நான் அறிவித்தேன். 31—3—74-ம் தேதி வரையில் அப்படி இறந்தவர்கள் 102 பேர்கள். பனை மரம் ஏறி கீழே விழுந்து இறந்தவர்கள் 102 பேர்கள். அவர்களுக்கு ரூ. 1,02,000 வழங்கப்பட்டிருக்கிறது.

பெரும் விபத்துக்கள் காரணமாக 110 பேர்களுக்கு ரூ. 55,000-ம், சிறிய விபத்துக்களில் 23 பேர்கள், அவர்களுக்கு ரூ. 2,300 என்று ஆகமொத்தம் ரூ. 1,59,300 பனைமரத்தில் ஏறி கீழே விழுந்து இறந்தவர்கள், ஊனப்பட்டவர்களுடைய குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அடிக்கடி முதல் அமைச்சர் அவர்கள் பனைமரம், பனைமரம் என்று சொல்வதைப் பார்த்தால் வெறும் பனைமரம் ஏறி விழுபவர்களுக்கு மட்டும்தான் அந்த நஷ்டயீடா ? தென்னை மரத்தில் ஏறி விழுந்தாலும் அந்த நஷ்டயீடு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அதை மரம் ஏறி என்று சொன்னால் மரத்தில் ஏறி விழுந்துவிட்டால், எல்லா மரங்களிலும் ஏறி விழுபவர்களும் கேட்பார்கள், ஆகவே பனைமரம் என்பதற்கு யாராவது விளக்கம் கேட்டால் தென்னை மரமும் சேருமா என்று கேட்டால் சொல்லலாம் என்றிருந்தேன். தென்னையும் சேரும்.

விடுதலைப் போராட்டவீரர்கள் பற்றி இங்கு நம்முடைய பெரியவர் மணலி அவர்களும், நண்பர் குருசாமி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பலமுறை இந்த மன்றத்தில் இந்த அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுடைய குடும்ப நலத்தில் எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.



1—10—1966-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இந்தபோது விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பெறும் திட்டத்தை அறிவித்தது. அவர்கள் 1966-ல் ஐந்து பேர்களுக்குத்தான் அவர்களால் தர முடிந்தது. ஏனென்றால், 1—10—66-ல் இந்தத் திட்டத்தைத் தொடங்கிய காரணத்தால் ஆட்சிப்பொறுப்பில் காங்கிரஸ் இருந்த சில மாதங்களில் ஐந்து பேர்களுக்கு அவர்கள் அளித்தார்கள்.

அதற்குப் பிறகு 1967-ல் அண்ணா அவர்கள் முதல் அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட பின் 1,254 பேர்கள்.

1968-ல் 1,817 பேர்கள்.

1969-ல் 1,742 பேர்கள்.

1970-ல் 1,914 பேர்கள்.

1971-ல் 453 பேர்கள்.

1972-ல் 290 பேர்கள்.

1973-ல் 313 பேர்கள்.

1974 பிப்ரவரி முடிய 27 பேர்கள். ஆக 7,815 பேர்களுக்கு இந்த மானியத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது.

1966-67 நிதி ஆண்டில் ரூ. 3,057 தான் அளிக்கப்பட்டது. ஆனால் 1974 வரையில் அந்தத் தியாகிகளுக்காக அளிக்கப்பட்ட மானியத்தினுடைய முழுத்தொகை ரூ. 2,72,23,022 என்பதிலிருந்து அந்த விடுதலை வீரர்களிடத்தில் இந்த அரசு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் அன்பும் பரிவும் கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் இன்னும் சில பேர்கள் இந்தத் தொகையைப் பெற இயலவில்லை என்று குறிப்பிடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு இந்த மானியங்களுக்கான கடைசித் தேதியை பலமுறை ஒத்தி வைத்து, ஒத்திவைத்து அவர்களுக்கு சலுகைகள் வழங்கியிருக்கிறது. இப்போது பரிசீலனையில் உள்ளவை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் உள்ளவை 822 மனுக்கள், அரசிடம் உள்ள 1955 மனுக்கள்தான் இப்போது பரிசீலனையில் இருக்கின்றன. இதிலே சிலபேர்கள் சிறையில் இருந்ததற்கு ஆதாரங்கள் இல்லை. சில பேர்கள் சிறைசாலைகளிலிருந்து அவர்கள் தண்டனைக்காலம் முழுவதும் அனுபவிக்காமல் சென்றிருக்கிறார்கள்.

இப்படி பல்வேறு வகையான சங்கடங்கள் இதில் இருக்கிற காரணத்தால் இவர்களுக்கும் கூட உடனடியாக அவர்கள் வழங்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசாங்கம் மூன்று மாதத்திற்குக் குறையாமல் தடுப்புக் காவல் அல்லது காவலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று வரையறுத்திருந்தது.

ஆனால், அதில் மிகக் கண்டிப்பாக இந்த அரசு இல்லாமல் இரண்டு மாதங்களைக்கூட சிலநேரங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு மூன்று மாதம் போட்டிருந்தால் நிச்சயமாக அனுபவித்திருப்பார்கள், நீதிபதி இரண்டு மாதம்தான் போட்டார்கள், ஆகவே அவர்கள் இரண்டு மாதம் சென்று அனுபவித்தார்கள் என்ற அந்த வாதங்களை எல்லாம் கூட ஏற்றுக்கொண்டு பலருக்கு இந்த அரசு இந்த மானியங்களை வழங்கியிருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்வேன்.

1966 முதல் 1972 வரையில் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 50 மாதாந்திர மானியமாக வழங்கப்பட்டு, 25-வது ஆண்டு சுதந்திர தின வெள்ளி விழாவை முன்னிட்டு அதை ரூ. 75 ஆக நாம் மாற்றிக் கொடுத்திருக்கிறோம்.

அவர்களுக்கு மாத்திரமல்லாமல் இந்த மானியத் தொகை பெறுகிற தகுதியை பழைய அரசு வகுத்த வரைமுறைகளுக்குள் வராத வீர பாண்டிய கட்டபொம்மன் வழித் தோன்றல்களுக்கு 11—1—1971 முதல் மானியத்தொகை வழங்கி வருகிறோம் ஐந்து பேர்களுக்கு.

சென்னை என்ற பெயரை தமிழ் நாடு என்று மாற்றவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த சங்கரலிங்க நாடார் அவர்களின் மனைவி செந்தியம்மாள் அவர்களுக்கு 26—1—1970 முதல் மாதம் ரூ. 150 அளித்து வந்தோம். பிறகு அந்த அம்மையார் அவர்கள் காலமாகிவிட்டார் என்று தெரிந்த பிறகு அது நிறுத்தப் பட்டது.

அரிய கலையின் மூலமாக விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமூட்டிய விஸ்வநாத தாஸ் அவர்களின் மகன் எஸ். வி. காசிநாதன் மனைவி பிச்சையம்மாள், 2-வது மகள் வி. தங்கத்தாய், 3-வது மகன் எஸ். எஸ். முத்தையா தாஸ் ஆகியோருக்கு 5—2—1972 முதல் அந்த வீர மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. அவர்களின் மகள் ஆனந்த வல்லிக்கும், அவரது மகன் வ. உ. சி. ஆறுமுகம் அவர்களுக்கும் 20—10—1972 முதலும், 1—10—1973 முதலும் முறையே அவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர், பெரும் தியாகி, கோமதி சங்கர தீட்சிதர் அவர்களின் மகன் ஜி. மகாதேவன் அவர்களுக்கு 26—6—1971 முதல் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆகவே, இதிலே எந்த காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல், கட்சி மாச்சரியங்கள் அணுவளவும் தலையிடுவதற்கு வழி இல்லாமல், இந்த அரசு இந்த மக்களின் உரிமைக்காகப் போராடிய வீரர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும், அவர்களுடைய குடும்பங்கள் வறுமையில் வாடக் கூடாது என்ற அக்கறையோடு இருந்து தொடர்ந்து செய்து வருகிறது.



இதன் தொடர்பாக நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள்,, கன்னியாகுமரி பகுதியில் தாய் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று போராடிய வீரர்களுக்கு எப்போது மானியம் அளிக்கப்போகிறீர்கள், அளிப்பதாகச் சொன்னீர்கள், ஒன்று கொடுப்பதாகச் சொல்லுங்கள், அல்லது இல்லை என்று இப்போதே சொல்லுங்கள் என்று அத்தனை ஆவேசத்தோடு பேசினார்.

கேட்கவேண்டியது நியாயம் தான். அளிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள், நன்றி, விரைவில் அளியுங்கள் என்று கேட்டு இருந்தால், இந்த அரசு இவ்வளவு காரியம் செய்து இருக்கிறது என்பதை மனமுவந்து பாராட்டுகிறார் என்று கொள்ளலாம். எதிர்கட்சியில் இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக உண்டா, இல்லையா இப்போதே சொல்லிவிடுங்கள் என்று கூறுவது, அதையும் அவர் கொஞ்சம் ஆத்திரத்தோடு சொல்லிவிட்டார்.

அவர் அப்படிச் சொன்ன காரணத்தால் நானும் கோபப்பட்டு இல்லை என்று சொல்லி விட மாட்டேன். இந்த அரசு குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதற்காக போராடிய வீரர்களை, அவர்களுடைய குடும்பங்களை காப்பாற்றும் என்று அளித்த உறுதியையும், அதே போன்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இறந்த குடும்பங்களின் வாரிசுகளுக்கும், வீரர்களுக்கும் மானியம் வழங்கும் என்று அறிவித்தோம். எந்தக் காரணத்தாலும், நிச்சயமாக பின் வாங்காது கொள்கையில் தொடர்ந்து நிச்சயமாக அதைச் செய்யும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 1965-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாகி கொல்லப்பட்ட 53 பேரின் குடும்பங்களுக்கு இந்த அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 வீதம் சென்ற ஆண்டு என்று கருதுகிறேன்—கிட்டத்தட்ட 1 லட்ச ரூபாய்க்கு மேல் அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் தீக்குளித்து இறந்த அரங்கநாதன், வீரப்பன், முத்து, சண்முகம், சின்னசாமி, சிவலிங்கம், முத்து, மாணவர் தண்டபாணி, மாயூரம் சாரங்கபாணி ஆகிய 9 பேர்களின் குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 1—4—72 – லிருந்து வழங்க உத்தரவிடப்பட்டு, அது வழங்கப்பட்டு வருகிறது.

மற்ற இந்தி எதிர்ப்பில் சிறை சென்றவர்கள், குமரி மாவட்டத்தில் சிறை சென்றவர்கள் தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டவர்கள் நிச்சயமாக கவனிக்கப்படுவார்கள். விரைவில் அதற்கான முடிவுகள் எடுத்து இந்த அரசு அறிவிக்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திட்டக்குழு உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். திட்டக்குழு உறுப்பினர்கள் தாங்கள் செய்யவேண்டிய

வேலையை முடித்து 30—3—74 அன்று திரு. ராஜாராம் அவர்களின் தலைமையில் என்னைச் சந்தித்து திட்டக்குழுவின் அறிக்கையை—முழுமையான அறிக்கையை—என்னிடம் தந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுபற்றி அரசு பரிசீலித்தது, அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம், அவர்களது கவனத்திற்கெல்லாம் அந்த அறிக்கை பற்றிய சாராம்சம் கொண்டு வரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் ஹாண்டே அவர்கள் இரண்டு மூன்று குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். கவர்ன்மெண்ட் பிளீடர் ஏதோ ஒரு வழக்கில் அரசாங்கத்திற்கு விரோதமாக வாதாடி இருக்கிறார், ஆஜராகியிருக்கிறார் என்பதை எடுத்துச் சொன்னார்கள். அது ஒன்றும் இந்த அரசு போட்டிருக்கும் சட்டம் அல்ல; வகுத்து இருக்கும் விதி அல்ல. 1889–ம் ஆண்டிலேயே அது வகுக்கப்பட்டிருக்கிறது.

அரசு வக்கீல் குற்றயியல் வழக்குகளில் (கிரிமினல் கேஸ்களில்) அரசுக்கு எதிராக தனி நபர்களுக்கு வழக்காட மறுப்பு இல்லை. அதைப் பயன்படுத்திக்கொண்டு நான் இப்போது நம்முடைய கவர்ன்மெண்ட் பிளீடர் ஒரு சில வழக்குகளில் அரசுக்கு எதிராக தனி நபருக்கு வாதாடி இருக்கிறார். இது 1889, 1900–லே போடப்பட்டிருக்கிறது. ஆகவே வாதாடலாம் என்று நான் வாதாடுவதாக யாரும் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், நானே நம்முடைய அமைச்சர், சட்ட அமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு ஆலோசித்த நேரத்தில், சட்டம் இடம் தந்தாலும் மரபு இடம் தருவதாக எங்களுடைய மனம் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே, இது 1889-ல் போடப்பட்ட சட்டமாக இருந்தாலும், பிறகு 1949-லே அதை மாற்றவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டு, அந்த முயற்சி தொடக்கத்திலேயே கருகி விட்டது என்றாலும் கூட அதை எப்படியும் மாற்றி, அது போன்ற சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நிச்சயமாக இந்த விதிமுறைகள் திருத்தப்படுவதற்கு அரசு உத்தரவுகளைப் பிறப்பிக்கும் என்பதை மாத்திரம் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் பற்றி இரண்டு, மூன்று குற்றச்சாட்டுகளை இங்கே ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். இன்டர்வியூ மார்க்குகளையெல்லாம் ஒரு உறுப்பினர் யாருக்கும் கொடுக்காமல் தானே தன்னுடைய பையில் வைத்துக்கொண்டு போய்விட்டார் என்பது அவருடைய குற்றச்சாட்டு. அது பற்றி விசாரித்ததில், அது முற்றிலும் தவறான தகவல் என்றும், ஒவ்வொரு நாளும் மார்க் பட்டியல் (மார்க் லிஸ்ட்) அலுவலகத்தில் கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. டாக்டர் ஹண்டே அவர்களுக்கு கிடைத்தது சரியான தகவல் என்று கொள்ள முடியாது.



இன்னொன்றையும் சொன்னார்கள். அறநிலையத் தேர்வுக்கு, தேர்வுக்காக 30 மார்க்குகளும், இன்டர்வியூக்கு 400 மார்க்கும் என்று சொன்னார்கள். 400 மார்க் என்பது சரித்திரத்தில் இல்லாத செயல் என்று சொன்னார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். சரித்திரத்தில் இல்லாத செயல் என்று சொன்னார்கள். ஒரு வேளை 400 மார்க் வைத்து இருப்பது ஹாண்டே அவர்களுக்கு வேண்டுமானால் சரித்திரத்தில் இல்லாத செயலாக இருக்கும். ஆனால் 1964 அக்டோபர் 21-ம் தேதி சர்க்கார் பிறப்பித்த அந்த ஆணையிலேயே அன்றைக்கே இருக்கிறது. 400 மார்க்கு கூட அல்ல. அறநிலையத் துறைத் தேர்வுக்கு 450 மார்க் வேண்டுமென்று அன்றைக்கே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சொன்னது கூட 400 என்பது தவறாகும். 450 மார்க்கு வேண்டும். இது 1964-ம் ஆண்டிலிருந்து அமலில் இருந்து வரும் விதிமுறையாகும் என்று சொல்லிக் கொள்வேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். டம்மி முறையில் பரீட்சை நெம்பர் போடுவது கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். இது மாற்றப்பட்ட பிறகு சரியான முறையில் இல்லை என்று சொன்னார்கள். ஒரு வேளை குறைவாக வரும் மனுக்கள் அதிகமான காரணத்தால் அந்த முறை தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறேன். அந்த முறையை மீண்டும் புகுத்த இயலுமா என்பதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் செழியன் அவர்கள் டெல்லியிலே ஒரு அதிகாரி செய்த தவறு பற்றி குறிப்பிட்டார்கள். புதுடெல்லியில் ஒரு அதிகாரி இருந்தார். அவர் காங்கிரஸ் ஆட்சி காலத்திலே அந்த அலுவலுக்கு அமர்த்தப்பட்டவர். தமிழ்நாடு இல்லத்தில் 74,000 சொச்ச ரூபாய், அவர் அதிகாரியாக இருந்தபோது பணம் காணவில்லை என்ற செய்தி கிடைத்தது. 1972-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16-ம் நாளன்று அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டு, பிறகு காணமல் போன பணம் முழுவதும் அவர் திருப்பிக் கட்டிய பிறகு இப்போது அவர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பணத்தைத் திருப்பிக் கட்டிவிட்டதால் அவர் திருச்சியில் சுற்றுலா அலுவலராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். விசாரணை முடிந்து விடவில்லை. எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம் என்ற விஷயம் ஆராய்ச்சியில் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊட்டியில் இருக்கிற அதிகாரி பற்றிச் சொன்னார்கள். அதுவும் மூடிவிடப்பட்ட புத்தகம் அல்ல. அது பற்றியும் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்வேன்.

நண்பர் பாலசுந்தரம் அவர்கள் பேசும்போது இந்த மானியக் கோரிக்கையில் ஜமீன் ஒழிப்புத் தொகை கோரியிருப்பதைப் பார்த்து, ஏதோ இந்த அரசு ஜமீன்தார்களுக்குப் பணம் வழங்குகிறது என்று கருதிக் கொண்டு, இந்தக் காலத்திலே அவர்களுக்கு வழங்கவேண்டுமா என்று கேட்டார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஏப்ரல் 1

ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4-ம் நாள் வரையில் 4 சட்டங்கள் இயற்றப்பட்டு, ஜமீன் முறை ஒழிப்பு சட்டத்தின்படி அவர்களுக்குச் சேரவேண்டிய இழப்பீட்டுத் தொகை, அதை ஒவ்வொரு ஆண்டும் சிறுகச் சிறுக கொடுத்துக் கொண்டு வருகிறோம். அதிலே சில பேர் நீதிமன்றத்தில் கூட போராடிக் கொண் டிருக்கிறார்கள். இதற்கிடையிலே இதுவரையிலே கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கான இழப்பீட்டுத் தொகை அளிக்கப்பட் டிருக்கிறது. அதற்கான பணம் இந்த மானியத்தில் இழப்பீட்டுத் தொகையாக கேட்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல என்பதை நாம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–30)

அமைச்சர்கள் ஊரிலேயே இருப்பதில்லை என்று சொன்னார்கள். பத்திரி கையில் நாளைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் ஊரிலேயே இருப்பதில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று செய்திகள் வர லாம். இந்தப் புள்ளிவிபரத்தைப் பார்த்தால் அமைச்சர்கள் அதிக நாட்கள் சென்னையில் தங்கி அலுவல்களைப் பார்த்தார்களா அல்லது சுற்றுப் பயணத் தில் ஈடுபட்டிருந்தார்களா என்ற உண்மை தெரியும்.

முதல் அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள்—1973–74-ல் 287 நாட்கள். வெளியூர் சென்ற நாட்கள் 78.

கல்வி அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 282. வெளியூர் சென்ற நாட்கள் 83.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 303. வெளியூர் சென்ற நாட்கள் 62.

பின்தங்கிய நலத்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 300. வெளியூர் சென்ற நாட்கள் 65.

அரிசன நலத் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 286. வெளியூர் சென்ற நாட்கள் 79.

பொதுப் பணித்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 261. வெளியூர் சென்ற நாட்கள் 104.

தொழில் அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 263. வெளியூர் சென்ற நாட்கள் 102.

வருவாய்த் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 287. வெளியூர் சென்ற நாட்கள் 78.

வேளாண்மைத்துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 301. வெளியூர் சென்ற நாட்கள் 64.

உள்ளாட்சித் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 202. வெளியூர் சென்ற நாட்கள் 163. அவர் ஒருவர் தான் கொஞ்சம் அதிகம் போயிருக்கிறார். ஏனென்றால் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1974 ஏப்ரல் 1] [டாக்டர் மு. கருணாநிதி]

உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 270. வெளியூர் சென்ற நாட்கள் 95.

தொழிலாளர் நல அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 224. அதுவும் ஆச்சரியம். வெளியூர் சென்ற நாட்கள் 141.

மின்வாரிய அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 261. வெளியூர் சுற்றுப் பயண நாட்கள் 104.

போக்குவரத்து அமைச்சர் சென்னையில் தங்கிய நாட்கள் 243. வெளியூர் சென்றது 122 நாட்கள்.

அறநிலைய அமைச்சர் சென்னையில் தங்கியது 216 நாட்கள். வெளியூர் சென்றது 149 நாட்கள்.

ஆக, இந்தக் கணக்கைப் பார்த்தால் 200-க்கு மேற்பட்ட, 250-க்கு மேற்பட்ட நாட்கள் சென்னையில் தங்கி நாங்கள் பணியாற்றி வருகிறோம். பொத்தாம் பொதுவிலே அமைச்சர்கள் சென்னையிலே தங்குவதில்லை; நாங்கள் இவர்களைப் பார்க்கவே முடிவதில்லை என்று கூறுவது பொருத்தமற்றது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தை அளித் தேனே அல்லாமல் வேறு அல்ல.

நண்பர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. கே.டி. கே. தங்கமணி அவர்களும் அமைச்சர்களுக்கு எழுதப்படுகின்ற கடிதங் களுக்கு அமைச்சர்களே பதில் எழுதவேண்டும் என்று சொன்னார்கள்.

இப்பொழுது இருக்கிற ஏற்பாடு உடனடியாக கடிதம் வந்து சேர்ந்தது என்று அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதில் மூலம் தெரிவிக்கின்றார்கள். இனிமேல் அதைத் தொடர்ந்து விவரங்களைப் பார்த்து, அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுது கின்ற முறை மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர் களும், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க இன்று முதல் அமுலுக்கு வரும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் இடைத் தேர்தலில் ஈடுபடலாமா, இடைத் தேர்தலில் பிரசாரம் செய்யவரலாமா ?— வெட்டுத் தீர்மானத்தில் அதைத்தான் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். வராமல் கூட இருந்து விடலாம். ஆனால், அவர்கள் ஜாக்கிரதையாக நான் எங்கே சொல்லி விடப்போகிறேனோ என்று, கேரள அமைச்சர் இங்கே வரலாம், ஆனால், இந்த மாநிலத்தில் நம்முடைய மாநில அமைச்சர்கள் இடைத் தேர்தலுக்குப் போகலாமா என்று கேட்டுவிட்டார்கள்.

வெட்டுத் தீர்மானத்தை எழுதிய பிறகு யாரோ போய்ச் சொல்லி யிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

கோவிந்தன் நாயர் அவர்கள் கோவைக்கு வந்து—அமைச்சர்கள் தேர்தலுக்கு வரக்கூடாது என்று இங்கே பேசிய செழியன் அவர்கள் ஆரம்பத்திலே பேசிய அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கோவிந்தன் நாயர் அவர்களும், நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும், கோவை செழியன் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். அதிலே கோவிந்தன் நாயர், எம். ஜி. ஆர். இந்தியாவின் சரித்திரக் கதா நாயகன் என்று கூட பேசியிருக்கிறார்கள்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் கேரள மாநிலத்திலிருந்து ஒரு அமைச்சர் தமிழகத்திற்கு வந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சரி, அந்த மாநிலத்திலிருந்து தானே வந்தார். அவர் இங்கே பிரசாரத்திற்காகத் தானே வந்தார். அமைச்சர் என்ற அளவில் வரவில்லையே என்று சொல்கிறார்கள்.

செழியன் அவர்கள் பேசும்போது அமைச்சர் வந்தால் பின்னால் போலீஸ் பரிவாரங்கள் வருகிறார்கள். மக்கள் மந்திரி அந்தஸ்தை நினைத்துக்கொண்டு பயப்படுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி பயந்தார்களா என்றால் இல்லை.

ஆகவே, அவர்களுடைய வாதம் அடிபட்டுப்போகிறது என்று நான் கருதுகிறேன். அப்படி அமைச்சர்கள் பயமுறுத்தவும் இல்லை, மக்கள் பயப்படவும் இல்லை. எதிர்க்கட்சியில் இருக்கிற பொறுப்பான தலைவர்கள், விளம்பரப்பட்டுள்ள தலைவர்கள், அதிக மக்கள் கூட்டத்தைச் சேர்க்கும் தலைவர்கள் அவர்களுக்கு எப்படி அமைச்சர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு தரப்படுகிறதோ அதைப்போன்று போலீஸ் பாதுகாப்பு அவர்களுக்கும் தரப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த அரசைப் பொறுத்தவரையில் அந்தப் பாதுகாப்பை எந்த அளவுக்கும் குறைத்து விடவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற மாநிலத்திலிருந்து இன்னொரு அமைச்சர் வந்தது மாத்திரமல்ல. வாதத்திற்காகக் அதைக்கூட விட்டுவிடுகிறேன். நடைபெறுகிற எல்லா தேர்தல்களுக்கும் மத்திய சர்க்கார் அமைச்சர்கள் இங்கே வந்து போகிற நேரத்தில், இங்கே பணியாற்றுகிற நேரத்தில், மாநில அமைச்சர்கள் மட்டும் கைகயை கட்டிக்கொண்டு, சி. சுப்ரமணியமா வரட்டும், திண்டுக்கல்லுக்கு ஜகஜீவன்ராமா வரட்டும், சவாண் வரட்டும், என்று இருக்க முடியுமா? பக்கத்திலிருக்கிற முதல் அமைச்சர், மைசூர் முதல் அமைச்சர் வந்திருக்கிறார். அண்மையில் மறைந்துவிட்டார், ஒரு அமைச்சர், ஒரு முஸ்லீம் முதல் அமைச்சர் அவர்கள்கூட வந்திருக்கிறார்கள்.

இப்படி பல அமைச்சர்கள் பல மாநிலங்களிலிருந்து வருகிறார்கள். முதல் அமைச்சர்கள்கூட வருகிறார்கள்.





அது மாத்திரமல்ல, மத்திய சர்க்காரினுடைய காபினட் மினிஸ்டர்கள் கூட வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்து தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்கள்

இன்னொன்றும் நான் சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாட்டு முதல் அமைச்சரோ அல்லது கர்நாடக முதல் அமைச்சரோ, ஆந்திர முதல் அமைச்சரோ, பஞ்சாப் முதல் அமைச்சரோ தேர்தல் பிரசாரத்திற்குச் செல்கிறார்கள் என்றால், அவர்கள் தங்களுடைய கட்சி செலவில், சொந்த செலவில் தான் செல்ல வேண்டும். அது விதி. மற்ற மாநிலங்களில் அந்த விதி மீறப்படுகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கட்சித் கூட்டங்களுக்குச் செல்கிறார்கள் என்றால் கூட, தேர்தல் பிரச்சாரம் மாத்திரமல்ல, கட்சித் கூட்டங்களுக்குச் செல்லுகிறபொழுது கூட, அந்தத் தொகையை, அந்த வழிச் செலவை கட்சிதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு விதியை வகுத்து, முதல் அமைச்சரும், மற்ற அமைச்சர் பெருமக்களும் அதைக் கடுமையாக இன்றைக்குக் கடைப் பிடித்து வருகிறார்கள்.

ஆனால், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்த மாநிலத்திற்குத் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றாலும், அந்தச் செலவை அவர்கள் அபிஷியல் பங்ஷனுக்கு வருகிற செலவு மாத்திரம் அல்ல, ஒரு கட்சிக் கூட்டத்தில் போய் கலந்து கொண்டாலும் அந்தச் செலவை அந்தந்த மாநில சர்க்கார்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு விதிமுறை செய்யப்பட்டு, எல்லா மாநில அரசுகளுக்கும் அந்த விதிமுறையும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் அவர்கள், மத்திய சர்க்காருடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களாக இருந்தாலும் சரி, இனி வரப்போகும் பிரதமராக இருந்தாலும் சரி, அவர்கள் கலந்துகொள்கின்ற கூட்டங்களுக்கு, கட்சித் கூட்டங்களாக இருந்தாலும், அந்தச் செலவையெல்லாம் அந்தந்த மாநில அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதியை செய்திருக்கிறார்கள்.

இதற்கிடையே இடைத் தேர்தலில் நம்முடைய மாநிலத்தில் அமைச்சர்கள் சென்று பிரச்சாரம் செய்வது தவறு என்று கூறுவதில் பொருத்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பல்வகை மானியக் கோரிக்கைகளிலே கிட்டத்தட்ட 94 கோடி ரூபாய் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மானிய கோரிக்கைகளின் மீது உரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கிய எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி, வெட்டுப் தீர்மானங்களையெல்லாம் திரும்பப்பெற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவில் அமைகிறேன்.

**DR. H. V. HANDE** : I expected the Hon. Chief Minister to answer my point which I raised with regard to the point raised by the Hon. Minister for Harijan Welfare on the other day.

I would like to know whether he has called for the files stated by the Hon. Minister for Harijan Welfare. She said on the Floor of the House that the officers are not obeying the orders of the Ministers. This is the first time that it was brought in the Assembly. Now, after that 12 or 13 days are over. I would like to know whether the files have been called for or what the latest position of the matter is.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தை இங்கே வெளியிட்ட பிறகு நான் உடனே சொன்னேன். அதைப்பற்றி விசாரித்து எல்லா நடவடிக்கைகளும் எடுக்கிறேன் என்று சொன்னேன்.

இடையிலே இருந்த காலம் போதாது என்பதை நண்பர் ஹாண்டே அவர்கள் உணர்வார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் காலையிலிருந்து மாலை வரையில் இருந்துவிட்டு வீட்டுக்குப் போகிறார்கள். திரும்பவும் சில நேரங்களில் மாலையில் வருகிறார்கள். நாங்கள் இங்கே இருந்து இந்த அவை, மேலவை, அங்கிருந்து வேறு கமிட்டிக் கூட்டங்கள் என்கிற அளவுக்கு பல்வேறு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அம்மையார் அவர்களை இதைப்பற்றி விளக்கம் கேட்கவோ அதிகாரிகளை இதைப் பற்றிக் கேட்கவோ எனக்கு நேரம் இல்லை. எந்தெந்த அதிகாரிகள் அப்படிப் கோப்புகளில் கையெழுத்துப் போடப்பட்ட உத்திரவுகளை நிறைவேற்ற மறுத்தார்கள் என்கிற விவரங்களையெல்லாம் அவர்களிடம் கேட்டு, அதற்குப் பிறகு விசாரித்து எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பதிலில் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்னார்கள். நிர்வாக வசதியை முன்னிட்டு வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறேன். அதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா ?

இதற்கு முன்னால் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை காஞ்சிபுரத்தோடு சேர்ப்பதாக ஏற்கெனவே ஒரு ப்ரப்போசல் இருந்தது. அந்த ப்ரப்போசல் எப்படி இருந்தாலும் நிர்வாக வசதியை முன்னிட்டு வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வடாற்காடு மாவட்டத்தை இரண்டாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டிருந்தால் பதில் சொல்லியிருப்பேன். பிரிவினையை நாம் ஒப்புக்கொள்ளாததால் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்பதற்கு நான் பதில் சொல்லவில்லை.





திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். 1970-ம் ஆண்டுக்கு முன்னால் ரிட்டயர் ஆனவர்களுக்கும் 1970-க்கு பின்னால் ரிட்டயர் ஆனவர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதில் வேற்றுமை அதிகமாக இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறார்கள் அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்

DR. H. V. HANDE : With regard to concessions granted to officers, we are grateful to the Hon. Chief Minister.

Is it possible for him to constitute a small Committee to go into the problems of pensioners and also to draw up a comprehensive scheme ? Will it be possible for him to announce it now ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றி ஒரு குழு அமைத்து ஆராய்வது நல்ல யோசனை. அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைச் சென்றவர்களுக்கு பென்ஷன் தொகை கொடுப்பது பற்றி முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்.

சுதந்திரப் போராட்டம் முடிந்து நீண்ட காலமாகிறது. ஒரு தலைமுறைக்கு மேலே கூட ஆகிவிட்டது. ஆனால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1965-ல்தான் நடைபெற்றது. நானே கூட அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்குச் சென்றிருக்கிறேன். எனக்கும் அதற்காக மானியம் கொடுத்து, வாங்கும்போது கூச்சமாக இருக்கிறது. ஒரு தலைமுறைக்கு பின்னால் கொடுப்பதாக இருந்தால் பரவாயில்லை. குமரி மாவட்ட போராட்ட வீரர்கள், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்கள் ஆகியோருக்கு இப்போது பென்ஷன் கொடுப்பது ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். மானியம் வாங்குவதற்காக ஜெயிலுக்குப் போனார்கள் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படும். அது கூடாது. ஆகவே, இதுபற்றி மறு பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மானியம் வாங்குவதற்காக ஜெயிலுக்குப் போனார்கள் என்ற உணர்வு வரக்கூடாது. அது மானியம் வாங்கிக் கொண்டிருக்கிற சுதந்திரப் போராட்ட வீரர்களை மறைமுகமாக அவமானப்படுத்துவது போல் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்வது சரியல்ல. மானியம் வாங்குவதற்கு கூச்சமாக இருந்தால் வாங்குவதை அவர்களாகவே வேண்டாமென்று நிறுத்திக் கொள்ளலாம். வாங்குகிறவர்களை தடுக்காமல் இருந்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் விவாதம் முடிவுற்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 8-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். சுரேந்திரன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,45,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 9-க்கு கொடுக்கப்பட்டிருந்த திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. சுவாமிதாஸ், எம். சுரேந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே, ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,32,66,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. எஸ். வடிவேல் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 40-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. பி. கோபால் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,54,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. எஸ். வடிவேல், திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால், கோரிக்கை எண் 41-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஏ. சுவாமிதாஸ், ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,19,92,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 42-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச்.வி. ஹாண்டே ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங் கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,48,56,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 45-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக்கோரிக்கை எண் 45—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப் பின்கீழ் ரூ. 10,42,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 46-க்கு கொடுக்கப்பட்டிருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 46-க்கு ஜாமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,73,00,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. எஸ். வடிவேல் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 56-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 56-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,94,01,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-46 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

218. Notification issued with G.O. Ms. No. 1913, Home, dated the 18th July 1973 in regard to amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [*Laid on the Table of the House under section* 10 (3) *of the Tamil Nadu Cinemas* (*Regulation*) *Act*, 1955 (*Tamil Nadu Act IX of* 1955).]

219. Notification issued with G.O. Ms. No. *2194*, Home, dated the 18th August 1973 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 [*Laid on the Table of the House under section* 10 (3) *of the Tamil Nadu Cinemas* (*Regulation*) *Act*, 1955 (*Tamil Nadu Act IX of* 1955).]



220. Notification issued with G.O. Ms. No. 25, Excise and Prohibition, dated the 5th February 1974 in regard to amendments to the Excise and Prohibition Department Notification III-No. 39 and 40 of 1972, published at page 97 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th January 1972. [*Laid on the Table of the House under section* 34 (5) *of the Tamil Nadu Exciss Act*, 1971 (*Tamil Nadu Act* 31 *of* 1971.)]

### *B. Reports, Notifications and other Papers.*

*150. Note on Demand No. 4—General Sales Tax and other Taxes and Duties, Administration (English and Tamil).

*151. A Review on the Administration and Enforcement of Excise and Prohibition Laws in Tamil Nadu State during 1973-74 (English and Tamil) .

*152. Welfare Programmes for Women and Children and the Physically Handicapped, 1974-75 (Tamil).

*153. Policy Note on Welfare Schemes for Ex-Servicemen (under Demand No. 42, Miscellaneous), 1974-75 (Tamil).

* Despatched to Members on 29th March 1974.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 2.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Stipends for Teacher Trainees*

* 704 *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to discontinue the payment of stipends to the Secondary Grade Teacher Trainees in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இடைநிலை ஆசிரியப் பயிற்சி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த உதவித் தொகையை நிறுத்திவிடலாம் என்ற கருத்தாரு பரிசீலிக்கப்பட்டு, உதவித்தொகை அளிப்பது 1973-74 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்படும் என்பதற்கான அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. தேவைக்கு வேண்டிய அளவு ஆசிரியர்கள் பயிற்சிக்கு வராத கட்டத்தில் இச் சலுகை அளிக்கப் பட்டது. தற்போதைய சூழ்நிலையில் இச்சலுகையை நீடிப்பது அவசியமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, பொருளாதார நிலையில் பின்னணியில் இருக்கின்றவர்களுக்கு—நல்ல திறமை படைத்தவர்களுக்கு—இந்த உதவித் தொகையை அளிப்பது

இப்பயிற்சியை அவர்கள் பெறத் தூண்டுதலாக இருக்குமாதலால், இந்த உதவித் தொகையை அவர்களுக்குத் தொடர்ந்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் மாணவர்களை ஈர்ப்பதற்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட்டது. இப்பொழுது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பல்லாயிரக்கணக்கில் இருக்கிறார்கள். சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு சேர்ப்பது நிறுத்தப்பட்டது. வகுப்புக்கு 40 மாணவர்கள் என்று இருந்தனர். சென்ற ஆண்டு 30 மாணவர்கள்தான் சேர்க்கவேண்டும் என்று குறைத்தோம். வருகிற ஆண்டில் கூட அதைப்பற்றி நாம் முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பயிற்சி இரண்டாண்டுக் காலம் முழு இலவசமாகத்தான் அளிக்கப்படுகிறது. ஆகவே, உதவித் தொகை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எடுத்த முடிவை மாற்றுவதற்கில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை நிறுத்தியது போல, வேறு எந்தப் பயிற்சி பெறும் மாணவர்களுக்காவது உதவித் தொகையை நிறுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, if stipends are not paid to the trainees, efficient and interested candidates will not come forward for training. The Government have been giving so many facilities for other sections of the people. So, may I know why only these unfortunate people should be treated like this and whether the Hon. Minister will consider their case also?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 18 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுதே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 17,000, 18,000க்குமேல் இருக்கிறார்கள். படிப்பு இலவசமாகத்தான் தரப்படுகிறது. அதற்காகக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. உதவித் தொகை ஒரு காலத்தில் தரப்பட்டது. அது இப்பொழுது தேவை இல்லை என்ற முடிவு



எடுக்கப்பட்டது. இதுகுறித்து திட்டக் குழு கூட பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் சென்ற ஆண்டில் நிறுத்தப்பட்டது. மீண்டும் இதைப் புதுப்பிப்பதாக இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, உதவித் தொகையை நிறுத்தியதுபோல், உபகாரச் சம்பளத்தை நிறுத்துவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உபகாரச் சம்பளத்தை நிறுத்துவதற்கு ஒன்றும் வழி இல்லை. 'ஸ்டைபெண்டு' என்ற உதவித்தொகை மட்டும்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** இந்த உதவித் தொகையை அரிசன மாணவர்களுக்கு மட்டுமாவது கொடுக்க அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்புகள் இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, 17,000 ஆசிரியர்களுக்குமேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். வேலையில்லாமலிருக்கும் பயிற்சிபெற்ற இந்த ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்கும்போது ஸீனியாரிடிபடி வேலை கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஸீனியாரிடி முறை கடைப்பிடிக்க வேண்டும் என்றுதான் நாம் எடுத்துச்சொல்லி வந்தோம். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பொறுத்தும், அரசுப்பள்ளிகளைப் பொறுத்தும் அதைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று மாவட்டக் கல்வி அதிகாரிகள் மூலம் வற்புறுத்தப்பட்டு வருகிறது. அந்த முறையைக் கடைப்பிடிக்குமாறு தனியார்ப் பள்ளிகளுக்கும் உத்தாவிட்டோம். ஆனல், அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். அதற்குப்பிறகு அந்த விதியைத் தளர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கூடுமானவரை ஸீனியாரிடிபடிதான் கொடுக்கவேண்டும். 1969-1970-1971-ம் ஆண்டுகளில் தேறியவர்களுக்கு முதலிடம் தந்து

[1974 ஏப்ரல் 2

விட்டு, அதற்குப்பிறகு தேறியவர்களுக்கு அதையடுத்துத் தரவேண்டுமென்ற கொள்கையைத்தான் அரசு ஆதரித்து வருகிறது.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** ஆசிரியர் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு உதவித் தொகையை நிறுத்திவிட்டதனால் பலரும் அதனால் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். லோன் வழங்கக் கோரி தேவைப்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்தால், அவர்களுக்கு லோன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கடன் தருவதற்கு இப்போதே சிலபல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையில் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென்று தனியாக ஏற்பாடு செய்வதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகை கொடுப்பதன்மூலம் ஆண்டொன்றுக்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவாயிற்று என்று அறியலாமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுக்கும் குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இந்த உதவி தொகை கொடுக்காவிட்டால் பல மாணவர்கள் சேர்ந்து பயிலுவதற்கு வாய்ப்பிருக்காது. எனவே, இதை மனத்தில் வைத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமாவது இந்த உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்குரிய ஹாஸ்டல்கள் தனியாக இருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் வராது. பயிற்சிப் பள்ளிகளோடு இணைந்த விடுதிகளில் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. எங்கு வேண்டுமானாலும் இப்பொழுது இருக்கலாம் என்று விதி தளர்த்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள் எங்கிருந்து வேண்டுமானாலும் வந்து படித்துக்கொள்ளக்கூடிய நிலை இருப்பதால், தனிச் சலுகை அளிக்கப்படுவதன் காரணமாக, இந்த உதவித் தொகை அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.



1974 ஏப்ரல் 2]

### கொல்லிமலையில் புதிய பள்ளி

*705 **வினா—திரு. சி. சின்னவெள்ளையன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் பையில்நாடு என்ற இடத்தில் நடுநிலைப்பள்ளி (8-ஆம் வகுப்புவரை) துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலையில், பையில்நாடு என்ற இடத்தில் நடுநிலைப்பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் கல்வித்துறையில் இல்லை. ஆனால் உயர்நிலைப்பள்ளி துவக்கும் திட்டம் ஒன்று அரிசன நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

### கோவளம் கடற்கரை

*706 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரையினை சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம். மாமல்லபுரத்தை அனைத்து நாட்டுக் கடற்கரை விழைவிடமாக (International Beach Resort) மேம்படுத்துவதற்குரிய செயல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக, இந்திய அரசு ஆதரவில் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கியநாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையைப் பார்வையிட்டனர். குறிப்பாக முட்டுக்காடு கோவளக் கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, கோவளத்தை மேம்படுத்தும் திட்டத்தில் என்னமாதிரியான காரியங்களெல்லாம் செய்தால் சுற்றுலா வருகிறவர்களைக் கவரக்கூடும் என்று

[1974 ஏப்ரல் 2

ஏதாவது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா? என்ன என்ன கவர்ச்சிமிக்க காரியங்களைச் செய்வதாக அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசு ஆதரவில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுக்கள் இரண்டு இங்கே வருகை தந்தன. 1972 நவம்பர்-டிசம்பர் திங்களில் அவைகள் பார்வையிட்டன. அவைகள் பார்வையிட்ட பிறகு, எந்த எந்த வகையில் மேம்படுத்தலாம் என்ற திட்டத்தை வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மத்திய அரசிடமிருந்து அந்த அறிக்கையை நாங்கள் விரைவில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் குறிப்பாக பூஞ்சேரி-கோவளம் சாலைச் சந்திப்புக்கும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கும் இடைப்பட்ட பகுதி, குறைந்த, நடுத்தர வருமானப்பகுதியினருக்குச் சுற்றுலா இட வசதி பகுதியாக அமையலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கிழக்குக் கடற்கரை-கோவளம் சாலைக்கும் கடலுக்கும் இடையுள்ள பகுதி பரந்த மணற்பரப்பாகும். மாமல்லபுரத்திலுள்ள பஞ்ச ரதங்களிலிருந்து கோவளம் வரை, கடற்கரைப் பகுதியில், தென்னை, வேப்ப மரங்கள், வெள்ளை அரளி முதலிய மரங்களை நட்டு மேம்படுத்தலாம். கடற்கரை நெடுகிலும் பசுமையான மரஞ்செடி கொடிகளிலிருந்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு வெப்பத்தினின்றும் பாதுகாப்பு கிடைக்கும். மணலிலிருந்தும் கடலிலிருந்தும் வரும் தூசினை ஈர்த்துக் கொண்டு கடற்கரையில் பயணிகள் தங்க நிழல் கிடைக்கும். புலிக் குகையிலிருந்து கோவளம் வரையுள்ள பகுதி அழகுமிக்க கடற்கரையாகும். இங்கு சாலை நெடுகிலும் முகாமிடுவதற்கு ஏற்ற இடமாகக் கருதலாம். இப்படி மேலெழுந்தவாரியாகக் கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், திட்டவட்டமான அறிக்கை மத்திய சர்க்காருக்கு அளித்திருக்கிறார்கள். அங்கிருந்து அதை நாம் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சரகத்திலிருந்து விரைவில் அந்த அறிக்கை அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன்.



1974 ஏப்ரல் 2]

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் கோவளம் கடற்கரை நல்ல வளைவாகவும், அலை வேகமில்லாமலும், மணற்பாங்காகவும், வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் குளிக்க நல்ல வசதியாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து சுற்றுப் பயணிகளுக்கு வசதிசெய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் திட்டக் குழு இந்தப் பகுதிகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியை வளப்படுத்தலாம் என்று குறிப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அறிக்கை வந்த பிறகு அதன் அடிப்படையில் காரியங்கள் துவக்கப்படுவதற்கு மத்திய அரசின் உதவி கோரப்படும். மாநில அரசும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

## பூமிதான இயக்கம்

* 691 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை பூமிதான இயக்கத்தின் மூலம் கிடைத்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் என்ன, மாவட்டவாரியாக?

(இ) அது எப்படி விநியோகம் செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :**

| | | | |
|---|---|---|---|
| (அ) | 1. செங்கற்பட்டு | 1,660 | ஏக்கர்கள். |
| | 2. தென் ஆர்க்காடு | 1,528 | " |
| | 3. வட ஆர்க்காடு | 395 | " |
| | 4. தஞ்சாவூர் | 674 | " |
| | 5. திருச்சிராப்பள்ளி | 2,254 | " |
| | 6. சேலம் & தர்மபுரி | 1,902 | " |

| | | | |
|---|---|---|---|
| 7. | இராமநாதபுரம் | 2,347 | ஏக்கர்கள். |
| 8. | திருநெல்வேலி | 2,769 | ” |
| 9. | கோயம்புத்தூர் | 5,834 | ” |
| 10. | மதுரை | 3,490 | ” |
| 11. | கன்னியாகுமரி | 51 | ” |
| 12. | நீலகிரி | 56 | ” |
| | | 23,210 | ஏக்கர்கள். |

(இ) 1958-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பூதான் யக்ஞ சட்டத்திற்குட்பட்டு அவைகள் விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன்: இங்கே சொல்லப்பட்டிருக்கிற நிலங் களுடைய நிர்வாகம் எப்படி இருக்கிறது? அந்த நிலத்தை வைத்திருக்கிறவர்கள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய் கின்ற வகையில் இதர தொழில்களையும், காரியங்களையும் சரிவரச் செய்கிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** இதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

## பாரத் சேவக் சமாஜத்திற்கு மானியம்

* 692 விஞ—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமைந்துள்ள பாரத் சேவக் சமாஜ், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் சமூகப்பணி மன்றம் இவைகளுக்கு அரசு மானியம் ஏதேனும் வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:**

(அ) & (இ) பாரத் சேவக் சமாஜத்திற்கு 1959–60 முதல் 1967–68 ஆம் ஆண்டு வரையில் கீழ்க்கண்ட தொகைகள் மானிய மாக வழங்கப்பட்டன:—

| ஆண்டு. | | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1959-60 | (மூன்று திங்களுக்கு) | 6,525 |
| 1960-61 | | 23,050 |
| 1961-62 | | |
| 1962-63 | | 17,700 |
| 1963-64 | | 7,500 |
| 1964-65 | | 6,000 |
| 1965-66 | | 3,000 |
| 1966-67 | | 6,000 |
| 1967-68 | | 3,000 |

1968 ஆம் ஆண்டிலிருந்து பாரத் சேவக் சமாஜத்திற்கும் அதனுடன் இணைந்த மாணவர்கள் சமூக சேவை நிறுவனத்திற்கும் மாநில அரசு மானியம் எதுவும் வழங்கவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: பாரத் சேவக் சமாஜ் நம் மாநிலத்தில் எந்தெந்த மாதிரியான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது? 1967–68-க்குப் பிறகு அந்த சமாஜத்திற்குப் பணம் கொடுக்கப்பட்ட விவரம் இல்லையே. அது இயங்கவில்லையா? இயங்குகிறது என்ருல் பணம் தராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பாரத் சேவக் சமாஜ் தன்து பணிகளைச் சட்டத்திற்கு ஏற்ற அளவில் நடத்தவில்லை. ஆதலால் அவர்கள் அந்த ஆண்டில் இருந்து தங்களுக்குப் பணத்தை ஒதுக்கித் தருமாறு கேட்கவில்லை. அவர்கள் வேலை ஸ்தம்பித்திருக்கிறது. அதனல் கொடுக்கிற பணம் ரத்து செய்யப்பட்டது.

## Legislation to regulate fishing

* 707 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

whether the Central Government had recently circulated to the State Government the draft of the bill proposed to be brought about by the Government of India to regulate fishing?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஆம்.

**திரு. என். கே. பழனிசாமி :** அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தின் விவரம் என்ன என்று அறிவிப்பார்களா? இன்னும் அதிக தூரம் போய் மீன் பிடிக்க வழிவகை செய்யும் சிபார்சை செய்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மத்திய அரசு ஒரு சட்ட வரைவினைத் தயாரித்து மாநில அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினார்கள். நாம் அதை அப்படியே ஒத்துக்கொண்டு அனுப்பியிருக்கிறோம். அந்த மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறிய பிறகுதான் அதன் விவரங்களைக் கூற வாய்ப்பு இருக்கும். எல்லைகளை வகுப்பது, அந்த எல்லைகளுக்குள் என்னென்ன படகுகள் போகலாம் என்று வரையறுப்பது, யாரும் மீறாமல் இருக்க மீன் துறைக்கும், போலீஸ் துறைக்கும் அதிகாரம் கொடுப்பது ஆக இதுபோன்ற கருத்துக்கள் அடங்கிய மசோதாவைத்தான் அவர்கள் தயார் செய்திருக்கிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** இராமேசுவரம் மீனவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது மத்திய அரசாங்கத்தின் சட்ட முன்வடிவைப் பற்றியது.

**திரு. ஏ. எம். இராஜா :** மெகனைஸ்டு போட்டில் நமது மீனவர்கள் போகிறபோது சிலோன் ரோந்துக்காரர்கள் அவர்களைப் பிடித்துக்கொண்டு போய் போட்டுக்குச் சேதத்தை விளைவிப்பதும், அவர்களை காவாண்டைனில் போடுவதுமான தொல்லைகள் இருக்கின்றனவே. இதை மத்திய அரசுக்கு நம் அரசு எழுதி இதுபோன்ற காரியங்கள் நடைபெறாமல் தடுக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது 12 மைல்களுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் போகலாம். ஐந்து மைல்களுக்குள் கட்டுமரத்தில் மீன் பிடிப்பவர்கள் மீன் பிடிக்க



வேண்டும். இந்த ஐந்து மைல்களுக்குள் மீன் பிடிக்காது— அதற்கு அப்பால் போய் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டும். இந்த விதிமுறைகளை இருசாராருமே மீறுகிறார்கள்— அதனால் மோதல்கள் ஏற்படுகின்றன. இதை எல்லாம் தடுக்கத் தான் புதிய மசோதா வருகிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பொதுவாக கடலோரப் பகுதிகளில் இருக்கிற நெருக்கடியான சூழ்நிலையை உத்தேசித்து இந்த மசோதாவை கூடிய சீக்கிரம் நிறைவேற்ற மத்திய சர்க்காரை நம் அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மத்திய அரசே தான் மாநில அரசின் ஒப்புதலுக்கு அந்த மசோதாவை அனுப்பி வைத்தது. நாமும் அதை அப்படியே ஏற்று, உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று அனுப்பியிருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி :** கச்சத்தீவு 12 மைல்களுக்குள் தான் இருக்கிறது. அங்கு போகின்றவர்களைக் கூட கைது செய்கிறார்களே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஐந்து மைல்கள் வரை கட்டுமரங்கள் செல்லலாம். ஐந்து மைல்களுக்கு அப்பால் தான் விசைப்படகுகள் செல்லலாம். 12 மைல்களுக்கு அப்பால் யார் வேண்டுமானாலும் சென்று மீன் பிடிக்கலாம். இன்றைக்கு ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளின் படகுகள் எல்லாம் கூட வந்து பிடிக்கின்றன. மாநில சர்க்காரால் அதைத் தடுக்க முடியாது. மத்திய அரசுதான் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு எல்லையை வரையறுக்க முடியும். கட்டுமரக் காரர்களும், விசைப் படகுக்காரர்களும் ஒருவருக்கொருவர் எல்லை மீறுகிறபோது கூட மோதல்கள் ஏற்பட்டு, கலகம் ஏற்படுகிறது. எல்லைகளைக் குறிக்க அங்கங்கே கட்டைகள் மிதக்கவிடப்பட்டும் வருகிறது. போலீஸ் ரோந்து கோஸ்டிக்காரர்களும் சென்று பார்க்கிறார்கள். மத்திய அரசு சட்டம் வந்தால் இந்தப் பிரச்சினைகளை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

**திரு. எம். தேவராசன் :** இலங்கை அரசிடம் மாரிடைம் பெல்ட் அதிகமாக இருப்பதால், நம்மிடமும் அந்த அளவுக்கு அதிகமாக மாரிடைம் பெல்டை ஏற்படுத்த அரசு முன்வந்தால் பல சங்கடங்கள் ஏற்படாது. அதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இலங்கை படகுகள் மட்டுமல்ல, நான் முன்பு சொன்னதுபோல, ஜப்பான், ரஷ்யப் படகுகள் கூட இங்கே மீன் பிடிக்க வருகின்றன. அதை எல்லாம் மாநில அளவில் தடுக்க முடியாது. மத்திய அரசுதான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு—கடலில் எல்லைகளை வரையறுக்க வேண்டும். நம்மால் அதை எல்லாம் தடுக்க முடியாது.

## சேலத்தில் புறச்சாலை அமைப்பு

*708 வினா—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் புறச்சாலை அமைப்புத் திட்டம் எப்போது செயல் படுத்தப்படவிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேலை சீக்கிரம் எடுத்துக் கொள்ளப்படும். அது 1975-ம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கி. ஜெயராமன் : நகர எல்லையின் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் : நகர எல்லையின் மதிப்பீடு என்னிடத்தில் இல்லை. நில ஆர்ஜிதத்திற்காக மட்டும் ரூ. 19,71,700 மதிப்பீடு. நில ஆர்ஜிதத்தோடு புறச்சாலை அமைக்கும் பணியின் திட்ட மதிப்பீடு ரூ. 34,27,700 ஆகும்.

## மானாமதுரை ஒன்றியத்திலுள்ள புதுக்கோட்டை சாலை

*709 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென் புதுக்கோட்டைக்குத் தார்ச் சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



## பெரிய கோட்டை கண்மாய்

*710 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், பெரிய கோட்டை கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மானாமதுரை ஒன்றியத்திலுள்ள புதுக்கோட்டை கண்மாய்

*711 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், தென் புதுக்கோட்டை கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் அரசிடம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *New Residents Welfare Trust*

*712. Q.—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the details of the work of the New Residents Welfare Trust at the tenements of the Slum Clearance Board; and

(b) the total capital of the Trust?

[1974 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய வீட்டுவசதி திட்டப் பகுதிகளில் புதிதாகக் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பத்தினருக்கு செவ்விய சமூகப் பணியையும், ஆலோசனையையும் 'புதிதாக குடியேறியவர்கள் நலப் பொறுப்புக் கழகம்' நல்குகிறது.

(இ) இந்தப் பொறுப்புக் கழகத்திற்கு மூலதனம் ஏதும் இல்லை. கீழ்க்காணும் உதவி மானியங்களுடன் இதன் நடவடிக்கைகள் செயல்பட்டு வருகின்றன:—

| ஆண்டு. | | ரூ. |
|---|---|---|
| 1972 | கிறித்துவ உதவி, லண்டன் | 60,430 |
| 1973 | சுவிசேஷ மத்தியக் குழு, ஜெர்மனி. | 1,08,000 |

**திரு. எம். சுரேந்திரன்:** சார், குடிசைமாற்று வாரியத்தில் குடியேறியவர்கள் நலப் பொறுப்புக் கழகத்தின் முக்கியப் பொறுப்பாளராக இருந்த ஒரு பிஷப் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டார்களே, அதன் காரணமாக நலப் பொறுப்புக் கழகத்தின் பணி பாதிக்கப்படுமா? அல்லது வேறு யாராவது அந்தப் பொறுப்பையெடுத்து அந்தக் காரியங்களைச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தவத்திரு நியூபிகின் அவர்கள் பொறுப்பேற்று நடத்திக்கொண்டிருந்தார்கள் துணைத் தலைவராக திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணி தொடர்ச்சியாக, எந்தவிதமான தொய்வுமில்லாமல் நடைபெறும் என்ற வாக்குறுதியை தவத்திரு அடிகளார் அவர்கள் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதாகத்தான் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இந்த நலக்குழுவின் பணிகள் என்னென்ன என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த நலக் குழுவிலே உள்ளவர்கள் அங்கே மருத்துவமனைகளை உருவாக்கி அதை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியிலே அவர்கள் குடியிருக்கிறார்கள்.



1974 ஏப்ரல் 2]

அதுமட்டுமல்லாமல், அங்கேயிருப்பவர்களுக்கு நம்பிக்கை வரும் அளவிலே குடும்ப வாழ்க்கையிலே புதிய சமுதாயத்தை உருவாக்கும் தன்மையில் காரியங்களை ஆற்றுகிறார்கள். அங்கேயுள்ள குப்பம் குப்பமாக தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவுகிறார்கள். பொதுப் பிரச்னைகளில் நலக்குழுவிலே இருப்பவர்கள் கலந்துகொண்டு சண்டை சச்சரவுகளைத் தீர்த்து வைக்கிறார்கள்.

இப்படி சமுதாய சேவைகள் மட்டுமல்லாமல் குழந்தைகள் காப்பகம் ஒன்றை உருவாக்கி அதன் மூலமாக சத்துணவு தருகிறார்கள்.

இந்தப் பணிகளிலேயெல்லாம் அவர்கள் தங்களை முழுதும் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இவையெல்லாவற்றையும்விட மேலாக, அவர்கள் நிரம்பப் படித்தவர்களாகயிருந்தாலும் குடிசைவாழ் பகுதிகளில் குடியிருப்பதுதான் பாராட்டத் தக்கதாகும்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இந்த நலக்குழு ஆற்றி வரும் சிறப்பான பணிகளைப்பற்றிச் சொன்னார்கள். குடிசைகளாக இருக்கும் பகுதிகளைக் கட்டிடமாக ஆக்கியிருக்கும் பகுதிகளில் சரியான சுகாதார வசதிகள் இல்லாமல் குறைபாடுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகவே, மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக ஒரு தீவிரத் திட்டத்தைச் செயல்படுத்தி இப்படிப்பட்ட பகுதிகளுக்குச சுகாதார வசதியை அதிகப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, சுகாதார வசதிகள் மெதுவாகத்தான், படிப்படியாகத்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 1952-ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே ஆந்திரர்களும், கேரளர்களும் இருந்திருக்கிறார்கள். அப்பொழுது சட்டமன்ற ஹாஸ்டலிலே ஃப்ளஷ் அவுட் கூட இருக்காது, ஹாஸ்டலில் இருப்பவர்கள் ஃபிளஷ் அவுட்டுக்குப் போக முடியாது. சட்டமன்ற ஹாஸ்டலுக்கே அப்படிப்பட்ட நிலைமையிருக்கும்பொழுது குடிசை மாற்று வாரியத்தின் மூலம் திடீரென்று சுகாதார வசதிகளை உடனே செய்து விடுவது என்பது முடியாது.

இந்த நலக்குழு அந்த வேலைகளை மேற்கொள்ளும். சமுதாய சேவை இல்லங்களும் இந்தக் காரியங்களில் ஈடுபடும்படி கேட்டுக் கொள்கிறோம். விரைவில் தொடர்பு கொண்டு பணி நடைபெறும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இந்த நலப் பொறுப்புக் கழகத்தின் பணி சென்னை மாநகரத்திலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு மட்டும்தானா நடக்கிறது அல்லது தமிழகம் பூராவிலும் உள்ள குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட பணி நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சென்னை மாநகரத்தில் மட்டும்தான் இந்த நலப் பொறுப்புக் கழகம் காரியங்களை மேற்கொண்டிருக்கிறது.

*Childrens' Day Care Centres*

*713 Q.—THIRU N. DENNIS:
THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a number of Day Care Centres for the benefit of the Children of working Mothers have been opened in Slum Clearance Board areas in Madras; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) குழந்தைகள் பாதுகாப்பு நிலயங்களை (Day Care Centres) நடத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இலவசமாக இடவசதி அளித்துள்ளது; சென்னை மாநகரிலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் நன்மைக்காக இந்த நிலையங்கள் நடத்தப் படுகின்றன. ஏனைய செலவினங்களை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. சமூக நலத் துறையின் நேரடி மேற்பார்வையில் இந்த நிலையங்கள் நடத்தப்படுகின்றன.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, எல்லா ஸ்லம் க்ளியரன்ஸ் இடங்களுக்கும் இந்த வசதி இருக்கிறதா? பிரைவேட் ஏஜென்சியும் ஃபைனான்ஸ் அசிஸ்டென்சும் ஏதாவது உண்டா? இதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? ஆயாக்கள்



நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குப் பதிலாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமித்தால் நன்றாக இருக்கும். ஆதலால் அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் இந்த சேவைக் கழகம் நம்மிடத்தில் எந்தவிதமான உதவியும் பெறுவது இல்லை. ஆனால் அங்கேயுள்ள குழந்தைகள் காப்பகத்தைப் பாதுகாக்கவும், குழந்தைகளைப் பேணிக் காக்கவும் 100 ரூபாய் சம்பளத்திலே ஒரு ஆசிரியை நியமிக்கப்பட்டிருக்கிறார் சமூக நலத் துறையின் மூலமாக. அதேபோல் இரண்டு ஆயாக்களை நியமிக்கிறது. குழந்தைகளின் ஊட்டச் சத்துக்காக நாள் ஒன்றுக்கு 20 காசு சமூக நலத் துறை செலவு செய்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, சென்னையில் தற்போது குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் எத்தனை இருக்கின்றன? இதை வெளி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தற்போது சென்னை மாநகரத்தில் மட்டும் 19 பகுதிகளில் இப்படிப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. இன்னும் இரண்டு பகுதிகளிலே தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, 21 இடங்களில் இப்படிப்பட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் என்றால் அந்த தாய்-தந்தையர் வேலைக்குப் போகும் பொழுது பாதுகாக்கப்படுவது என்று பொருளா? அல்லது வீடுகளில் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு, ஆரோக்கியமான வசதி முதலியவைகளை ஆராய்ந்து ஏற்பாடு செய்வது என்று பொருளா? என்பதையும் இங்கே உள்ளதைப்போல் ஸ்லம் க்ளியரன்ஸ் பல வீடுகளைக் கட்டுகின்ற மற்றப் பகுதிகளிலும் இது போன்ற காரியங்களைச் செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா என்பதையும் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். வேலை பார்க்கும் தாய்மார்களின் வீட்டுக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. வேலைவாய்ப்பு எதுவுமே இல்லாமல் வறுமையிலே வாடிப்பட்டுக்கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பேணிக் காக்க, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவும், ஊட்டசத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. தாயற்ற குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த வகையில் காரியங்கள் நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் காரியங்களை நடத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

*Shops in Slum Clearance tenaments*

* 714 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the shopping structures built by the Slum Clearance Board under the Remunerative Scheme at the Marina opposite the All-India Radio have been leased out to private parties; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) ஆல் இந்தியா ரேடியோ எதிரில், நொச்சிக்குப்பத்தில் குடிசை மாற்று வாரியத்தின் ஆதாயம் தரும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சிறு கடைகளின் குத்தகை உரிமை 15—2—1974 அன்று ஏலத்தில் விடப்பட்டது. நான்கு தனிப்பட்ட நபர்கள் 1—3—1974 முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகை எடுத்துள்ளனர்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, அதிலே மொத்தம் எத்தனை கடைகள் இருக்கின்றன? நான்கு பேர்களின் கடைகளும் ஒரே கடையா அல்லது தனித் தனியான கடைகளா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நான்கு பேர்களும் தனித் தனியாக. அதிலே ஒரு கடிகாரக் கடை, ஒரு பொது விற்பனை நிலையம், ஒரு குளிர் பானங்கள்-அலங்கார பொருட்கள் விற்பனை இடம், ஒரு சிற்றுண்டி விடுதி என்று ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.



## அணு மின் நிலையங்கள்

* 715 வினா—திரு. என். கிட்டப்பா :
திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அணுமின் ஆலைகள் நிறுவிட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தூத்துக்குடிக்கருகே இரண்டாவது அணுமின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. மொத்த நிதி நிலையையும் அணுமின் சக்தித் திட்டத்திற்குக் கிட்டும் நிதி வாயில்களையும் கருத்தில் கொண்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் புதிய திட்டம் எதுவும் செயல்படுவதற்கில்லை என்று மத்திய அரசு எழுதியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, மாநில அரசு இதற்காக மத்திய அரசுக்கு எப்பொழுது எழுதியது? அதற்கு ஏதாவது மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே. இது பல்லாண்டுகளுக்கு முன்னால், சுமார் 5 ஆண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இரண்டாவது அணு மின் நிலையம் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. தனியாகக் கமிட்டி போட்டு அந்த இடத்தையெல்லாம் பார்க்க வேண்டும், செலக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதைப் பார்த்து இடம் பார்த்த பிறகு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலேயே ஒரு அணு மின் நிலையம் கூட சேர்ப்பதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இந்த கல்பாக்கம் அணுமின் நிலையம் 1974-ம் ஆண்டில் செயல்படும் என்று முன்பு சொல்லப்பட்டது. இப்போது 1977-ல் செயல்படும் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிலாவது அது செயல்பட ஆரம்பித்துவிடுமா? இல்லை அதிலும் ஏதாவது காலதாமதம் ஏற்படுமா? ஒரு அணுமின்நிலையம் ஆரம்பித்ததில் இருந்து அது செயல்பட எவ்வளவு ஆண்டுகளாகின்றன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். வேலை பார்க்கும் தாய்மார்களின் வீட்டுக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. வேலைவாய்ப்பு எதுவுமே இல்லாமல் வறுமையிலே வாடிக்கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பேணிக் காக்க, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவும், ஊட்டசத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. தாயற்ற குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த வகையில் காரியங்கள் நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் காரியங்களை நடத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

*Shops in Slum Clearance tenaments*

*714 Q.—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the shopping structures built by the Slum Clearance Board under the Remunerative Scheme at the Marina opposite the All-India Radio have been leased out to private parties; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) ஆல் இந்தியா ரேடியோ எதிரில், நொச்சிக்குப்பத்தில் குடிசை மாற்று வாரியத்தின் ஆதாயம் தரும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சிறு கடைகளின் குத்தகை உரிமை 15—2—1974 அன்று ஏலத்தில் விடப்பட்டது. நான்கு தனிப்பட்ட நபர்கள் 1—3—1974 முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகை எடுத்துள்ளனர்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, அதிலே மொத்தம் எத்தனை கடைகள் இருக்கின்றன? நான்கு பேர்களின் கடைகளும் ஒரே கடையா அல்லது தனித் தனியான கடைகளா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான்கு பேர்களும் தனித் தனியாக. அதிலே ஒரு கடிகாரக் கடை, ஒரு பொது விற்பனை நிலையம், ஒரு குளிர் பானங்கள்-அலங்கார பொருட்கள் விற்பனை இடம், ஒரு சிற்றுண்டி விடுதி என்று ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.



## அணு மின் நிலையங்கள்

*715 வினா- திரு. என். கிட்டப்பா:
திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அணுமின் ஆலைகள் நிறுவிட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தூத்துக்குடிக்கருகே இரண்டாவது அணுமின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. மொத்த நிதி நிலைமையும் அணுமின் சக்தித் திட்டத்திற்குக் கிட்டும் நிதி வாயில்களையும் கருத்தில் கொண்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் புதிய திட்டம் எதுவும் செயல்படுவதற்கில்லை என்று மத்திய அரசு எழுதியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, மாநில அரசு இதற்காக மத்திய அரசுக்கு எப்பொழுது எழுதியது? அதற்கு ஏதாவது மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே. இது பல்லாண்டுகளுக்கு முன்னால், சுமார் 5 ஆண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இரண்டாவது அணு மின் நிலையம் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. தனியாகக் கமிட்டி போட்டு அந்த இடத்தையெல்லாம் பார்க்க வேண்டும், செலக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதைப் பார்த்து இடம் பார்த்த பிறகு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலேயே ஒரு அணு மின் நிலையம் கூட சேர்ப்பதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இந்த கல்பாக்கம் அணுமின் நிலையம் 1974-ம் ஆண்டில் செயல்படும் என்று முன்பு சொல்லப்பட்டது. இப்போது 1977-ல் செயல்படும் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிலாவது அது செயல்பட ஆரம்பித்துவிடுமா? இல்லை அதிலும் ஏதாவது காலதாமதம் ஏற்படுமா? ஒரு அணுமின்நிலையம் ஆரம்பித்ததில் இருந்து அது செயல்பட எவ்வளவு ஆண்டுகளாகின்றன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். வேலை பார்க்கும் தாய்மார்களின் வீட்டுக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. வேலைவாய்ப்பு எதுவுமே இல்லாமல் வறுமையிலே அடிபட்டுக்கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பேணிக் காக்க, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவும், ஊட்டசத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. தாயற்ற குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த வகையில் காரியங்கள் நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் காரியங்களை நடத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

*Shops in Slum Clearance tenaments*

* 714 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the shopping structures built by the Slum Clearance Board under the Remunerative Scheme at the Marina, opposite the All-India Radio have been leased out to private parties; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(ஆ) ஆல் இந்தியா ரேடியோ எதிரில், நொச்சிக்குப்பத்தில் குடிசை மாற்று வாரியத்தின் ஆதாயம் தரும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சிறு கடைகளின் குத்தகை உரிமை 15—2—1974 அன்று ஏலத்தில் விடப்பட்டது. நான்கு தனிப்பட்ட நபர்கள் 1—3—1974 முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகை எடுத்துள்ளனர்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவரவர்களே, அதிலே மொத்தம் எத்தனை கடைகள் இருக்கின்றன? நான்கு பேர்களின் கடைகளும் ஒரே கடையா அல்லது தனித் தனியான கடைகளா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான்கு பேர்களும் தனித் தனியாக. அதிலே ஒரு கடிகாரக் கடை, ஒரு பொது விற்பனை நிலையம், ஒரு குளிர் பானங்கள்-அலங்கார பொருட்கள் விற்பனை இடம், ஒரு சிற்றுண்டி விடுதி என்று ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.



## அணு மின் நிலையங்கள்

* 715 வினா—திரு. என். கிட்டப்பா:

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அணுமின் ஆலைகள் நிறுவிட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தூத்துக்குடிக்கருகே இரண்டாவது அணுமின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. மொத்த நிதி நிலையையும் அணுமின் சக்தித் திட்டத்திற்குக் கிட்டும் நிதி வாயில்களையும் கருத்தில் கொண்டு ஐந்தாவது திட்டக் காலத்தில் புதிய திட்டம் எதுவும் செயல்படுவதற்கில்லை என்று மத்திய அரசு எழுதியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, மாநில அரசு இதற்காக மத்திய அரசுக்கு எப்பொழுது எழுதியது? அதற்கு ஏதாவது மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, இது பல்லாண்டுகளுக்கு முன்னால், சுமார் 5 ஆண்டு, 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இரண்டாவது அணு மின் நிலையம் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. தனியாகக் கமிட்டி போட்டு அந்த இடத்தையெல்லாம் பார்க்க வேண்டும், செலக்ட் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதைப் பார்த்து இடம் பார்த்த பிறகு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியாவிலேயே ஒரு அணு மின் நிலையம் கூட சேர்ப்பதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-30)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** இந்த கல்பாக்கம் அணுமின் நிலையம் 1974-ம் ஆண்டில் செயல்படும் என்று முன்பு சொல்லப்பட்டது. இப்போது 1977-ல் செயல்படும் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவிலாவது அது செயல்பட ஆரம்பித்துவிடுமா? இல்லை அதிலும் ஏதாவது காலதாமதம் ஏற்படுமா? ஒரு அணுமின்நிலையம் ஆரம்பித்ததில் இருந்து அது செயல்பட எவ்வளவு ஆண்டுகளாகின்றன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஆறு ஆண்டுக்காலத்தில் கட்டி முடிக்கலாம் என்று சொல்கிறார்கள். இந்த அணுமின் நிலையத்திற்கு வேண்டிய சில பொருள்கள் எல்லாம் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அன்னியச் செலாவணிச் சிக்கலும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் கல்பாக்கம் அணுமின்நிலையம் 1974-ம் ஆண்டில் ஆரம்பிக்க வேண்டியது 1977-ல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதைச் சற்று துரிதப்படுத்துவதற்கு நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தமிழகத்திலிருந்து 12 திட்டங்களுக்காக ஒப்புதல் பெற மத்திய அரசுக்கு அனுப்பியும் இதுவரையில் ஒன்றுக்குக் கூட மத்திய அரசு அனுமதி தரவில்லை. இப்படியே போனால் வருகிற ஆண்டுகளில் நிச்சயமாக தமிழ்நாடு மின்சாரத் தட்டுப்பாட்டைச் சந்திக்க வேண்டிய ஒரு அவல நிலை ஏற்படும். ஆக இதை உத்தேசித்தாவது ஒரு திட்டத்திற்காவது அனுமதி தரவேண்டுமென்று நம் அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அடிக்கடி டெல்லியிடம் தொடர்பு வைத்துக்கொண்டு இந்தத் திட்டங்களுக்கு கூடிய சீக்கிரம் க்ளியரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று திட்டக் குழுவிடமும், சி.பி.டபிள்யூ.சி.-யிடமும் கேட்டுக்கொண்டு வருகிறோம். நமது முதல் அமைச்சர் அவர்கள்கூட க்ளியரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister for Electricity, I understand that the Government of India is not going to give any new Atomic Station in the Fifth Five-Year Plan. In view of more number of pumpsets for agriculture and also power for industries, there is going to be more demand for electricity and there is going to be power crisis. May I know from the Hon. Minister whether the Tamil Nadu Government would insist on the Central Government to give at least one or two Atomic stations for Tamil Nadu in the Fifth Five-Year Plan?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சேர்க்கவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். மீண்டும் வலியுறுத்துவோம்.



**திரு. ஏ. எம். இராஜா:** ஒரு நாட்டினுடைய தொழில் வளர்ச்சி அந்த நாட்டில் உற்பத்தியாகிற மின்சாரத்தின் அளவைப் பொறுத்திருக்கிறது. அந்த முறையில் நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மின்சாரப் பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த நிலையில் மத்திய அரசு நமக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் கூட நம் அரசே நம் மக்களிடமிருந்து நிதிகளைத் திரட்டி இந்த நாட்டில் ஒரு அணுமின் நிலையத்தினை ஏற்படுத்த இந்த அரசு முன்வருமா? அப்படி அணுமின் நிலையத்தை ஆரம்பிக்கும்போது இப்போது 400 மெகாவாட், 800 மெகாவாட் என்று ஆரம்பிக்கிறார்கள். அது அன்-எகனாமிக்கலாக இருக்கிறது. ஆகவே, குறைந்தது 2000 மெகாவாட்டுக்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்கினால் செலவு குறைவாக இருக்கும் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அப்படிச் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நம் மாநில அரசு ஏற்படுத்திவிட முடியாது. ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால்கூட மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் ஆரம்பிக்க முடியும். ஒவ்வொரு மின்சாரத் திட்டத்திற்கும் அதிகப் பணம் செலவாகிற காரணத்தால் தமிழக அரசு நிதியிலிருந்து ஒரு பெரிய மின் நிலையத்தை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஆயிரம் இரண்டாயிரம் மெகாவாட் என்று போடும்போது செலவு சுருக்கமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். மத்திய அரசு இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று நாமும் வற்புறுத்தலாம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** ஹொகனக்கல் நீர் மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்த அந்த மாநில அரசு தயாராகயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் நம் அமைச்சர்களுடன் கலந்து உரையாடி ஹொகனக்கல் மின்சாரத் திட்டத்தைக் கொண்டுவர தயாராயிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதேபோல் இங்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

[1974 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நமது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்களும் நானும் கர்நாடக அமைச்சர்களைச் சந்தித்து இது சம்பந்தமாக பேசலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு கை விரித்து விட்டதாகத் தெரிகிறது. இருப்பினும் மற்ற மாநிலங்கள் அயல்நாட்டு தொடர்போடு இப்படிப்பட்ட நிலையங்களை அமைப்பதாகத் தெரிகிறது. நாமும் மத்திய அரசைக் கலந்து அயல்நாட்டுத் தொடர்போடு இப்படிப்பட்ட மின்நிலையத்தை அமைக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போதிருக்கிற நிலையில் அணுமின் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னால் அயல்நாட்டுத் தொடர்போடுதான் அமைக்க முடியும். மொத்தத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இந்த நாட்டில் எதுவுமே சேர்க்கப்படவில்லையென்பது வருத்தப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். அணுமின் நிலையம், அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம் என்றெல்லாம் இருக்கின்றன. மழை இல்லாவிட்டால் நீர் மின் நிலையத்திலிருந்து மின்சாரம் கிடைப்பது என்பது குறைகிறது. அனல் மின் நிலையம் என்றால், நிலக்கரி பஞ்சம், ரெயில்வே ஸ்ட்ரைக் என்றால் அது தடைப்படுகிறது. ஆகவே அணுமின் நிலையம்தான் சாலச் சிறந்தது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. மீண்டும் மத்திய அரசு பரிசீலனை செய்வது நல்லது என்று கருதுகிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நீர் மின் நிலையம் சம்பந்தமாக நம் அரசுக்கும் கர்நாடக அரசுக்கும் பேச்சுவார்த்தை என்று சொன்னார்களே, இந்தப் பேச்சுவார்த்தை மூலம் நாம் இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியுமே, இதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை இல்லையே, ஆகவே இதைத் துரிதமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இன்டர் ஸ்டேட் டிஸ்ப்பியூட் என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். பத்து ஆண்டுகளாகப் பேசிப் பேசி வந்திருக்கிறோம். இப்பொழுதுள்ள பிரச்னை, மின்சாரப் பற்றாக்குறை அதிகரிப்பதால் என்ன நிலைமை ஏற்படும் என்று ஒவ்வொரு மாநிலமும் உணர்ந்து ஏதாவது



1974 ஏப்ரல் 2]

பரிகாரம் காண வேண்டுமென்று அந்த அந்த மாநிலங்கள் கருதுகின்றன. அந்தக் கட்டத்தில் கர்நாடகத்தை அழைத்துப் பேச வேண்டுமென்று கருதுகிறோம். அவர்கள் இதற்கு சற்று இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. என். இராஜாங்கம் :** 1962-63-ம் ஆண்டு அப்போது முதல் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. காமராஜ் அவர்கள் ஹொகனேக்கல் நீர் மின்சாரத் திட்டத்திற்கு ஒரு அஸ்திவாரக் கல் கூட நாட்டியிருக்கிறார்கள். இன்டர் ஸ்டேட் டிஸ்ப்பியூட் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்போது இந்த இன்டர் ஸ்டேட் டிஸ்ப்பியூட் விவகாரம் இல்லையா? எப்போது அந்த அடிக்கல் நாட்டினார்கள். பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அதன்மீது ஏதாவது தகராறு இருந்தால் அதுபற்றி குறிப்புகள் ஏதாவது இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அங்கு நீர் மின்சார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியதாக எனக்கு தகவல் இல்லை. ஒருவேளை அங்கு டி.பி. கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்களோ என்னவோ அது சரியாகத் தெரியவில்லை. அந்த நீர் மின் நிலையம் ஏற்படுத்துவதற்கு அன்று திரு. அப்பாத்துரை தலைவராக இருந்த போதே இதுபற்றி தீவிரமாக பேசப்பட்டு வந்தது. இடையில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் இதை எடுத்து செய்யமுடியவில்லை. மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் யோசித்து இதுபற்றி எல்லோருடனும் கலந்து பேசவேண்டுமென்ற நோக்கத்தில் இருக்கிறார்கள். விரைவில் கலந்து பேசலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, sometime back, there was a proposal for the Magdot Hydro Electricity Scheme near Hosur–Mysore border and there was also a talk between the Karnataka and Tamil Nadu Government with regard to this proposal. The Hon. Ministers of Karnataka and Tamil Nadu also met a number of times and it was considered that the scheme was feasible. May I know from the Hon. Minister for Electricity whether that proposal has been dropped? Or is it yet alive?

[1974 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இரண்டு மாநிலங்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பின்னால்தான் இரண்டு மாநிலங்களுக்குமிடையே இருக்கிற திட்டங்களைப் பூர்த்தி செய்கிற சூழ்நிலை உருவாகும். முதல் கட்டமாக பேச்சுவார்த்தைத் தொடங்கலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. எம். தேவராசன்:** இந்த ஆண்டு மின்சாரப் பற்றுக்குறை ஏற்படுவது உறுதிதான். ஆகவே அதைக் கருத்தில்கொண்டு சினிமாக் காட்சிகளை இப்போதிருந்தே குறைக்கவும் தனிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அதிகமாக ஜெனரேட்டர்களைக் கொடுக்கவும் அரசு ஆவன செய்தால் இந்த நிலைமை ஓரளவிற்கு தவிர்க்கலாம். ஆகவே உடனடியாக சினிமாக் காட்சிகளைக் குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்த ஆண்டு மின்சாரப் பற்றுக்குறை ஏற்படுவது உறுதி என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தியா பூராவும் இப்போதுள்ள அமைப்புப்படி பத்தாண்டுகள் மின்சாரக் குறைவு இருக்கும் அளவில்தான் திட்டங்கள் இருக்கின்றன. மின்சார விநியோகத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த அத்தியாவசியத் தேவைகளை எந்தெந்த அளவில் வைத்துக் கொள்ளலாம் என்று பற்றுக்குறையைக் கணக்கிட்டு முடிவு செய்கிறார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை இந்தக் குழுவில் வைத்துப் பேசுவதற்கு தயாரா யிருக்கிறேன்.

**திரு. ந. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல் மின் நிலையங்கள் இங்கு துவங்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் மைசூர் மாநிலத்தில் முதல் அமைச்சராக இருந்த திரு. வீரேந்திரப் பட்டீல் அவர்கள் ஹேமாவதி அணைக்கட்டை மத்திய அரசின் அனுமதியில்லாமல் கட்டத் துவங்கினார்கள். அதற்குப் பின்னால் மத்திய அரசு அதற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து அந்தத் திட்டத்தையும் அங்கீகரித்திருக்கிறது. மத்திய அரசினுடைய பாலிஸி கெஞ்சினால் மிஞ்சுவது மிஞ்சினால் கெஞ்சுவது என்ற முறையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம்.



1974 ஏப்ரல் 2]

**திரு. நா. வீராசாமி:** அதை வேண்டுமானால் விட்டுவிடுங்கள். கெஞ்சினால் மிஞ்சுவது, மிஞ்சினால் கெஞ்சுவது என்று சொன்னதை வேண்டுமானால் விட்டு விடுங்கள். இதை மனதில் வைத்து நம் அரசும் மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல் கட்டிப் பார்ப்போம். அப்படி கட்ட ஆரம்பித்த பிறகு அவர்கள் அனுமதியைப் பெற முயற்சி எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நாமும் அப்படி ஒரு திட்டத்தை அனுமதி பெறாமல் ஆரம்பித்து விட்டு பிறகு பணம் கொடுப்போம் என்று சொன்னால் அப்படி செய்துவிடலாம்.

**திரு. கு. அ. பொம்மன்:** தொழில் நிர்வாகிகள், அவர்கள் ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டு மின் உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லி முன்வந்தால் அவர்களுக்கு வேண்டிய ஜெனரேட்டர்களை வைத்துக்கொள்ள அரசாங்கம் அனுமதி தருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதைப் பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது. தனிப்பட்ட தொழிலதிபர்கள் எல்லாம் சேர்ந்து மின்சார நிலையத்தை அமைத்தால் அதைக்கூட அரசாங்கத்தில் அனுமதிக்கலாம் என்ற அளவில் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அவர்கள் தங்களுடைய தொழில்களுக்குப் போக எஞ்சி இருக்கும் மின்சாரத்தை வாரியத்திற்குக் கொடுத்து விட வேண்டும். இதுபற்றி மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் தொழிலதிபர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** ரயில்வே தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படி ஸ்ட்ரைக் செய்தால் நிலக்கரி வருவது பாதிக்கப்படும். இதிலே அரசு எடுத்திருக்கும் முன்னெச்சரிக்கை ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதுபோல் இடர்ப்பாடு வரும் என்றுதான் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ரயில்வே ஸ்ட்ரைக் வரும் காலத்தில் கப்பல் மூலம் நிலக்கரி கொண்டு வர இயலும். ரயில்வே ஸ்ட்ரைக் வரக்கூடாது என்று எல்லோரும் கருதுகிறார்கள், கருதவேண்டும்.

### *Paralayar Hydro Electric Scheme*

*716 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the investigation on the feasibility of the Paralayar Hydro Electric Scheme in Kanyakumari district has been completed; and

(*b*) if so, when the work will be started?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) ஆம். இது குறித்து நிறைவேற்றிய விரிவான ஆய்வுகளின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் "பரளையாறு புனல் மின் திட்டம்" குறித்து விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு மின் வாரியம் தயாரித்து அதற்கு அனுமதி பெறுவதற்காக அதை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தது. இத்திட்டம் தற்போது மத்திய நீர்—மின்விசை ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது. திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்தத் திட்டத்திற்குச் செலவிட வேண்டிய தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இது 30 மெகா வாட் சக்தி கொண்டது. 4½ கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் வரை செலவாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று திட்டம் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

### சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் மின் உற்பத்தி

*717 வினா—**திரு. ந. நாச்சியப்பன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த்தேக்கம் மூன்றாவது கட்டத்தை உயர்த்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) & (இ) சாத்தனூர் அணையின் உயரத்தை உயர்த்துவது தொடர்பான தொடக்க அறிக்கை ஒன்று, (பாசனத்) தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இந்த நீர்த்தேக்கத்திலிருந்து மின் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு எதும் இல்லை.

**திரு. ந. நாச்சியப்பன்:** தற்சமயம் எதும் இல்லையென்றாலும் அணை உயர்த்தப்பட்ட பிறகாவது அரசு யோசித்து இது பற்றி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்த அணையை உயர்த்திக் கட்டினால் அதிக ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறக்கூடும் என்ற முறையில் பொதுப்பணித் துறையால் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறு இருக்குமானால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப்:** முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது தனிப்பட்டவர்கள் ஜெனரேட்டர்கள் வைத்து மின்சாரம் உற்பத்தி செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது சாத்தனூர் வருகிற நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதோடு கூட அதை இன்னும் உயரமாகக் கட்டி குறைந்த பட்ச மின்சாரம் கிடைப்பதாக இருந்தாலும் அதை உற்பத்தி செய்தால், அந்த மாவட்ட மின்சாரத் துறையின் தேவையாவது பூர்த்தி செய்யும். இதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலித்து திட்டம் தயாரிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இது மிக சிறிய திட்டமாகத்தான் கருதப்படும். 30 மெகா வாட், 40 மெகா வாட் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இங்கு 10 அல்லது 15 மெகாவாட்தான் அப்படி அணையை உயர்த்தி கட்டினாலும் கிடைக்கக்கூடும். பாசனத்திற்கு அதிக நீர் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் பொதுப்பணித் துறை மூலமாக இந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரை ஃபீசிபிலிடி திட்டங்கள் எல்லாம் முடிந்தவுடன் இதையும் பரிசீலிக்கலாம்.

**திரு. எஸ். முருகையன்:** சாத்தனூர் அணையைக் கட்டிய பிறகு ஒவ்வொரு ஆண்டும் தண்ணீர் நிரம்பி வழிந்து ஏராளமாகக் கடலில் போய்க் கலக்கிறது. விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாகக் கவனம் செலுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மற்றத் திட்டங்களோடு இதுவும் ஒரு முக்கியமான திட்டம் என்று ஆய்வில் தெரியுமானால் விரைவில் ஏற்பாடு செய்யலாம்.

## *Rationing of Petrol*

* 718 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government is working out a scheme of petrol rationing for introduction in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கே இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** பெட்ரோல் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த மாதிரி விலையை ஏற்றி இருக்கிறார்கள். சாதாரணமாக இது மத்திய தர வர்க்கத்தினரைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், மற்ற நாடுகளைப்போல் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் எந்தவிதமான கார்களும் ஓடக்கூடாது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள், யோசனை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

**திரு. என். கே. பழனிசாமி:** ஆகவே, சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் கார்களை ஓட்டக்கூடாது என்ற முறையில் மத்திய சர்க்கார் ஆலோசனை சொல்லிற்றா? பெட்ரோல் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பெட்ரோலியப் பொருள்களின் விலை உலக மார்க்கெட்டில் உயர்ந்து கொண்டே போகிறது. இதை உணர்ந்து பெட்ரோல் பயன்படுத்துகிற



அளவைக் குறைக்க வேண்டுமென்று மத்திய சர்க்கார் கருதிற்று. அதுபற்றி மாநில சர்க்காரை ஆலோசனை கேட்டபோது எந்த அளவுக்குக் குறைக்க வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த அளவுக்குப் பங்கீட்டு முறைதான் சிறந்தது. விலையை உயர்த்துவதால் பணக்காரர்களுக்குப் பலன் ஏற்படுமே தவிர, ஏழை நடுத்தர மக்களுக்குப் பலன் தராது; ஆகவே, பங்கீட்டு முறைதான் சிறந்தது என்று இந்த அரசு எடுத்துச் சொல்லிற்று. ஆனால் அவர்கள் விலையை உயர்த்தினார்களே தவிர, பங்கீட்டு முறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த வாகனங்கள் எல்லாம் ஓடாமல் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவசியமான, தேவையான, அவசரமான பயணங்களை மேற்கொள்ளவேண்டி வரலாம். அந்த முறை நம்மைப் பொறுத்தவரை சரியாக இருக்காது.

அரசாங்கம் பயன்படுத்தும் வாகனங்களைப் பொறுத்தவரை இந்தச் சுற்றறிக்கை போட்டு அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** பெட்ரோல் விலை ஏகமாகக் கூடிவிட்ட காரணத்தால் டாக்சிக்காரர்கள் தொழில் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ரேஷன் வைத்து முன்பு இருந்த விலையில் ஒரு நாளைக்கு ஐந்து லிட்டரோ அல்லது பத்து லிட்டரோ கொடுத்தால் நடுத்தர மக்களுக்கும், டாக்சிக்காரர்களுக்கும், டாக்சி டிரைவர்களுக்கும் நல்ல நன்மையைச் செய்வதாக இருக்கும். இந்தக் கருத்து வலியுறுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 29—9—1973-ல் பல் வேறு மாநில அதிகாரிகள் கலந்து கொண்ட குழுக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நம்முடைய அரசின் சார்பில் இந்தப் பங்கீட்டு முறைதான் உயர்ந்தது, விலையை உயர்த்துவதற்குப் பதிலாக பங்கீட்டு முறையைக் கொண்டு வருவது ஏழை எளிய டாக்சி டிரைவர்கள், ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் மற்றவர்களுக்குப் பலன் அளிக்கக் கூடியது. பெட்ரோல் விலையை உயர்த்துவதன் மூலம் கள்ள மார்க்கெட் பணம் வைத்திருப்பவர்களுக்குச் சௌகரியமாக இருக்குமே தவிர ஏழைகளுக்கு நன்மை பயக்காது என்பதை வலியுறுத்தி எடுத்துச் சொன்னோம். மத்திய சர்க்கார் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

[1974 ஏப்ரல் 2

**திரு. கே. டி. கே. தங்கமணி**; சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. தமிழ்நாட்டிலும் இன்னொரு மாநிலத்திலும் டாக்சி டிரைவர்களுக்குப் பெட்ரோல் குறைந்த விலையில் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த டாக்சி டிரைவர்களின் லைசென்ஸை வைத்து ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பெட்ரோல் என்று நிச்சயித்து குறைந்த விலையில் பெட்ரோல் கொடுக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா? மத்திய சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: அத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தில் இல்லை. மத்திய சர்க்காரைப் பொருத்தவரை எந்த ஆலோசனையையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

**திரு. கு. காமாட்சி**: பெட்ரோலைப் பற்றி நல்ல அரிய யோசனைகளை நம்முடைய அரசு மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறது. பழையபடி இன்னொரு முறை அவற்றை நம்முடைய அரசு வலியுறுத்துமா? வேண்டுமானால் இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு, அதன் வாயிலாக மத்திய சர்க்காருக்குத் தெரியப்படுத்தி, இந்த முறையை அனுசரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: அரிய யோசனைகள் எதையும் மத்திய அரசு ஏற்று பழக்கப்பட்டது அல்ல. ஆகவே, தீர்மானம் பலன் அளிக்காது.

**திரு. கோவை செழியன்**: கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் வசதியுள்ளவர்கள் அல்ல. கார் என்பது இப்போது வாழ்க்கையிலே அத்தியாவசியப் பொருளாகிவிட்டது. ஆனால் இன்றைக்கு விற்கின்ற பெட்ரோல் விலையில் காரைக் குதிரை கட்டி இழுத்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: கேள்வியைக் கேளுங்கள். யோசனை சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

**திரு. கோவை செழியன்**: அந்தக் கார்களுக்கு டீசல் என்ஞ்சின் பொருத்த வழிவகை செய்யவேண்டும். இப்போது டீசல் என்ஞ்சின் தனியாகத் தருவதில்லை. கார்களுக்கு டீசல்



4 ஏப்ரல் 2]

ன்ஞ்சின் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தால் மிகவும் ன் உள்ளதாக இருக்கும். இந்த நல்ல காரியத்தை அரசு ய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: கார் அத்தியாவசியப் பாருள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை ற்றுக்கொள்வதற்கில்லை. கார்களிலே வேண்டுமானால் வாடகைக் ார்கள் இருக்கலாம். சொந்தக் கார்களுக்கு அவசியமே இல்லை. நகரப் போக்குவரத்து நெரிசலுக்கு அவைகளும் காரணம். ன்னை மாநகரத்தில் கார்கள் இல்லையென்றால் எவ்வளவோ பகளை விடலாம். எல்லோருக்கும் பயன்படும். கார்கள் க்கப்பட வேண்டிய ஒன்று. இன்று இருக்கும் நிலையில் தற்கு முடியாமல் இருந்து கொண்டிருக்கிறோம். டீசல் எஞ்சின் ாருத்தலாமா, மற்ற எஞ்சின் பொருத்தலாமா என்ற பிரச்னை ழவில்லை.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன்**: தலைவரவர்களே, பெட்ரோல் வட்டு வந்தவுடன் அரசாங்க ஜீப்களில் மைலோமீட்டரை டுங்கிவிட்டு ஓட்டுவதாகச் சொல்லப்படுகிறது, அது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் புகாராகக் கொடுக்கவேண்டும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்**: தலைவரவர்களே, அமைச்ச ரவர்கள் ஏழை எளியவர்கள் சார்பாக மத்திய அரசோடு வாதாடிய தாகச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் ஏழை எளிய வர்கள்தான். அவர்கள் தொகுதிகளில் அரசாங்க பஸ்களில் போவதற்குப் பதிலாக அவர்களுக்குக் காரில் செல்வதற்கு ரேஷன் முறையில் குறைந்த விலையில் பெட்ரோல் கொடுக்க இந்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏழைகளின் பிரதிநிதிகள் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. ரேஷன் முறை எல்லோருக்கும் வரவேண்டுமென்று குறிப்பிட்டோம். எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் அமல்படுத்துவது கூட சுலபமாக இருக்கும்.

ஆனால் அதிலே நிர்வாக சங்கடங்கள் ஏற்படும் என்ற காரண
தால, அல்லது அதிக நிர்வாகச் செலவு ஏற்படும் என்று கருதி
என்னவோ மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சாராயத்திலிருந்
பெட்ரோல் தயாரிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அதற்கா
இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறதா என்று அறி
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இ
எல்லாம் விஞ்ஞான கூடத்திற்கு அனுப்பவேண்டிய யோசனை.

## சென்னையில் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்கள்.

*719 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு
வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

தற்போது சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்
களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 15—2—1974 முடிய
சென்னை நகரில் ஓடும் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின்
எண்ணிக்கை முறையே 3,745, 842 ஆகும்.

*720 Q.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISAMY: Will the Hon
the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal under the consideration o
the Government to increase the number of licences for th
plying of autorickshaws in Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) போலீஸ்
ஆணையாளரிடம் இருந்து சென்னை மாநகரில் ஆட்டோ ரிக்ஷாக்
களின் எண்ணிக்கைக் குறித்து உச்சவரம்பினை 900-லிருந்து
1,150 ஆக உயர்த்த செயற்குறிப்பு வந்துள்ளது. இது அரசின்
பரிசீலனையில் உள்ளது.



திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, பெட்ரோல் விலையும் அதிகமாகியிருக்கிறது, டாக்ஸி கட்டணமும் உயர்ந்து இருக்கிறது. ஆகவே, பயணிகளுக்கு வசதியாக இருக்க உடனே எண்ணிக்கையைக் கூட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கூடுதலாக 250 ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இந்தச் சென்னையில் மட்டுமல்லாமல், இப்போது இருக்கும் பெட்ரோல் நெருக்கடியின் காரணமாக, மற்ற மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள நடுத்தர மக்களின் வசதிக்காக ஆட்டோ அதிகப்படியாக விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, உடனடியாக ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன் வருமா? டாக்ஸிக்களுக்குப் டீசல் இன்ஜின் வைக்க அரசு வசதி செய்து கொடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, விலைவுக்குக் காரணம் எங்கோ இருக்கிறபோது, விலைவிற்கான பரிகாரம் மட்டும் நாம் ஏன் தேடவேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, கிட்டத்தட்ட 3,700 டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடுகின்றன என்று சொன்னார்கள். டாக்ஸி காரில் போனால் நாம்—பாசன்ஜர்கள்—தள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, 10 ஆண்டுகள் தான் வண்டிகள் ஓடலாம், அதற்குப் பிறகு பழைய வண்டிகளுக்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று நமது அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அத்தகைய யோசனை ஒன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்தது. ஆனால் சில இடங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலான வண்டிகளைக் கூட நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் நீலகிரி,

திருநெல்வேலி மாவட்டங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ஜீப்புகளைக் கூட நல்லமுறையில் வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அதை 'பான்' செய்வது என்பதை அரசாங்கம் பரிசிலனை செய்து, வேண்டாம் என்று விடப்பட்டிருக்கிறது. ஆனால் போக்கு வரத்துத் துறையில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஓடும் வண்டிகள் மறுபடியும் அனுமதி பெற வருகிறபோது, அவைகள் சரியாக இருக்கின்றனவா என்பதை சரிபார்த்த பிறகே அவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று உத்தரவு ஏற்கனவே இருந்து வருகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கார் அவசியமான வாகனம் இல்லை என்று சொன்னார்கள். எம்.எல்.ஏ.-க்கள் டாக்சியில் செல்வதற்காவது கட்டணச் சலுகைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே சலுகைக்கான பட்டியலில் சட்டமன்ற உறுப்பினர்கள் அவசரப் பட்டு வந்து விடக்கூடாது.

**திரு. என். டென்னிஸ் :** சார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு லைசன்சு வழங்கும்போது, கமர்சியல் ஆஸ்பெக்ட்டில் லைசன்ஸ் கேட்பவர்களுக்கு வழங்கப்படுவதை விட, தனிப்பட்டவர்களுக்கு லைசென்சு வழங்குவதை விட, செல்ப்--கோவாபரேடிவ் அடிப் படையில் கேட்பவர்களுக்கு லைசென்சு வழங்குவதற்கு அரசாங்கம் ப்ரிஃபரன்சு கொடுக்குமா? அதோடு ஹைதரபாத், பெங்களூர் போன்ற இடங்களில் 'நாய்ஸ்லெஸ்' ஆட்டோ ரிக்ஷாக் கள் ஓடுகின்றன. அம்மாதிரி இங்கே கொண்டுவரப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, டிரைவர்களே கேட்டால், ஓட்டுநர்களே கேட்டால், அவர்களுக்குத் தான் முதலிடம் தரவேண்டுமென்று நம்முடைய விதிமுறைகளில் சொல்லி இருக்கிறோம். ஆனால் கெட்டிக்கார சில உரிமையாளர் டிரைவர்கள் பேரிலே கேட்டு 4-5 வண்டிகளுக்குக் கூட லைசென்ஸ் வாங்கிவிடுகிறார்கள். அவற்றையும் காவல் துறையிடம் சொல்லி அப்படி எதாவது இருக்குமானல் அந்த லைசென்சை ரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் ஏற்கனவே காவல் துறைக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.



சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாக்கள் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக் கள் ஹைதராபாத்திலும், பெங்களூரிலும் ஓடுவதாகச் சொன்னார்கள். சத்தம் இல்லாமல் ஓடும் ஆட்டோ ரிக்ஷாவை நான் ஹைதராபாத்தில் பார்த்தது இல்லை. பெங்களூரில் போடும் சத்தம் சென்னைவரை கேட்கிறது.

### காலணிகள் உற்பத்தி நிலையம், மப்பேடு

*721 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊதிய உயர்வு, தனி ஈட்டுப்படி போன்ற சில கோரிக் கைகளை நிறைவேற்றித்தரும்படி கேட்டு, செங்கற்பட்டு மாவட்டத் திலுள்ள மப்பேடு அரசினர் காலணிகள் உற்பத்தி நிலையத் தொழிலாளரிடமிருந்து இவ்வாண்டு, பிரப்ரவரி, மார்ச்சு மாதங் களில், அரசுக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரம் யாது?

(உ) கோரிக்கைகள் குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :**

(அ) ஆம்.

(இ) (1) நாட்கூலியை ஐந்து ரூபாயாக உயர்த்துதல்.

(2) இரண்டாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி தனி ஈட்டுப்படி வழங்குதல்.

(3) பண்டிகை முன் பணம் வாங்குதல்.

(4) அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் பஞ்சப்படி வழங்குதல்.

(5) ஆண்டு ஒன்றிற்கு 12 நாட்கள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்குதல்.

இந்த நிலையம் ஆரம்பத்திலிருந்து நஷ்டத்திலேயே நடந்ததால் மூடப்பட்டுவிட்டது. அதனல் தொழிலாளர்களின் கோரிக்கைகளை கவனித்து ஆவன செய்ய தற்சமயம் வாய்ப்பு இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker Sir, On a point of order, Sir, this question is about 'footwear'. How is it that the Hon. Minister for Religious Endowments is answering it?

**திரு. நா. வீராசாமி :** அம்மையார் அவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்று இருக்கிற இலாகா கூட தெரியவில்லை. அவர் காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீசுக்கும் அமைச்சர்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, இந்த மப்பேடு கிராமம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கேயுள்ள புட்வேர் யூனிட் வேலை செய்யாமல், அங்கேயுள்ள தொழிலாளர்கள் பல மாதமாக வேலைக்குப் போகாமல் இருக்கிறார்கள். ஆகவே, வேலைக்குத் திரும்புவதற்காக உடனடி நடவடிக்கை எடுத்து, மீண்டும் அங்கே வேலையை ஆரம்பிக்க அவர்கள் கேட்கிற கூலி உயர்வினை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 1967-68-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நாளிலிருந்தே, மூடுகிற மூன்று நாட்களுக்கு முன்வரையில் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு வந்திருக்கிறது. அதற்குக் காரணம், அந்தத் தொழிற்சாலை எங்கே இருக்கிறது என்று தெரியாத அளவுக்கு உள்ள இடத்தில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து விட்டார்கள். அங்கே தயாரிக்கப்பட்ட காலணிகளும் வெளியே விலைக்குப் போகாத காரணத்தால், தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான கூலியைக் கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. தொடர்ந்து நடத்தினால், நஷ்டத்தில் தான் இயங்கும் என்ற காரணத்தை வைத்து கடந்த 3 நாட்களுக்கு முன்னால் அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டோம்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டால் பரவாயில்லை, அங்கே வேலைசெய்கிற 30 தொழிலாளர்களுக்கும் மாற்று வேலை தருவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு அங்கே எந்தவிதமான வேலையும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற தொழிற்சாலைகளில்—அந்தத் துறையில் உள்ளவற்றில்—வேலைவாய்ப்பு ஏற்படுகிற நேரத்தில் அதுபற்றி கவனிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—வினா எண்ணின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வினா உறுப்பினரால் கேட்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்

### (அ) ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு துணை வினாக்கள் கேட்க போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

(முற்பகல் 10-00)

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பல முறை உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு கையை தூக்குகிறோம். கேள்வி நேரத்தில் உள்ளபடியே எங்களுக்கு ஒரு கோட்டா ஏதாவது வைத்திருக்கிறீர்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. எவ்வளவு கையை தூக்கினாலும், காகிதத்தை அசைத்தாலும், உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு முடியவில்லை. எந்த அடிப்படையில் நீங்கள் துணைக் கேள்விகளை ஒதுக்குகிறீர்கள்? ஆளும் கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள், எதிர்க்கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள் என்று தயவு செய்து தெரிவித்தால் நலமாக இருக்கும். ஆளும் கட்சியினர்கள் புறக்கணிக்கப்படுகிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய வீராசாமி அவர்கள் சில குறைகளைச் சொல்லி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நடைமுறைகள் நடக்கும்பொழுது, சபாநாயகர் எந்த விதத்தில் இந்த மன்றத்தை நடத்துகிறார்களோ, அந்த விதத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்களாவோம். ஆனால், சட்டத்திற்குப் புறம்பாக நீங்கள் இந்த மன்றத்தை நடத்தினால்

அப்பொழுதுதான் ஒழுங்குப் பிரச்னையை கிளப்ப முடியும். துணைக் கேள்விகள் கேட்க உறுப்பினர்களை அழைப்பது சபாநாயகருடைய தனிப்பட்ட அதிகாரம், டிஸ்கிரஷனரி பவர். அதை யாரும் கேட்க முடியாது. மாண்புமிகு வீராசாமி அவர்கள் அடிக்கடி உங்களுடைய நடைமுறையைக் குறை சொல்கிறார்கள். அந்த அளவுக்கு அவர் ஒழுங்குப் பிரச்னையை எழுப்புவது முறைதானா?

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am on a point of order. It seems I have to pay a serious penalty for going out of ADMK and I am never given a chance to put supplementaries. I never thought that it will be my fate. That does not mean I will go back there.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாத பாயின்ட் ஆப் ஆர்டர்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் வீராசாமி அவர்களுக்கு ஏற்கனவே இன்றையதினம் நான்கு முறை அந்த வாய்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு கூட, அவர்கள் செல்லப் பிள்ளையாக இருந்தும் கூட, இந்த மன்றத்தில் அவர் இப்படிக் கேட்பது முறைதானா என்று கேட்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** இதை ஒட்டி ஒரு சிறிய பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தக் கடைசி கேள்வி ஒரு தொழிற்சாலை மூடப்பட்டு, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட காரியம். அவர்களுக்கு மாற்று வேலையும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவ்வளவு பிரதானமான கேள்விக்கு நீங்கள் போதுமான அளவு சந்தர்ப்பம் தரவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த வீராசாமி அவர்கள் எப்பொழுது ஆளும் கட்சியினருக்கு ஏதோ குறைபாடு இருப்பதைப் போல ஒரு தோற்றம் உண்டாக்கும் வகையில் பல நேரங்களில் இப்படி ஒழுங்குப் பிரச்னை என்று சொல்லி கிளப்புகிறார்கள். ஆளும் கட்சியினர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்று திட்டமிட்டு இப்படிச் செய்கிறார்களோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. இது சம்பந்தமாக உங்களுடைய ஆணையை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, இங்கே பாயின்ட் ஆப் ஆர்டரை முதலில் எழுப்பியவர் வீராசாமி அவர்கள். ஆனால் அதன் பின் அந்தந்த கட்சிக்காரர்களும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள். பாயின்ட் ஆப் ஆர்டருக்கு தீர்ப்புக் கொடுக்கவேண்டியது தலைவர் அவர்கள். அப்படி ஒவ்வொரு கட்சியிலுள்ள அங்கத்தினர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதற்காக ஒவ்வொரு முறையும் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி தங்களுடைய கருத்துக்களைக் கூறுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர்களை எழுப்புவதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது தெரிகிறது. இந்த அவையில் எந்த அளவுக்கு துணைக் கேள்விகள் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு நாளைக்கு வேண்டுமானாலும் ஒரு பட்டியலைக் கொடுக்கிறேன். அதிலிருந்து உறுப்பினர்கள் தெரிந்துகொள்வார்கள்.

### 3. அவை உரிமைப் பிரச்னை.

### கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணை வேந்தர் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் கூட்டத்தைச் சட்டப் பேரவை நடக்கும் நாளில் கூட்டியது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள்.

'Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give a matter of privilege against the Vice-Chancellor, Tamil Nadu Agricultural University, Coimbatore to convene the Board of management meeting (of which I am a member, elected by the Assembly) on 27th March 1974 even though I had made a telegraphic request for a postponement of the meeting, on the plea I have to attend the Assembly on 27th March 1974. Sir, the decision of the Vice-Chancellor prevents me from discharging my duties as a member of this august House and hence

his action constitutes a gross breach of the privilege of this House" என்று சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினையாகும் என்பதை சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கோவை செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்பது மற்ற பல்கலைக் கழகங்களைப் போன்றது அல்ல. அது அரசினுடைய நேரடியான கட்டுப்பாட்டின் கீழே இயங்குவது போன்று தான் அமைந்திருக்கிறது. அது ஒரு அரசாங்க பாடி என்று சொன்னாலும் கூட, அதை நிர்வகிக்கின்றவர்கள் அரசாங்கத்தில் இருக்கிற செயலாளர்கள், பினான்ஸ் செகரட்டரி, அக்ரிகல்சர் செகரட்டரி என்று இப்படி அரசினுடைய செயலாளர்கள் பலர் தான் அவர்களுடைய பதவியின் காரணமாக அங்கே பிரதிநிதித்துவம் வகிக்கின்றார்கள்.

அது போக, இந்த மன்றத்தின் சார்பிலே நான் ஏகமனதாக இந்த மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தப் பல்கலைக் கழகத்தில் அங்கம் வகிக்கின்றேன். ஆக, வெளியிலே இருப்பவர்கள் யாரும் அங்கே இல்லை. இரண்டு உறுப்பினர்களை அரசாங்கம் தான் நியமனம் செய்கிறது. ஆக, தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் என்பது அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்தோடு தொடர்பு கொண்ட பிரதிநிதிகளும் மட்டுமே இருக்கக் கூடிய ஒரு அமைப்பாகும்.

அந்த அமைப்பிலே இந்த மன்றத்தினுடைய பிரதிநிதியாக நான் அங்கே இருக்கிறேன். இதுவரையிலும் சட்டமன்றம் நடக்கின்ற நாட்களில் பல்கலைக் கழகத்தின் போர்டு ஆப் மானேஜ்மெண்ட் கூட்டம் நடைபெறவில்லை. அப்படி நடைபெற்றாலும் நாங்கள் செய்தியை எழுதி அனுப்பினால் சட்டமன்ற விடுமுறை நாட்களில் வைத்துக்கொள்வார்கள். பட்ஜெட் சம்பந்தமாக முடிவு எடுக்கவேண்டுமென்றாலும் கூட, ஞாயிற்றுக் கிழமைகளில் சாதாரணமாக வைப்பது வழக்கம். இந்த முறை வேண்டுமென்றே 27-ம் தேதி வைத்திருக்கிறார்கள். அதற்கான காரணங்கள் மூன்று இருக்கின்றன. பேரவைத் தலைவர் அனுமதியோடு அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





27-ம் தேதி நடைபெற்ற போர்டு மீட்டிங்கில் மூன்று விஷயங்களை வைத்திருந்தார்கள். அந்த விவாதத்தில் நான் கலந்து கொண்டால் துணை வேந்தருடைய எண்ணம் நிறைவேறாமல் போய்விடும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டியதில்லை. மோட்டிவ் கற்பிக்கவேண்டாம். அதெல்லாம் இங்கே வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கோவை செழியன்:** சாதாரணமாக சட்டசபை நடக்கின்றபொழுது டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. அதைப்போல் பஞ்சாயத்துக் கூட்டங்களும் நடைபெறுவதில்லை என்பது சம்பிரதாயமாக இருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் நான் கலந்துகொள்வது என்னுடைய உரிமையாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் போர்டு மெம்பர் என்றால், இந்த அவையினுடைய பிரதிநிதியாகத் தான் நான் அங்கே கலந்துகொள்கிறேன். வேண்டுமென்றே இந்த அவை நடைபெறும் நாட்களில் அந்தப் பல்கலைக் கழக போர்டு மீட்டிங் நடத்தப்படுவதால் என்னுடைய உரிமை அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவையினுடைய பிரதிநிதி என்று நான் சொல்கிறபொழுது கழகத்தினுடைய பிரதிநிதியாக நான் அங்கே இருக்கிறேன். ஆக, இந்த அவையை புறக்கணிக்கின்ற வகையிலே வேண்டுமென்றே என்னுடைய வேண்டுகோளை நிராகரித்து—செயலாளரும் அதே மாதிரி சொல்லியிருக்கிறார்கள்—இந்த அவையினுடைய பிரதிநிதி இப்படிக் கூறியும், வேண்டுமென்றே என்னுடைய உரிமையை பறிக்கிற வகையில் இந்தக் கூட்டத்தை அசெம்பிளி நடக்கின்ற நாட்களில் வைத்தது என்னுடைய உரிமையைக் கட்டுப்படுத்துவதாகும் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை செழியன் அவர்கள் எழுப்பி உள்ளது ஒரு முக்கியமான பிரச்சினை ஆகும்.

அவர் இப்பேரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழ் நா வேளாண்மைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினரா இருக்கிறார். அக் குழுவின் கூட்டத்தைப் பல்கலைக் கழக துணை வேந்தர் அவர்கள் 27—3—1974 அன்று கூட்டியிருக்கிறார். சட்டப் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டு இருக்கும் சமய இக் கூட்டத்தைக் கூட்டியது, சட்டப் பேரவையில் தான் ஆற்று பணியினைத் தடை செய்வதாக இருக்கிறது என்று மாண்புமி உறுப்பினர் தம் அறிக்கையில் கூறுகிறார். மேலும், இது குறித்து தான் பல்கலைக் கழகத்திற்கு 13—3—1974 அன்று ஒரு தந் அனுப்பியதாகவும் அப்படியிருந்தும் துணை வேந்தர் அவர்கள் குழுவின் கூட்டத்தைக் கூட்டி இருப்பது நாம் சட்டப் பேரவை யின் கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தடுப்பதாகும் என்பது மாண்புமிகு உறுப்பினரின் வாதம் ஆகும்.

சட்டப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் ஒரு மாண்புமிகு உறுப்பினரை அவ்வாறு கலந்துகொள்ள முடியாமல் தடை செய்வது உரிமை மீறிய செயலாகும். ஆனால், பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் கூட்டத்தைக் கூட்டியிருப்பதாலேயே, மாண்புமிகு உறுப்பினர் இப் பேரவையின் கூட்டத்தில் கலந்து கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறாரா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஆயினும், இப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் அக் குழுவின் உறுப்பினராக இருப்பதால், அவர் தம் பணியினைச் செவ்வனே செய்வதற்கு, பேரவைக் கூட்டம் இல்லாத நாட்களில் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் கூட்டம் கூட்டப்படுவது தான் பொருத்தமுடையதாகும்.

எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப் பேரவையின் வாயிலாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களுக்கு, ஆட்சிக் குழுவின் கூட்டங்களைப் பேரவை கூடாத நாட்களில் வைத்துக்கொண்டால், நலமாக இருக்கும் என்பதை வேண்டுகோளாக விடுக்கிறேன்.



## 4. கவன ஈர்ப்பு.

### (அ) கிருத்துவ 'பரவன்' வகுப்பு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்விச் சலுகைகள் நிறுத்தப்பட்டது குறித்து.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கக் கல்விச் சட்ட விதி எண் 92-ன் படி இதுவரை கிருஸ்துவ பரத குலத்தைச் சேர்ந்த தூத்துக்குடியிலுள்ள கல்லூரி மாணவர்கள் பெற்றுவந்த சலுகைகள் அரசால் ரத்து செய்யப்பட்டு இருப்பதால் அந்த மாணவர்கள் இதுவரை வாங்கியுள்ள பணத்தைத் திருப்பிக் கட்டவேண்டிய நிலையிலும் தவறினால் பல்கலைக் கழகத் தேர்வில் கலந்துகொள்ள முடியாத நிலையிலும் உள்ள நிலை பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ்நாடு கல்வி விதிகளின் 92-வது விதியின்படி கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 'பரவன்' வகுப்பைச் சேர்ந்தவர்கள் பிற்பட்ட வகுப்பினர் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த வகுப்பைச் சேர்ந்தவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவராக இருந்தாலும் அவர்களுக்குக் கல்வி கட்டணச் சலுகை அவர்கள் பிற்பட்ட வகுப்பினராக இருந்தால் எவ்வளவு அளிக்கப்படுமோ, அவ்வளவு அளிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் மற்ற இடத்தில் உள்ள 'பரவன்' வகுப்பைச் சேர்ந்தவர்கள், மிகவும் பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த வகுப்பிலுள்ள கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்தவர்களுக்கும் கல்வி கட்டணச் சலுகை உண்டு.

கல்வித் துறையின் விதிகளின்படி கல்விச் சலுகைகள் வழங்கப்பட்டாலும், சமூக நலத் துறையின் இதற்கென இடப்படும் ஆணையை ஒட்டித்தான் இக்கல்விச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. சமூக நலத்துறையின் அரசு ஆணை 437, நாள் 15—5—1972-ல் 'பரவன்' தவிர மிகவும் பின்தங்கியவர் பட்டியலில் சேர்ந்திருந்தாலும் அவ்வகுப்பிலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்குச் சென்றவர்களுக்கு இச் சலுகை உண்டு என விளக்கம் இல்லாமையால் கல்வித் துறையின் கல்லூரிகளுக்கு தணிக்கையில் இவ்வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து வந்த கடிதத்தின் மீது சமூக நலத் துறையினர்

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு 9—3—1974-ல் விளக்கம் கொடுத்துள்ளனர். இது சம்பந்தமாக அரசு ஆணை 9, சமூக நலம், 3—1—1974-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 'பரவன்' சமூகத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் கல்விச் சலுகை 92-வது விதியின் படி முழுச் சலுகை பெற உரிமை உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்க உரைக்குப் பின்பு மாணவர்களுக்குக் கல்விச் சலுகை வழங்கப் பெற்றதாக கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்து உள்ளார். இதன்படி தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி., காமராஜ் கல்லூரிகளில் 'பரவன்' சமூக கிறிஸ்தவ மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் கோருவது நிறுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) இரயில் இணைப்புப் பாதைத் திட்டத்திற்காக குமரி மாவட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படாதது குறித்து.**

**திரு. எ. பாலையா:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி—திருவனந்தபுரம் ரயில் இணைப்புப் பாதை அமைப்பதற்கும் திட்டத்திற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வேலையும் தொடங்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் இதுவரையில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்குரிய தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரத்திற்குப் பிராட்கேஜ் இருப்புப் பாதை அமைக்கவும், கன்னியாகுமரிக்குக் கிளைப் பாதை ஒன்று அமைக்கவும் இரயில்வே அமைச்சகம் (இரயில்வே வாரியம்) 1972, ஏப்ரலில் ஒப்புதல் வழங்கியது. இவ்வகையில், இடம் தொடர்பான இறுதி ஆய்வு முடிந்துவிட்டதென்றும், நிலம் கையகப்படுத்தும் பணியாளர்கள் இரயில்வே பணியாளர்கள் ஒத்துழைப்புடன் நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளனர் என்றும் பாளையங்கோட்டை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்) கூறியுள்ளார்



கன்னியாகுமரி மாவட்டத்தில், 73 பேருக்குச் சொந்தமாகவுள்ள 953 ஏக்கர் பரப்பளவு நிலம் இரயில்வே துறையினருக்காகக் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும், நிலச் சொந்தக்காரர்களின் இசைவுடன் சுமார் 550 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை இரயில்வே அதிகாரிகள் பெற்றுள்ளனர் என்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

நிலம் கையகப்படுத்தும் பணியையும், நிலச் சொந்தக்காரர்களுக்கு இழப்பீடு வழங்கும் பணியையும் தாமதமின்றி விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கையகப்படுத்த வேண்டியுள்ள 953 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரையில் 65 பேருக்குச் சொந்தமாகவுள்ள 824.81 ஏக்கர் நிலம் தொடர்பாக, நிலம் கையகப்படுத்தல் சட்டத்தைச் சேர்ந்த 4(1) பிரிவின்கீழ் வரைவு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது; 31 பேருக்குச் சொந்தமாகவுள்ள 436.48 ஏக்கர் நிலம் தொடர்பாக, இச்சட்டத்தின் 5-அ பிரிவின் கீழ் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

15 பேருக்குச் சொந்தமாகவுள்ள 211.62 ஏக்கர் நிலம் தொடர்பாக, இச்சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் மேற்படி நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என அறிவிக்கும் வரைவு அறிவிப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

29 பேருக்குச் சொந்தமாகவுள்ள 112.55 ஏக்கர் நிலம் தொடர்பாக நிலத்தை மதிப்பீடு செய்வது குறித்த செயற் குறிப்புகள் பல்வேறு நிலைகளில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நேர்வுகள் அனைத்திலும் நில மதிப்பீட்டுச் செயற் குறிப்புகளுக்கு வருவாய் வாரியம் ஒப்புதல் வழங்க வேண்டியுள்ளது. இவ்வகையில் தொடர்புள்ள நிலங்கள் அனைத்தையும் கையகப்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் மீது விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்குக் கூடிய விரைவில் இழப்பீடு வழங்கப்படும்.

இந்நிலையில் அதுபற்றி இந்த அவையில் தற்போது விவாதம் மேற்கொள்வதற்கான அவசியம் ஏதுமில்லை.

திரு. ஏ. பாலையா: தலைவரவர்களே, திருநெல்வேலி- திருவனந்தபுரம் ரெயில் இணைப்புப் பாதை போடுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு சுமார் 1½ வருடங்களுக்கு மேல் ஆகிறது. ஆனால் நமது சர்க்கார் அதற்கான இழப்பீட்டுத் தொகையை இது வரையில் வழங்கவில்லை. ஆனால் கேரள அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு ஆர்ஜிதம் செய்தவுடனே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. நமது சர்க்காரில் மட்டும் ஏன் இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும். மேலும் இந்த நிலத்தை இழந்திருக்கிறவர்கள் அந்த நிலத்தை வைத்து தங்களுடைய வாழ்க்கை வசதிகளை அமைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் அந்த நிலத்தை இழந்ததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் நிலம் முறையாகக் கையகப்படுத்தப் படுகிறது. அதற்குப் பிறகுதான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். கேரள அரசாங்கம் எப்படிக் கொடுத்தது என்று எனக்குத் தெரியாது. நஷ்ட ஈடு கொடுப்பதை விரைவாகக் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. பாலையா: தலைவரவர்களே, நான் அறிந்த மட்டில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு 'வேல்யுவேஷன்' விலை நிர்ணயம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாக அறிகிறேன். அது எதனால் என்று சொன்னால் வெவ்வேறு போர்டிங் சட்டத்திட்டங்கள் கடுமையானதாக இருப்பதால்தான் என்று அறிகிறேன். ஆகவே, அந்தச் சட்டதிட்டங்களை அரசு 'ரிலாக்ஸ்' செய்து உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்தச் சட்டத்தையும் திருத்தி 'ரிலாக்ஸ்' செய்யமுடியாது. அப்படிச் செய்தால் அதற்காக ஒரு ஊழல் பட்டியல் வரும்.



## 5. அரசினர் சட்ட முன்வடிவு.

**தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு.**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## 6. 1974-75-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 13,00,19,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. A. WAHAB: Sir, I move—

'That the allotment of Rs. 13,00,19,760 under Demand No. 11--District Administration be reduced by Rs. 100.'

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாவட்ட நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 13,00,19,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

THIRU N. K. PALANISAMY: Sir, to discuss the failure of Government to separate the Revenue Department from the Panchayat Development Administration, I move—

'That the allotment of Rs. 13,00,19,700 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100.'

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss the need to constitute the former Hosur taluk (i.e. present Hosur and Denkanikota taluks) including Vepanapatti Firka into a separate district, I move—

'That the allotment of Rs. 13,00,19,700 under Demand No. 11—Dsstrict Administration be reduced by Rs. 100.'

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, மாவட்ட அதிகாரிகள் ஜீப் கார்களை தங்கள் சொந்த காரியங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்காதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 13,00,19,700-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்," என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்."

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ........னிகுடி பஞ்சாயத்தில் அரிசனங்களும், மலைவாசிகளும் ......யடக்கம் செய்யப்பட்ட தரிசு நிலங்களை விநியோகிக்காதிருப்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 13,00,19,700-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கு தீர்வையை ரத்து செய்யவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 13.00,19,700-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





(ஆ) நிதிக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,55,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE: Sir, to discuss the policy, I move—

"That the allotment of Rs. 3,55,04,300 under Demand No. 1—Land Revenue Department be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,55,04,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 3,55,04,300 under Demand No. 1—Land Revenue Department be reduced by Rs. 100.'

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss the necessity to bring about a comprehensive Land Reforms Act, I move—

'That the allotment of Rs. 3,55,04,300 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100.'

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நிலவரியை அறுவடைக் காலங்களில் விவசாயிகளிடமிருந்து தானியமாக வசூலித்தல் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,55.04.300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, ஐந்து ஏக்கருக்குக் குறைவாகவுள்ள எல்லா விவசாயிகளுக்கும் எல்லாவித நில வரியிலிருந்தும் விலக்களிக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நில வரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,55,04,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. DENNIS : Sir, to discuss about the irregularities in the work done by the Re-Survey Department in Kanyakumari district, I move—

'That the allotment of Rs. 3,55,04,300 under Demand No. 1—Land Revenue Department—be reduced by Rs. 100.'

(இ) நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே, சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 94,87,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss policy, I move—

"That the allotment oof Rs. 94,87,900 under Demand No. 2—State Excise Department be reduced by Rs. 100.'

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 94,87,900-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss the necessity to introduce total prohibition in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 94,87,900 under Demand No. 2—State Excise Department be reduced by Rs. 100.'

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to introduce total prohibition throughout the State of Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 94,87,900 under Demand No. 2—State Excise Department be reduced by Rs. 100.'

THIRU M. A. LATHEEF : Sir, to discuss policy and to introduce total prohibition, I move—

"That the allotment of Rs. 94,87,900 under Demand No. 2—State Excise Department be reduced by Rs. 100.'

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, மதுபானக் கடைகளை குடியிருப்புப் பகுதிகளுக்குப் பக்கத்தில் ஏற்படுத்தியதால் ஏற்பட்ட பாதகங்களைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 94,87,900-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to treat differently Ayurvedic Arishtas prepared by genuine manufacturers (including IMCOP) from other spirituous preparations, I move—

"That the allotment of Rs. 94,87,900 under Demand No. 2—State Excise Department be reduced by Rs. 100.'

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 37,67,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

Thiru B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 37,67,600 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100."

Thiru P. SOUNDARAPANDIAN: Sir, to discuss policy I move—

"That the allotment of Rs. 37,67,600 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100."

Thiru J. JAMES: Sir, to discuss the hardship experienced by the public in Tamil Nadu due to the exorbitant market value fixed for the land for the purpose of calculating the registration fee and stamp duty and consequently the registration of documents being moved to Kerala, I move—

"That the allotment of Rs. 37,67,600 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100"

Thirumathi T. N. ANANDANAYAKI: Sir, to discuss the need to exempt the sale deeds executed by the repartriates from Ceylon and Burma from stamp duty, I move—

"That the allotment of Rs. 37,67,600 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100."

Thiru M. A. LATHEEF: Sir, to discuss the need to exempt the deeds executed by the Burma and Sri Lanka repatriates from payment of stamp duty, I move—

"That the allotment of Rs. 37,67,600 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100"

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, முத்திரைத் தாள்கள் பொது மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்பதை பற்றி விவாதிக்க—



"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரை தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 37,67,600-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, முத்திரைத் தாள்களின் விற்பனை மூலம் வரும் தொகை முழுவதையும், அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 37,67,600-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,53,79,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்".

Thiru B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 3,53,79,600 under Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

Thiru N. K. PALANISAMY: Sir, to discuss Policy, I move—

"That the allotment of Rs. 3,53,79,600 under Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,53,79,600-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, விற்பனை வரி விலக்கு ரூபாய் ஒரு லட்சம் வரை அளிக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,53,79,600-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to restore the exemption of sales tax on hand-made soaps by private parties as well as Khadi Board, I move—

"That the allotment of Rs. 3,53,79,600 under Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

THIRU K. M. SUBRAMANIAM : Sir, to discuss the policy of levying sales tax on oil-cakes, medical arishtams and Betting Tax, I move—

"That the allotment of Rs. 3,53,79,600 under Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to set up a vigilance cell with more powers for removing the alleged corruption prevailing in the Sales Tax Department, I move

"That the allotment of Rs. 3,53,79,600 under Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100."



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கைகள், வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதம் நடைபெறும்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் ஒரு நிதிக் கோரிக்கையை முன்மொழிவார் என்று அறிவிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தும், பொதுப் பணித் துறை அமைச்சர் அக்கோரிக்கையை முன்மொழிந்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒவ்வொரு மானியத்திற்கும் எவ்வளவு தொகை வேண்டுமென்று அமைச்சர்கள் சொல்வார்கள். ஆனால் டிமாண்ட் நம்பர் 11-ஐ பொறுத்தவரையில், இந்த ஆர்டர் பேப்பரில் சீப் மினிஸ்டர் முன்மொழிவார் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக வேறொரு அமைச்சர் முன்மொழிந்திருக்கிறார். பொதுவாக பதில் சொல்வது எந்த அமைச்சராக இருந்தாலும் இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் சீப் மினிஸ்டர்தானே முன்மொழிய வேண்டும். அதுபற்றி தங்கள் தீர்ப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இப்படிப்பட்ட ஒரு பிரச்னை எழுப்பப்பட்டு, இந்த மன்றத்தில் அதற்குத் தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

When a Member observed that the Home Minister had moved Demands for Grants relating to departments not within his portfolio, the Speaker pointed out that there was collective responsibility of the Cabinet to the Legislature and that any Minister could speak on any subject."

ஆகவே, இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, they can speak on any subject but can they move the Demands for Grants . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாம் பண்ணலாம்.

## 6. 1974–75-ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் மானியக் கோரிக்கையும் கொள்கை விளக்கக் குறிப்பும் வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னால் சில கருத்துக்களைச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதத்திற்கு உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(மு.பகல் 10-30)

1973–74 ஆம் ஆண்டில் வருவாய்த் துறையில் பல்வேறு பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நில ஒப்படை, நிலச் சீர்திருத்தங்கள் ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இச்சாதனைகள் குறித்த விளக்கங்கள் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கை பேரவை முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு, மாவட்ட வருவாய், பொது நிர்வாகம் குறித்த தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. இவ்வறிக்கையை அரசு ஆய்வு செய்துள்ளது. இவ்வறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் பற்றித் தெரிந்துகொள்ள நீங்கள் ஆவலாயிருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். சிலவற்றை மட்டும் நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்:—

(i) நில வருவாய் பதிவேடுகளை இன்றைய தேதி வரை எழுதிவைக்கும் திட்டத்தை (updating the Revenue Registry.) மாநிலம் முழுவதும் 5 ஆண்டுகளில் படிப்படியாக மேற்கொள்ளவிருக்கிறது.

(ii) விதிக்கப்படுகின்ற வரி விதிப்பு விவரங்களை ஆண்டு [illegible] வட்ட அளவில் [illegible] செய்யும் பொருட்டு வட்ட அளவிலான கிராம கணக்கு "பிராட்மா"





இயந்திரம் கொண்டு தயாரிக்கப்பட வேண்டுமென்ற நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு செய்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டு முதல்படியாக தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் ஏனைய 4 அல்லது 5 மாவட்டங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கோட்டங்களில் சோதனை முறையில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

(iii) நிலவரி நிலுவைகளுக்கு வட்டி விதிக்கும் நடைமுறை நீக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக, பின்வரும் ஏற்பாடு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நில உடைமையாளர் ஒருவர் நிலவரி எந்தப் பசலி ஆண்டில் செலுத்தப்பட வேண்டுமோ அந்தப் பசலி ஆண்டிலும் அதற்கு அடுத்த பசலி ஆண்டிலும் அதைச் செலுத்தத் தவறியிருந்தால், மூன்றாவது பசலி ஆண்டில் (அதாவது, எந்தப் பசலி ஆண்டில் செலுத்த வேண்டுமோ, அந்தப் பசலி ஆண்டும் அதற்கடுத்த இரண்டாவது பசலி ஆண்டும் தள்ளி மூன்றாவது பசலி ஆண்டில்) மேற்சொன்னவாறு கருணை அடிப்படையில் தள்ளிக் கொடுக்கப்பட்ட இரண்டாண்டுக் காலத்தை அடுத்து வரும் கால அளவிலிருந்து நில வரி செலுத்தத் தவறிய ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 சதவீத அபராதத் தொகை விதிக்க வகைசெய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறீர்களே. அதையே திரும்பப் படிக்க வேண்டாம். நேரம் இல்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன.

(iv) வருவாய்த் துறை கட்டிடங்களைக் கட்டுவதற்காக 1974–75 ஆம் ஆண்டுக் காலத்தில் ரூ. 50 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது என கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளது. இந்த ஐம்பது இலட்ச ரூபாயில், புதிய சாவடிகள் கட்டுவதற்கும் தற்போதுள்ள சாவடிகளை பழுது பார்ப்பதற்கும் ரூபாய் 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1973 அக்டோபர், நவம்பர், டிசம்பர் திங்களில் சேலம் மாவட்டத்தில் மழை குறைவாகப் பெய்ததால் அப்பகுதிகளில் உடனடி துயர் தணிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம்

ஏற்பட்டது. அப்பகுதிகளில் கிணறுகள் ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இயலும் வகையில் சேலம் மாவட்டத்திற்கென ரூ. 15 இலட்சம் வழங்குமாறு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும் வருவாய்த் துறை வாரியமும் அரசைக் கேட்டுக்கொண்டனர். அதன்படி, நாமக்கல், ஆத்தூர், திருச்செங்கோடு, சங்ககிரி வட்டங்களில் நீர் வற்றிப் போன பொதுக் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான செலவுக்காக ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டன.

துணை வட்டங்களைப் படிப்படியாக வட்டங்களாக உயர்த்தும் கொள்கையின்படி, தற்போதுள்ள துணை வட்டங்களில் நான்கினை இவ்வாண்டில் வட்டங்களாக உயர்த்துகின்ற அரசின் முடிவை அறிவிப்பதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

1973 ஆகஸ்ட் திங்கள் 26 ஆம் நாளன்று வேலூரில் நடைபெற்ற தமிழ் நாடு நில அளவை அலுவலர்கள் சங்க மாநாட்டில் செய்யப்பட்ட முறையீடுகளின் பயனாக அரசு கீழ்க்காணும் சலுகைகளை அறிவித்துள்ளது :—

(i) நில அளவைத் துறையில் செய்ய வேண்டிய பணியின் அளவு குறைந்தால் அதற்குத் தண்டனை விதிக்கும் வகையில் பணியாளர்களின் ஊதியத்தில் அதற்கு நிகரான தொகை பிடித்துக்கொள்ளும் முறை நீக்கப்பட்டுள்ளது.

(ii) நில அளவை நில ஆவணங்கள் ஆய்வாளர் பதவிகள் அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

(iii) இத் துறையில் உள்ள சங்கிலியாட்கள் 250 பேர்களின் பணிகள் அரசுப் பணிகளாக மாற்றப்பட்டுள்ளன. அப்பணியாளர் அனைவரும் தற்போது முறையான அரசுப் பணியாளராவர்.

இம் மாநிலத்தில் சில வட்ட அலுவலகங்களை நான் திடீரென்று சென்று பார்வையிட்டேன். பட்டா மாற்றுதல், நில ஒப்படை, வீட்டு மனை ஒப்படை, முதியோர் ஓய்வுத் தொகை வழங்கல், சிமெண்ட் அனுமதிச் சீட்டுகள் வழங்குதல், இன்னும் இது போன்ற கோரிக்கைகள் சம்பந்தமாகப் பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களை அவர்கள் எவ்வாறு முடிவு செய்கிறார்கள் என்பதை விரிவாக ஆய்ந்து பார்த்து, கால





தாமதத்தை அறவே தவிர்த்து உரிய காலத்தில் அம்மாதிரி மனுக்களின் பேரில் முடிவுகள் கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கினேன். 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ஆம் நாளில் சென்னை மாவட்டத்தின் [illegible] வட்ட அலுவலகத்தையும், 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளில் செங்கற்பட்டு மாவட்டத்தின் ஸ்ரீபெரும்புதூர் வட்ட அலுவலகத்தையும், 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளிலேயே ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்க்காடு வட்ட அலுவலகத்தையும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தாராபுரம், பொள்ளாச்சி வட்ட அலுவலகங்களை முறையே 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10 ஆம் நாளிலும், 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 ஆம் நாளிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளி வட்ட அலுவலகத்தை 1974 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 ஆம் நாளிலும் சென்று பார்வையிட்டேன். அவ்வாறு பார்வையிட்டபோது எனது குறிப்புகளின் நகல்கள் வருவாய்த் துறையின் எல்லா அதிகாரிகளாலும் பின்பற்றப்படுவதற்காக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் விவசாய அமைச்சரை படிக்க வேண்டாம் என்று சொன்னீர்கள். இப்போது இவர் அச்சிட்டுக் கொடுத்திருப்பதையே படிக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிற நேரத்திற்குள் அவர் படித்து முடித்துவிடுவார். தயவு செய்து உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பல்லடம் வட்டங்களைச் சேர்ந்த பல கிராமங்களிலும், சத்தியமங்கலம் துணை வட்டத்தைச் சேர்ந்த தாளவாடி [illegible] மலைக் கிராமங்கள் உட்பட சில கிராமங்களிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மேலூரிலும் நடைபெற்ற "மனுநீதித் திட்டத்தில்" கலந்து கொண்டேன்.

கோவை, சேலம், திருச்சி, மதுரை, செங்கற்பட்டு, தருமபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களில் வணிக வரி சோதனைச் சாவடிகளுக்குத் திடீரென்று சென்று சில மணி நேரம் அங்கேயே

காத்திருந்து அவற்றின் வழியே செல்லும் வாகனங்களின் நடமாட்டங்களை கவனித்து, இந்தச் சாவடிகளில் வைத்துவரப்படும் பதிவேடுகளையும் தணிக்கை செய்தேன். இந்தச் சோதனைச் சாவடிகளில் லாரி ஓட்டுநர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளை அறிவதற்காக அவர்களை விசாரித்தேன். சோதனைச் சாவடிகளை நான் பார்வையிட்டதில் எனக்குக் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் வணிகர்களும், லாரி ஓட்டுநர்களும் புகார் செய்வதற்கு இடமில்லாமல் நடந்துகொள்ளும்படி சோதனைச் சாவடிப் பணியாளர்களுக்குத் தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிகளின் பணியாளர்கள் பின்பற்றவேண்டிய நடைமுறைப்படி அவர்கள் 'செய்யக்கூடியவை எவை செய்யக்கூடாதவை எவை" என்கிற விவரம் கொண்ட கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ளன. இவை வணிகர்களுக்கும் கிடைக்குமாறு செய்யப்படும்.

வணிக வரி அலுவலகங்கள் சிலவற்றை நான் திடீரென்று சென்று பார்வையிட்டு பல ஆவணங்களைப் பரிசீலித்ததோடு மட்டுமல்லாமல் நியாயமானது என்று முடிவு செய்யப்படுகிற முறையின்கீழ் ("Best of Judgment"method) வரி விதிப்புகள் செய்யப்படுகின்ற நேர்வுகளைக் குறிப்பாக ஆய்ந்து பார்த்தேன். "நியாயமானதென்று முடிவு செய்யப்படுகிற" முறையில் வரி விதிப்பதில் சிறு வணிகர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று வரி விதிப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் எதிர்பார்த்த அளவிற்கு பலன் கிட்டியுள்ளதென நான் இப்போது அறிகிறேன். இவ்வாறு நான் சென்று பார்வையிட்ட இடங்களில், தனியார் கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களில் வரி விதிப்புக்காகக் கணக்குகளைக் கொண்டு வரும் வரி செலுத்துவோருக்கும், அவர்களது முகவர்களுக்கும் மேசை, நாற்காலி போன்ற அடிப்படை வசதிகள் சில செய்து கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்தேன். அதன் பேரில் அத்தகைய அடிப்படை வசதிகளை விரைந்து செய்து தரும்படி வணிக வரிகள் துறை அதிகாரிகளுக்குத் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.





வருவாய்த் துறை வணிக வரிகள் துறை அதிகாரிகள், பெரும்பாலான வேலை நாட்களில் தங்கள் அலுவலகங்களில் இருப்பதில்லையென்று பொதுமக்களிடமிருந்தும் வணிகர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன. எனவே, ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் அதிகாரியும் எங்கெங்கு சென்றுள்ளார் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டும் பலகை ஒன்றை ஒவ்வோர் அலுவலகத்தின் முகப்பிலும் அதிகாரிகள் காட்டி வைக்க வேண்டுமென்று வருவாய்த் துறை அதிகாரிகளுக்குக் கட்டளை இடப்பட்டுள்ளது.

வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில் வரி செலுத்துபவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரியை நேரில் சந்தித்து அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்ல இயலும் வகையில் வரிவிதிப்பு அதிகாரிகள் ஒரு வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் தங்கள் அலுவலகங்களில் இருக்க வேண்டுமென்று அவர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

சென்னையில் 1973-ம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 3-ம் நாளன்று மதுரையில் 1974-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 16-ம் நாளன்றும் நடைபெற்ற மாநில விற்பனைவரி ஆலோசனைக் குழு கூட்டங்களில், வணிகர்களுக்கு அனுபவரீதியில் ஏற்படும் சில இடர்ப்பாடுகளை நீக்கும்படியும் அவர்களுக்கும் வணிக வரித் துறை அதிகாரிகளுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும்படியும் அக் குழுவில் உள்ள அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் பல கருத்துரைகளைத் தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த பெரும்பாலான கருத்துரைகள் ஏற்கப்பட்டுள்ளன. வணிகர்களை அவ்வப்போது நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து இயன்ற போதெல்லாம் ஆவன செய்து வருகிறேன். வணிகர்களுக்கும், வணிக வரித் துறைக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுகிறதென்றும் அதே சமயத்தில் வரி வருவாயையும் பெருக்குவதற்கு அரசு விழிப்புடன் கண்காணித்து வருகிறதென்றும் கூறிக்கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்

விற்பனை வரிச் சட்டத்தில் தற்போது 59 பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சிறு வியாபாரிகளுக்கு ரூ. 50 ஆயிரம் வரை விற்பனை வரியில் இருந்து விலக்கு

அளித்திருப்பதை வரவேற்றும் பல்வேறு வணிகர் சங்கங்கள் பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் இன்னும் சில பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அரசு அவைகளைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் செய்யும்போது வணிக வரி, வருவாய், ஆயத் தீர்வை—மதுவிலக்குத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கூட்டங்களைக் கூட்டி, அவர்கள் ஆற்றியுள்ள பணிகளைப்பற்றி நுணுக்கமாக ஆய்வு செய்கிறேன். இந்த ஆய்வின் பலனாக, அந்தந்த இடங்களில் காணும் நிர்வாகப் பிரச்சினைகள் யாவை என்பது அறியப்பட்டு, அவற்றைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனால் எனது பொறுப்பில் உள்ள துறைகளில் அரசுக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலிப்பதில் பொதுவாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1964-ம் ஆண்டு வரை கிராம அதிகாரிகளுக்கு கீழ்க்காணும் விவரங்களில் சம்பள விகிதங்கள் இருந்து வந்தன.

| | பே | டி. ஏ |
|---|---|---|
| கிராம மணியம் | ரூ 34 | 17 |
| கர்ணம் | ரூ 36 | 17 |
| ஊழியர் | ரூ 20 | 17 |

மேற்படி சம்பள விகிதங்கள் இரண்டாவது ஊதிய கமிஷனின் பரிந்துரையின் பேரில் கீழ்க்காணும் விகிதப்படி 2—10—70 அன்று மாற்றி அமைக்கப்பட்டன.

மணியம் ரூ. 70

கர்ணம் ரூ. 72

ஊழியர் ரூ. 60

மீண்டும் தனி நபர் கமிஷன் பரிந்துரையின் பேரில் 1—9—72 தேதி முதல் கிராம உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் ரூ. 7 ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. அதன்படி ரூ. 77 மணியத்திற்கு ரூ. 79 கர்ணத்திற்கும், ரூ. 67 ஊழியர்களுக்கும் கிடைத்தது.





கிராம உத்தியோகஸ்தர்கள் முழு நேர அரசு ஊழியர்கள் அல்ல. முழு நேர அரசு ஊழியர்களுக்கு தற்போது கொடுக்கப்பட்டிருக்கிற ரூ. 10 அகவிலைப்படி உயர்வை கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க முதல் ஒப்புக்கொண்டு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இந்தச் சம்பள விகிதம் 1—4—1974-ம் தேதியில் இருந்து அமலாகும். இதனால் 55 ஆயிரம் கிராம உத்தியோகஸ்தர்கள் பலன் அடைவார்கள். ஆண்டிற்கு 60 லட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் அடங்கும் மானியக் கோரிக்கைகள் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

இந்த மாமன்றத்தின் முன்னால் நான் இந்தக் குறிப்புகளைத் தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலானக் கருத்துக்களைச் சொல்வதற்கு இது உதவியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு நான் பதில் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு அமைச்சரவர்கள் சோதனைச் சாவடிகளைப்பற்றி, லாரிகளை நிறுத்துவதைப்பற்றி. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

**திரு. நா. வெ. குருசாமி:** ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறகு கடைசியிலே கேளுங்கள். அமைச்சரவர்கள் பதில் கொடுத்ததற்குப் பிறகு விளக்கம் கேளுங்கள்.

இன்னும் 3 மணி நேரம்கூட நமக்கு இல்லை. இப்பொழுதே 10-30 மணிக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 16 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆகவே, திரு. மாரிமுத்து அவர்கள் 15 நிமிஷங்களில் முடித்துவிடட்டும். மற்றவர்கள் 7 நிமிஷங்களில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந் முக்கியமான வருவாய்த் துறை மானியத்தைப்பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வந்துள்ளேன்.

இந்த வருவாய்த் துறையிலே முந்தைய காலங்களிலே நில வருவாயை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்திற்கு நில வரி ஒரு முக்கியமான வருவாய் என்றிருந்த நிலைமை மாறி இன்றைக்கு நிலத்தின் பெயரால் கிடைக்கும் வருவாய் அரசாங்கத்திற்கு மிகக் குறைவு என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட சமுதாயத்திலே பெரும் பகுதி மக்களை ஈர்த்துக்கொண்டிருக்கின்ற இந்த நிலவுடைமை இருக்கிறதே அதன்பால் அரசாங்கம் இதுவரையிலே என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது, அதில் கிடைத்த பலன் என்ன? என்பதைப்பற்றி எல்லாம் நாம் தீவிரமாக சிந்திக்க கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

நிலவரியைப் பொறுத்தவரையிலே அடிப்படை வரியை எல்லா நிலங்களுக்கும் அரசு ரத்து செய்திருக்கிறது. ஆனால் அதன் பெயரால் உள்ள இதர வரிகள், செஸ், தண்ணீர்த் தீர்வை போன்ற வரிகளையெல்லாம் இன்றைக்கு நாம் வசூல் செய்து கொண்டு வருகிறோம்.

கடந்த பல ஆண்டுகளாக சாதாரண விவசாயிகள் அதிகாரிகளிடத்திலே சிக்கிக்கொண்டு பல துன்பங்களுக்கும், பல சங்கடங்களுக்கும் ஆளாகிறார்கள். அவர்களுக்கு உள்ள சங்கடங்களைத் தவிர்க்க வேண்டுமென்பதற்கு ஏற்பாடாக அவர்கள் செலுத்தவேண்டிய வரி விகிதங்களையெல்லாம் இலகுவாக ஆக்கி அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக அமைக்கப்பட வேண்டுமென்பதுபற்றி இந்தச் சபையிலே பல உறுப்பினர்களால் பேசப்பட்டு வந்திருக்கிறது. நில வருவாய் எடுக்கப்பட்ட பிறகும்கூட நாம் பல வரிகளை விதித்து வசூலிக்கும் பொழுது அந்த வரிகளின் விகிதாசார அமைப்பை ஒரு சாதாரண விவசாயி, ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் வைத்திருப்பவன் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அந்த வரி அமைப்பு இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து.





இப்பொழுது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் இந்த நில வருவாயிலிருந்து பகுதிப் பணத்தை, செஸ் போன்றவைகளை வசூலித்து உள்ளாட்சித் துறைக்குக் கொடுக்கிறோம். என்னைக் கேட்டால் நில வருவாய் பூராவையும் உள்ளாட்சித் துறைக்கே கொடுக்க வேண்டும்.

நிர்வாகச் சீரமைப்புக் குழுவுக்கு இந்தப் பிரச்சினை விடப்பட்டு, நிலவரியைத் திரும்பவும் புகுத்த வேண்டுமென்றுகூட சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு தூரம் சரியானது, அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முடிவை மாற்றுவது சரியா என்று நாம் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அந்த நிலவரி வருவாய் உள்ளாட்சிகளுக்கே கொடுக்கப்பட வேண்டுமென்கின்ற பொழுது நான் கூறுவது என்னவென்றால், தண்ணீர் வரி, செஸ் இம்மாதிரியெல்லாம் இல்லாமல், இருக்கின்ற நிலங்களையெல்லாம் ஒருவகையாக கிளாசிஃபை செய்ய வேண்டும்.

கிளாசிஃபிகேஷன் என்றால் கிட்டத்தட்ட 70 கிளாசிபிகேஷன்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு கிளாசிபிகேஷன்கள் தேவைதானா என்பதைச் சிந்திக்கவேண்டும். தண்ணீர் பாய்ந்து நஞ்சையாக இருக்கும் நிலங்களைக்கூட புஞ்சையாக வைத்துக்கொண்டிருக்கிறோம் புதிதாக பாசனம் ஏற்பட்ட பகுதிகளில்.

இப்பொழுது கடந்த முப்பது ஆண்டுகளாக தஞ்சை மாவட்டத்தில் புதிய நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டு புஞ்சை நிலம் நஞ்சையாக ஆக்கப்பட்டது, காவெரி-மெட்டூர் ப்ராஜக்டின் மூலம். அப்படிக் கொண்டுவரப்பட்டு ஒருபோகம், இரண்டு போகம் சாகுபடி செய்யும் நிலங்கள்கூட இன்னும் புஞ்சை என்றே நிர்ணயிக்கப்பட்டு நிலவரி என்று தனியாகப் போடும் நிலைமைகளைப் பார்க்கிறோம்.

ஒட்டுமொத்தமாக நான் கூறுவது என்னவென்றால், தண்ணீர் பாய்ந்து நஞ்சை சாகுபடி நிலங்கள் அத்தனையையும் நஞ்சை என்று கிளாசிஃபை செய்ய வேண்டும். புஞ்சை இறைவைப் பாசன சாகுபடி, இறைவையினால் புஞ்சை, மானாவாரி புஞ்சை என்ற 3 கிளாசிஃபிகேஷனில் நிலத்தைக் கொண்டுவருவது வரியமைப்பிற்குச் சுலபமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 2

நஞ்சை எல்லாவற்றையும் ஒரே தரமாகக் கொண்டு வந்து தண்ணீர்த் தீர்வை போட்டால் சுலபமாக இருக்கும். அடிஷனல் சர்சார்ஜ், சர்சார்ஜ் என்று போட வேண்டியதில்லை. அரசாங்கத்திற்கு இன்னும் அதிகத் தொகை வேண்டுமென்றால், இன்றைக்கு 10 ரூபாய் என்றிருக்கிறது, அதை 12 ரூபாய் என்று போடுங்கள், அல்லது 15 ரூபாய் என்று போடுங்கள்.

ஏனென்றால் ஒரு தடவை வரி விதித்துவிட்டால் அதைத் திரும்ப 'எடுப்பது என்பது எந்த அரசாங்கத்திலும் சாத்தியமில்லை. வரவரத் தேவை அதிகரிக்கிறது. அடுத்து ஒவ்வொரு திட்டம் போடும்போதும் வரியை அதிகரிக்கவேண்டும், அதிகமாக வர வேண்டுமென்ற எண்ணத்தில் நிற்பதால் போட்ட வரிகளைத் திரும்ப எடுக்கும் என்ற நிலைமை ஒருநாளும் ஏற்படப் போவதில்லை.

ஆகவே, ஒட்டுமொத்தமாக, ரவுண்ட் ஃபிகராகப் போட்டு வசூலிப்பது வரி கொடுப்பவர்களுக்கும் சுலபமாக இருக்கும்.

வில்லேஜ் ஆபீசர்கள் கணக்கைத் தயார் செய்யும்பொழுது நாட்கணக்கிலே எழுதிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஒழுங்காக எழுதுகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷனால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது பரிசீலனைக்குரிய விஷயம்; கணக்கு எளிமையாக இருக்க வேண்டும். சாதாரண ஆள் பார்த்தால்கூட புரிந்துகொள்ளும் அளவிற்கு செய்வதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளை இப்பொழுதிருக்கின்ற அமைப்பிலேயிருந்து மாற்ற வேண்டுமென்று கருதுகிறேன். இப்பொழுது கிராம அதிகாரிகளுக்கும், சாதாரண விவசாயிகளுக்கும் இடையில் சகஜநிலை இல்லாமல் விவசாயிகளை சங்கடப்படுத்தும் சூழ்நிலை பெரும்பகுதியில் இருக்கிறது. அதை மாற்றும் முறைக்கு சில சிபார்சுகளை செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகள் சரியானவை தான் என்று நான் கருதுகிறேன்.

அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் கொடுத்த சிபார்சின் படி அந்த வில்லேஜ் லெவல் மட்டத்தில் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக்கொண்டு மாறுதல் செய்வது



1974 ஏப்ரல் 2] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

என்றால் கொஞ்சம் சிரமம்தான். நீண்ட நாட்களாக அதையே நம்பி உத்தியோகம் பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். எனவே, புதிதாக சேர்க்கின்றவர்களை அந்த அடிப்படையிலே எடுத்து, படிப்படியாக கொண்டுவர எடுக்கும் முயற்சி பிறகு வரும் மாறுதலுக்குச் சரியானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதற்குமேல், கிராம மட்டத்திற்கு மேல், தாலுக்கா மட்டம், மாவட்ட மட்டம் இருக்கிறது. இந்த ரெவின்யூ அதிகாரிகள் மட்டத்தில் ஒரு சாதாரண விவசாயி சென்று தனக்குத் தேவைப்படும் விவரங்களை புரிந்துகொள்ளும் நிலைமையிருக்கிறதா என்றால் இல்லை. அன்றைக்கு பிரிட்டிஷ்காரன் காலத்தில் இருந்து அதே மாதிரிதான் ரெவின்யூ ஆபீஸ் இருக்கிறதே தவிர, மாற்றம் ஏற்படவில்லை. நாமெல்லாம் இந்த நாட்டின் குடிமக்கள், இந்த நாட்டின் மன்னர், ஓட்டுரிமை கொடுத்து அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டோம் என்று சொன்னவுடனே, அங்கே வரும் விவசாயியைப் பார்த்து, 'வா ஐயா' எங்கேயிருந்து வந்தாய், என்ன சமாச்சாரம்' என்று தாலுக்கா ஆபீசிலேயோ அல்லது வேறொரு ஆபீசிலேயோ கேட்டு திருப்தியாக அவனுக்குப் பதில் சொல்லும் அமைப்பு இல்லை.

அங்கே வந்து அவன் இடுப்பிலே துண்டைக் கட்டிக்கொண்டு தாலுக்கா ஆபீஸ் வாசலிலே நிற்கக்கூடிய நிலையிலேதான் இருக்கின்றான். என்னைப்போல் சட்டை போட்டுக்கொண்டு போனால் கொஞ்சம் கவனிக்கிறார்கள். ஆகவே, எங்களைப்பற்றி கேள்வியில்லை. ஆனால் அடிமட்டத்தில் இருக்கும், சாதாரண சட்டைகூடப் போடத் தெரியாத விவசாயி தாலுக்கா ஆபீசுக்குப் போய் விவரம் தெரிந்துகொண்டுவிட முடியாது. அதற்கு என்னை போல் ஒரு ஆளை கூட்டுத் துணைக்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும்.

இந்தக் காலத்தில் துணைக்கு அழைத்துப் போவதால் என்ன விவகாரம் ஏற்படும் என்பது எல்லோருக்கும் தெரியும். அவனை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே போய்விட்டு வந்து ஐயாவிடம் எல்லாம் சொல்லிவிட்டேன் என்று சொல்லும் நிலைமை இன்னும் இருக்க வேண்டுமா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஏப்ரல் 2

அங்கு பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர் என்று ஒருவரைப் போட்டால்கூடப் பரவாயில்லை. அசிஸ்டன்ட் தாசில்தாருக்கு முன்னர் ஐந்து, பத்து நாற்காலிகளைப் போட்டு அழுக்கு வேட்டி கட்டிக்கொண்டு சட்டை இல்லாமல் வரக்கூடிய அந்த விவசாயி களை உட்கார வைத்து அவர்களுக்கு என்ன வேண்டுமென்று கேட்டு விளக்கம் கொடுத்து அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஏற்பட்ட ஒரு பெரும் மாற்றத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். கிராமத்தில் இருக்கக்கூடிய சாதாரணமானவர்கள் கூட செகரடேரியட்டுக்கு வந்து அமைச்சர்களைப் பார்த்து தங்களுடைய கோரிக்கைகளைக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. அது தாலுக்கா மட்டத்தில் அதிகாரிகள் மட்டத்தில் நடக்க வேண்டும்.

அவர்கள் சொல்லுகின்ற குறைபாடுகள் அத்தனையும் நிவர்த்திக்க முடியாது என்றாலும் அவர்களே நேரடியாக அதிகாரிகளைப் பார்த்துப் பேசும் நிலை ஏற்பட்டால் அவர்கள் தங்களுக்கும் மரியாதை இருக்கிறது என்று எண்ணும் நிலை ஏற்படும். அதிகாரிகள் எல்லாம் மக்களுக்குப் பணிபுரியக்கூடிய வர்கள். அந்த எண்ணம் ஏற்படும் நிலைமை ஏற்படுத்த வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சாகுபடி செய்கிறவர்களுக்கு ஊக்கம் இருக்கவேண்டும். தஞ்சை சாகுபடி செய்வது லாபகரமான தொழில் அல்ல— குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வெளியில்கூட வியாபாரப் பொருளுக்கும் நெல் சாகுபடிக்கும் வித்தியாசம் இருக்கிறது வருவாயில். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை பல இடங்களில் மூன்றுபோகம் சாகுபடி செய்ய முடியும். அப்படி மூன்று போகம் சாகுபடி செய்யக் கூடியவர் களுக்கு தண்ணீர்த் தீர்வையையும் மற்ற வரிகளையும் ரத்து செய்து கொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்தால் அவர்களுக்கு ஊக்கமாக இருக்கும். 100 ரூபாய் கூட வராது. 60, 70 ரூபாய்தான் வரும். செலவு வரும்.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகப் பல்வேறு சட்டங்களை இயற்றி இருக்கிறோம். இந்தச் சபை மட்டத்திலே உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து எந்தெந்த இடங்களுக்கு விலக்கு



974 ஏப்ரல் 2] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அளிக்கலாம் என்று பரிசீலிக்க கமிட்டி போடப்பட்டது. ஆரம்பத்தில் சுறுசுறுப்பாகக் கமிட்டியைக் கூட்டினார்கள்; பேசினார்கள். இப்போது அந்தக் கமிட்டி இருக்கிறதா இல்லையா என்றே தெரியவில்லை.

மாற்றத்தைக் கொண்டு வருகிறபோது, அமலாக்குகிறபோது இரண்டையும் சேர்த்துச் செய்துவிட்டால் சுலபமாகக் காரியமாகும். உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து முடிவாக எந்தெந்த நிலங்களை விலக்கு அளிக்காமல் உட்படுத்தப் போகிறோம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதுபற்றி அரசு சீக்கிரமாக முடிவுக்கு வரவேண்டும். உச்ச வரம்புச் சட்டத்தில் பலவற்றைச் சொல்லியிருக்கிறோம். உச்ச வரம்பு தனி ஆட்களுக்கு இருக்கக்கூடாது, குடும்ப மட்டத்தில் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதுபற்றி அரசு என்ன கருதுகிறது என்று தெரியவில்லை.

குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டத்தைச் செய்திருந்தாலும் நீண்ட நெடுநாட்களாகக் குத்தகை செய்து வந்தவர்கள் பதிவு செய்யப்படாத நிலை இருக்கிறது. இதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சபையிலும் கூறப்பட்டது. அதிகாரிகள் நேரில் சென்று விசாரித்து சாகுபடி செய்தார்களா என்று பார்க்கவேண்டுமென்று இருக்கிறது. அந்த அதிகாரிகளிடத்தில் குத்தகை செய்யக்கூடிய அரிசன மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் தாங்கள் சாகுபடி செய்ததாகக் கூறினால் அந்த அதிகாரிகள் நம்புவார்களா? நிலவுடைமையாளர்கள் வசதி படைத்தவர்கள்; படித்தவர்கள்; அவர்கள் சொல்லக் கூடியதைத்தான் நம்பக்கூடிய நிலை இருக்கிறது. அதிகாரிகளுடைய நோக்கில் மாற்றம் வேண்டும்.

அரசு திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். அதிகாரிகள் விவசாயிகள் பக்கந்தான் இருக்கவேண்டும். விவசாயிகள் சாகுபடி செய்யவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு, நிலவுடைமையாளர்களுக்கு இருக்கவேண்டும். அந்த மாதிரிச் செய்தால்தான் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுக்காவில் பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வந்த குத்தகை நிலங்களுக்கு ரெக்கார்டு இல்லாத காரணத்தால் மிராசுதார்கள் விவசாயிகளை

அந்த நிலத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது என்று தடுக்கிறார்கள். அது பற்றி எழுதிக் கொடுத்தோம். இன்றுவரை அந்த விவசாயிகள் சாகுபடி செய்ய முடியாமல் தடுத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

குத்தகைதாரர்கள் ரெக்கார்டு பதிவு செய்த பிறகு கோர்ட்டுக்குப் போக முடியாது என்று சட்டத்தில் இருந்தாலும் கூட நிலவுடைமையாளர்கள் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி தடுப்பது பற்றிச் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லட்சக்கணக்கான பேர்களுக்குப் பட்டா கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள், மகிழ்ச்சி. பட்டா கொடுத்த நிலம் எல்லாம் அவனிடத்தில் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். பட்டா கொடுத்த பிறகு விற்கக்கூடாது என்ற விதி இருந்தாலும் பல பேரிடத்தில் அசைன்மெண்ட் வாங்கிய நிலம் இல்லை. அவனாகவே கொடுத்து விட்டானோ அல்லது நிர்பந்தத்தின் பேரில் கொடுத்து விட்டானோ தெரியாது. ஆகவே, அசைன்மெண்ட் செய்யப்பட்ட நிலம் அவனிடத்தில் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும்.

மனைக்கட்டுகள் கிராமப்புறங்களில் வழங்கி வருகிறோம். ஆனால் மேஜர் பஞ்சாயத்து, முனிசிபல் ஏரியாக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. அந்தப் பகுதியில் இருக்கிற நிலம் இல்லாத கூலி வேலை செய்பவர்களுக்கும் மனைக்கட்டு வழங்க வேண்டும். அது மத்திய சர்க்கார் திட்டத்தில் இல்லையென்று சொல்லலாம். மத்திய சர்க்கார் திட்டத்திலுள்ள கிராமப்புறங்களைப் பொறுத்த அவர்களிடம் நிதி வாங்கிச் செய்யலாம்; மற்றப் பகுதிகளைப் பொறுத்தவரை நம்முடைய அரசாங்கமே பொறுப்பேற்று மனைக்கட்டு கொடுக்கலாம்.

கன்சாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ் பற்றி 1967-ம் ஆண்டி லிருந்து நான் இந்தச் சட்டசபையில் சொல்லி வருகிறேன். அதைச் சொல்லவில்லை என்றால் என்னுடைய பிரசங்கம் முடிவுற்றதாகக் கொள்ள முடியாது. நிலங்களை ஒன்று சேர்த்துக் கொடுத்தாலொழிய அபிவிருத்திக்கு வழி இல்லை. இது தீர்க்கமான கருத்து, நாட்டில் விவசாயத்தைப் பற்றி நன்றாக அறிந்து பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்தித்து வரும்





அறிஞர்களின் கருத்து. பிளானிங் கமிஷன் பணம் ஒதுக்கி ரெவின்யூ செகரடரிகள் மாநாடு போட்டெல்லாம் பேசுகிறார்கள். இங்கு யாரும் அதைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் நல்ல இன்செண்டிவ் கொடுத்ததாக ஆகும். அவரவர்களே ஒன்று சேர்ந்து முயற்சி எடுக்கலாம். காபினெட்டில் இருப்பவர்களுக்கு இதிலே அனுபவம் கிடையாது. அனுபவம் இல்லாததால் எவ்வளவோ சங்கடங்கள். பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது என்றால் ஒரு இடமாக இருந்தால் கவனிக்க முடியும். அதைச் செய்தால் ஒரே ஆண்டில் இரண்டு மடங்கு விளைச்சலை அதிகப்படுத்த முடியும்.

பொது விற்பனை வரியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. திருப்பூரில் பனியன் தொழில் முக்கியமானது. வெளி மாநிலங் களுக்கு அதிகமாக அனுப்புகிறார்கள். இப்போது 3 பர்சன்ட் வரி போட்டிருக்கிறார்கள். சி.எஸ்.டி. வேறு இருக்கிறது. இதர மாநிலங்களில் மற்ற வரிகளை வாங்கிக் கொண்டு இதை கொடுக்காத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வேறு மாநிலத்து வியாபாரிகளும் இதைக் கொடுக்க வேண்டும். அவர்கள் கணக்கு வைத்திருக்க வேண்டும். எந்த வியாபாரி வாங்கினாலும். 'சி' பார்ம் வேண்டாமென்று சொல்ல முடியாது. இந்த வரியை எப்படியும் அவர்களும் கொடுத்தாக வேண்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அந்த வரியைப் பற்றித் தெரியும். ரெப்ரசன்டேஷனைப் பரிசீலனை பண்ணுங்கள். வேறு மாநிலங்களில் சி.எஸ்.டி. மட்டுந்தான் இருக்கிறது. அப்படி இருக்கும்போது நம்முடைய மாநிலத்தில் மட்டும் போட்டால் வருமானம் வருமா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 20 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** முதியோர் உதவித் தொகை குறிப்பிட்ட பேர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது, பாக்கிப் பேருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

**திரு. வை. பாலசுந்தரம்:** மதுராந்தகம் வட்டத்தைப் ப சொல்லும்போது அச்சரப்பாக்கம் தொகுதி அதில் அட யிருக்கிறது. எந்த கிராமம் என்று சொன்னால் நாங்க தெரிந்துகொள்ள வசதியாகயிருக்கும். சாகுபடிதாரர்கள், சட்ட இருந்தும் வெளியேற்றப்படுகிறார்கள் என்றும், சட்ட பாதுகாப்பு கிடைக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அச்சரப்பாக் தொகுதியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. மதுராந்தகத்தை பற்றிச் சொன்னார்கள். மதுராந்தகம் உறுப்பினர் அதைப்பற் கிளப்பாதபோது அச்சரப்பாக்கம் உறுப்பினர் அதைப்பற் கிளப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன் நடைபெறுகிற வருவாய்த் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பினை நல்கியமைக்கு என் நன்றியைத் தெரிவித் கொள்கிறேன்.

முதலாவதாக இந்தத் துறையில் வெள்ளையன் காலத்தில் ஸ்கீ ஆப் ரிவிஷன் என்று கொண்டு வந்தார்கள். வெள்ளைய காலத்தில் கொண்டுவந்த வரி வஜா திட்டம் இன்று வ விவசாயிகளுக்குப் பயன்படுகிற அளவிற்கு அது சட்டமாகவில்லை என்ற வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறே ஆகவே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந் ஸ்கீம் ஆப் ரிவிஷனை சட்டபூர்வமாக அமுலாக்க வேண்டுமென் கேட்டுக் கொள்கிறேன். இன்று கிராமப்புறங்களில் ஏழை மக்க ஏழை விவசாய மக்கள் பருவ மழை தவறிவிட்டால் அவர்கள் வ வஜா கோருகிறபோது ஒரு அதிகாரியை வைத்தே செய்கிறார்க என்று சொன்னால் நிச்சயமாக நியாயம் சில நேரங்களி கிடைப்பதில்லையென்பதை நாம் உணர்ந்தேயாகவேண்டும்.

பருவ மழை தவறிவிட்டால் கூட ஒரு அதிகாரி சரியா முறையில் புள்ளிவிவரங்களை அரசுக்குக் கொடுப்பதில்லை. அ வகையில் அங்கிருக்கிற விவாசாய மக்கள் பாதிக்கப்படுகிறார்க 1950 ஆம் ஆண்டு கூட நிலச் சீர்திருத்தக் கமிஷன் அத்தகைய யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நம் அரசு இந்



வரி வஜா செய்கிற அந்தத் திட்டத்தை சட்டபூர்வமாக ஆக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இன்று புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து தரவேண்டுமானால் தாசில்தார் அதற்கு பரிந்துரை செய்ய வேண்டும். அதற்குப் பின்னால் கோட்டாட்சித் தலைவர் பரிந்துரை செய்ய வேண்டும். அதற்குப் பின்னால் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி பட்டா வழங்க வேண்டும்.

இப்படி ஒரு கிராமத்தில் உள்ள ஒரு ஏழை விவசாயி பட்டா கோரினால் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து தருவதற்கு இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. ஆகவே தாசில்தார்களுக்கு அதிகப்படியான அதிகாரங்களைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

க்ரேட்டர் கண்ட்ரோல் இருக்க வேண்டியதுதான். ஆனால் அப்பலெட் அத்தாரிட்டி இருக்கிறது. ஆகவே தாசில்தாரே புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து தருகிற அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால் ஏழைகள் அவரவர்கள் வட்டத்திலேயே அவரவர்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்வார்கள்.

அடுத்து, இன்றைக்குள்ள கோட்டங்கள் தேவை இல்லை. ரெவின்யூ டிவிஷன்களை எல்லாம் எடுத்துவிட்டு, நமது சீர்திருத்தக் கமிஷன் சொல்லியிருக்கிற யோசனைப்படி உதவி மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஒவ்வொரு வட்டத்திலும் ஏற்படுத்துவதன் மூலம் சுமுகமாக காரியங்கள் ஆற்றப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் வெள்ளையன் காலத்தில் குறிப்பாக அவர்களுடைய நிதிநிலை அறிக்கை நிலவரியைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது. அப்படி அமைந்திருந்த காரணத்தால் தான் ரெவின்யூ போர்ட்கள் எல்லாம் உருவாயிற்று. அதன் காரணமாகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தாலுகாக்கள் எல்லாம் உருவாகின.

ஆனால் இன்றைக்கு நம் அரசுக்கு வருகிற பணம் பல்வேறு விதங்களில் வருகின்றன. ஆகவே ரெவின்யூ போர்ட் இன்றைய தினம் இருக்க வேண்டியதில்லை என்று என் ஆணித்தரமான யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த போர்ட் ஆப் ரெவின்யூவை உடனடியாக எடுத்துவிட வேண்டும் என்ற என் யோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆ. பரந்தாமன்] [1974 ஏப்ரல் 2

அதேபோல் எப்போதோ ஏற்பட்ட இந்த மாவட்ட எல்லைகள் எல்லாம் இன்றையதினம் மாற்றப்பட வேண்டும் என்பது என் கருத்து. இன்று ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் 60, 70 மைல் தூரமுள்ள அதற்குள் உள்ள காரியங்களுக்கு அவர்கள் அதிகாரத்தை வகிக்கிறார்கள்.

ஆகவே, என் கருத்து என்னவெனில், இப்போதுள்ள மாவட்டங்களை பல மாவட்டங்களாகப் பிரித்தால் அதிகாரங்கள் நல்லமுறையில் பயன்படும், ஏழைகளும் அதனால் நன்கு பலன் பெறுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பின்னர், நம் கழக அரசு வந்ததற்குப் பின்னால் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் ஒவ்வொரு வட்டத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் எடுக்கப்படுகிற முடிவுகள்—முடிவுகளைத் தர வேண்டும் என்று அரசு வற்புறுத்துகிறது—எந்த அளவிற்கு அரசால் பரிசீலிக்கப்படுகின்றன என்று பார்த்தால் அவைகள் நிச்சயமாக பரிசீலிக்கப்படவில்லை. ஆகவே, மாவட்ட வளர்ச்சி மன்றங்களை உயிர் உள்ள வளர்ச்சி மன்றங்களாக ஆக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில், நிலவரிக்குள்ள வட்டியை நீக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லி யிருக்கிறீர்கள். அது பல நாள் கோரிக்கை. அந்த அளவிற்கு மகிழ்ச்சி. ஆனால் அதில் குறிப்பிட்டிருப்பது மூன்று பசலி களுக்குப் பின்னால் 5 சதவிகிதம் பெனல்ட்டி வசூலிக்க வேண்டு மென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஏழை விவசாய மக்களுக்கு இது ஒரு சுமையாகத்தான் இருக்கும். வட்டியை நீக்கி விட்டீர்கள், அந்த அளவில் மகிழ்ச்சிதான். ஆனால் பெனல்ட்டி என்று போட்டிருப்பதால் மீண்டும் தொல்லைகள் ஏற்படும். ஆகவே இந்த பெனல்ட்டி என்பதை ரத்து செய்துவிட்டு கூடுமான வரையில் அவர்களிட மிருந்து நிலவரியை வசூலிக்க வேண்டிய ஏற்பாடுகளை ரெவின்யூ துறை அதிகாரிகள் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 2] [திரு. ஆ. பரந்தாமன்]

அன்று தோடர்மால் விவசாயத்திற்கு நிலவரியைக் கொண்டு வந்தார்கள். பிறகு மன்றோ காலத்தில் அது மாற்றப்பட்டது. அதற்குப் பின்னால் அது கைவிடப்பட்டது. மீண்டும் அதே மன்றோ காலத்தில் அது ஏற்படுத்தப்பட்டு இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறது.

புன்செய் நிலங்கள் பொறுத்தவரையில் அன்று எந்த அளவிற்கு வரி விதிக்கப்பட்டதோ அதேதான் இன்றும் இருந்துகொண்டு வருகிறது. அதை மாற்றியமைத்தால் நல்லது.

நன்செய்யைப் பொறுத்து, எங்கள் திருத்தணி வட்டத்தில், குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் பல ஏரிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஏரிகள் எல்லாம் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகிய ஏரிகள். அந்த ஏரிப் பாசனத்தை நம்பியே அங்குள்ள விவசாய மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஏரிகளில் வரும் தண்ணீரைப் பெருக்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்த விவசாய மக்கள் வைக்கிற நேரத்தில் அந்தப் பகுதியில் ஓடுகிற ஆறுகளின் குறுக்கே பாலங்களை அமைக்க வேண்டும்.

அமைத்து மிகுதியான தண்ணீரை டைவர்ட் செய்ய வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் கார்ப்பரேஷன் ஆப் மதராஸ் குறுக்கே வந்து விடுகிறார்கள். இன்னும் க்ளியரன்ஸ் கொடுக்கவில்லை. இன்று சென்னையில் இருக்கிற கார்ப்பரேஷன் நூறு ஆண்டுகளுக்கு முன்பு உருவாகிய கார்ப்பரேஷன்.

ஆனால் கிராமப்புறங்களில் எங்களுக்கு இருக்கிற உரிமை முன்னூறு ஆண்டுகளாக இருக்கிற உரிமையாகும். ஆகவே அதை அருள்கூர்ந்து கவனித்து உடனடியாக அந்த ஏரிகளுக்கெல்லாம் பாசன வசதி செய்து தருகிற அளவிற்கு சென்னை மாநகராட்சிக்கு உடனடியாக க்ளியரன்ஸ் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு தெரிவிக்க வேண்டும். இல்லாவிடில் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படும். எங்கள் ரைப்பேரியன் ரைட்ஸை பாதுகாத்துக் கொள்ள நாங்கள் உயர்நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

[1974 ஏப்ரல் 2

***திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பல மாவட்டங்கள் நிர்வாகத்திற்கு வசதியாக இல்லாமல் பரப்பளவு மிகுந்திருப்பதால் அவற்றை எல்லாம் சுருக்கி நிர்வாகத்திற்கு வசதியாக அமைக்க வேண்டுமென்ற கருத்தைதான் வலியுறுத்த விரும்புகிறேன். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இவைகள் எல்லாம் பரப்பளவு மிகுதியாக உள்ள மாவட்டங்கள். அவற்றை எல்லாம் சுருக்கி அமைக்கலாம். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்னும் தலைமை இடம் மதுரையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. சுதந்திரம் கிடைத்து இருபத்தெட்டு ஆண்டுகள் ஆயிற்று. இன்னும் மதுரையில்தான் இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமை இடம் இருக்கிறது. வெட்கப்பட வேண்டிய ஒரு விஷயம் இது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைமை இடம் இராமநாதபுரம் மாவட்டத்தின் மத்திய இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.

இதில் அரசியல் எல்லாம் பார்க்கக் கூடாது. மக்கள் வசதியை முன்னிறுத்தித்தான் செய்ய வேண்டுமேயல்லாது, அரசியலுக்கு இடம் இல்லாத வகையில் மக்கள் நன்மையைக் கருத்தில்கொண்டு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எங்கு வைக்கலாம் என்று அபிப்பிராயம் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** மத்திய இடத்தில் வையுங்கள், ஒரு சென்ட்ரல் ப்ளேஸில் வையுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இன்ன இடம் என்று சொல்லுங்கள். ஒரு கட்சி சார்பாக கருத்து சொல்கிறீர்கள். ஆகவே குறிப்பிட்டு ஒரு இடத்தைச் சொன்னால் பரிசீலிக்க வாய்ப்பாக இருக்கும். இன்ன இடம் என்று சொன்னால் பரிசீலிக்கலாம்.



1974 ஏப்ரல் 2]

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** எந்த இடத்தில் வைத்தால் வசதியாக இருக்கும் என்பதை அரசுதான் தீர்மானிக்க வேண்டும். வேண்டுமென்றால் அந்த மாவட்டப் பிரதிநிதிகளை வைத்து ஒரு கூட்டம் போட்டு செய்யலாம்.

**திரு. பெ. சீனிவாசன்:** இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர்ப் பிரச்சினையை தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் கிளப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த இடமும் வசதியாக இல்லை. அதை இரண்டாகப் பிரித்தால் தவிர தலைநகரம் வைக்க ஒரு இடமுமே சரியாக இல்லை என்பதை டி.டி.ஸி.யில் நாங்கள் பல தடவை சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** அந்த அரசியல் பிரச்சனையில் நான் நுழைய விரும்பவில்லை.

திருநெல்வேலி மாவட்டமும் பெரிதாக இருக்கிறது. நாங்குநேரி தாலுகாவை கன்னியாகுமரி மாவட்டத்தோடு இணைக்க வேண்டும் என்ற ஒரு யோசனை இருக்கிறது. அதை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்குள்ள ரெவின்யூ கிராமங்களை சீர்படுத்தி 17 ரெவின்யூ கிராமங்களாக அமைக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது.

சென்ற பஞ்சாயத்துத் தேர்தலின்போது பஞ்சாயத்துகளைப் புனரமைப்புச் செய்தார்கள். அந்த புனரமைப்புச் செய்யப்பட்டது பரப்பளவையோ, ஜனத்தொகையையோ அடிப்படையாக வைத்து செய்யவில்லை. ஆளும் கட்சி அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட்டது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், தச்சன்பாம்பு என்ற கிராமப் பஞ்சாயத்து உருவாக்கப்பட்டது. எதையெதை கிராமப் பஞ்சாயத்தாக ஆக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் நகரப் பஞ்சாயத்துக்களாக ஆக்கியிருக்கிறார்கள், எதையெதை நகரப் பஞ்சாயத்துக்களாக ஆக்கலாமோ அவற்றை கிராமப் பஞ்சாயத்தாக ஆக்கியிருக்கிறார்கள்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 ஏப்ரல் 2

இந்த தச்சன்பரம்பு என்ற கிராமப் பஞ்சாயத்தும் அப்படி ஏற்பட்டதுதான். தச்சன்பரம்பு என்ற கிராமத்தில் காவல் துறை நிலையம் இருக்கிறது, சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது, சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கிறது, எலெக்டிரிசிடி போர்ட் ஜூனியர் இன்ஜினீர் ஆபீஸ் இருக்கிறது, பி.டபிள்யூ.டி. ஜூனியர் இன்ஜினீர் ஆபீஸ் இருக்கிறது, டெலிபோன் தந்தி ஆபீஸ் இருக்கிறது, இத்தனை இருந்தும் அதை கிராமப் பஞ்சாயத்து என்று ஆக்கியிருக்கிறார்கள். அங்கே சற்றேறத்தாழ ஒரு 500-க்கும் குறைவாக ஜனத்தொகை இருக்கும். இந்த மாதிரி பல இருக்கின்றன. இவற்றை அரசு மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகாரம் கிடையாது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறோம். சின்னச் சின்ன காரியங்களுக்குக்கூட அரசைக் கேட்க வேண்டியிருக்கிறது. நம்முடைய மாநில அரசிடத்தில் அதிகாரம் குவிந்து கிடக்கிறது. அது பரவலாக்கப்பட வேண்டும்.

மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறோம். மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கும் அதிக அதிகாரம் தர வேண்டும். மக்கள் தொகை அடிப்படையில் அந்தந்த மாவட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கிவிடுங்கள். சிறிய வேலைகளை வளர்ச்சி மன்றத்தில் திட்டம் போட்டு செலவிடுவதற்காக ஒதுக்கிவிடுங்கள். சாலை போடுதல், சிறுபாசனத் திட்டங்கள் மேற்கொள்ளுதல், பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற வேலைகளுக்கு மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் வைத்து திட்டம் போட்டு, அதை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களை அடிக்கடி மாற்றிவிடுகிறார்கள். ஆறு மாதத்திற்கு முன்பு தான் எங்கள் மாவட்டத்திற்கு ஒரு ஆட்சித் தலைவரைப் போட்டார்கள். அவர் மாவட்டத்தின் நிலைமைகளை ஆராய்ந்து எப்படிச் சீர்செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது அவரை மாற்றிவிட்டார்கள். அவரைப் போல் எங்கள் மாவட்டத்திற்கு ஒரு ஆட்சித் தலைவர் கிடைக்க மாட்டார்.



1974 ஏப்ரல் 2] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

அரசு சிக்கனமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஜீப் கார்கள் அதிகமாக உபயோகிக்கக்கூடாது என்று சொல்கிறோம். அதற்கு இலக்கணமாக அவர் தன்னுடைய சொந்தப் பணிகளுக்கு ஜீப் கார் எடுக்காமல், டிஸ்டிரிக்ட் கிளப்பிற்கு சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார். அவர் வீட்டிற்கும், டிஸ்டிரிக்ட் கிளப்பிற்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். அப்படிப் பட்ட ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை எங்கள் மாவட்டத்திலிருந்து மாற்றியது எங்களுக்கு வருத்தமாக யிருக்கிறது.

புதுக்கோட்டையிலிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரையும் அப்படித்தான் மாற்றியிருக்கிறீர்கள். அவர் அங்கேயுள்ள பிரச்னைகளை ஆராய்ந்து அதை எப்படி தீர்க்கலாம், என்ன வகையில் நல்ல பணிகளைச் செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறபோது மாற்றிவிட்டார்கள்.

நான் கேள்விப்படுகிறேன். அங்கே இருக்கிற ஜெனரல் பி. ஏ. கோஷ்டி ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தி வருவதாகவும், மக்களுக்கு நல்லது செய்ய நினைத்தது இல்லை என்று புகார் எனக்கு வந்திருக்கிறது. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜீப் கார்கள் இல்லாமலும் முடியாது. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பதில் கொஞ்சம் கண்டிப்பாக இருக்க வேண்டும். இப்போது பெட்ரோல் விலை ஜாஸ்தியாகப் போய் விட்டது. ஆகவே கார்களை அரசாங்கக் காரியங்களுக்குத் தவிர மற்றவற்றிற்கெல்லாம் பயன்படுத்தக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் தமிழகத்திலிருக்கிற மாதிரி நில வரி வசூலிக்கிறார்கள். அதற்காக ரசீது கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற ரசீதைப் பார்த்தால் தெளிவு இல்லாமல் இருக்கிறது. எவ்வளவு நிலப்பரப்பு, நிலம் யாருக்குச் சொந்தம் என்று தெரியாமல் இருக்கிறது. நான் ஒரு யோசனை சொல்கிறேன். எங்களுக்கு முன்னால் அந்த மாவட்டத்தில் ஒரு ரசீது கொடுத்தார்கள். அதில் பட்டாதார் பெயர், வரி செலுத்தியவர் பெயர், செலுத்தும் ஆண்டு, நிலத்தின் அளவு, சர்வே நெம்பர்,

நஞ்சையா, புஞ்சையா, பஞ்சாயத்து வரி எவ்வளவு என்று தெளிவான முறையில் போட்டிருக்கும். அந்த மாதிரி முறையில் இனி ரசீது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரயில் பாதை பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிரச்னையை நான் மீண்டும் கிளப்பவிரும்பவில்லை.

அங்கேயுள்ள மாவட்டப்பணியாளர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டிலேயே காஸ்ட் ஆப் லிவ்விங் இண்டக்ஸ் எங்கே கூடுதல் என்றால் முதலில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், பிறகு கோயம்புத்தூரிலும்தான் கூடுதல், மூன்றாவதாகத்தான் சென்னை மாநகரம் வருகிறது. சென்னை நகரத்தில் இருக்கும் பணியாளர்களுக்கு ஈட்டுப்படி, வீட்டுப்படி அதிகமாகக் கொடுக்கிறோம்.

எதற்காகக் கொடுக்கிறோம் என்றால் விலைவாசிப் புள்ளி அதிகமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக. கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கேயுள்ள விலைவாசி தமிழ்நாட்டில் எங்கும் கிடையாது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் சென்னைப் பட்டணத்தில் கொடுக்கும் ஈட்டுப் படியைக் . கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நில வரியைப் பூர்ணமாக ரத்து செய்துவிட்டு, நிலத்திலிருந்து எவ்வளவு வருமானம் கிடைக்கிறதோ அந்த வருவாயின் அடிப்படையில் வரி வசூலிக்க வேண்டும். நிலத்திற்கு என்று போடக்கூடாது. சில இடங்களில் கரும்பு போடுகிறார்கள், சில இடங்களில் நெல் போடுகிறார்கள். சில இடங்களில் தென்னை போடுகிறார்கள். ஆகவே, நிலப்பரப்பின் அடிப்படையில் போடாமல், அதிலிருந்து வரும் வருமானத்தின் அடிப்படையில், வரிபோடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் ரீ-சர்வே செய்தார்கள். அந்த ரீ-சர்வேக்குப் பிறகு ஒன்றும் சரியாக இல்லை. அந்த ரீ-சர்வே நடத்த அரசுக்கு எவ்வளவோ லட்சக்கணக்கான பணம் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. இருப்பினும், பழைய ரிக்கார்டை வைத்துக் கொண்டு, மீண்டும் புதிதாக ரீ-சர்வே செய்தால் என்ன என்று தோன்றுகிறது. நிலம், சொந்தக்காரர்களிடத்தில் இருக்கும்.



ஆனால் பட்டா வேறு ஒருவர் பேரில் இருக்கும். இதைத் தகுந்த முறையில் சரிசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் அரிஷ்டத்திற்கு 30 சதவிகிதம் போட்டிருக்கிறோம். அரிஷ்டவகைகளை ஏழை எளிய மக்கள் தான் அதிகமாக மருந்தாகச் சாப்பிடுகிறார்கள். இதற்கு இவ்வளவு வரி போட்டிருப்பது ஆயுர்வேத முறையை நாம் அழித்தது போல் ஆகும். அரிஷ்டம் என்றால் ஆயுர்வேத மருந்து இதற்கு 30 சதவிகிதம் விற்பனை வரி போட்டிருப்பதால் ஆயுர்வேத முறை பின்பற்றுவோர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு, நான் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானிய கோரிக்கைகளை வரவேற்று, அதன் மீது என்னுடைய இரண்டு கருத்துக்களை நான் கூறவேண்டுமென்று விரும்புகிறேன்.

முதலாவதாக இந்த விளம்பர சாதனங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். உலகத்தில் முன்னேறிய நாடுகளில் இந்த விளம்பரப் பலகை முறையை நல்ல முறையில் ஆதரித்து, அதற்கு வேண்டிய அளவுக்கு அரசு ஆதரவு கொடுத்து வருகின்றது. அதன் மூலம் வருமானமும் வருகிறது. மிகக் கன்சர்வேடிவ் என்று சொல்லப்படுகிற பிரிட்டனிலும், மிக முன்னேற்றமான ஜப்பானிலும் இதுபோல் விளம்பரப் பலகைகளும், நியான் விளக்குகளும் பார்ப்பதற்கு அழகாக இருக்கிற வகையில் வைத்திருக்கிறார்கள்.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

நான் படத்தில் தான் இவற்றைப் பார்த்து இருக்கிறேன். நேரில் பார்த்தது இல்லை. அந்த முறையில் நம்முடைய நாட்டிலும் இந்திய உபகண்டத்தில் பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற நகரங்களிலும் இந்த விளம்பர போர்டிற்கு நல்ல ஆதரவு கொடுத்து இருக்கிறது. அவை சிறந்த முறையிலும், கவர்ச்சி யூட்டும் முறையிலும், நகரை அலங்கரிக்கும் முறையிலும் மிக அதிகமான அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

நம்முடைய தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் என்னவோ தெரியவில்லை. அதற்கு அரசு ஆதரவு கிட்டவில்லை, அதற்கு அரசு ஊக்கமும் அளிக்கவில்லை. நம்முடைய சென்னை மாநகரத்தை எடுத்துக்கொண்டால் 'நோ போர்டு ஸோன்ஸ்' என்று பல இடங்களை வைத்திருக்கிறார்கள். முத்துசாமி அய்யர் பாலம், வாலாஜா பாலம் இதுபோன்ற பல முக்கியமான இடங்களை 'நோ போர்டு ஸோன்ஸ்' என்று வைத்திருக்கிறார்கள். ஏன் இதை இப்படி வைத்திருக்கிறார்கள், இப்படி தடை செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை விபத்துக்கள் ஏற்படும் என்ற எண்ணத்தில் வைத்திருக்கிறார்களோ, என்னவோ தெரியவில்லை.

அதே நேரத்தில் அதற்குப் பக்கத்தில் இருக்கிற மத்திய அரசுக்குச் சொந்தமான இடங்களில், தனியாருக்குச் சொந்தமான இடங்களில் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, 'நோ போர்டு ஸோன்ஸ்' என்று சொல்லப்படுகிற இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் குறைகிறதே தவிர, அதனால் உருப்படியான பலன் கிட்டவில்லை. ஆகவே 'நோ போர்டு ஸோன்ஸ்' தடையை எடுத்துவிட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்றும் இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னை மாநகரத்தை எடுத்துக்கொண்டால் 'அன் ஆதரைஸ்டு ஹோர்டிங்ஸ்', நிறைய இருக்கின்றன. ஏறக்குறைய பாதிக்கு மேல் 'அன் ஆதரைஸ்டு ஹோர்டிங்ஸ்' ஆகத் தான் இருக்கின்றன. இவைகளை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

ஆனால் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் ஒரு தவறான கொள்கையை கையாண்டு வருகிறார்கள். என்னவென்றால் இப்பொழுது ஹோர்டிங்ஸ்-க்கு லைசென்ஸ் ரென்யூவலுக்கு வந்தாலும் லைசென்ஸை புதுப்பிக்க வேண்டுமென்றாலும், புதிய லைசென்ஸ்க்கு விண்ணப்பம் போடுகிறார்கள் என்றாலும், லைசென்ஸ் கொடுக்க வேண்டாம் என்று அவர் தடை விதித்திருக்கிறார்கள். இது எந்த முறையிலேயும் நியாயம் இல்லை. 'அன் ஆதரைஸ்டு ஹோர்டிங்ஸை' ஒழித்து நியாயமான முறையில் எல்லோருக்கும்





வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதற்காக இப்பொழுது இருக்கிற லைசென்ஸ்களையெல்லாம் ரென்யூபண்ணாமல், கான்ஸல் செய்துவிட்டு, அதே நேரத்தில் புதிய லைசென்ஸும் கொடுக்காமல் இருப்பதன் மூலம் இந்த அரசு வருவாயை இழக்கிறது. அதே நேரத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் யார்? இதிலே பெரிய பணக்காரர்கள் ஈடுபடவில்லை. பெரிய தொழில் அதிபர்கள் ஈடுபடவில்லை. மிடில் கிளாஸ், லோயர் மிடில் கிளாஸ், ஸ்கில்டு வொர்கர்ஸ் இவர்கள் தான் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்தத் தொழிலில் நாடு முழுவதும் எடுத்துக்கொண்டால் ஏறக்குறைய 50,000 பேர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு சட்டத்தைப் போடுவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தின் எண்ணிக்கையை நாம் பெருக்குகிறோம். ஆகவே நம்முடைய அமைச்சர் உடனடியாக இந்த சட்டத்தைத் திரும்பப் பெற்று, ஒழுங்கான முறையில் இந்த போர்டுகள் போடுவதற்கு எளிதான முறையைக் கையாளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது லைசென்ஸ் வாங்கவேண்டுமென்றால் குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. காரணம் ஒருவர் ஹோர்டிங்ஸ் வைப்பதற்காக கலெக்டருக்கு விண்ணப்பம் செய்தால், அதற்கு உடனே ஹைவேஸ், பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்டிலிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வந்தாக வேண்டும். அதே போல் டிராபிக் போலீஸிடமிருந்து 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' வந்தாக வேண்டும். இதற்கு இரண்டு ஆண்டு காலம் ஆகிவிடுகிறது. இப்படி காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதனால் அவர்களுக்கு அதிகச் செலவும் ஏற்படுகிறது.

அவர்களுக்கு இந்த முறையை எளிதாக்கவேண்டும். ஒரே டிபார்ட்மெண்டில் ஒருவர் விண்ணப்பம் செய்தால், மூன்று மாதங்களுக்குள் அவருக்கு உண்டு, இல்லை என்ற முடிவைக் கூறிவிட வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் இந்தத் தொழிலுக்கு நம்முடைய அரசு ஊக்கம் கொடுக்கவேண்டிய ஒரு நல்ல முயற்சியை மேற்கொள்ளலாம். இப்படி இந்தத் தொழிலை நல்ல முறையில் சீரமைத்தால் இந்தத் தமிழ் நாடு முழுவதும் வருவாய்த் துறைக்கு ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் வருமானம் வரும். அதற்காக இந்த அரசு எந்தச் செலவையும் மேற்கொள்ளத் தேவையில்லை.

அதே போல் மாநகராட்சிகள், நகராட்சிகள் இந்தத் துறையை ஊக்குவித்தால் அவர்களுக்கு மேலும் ஒரு கோடி வருமானம் வரும். ஆகவே, இரண்டு கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய இந்த நல்ல தொழிலை அரசு ஆய்ந்து உடனடியாக ஒரு முடிவைக் காணவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் கடந்த இரண்டு ஆண்டு காலமாக கூறி வருகிறேன். அதாவது கிண்டி குதிரைப் பந்தயத்தைப் பற்றி நான் இரண்டு ஆண்டு காலமாக இந்த மன்றத்தில் கூறிவருகிறேன். இந்தக் கிண்டி குதிரைப் பந்தயத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு வருகிறேன்.

ஏன் நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதற்கு நான் ஒரு சில காரணங்களை மட்டும் எடுத்துக்கூறுகிறேன். நேரம் இல்லாத காரணத்தினால், இந்தக் குதிரை பந்தயத்தை நடத்துபவர்கள் ஏதாவது அதற்கு முதலீடு செய்திருக்கிறார்களா என்றால் ஒரு பைசா கூட யாரும் முதலீடு செய்யவில்லை. ஆனால், அதே நேரத்தில் அவர்கள் அனுபவிப்பதோ கொள்ளையோ கொள்ளை, இதை அங்கே இப்பொழுது சென்றிருக்கிற நம்முடைய உறுப்பினர் நரசிம்மன் அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர்களுக்கும் அதில் பங்கு இருக்கிறது. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆக, இப்படி குறிப்பிட்ட குடும்பங்கள் கொள்ளையடிப்பதற்கு இந்த அரசு வழி வகுக்கக்கூடாது, அதைத் தடை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிண்டி ரேஸ் கிளப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு நான்கு கோடி ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் நம்முடைய அரசுக்கு வருவது என்னவென்றால், கொடுத்திருக்கிற பட்டியல் கூறுகிறது.

1969–70-ல்—148 லட்சம் ரூபாய்.

1970–71-ல்—182 லட்சம் ரூபாய்.

1971–72-ல்—205 லட்சம் ரூபாய்.

1972–73-ல்—115 லட்சம் ரூபாய்.

குறைந்ததற்கு காரணம் புக்கிகளை எடுத்துவிட்டது என்று சொல்லப்படும். இந்த ஆண்டு முடிவில் தெரியப்போடுகிறது





எவ்வளவு வருமானம் என்று. 1973–74-ல் ரூ. 125 லட்சம் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. நம்முடைய அரசுக்கு வந்த வருமானம் இவ்வளவு தான். ரேஸ் கிளப் செய்த செலவுகள்

1968–69-ல்—ரூ. 134 லட்சம்.

1969–70-ல்—ரூ. 115½ லட்சம்.

1970–71-ல்—ரூ. 130 லட்சம்.

1971–72-ல்—ரூ. 142 லட்சம்.

1972–73-ல்—ரூ. 109 லட்சம்.

நம்முடைய அரசுக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ அந்த அளவுக்கு ரேஸ் கிளப்பில் இருப்பவர்கள் செலவு செய்திருக்கிறார்கள்.

இந்தச் செலவு எப்படி செய்யப்படுகிறது என்பதற்கான காரணங்களையும் உங்களுக்கு விளக்குகிறேன். சில்லரைக் கடன் என்ற தலைப்பில் அங்கே இருக்கிற மெம்பர்களுக்கு கடன் கொடுக்கிறார்கள் போல் இருக்கிறது. பாலன்ஸ் ஷீட்டைப் பார்த்தால் எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

1970-ல்—ரூ. 38,27,071.39

1971-ல்—ரூ. 45,25,508.00

1972-ல்—ரூ. 50,93,490.00

1973-ல்—ரூ. 28,73,297.00

ஏன் இந்த நிலை?

இந்த அரசிடம் அது இருந்தால் இப்படிப்பட்ட நிலை ஏற்படுமா? குதிரை வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது. பணம் யாருடைய பணம்? யாருக்கு கொடுக்கப்பட்டு குதிரை வாங்குகிறார்கள்? நம்மைப் போல சாதாரணமாக இருப்பவர்களா? பெரிய கொழுத்த பண முதலைகள், பெரிய தொழில் அதிபர்கள் இவர்களுக்குத் தான் வட்டியில்லாத கடனைக் கொடுக்கப்படுகிறது.

நாம் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம். அந்தக் கடனுக்கு 4½ சதவிகிதம் வட்டி வசூலிக்கிறோம். அதுவும் ஒரு

[திரு. ஏ. எம். இராஜா] [1974 ஏப்ரல் 2

ஆண்டிற்குள் கொடுக்காவிட்டால் உடனே ஜப்தி செய்கிறோம். ஆனால் இங்கே நிலை என்ன? (மணி அடிக்கப்பட்டது). கொஞ்சம் நேரம் கொடுங்கள். என்னைத் தவிர இதைப்பற்றி பேசுவதற்கு ஆள் இல்லை. சீக்கிரம் முடித்துவிடுகிறேன். குதிரை வாங்குவதற்காக வட்டியில்லாக் கடனைக் கொடுக்கப் பட்ட தொகை

1968–69-ல்—ரூ. 24 லட்சம்.

1969–70-ல்—ரூ. 33 லட்சம்.

1970–71-ல்—ரூ. 38 லட்சம்.

1971–72-ல்—ரூ. 40 லட்சம்.

1972–73-ல்—ரூ. 23 லட்சம்.

வட்டியில்லாக் கடனை குதிரை வாங்குவதற்குக் கொடுக்கப் பட்ட கடன் தொகை. கொழுத்த முதலாளிகளுக்குக் கொடுக்கப் பட்ட கடன். இது நம்மிடம் இருந்தால் நாம் இவர்களுக்குக் கொடுப்போமா?

ஆகவே தான் சொல்கிறேன். இதை நாட்டுடைமையாக்க வேண்டும்.

அதேபோலத் தான் எந்தவிதமான செக்யூரிட்டியும் இல்லாமல் கடன் கொடுக்கிறார்கள். அங்கு இருக்கிற மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கடன் தொகை

1969-ல்—ரூ. 82,000

1970-ல்—ரூ. 80,000

1971-ல்—ரூ. 1,10,000

1972-ல்—ரூ. 1,91,000

1973-ல்—ரூ. 1,73,000

அதே போல் ஹைதரபாத்தில் இருக்கிற கிளப்புக்குக் கடன் கொடுக்கிறார்கள். உதகமண்டலம் ரேஸ் கிளப் நஷ்டத்தில் ஓடுகிறது. நம்முடைய ரேஸ் கிளப்பில் நஷ்டம், நாம் அதே நேரத்தில் ஹைதராபாத் கிளப்பிற்குக் கடன் கொடுக்கிறோம்.



1974 ஏப்ரல் 2] [திரு. ஏ. எம். இராஜா]

ரூ. 5 லட்சம் 7 லட்சம் என்று கடன் கொடுக்கிறோம். மேலும் குதிரைச் சொந்தக்காரர்களுக்கு மானியம் கொடுக்கிறார்கள்.

1968–69-ல்—ரூ. 10 லட்சம்.

1969–70-ல்—ரூ. 11 லட்சம்

1970–71-ல்—ரூ. 12 லட்சம் .

1971–72-ல்—ரூ. 14 லட்சம்.

யார் யாருக்கு மானியம் கொடுக்கிறார்கள்? யார் பணம் யாருக்குக் கொடுக்கப்படுகிறது? அதே மாதிரி தான் குதிரைகளுக்குத் தீனி வாங்க மானியமாகக் கொடுக்கிறார்கள். மாட்டுக்குப் புண்ணாக்கு வாங்குவதற்கு மானியம் யாரும் கொடுப்பதில்லை. குதிரைக்குத் தீனி வாங்குவதற்கு மானியம்

1969-ல்—ரூ. 164 ஆயிரம்.

1970-ல்—ரூ. 261 ஆயிரம்.

1971-ல்—ரூ. 385 ஆயிரம்.

1972-ல்—ரூ. 238 ஆயிரம்.

இப்படி ஒவ்வொரு வருஷமும் உயர்ந்துகொண்டே போகிறது. குதிரைக்குப் புல் வாங்குவதற்கு மானியம் கொடுக்கிறார்கள். இன்னமும் பார்த்தால் வெற்றி பெற்ற குதிரைகளுக்கு பரிசாகக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால்

1969-ல்—ரூ. 34 லட்சம்.

1970-ல்—ரூ. 39 லட்சம்.

1971-ல்—ரூ. 46 லட்சம்.

1972-ல்—ரூ. 50 லட்சம்.

1973-ல்—ரூ. 52 லட்சம்.

ஆகவே, இந்த நிலைமைகள் மாற்றப்படவேண்டும் என்றால் உடனே குதிரைப் பந்தய சங்கத்தை நாட்டுடைமையாக்க வேண்டும், அதை நம்முடைய அரசே எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ஏ. எம். இராஜா] [1974 ஏப்ரல்

20 லட்சம் ரூபாய் செலவில் ஒரு குளுகுளு வசதியுள்ள கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. மெம்பர்கள் குடிப்பதற்கும் சாப்பிடுவதற்கும் ஒரு கட்டடம் கட்டியிருக்கிறார்கள். வேறு யாரையும் உள்ளே விடமாட்டார்கள். அங்கே எவ்வளவு மெம்பர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஒருவேளை நம்முடைய நரசிம்மன் அவர்களை விடுவார்களோ என்னவோ?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** இந்தக் குதிரை பந்தயத்தை மூடிவிட்டால் என்ன ?

**திரு. ஏ. எம். இராஜா :** மூடிவிடுவதை நான் எதிர்க்கிறேன். காரணம். நாம் இங்கே மூடிவிடுவோமானால் ஆந்திர எல்லையில் ஆரம்பித்துவிடுவார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** அதனால் கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஏதாகிலும் அசௌகரியம் உண்டா?

**திரு. ஏ. எம். இராஜா:** நான் போவதில்லை. இரண்டு வருஷமாக அழைக்கிறார்கள். நான் போகவேண்டுமென்று தான் பார்த்தேன், ஆனால், போக முடியவில்லை.

ரூ. 20 லட்சம் செலவில் ஏர்-கண்டிஷன் ஹால் கட்டியிருக்கிறார்கள். மெம்பர்கள் சாப்பிடுவதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்துவதற்காகக் கட்டியிருக்கிறார்கள். இப்படிப் பணம் வேஸ்டாகிறது.

(முற்பகல் 11.30)

15 லட்சம் ரூபாய் செலவில் ஒரு கால் நடை மருத்துவமனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் அரசாங்கத்தினுடைய வெட்டரினரி மருத்துவ மனையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். அங்கே உள்ள டாக்டர்களைப் பயன் படுத்திக்கொண்டிருந்தார்கள். அதற்காக 25,000 ரூபாய் மட்டும் தான் கொடுத்தார்கள். ஆனால் இப்போது 15 லட்சம் ரூபாயில் தனியாக ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறார்கள். அந்த மருத்துவ மனையில் செலவிடுகின்ற பணம் 2 லட்சம் ரூபாய். இதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்க வேண்டாமா?



1974 ஏப்ரல் 2] [திரு. ஏ. எம். இராஜா]

அதுமட்டுமல்ல. இன்னமும் கணக்கில் கோளாறு இருக்கிறது. தணிக்கை செய்வதற்கு அவர்கள் சொந்தமாக ஆடிட்டர்களை வைத்திருக்கிறார்கள். அவர்களே எல்லாம் கன்ட்ரோல் செய்து கொள்கிறார்கள். அது கூடாது.

அரசாங்க தணிக்கை அதிகாரிகளை வைத்து கணக்குகளை தணிக்கை செய்ய வேண்டும். அரசாங்க ஆடிட்டர்களை வைத்து கன்ட்ரோல் செய்ய வேண்டும். பைனான்ஸ் செக்ரட்டரியை கஸ்டோடியனாகப் போட வேண்டும். நிர்வாகத்திலே 51 சதவிகிதம் அரசுக்குப் பங்கு இருக்கவேண்டும்; 51 சதவிகிதம் நம்முடைய உறுப்பினர்கள் இருக்க வேண்டும். பம்பாயில் 6 பேர் இருக்கிறார்கள். பங்களூரில் 8 பேர் இருக்கிறார்கள். லைசென்ஸ் ஒவ்வொரு ஆண்டும் ரினியூவல் பண்ண வேண்டுமென்று விதிகளை வைக்க வேண்டும். 3 ஆண்டுகளுக்கு என்று கொடுக்கக் கூடாது. பிராஸ்பெக்டஸ் அரசின் அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனைகளைச் சொன்னார். இன்னொரு ஆலோசனையை அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். போட்டிருக்கிற பெட்டிங் டாக்ஸை குறைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி தங்களுடைய ஆலோசனையைச் சொன்னால் நல்லதாக இருக்கும்.

**திரு. ஏ. எம். இராஜா:** இந்த பெட்டிங் டாக்ஸ் பற்றியும் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அதற்குள் மணியடித்து விட்டார்கள். அதனால் சொல்லவில்லை. இப்போது சொல்லிவிடுகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த டாக்ஸை குறைக்கக்கூடாது. இந்திய உப கண்டத்திலே இருக்கிற எந்த ரேஸ் கிளப்பிலும் 22½ சதவிகிதம் கமிஷன் கொடுக்கமாட்டார்கள். ஆகவே, அவர்களுடைய கமிஷனில் குறைத்துக்கொள்ளச் சொல்லலாம்; டாக்ஸை குறைக்கக்கூடாது. 22½ சதவிகிதம் கமிஷனில் குறைத்துக்கொள்ளலாம். அதை 18 சதவிகிதம் என்று ஆக்கிக்கொள்ளலாம். பம்பாயில் 15 சதவிகிதம்தான் கமிஷன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** உலகத்திலேயே கிண்டி ரேஸ் கோர்ஸில் இருப்பதுமாதிரி வேறு எங்கும் கிடையாது. எங்குமே இந்த 21 சதவிகிதம் வரி கிடையாது. நம்முடைய அரசாங்கம்

வரியைக் குறைத்தால் கிளப் நிர்வாகத்தினர் கமிஷனைக் குறைக்க தயாராக இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I am confining my speech only to the Sales Tax and Betting Tax.

So far as the Sales Tax is concerned, I am very happy that the Government have introduced or changed the Multipoint system to Single point system in the case of 51 items.

But unfortunately, I find, Sir, that two or three items have been included in the Sales Tax which they should not have included. They should have given exemption to these items.

They are fodder—fodder food for animals—oil cake, bread and buns.

I am very sorry to note yesterday that bread and buns have been included in the sales tax. Breads and buns are manufactured by ordinary people in cottages as cottage industry and sold to ordinary men. Breads and buns are ordinary man's food. I am sure the Government would realise these difficulties and give exemption to oil cakes, fooder food, breads and buns.

I also find, Sir, in the matter of curd, if they are preserved and sold in tins, it will attract sales tax. The tinned curd is included under Sales Tax.

Similarly, butter and ghee are also included.

I request that these items should be excluded from the Sales Tax. For exemple, if I go to Kothwal Bazaar and get tinned curd, butter or ghee, I have to pay sales tax at 7 per cent, and if I come to Mambalam and sell it at 1/2 alakku, 1 alakku or two alakkus, I will have to pay another 3½ per cent. I am sure the Government will realise these difficulties and give exemption to curd, ghee and butter irrespective of the fact whether they are packed or unpacked and they should attract only 3½ per cent.



Another point that appeals to me is medicines. The medicines will attract 7 per cent tax. It should be brought under 3½ per cent tax because the medicines are already very costly.

My hon. friend Dr. Hande has also given a cut motion about giving exemption to arishtams manufactured by reputed concerns for medicinal purposes. The arishtams used for genuine medicinal purposes should be given exemption.

There are other arishtams which are used for manufacturing liquors and they may be charged by the Government. But, the arishtams used for medicinal purposes should be given exemption. These are my suggestions on Sales tax.

Another representation has been made about hosieries. In regard to 5 per cent sales tax on hosieries, there is no dispute at all. But under inter-State sales tax of 5 per cent, CST forms have to be filled for getting refund. Many States have no C.S.T. Forms. Without the forms, how can they get their refund of amount?

I can quote an example. Tamil Nadu was the leading exporter of garments once upon a time. Now it is worst affected and all these garments are exported from Bombay and West Bengal and Tamil Nadu has lost its garment business.

Similarly, if the C.S.T. forms are not made available, the entire Hosiery business would be taken away by Bombay and West Bengal. So, I sincerely request the Department and the Hon. Minister to consider this aspect.

Coming to the betting business, I would like to say that I am a member of the Madras Race Club for the last 30 years. I entirely agree with Mr. A. M. Raja that we should nationalise the Race Club.

Only half-a-dozen or one dozen people are there as Stewards and Experts and they are more powerful than the Ministers and the Government. They can control ICS, IAS Officers and High Court Judges.

As a member, I know that they can do so many things in thousands of ways. Government should see and know how many crores are involved in this Race Club. It is not like Gymkhana Club and Madras United Club.

This Madras Race Club is not depending upon the subscription of the members. The Club is depending or prospering on the people who go there to bet on horses.

Racing is not a gambling at all. Racing is a science but unfortunately in our State, some influential people have come into this and made racing a gambling.

To-day, I should not be misunderstood when I say this—if an influential owner owns a horse, he can make that particular horse to win and make other horses to lose. So many things are happening in that way in the Race Club. (The Chairman sounded the gong). One more minute, Sir. If the Madras Race is closed, then they will take their horses to Bangalore and other places.

I can give a list of names of influential owners and also the Officer-bearers who have been elected. I shall come to that later.

Big paper editors and owners are also involved in this. The owners or Editors of papers like Indian Express, Hindu and others are in this club. They are all in big committees but they have not published the irregularities in the Race Course. Why? What is the reason for this?

Recently, after so many years, under the pressure of the Government some new members have been elected. A High Court Judge has been elected as a Member of the Madras Race Club. I do not know what is going to happen there.

A case is pending against me for defamation. That is a personal affair.

I may have to go to the court and I may be punished. The judge is a member of the Race Club. What can I do . . .

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஹைக்கோர்ட் ஜட்ஜை மெம்பராகப் போடுவதனால் டிபமேஷன் சார்ஜ் போடுவது எப்படிப்



பாதகமாகும்? ஹைக்கோர்ட் ஜட்ஜ் அங்கே வரக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா? ஏதாவது ரூல் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: நான் ரூல் இருக்கிறது என்று சொன்னேன்?

THIRU M. A. LATHEEF: Mr. Chairman, Sir, I fully support the stand of my hon. Friend, Thiru K. M. Subramaniam that the Race Club and its activities should be completely banned. But at the same time to say that because the High Court Judge is a Member of the Race Club his judgment may go against him, is, I think, casting aspersion and that would not be a good practice.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, now I would like to point that where the Congress Party are ruling in the States, there is no prohibition but here they are fighting for prohibition.

Similarly where the Congress are ruling in the States, there is racing. In Bangalore there is racing. In Bombay there is racing. In Lucknow there is racing occasionally. In Delhi there is racing. So what will happen is that because of the lower tax in Bangalore, people will go there.

Here it is 21 per cent. In Bangalore it is only 10 per cent. So our money will be diverted to Bangalore. Instead of four months' racing in Bangalore, they are thinking of introducing Winter Meet and people will also go there during that time.

If at all racing is to continue, it should be nationalised. If it cannot be nationalised, then I suggest that 51 per cent of the Members of the Race Club should be from the Government side.

I think there is also a case for reduction of the tax from 21 per cent to at least 2½ per cent in order to prevent our money from going to Bangalore.

Then, the Government should see that the accounts of the Race Club are audited by persons appointed by the Government because I find that the Secretary of the Race Club is getting good pay,

equivalent to the pay of the Chief Secretary of the Tamil Nadu Government. He has two air-conditioned rooms, two cars, etc. Have you ever heard of such a thing? This is happening there. (Interruption from Thiru P. Seenivasan.)

The Secretary of the Race Club is a Punjabi and I think his name is Thiru Shobi. The name of the former Secretary of the Race Club is Thiru Dogra. I always find that the South Indians are unfit to be the Secretary. So, the Secretary of the Race Club are enjoying so many facilities.

These should be stopped and the Government should take keener interest in the matter as several crores of rupees are involved. In this connection, I also wish to point out that the Secretary is controlling not only the Race Club but also the officers in the Secretariat and other officers.

(Mr. Chairman sounded the gong).

Sir, I will finish now. Now I will pass on the list of the Members of the Race Club who had been elected yesterday to the Hon. Minister.

Once again I stress that the Race Club should be nationalised.

**திரு. சி. வே. வேலப்பன்:** தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியங்களின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகம், நிலத்துறை, முத்திரைத்தாள், பொது விற்பனை வரி, ஏனைய வரிகள் என்கிற இப்படிப்பட்ட தலைப்பில் எனக்கு முன்பு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் நிர்வாகம் ஊழல் மயமாக இருக்கிறது என்பதையும், நிர்வாகம் சீர்திருத்தப்பட வேண்டும் என்பதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே நிலம் வாங்கப்படுகிறது, விற்கப்படுகிறது என்கிறபோது அரசாங்கம் ஒவ்வொரு கிராமத்திற்கும் இன்ன விலை என்று



நிர்ணயித்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு கிராமத்தில் ஏக்கர் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிற நிலையில் ரூ. 20 ஆயிரம் அந்த கிராமத்திலுள்ள விலை, அதற்கு ஸ்டாம்ப் வாங்கவேண்டும் என்கிறார்கள். நான் அரசு நிர்ணயித்திருக்கிற விலையில் என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன். அரசு தானே அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயாரா என்பதே என்னுடைய கேள்வியாகும்.

இன்றைக்கு ஏக்கரா 10 ஆயிரம் என்றால் அதற்கான ஸ்டாம்பு கட்டணத்தையும் வாங்குகிற விவசாயியே கட்ட வேண்டியிருக்கிறது. அவனை 20 ஆயிரத்திற்கு ஸ்டாம்பு வாங்கு என்கிறபோது அவன் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாகிறான்? இப்படிப்பட்ட நிலைமைகள் தான் நிர்வாகத்தில் சிக்கலை ஏற்படுத்துகின்றன.

இன்னும் அங்குள்ள நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால் அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்பட முடியாத நிலைமையில் ஆளுங்கட்சிக்காரர்கள் குறுக்கிடு இருக்கிறது. இப்படிப் பார்க்கிற நோக்கில் என்னுடைய தொகுதியில் கூட—அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—விவசாயிகள் பர்மிட் இல்லாமல் தண்ணீர் எடுக்கிறார்கள் என்பதற்கு 20 மடங்கு தண்டத் தீர்வை போடுகிறார்கள். ஆனால் குதிரை வாங்க இங்கே மானியத் தொகை வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்குச் சலுகை செய்வதை விட்டுவிட்டு இப்படிக் காரியங்கள் நடக்கின்றன.

ஏக்கருக்கு 17 ரூபாய் செஸ் ஆகக் கொடுங்கள், உங்களுக்கு ஏராளமான பணத்தை அரசாங்கத்திடம் இருந்து வாங்கி கால்வாய்களை புதுப்பித்துத் தருகிறோம். தண்ணீருக்கும் பர்மிட் கொடுக்கிறோம், தண்டத் தீர்வை கட்டவேண்டாம் என்றார்கள்.

ஆனால் இன்றையதினம் பணம் வாங்கப்படுகிறதே தவிர, அரசாங்கத்தில் இருந்து எதுவும் செய்துகொடுக்கப்படுவதாக இல்லை.

நிலவரியைக் குறைத்துவிட்டோம் என்று சொல்கிறார்களே தவிர எங்கே முன்பு கட்டிய பணம் குறைந்தது? பெயர்—தலைப்பு தான் மாறியிருக்கிறது. முன்னே 5 ரூபாய் கட்டிய விவசாயி இன்றைக்கு 6 ரூபாய் என்ற அளவில் கட்டும்படியான நிலைமை தான் இருக்கிறது.

[திரு. சி. வே. வேலப்பன்] [1974 ஏப்ரல் 2

விவசாயிகள் எந்தக் காரியத்திற்குப் போவதாக இருந்தாலும் ஆளுங்கட்சிக்காரர்களை அழைத்துப் போக வேண்டிய நிலைதான் இருக்கிறது. இல்லாவிட்டால் காரியம் நடைபெறவில்லை—லஞ்சலாவண்யம்—இன்றைக்கு செக் போஸ்டுகள்—சோதனைச் சாவடிகள் வைத்திருக்கிறார்கள்.

ஒரு லாரி போகிறது என்றால் பத்து ரூபாய் மாமூல் கொடுக்கப் பட்டுவிட்டது என்று அர்த்தம்—அதைப் பிடித்துக் கொடுக்கக் கூடாதா என்பார்கள். அது மாமூலாகவே ஆகிவிட்டது.

எங்களுடைய பகுதிகளில் ரோடுகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும் அதைச் சரிபடுத்துவது இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வேண்டும் என்பது ஆண்டாண்டாக இருக்கிற நிலைமை. இப்படிப்பட்ட நிலையில் கூட சேலத்திலே ஒருவர் வடிவேல் என்பவர் பெட்டிக்கடை வைத்திருந்தார். அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அனுதாபி என்ற ஒரே காரணத்திற்காக அவரது கடையைப் பிரித்து கடையிலிருந்து பொருளையெல்லாம் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவர் ஸ்டே ஆர்டர் கூட வாங்கியிருக்கிறார். அப்படியிருந்துங்கூட அவ்வாறு செய்திருக்கிறார்கள்.

அரசுக்கு வருவாய் என்று சொன்னால் எதன் மூலம் வருவாய் பெறுவது என்று இல்லாமல் பாலுக்குக்கூட டாக்ஸ் போடுகிற நிலைமை இருக்கிறது.

இப்போது பனியன் மீது வரி 2 சதவிகிதம் என்றிருந்ததை 5 சதவிகிதம் என்று போட்டு அதிலே சென்ட்ரல் டாக்ஸ் 3 சதவிகிதம் வந்துவிடுகிறது. அப்படி வருகிற நேரத்தில் அவர்கள் தொழில் நடத்தமுடியாத நிலைமை இருக்கிறது.

அடுத்து, 'சி' ஃபாரம் வாங்க வேண்டும். இப்போது கல்கத்தாவிலே எல்லாம் 'சி' ஃபாரம் வாங்க வேண்டியதில்லை. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் 3 சதவிகிதம் என்பதை 2.90 சதவிகிதம் என்று கூட வைத்துக்கொள்ளலாம். 3 சதவிகிதம் என்று வந்தால்தான் 'சி' ஃபாரம் வாங்க வேண்டும். அது நம் மாநிலத்தைப் பாதிக்கும் என்றுதான் சொல்லுகிறேன். நம் வருவாய், அரசாங்கப் பணம் அதிகமாக்க வேண்டும் என்று நாம் நினைக்கிற நேரத்தில் எந்தத் துறையாக இருந்தாலும் அது செம்மையாக நடைபெற வேண்டும்.



1974 ஏப்ரல் 2] [திரு. சி. வே. வேலப்பன்]

நாமக்கல்லில்கூட எண்ணெய்ப் புண்ணாக்கு சம்பந்தமாக ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அதிலே இருக்கிற ஊழல்கள் ஆடிட்டர்கள் கூட எழுதிவிட்டார்கள். அதற்கு மத்திய சர்க்கார்கூட நிதி உதவி செய்கிறார்கள் என்று அறிகிறேன். லட்சக்கணக்கான தொகை அங்கே கையாடல் செய்யப்படுகிறதாக அறிகிறேன். ஆகவே நாமக்கல்லில் இருக்கிற அந்தக் கூட்டுறவு சங்கம் செம்மையாக நடக்க வேண்டும். நான் இதற்கு பொறுப்பேற்கக்கூடத் தயாராக இருக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கூட்டுறவுத் துறையிலே இருப்பதைப்பற்றிச் சொன்னால் அந்த அமைச்சர் நடவடிக்கை எடுப்பார். சேல்ஸ்-டேக்ஸ் வசூல் பண்ணுவதற்கு வழி சொன்னால் நான் நிச்சயமாக வழிவகை செய்வேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். காரியங்கள் நடக்க வேண்டுமென்றால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது. அப்படி ஆளுங்கட்சிக்காரர்களை அழைத்துச் செல்லாவிட்டால் லஞ்சம் தரவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே லஞ்சம் கொடுக்காமல் இருப்பதற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் உதவியாக இருக்கிறார்கள் என்றால் அது நல்லதுதானே.

**திரு. சி. வே. வேலப்பன்:** நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னதாக ரெக்கார்டில் இருந்தால் அதை ஒத்துக் கொள்கிறேன்.

அதிலே நம்முடைய அரசும் பங்குத் தொகை போடப் பட்டிருக்கிறது. பொதுமக்கள் பணம் இருக்கிறது. அது துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தண்டத் தீர்வை விஷயத்தைப் பற்றி நான் சொன்னேன். அது அமைச்சரவர்களுக்கும் தெரியும். தண்ணீர் எடுப்பதற்கு 20 மடங்கு தண்டத் தீர்வை போடுகிறார்கள். அப்படி வசூல் செய்கிற பணத்தை யாருக்கு செலவு செய்கிறார்கள், அதை ஆயக்கட்டுத்தாரர்களுக்குச் செய்தால் அதை ஒத்துக் கொள்ளலாம்;

ஆனால் அதைச் செய்யவில்லை. அமைச்சரவர்கள் முன்பு இந்தப் பிரச்சினையில் நன்கு ஆராய்ந்தார்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இப்பொழுதுள்ள நிலைமையெல்லாம் மாற்ற அமைச்சரவர்கள் இதிலே தனி கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். கே. பழனிசாமி : தலைவர்களே, பொதுவாக இன்று எல்லா டிபார்ட்மெண்டிலும் நல்ல நிர்வாக நிலைமை இல்லாமல் இருக்கிறது. இது ரெவின்யூ டிபார்ட்மெண்டில் மட்டுமல்ல, எல்லா டிபார்ட்மெண்டிலும் இருக்கிறது. வேலை செய்பவர்கள் நேர்மை, ஆர்வமோ இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே முற்றிலும் இந்த டிபார்ட்மெண்டை சீரமைக்கக்கூடிய வகையில் கொண்டுவரவேண்டும். எந்த வகையில் செலவு செய்தாலும் அது நாட்டு மக்களுக்கு உதவக்கூடிய வகையில் இருக்க வேண்டுமென்று சொன்னால் இதை முதலில் ரீ-ஆர்கனைஸ் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, இன்று ஒரு கொள்கை இருக்கிறது. அதை ஜனநாயகத்திற்காக வைத்திருக்கிறோம். ஜனநாயகத்தில் ஜில்லா, மாவட்ட மட்டத்திலே இருக்கிற நிர்வாகம் சரியாக இருந்தால் தான் அங்கே வரக்கூடிய குறைகள் சர்க்காருக்குச் சரியான கொள்கை இருக்கிறது என்று பார்ப்பது பஞ்சாயத்து யூனியன் மட்டத்தில் தான். அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஜனங்கள் அவர்களுடைய அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக அங்கே வருகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தீர்வு காணமுடியாத நிலைமை இருக்கிறது.

ஜில்லா கலெக்டர் என்பது ஈஸ்ட் இந்தியக் கம்பெனியால் ஆரம்பிக்கப்பட்டதாகும். அதே முறை தொடர்ந்து இன்னும் அதே மாதிரிதான் இருக்கிறது.

ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னால் ஏற்பட்டிருக்கிற மாற்றம் கல்வி முறையை எடுத்துக்கொண்டாலும் சரி அபிவிருத்தி முறையை எடுத்துக் கொண்டாலும் சரி அவைகளில் தலையீடு இருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். ஆகவே கலெக்டர் முறையிலே மாற்றம் வேண்டும்.





ரெவின்யூ தனியாகவும் அபிவிருத்தி தனியாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையிலே 5, 6 வருஷங்களாக பேசிக்கொண்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்று ஒரு கலெக்டர் எதையெடுத்தாலும் மாநில சர்க்காரிடம் கேட்டுத்தான் செய்ய வேண்டும். முன்பெல்லாம் நிலைமை அப்படியில்லை. ஈஸ்ட் இந்தியக் கம்பெனியிலும் சரி, வெள்ளைக்காரன் காலத்திலும் சரி இங்கு ஜில்லா கவுன்சில் போடக்கூடிய தீர்மானம் போட்டால் அது உடனுக்குடன் கவனிக்கப்படும். ஆனால் தற்பொழுது ஜில்லா கவுன்சில் போடக்கூடிய தீர்மானம் சர்க்காருக்கு அனுப்பி வருஷக் கணக்காக ஆகியும்கூட கவனிக்கப்படவில்லை. அதிலே கலெக்டருக்கு மதிப்பு இல்லாமல் இருக்கிறது.

அதிலே இருக்கிற முக்கியமான விஷயம் என்னவென்பதை சர்க்கார் கவனிப்பதே கிடையாது.

அதேமாதிரி தாலுகா மட்டத்திலே இன்னும் மோசம். 'ரெட் டேப்பிசம்'.

ரெவின்யூ போர்டு என்று இருந்தாலே அங்கே காப்ஷன் என்ற நிலைமை வந்தாச்சு. கலெக்டர் பேருக்கோ, அல்லது செகரட்டரி பேருக்கோ அனுப்பினால் அது வருஷக் கணக்கிலே கிடக்கும். ரெட் டேப்பிசம்.

இப்போது ஆர்.டி.ஓ. வை எடுத்துக்கொள்வோம். ஆர்.டி.ஓ. என்பது அவசியமா? அங்கே அந்த அலுவலகத்தில் ரெக்கார்டு இருக்கிறதா? எந்த ஒரு விஷயத்தைக் கேட்டாலும் தாசில்தாரைக் கேட்டுத்தான் சொல்ல வேண்டும். அப்படி இருக்கும் போது அந்த அலுவலகம் அவசியம்தானா? தாசில்தாரிடம் இருக்கும் விபரங்களைக் கொடுக்க முடியும். எனவே வீணாக ஆர்.டி.ஓ.வைப் போட்டு, 7, 8 அல்லது 10 கிளார்க்குகளைப் போட வேண்டிய அவசியமில்லை. ஜில்லா கலெக்டர் இருக்கின்ற நேரத்திலே பெரிய தடங்கலாக ரெவின்யூ போர்டு இருப்பதுமாதிரி ஜில்லா கலெக்டருக்கும் தாசில்தாருக்கும் இடையில் ஆர்.டி.ஓ. தடங்கலாக இருக்கிறார், எனவே அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 ஏப்ரல் 2

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக ஜமாபந்தியை எடுத்துக்கொண்டால் வெள்ளைக்காரன் காலத்தில் தர்பார் நடத்தியதைப்போல் எல்லோரையும் உட்கார வைத்து, கணக்குப்பிள்ளை, மணியக்காரர் போன்றவர்களை மணிக்கணக்கில் உட்கார வைத்து, அங்கே பொது மக்கள் பெட்டிஷன் கொடுக்க வேண்டுமென்றால் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனால் எந்தப் பிரச்னையாவது தீர்கிறதா? அதை ஏன் நீக்கி விடக்கூடாது?

வருஷம் பூராவும் செய்யாத காரியத்தை இந்த 10 நாட்களில் செய்துவிடுவார்களா? 'கிரீவன்ஸ் டே' என்று யூனியனிலும் இருக்கிறது, கலெக்டர் ஆபீசிலும் வைத்திருக்கிறார்கள், ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும் வைத்திருக்கிறார்கள். அதனால் பிரச்சினைகள் தீர்கிறதா? ஏன் வீணாக அப்படிச் செலவு செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில் யாருக்கு என்ன வேண்டியிருக்கிறதோ அதற்கு நடவடிக்கை எடுக்கின்ற முறைகளை வகுக்கலாமே தவிர எல்லாயிடத்திலும் 'க்ரீவன்ஸ் டே' என்று ஒவ்வொரு கிராமத்திலும் வைத்து எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியவில்லையென்றால் இதற்கு என்ன அவசியம் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, வரி விஷயமாக எடுத்துக்கொண்டால், ஏற்கனவே நிலவரியை ரத்து செய்தோம். அதனால் 8 கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டம். புதிதாக விவசாய வருமானவரி போட்டதில் எந்த அளவிற்கு வந்தது? ஏன் வரவில்லை? முக்கால் எக்கருக்கு குறைவாக இருப்பவர்கள் நிலவரி கொடுப்பதில் எந்தவிதமான கஷ்டமும் இல்லை. மத்திய சர்க்கார் ராஜ் கமிட்டி என்ற ஒரு கமிட்டியைப் போட்டது.



ஏப்ரல் 2] [திரு. என். கே. பழனிசாமி]

சிபார்சை அமலாக்க வேண்டும், எல்லா மாநிலத்திலும் சரியாகப் பணத்தைத் திருப்ப வேண்டுமென்று சொல்கிறது. இதனால் மொத்த வருமானத்தில் பாதி விவசாய வருமானத்தில் வருகிறது. 10,000 கோடி ரூபாய் வருமானம் என்றால் 1,500 கோடி ரூபாய் விவசாய மொத்த வருமானத்தில் வருகிறது. பெரிய அளவில் திருப்ப முடியும். சர்க்கார் இதில் தவறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் கூறினார்கள், தண்ட வரியைப் பற்றி, லோயர் பவானி பகுதியில் முன்பு 80 ரூபாய் இருந்தது இப்பொழுது 140 ரூபாய்க்கு போட்டிருக்கிறார்கள். போட வேண்டியது அவசியம்தான். சர்க்கார் கொடுக்கின்ற வெள்ளாமையைச் செய்ய வேண்டுமென்று செய்திருக்கிறார்கள். அதை மீறிச் செய்தால் தண்டத் தீர்வை போட வேண்டியதுதான். ஆனால், லோயர் பவானி பிரதேசத்தில் வேறு எந்தவிதமாகச் செய்தாலும் முடியாது. அந்தமாதிரி இடத்தில் நெல்தான் வைக்க வேண்டும். ஆகவே, அங்கே தண்டவரி போட்டால் ஒரு அளவில் போடுங்கள். தண்ட வரியை ஓரளவிற்குக் குறைக்க வேண்டுமே தவிர அதிகப்படுத்தக்கூடாது.

விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கடன்களைப் பொறுத்த வரையில் பார்த்தால், அவன் உற்பத்தி செய்த சரக்குகளைக் குறைவான விலைக்கு வாங்குவதால்தான் விவசாயிகளுக்கு ஏராளமான கடன்கள் இருக்கின்றன. இந்தக் கடன் பிரச்னையை வெறும் பொருளாதாரப் பிரச்னையாக மட்டும் பார்க்காமல் சோஷலிச ப்ராப்ளமாகப் பார்க்க வேண்டும். அந்தக் கடன்களைக், கட்ட முடியாத கடன்களை ரத்து செய்ய வேண்டும். விலைவாசியேற்றம், பம்பு செட்டு 5,000 ரூபாய் போட்டு வாங்க வேண்டும். கரண்ட் செலவும் அதிகம், விளைச்சலும் குறைச்சல். ஆகவே, கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, இந்தப் பேரவையின் முன்னால் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒரு அரசுக்கு மிகவும் முக்கியமான இலாக்காவாகக் கருதப்படுவது உயிரையும், உடைமையையும் பாதுகாக்கின்ற போலீஸ் இலாக்காவாகும். ஆனால், நாட்டிலே உள்ள போலீஸ் இலாக்காவானாலும் சரி, வேறு எந்த இலாக்காவானாலும் சரி, அவைகளுக்கெல்லாம் படியளக்கின்ற வருவாயைத் தேடித் தருகின்ற இலாக்கா இந்த வருவாய்த் துறை இலாக்காவாகும். ஆனால், இந்த இலாக்காவை கொஞ்சம் ஜாக்கிரதையாக கையாள வேண்டும். கத்தி எப்படி பழத்தையும் நறுக்கும், உயிரையும் கொல்லுமோ அதைப்போல இந்த இலாக்காவை இலகுவாகக் கையாண்டால் வருமானம் வரும், கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்துவிட்டால் சர்க்காரையே கவிழ்த்துவிட்டுப் போய்விடும். அவ்வளவு பயங்கரமான இலாக்கா இந்த இலாக்கா.

நம்முடைய அமைச்சரவர்கள் இதிலே பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து நல்ல பல செய்திகளைக் காட்டியிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடும் சர்க்கார் என்ற அடிப்படையில் இந்த இலாக்காவிலே 1967 ஆம் ஆண்டிலே யிருந்து 1973 ஆம் ஆண்டு முடிய ஏறத்தாழ 6,51,848 ஏக்கர் நிலங்களை சுமார் 3,33,564 நபர்களுக்குத் தந்து அவர்களையும் இந்த நாட்டிலே உரிமைதாரர்களாக, பட்டாதாரர்களாக மாற்றி யிருப்பது இந்த இலாக்கா செய்துள்ள மிகப் பெரிய தலையாய காரியமாகும். நிலம் மட்டும்தான் தந்தார்களா என்றால், இருக்க வீடும் தந்து, 14,736 ஏக்கரை 4,54,286 குடும்பங்களுக்கு மனைப் பட்டாவாக அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே இந்த நாட்டிலே ஒரு கூட்டம் இருந்தது, இருந்துகொண்டிருக்கிறது. ஏழைகளுக்குப் பட்டா வாங்கித் தருகிறோம் என்று சொல்லி அவர்களிடத்திலே உழுபவனுக்கு நிலம் சொந்தம், உண்டியல் குலுக்குபவனுக்கு உண்டியல் சொந்தம் என்ற சித்தாந்த இயக்கத்தோடு நாட்டிலேயிருந்த அந்த இயக்கத்தை உயிரற்ற சடலமாக மாற்றியது இந்த இலாக்கா என்றால் அது மிகையாகாது. அதற்காக நான் இந்த இலாக்காவைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் இந்த இலாக்கா மேலும் செம்மையாக நடக்க, மேலும் நன்மைகளை இந்த இலாக்கா புரிய எனக்குத் தெரிந்த சில யோசனைகளை இந்த மாமன்றத்தின் முன்னால் வைப்பதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.





இந்த இலாக்காவிலே எத்தனை நிலச் சீர்திருத்தங்கள், குடியிருப்பு மனை மசோதா, குத்தகை உரிமை பாதுகாப்பு, எஸ்டேட் ஒழிப்பு என்று பல்வேறு திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கான நன்மைகளைச் செய்திருந்தாலும்கூட, இன்னும் இந்த இலாக்காவிலே களையப்பட வேண்டிய காரியங்கள் நிறைந்திருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

காரணம் என்னவென்றால், சிகப்பு நாடா முறை என்று சொல்லப்படும் முறை முழுக்க தன்னகத்தே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இலாக்கா இந்த ரெவின்யூ இலாக்காவாகும். அதற்குக் காரணம் என்னவென்றால், யாராவது ஒரு விவசாயி ஒரு பெட்டிஷன் போட்டானேயானால் அந்த பெட்டிஷன் வந்து சேர்வதற்குள் அவனுடைய மகனே மேஜராகிவிடக்கூடிய அளவில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதை நம்மால் மறுக்க முடியாது.

சாதாரண கிராம அதிகாரிகளைக் குறித்து ஏற்படுகின்ற அந்தத் தகராறுகள் குறித்துக்கூட அது ஆர்.டி.ஓ.-விற்குப் போய், டி.ஆர்.ஓ.-விற்குப் போய் கடைசியிலே அரசாங்கத்திற்கு வருவதற்கு ஆகின்ற காலதாமதம் கொஞ்சநஞ்சமல்ல. நல்ல வேளையாக அது போர்டுக்குப் போகின்ற நிலைமைகளை எடுத்து விட்டார்கள். அங்கேயெல்லாம் தப்பித்தவறி வந்துவிட்டால் கிடுக்கிப் போட்டுப் பிடிக்கும் அளவிற்கு ரெவின்யூ போர்டில் நிலைமைகள் இருக்கின்றன. 'ரெட் டேப்பிஸத்தை' எடுக்கின்ற வகையில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும். இந்த 'ரெட் டேப்பிஸம்' இருப்பதால்தான் போகின்ற பொது மக்கள் தங்களுடைய காரியம் வேகமாக நடைபெற வேண்டுமென்று சொல்லி அதிகாரிகளுக்கு கையூட்டு கொடுக்கிறார்கள். ஆக, சில அதிகாரிகள் செய்கின்ற தவறு இந்தச் சர்க்காரின் தலைமீது விழக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அந்த நிலைமைகளைக் களைய வேண்டுமென்றால் நாம் இந்த 'ரெட் டேப்பிஸத்தை' ஒழிக்க வேண்டும்.

நம்முடைய அமைச்சரவர்களுக்கு நான் எவ்வளவோ யோசனைகளை வைத்திருந்தாலும்கூட அவைகளையெல்லாம் இந்த இடத்திலே சொல்ல முடியாது. ஏனென்றால், நான் 5 மணித் துளிகளிலே பேச்சை முடித்தாக வேண்டும் என்று இருப்பதால் அவைகளையெல்லாம் சொல்ல முடியாது.

[திரு. துரை முருகன்] [1974 ஏப்ரல் 2]

இருந்தாலும் ஒன்றைச் சொல்கிறேன், நம்முடைய அமைச்சரவர்கள் வழக்கமாகச் செய்கின்ற ஒன்றைச் செய்ய வேண்டும். அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் மாவட்டம்தோறும் சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசி ஒருநாள் முழுவதும் கருத்துக்களைக் கேட்டார்கள். அங்கே இப்படி 'பெல்' அடிக்கும் வேலை இல்லை. ஆகவே, எங்களுக்கு எவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றனவோ அவ்வளவையும் சொன்னோம்.

அதன் விளைவாகத்தான், இன்றைக்கு என்னைப் பொறுத்த வரையில், எங்கள் தொகுதியில் பொதுப்பணித் துறையில் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் நிறைவேறியிருக்கின்றன. அப்படி எல்லா மாவட்டங்களுக்குமே நடைபெற்றிருக்கிறது என்று கருதுகிறேன். எனவே, நான் இந்த நேரத்தில் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தச் சட்ட மன்றத் தொடர் கூட்டம் நடந்து முடிந்ததற்குப் பிறகு, மாவட்டந் தோறும் அத்தகைய ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தால் இருக்கின்ற பல்வேறு குறைகளை நான் சுட்டிக்காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு நிர்வாகம் பெரியதாக இருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்தை உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தாமலிலே ஆரம்பித்து தர்மபுரியில் முடிகிறது, ஆந்திரா எல்லையில் ஆரம்பித்து தென்னார்க்காடு, திருச்சி மாவட்ட எல்லை வரையில் பரந்து கிடக்கும் மாவட்டம், அதை நிர்வகிப்பது சற்றுக் கடினம்தான்.

ஆகையால், வட ஆற்காடு மாவட்டம் மட்டும் அல்லாமல் பல்வேறு பெரிய பெரிய மாவட்டங்களையும் இரண்டாக்க வேண்டும். அப்படி ஆக்குவது அரசியல் லாபம் காரணமாக மட்டுமல்ல; சென்ட்ரல் கவர்ன்மென்ட் எய்டுகள் எல்லாம் மாவட்டங்களின் அடிப்படையில் தரப்படுகிறது. பிளானிங் கமிஷன் தருகிற ஒதுக்கீடும் மாவட்டங்களின் அடிப்படையில் தரப்படுகிறது.

எனக்குத் தெரிந்த வரையில் 1973 ஆம் ஆண்டிலே கூட சிறு மாநிலமான அரியானாவிலே இரண்டு ஜில்லாக்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள்.



1974 ஏப்ரல் 2] [திரு. துரை முருகன்]

வடபுலத்தில் இருக்கும் மாநிலங்களில் ஆண்டு ஒன்றுக்கு குழந்தை ஒன்று பிறப்பது போல் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மூன்று ஜில்லாக்கள் பிறக்கின்றன. இதற்கு என்ன காரணம்? மாவட்டங்களின் அதிக எண்ணிக்கையைக் காட்டி மத்திய சர்க்கார் மானியத்தைப் பெற முடியும்; பிளானிங் கமிஷன் பணம் ஒதுக்கீடு செய்ய முடியும். ஆகவே, நான் நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்—பரந்திருக்கும் ஜில்லாக்களைச் சிறிதாக்க வேண்டும்.

டி.டி.சி. மீட்டிங் நடக்கிறது. கலெக்டர் தலைமை தாங்குகிறார். எம்.எல்.ஏ.-க்களானாலும், எம்.பி.-க்களானாலும் கலெக்டரிடம் எழுந்து கேட்க வேண்டும். சில நேரங்களில் நல்ல கலெக்டராக இருக்கலாம். அப்படி இல்லாத நிலையும் இருக்கிறது. இந்த அவையில் இருக்கும் ஒரு அங்கத்தினரைப் பார்த்து ஒரு கலெக்டர்—

You sit down. You need not come here. You can get out என்று சொன்னார். அதை நான் இந்தக் காதாலேயே கேட்டிருக்கிறேன்.

பாராளுமன்ற உறுப்பினரைப் பார்த்துச் சொன்னதைக் கேட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களில் நான்-அபிஷியல் தலைமை தாங்குகிறார். கமிஷனர் அசிஸ்ட் பண்ணுகிறார். ஆந்திர மாநிலத்திலும், ராஜஸ்தான் மாநிலத்திலும் நான்-அபிஷியல் டி.டி.சி. மீட்டிங்குக்குத் தலைமை தாங்குகிறார். துரதிருஷ்டவசமாக இங்கு கலெக்டர் தலைமை தாங்கும் காரணத்தால் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பார்த்து இந்த முறையில் 'கெட் அவுட்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அகம்பாவம் வளர்ந்திருக்கிறது என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

டி.டி.சி. பவர்ஃபுல் பாடியா என்றால் அதுகூட இல்லை. மாதத்திற்கு ஒரு முறை, ஏகாதசி வருவது போல், மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறோம். சில நேரங்களில் மூன்று, நான்கு மாதத்திற்கு ஒரு முறை ஆடிக் கிருத்திகை போன்ற பெரிய கிருத்திகைக்குப் போவதுபோல் நடக்கிறது. அதிலே நான்-அபிஷியலைப் போட வழி செய்ய வேண்டும்.

**திரு. துரை முருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய திரு. துரை முருகன் அவர்கள் இதை ஒரு பயங்கரமான இலாகா என்று சொன்னார்கள். இந்தப் பயங்கரமான இலாகாவில் நம்முடைய அமைச்சர் அவர்கள் வேகமாகக் காரியங்களைச் செய்து பாராட்டைப் பெறுகின்ற அளவுக்குப் பணியாற்றி வருகிறார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் இருக்கிற வியாபாரப் பெருமக்கள், சிறு வியாபாரிகள் இந்த அரசைப் பாராட்டக் கூடிய பல நல்ல திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது. வியாபாரிகளுடைய நெடுநாளைய கோரிக்கையான ஒரு முனை விற்பனை வரியை ஏற்றுக் கொண்டு 59 பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரியை அறிவித்திருப்பதால் அதிகாரிகளின் இரும்புக் கரங்களிலிருந்து வியாபாரிகள் தப்பித்திருக்கிறார்கள். அதற்காக வியாபாரிகள் சார்பில் உங்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் 25,000 ரூபாயாக இருந்த இலக்கை 50,000 ஆக்கியிருக்கிறார்கள். இதனால் 40,000 சிறு வியாபாரிகள் நன்மை அடைந்திருக்கிறார்கள். இப்போது ஏறியிருக்கும் விலைவாசியை நோக்கும்போது இந்த 50.000 ரூபாய் என்பதுகூடப் போதாது என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு லட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்யக்கூடியவர்களைச் சிறு வியாபாரிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இதுபற்றி அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வியாபாரப் பெருமக்களுக்கு இருக்கும் சிரமங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து சிலபல நல்ல திட்டங்களைச் சொன்னார்கள். பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மென்ட் என்பதைத் தவிர்க்க வேண்டும். அந்த ஆயுதத்தை வைத்துக் கொண்டு இந்த அதிகாரிகள் சிறு வியாபாரிகளை மிகவும் சிரமப்படுத்துகிறார்கள். 20,000-க்குக் கணக்குக் காட்டினால் கூட 60,000-க்கு வந்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்க முயற்சி எடுத்திருக்கிறோம் என்று சொன்னால் வரவேற்கிறோம்.



முயற்சி நல்ல முயற்சியாக இருக்க வேண்டும். அவர்கள் எடுத்திருக்கும் முயற்சி வெற்றியடைய வேண்டும். அதிகாரிகள் கருணை உள்ளத்தோடு அணுக வேண்டும்.

வியாபாரிகள் அவ்வளவு பேரும் அயோக்கியர்கள் அல்ல. நல்லவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். திறமையாக ஏமாற்றக் கூடியவர்கள் எப்படியும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு நிலக்கடலை எண்ணெய் சென்று கொண்டிருக்கிறது. உள்நாட்டில் 3½ சதவீதம் வரி விதித்திருக்கிறோம். விலை ஏறிக் கொண்டிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் உள்நாட்டில் அதற்கு ரிபேட் அளிக்க வேண்டுமென்று வியாபாரிகள் கோரியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குதிரைப் பந்தயம்பற்றி இன்று இங்கு வெகுவாகப் பேசப் பட்டது. கொள்ளையோ கொள்ளை என்று கூறப்பட்டது. மக்கள் பணத்தை எல்லாம் அங்கு சில பேர்கள் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்துப்பட இங்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். அந்த அடிப்படையில்தான் நான் பேசுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தேர்தல் அறிக்கை வெளியிட்ட போது குதிரைப் பந்தயத்தை ரத்து செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, குதிரைப் பந்தயத்தை ரத்து செய்து விட வேண்டும். அதனால் வருகிற ரூ. 1,15,00,000 இந்த நாட்டுக்கு பிரதானமல்ல. இந்த நாட்டு மக்கள் பேராசை காரணமாக அழிவைத் தேடிச் செல்வதில் இருந்து அவர்களைக் காப்பாற்ற நாம் நிச்சயம் இந்த குதிரைப் பந்தயத்தை அடியோடு ஒழித்தாக வேண்டும்.

அண்ணா திட்டம் என்ற அடிப்படையில் கூறுகிறேன். மதுவிலக்கு தள்ளிவைக்கப்பட்டதால் இந்த அரசுக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அண்ணா

[திரு. கே. எ. வகாப்] [1974 ஏப்ரல் 2

அவர்களின் கொள்கை அப்படியே கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இன்றையதினம் இந்தப் பேரிழப்பு இந்த நாட்டுக்கு ஏற்பட்டிருக்காது. ஆகவேதான் நாங்கள் சொல்லிக் கொண்டு வருகிறோம், மதுவிலக்கைப் பூர்ணமாக அமல் செய்யுங்கள் என்று. அதேநேரத்தில் நிச்சயமாக இந்தக் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்க வேண்டும். ஏராளமான படிகளை வாங்கிக்கொண்டு சிலர் உல்லாசமாக வாழ்கிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் நேரம் இருந்தவர்கள் சொன்னார்கள்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஸ்டுவர்ட்ஸ் யாருக்கும் அங்கு டி. எ. கிடையாது.

**திரு. கே. எ. வகாப் :** பம்பாய் சென்றால் ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்களே, இது எதில் சேரும் என்று தெரியவில்லை. மக்கள் ஆசை காரணமாக சிலர் அழிந்து அதை வைத்துக்கொண்டு சிலர் அனுபவிக்கும் நிலை மாற்றப்பட வேண்டும். எதற்கெல்லாமோ சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இதற்காக ஒரு லட்சம் ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அந்த நிலை மாற்றப்பட்டாக வேண்டும்.

அடுத்து, பட்டாக்கள்பற்றிப் பேசப்பட்டது. வாய்க்கால்களில் இருக்கிற நில ஆர்ஜிதங்கள் எல்லாம் போக்கப்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வாழ இடம் அளித்துள்ளது இந்த அரசு. அவர்கள் காட்டு கரம்புகளைப் பண்படுத்திப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஏழைகளுக்கு இன்னும் அதிகப்படியான நிலங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு கணக்கு எடுக்க வேண்டும், பயிர் செய்ய தகுதி வாய்ந்த நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்று. அப்படிப் பார்த்து அவற்றை எடுத்து நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும்.

நான் பிரிவினை பற்றிப் பேசுவதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். பல மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று கூறினார்கள். வட ஆற்காடு பொறுத்து ஒரு திட்டம் இருந்தது. (மணியடிக்கப்பட்டது.) வந்தவாசி, செய்யாறு, அரக்கோணம்



1974 ஏப்ரல் 2] [திரு. கே. எ. வகாப்]

இந்த மூன்று தாலுக்காக்களையும் செங்கற்பட்டோடு இணைத்து அதை ஒரு மாவட்டமாக அமைக்கும் ஒரு செயற்குறிப்பு இருந்ததாக நினைவு.

ஆகவே அப்படிப்பட்ட ஒரு செயற்குறிப்பு இருந்தால் அதை அமல்படுத்தி, வட ஆற்காடு, திருவண்ணாமலை என்று இரண்டாகப் பிரித்தால் நிர்வாக சிரமம் இல்லாமல் இருக்கும்.

அதோடு எங்களைப் போன்றவர்கள், பொதுமக்கள் அதிகாரிகளை அணுகி காரியங்களை நடத்த உதவிகரமாக இருக்கும்.

நிலப்பட்டா என்று சொல்லும்போது (மணியடிக்கப்பட்டது.) இரண்டொரு வார்த்தைகள் சொல்லவேண்டும். வந்தவாசியில் குடியேறியவர்கள்—பாய் நெய்கிறவர்கள் பாதிரி கிராமத்தில் பட்டா கேட்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டும்.

500 ஆண்டுகளாக முஸ்லீம்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்த இடங்கள் எல்லாம் இப்போது ஆக்கிரமிப்பு செய்யப்படும் சூழ்நிலையில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் அங்குள்ள முஸ்லீம் மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்னிய நாட்டு மதுவகைகளுக்கு வரி குறைக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டு திரு. நரசிம்மன் அவர்கள் பேச அழைக்கப்பட்டார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** உறுப்பினர்கள் ஏழு நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது.

*** திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் கூற ஆசைப் படுகிறேன். முதலாவதாக வியாபாரிகளுக்கு சில சலுகைகள் கொடுத்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ. 50,000 என்ற விதிவிலக்கை ஒரு லட்சம் ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்லாப் ஸிஸ்டத்தில் ஒரு லட்சம் என்றிருப்பதை இரண்டு இலட்சமாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 59 பொருள்களுக்கு அரசு ஒருமுனை விற்பனை வரி விதித்திருக்கிறது. அதில் சில சங்கடங்கள் உள்ளன.

[திரு. ஏ. சி. நரசிம்மன்] [1974 ஏப்ரல் 2

பேப்பருக்கு 7 சத விகிதம் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். ஆனால் நோட்புக்ஸ்-ஆக செய்து விட்டால் 3½ சதவிகிதம் மீண்டும் டாக்ஸ் வருகிறது. ஆகவே, சலுகை கொடுத்தும் பயன் இல்லாமல் போகிறது. ஆகவே எந்தப் பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதித்திருக்கிறோமோ அதன் துணைப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரியின் சலுகையைத் தரவேண்டும்.

ஏழைகள் அதிகமாகப் பயன்படுத்தும் மிளகாய், தனியா போன்ற பொருள்களையும் ஒரு முனை விற்பனை வரியின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கைப் பற்றி பலர் பேசினார்கள். ஏற்கனவே குடித்துப் பழக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக குடிக்கக் கற்றுக்கொண்டவர்களும் இருக்கிறார்கள். அத்தனை பேர்களும் குடிப்பதை நிறுத்தி விடவேண்டும் என்பது நடக்காத காரியம். நாட்டில் உள்ள அத்தனை பேர்களையும் காந்தியாக்க முடியாது. அப்படி நினைப்பது என்றால் நாம் கற்பனை உலகத்தில் இருக்கிறோமே தவிர வேறு ஒன்றும் அல்ல.

எந்தக் காலத்திலும் யாரும் மதுவிலக்கைப் பூர்ணமாக அமல்படுத்த முடியாது. அப்படி மீண்டும் மதுவிலக்கை அமல் செய்தால் கள்ளச்சாராயம், கலக்கல் இவை பெருகத்தான் செய்யும். ஆகவே பூர்ண மதுவிலக்கை கொண்டு வரலாம் என்று நாம் நினைத்தால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்பவர்களாவோம்.

இந்த அரசு செப்டம்பர் 1-ம் தேதியில் இருந்து சாராயக் கடைகளை மூடிவிடப்போவதாக அறிவித்திருக்கிறது. சென்ற ஆண்டு இந்த சாராயம் மூலம் நாம் எதிர்பார்த்த வருவாய் 18 கோடி. ஆனால் வந்தது 29 கோடி ரூபாய். இந்த ஆண்டு சாராய கடைகளை மூடப்போவதாகச் சொல்கிறோம். ஆனால், இந்த ஆண்டு ஆரக்கினால் எதிர்பார்க்கப்படும் வருவாய் 15 கோடி ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. சாராயக் கடைகளை மூடிவிட்டால் இந்த 15 கோடி ரூபாய் வருவாய் எப்படிவரும்? இந்த பட்ஜெட்டிலே 15 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொ



1974 ஏப்ரல் 2] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக, பலரும் இங்கே ரேஸ் கிளப்பைப்பற்றிப் பேசினார்கள். நான்அவர்களுக்கு விளக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். ரேஸ் கிளப்பில் இருப்பவர்கள் குடித்துக்கொண்டு இருப்பதாக இராஜா அவர்கள் சொன்னார்கள். குடிப்பவர்கள் யாரும் காசு கொடுத்து வாங்கிக் குடிக்கலாமே தவிர ஏதோ ஓசியாக குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கக்கூடாது.

அந்தக் கமிட்டியில் இருப்பவர்களுக்கு மட்டும் வேண்டுமானால் ரேஸ் நடக்கும் அன்றைக்குக் கிடைக்கலாம். ஆனால் அவர்கள் எப்போதும் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டு இருந்தால் அது தவறானதாகும்.

அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோவாப்ரேடிவ் பாங்கில் ஒருவர் டைரெக்டராக இருக்கிறார் என்றால் அவர் சிட்டிங் பீஸ் வாங்குகிறார், ஃபர்ஸ்ட் கிளாஸ் டி.ஏ. வாங்குகிறார். இந்தமாதிரி டி.ஏ. வாங்குவது இங்கே இல்லை. ஊட்டிக்குச் சென்றால் ஏதோ ரூ. 100 கொடுப்பதாகச் சொன்னார்கள். ஊட்டியைப் பொறுத்தவரையில் ரூம் வாடகையே ரூ. 60 ஆகிவிடும். ஊட்டி குளிரைப் பற்றித் தெரியாதவர்களுக்கு வேண்டுமானால் அந்தத்தொகை பெரிதாகத் தெரியலாம். தெரிந்தவர்களுக்கு அந்த 100 ரூபாய் பத்தாது.

நான் மறைமுகமாகச் சொல்லவில்லை. இதிலே மறைத்துப் பேசிப் பயன் இல்லை. உண்மையைச் சொல்கிறேன். ஆகவே, இந்த 100 ரூபாய் பத்தாது. இருந்தாலும்கூட அவர்கள் அதற்கும் ஒரு வரையறை வைத்து இருக்கிறார்கள். ரேஸ் 28. 30 நாள் நடக்கிறது. 20 நாளைக்குத்தான் கொடுப்பது என்று வரையறை செய்து வைத்திருக்கிறார்கள்.

அங்கேயுள்ள கமிட்டி மெம்பர்களுக்கு வேறு எந்த விதமான சலுகையும் கிடையாது. பம்பாய்க்குப் போனால் ரூ. 1,000 தருவதாகச் சொன்னார்கள். பம்பாய்க்குச் சென்றவர்களுக்குத் தானே தெரியும். அது பத்துமா பத்தாதா என்று. இங்கேயிருந்து போகவர பிளேன் சார்ஜ், அங்கே லாட்ஜிங், போர்டிங் எல்லாம் இருக்கிறது. அதற்குப் பிறகு அங்கே செலவு இல்லையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இரண்டு அங்கத்தினர்கள் இரண்டு தகவல்களைத் தந்து இருக்கிறார்கள். எது சரி என்று தெரியவில்லை. இரண்டு பேர் பேசுவதில் எது உண்மை என்பதை தயவு செய்து தலைவர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த சப்ஜெக்டில் திரு. நரசிம்மன் அவர்கள்தான் அதாரிட்டி. எனவே, அதைச் சரி என்று எடுத்துக்கொள்ளலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am there for the last 30 years and I dispute his authority.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் கே. எம். எஸ். அவர்கள் அதாரிட்டி என்று சொன்னால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆட்சேபணையில்லை.

(பல உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்தனர்)

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** இங்கே நடப்பது என்ன ரேஸ் என்று தெரியவில்லையே?

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, இங்கே குதிரை வாங்குவதற்கு வட்டியில்லாமல் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு குதிரை வாங்க ரூ. 40,000 ரூ. 20,000 கொடுக்கிறார்கள். அவர்கள் கொடுப்பது, அவர்கள் மொத்தமாக பாங்கியிலிருந்து வாங்கி அதை உறுப்பினர்களுக்குத் தருகிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா:** நான் சொல்லவில்லை, அவர்களுடைய பாலன்ஸ்ஷீட் சொல்கிறது. என்னிடத்தில் அவர்களுடைய பாலன்ஸ்ஷீட் இருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, ஒரு குதிரை வாங்க ரூ. 40,000 ஒரு ஆளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அந்தக் கடனை வங்கியிலிருந்து வாங்கி பாங்குக்கு என்ன வட்டி கொடுக்கிறார்களோ அந்த முறையில் நோ-லாஸ் நோ-பிராஃபிட் பேசிஸ் என்ற முறையில் அவர்கள் அங்கேயுள்ள உறுப்பினர்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அது தான் முறை. ஒரு குதிரை வாங்க 40,000 ரூபாய் கொடுத்தால் போதாது. 4½ லட்சம் ரூபாய் வரையில் குதிரை விற்றிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது என் பறக்கும் குதிரையா?



**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சென்ற ஆண்டு 4½ லட்சம் ரூபாய்க்கு வாங்கினார்கள். அந்தக் குதிரை ஒரு ரேஸ், இரண்டு ரேசில் ஜெயித்து இருக்கும். இதனால் அவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் என்று பாருங்கள். இவ்வளவு விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், 3 ஆண்டுகளுக்கு மேல் அந்தக் குதிரை ரேசுக்குப் பயன்படாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நமக்குக் கொடுத்து இருக்கும் அறிக்கைகளில் ரேஸ் பற்றி எந்தவிதக் குறிப்பும் இல்லை. ஆனால் எல்லா உறுப்பினர்களும் அதைப்பற்றி தங்களுடைய பேச்சுக்களில் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அது குறித்து குறிப்பு இருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** குதிரை சொந்தக்காரர்களுக்கு மானியம் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் மட்டுமா கொடுக்கிறார்கள். பெங்களூரில் தருகிறார்கள், பம்பாயில் கொடுத்தார்கள், ஹைதராபாத்தில் கொடுத்தார்கள். இப்படி எல்லா இடங்களிலும் கொடுத்திருக்கிறார்கள். அதைத்தான் இங்கேயும் கொடுக்கிறார்கள். அங்கேயெல்லாம் கொடுத்துவிட்டு இங்கேயில்லையென்றால் நடக்காது.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், அங்கே தவறே இல்லையா என்றால் இல்லாமல் இல்லை. அதற்குக் காரணம் நாம் 500 மெம்பர்களாக இருந்ததை 600 மெம்பர்களாக ஆக்கவேண்டுமென்று சொன்னோம். எந்தமுறையில் எடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை.

கே. எம். எஸ். அவர்கள் கூட ஒரு லிஸ்ட் கொடுத்தார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களை அந்த 100 பேர் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். மீண்டும் தேர்தல் நடத்தினாலும் யார் இப்போது டாமினேட் செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களேதான் வருவார்கள்.

இப்போதுள்ள 600 பேர், 1,000, 1,200 பேர் என்று சொல்லுங்கள். அல்லது அப்ளிகேஷன் போடுகிறவர்களுக்கு எல்லாம் மெம்பர்ஷிப் கொடுக்கச் சொல்லுங்கள். அப்போதுதான் அங்கே ஜனநாயக முறையில் தேர்தல் நடக்கும். ஒவ்வொருவரும்

கமிட்டி மெம்பர்களாக ஆகவேண்டுமென்று சொன்னால் 20,000, 30,000 செலவு செய்யவேண்டும். அவ்வளவு செலவு செய்தால் கூட வரமுடியாத நிலை இருக்கிறது.

அதற்குப் போட்டுள்ள வரியை (பெட்டிங் டாக்ஸை) குறைக்க வேண்டும். இன்டர்வெனியூ பெட்டிங்கை அலோவ் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நமக்கு அதிகமான வருமானம் வரும். சென்னையில் நடக்கிறது என்று சொன்னால் ஹைதராபாத்தில் இன்டர்வெனியூ பெட்டிங் நடத்துவார்கள். அதேபோல் கல்கத்தா, பெங்களூர் போன்ற இடங்களில் நடந்தால் சென்னையில் பெட்டிங் வைத்துக்கொள்ள அனுமதி கொடுங்கள். இதனால் அதிகமான வருமானம் வரும். (மணியடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரம் தாருங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** நீங்கள் 12 நிமிடமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** பல பேர் குற்றச்சாட்டு சாட்டியிருக்கிறார்கள் நான் உண்மை நிலையை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ஒரு உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கனவே குடித்துக்கொண்டிருப்பவர்களை நாம் திருத்த முடியாது. இப்போது கடந்த 3 ஆண்டு காலமாக புதிதாகப் பலர் குடிக்க ஆரம்பித்து இருக்கிறார்களே அவர்களைக் காப்பாற்றத்தான் நாம் பூரண மதுவிலக்கு வேண்டுமென்று கேட்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஆதரிப்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** இந்த இன்டர் வெனியூபெட்டிங் டாக்ஸ் 10 சதவீதம் இருக்க வேண்டும். மற்ற ரேஸ்களில் அந்தந்த மாநிலங்களில் நடக்கும்போது அந்தந்த மாநில அரசுகள் கமிஷன் தருகிறார்கள். 5 சதவீதம் கமிஷனை சென்னை ரேஸ் கிளப்பிற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.



எம்.ஆர்.சி. தங்களது கமிஷனைக் குறைத்துக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). அரசாங்கமும் வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. கு. அ. பொம்மன்:** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை வரவேற்று இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது இந்தத் துறையானது மிகவும் முக்கியமான துறை, வருவாயை பெருக்கக்கூடிய துறை, வாருவாய்த்துறை பாதிக்காத அளவுக்கு கவனிக்கவேண்டும். இத்துறையில் எந்தத் தவறு நடந்தாலும் அது முழு அளவுக்கு இந்த நாட்டில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று சொன்னார்கள். அடுத்தபடியாக, மாவட்ட க்ஷேமநலக் குழுவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அங்கத்தினர்களாயிருக்கின்றனர். ஆட்சித் தலைவர் எந்த முறையில் இந்தப் பிரதிநிதிகளை நடத்துகிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த நிலைமை இருக்கும்பொழுது ஆட்சித் தலைவராக இருப்பவர்கள் மக்களுக்கு என்ன சேவை செய்ய முடியும். மக்கள் அவர்களிடம் எப்படி அணுக முடியும், எப்படி மக்களுக்கு நலன் ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அம்மாதிரி காரியங்கள் நடக்காமல் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அமைச்சர் அவர்கள் தாக்கீது அனுப்ப வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது அதிகாரிகளிடையே கூட மாவட்ட அதிகாரிகளிடையேகூட நல்ல தொடர்பு கிடையாது. உதாரணத்திற்குச் சொல்லப் போனால் ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கும் பாரெஸ்டு டிபார்ட்மெண்டுக்கும் இப்பொழுது பொருத்தமாக இல்லை. ஏதாவது இரண்டு பஞ்சாயத்துகளில் ரோடு போடவேண்டுமென்றால் சில பகுதிகள் பாரஸ்டிலுள்ளது, பாரெஸ்டு ஏரியாவில் ரோடுக்கு ரெவின்யூ இலாக்கா நிலம் கேட்டால் அதைக் கொடுப்பதில்லை. வருஷக்கணக்கில் நின்று போய்விடுகிறது. வருஷக்கணக்கில் ரோடு போடாமல் நின்று போய் விடுகிறது. இதனால் மக்களுக்கு உடனடியாக ஏற்படும்

நன்மை பாதிக்கப்படுகிறது. காரியங்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளிடையே தொடர்பு நல்ல முறையில் இருக்கவேண்டும்.

அதைப்போலவே மனு நீதித் திட்டம் என்று போட்டு பல இடங்களில் பல அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, மக்களும் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் மனு நீதித் திட்டத்தில் கொடுக்கப்படும் மனுக்கள் வருஷக்கணக்கில் பரிசீலனை ஆகாமல் இருக்கின்றன. ஆனால் மூன்று மாதங் களுக்குள் பரிசீலனை செய்து பதில் அனுப்புகிறோம் என்று சொல் கிறார்கள். அமைச்சர்கள் வரும்போது கூட்டத்தைக் கூட்டி மாவட்டஆட்சித் தலைவர் தலைமை வகித்து அதில் பொது மக்கள் மனுக்களைக் கொடுக்கிறார்கள். உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் 'இன்னும் 3 மாதங்களுக்குள் உங்களுக்கு பதில் அனுப்பு கிறோம்' என்று சொல்லிவிடுகிறார்.

ஆனால் இம்மாதிரி பல கூட்டங்களில் கொடுக்கப்பட்ட மனுக் களுக்கு இதுவரையில் எந்த விதமான பதிலும் வராமல் இருக் கிறது. ஆலோசனையில் இருக்கிறது அல்லது தள்ளுபடி செய்து விட்டோம் என்று பதில் கொடுக்கப்பட வேண்டும்.

மக்கள் மனுவை கொடுத்திருக்கின்றோம், நமக்கு நன்மை ஏற்படும் என்று நம்பிக்கொண்டு அங்கங்கு கலெக்டர் ஆபீஸுக்கும் தாசில்தார் ஆபீஸுக்கும் நடந்துகொண்டே இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பண விரயமும் பெரிய துன்பமும் ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மனுக்களைக் கொடுத்தால் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அதற்குப் பதில் தந்துவிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தாக்கீது கொடுக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு பிரச்னைகள் மாவட்டங்களில் ஏற்படுகின்றன. நாளுக்கு நாள் பிரச்னைகள் பெருகிக் கொண்டு வருகின்றன. அந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்றால், மாவட்ட அடிப்படையில் பல கட்சித் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவிற்கு ஆட்சித் தலைவர் தலைமை வகித்து, அந்தப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இயற்கை கோளாறினால் விவசாயிகளின் நிலைமை ரொம்ப மோசமாகிறது. மழை இல்லை என்றால், எங்கள் ஊரை எடுத்துக்கொண்டால் மழை பொய்த்துவிடுகிறது, அல்லது மழை அதிகமாகப் பெய்யும், பனி அதிகமாகப் பெய்யும். அதனால் வேளாண்மை பாதிக்கப்பட்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு பல வகைகளில் சர்க்கார் துறையின் மூலமாக கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் கடன்களையெல்லாம் இப்பொழுது அதிகாரிகள் ரொம்பவும் ஜபர்தஸ்து செய்து கொடுக்க நிலைமையில்லாத விவசாயிகளின் அசையும் பொருட்களை அட்டாச்மெண்டு செய்து அவர்களிடத்தில் இருக்கிற கட்டுமுட்டு சாமான்களை எடுத்துக் கொண்டு போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இயற்கைக் கோளாறினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கடன் வசூலை ஓரளவுக்கு தள்ளி வைத்து உதவி செய்யவேண்டும்.

அவர்களுக்கு தண்டத் தீர்வை, அதாவது பெனல்டி இண்டரஸ்டு போடுகிறார்கள். அதுவும் போடக்கூடாது. அந்த வட்டிகளை வஜா செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலங்கள் நிறைய இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனால் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் 1936-ல் "நீலகிரி மாவட்டத்தில் மசினிகுடி பஞ்சாயத்தில் அரிசனங்களும், மலைவாசிகளும் கையடக்கம் செய்யப்பட்ட தரிசு நிலங்களை விநியோகிக்காமலிருப்பதைப் பற்றி விவாதிக்க" என்று கூறியிருக் கிறேன். மசினிக்குடி பஞ்சாயத்தில் மொத்த நிலம் விவசாயத் திற்கு உபயோகப்படுத்தக் கூடிய நிலம் எவ்வளவு இருக்கிறது என்றால் 3098.92 சென்டு, கையடக்கம் செய்யப்பட்டது 312.45 சென்டு, கடந்த 1950-ம் ஆண்டிலிருந்து கையடக்கம் செய்து கொண்டு தண்டத் தீர்வை அந்த விவசாயிகள் ஆண்டுதோறும் தவறாமல் அரசாங்கத்துக்கு கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். கையடக்கம் செய்யப்பட்ட நிலங்களை பட்டா வேண்டும் என்று

[திரு. கு. அ. பொம்மன்] [1974 ஏப்ரல் 2

நன்மை பாதிக்கப்படுகிறது. காரியங்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளிடையே தொடர்பு நல்ல முறையில் இருக்கவேண்டும்.

அதைப்போலவே மனு நீதித் திட்டம் என்று போட்டு பல இடங்களில் பல அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, மக்களும் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்கிருர்கள். ஆனுல் மனு நீதித் திட்டத்தில் கொடுக்கப்படும் மனுக்கள் வருஷக்கணக்கில் பரிசீலனை ஆகாமல் இருக்கின்றன. ஆனுல் மூன்று மாதங்களுக்குள் பரிசீலனை செய்து பதில் அனுப்புகிருேம் என்று சொல்கிருர்கள். அமைச்சர்கள் வரும்போது கூட்டத்தைக் கூட்டி மாவட்டஆட்சித் தலைவர் தலைமை வகித்து அதில் பொது மக்கள் மனுக்களைக் கொடுக்கிருர்கள். உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் 'இன்னும் 3 மாதங்களுக்குள் உங்களுக்கு பதில் அனுப்புகிருேம்' என்று சொல்லிவிடுகிருர்.

ஆனுல் இம்மாதிரி பல கூட்டங்களில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு இதுவரையில் எந்த விதமான பதிலும் வராமல் இருக்கிறது. ஆலோசனையில் இருக்கிறது அல்லது தள்ளுபடி செய்து விட்டோம் என்று பதில் கொடுக்கப்பட வேண்டும்.

மக்கள் மனுவை கொடுத்திருக்கின்ருேம், நமக்கு நன்மை ஏற்படும் என்று நம்பிக்கொண்டு அங்காடி கலெக்டர் ஆபீஸுக்கும் தாசில்தார் ஆபீஸுக்கும் நடந்துகொண்டே இருக்கிருர்கள். அதனுல் அவர்களுக்குப் பண விரயமும் பெரிய துன்பமும் ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மனுக்களைக் கொடுத்தால் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அதற்குப் பதில் தந்துவிட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தாக்கீது கொடுக்க வேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு பிரச்னைகள் மாவட்டங்களில் ஏற்படுகின்றன. நாளுக்கு நாள் பிரச்னைகள் பெருகிக் கொண்டு வருகின்றன. அந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்ருல், மாவட்ட அடிப்படையில் பல கட்சித் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவிற்கு ஆட்சித் தலைவர் தலைமை வகித்து, அந்தப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஏப்ரல் 2] [திரு. கு. அ. பொம்மன்]

அடுத்தபடியாக, இயற்கை கோளாறினுல் விவசாயிகளின் நிலைமை ரொம்ப மோசமாகிறது. மழை இல்லை என்ருல், எங்கள் ஊரை எடுத்துக்கொண்டால் மழை பொய்த்துவிடுகிறது, அல்லது மழை அதிகமாகப் பெய்யும், பனி அதிகமாகப் பெய்யும். அதனுல் வேளாண்மை பாதிக்கப்பட்டு விவசாயிகள் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுக்கு பல வகைகளில் சர்க்கார் துறையின் மூலமாக கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்தக் கடன்களையெல்லாம் இப்பொழுது அதிகாரிகள் ரொம்பவும் ஜபர்தஸ்து செய்து கொடுக்க நிலைமையில்லாத விவசாயிகளின் அசையும் பொருட்களை அட்டாச்மெண்டு செய்து அவர்களிடத்தில் இருக்கிற தட்டுமுட்டு சாமான்களை எடுத்துக் கொண்டு போகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இயற்கைக் கோளாறினுல் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கும்பொழுது அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கடன் வசூலை ஓரளவுக்கு தள்ளி வைத்து உதவி செய்யவேண்டும்.

அவர்களுக்கு தண்டத் தீர்வை, அதாவது பெனல்டி இண்டரஸ்டு போடுகிருர்கள். அதுவும் போடக்கூடாது. அந்த வட்டிகளை வஜா செய்ய வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு இலாயக்கான நிலங்கள் நிறைய இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லப்போனுல் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் 1936-ல் "நீலகிரி மாவட்டத்தில் மசினிகுடி பஞ்சாயத்தில் அரிசனங்களும், மலைவாசிகளும் கையடக்கம் செய்யப்பட்ட தரிசு நிலங்களை விநியோகிக்காமலிருப்பதைப் பற்றி விவாதிக்க" என்று கூறியிருக்கிறேன். மசினிக்குடி பஞ்சாயத்தில் மொத்த நிலம் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய நிலம் எவ்வளவு இருக்கிறது என்ருல் 3098.92 சென்டு, கையடக்கம் செய்யப்பட்டது 312.45 சென்டு. கடந்த 1950-ம் ஆண்டிலிருந்து கையடக்கம் செய்து கொண்டு தண்டத் தீர்வை அந்த விவசாயிகள் ஆண்டுதோறும் தவருமல் அரசாங்கத்துக்கு கொடுத்துக்கொண்டு வருகிருர்கள். கையடக்கம் செய்யப்பட்ட நிலங்களை பட்டா வேண்டும் என்று

மனுக் கொடுத்தால் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து என்ன பதில் வருகிறது என்று சொன்னால், முதுமலை பஞ்சாயத்துக்கு சம்பந்தப்பட்ட நிலம், முதுமலையில் வன விலங்கு சரணாலயம் இருப்பதால் கொடுக்க முடியாது என்று பதில் வருகிறது.

முதுமலை பஞ்சாயத்துக்கும், மசினிக்குடி பஞ்சாயத்துக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. மிருகங்களுக்கு விவசாயிகளினால் எந்தவிதமான துன்பமும் ஏற்படுவதில்லை. ஆகவே, அந்த நிலத்தை அவர்களுக்கு உடனடியாக பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பட்டா செய்யக்கூடிய நிலங்களின் பட்டியலை தயார் செய்துகொண்டு வந்திருக்கிறேன். இந்தப் பட்டியலை நான் பேசி முடிந்தவுடன் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கிறேன்.

மதுவிலக்கைப் பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இருக்கிற நேரம் ¾ மணி நேரம் தான். இன்னும் 6 உறுப்பினர்கள் பேசவேண்டும். மாண்புமிகு அமைச்சர் விடை அளிக்கவேண்டும். எல்லா அங்கத்தினர்களும் 7, 8 நிமிடங்கள் பேசவேண்டுமென்றால் 10, 15 நிமிடங்கள் எடுத்துக் கொண்டுவிட்டார்கள். இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. கு. அ. பொம்மன்:** முதல் அமைச்சர் அவர்கள் பூரண மதுவிலக்கு படிப்படியாகக் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். கள்ளுக்கடையை ஒழித்தார்கள், பிறகு சாராயக் கடையை அடுத்த ஆண்டு ஒழிப்பதாக இந்த அவையில் வாக்குறுதி யளித்திருந்தும் நிறைவேற்றவில்லை. மக்களின் நன்மையைக் கருதி பூரண மதுவிலக்கு கொண்டுவரவேண்டும் என்று மிகவும் தாழ்மை யோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வரட்சி நிவாரணத்தைப்பற்றி சொல்லவிரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்தில் இந்த வருஷம் மழையே கிடையாது. ஆகவே அங்கே குடிக்க தண்ணீர் கிடையாது. மக்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். வரட்சி நிவாரணப் பணிகளை தர்மபுரி மாவட்டத்தில் செய்யவேண்டும் என்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





இன்னும் ஒரேயொரு விஷயம். வாத்துக்களை லாரியில் கொண்டு வரும்பொழுது சாவடியில் ஒரு மணி நேரம் நிறுத்திவிடுகிறார்கள். இதனால் லாரி ஓட்டத்திலிருந்தால் காற்று இருக்கின்றது. நின்று விட்டால் உஷ்ணம் அதிகமாவதால், சில வாத்துக்கள் இறந்து விடுகின்றன. இதனால் உடைமையாளர்களுக்குப் பெரிதும் நஷ்டம் ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்கவேண்டும். வாத்துக்களை சாப்பிடுவதற்குக் கொண்டு செல்லவில்லை. மேய்வதற்குக் கொண்டு போகிறார்கள். அப்படி இந்த வாத்துக்களைக் கொண்டு செல்கின்ற லாரியை நிறுத்தி வைக்கக்கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மான்யங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிவிட விரும்புகிறேன்.

நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு ஏழை நிலமற்றோர்களுக்கு இந்த அரசு நிலங்களை பட்டா செய்துகொடுத்து, பல லட்சக் கணக்கான ஏழை விவசாயிகளை வாழ வைத்திருக்கிறது என்பதை நினைவுபடுத்த கடமைப்பட் டிருக்கிறேன். பல லட்சக்கணக்கான ஏக்கராக்கள் இன்றைய தினம் பல ஏழைகளுக்குத் தரப்பட்டு, அவர்கள் அந்த நிலங்களை பழுது பார்த்து சரிப்படுத்தி, பசுமைப் புரட்சியை இந்த நாட்டில் உண்டுபண்ணுவதற்கு இது ஒரு பெரிய நல்ல வாய்ப்பாக அமைந் திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பாரெஸ்ட் லாண்ட், காட்டு நிலங்கள் பல லட்சக்கணக்கான ஏக்கராக்கள் வெறுமனே பொட்டல் காடாக இருக்கின்றன. அவைகளை எடுத்து மேலும் பல ஏழைகளுக்கு பட்டா வழங்குவார்களேயானால், அதனால் இன்னும் பல ஏழைகளுக்கு வாய்ப்பும், சந்தர்ப்பமும் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் மலை புறம்போக்கு என்று பல நிலங்கள் வெறுமையாக இருக்கின்றன. அவைகளைக்கூட ஏழை எளியோர் களுக்கு பட்டா வழங்குவார்களேயானால், அதைப் பயன்படுத்தி,

ஏழைகள் பசுமைப் புரட்சியை உண்டாக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களில் அரசாங்கப் பொது கட்டடமாக இருப்பது கிராமச் சாவடிகள்தான். கிராமச் சாவடிகள் எந்தக் கிராமத் திலும் சுத்தமாக இருப்பதில்லை. பொது மக்களுக்கு உபயோகப் படுத்துவதற்குப் போதுமான வசதியில்லாத காரணத்தினால் சீர்கெட்டிருப்பதன் காரணமாக, அவைகளை பயன்படத்தக்க வகையில் செப்பனிடுவதற்கு நம்முடைய ஒதுக்கீட்டில் ரூ. 10 லட்சம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அது போதும் என்று நான் கருதவில்லை. அதற்காக அதிகமாக பணம் ஒதுக்கி, அந்தச் சாவடிகளை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த ஆண்டு பொதுவாக செங்கற்பட் மாவட்டத்தில் குறிப்பாக திருத்தணி வட்டத்தில் மழை இல்லாததினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங் எல்லாப் பயிர்களும் பட்டுப்போய் அங்கே இருக்கிற ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய நஷ்டங்களைப் போக்கவேண்டிய நிமித்தம் வரி வஜா செய்யப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அங்கு இருக்கிற ஏழை விவசாயிகளிடம் அவர்கள் பட்ட கடனை வசூலிப்பதில் அவர்களை மிகவும் கட்டாயப் படுத்தி, ஜப்தி, ஏலம் போன்ற மிக கொயர்ஸிவ் ஆக்ஷன் எடுத்துக்கொண்டு இருப்பதால், அவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், விவசாயிகள் மிகவும் துன்பப்படுகிறார்கள். எனவே, அது போன்று கொயர்ஸிவ் ஆக்ஷன் எடுக்காமல், கடன் வசூலை ஒரு ஆண்டு காலத்திற்கு ஒத்தி வைக்கவேண்டும். அப்படி ஒத்தி வைத்தால் திருத்தணி வாழ் மக்கள் மிகவும் கடமை உள்ளவர்களாக இருப்பார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருத்தணி பகுதியில் கடந்த ஆண்டு மழை இல்லை. இந்த ஆண்டிலும் மழை இல்லை. அதனால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதை ஒரு பஞ்சப்பகுதியாக அ



வித்து, பஞ்ச நிவாரணப்பணிகளை மேற்கொண்டால் கஷ்டப்படு கின்ற ஏழைய எளிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதில் நல்ல முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பல இடங்களில் அரசுக்கு சொந்தமான நிலங்கள் இல்லாததால் வீட்டுமனை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. அப்படி நிலம் இல்லாத இடங்களில் மனை களை விலைக்கு வாங்கியாவது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெற்று, மனைகளை வாங்கி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருத்தணி தொகுதியில் திருத்தணி ஒரு வட்ட மாகவும், பள்ளிப்பட்டு ஒரு துணை வட்டமாகவும் இருக்கிறது. பள்ளிப்பட்டு துணை வட்டத்தை ஒரு வட்டமாக மாற்றுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பள்ளிப்பட்டியிலே ஒரு சப்-டிரஷரி அமைத்துத் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கி றார்கள். அதை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மனுநீதித் திட்டத்தை ஆரம்பித்து, நம்முடைய அரசு சிறப் பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்களின் குறைகளை நேரடியாகவே சொல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டு, நிவர்த்தி செய்வதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதன் பயனாக நூற்றுக்கணக்கான மனுக்களை அரசுக்கு அனுப்பி, அரசு நடவடிக்கை எடுத்து, மக்கள் குறைகளை உடனடியாக நீக்கும் ஒரு திட்டமாக மனுநீதித் திட்டம் இருக்கிறது. ஆகவே, இந்த சிறப்பான திட்டம் மேலும் பரப்பப்பட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக் கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

[திரு. சு. துரைசாமி] [1974 ஏப்ரல் 2

நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு சிறிய வியாபாரிகளுக்கு பல நல்ல சலுகைகளைச் செய்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 10,000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளுக்கு விற்பனை வரி விலக்கு கிடையாது. நம்முடைய ஆட்சி வந்த பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் 10,000 என்று இருந்ததை 15,000 ரூபாயாக உயர்த்தினார்கள். அதற்குப் பிறகு 15,000 என்பது 25,000-ஆக உயர்த்தப்பட்டது. இப்போது 25,000 ரூபாயை 50,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் இந்த மானியக் கோரிக்கையில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10,000 ரூபாயை 25,000 ரூபாயாக உயர்த்த வேண்டும்; 25,000 ரூபாயை 50,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் ரூ. 50,000 வரையில் உள்ளவர்களுக்கு விற்பனை வரி விலக்களித்திருக்கிறது. ஆனால் இந்த நடவடிக்கை குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர்கூட பாராட்டவில்லை; நன்றி தெரிவிக்கவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

கடந்த ஆண்டு பேசிய உறுப்பினர்கள் நம்முடைய நாட்டில் பலமுனை விற்பனை வரியை எடுத்துவிட வேண்டும்; ஒருமுனை வரிதான் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் 59 பொருட்களுக்கு ஒருமுனை வரி விதித்திருக்கிறது. ஒருமுனை வரி வேண்டுமென்று பேசிய உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையைப் பாராட்டுவார்கள்; நன்றி தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒருவர்கூட நன்றி தெரிவிக்கவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இது நீண்டநாட்களாக வியாபாரிகள் கோரிக்கையாகவும், பொதுமக்கள் கோரிக்கையாகவும் கூட இருந்தது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்குக் கூட நன்றி தெரிவிக்க மனம் வரவில்லை. எதிர்க்கட்சி என்றால் எதையுமே எதிர்த்துக்கொண்டிருப்பது தான் அவர்கள் பழக்கம் போல் இருக்கிறது. இந்த அரசுக்கு 2 கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று கருதி, 40,000 சாதாரண வியாபாரிகளுக்கு நன்மை செய்திருக்கிறது.



1974 ஏப்ரல் 2] [திரு. சு. துரைசாமி]

அதைப்போல பெரிய வியாபாரிகள்—பத்து லட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிற வியாபாரிகளுக்கு கூடுதல் விற்பனை வரியாக இருந்த 5 சதவிகிதத்தை 10 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வியாபாரம் செய்கிறவர்களுக்கு 10 சதவிகிதம் என்பதை 15 சதவிகிதமாக உயர்த்தினாலும்கூட சாதாரண மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

திருப்பூர் நகரத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அங்கே பனியன் தொழில் சிறந்து விளங்குகிறது. 80 சதவிகிதத்திற்குமேல் அங்கே உற்பத்தியாகின்ற பனியன்கள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. வியாபாரிகளுக்கு 1—4—1963 வரையில் 'சி பாரம்" கொடுக்கப்பட்டிருந்தது. அதனால் வியாபாரிகளுக்கு நெருக்கடி ஏற்படுகிறது என்று சொல்லி, 'சி பாரத்தை' நீக்கிவிட்டார்கள். அதனால் இந்த வியாபாரம் வளர்ந்து, தொழிலும் பெருகியது. அதன்பிறகு மீண்டும் இந்த 'சி பாரத்தை' கொண்டுவந்துவிட்டார்கள்.

புதிய விகிதாச்சாரப்படி 'சி பாரம்' கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இதனால் 80 சதவிகிதம் வியாபாரம் பாதிக்கப்படக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. வியாபாரம் பாதித்தால் தொழில் பாதிக்கும்; அதனால் தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும். மேற்கு வங்காளம், கல்கத்தாவிலிருக்கும் பனியன் தொழிலோடு போட்டிபோடுகின்ற தொழில் திருப்பூரிலுள்ள பனியன் தொழில் ஒன்றுதான். அதைப்பற்றி எல்லாம் விரிவாக அரசிடமும் அமைச்சரவர்களிடமும் தெரிவித்திருக்கிறோம்.

ஆகவே, அமைச்சரவர்கள் இந்த 'சி பாரம் முறையை இல்லாமல் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். 'சி பாரத்தை' ரத்து செய்வது வியாபாரிகளுக்கு மட்டும் நன்மை செய்வதல்ல; பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கும் நன்மை செய்வதாகும்.

இதிலே இன்னொரு கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். திருப்பூரிலிருந்து பனியன் துணியை—பனியனாக செய்யாமல்—வெளி மாநிலங்களுக்கு அனுப்பினால் அதற்கு வரி கிடையாது. ஆனால் பனியனாகச் செய்து அனுப்பினால் வரி விதிக்கப்படுகிறது. அதனால் இங்கிருந்து பெரும்பாலும் துணியாகவே வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலை

செய்தால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, பனியனுக்கு வரி போடுவதைப் போல, பனியன் துணிகளுக்கும் வரி போட வேண்டும்; அதனால் அரசின் வருமானத்தையும் கூட்டிக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டூரிங் டாக்கிஸைப் பொறுத்தவரையில் பெருமளவில் வரி ஏய்ப்புக்கு இடமிருக்கிறது. ஆகவே, இப்போது இருக்கின்ற நடைமுறைகளைத் திருத்தி, வரி ஏய்ப்புக்கு இடமில்லாமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசாங்கம் கொடுத்திருக்கின்ற ஆதாரங்களைப் பார்த்தால் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. குறிப்பாக, பட்டா கொடுப்பதில் சிறப்பாகப் பணியாற்றி இருப்பதை நான் பாராட்டுகிறேன். (மணியடிக்கப்பட்டது.) இன்னும் இரண்டு காரியங்களைச் சொல்லி, முடித்து விடுகிறேன். நம்முடைய ஆட்சி நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, பிறகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பல குறைகளைச் சொன்னார்கள்.

சாதாரண விவசாயிகளுக்கு எல்லாம் நிலம் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அரசாங்கம் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளினால் நிலச் சீர்திருத்த சட்டத்தின்படி உபரியாக வந்த நிலங்களை நிலம் இல்லாத 18,866 பேருக்கு இன்றைக்கு கொடுத்திருக்கிறோம். அந்தக் காரியத்தை செய்த இந்த அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

கோவை மாவட்டத்தில் கோவை வட்டமும், அவினாசி வட்டமும் ஒரு கோட்டமாக இருக்கிறது. கோவை ஒரு ஜில்லாவின் தலைநகரம். ஆகவே, அதை ஒரு தனிக் கோட்டமாக ஆக்கவேண்டும். பல்லடம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஒரு கோட்டமாக இருக்கிறது. அந்த கோட்டாட்சி அலுவலகம் திருப்பூரிலிருந்து 40 மைல் தொலைவில் இருக்கிறது. அதனால் பல்லடம், அவினாசி இரண்டையும் சேர்த்து ஒரு தனி கோட்டமாக ஆக்க வேண்டும். திருப்பூர் அதன் மையமாக இருப்பதால் அந்தக் கோட்டத்திற்கு திருப்பூரை தலைநகராக்க வேண்டும். அதுபோல, மேட்டுப்பாளையம் ஒரு நகரமாக இருக்கிறது. அவினாசி ஒரு தாலுக்காவாக





இருக்கிறது. மேட்டுப்பாளையம் ஒரு நகராட்சியாக இருப்பதால், அவினாசி தாலுக்காவிலிருந்து பிரித்து, அதை ஒரு தனி வட்டமாக ஆக்கவேண்டும்.

அடுத்து, இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் உள்ள நிலங்களை அதை விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும். இந்த காரியத்தில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அது அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தச் சிக்கல்களை நீக்கி விரைவாகப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**புலவர் சி. பழனிச்சாமி:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் பெருமக்கள் இன்றைக்கு நம்முடைய நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று நல்ல பல திட்டங்களைத் தீட்டி, விரைவாகச் செயல்படுத்த உத்தரவு போடுகிறார்கள். ஆனால், அந்த உத்தரவுகளை செயல்படுத்த இன்றைக்கு அரசாங்கத்தில் இருக்கின்ற அதிகாரிகளும் சில பணியாளர்களும் சரியாக செயல்படவில்லை. நான் எல்லா பணியாளர்களையும் சொல்லவில்லை; சில பணியாளர்கள்தான் சரியாக செயல்படவில்லை. இந்த அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்வதற்கு ஒரு சில அரசாங்க பணியாளர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கு திட்டமிட்டு நம்முடைய அரசுக்கு கெட்ட பெயரை உண்டாக்க செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

அதற்கு எனது தொகுதியில் நடந்த ஒன்றிரண்டு விஷயங்களையே சான்றாக அளிக்க விரும்புகிறேன்.

எனது பழனி தொகுதிக்கு அண்மையிலுள்ள ஆயக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் பொன்னாகரத்தில் தேவநாயக்கன் குளம் இருக்கிறது. அந்தக் குளத்திற்கு நீர் மட்டம் கட்டப்படவில்லை. நீர் மட்டம் இல்லாததால் தண்ணீர் நிறைந்துவிடுகிறது. மழை

***திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக் கூடிய மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பயிரிடும் தரிசு நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்கு ஒப்படைப்பதற்கான அறிவிப்பை இதில் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு பார்க்கிறபோது அதிகமான பேர்களுக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் நம் ராஜ்யத்தில் தரிசு நிலங்கள்—சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள்—பல லட்சக்கணக்கான ஏக்கராக்கள்—பாலைவனமாக இருப்பதை மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அறிவார்கள். அவற்றுக்கான கணக்குகளை எல்லாம் சேகரித்து, நிலமில்லாத விவசாயிகளுக்கு அந்த நிலங்களையும் அளிக்க முன்வரவேண்டும். பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. காட்டு இலாக்கா நிலம் இருக்கிறது. இனி காட்டு இலாக்கா நிலங்கள் அளிக்கப்படாது என்று முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த முடிவைமாற்றி—விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களை சாகுபடிக்கு கொடுக்க வேண்டும்.

அதேசமயத்தில் நிலம் ஒப்படை செய்கிற விஷயத்தில் விதி முறைகள் மாற்றப்படவேண்டும். பிரிட்டிஷ் காலத்தில் இருந்தது—இந்தச் சமுதாயத்திற்கு உகந்ததாக அது மாற்றப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பு மனைப் பட்டா வழங்குவது சம்பந்தமாகவும் நடைமுறையில் இருக்கக்கூடிய சில சிக்கல்களைப் போக்க வேண்டும். நில ஆக்கிரமிப்பாக இருந்தாலும், ஆக்ரமணம் இல்லாமல் இருந்தாலும்—கணிசமான அளவு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்குகிறபோது நகர்ப்புறங்கள் விடுபட்டுவிட்டன. நகரங்களில் இன்றைக்கும் நிலத்தில் இருந்து வெளியேற்றுகிறார்கள். அதுசம்பந்தமாக அரசாங்கம் ஆலோசனை செய்து—நகர்ப்புறத்தில் உள்ளவர்களும் நிலத்தில் இருந்து வெளியேற்றப்படாதிருக்க தக்க பாதுகாப்பை அளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, குடியிருப்பு மனைப் பட்டா வழங்கக்கூடிய முறைகளை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தினார்கள். ஹரிஜன மக்கள் லட்சத்திற்கு மேல் பட்டா பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஒரு சென்ட். ½ சென்ட், 1½ சென்ட் என்பதாகத்தான் கொடுக்





பட்டது. அது போதுமானது அல்ல. அவர்கள் ஐந்து செண்டு, பத்து செண்டு நிலத்தில் மரங்கள் எல்லாம் வைத்து நட்டு இருந்தார்கள். இன்றைக்கு இந்த ½ சென்ட், 1 சென்டு சுற்றை சுற்றி அளந்து கொடுத்துவிட்டு அந்த நிலங்களை விட்டுவிட்டார்கள். குறிப்பாக அதை தஞ்சை மாவட்டத்தில் பார்க்கலாம். ஆகவே அந்த மனைகளோடு சேர்ந்து வளர்ந்திருக்கிற மரங்களையும் அவர்களுக்கு—நிலத்தோடு சொந்தமாக்கவேண்டும்.

நிலவரி போன்றவைகள் வறட்சியின் காரணமாக அல்லது வெள்ளத்தின் காரணமாக முன்பெல்லாம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அம்மாதிரி வறட்சிப் பகுதிகளில் நெருக்கடியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கெடுபிடி செய்து அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் நிறுத்தியாகவேண்டும். அம்மாதிரி கெடுபிடி வசூல் செய்வதைத் தள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரண வேலைகள் வேகமாக நடந்தது. அதிலே மத்திய சர்க்கார் 14 கோடி ரூபாய் தருவதாக ஒத்துக்கொண்டு கடைசியில் 4 கோடி ரூபாய்தான் தந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி மத்திய அரசு தரவில்லை என்று சொன்னாலும் மாநில அரசு அந்தத் தொகையை அளித்து நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும். உதாரணமாக திருத்துறைப்பூண்டி தாலுகாவிலே ஒரு கிராமமே வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. அவர்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு இடம் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மேதகு ஆளுநர் அவர்களும் அங்கு வந்து பார்வையிட்டபோது கூறினார்கள். ஆனால் இதுவரையில் அது நடைபெறவில்லை. அது இரண்டு ஆண்டுகளாக தலைமையகத்துக்கு வந்து அவர்கள் எடுக்க முடியாது, அதிக தொகை வருகிறது என்று சொல்கிறார்கள். இனி மேல் அது ஹரிஜன தொகையிலிருந்துதான் எடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள்.

இந்தக் காரியங்களைச் செய்வது பூரா ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்கள்தான் எடுக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஏன் இதை முன் கூட்டியே நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகப் பல சட்டங்கள் வந்திருக்கின்றன. அது காங்கிரஸ் ஆட்சியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிலும் சரி, 7, 8 சட்டங்கள் இயற்றியிருக்கிறார்கள். ஆனால் அந்தச் சட்டங்கள் நடைமுறையில் அமுல் படுத்தப்படாமல் இருக்கின்றன. எங்கே சென்றாலும் விவசாயிகளுக்கு விரோதமாக தீர்ப்பளிக்கப்படுகிறது. கிராம அதிகாரிகளாக இருந்தாலும் சரி அல்லது ரெவின்யூ அதிகாரிகளாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு விரோதமாகத்தான் செயல்படுகிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் 5 வருஷத்திற்குப் பிறகு 60,000 ஏக்கர் நிலம் எடுத்திருப்பதில் 36,000 ஏக்கர் நிலம்தான் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையில்லாதவற்றையெல்லாம் செய்கிறார்கள். நிலச் சீர்திருத்த சட்டங்கள் நம்முடைய மாநிலத்திலே அமுல்படுத்தப்படுகின்றனவா என்று ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு விசாரணைக் கமிஷனை போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், ரெவின்யூ அதிகாரிகள் இவர்களைக்கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு விசாரணை செய்து இதைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். இதை அரசாங்கம் செய்யவேண்டும்.

இதன் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ரெவின்யூ கோர்ட் மூலம் ஒரு நிமிடம் அவர்கள் பணம் செலுத்தத் தவறினாலும் கூட அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அவர்கள் அதற்காக ஹைகோர்ட்டில் தான் அப்பீல் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்காக ஹைகோர்ட்டு வரையில் ஒரு விவசாயி, குத்தகைதாரர் அப்பீல் செய்யவேண்டுமென்று சொன்னால் அது நடக்காத காரியமாக இருக்கிறது. இதன் காரணமாக என்னுடைய ஆலோசனை என்னவென்றால் இந்த ரெவின்யூ கோர்ட்டை ஒழித்துவிட்டால் நல்லது. விவசாயிகள் குத்தகை பாக்கி என்று சொன்னால் அதை வசூலிக்க வேண்டுமே தவிர நிலத்தை அவர்களிடமிருந்து கைப்பற்றிவிடக் கூடாது.





அரசால் ஒரு நல்ல எண்ணத்தில் செய்யப்பட்டதாகும். இதிலே 3 லட்சம் விவசாயிகள்தான் பதிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் பல லட்சம் விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஏமாற்றப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அவர்களுக்குக் காலத்திலே அறிவிப்பது கிடையாது. அவர்கள் கேள்விப்பட்டுப் போய் மனுக் கொடுத்தால் கூட நாங்கள் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்கிற நிலைமை இருக்கிறது.

பதிவு செய்யவேண்டுமென்று அதிகாரம் ஸ்தலத்திலே இருக்கிற தாலுகா ஆபீஸ் மூலமாக பதிவு செய்வதற்கு அதிகாரம் வழங்க வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் இன்னும் 10 லட்சம் விவசாயிகளுக்குப் பதிவு செய்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். அரசாங்கம் சட்டம் கொண்டுவருவதன் மூலமாக நிலம் அவர்களுக்குச் சொந்தமாகிவிடும் என்று அவர்கள் ஏமாந்து இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன்.

இனாம் சட்டத்தை எடுத்துக்கொண்டால் அது இன்றைக்குப் பொருத்தமாக இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் சேத்தூர் ஜமீனுக்கு விரோதமாகவும் விவசாயிகளுக்கு சாதகமாகவும் கோர்ட்டிலே தீர்ப்பு சொல்லப்பட்டது. அந்த நிலம் விவசாயிகளுக்குத்தான் சொந்தம் என்று கூறிய தீர்ப்புக்குப் பிறகுங்கூட அந்த நிலம் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, அந்தச் சட்டங்களை முழுவதையும் திருத்தியாக வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

[redacted]

அடுத்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். இதன்மூலம் ஏழைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு உடந்தையாக போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே மதுவை அறவே ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து கூலி நிர்ணயச் சட்டத்தை நாடு முழுவதும் அமுலாக்க வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் வருவாய்த் துறை, தீர்வைத் துறை, சொத்துக்கள் வரித்துறை ஆகிய இலாகாக்கள் சம்பந்தமாக மானிய கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம்

ஒதுக்கப்பட்ட தொகை 21,41,59,100 ரூபாய் ஆகும். இந்த இலாகாக்களின் மூலம் கிடைக்கும் வருமானம் உதவிகரமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மொத்தமாக இந்த இலாகாக்களின் மூலம் 1,70,09,13,600 ரூபாய் மானியக் கோரிக்கையாகப் பெறப்படுகிறது.

Demand No. 1 Land Revenue Department.

Demand No. 2 State Excise Department.

Demand No. 4 General Sales Tax, other Taxes and Duties—Administration.

Demand No. 5 Stamps—Administration.

இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து இந்த மானிய கோரிக்கைகளின் மீது மொத்தமாக 14 உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே இங்கே தரப்பட்ட குறிப்புகளையெல்லாம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்த சட்டங்களைப்பற்றி சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். இந்தச் சட்டங்கள் எந்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதோ அது நிறைவேறவில்லை என்று சொன்னார்கள். அது ஓரளவுக்கு உண்மை என்பதை நாம் மறுப்பதற்கில்லை. அவைகளை அமுலாக்குவதிலே பலவிதமான இடைஞ்சல்கள் இருக்கின்றன. வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார்கள். தடையுத்தரவு வாங்குகிறார்கள். இது தெரிந்த விஷயமாகும்.

இந்தப் பிரச்சனையைப்பற்றி நான் சொல்வதற்கு முன்னால், 'எகனமிக் டைம்ஸ்'லே 28—11—1973-ல் வந்திருக்கின்ற ஒரு கட்டுரையின் சில வாசகங்களைச் சொன்னால் இந்தச் சட்டங்களை நிறைவேற்றுவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்று





மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்வதற்கு முடியும் என்பதால் சொல்ல விரும்புகிறேன். Thiru Rudder Dutt என்பவர் எழுதியிருக்கிறார்—

'Landowners by various ingenious devices try to conceal the ownership or make clandestine transfers. The basic problem of security of tenure is to protect the tenancy right of share-croppers. Legal solutions have failed to guarantee security of tenure. The Task Force of Planning Commission discussing the futility of legal security of tenancy, asserts mere recording of name in the record of rights by itself will not guarantee security of tenure.

There is nothing to prevent a determined group of landowners from adopting other methods to throw out physically from the land the share-croppers who have the temerity to get themselves recorded as tenants.

Experience shows that when the share-croppers build some such organisation with a modicum of militancy they could for some time resist the onslaught of the landowners. But in most cases the resistance was short-lived because the share-croppers could not withstand for long the economic and social sanctions that were applied against them by the landowners.

The basic problem in the implementation of a programme of land reforms, is to break the stranglehold of the vested interests in land and the legal support given by the judiciary to the vested interests in the name of sanctity of private property.

Obviously the task of strengthening the administrative machinery without creating conditions for breaking the stranglehold of the holy trinity i.e., landlord, moneylender, trader is nothing but lip service to the poor peasantry. In case a frontal attack has to be made with a view to ensuring justice to the rural proletariat engaged in cultivation the bold suggestions given by the Task Force on Agrarian Relations must be implemented in letter and spirit......'

திரு. என். கே. பழனிசாமி: இவ்வளவையும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். கிரிமினல் ப்ரொசீஜர் கோட் செக்ஷன் 49-ஐ இம்ப்ளிமெண்ட் பண்ணவில்லை என்றால் இவ்வளவு வராது. அதை இம்ப்ளிமெண்ட் பண்ணாமல் இருப்பதற்குத் தயாராக இருக்கிறார்களா?

[1974 ஏப்ரல் 2

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் சொல்லவில்லை, கஷ்டங்களை பெரிய மனிதர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட நிலைமைகளைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள், மற்றவர்களும் சொன்னார்கள்.

நில உடைமைச் சட்டத்திலே, நில உச்சவரம்புச் சட்டத்திலே செய்திருக்கின்ற நடவடிக்கைகள், எந்த அளவில் நிலம் எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற விவரங்களெல்லாம் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களையெல்லாம் நான் சொல்வதற்கு நேரமில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களின் அடிப்படையிலே என்னென்ன முறைகளிலே அவைகளுக்கெல்லாம் காரியங்களைச் செய்ய முடியுமோ அதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய உயர்நீதி மன்றத்தில் சில வழக்குகள் இருந்து, நில உச்சவரம்புச் சட்டத்தில் சில குறைகளை கண்டுபிடித்து, அந்த நில உச்சவரம்புச் சட்டத்தை அரசு எண்ணுகின்ற முறையில் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலித்து என்ன மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு கூடி சில தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறது. சட்டத்திலிருக்கின்ற சில குறைபாடுகளை நீக்குவதற்காக திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்றிரண்டைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

'It was decided that section 22 of the Tamil Nadu Land Reforms Act may be amended on the lines of the amendments being made to section 23, declaring void all transfers made between 6th April 1960 to 2nd October 1962......'

இன்னும் நிறைய திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். நில சீர்திருத்தச் சட்[டத்தில்]...



1974 ஏப்ரல் 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கிடைக்கின்ற அடிப்படையில் இந்தத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முடிவின் அடிப்படையில் சில காரியங்கள் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது, திரு. பரந்தாமன் அவர்கள் பேசும்பொழுதும் குறிப்பிட்டார்கள், இன்னும் சில உறுப்பினர்கள் பேசும்பொழுதும் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்கள், நிலத்தீர்வை போன்றவைகளை வசூலிப்பதால் ஏற்படும் கஷ்டங்களைச் சொல்லி அவைகளையெல்லாம் நிறுத்தி வைக்க வேண்டும் அல்லது கெடுபிடி முறையிலே வசூலிக்கக்கூடாது என்று கூறினார்கள். ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரிலே தெளிவாக விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தக்காவி லோன் என்று தருவதிலே 25-வது ரூலிலே சொல்லப்பட்டிருக்கிறது.

'Repayment of annual instalment may he suspended by the authority or officer who sanctions the loan, when the causes are beyond the borrower's control and such payment of instalment becomes unduly burdensome......'

இதிலே இவைகளைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. நான் ஒரு குறிப்பை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு வர வேண்டிய கடன் பாக்கித் தொகை எவ்வளவு என்றால், 31—12—1973 முடிய 14 கோடியே 56 இலட்சம் ரூபாய் வர வேண்டியிருக்கிறது. அதே போல் நில வருவாயை எடுத்துக்கொண்டால் 31—1—1974 ஆம் தேதி வரையில் 4,26,60,151 ரூபாய் பாக்கியிருக்கிறது. அரசாங்கம் குறிப்பிட்ட நிலைமைகளிலே இந்த வரியை வஜா செய்வது, வரி வசூலிப்பதைத் தள்ளி வைப்பது போன்றவற்றிற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இந்த முறைகள் பின்பற்றப்பட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் சமீபத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் முதலமைச்சரவர்களைச் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

[1974 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொல்ல வில்லை, கஷ்டங்களை பெரிய மனிதர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டத்திற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட நிலைமை களைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள், மற்றவர்களும் சொன்னார்கள்.

நில உடைமைச் சட்டத்திலே, நில உச்சவரம்புச் சட்டத்திலே செய்திருக்கின்ற நடவடிக்கைகள், எந்த அளவில் நிலம் எடுக்கப் பட்டிருக்கின்றது என்ற விவரங்களெல்லாம் குறிப்பிலே கொடுக் கப்பட்டிருக்கிறது. அந்த விவரங்களையெல்லாம் நான் சொல்ல தற்கு நேரமில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல் லிய கருத்துக்களின் அடிப்படையிலே என்னென்ன முறைகளிலே அவைகளுக்கெல்லாம் காரியங்களைச் செய்ய முடியுமோ அதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று கூறிக்கொள்வதற்குக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம்முடைய உயர்நீதி மன்றத்தில் சில வழக்குகள் இருந்து, நில உச்சவரம்புச் சட்டத்தில் சில குறைகளை கண்டுபிடித்து, அந்த நில உச்சவரம்புச் சட்டத்தை அரசு எண்ணுகின்ற முறையில் நிறைவேற்ற முடியாத சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலித்து என்ன மாற் றங்களைக் கொண்டு வரலாம் என்று ஆலோசித்துக்கொண்டிருக் கிறது. சமீபத்தில் சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு கூடி சில தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறது. சட்டத்தி லிருக்கின்ற சில குறைபாடுகளை நீக்குவதற்காக திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான விவரங் களுக்குள் நான் போக விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்றிரண்டைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

'It was decided that section 22 of the Tamil Nadu Land Reforms Act may be amended on the lines of the amendments being made to section 23, declaring void all transfers made between 6th April 1960 to 2nd October 1962......'

இன்னும் நிறைய திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்; நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்மூலம் கிடைக்கின்ற பலன் மக்களுக்கு





கிடைக்கின்ற அடிப்படையில் இந்தத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முடிவின் அடிப்படையில் சில காரியங்கள் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்பொழுது, திரு. பரந்தாமன் அவர்கள் பேசும்பொழுதும் குறிப்பிட்டார்கள், இன்னும் சில உறுப்பினர்கள் பேசும்பொழுதும் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்கள், நிலத்தீர்வை போன்றவைகளை வசூலிப்பதால் ஏற்படும் கஷ்டங்களைச் சொல்லி அவைகளையெல்லாம் நிறுத்தி வைக்க வேண்டும் அல்லது கெடுபிடி முறையிலே வசூலிக்கக்கூடாது என்று கூறினார்கள். ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக் கிறது. இங்கே போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரிலே தெளிவாக விதி முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தக்காவி லோன் என்று தருவதிலே 25-வது ரூலிலே சொல்லப்பட்டிருக்கிறது.

'Repayment of annual instalment may be suspended by the authority or officer who sanctions the loan, when the causes are beyond the borrower's control and such payment of instalment becomes unduly burdensome......'

இதிலே இவைகளைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டு மென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசு விரும்புகிறது. நான் ஒரு குறிப்பை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு வர வேண்டிய கடன் பாக்கித் தொகை எவ்வளவு என்றால், 31—12—1973 முடிய 14 கோடியே 56 இலட்சம் ரூபாய் வர வேண்டியிருக்கிறது. அதே போல் நில வருவாயை எடுத்துக்கொண்டால் 31—1—1974 ஆம் தேதி வரையில் 4,26,60,151 ரூபாய் பாக்கியிருக்கிறது. அரசாங்கம் குறிப்பிட்ட நிலைமைகளிலே இந்த வரியை வஜா செய்வது, வரி வசூலிப்பதைத் தள்ளி வைப்பது போன்றவற்றிற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இந்த முறைகள் பின்பற்றப்பட்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் சமீபத்தில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் முதலமைச்சரவர்களைச் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது;

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 2

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமையன்று விவசாயிகளின் குறைகளைக் கேட்பதற்காக என்றே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மின்சாரத் துறை அதிகாரிகளும் விவசாயிகளின் குறைகளைக் கேட்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அங்கே மனுக்கள் கொடுக்கப்பட்டால் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் வரையில் கடன் வசூலிப்பதை நிறுத்திவைத்து, பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில் அது சரியாக நடக்கிறது. சில மாவட்டங்களில் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எல்லா மாவட்டங்களிலும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்ற அறிவிப்பு அரசாங்கத்தால் தெரியப்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு நம்முடைய திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் குடியிருப்புச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி, அந்தக் குடியிருப்புச் சட்டத்தில் ஒரு சென்ட், இரண்டு சென்ட் என்று அளந்து கொடுத்தார்கள் என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அதிலே சட்டத்தில் சொல்லியிருப்பது,

'Kudiyiruppu' means the site of any dwelling house or hut occupied, either as tenant or as licensee, by any agriculturist or agricultural labourer and includes such other area adjacent to the dwelling house or hut as may be necessary for the convenient enjoyment of such dwelling house or hut......'

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் அனுபவித்து வரும் இடங்களைக் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏதாவது அதிகாரிகள் தவறு செய்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தால் அரசாங்கத்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு முக்கியப் பிரச்சினையைப்பற்றிக் கூறினார்கள். 'கன்சாலிடேஷன் ஆஃப் ஹோல்டிங்ஸ்' பற்றி ஆண்டுதோறும் நான் சொல்கிறேன். அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கருத்தும் கூடப் பட்டார்கள்.



1974 ஏப்ரல் 2] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நம்முடைய அரசின் சார்பில், டைரக்டர் ஆஃப் சர்வே அண்ட் செட்டில்மெண்ட்ஸ்-ஆக இருந்த திரு. வி. கே. சி. நடராசன் அவர்களை இதைப்பற்றிப் பரிசீலித்து ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது, அவர்களும் பரிசீலித்து,

'He reported that no consolidation of holdings was possible or desirable at this stage as a law for consolidation and prevention of fragmentations of holding would meet with enormous difficulties and objections from the public and cannot be successfully implemented in the State......'

என்று அறிக்கை தந்தார்கள். அந்த அறிக்கையை இப்பொழுது ரெவின்யூ போர்டு பரிசீலித்து திரு. வி. கே. சி. நடராசன் அவர்களுடைய அறிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரையில் கொஞ்சம் ஒத்தி வைத்திருக்கிறோம்.

The Government decided to defer the proposal, காரணம் என்னவென்றால், 'நேஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்சர்' குழுவின்மூலம் பரிசீலிக்கிறார்கள். அதில் வருவாய்த் துறை செயலாளர் அவர்களும் உறுப்பினராக இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.30)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரியின் ரிப்போர்ட்டை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது இப்போது சாத்தியமில்லை என்று ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. பப்ளிக் ஒப்பினியன் என்ன தெரிந்து கொள்ளப்பட்டதா? விவசாயிகள் பரவலாக தன்னிச்சையாக கருதுகிறார்கள் என்று பார்க்காமல் அதிகாரி ரிப்போர்ட் கொடுத்து விட்டாரா? இதிலே பப்ளிக் ஒப்பீனியன் தெரிந்து கொண்டு பேசுவது நல்லது.

திரு. என். கே. பழனிச்சாமி: கன்சாலிடேஷன் ஆப் லாண்ட் ஹோல்டிங்ஸ் என்பது நிலச் சீர்திருத்தத்திற்கு நேர் எதிரான நடவடிக்கை. அதைச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கனம் உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லுகிறார்கள். நிலச் சீர்திருத்தத்திற்கு எதிராக இது எப்படி இருக்க முடியும்? சீலிங் வைத்திருக்கிறார்கள்.

10 ஏக்கரோ 15 ஏக்கரோ எப்படி இருந்தாலும் அந்த நிலம் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமென்பது எப்படி நிலச் சீர்திருத் தத்திற்கு எதிராக இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தச் சட்ட மன்றத்தில் இரண்டு கருத்து இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இன்னும் எவ்வளவு நேரம் இருக்க வேண்டுமென்று தகவல் தெரிந்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் தேவையில்லை, பசிதான் முக்கியம் என்றால் நான் முடித்து விடுகிறேன். விஷயங்களை விளக்கமாக விளக்க வேண்டுமென்று ஆசைதான். தேவையில்லை என்றால் முடித்து விடத் தயாராக இருக்கிறேன். உடனே முடித்துக் கொள் கிறேன். நான் எப்போதும் பேசுவதில்லை.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை நேஷனல் கமிஷன் ஆன் அக்ரிகல்சர் இதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதிலே நம்முடைய செயலாளர் உறுப்பினராக இருக்கிறார். அவர் களுடைய முடிவு தெரிந்த பிறகு ஒரு நடவடிக்கை எடுக்க அரசு கருதிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரிமுத்து அவர்கள் மதுராந்தகத்தில் 34 ஏக்கரில் உள்ள விவசாயிகள் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கிருஷ்ணா செட்டி ஆப் மலையூர் நிலவுடைமையாளர் பூமியில் இருக்கும் குத்தகை தாரர்கள் தகராறு, சிவில் கோர்ட் விவகாரம், இதைப்பற்றி அறிக்கை தரப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஏற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

லாண்ட் ரெவின்யூ, வாட்டர் செஸ் ஆகியவற்றை எல்லாம் ஒருமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று கேட் டார்கள். ரேஷனலைசேஷன் அண்டு சிம்பிளிபிகேஷன் என்ற அடிப்படையில் எ.ஆர்.சி. சிபாரிசு வந்திருக்கிறது. ரெவின்யூ போர்டு மூலமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அறிக்கை வந்த பிறகு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.





ஹை பவர் கமிட்டி ஆன் லாண்ட் ரெவின்யூ என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அந்த ஹை பவர் கமிட்டி காலம் முடிந்து விட்டது. மீண்டும் புதுப்பிக்கும் அவசியம் இல்லை என்று கருது கிறேன். அதைவிட மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல கருத்துக் களைச் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே இருந்த சில உறுப்பினர்கள் மீண்டும் உறுப்பினர்களாக வர முடியவில்லை. அந்த அடிப் படையில் இந்தக் கமிட்டி மீண்டும் புதுப்பிக்கப்படவில்லை.

ஏற்கெனவே, குறிப்பிட்டதுபோல் இந்த அரசாங்கத்திற்கு லாண்ட் ரெவின்யூவில் 14 கோடி ரூபாய் பாக்கியும், அரசாங்கக் கடன் வகையில் 14 கோடி ரூபாய் பாக்கியும் இருக்கிறது. இவை எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. அதிலே இருக்கிற கஷ்டங்களைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தைத் தேசவுடைமையாக்க வேண்டுமென்று சொன்னார்கள். போடப்படும் வரியை அதிகப் படுத்தலாம் என்றும் சொன்னார்கள்.

இன்னொரு முக்கியமான கருத்தையும் சொன்னார்கள். நகரத்தில் போடப்படும் விளம்பரப் பலகைகளுக்கு வரி போடலாம் என்று சொன்னார்கள். இவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை சென்னையைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவர் லைசென்ஸ் பீஸ் கலெக்ட் செய்து கொடுத்து வந்தார்கள். ஹைவேசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது; கார்ப்பரேஷ னுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. சீப் எஞ்சினியர் ஹைவேஸ்; கார்ப்பரேஷன் கமிஷனர், கலெக்டர், போலீஸ் அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு விளம்பரப் பலகைகளை எங்கு வைக்கலாம், கட்டணம் என்ன என்பதையெல்லாம் நிர்ண யிப்பது பற்றி அரசாங்க அளவில் பரிசீலனையில் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் குழு போட்டு இந்தப் பணத்தை வசூலிக்கலாம் என்று சொல்லுகிறீர்கள். அப்படி வசூலிக்கும் பணத்தை எப்படிப் பிரித்துக் கொடுக்கப் போகிறீர்கள்? கார்ப்பரேஷன் நிலம் என்றால் அவர்களுக்கும்,

பி.டபிள்யூ.டி. நிலம் என்றால் அவர்களுக்கும் பிரித்துக் கொடுத்து விடப் போகிறீர்களா? அல்லது மொத்தமாகப் பணத்தை வசூலித்து தனி இலாகா ஏற்படுத்தப் போகிறீர்களா?

THE HON. THIRU S.J. SADIQ PASHA: There was also some discussion about evolving a method of prohibiting the putting up of hoardings on private lands within the City. The Chief Engineer (Highways and Rural Works) has stated that he is examining the 'Ribbon Development Prevention Bill' for the purpose of prohibiting the unauthorised and irregular construction of buildings abutting the road margins and development of areas withsn the City limits obstructing the free flow of traffic, etc., and that a provision may be made in that Bill for prohibiting the putting up of hoardings inside the private lands within the City.

சீப் எஞ்சினியர், ஹைவேஸ் அண்டு ரூரல் ஒர்க்ஸ் ரெப்ரசன்டேட்டிவ், கமிஷன் ஆப் போலீஸ் ரெப்ரசன்டேட்டிவ், கமிஷனர், கார்ப்பரேஷன் ஆப் மெட்ராஸ் ரெப்ரசன்டேட்டிவ், கலெக்டர் ஆப் மெட்ராஸ் ரெப்பரசன்டேட்டிவ் ஆகிய இவர்கள் எல்லாம் கூடிப் பேசி முடிவு செய்வார்கள். பொறுப்புள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பரிசீலித்து முடிவு செய்வார்கள்.

இது சென்னை மாநகரத்திற்கு மாத்திரமல்ல; மற்ற பெரிய நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. நா. வீராசாமி:** ஹைவேஸ் டிப்பார்ட்மென்ட், போலீஸ் டிப்பார்ட்மென்ட், கலெக்டர் இவர்கள் எல்லாம் ஒப்புக்கொண்டு பத்து பதினைந்து ஆண்டுகளாக அனுமதிக்கப்பட்டிருக்கும் ஹோர்டிங்குகளைக்கூட ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் யாருக்கும் பெர்மிஷன் கொடுக்கப் போவதில்லை என்று சென்னை நகரத்தில் இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அதையும் மனதில் கொண்டு அந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்ய அரசாங்கத்திற்கு வருமானம் வர அமைச்சர் அவர்கள் வழி வகுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ரினியூ செய்து கொடுக்காவிட்டாலும் அப்புறப்படுத்தியிருக்க மாட்டார்கள். That can be collected in future also.

மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் சொன்ன குறிப்பை அடிப்படையாக வைத்து இந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ராஜா அவர்களும், நரசிம்மன் அவர்களும், கே. எம். சுப்பிரமணியம் அவர்களும் குதிரைப் பந்தயத்தைப் பற்றிய கருத்தை ஒவ்வொருவரும் பந்தயக் குதிரையைப் போல் சொன்னார்கள். ஏன் வருமானம் குறைந்து விட்டது என்று கேட்டார்கள். இன்று நம்முடைய பக்கத்து மாநிலங்களில் அடிக்கடி குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகிற காரணத்தால்தான் வருமான குறைவு ஏற்பட்டிருக்கிறது.

ரேஸ் கிளப் மூலம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எவ்வளவு நியாயம் என்று பார்க்க வேண்டும். திரு. நரசிம்மன் அவர்கள் inter-race betting tax வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

வரிகளைக் குறைக்கின்ற பிரச்சினை இல்லையா என்று ஒருவர் கேட்கிறார். இன்னொருவர் இதை ஏன் ஒழித்து விடக் கூடாது என்று கேட்கிறார். இன்னொருவர் தேசிய மயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார். விதிக்கப்பட்டிருக்கும் வரி போதுமானது அல்ல என்று கூறுகிறார். அரசாங்கத்தைப் பொறுத்தவரை போடப்பட்டிருக்கும் வரியைக் குறைக்க நியாயம் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் அரிஷ்டம், அஸ்வம் பற்றிச் சொன்னார்கள். இதைப் பற்றி நம்முடைய அதிகாரிகளும் நானும் ஆராய்ச்சி செய்தோம்.

அரிஷ்டம் என்றால்—தேவையான மூலிகை மருந்து சரக்குகளைத் தண்ணீருடன் சேர்த்து கஷாயம் காய்ச்சி, கஷாயத்துடன் வெல்லம் சேர்த்து, சிறுநாகப்பூ சேர்த்து மட்பாண்டத்தில் வைத்து மண்ணுக்குள்ளே வைத்து குறிப்பிட்ட நாளில் வெளியே எடுக்க வேண்டும்.

அஸ்வம் என்பது மூலிகை மருந்து சரக்குகளைத் தண்ணீருடன் சேர்த்து, வெல்லம் அல்லது தேன் சேர்த்து, சிறு நாகப்பூ சேர்த்து காய்ச்சாமல் மட்பாண்டத்தில் வைத்து மண்ணுக்குள்ளே வைத்து குறிப்பிட்ட நாளில் வெளியே எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது வேறு விஷயம். புட் க்ராப்ஸ்க்கு 5 டைம்ஸ், நான்-புட் க்ராப்ஸ்க்கு 20 டைம்ஸ் என்று போட்டிருக்கிறது.

திரு. சி. வே. வேலப்பன்: 1971-க்குப் பிறகு பயிர் செய்யப் படுகிற எல்லாக் கிராப்ஸ்-க்கும்—உணவு தானியமாக இருந்தாலும் சரி அல்லது பணப் பயிர்களாக இருந்தாலும் சரி—20 மடங்கு என்றிருக்கிறது. முன்பு போட்டதுபோல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் கொஞ்சம் நியாயம் இருப்பதாகக் கருதுகிறேன். அதைப் பரிசீலித்து—ஐந்து மடங்கு போட வேண்டும் என்பதைப் பற்றி பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

பின்னர், டி.டி.ஸி. தீர்மானங்களைப் பற்றிக் கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். எந்தத் தீர்மானம் போட்டாலும் அவை பரிசீலிக்கப்பட்டு, அதே டி.டி.ஸி. க்கு மறுபடியும் பதில் போகிறது. சில தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப் படாமல் இருக்கலாமே தவிர அவற்றை புறக்கணித்து விட்டதாகச் சொல்ல முடியாது. அரசு ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்.

ஒவ்வொரு தீர்மானமும் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. துரைமுருகன் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். கலெக்டர் தலைமை தாங்குவது பொருத்தமல்ல என்று சொன்னார்கள். இதைப் பற்றி பல தடவை சொல்லியிருக்கிறேன். திரு. மாரிமுத்து, திரு. சுப்பையா போன்றவர்கள் பல ஆண்டுகளாக இதைப் பற்றி பேசி வந்திருக்கிறார்கள் இந்த மன்றத்தில். மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய அதிகாரச் சார்பற்றோரிடையே இருந்து மன்றத் தலைவரை ஏன் தேர்ந்தெடுக்கக்கூடாது என்பது பற்றி சட்ட மன்றக் குழுவும் அரசும் 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் கவனமாக பரிசீலனை செய்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரையே தலைவராக தேர்ந்தெடுப்பது நல்லது என்று முடிவு செய்யப்பட்டது.



மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தவறாக நடந்துகொண்டு விட்டார் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதை முன்பே தெரிவித்திருந்தால் விவரங்களை அறிந்து சொல்லியிருப்பேன். அதிகாரிகள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகளை மதித்து நடக்க வேண்டும் என்ற கருத்தை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அதிகாரிகளின் கடமை மக்கள் பிரதிநிதிகளை மதித்து அவர்கள் குறைபாடுகளைக் கவனமாகக் கேட்டு, எந்த அளவிற்கு அவற்றை நிவர்த்தி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு நிவர்த்தி செய்வதற்கான பொறுப்பில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அதிகாரிகள் மறந்துவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அவர்கள் சொன்னது போன்ற சம்பவங்கள் ஏற்படாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் கொடுக்கப்படுகிற கிஸ்ட் ரசீது-இல் விவரங்கள் இல்லை என்று சொன்னார்கள். எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற ரசீதைப் பார்க்கும்போது எல்லா விவரங்களும் இருக்கின்றன. எப்படி அங்கே அப்படி ஒரு தவறு ஏற்பட்டது என்று தெரியவில்லை. அதைப்பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொம்மன் அவர்கள் மசினிக்குடியில் உள்ள நில ஒப்படை பற்றிச் சொன்னார்கள். அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் நில ஒப்படை செய்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.

முதுமலை வன வாழ்க்கை புகலிடத்தின் நலன்களை பாதுகாக்க வேண்டி, அதன் எல்லையிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்குட்பட்ட நிலங்களை முதுமலை கிராமத்தைச் சேர்ந்த குடியானவர்களுக்கும் மற்ற எவருக்கும் ஒப்படை செய்யக்கூடாது என்றிருக்கிறது. தவறு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரைசாமி அவர்கள் இனும் சட்டப்படி எவ்வளவு செய்யலாம் என்பதை அறிவார்கள்.

திரு. சங்குமுத்து தேவர் அவர்கள் நாள்தோறும் இனும் பூமி பற்றி கேள்விகள் கேட்கிறார்கள். அடிக்கடி எழுதிக் கொடுப்பார்கள். எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும் சட்ட விதிமுறைகள்படி நீதிமன்றம் சென்று உத்தரவு வாங்கி விடுகிறார்கள். இந்தப் பிரச்னை குறித்து கவனித்து பாலோ அப்

நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகள் நினைத்தாலும் தடை ஏற்படுகிறது. நீதிமன்றங்களுக்குச் சென்று ஸ்டே வாங்கி விடுகிறார்கள். ஸ்டே வெக்கேட் ஆகிறது, பிறகு வேறு காரணங்கள் சொல்லி ஸ்டே வாங்குகிறார்கள். என்ன மாற்றங்கள் செய்யலாம் என்பதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. துரைசாமி அவர்கள் காங்கேயம் பூமி பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த இனாம் பூமியை யார் அனுபவித்து வருகிறார்களோ அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கும் முயற்சி இருந்தும் நஷ்டயீடு இல்லாமல் கொடுக்கலாமா என்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு ஒரு சப் கமிட்டி போடப் பட்டிருக்கிறது. அது பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

எனவே, நான் பல விஷயங்களுக்கு என் பதிலைச் சொன்னேன் என்று கருதுகிறேன். நம்முடைய பாந்தாமன் அவர்களும், தியாகராசன் அவர்களும் இந்த அரசாங்கத்தின் கடன் வசூல் பணத்தை வசூலிப்பதில் கொஞ்சம் காலம் கொடுக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அங்கே இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் போர்டு வழியாக அரசாங்கத்திற்கு எழுதி அனுப்புவார்களானால் நாம் அதைப் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

சேலம் மாவட்டத்திலிருந்து ரூ. 17 லட்சம் வேண்டுமென்று கேட்டு ரெவின்யூ போர்டு மூலமாக அரசுக்கு அனுப்பினார்கள். நாம் இப்போது உடனடியாக 5 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வந்து சொல்வதற்கு பதிலாக கொஞ்சம் மாவட்ட ஆட்சித் தலைவரை அதிகமாக அணுகி, அங்கேயுள்ள நிலைமையை எடுத்துச் சொல்லி, அவர்கள் அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கே அடுத்து முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்னை, மாவட்டத்தின் அளவு பெரியதாக இருப்பதால் அதை பைஃபரிகேஷன் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவை அரசின் பரிசிலனையில் இருக்கின்றன. ஏ.ஆர்.சி. சிபாரிசும் இருக்கிறது. அந்த சிபாரிசையும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு நல்ல முடிவை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்லியிருப்பதாகக் கருதுகிறேன். ஏதேனும் ஓரிரண்டு பிரச்னை விடுபட்டுப் போயிருக்குமானால் அவைகள் அரசாங்கத்தின் மூலம் பரிசீலிக்கப்பட்டு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் பெற்றுக்கொண்டு, இந்த மானியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இந்த பிளாஸ்டிக்ஸ், பனியன்ஸ் போன்றவற்றிற்கு பிற மாநிலங்களில் வரி இல்லை. அப்படிப்பட்ட பொருள்களுக்கு பிற மாநிலங்களில் வரி விலக்கு அளித்திருக்கிறபோது, நம்முடைய மாநிலத்திலும் அப்படிப்பட்ட பொருள்களுக்கு வரி விலக்குக் கொடுத்தால் தான் நல்லது. இல்லையென்றால் இங்கே தொழில் நசித்து விடும். இதை அரசு மறுபரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மற்ற மாநிலங்களில் இல்லையென்பதற்காக நாம் வரியை விட்டு விட முடியாது. இங்கே உள்ள தொழில் நசித்து விடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பிளாஸ்டிக்ஸ், பனியன்கள், போன்றவற்றிற்கும், மளிகைக் கடைக்காரர்கள் புளி போன்றவற்றிற்கும் சிங்கிள் பாயின்ட் போடுங்கள் என்று கேட்டு இருக்கிறார்கள்.

அதேமாதிரி கன்டய்னர்ஸ் பொடி, சுருட்டு கன்டய்னர்ஸ்க்கு சிங்கிள் பாயின்ட் போட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவற்றைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

ஸ்டெயின்லஸ் ஸ்டீல் வைத்து நிப் தயாரிப்பவர்களும் வரி விலக்குக் கேட்டிருக்கிறார்கள். கேட்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளை பரிபூர்ணமாகப் பரிசீலித்து ஒரு முடிவுக்கு அரசு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டது. அவைகளுக்கு ஒரு முனை வரி போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கடலைப் பிண்ணாக்கு என்று அதிலே கேட்டில் பாடர் இருக்கிறது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1944 ஏப்ரல் 2

வரும்போது ஏற்கெனவே அதன் பேரில் வரி போட்டிருந்தால் அதற்கு விதிவிலக்கு தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கேட்டில் பாடருக்கு முன்னாலேயே எக்சம்ஷன் கொடுத்து இருக்கிறோம். அதற்கு விளக்கம் கூட பிறகு கொடுத்து இருக்கிறோம்.

*திரு. சு. துரைசாமி:* பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பனியனைப் பொறுத்தவரையில் வரி பற்றி சொல்கிற நேரத்தில் அதன் பேரில் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். விரைவில் அறிவிக்கப்படுமா? திருப்பூரில் இருந்து பனியன்களை வெளியே அனுப்ப முடியவில்லை, சி. பார்ம் இல்லையென்பதால். ஆகவே, விரைவாக அந்த உத்தரவைப் பிறப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக திருப்பூருக்கு வந்து சேரும்.

THIRU K. M. SUBRAMANIAM: Point of Clarification. The Hon. Minister did not mention anything about ghee and butter, packed and unpacked, as an incongruity is there. Also bread and bun which is important from the point of view of poor people.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்த பேக்ட் அன்பேக்ட், பட்டர், கீ ஆகியவைகள் பற்றி பரிசீலிக்கப்படும். பன், பட்டரையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம்.

**திரு. கே. எ. வகாப்:** மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைமை வகிக்க வேண்டுமென்ற கருத்து 1953-இல் முடிவு செய்து இருக்கிறார்கள். காலம் மாறிக்கொண்டு வருகிறது. அங்கே எம்.எல்.ஏ. க்கள், எம்.பி. க்கள் இருக்கிறார்கள். ஒரு பேனல் ஆப் சேர்மன் போட்டு, ஒரு 5–6 பேரை அதில் வைத்து நடத்துகிற முறையை கொண்டுவருவதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த விஷயத்தில் காலம் மாறியிருக்கிறது. கருத்து மாறவில்லை.



1974 ஏப்ரல் 2]

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, நான் சொல்லிய 'ஸ்கீம் ஆப் ரெமிஷன்' சட்டபூர்வமாக இருக்கிறது, 1950-ல் கூட அது பற்றி குறிப்பு இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஸ்கீம் ஆப் ரெமிஷன் என்பது எப்படிக் கொடுக்கலாம் என்பது பற்றி சட்டம் இருக்கிறது. அதேமாதிரி ஸ்டாசுடரி ப்ரொவிஷன், போர்டு ஸ்டான்டிங் ஆர்டர், தக்காவி மானுவல் பார் தக்காவி லோன்ஸ் என்று ஏற்கெனவே இருந்து வருகிறது.

நடைமுறையில் இருக்கும் கஷ்டத்தை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அங்கேயிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகிக் கேளுங்கள். முடியவில்லையென்றால் போர்டு மெம்பரைப் பார்த்துச் சொல்லுங்கள். அதுவும் பலன் அளிக்கவில்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து சொன்ன மாதிரி, அமைச்சரைப் பார்ப்பது ரொம்ப எளிதாக இருக்கிறது. அவரைப் பார்த்துச் சொல்லுங்கள். பிரச்னை தீர்ந்து விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 11-க்குக் கொடுக்கப்பட்டிருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திருவாளர்கள் கே. எ. வகாப், கே. எஸ். கோதண்டராமையா, ஏ. சுவாமிதாஸ், கு. அ. பொம்மன், ஆ. கு. சுப்பையா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. என். கே. பழனிச்சாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,00,19,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

[பேரவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 2

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. என். டென்னிஸ் ஆகியோர் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 1-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திருவாளர்கள் ஆ. கு. சுப்பையா, கே. எஸ். கோதண்ட ராமையா, கே. எ. வகாப், கே. டி. கே. தங்கமணி, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,55,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எஸ். வடிவேல் ஆகியோர் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 2-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திரு. பி. வெங்கடசாமி, திரு. ஆ. கு. சுப்பையா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களுடைய தீர்மானம் தோல்வியுற்றதால் அதே பொருள் குறித்து திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும், திரு. எம். ஏ. லத்தீப் அவர்களும் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் தோல்வி யுற்றதாகக் கருதப்படுகின்றன.



1974 ஏப்ரல் 2] [பேரவைத் தலைவர்]

பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 94,87,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், எஸ். வடிவேல் ஆகியோர் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை 5-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் பி. வெங்கடசாமி, ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப், ஆ. கு. சுப்பையா, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 37,67,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். கே. பழனிசாமி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 4-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திருவாளர்கள் பி. வெங்கடசாமி, கே. எ. வகாப், கே. எம். சுப்பிரமணியம், ஜே. ஜேம்ஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

| | PAGES. |
|---|---|
| Consid. .. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure |
| Dis. S.D. or D.S.D. .. | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statemen. |



# TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

29TH AND 30TH MARCH AND 1ST AND 2ND APRIL 1974

(VOLUME LIII No. 1 to 4)


PAGES

A

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget 1974-75, Voting— .. .. ..
Elections .. .. .. ..
Head of State, Ministers and Headquarters staff
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. .. ..
Loans and Advances by the State Government .. } 345–351

ABUSALI, THIRU M.A.—

Budget 1974-75, Voting— .. .. ..
Cinchona .. .. .. ..
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. .. } 252–253

ADITANAR, THIRU Si Pa.— .. .. ..

Budget 1974-75, Voting— .. .. ..
Cinchona .. .. .. ..
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. } 278–279

A—*cont.*


PAGES

AGRICULTURE—

Sun-flower seeds, fixation of price, .. .. 22–24

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget 1974-75, Voting—
Cinchona .. .. ..
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. .. } 206–207

District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. ..
Stamps-Administration .. ..
General Sales Tax and other Taxes ..
and Duties–Administration .. .. } 475,478,540 567, 575

Elections. .. .. ..
Head of State, Ministers and Headquarters staff
Relief on account of Natural Calamities
Pensions and Other Retirement Benefits.
Miscellaneous .. ..
Compensations and Assignments ..
Compensation to Zamindars. .. ..
Loans and Advances by the State Government } 353 369, 375, 380,382 391,395 410,421, 13

Demand for Grant,, Mercing of by Public Works Minister instead of by Chief Minister as notified (Point of Order.) .. .. .. .. 481

Privilege Matter against Mr. Speaker, seeking information re notice of (Point of Order) .. .. 199

Removal of Speaker from his Office (R) .. 33, 48–49, 52,53–6075





PAGES

A—*cont.*

ANBAZHAGAN, THIRU K.—

Privilge Matter against Mr. Speeker, seeking information *re* notice of (point of order) .. .. 200

Removal of Speaker from his Office (R) .. . 33,46-47,58

ARCHAEOLOGY—

Chola Art Gallery, Sri Brahadeeswarar Temple, Thanjavur, .. .. .. .. 5–7

ATOMIC ENERGY—

Atomic power plants, establishment .. 445–451

B

BACKWARD CLASS—

Backward Communities, list on basis of economic backwardness .. .. .. .. 10

BALASUNDARAM, THIRU V.

Budget 1974-75, Voting—
District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other taxes and Duties
Administration .. .. .. } 498

Elections, .. .. .. ..
Head of State, Ministers aad Headquarters Staff..
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retiremen Benefits ..
Miscellaneous .. .. .. ..
Compensations and assignments — ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government .. } 358–361

PAGES

B—*cont.*

BHOODAN—

Extent of land received .. .. .. 433-434

BILL(S)

Appropriation Bill, 1974, Consid Motion to Pass Passed .. .. .. 98-106

Occupants of Kudiyiruppu (Conferment of ownership) Second Amendment Bill, 1971-Int. .. 473

BOMMAN, THIRU K. H.—

Budget, 1974-75 Voting :

Cinchona .. .. .. ..
Forest Department .. .. .. ..
Capital Outlay on Forests .. .. ..206,207,227
.. .. 243 248

District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. ..
Stamps Administration .. .. 543-547
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. 474,

BRIDGES AND CULVERTS—

Bridge across Kushastalion Tiruthani—Nagalapuram Road .. .. .. .. 179-180

Overbridge across railway line near Omallur town 15-16

Overbridge near Madurai Mills at Pazhaganatham, Madursi .. .. .. .. 177-178

C

CALLING ATTENTION—

Christian 'Paravan' Community students, Cancellation of educational concessions .. .. 469-479

Kodarangulam Inam Estate, Ambasamudram Taluk Non-collection of Levy on melvaram from ryots and failure to auction buildings, usufrrotnary trees and fishing rights .. .. .. 193 197



C—*cont.*

PAGES

CALLING ATTENTION—*cont.*

Lands acquired for Railway line in Kanniyakumari District, non-payment of compensation to owners 470-472

Paddy and rice soaring price in Trichirappalli district ard used to arrest the same .. 197-198

CHAIR—

BILL

*Announcements* :

Appropriation Bill 1974 (L.A. Bill (N6. 12/74) from message per Council .. .. .. 580

B. O. H. .. .. .. .. 261-262

B. O. H, Charge in order .. .. .. 123

ALLEGATIONS

*Procedure to be followed*:

When a Member makes allegations against an Hon. Minister or another Member, he should follow the convention of furnishing in advance the details of the same to the Chairand getting his prior consent to make the same. Also, it was not proper to make allegations without any basis or proob. .. .. .. .. .. .. 273-275

BILLS

*Appropriation Bill, more time for discussion* :

Rising on a point of order, a Member stated that more time should be allotted for the discussion of Such Money Bills at length in the Assembly. In that connection, he pointed out that the Legislative Council which had not got the same rights as the Legislative Assembly had discussed them at length.

The Chair observed that opportunity had been given to the Assembly also to discuss such Bills at length. .. .. .. .. 99-100

## C

PAGES

DEBATE

*Relevancy* :

Members should stick to the subject before the House as far as possible. .. .. .. 50, 88

CHAIR—

*Request for discussion on the report of the Public Service Commission* :

With reference to a suggestion by a Member that time should be allotted for a discussion on reports of the Public Service Commission laid on the table of the House, the Chair pointed out that it was for the Members to demand a debate on it, and the initiative for it could not come from the Government.

On another Member suggesting that the State Government might itself initiate a debate on it just as the Union Government did with reference to the Union Public Service Commission's report,

consaied. .. .. .. .. ..

DECORUM

*Casting aspersion on the Chair* :

On a Member questioning the lady Member who occupied the Chair, in not allowing points of order and suggesting that the Chair was partial to the ruling party, the Chair observed that she had the discretion to allow a point of order or not and no aspersion could be cast on the Chair. She added that she was a different person when she occupied the Chair. When the time was taken away by such interruptions they should not complain of lack of time later and hence the Members should finish their speech within the time allotted to them. .. .. .. .. .. ..



PAGES

CHAIR—*cont.*

Railways and observations—*cont.*

*Demands for Grants*—

*Moving by the concerned Minister* :

On 2nd April 1974 a Member of the Opposition, rising on a point of order, stated that though in the Order Paper it was metioned that the Hon. Chief Minister would move the Demand relating to District Administration, the Hon. Minister for Revenue moved it. He Conterted that while any Hon. Minister could reply to the debate, so far as the moving of the Demand was concerned, only the concerned Minister could move it.

The Hon. Speaker referred to a previous ruling given to a similar point, namely—

'When a Member observed that the Home Minister had moved Demands for Grants relating to departments not within his portfolio, the Speaker pointed out that there was collective responsibility of the Cabinet to the Legislature and that any Minister could speak on any subject....'

and held that there was no point of order and any Minister could move any Demand. .. 81

*Members' seats* :

It was not in order for a Member to speak from a seat not allotted to him .. .. 52

*Points of order*

*Allotment of seat to Mr. Speaker during the discussion on the resolution for his removal and request for freedom of expression of views* :

Rising on a point of order, a Member stated that the Members had not been informed about the allotment of a seat to Mr. Speaker, wherefrom he would exercise his right of reply and that the Members should be afforded full freedom to express their views and no words or expressions save those that were unparlimentary should be expunged.

**CHAIR**—*cont.* PAGES

Raiways and observations *cont.*

*Points of order*—cont.

*Allotment of seat to Mr. Speaker during the discussion on the resolution for his removal and request for freedom of expression of view*: —cont.

The Chair observed that it was not necessary to allot a separate seat for the Hon. Speaker and he could speak from whichover seat he preferred. The Chair added that the Members would have ample opportunity to express their views .. .. .. .. 26–30

*Motion for Speaker's removal from office being not specific*:

On a point of order raised by a Member that the motion for removal of Mr. Speaker from office was not specific and clear, the Chair observed that since the motion had already been admitted, there was no point of order in the point raised by the Member .. .. .. .. 29–30

*Seeking information about a uotice of Privilege matter*:

On 30th March 1974 with reference to certain points of order raised seeking in formation about the notice of privilege given by some Members,

Mr. Speaker observed that as he was about to leave his chamber for coming to the House a Member gave a copy of his Privilege Moti on to him. Then after coming to the House, some Members had also given their Privilege Motions to him. He had no time to look into them and consider whether they could be admitted or not. To raise a point of order on that issue and enquire what had happened to them, was not in order .. .. .. 198–205



**CHAIR**—*cont.* PAGES

Railways and observations—*cont.*

Puivilege Matter

*Convening of the metting of the Board of Management of the Tamil Nadu Agricultural University, Coimbatore by the Vice-Chancellor when the Assembly was meeting*:

On 2nd April 1974 a Member of the Opposition Party, raising a privilege matter against the Vice-Chancellor, Tamil Nadu Agricultural University, Coimbatore, stated that he was a member of the Board of Management of the University and the Vice-Chancellor had fixed its meeting on the 27th March 1974 when the Assembly was sitting. Though he had made a telegraphic request for the postponement of the meeting since he had to attend the Assembly on that day, the meeting was not postponed by the Vice-Chancellor for his own reasons. The action of the Vice-Chancellor in deliberately holding the meeting on a day when the Assembly met, constituted a breach of his member's privilege, in as much as he could not discharge his duties as a Member of the Assembly.

The Hon. Speaker ruled that though the prevention of a Member from attending the Assembly would constitute a breach of privilege, in the instant case the mere fact that the meeting of the University Board had been convened on a day when the House met, could not be considered as prevention from attending the House, as he was not prevented from attending the Assembly. However, it would be appropriate if the meeting of the Board of Management was held on a day when the Assembly was not meeting so that the Member could properly discharge his duties. 465–468

*Questions and answers*

*Supplimentary questions*

Members should only put questions and not make suggestions .. .. .. .. 454, 456

CHAIR—*cont*

Railways and observations—*cont.*

*Question hour*

*Suspension* :

A Member rose on a point of order and stated that it was irregular on the part of the department to have sent a communication to the Members that the question hour would be suspended on a particular day before the House as such decided to suspend it on that day. He added that such an act would amount to almost a contempt of the House.

The Hon. Chief Minister observed that the communication referred to by the hon. Member contained only the decisions of the Business Advisory Committee and it was open to the House even to modify it.

The Chair observed that there was no point of order in the matter referred to by the hon. Members inasmuch as the decisions of the Business Advisory Committee were announced in the House the day before the previous day and perhaps the hon. Member was not present at that time. .. .. .. .. .. 317–318

KOVAI CHEZHIYAN, THIRU.—

Agricuetural University Management Board, Convening of meeting by Vice-Chancellor during Assembly Session (Privilege Matter) .. .. 465–467

Budget, 1974-75, Voting—

Elections

Head of State, Ministers and Headquarters Staff.

Relief on account of Natural Calamities ..
Pensions and Other Retirement Benefits ..
Miscellaneous .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. .. ..
Loans and Advances by the State Government .. .. } 324-333, 341, 389, 391



Removal of Speaker from his Office (R) .. 31,35-39,66, 118

CHILD WELFARE—

Children's Day Care Centres for working mothers in Slum Clearance Board areas .. 442-444

School children, Medical inspection .. 171-173

CHINNA VELLAIYAN, THIRU C.

Middle School in Pailnadu at Kollihills. .. 431

COMMITTEE(S)—

Government Assurances, sixth report, presentation 198

D

DENNIS, THIRU N.—

Apprentice graduate teachers, regularisation of services. .. .. .. .. 168–170

Art silk ribbon industries at Komarapalayam, crisis .. .. .. .. 182-184

Auto-rickshaws, increase in number of licences. .. 458-461

Budget, 1974-75, Voting :

Land Revenue Department .. .. .. 476

Children's Day Care centres for working mothers in Slum Clearance Board areas .. 442-444

Diplomas awarded by Madurai Tamil Sangam, non-recognition .. .. .. 165-168

Kothari Commission report, State Government's views .. .. .. .. 1-4

Rest House at Hogenakkal Project area .. 4-5

Teachers, stipend for trainees .. .. .. 427-430

Vilathurai Lift Irrigation Scheme .. .. .. 179

Weavers from Chinnakkappatti, migration to other Places .. .. .. .. .. 181-182

D—*cont.*

PAGE

**DEVARAJAN, THIRU M.—**

Budget 1974-75, Voting—

Chinchona, Forest Department Capital Outlay on Forests .. .. .. 214-217

**DEVENDIRAN, THIRU A.—**

Removal of Speaker from his Office (R) .. 83

**DHARMALINGAM, THIRU N.**

Budget 1974-75, Voting—

Chinchona, Forest Department Capital Outly on Forests .. .. .. .. .. 240-243

**DISTRICT ADMINISTRATION—**

Radhapuram Sub taluk, upgrading .. .. 184-185

**DORAISAMY, THIRU S.—**

Budget, 1974-75 Voting— .. .. ..
District Administration .. .. ..
Land Revenue Department, Excise Department
Stamp Administration .. .. ..
General Sales Tax and Other Taxes and Duties Administration .. .. .. .. 549-553, 576

**DURAI MURUGAN, THIRU—**

Budget 1974-75, Voting—

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps .. .. .. .. ..
Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. 527-532, 533-534

Elections, Head of State, Ministers and Head quarters Staff .. .. ..
Relief on account of Natural Calamites ..
Pensions and Other Retirement Benefits. ..
Miscellaneous
Compensations and Assignments. ..
Compensation to Zamindars. .. ..
Loans and Advances by the State Government .. 320

Removal of Speaker from his Office (R) 118



E

PAGES

**EDMUND, THIRU G.R.—**

Christian "Paravan" Community students, Cancellation of educational Concessions (C.A.) .. .. 469

Privilege Matter against Mr. Speaker seeking information re. notice of (Point of Order) .. 200,201, 204

Questions (supplementary) denial of sufficient opportunity to ruling party members (Point of Order) .. .. .. .. 463-464

Shops in Slum Clearance Board tenements, lease to private parties .. .. .. 444

Removal of Speaker from his Office (R) .. 31, 50, .. 51, 67 .. 83-96 .. 155-156

**EDUCATION**

Apprentice graduate teachers, regularisation of services .. .. .. .. .. 168-170

Christian 'Paravan' community students, Cancellation of educational concessions (C.A.) .. 469-470

Diplomas awarded by Madurai Tamil Sangam, non-recognition .. .. .. .. 165-168

Kothari Commission's report, State Government's views .. .. .. .. .. 1-4

**ELECTRICITY**

Atomic power plant's establishment .. .. 445-451

Paralayar Hydro Electric Scheme, investigation .. .. .. .. .. 452

Power generation by increasing level of dam of Sathanur project .. .. .. .. 452-454

PAGES

**GURUSAMI, THIRU N.V.—**

Budget 1974-75, Voting—

Elections .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities.
Pensions and other Retirement Benefits
Miscellaneous .. .. .. .. } 356–358
Compensations and Assignments .. ..
Compensations to Zamindars .. .. ..
Loans and Advances by the State Government. .. .. .. ..

## H

**HANDE, Dr. H. V.—**

Allotment of seat to Mr. Speaker during the discussion on the resolution for his removal from office, etc (Point of order) .. .. 29, 30

Appropriation Bill, 1974 .. .. 99-100

Budget 1974-75, Voting—

Cinchona .. .. .. } 207, 208,
Forest Department .. .. .. .. 218–224
Capital Outlay on Forest .. .. .. 283

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. .. } 475, 480
Stamps—Administration .. .. ..
General Sales Tax and other Taxes and Duties-Administration .. .. .. ..



**HANDE, Dr. H.V.—cont.**

PAGES

Budget 1974-75, Voting—

Elections. .. } 319, 320
Head of State, Ministers and Headquarters Staff. .. 321, 322
Relief on account of Natural Calamities. 323
Pensions and Other Retirement Benefits. .. 365-369
Miscellaneous. .. .. 419-420
Compensations and Assignments. .. .. 421
Compensation to Zamindars. .. ..
Loans and Advances by the State Government ..

Questions (supplementary) denial of sufficient opportunity to ruling party members. (Point of order) .. .. .. .. .. .. 464

Suspension of question hour, communication to Members before decision of the House (Point of order) .. .. .. . .. 317-318

**HANDLOOM—**

Weavers from Chinnalappatti, migration to other places .. .. .. .. 181-182

**HARIJAN WELFARE—**

Scheduled Caste students, scholarships .. 11-12

**HORTICULTURE—**

Pine apple cultivation, incentive to growers .. 20-21

Research Station, Kallar, expansion .. 21-22

**HOSPITALS AND DISPENSARIES—**

Ambulance Vans in Medical College hospitals in Madras City increase in number .. 175

Artificial Limb centres, opening in all hospitals .. 173-175

Hosur hospital, additional buildings .. 176-177

H—*cont.*

PAGES

**HOUSING—**

House Building Societies (Co-operative), Chengam taluk .. .. .. .. .. 186-188

Houses for dhobies and barbers .. .. 9-10

I

**INAM ESTATES—**

Kodarangulam Inam Estate, Ambasamudram taluk, non-collection of levy or melvaram from ryots and failure to auction buildings, usufructuary trees and fishing rights (C.A.) .. .. 193-197

**INDUSTRIES—**

Art Silk Ribbon Industries at Komarapalayam Crisis .. .. .. .. .. 182-184

Electrical Testing Laboratory, Kakkalur .. 180-181

Footwear Production Centre, Mappedu, representation from employees .. .. 461-463

I

**IRRIGATION—**

Ayyaneri canal in Kethandampatty, Thirupathur taluk, remodelling .. .. .. 16

Flood channel near Thiruppathur, remodelling .. 16-17

Kondagai supply channels, Ramanathapuram district, desilting .. .. .. 178

Periakottai Kanmoi in Manamadurai Panchayat Union, deepening .. .. .. 439

T. Pudukkottai Kanmoi in Manamadurai Panchayat Union, deepening .. .. .. 430

Vilathurai lift irrigation scheme .. .. 179



J

PAGES

JAMES, THIRU J.—

Budget 1974-75, Voting—

Cinchona .. .. .. } 205, 206, 207, 267, 275, 285
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. ..
District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. .. ..
Stamps—Administration .. ..
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. 477, 478, 480, 566

Elections .. .. .. } 318, 322, 337-342
Head of State Ministers and Headquarters Staff.
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government .. 452

Paralayar Hydro-Electric scheme, investigation .. 70-73

Removal of Speaker from his Office (R) ..

JAYARAMAN, THIRU K.— 438

By-pass road at Salem, formation ..

K

KAMATCHI, THIRU K.—

Budget 1974-75, Voting—

Elections .. .. .. } 342-345
Head of State, Ministers and Headquarters staff ..
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government ..

PAGES

KANDAPPAN, THIRU S.—
Removal of Speaker from his Office (R) .. 60-67, 69-70

KANDASAMY, THIRU K.—
Motion for Speaker's removal from office being not specific(point of order) .. .. .. .. 29–30

KANDASAMY, THIRU K. P.—
Budget, 1974–75, Voting —
Cinchona .. .. .. .. ..
Forest Department .. .. .. .. } 273
Capital Outlay on Forests .. .. .. ..

KANDASAMI, THIRU Manali, C.—
Budget 1974-75, Voting—
Elections. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff ..
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. .. } 376–380
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government ..
Removal of Speaker from his Office (R) .. 122–123

KARUNANIDHI, Dr. M.—
Appropriation Bill, 1974 .. — 98–100
Budget, 1974–75, Voting—
Elections .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff .. } 318, 319,
Relief on account of Natural Calamities .. 320, 321,
Pensions and Other Retirement Benefits .. 322, 323,
Miscellaneous .. .. 328, 330,
Compensations and Assignments .. .. 331, 338,
Compensation to Zamindars .. .. 348, 372,
Loans and Advances by the State Government .. 373, 374,
385, 388
394, 399,
403–421



PAGES

KARUNANIDHI, DR. M.—cont.
Privilege Matter against Mr. Speaker, seeking information re. notice of (Point of order) .. 201
Removal of Speaker from his Office (R) .. 92, 93, 94-95, 97, 114, 115, 116, 119, 140

KITTAPPA, THIRU N.—
Atomic Power Plants, establishment .. 445–451
Metal road along banks of Ayyavayyanar river, Mayuram taluk .. .. .. 22
Repatriates from Sri Lanka .. .. 12–15
School children, medical inspection .. .. 171–173
Taxies and auto-rickshaws, number plying in Madras City .. .. .. .. 458–461

KOTHANDARAMIAH, THIRU K. S.—
Budget 1974-75, Voting—
Cinchona .. .. .. } 258–261
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. ..
District Administration .. .. } 474–475
Land Revenue Department .. —
Excise Department .. ..
Stamps—Administration .. ..
General Sales Tax and other Taxes and Duties-Administration .. .. ..
Elections .. .. .. } 363–365
Head of State, Ministers and Headquarters Staff ..
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government ..
Hosur hospital, additional buildings .. .. 176–177

K—*cont.*

PAGES

ISHNAMOORTHI, THIRU V. (Nellikuppam)

Budget, 1974-75, Voting—

District Administration .. .. .. }
Land Revenue Department .. .. }
Excise Department .. .. .. } 14
Stamps-Administration .. .. }
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. }

Elections .. .. .. .. }
Head of State Ministers and Headquarters Staff.. }
Relief on account of Natural Calamities .. }
Pensions and Other Retirement Benefits .. }
Miscellaneous .. .. .. }
Compensations and Assignments .. .. }
Compensation to Zamindars .. .. }
Loans and Advances by the State Government.. } 369–376

Removal of Speaker from his Office (R) .. 87,88

UMARASAMI, THIRU K.N.—

Budget 1974–75, Voting

Cinchona .. .. .. }
Forest Department .. .. .. } 235–239
Capital Outlay on Forests .. .. }

Elections .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters staff.. }
Relief on account of Natural Calamities .. }
Pensions and Other Retirement Benefits. .. } 321
Miscellaneous .. .. .. }
Compensations and Assignments .. .. }
Compensation to Zamindars .. .. }
Loans and Advances by the State Government .. }

Removal of Speaker from his Office (R), .. 85



L

PAGES

LANDS—

Acquired for railway line in Kanyakumari district, non-payment of compensation to owners (C.A.) 470–472

Acquisition under Inam Estates Act, eviction of cultivating tenants .. .. .. 17–20

LATHEEF, THIRU M. A.—

Budget, 1974–75, Voting—

Cinchona .. .. .. } 208, 227
Forest Department .. .. .. } 264–267
Capital Outlay on Forests .. }

District Administration .. .. }
Land Revenue Department .. .. } 477, 478,
Excise Department .. .. .. } 519, 523,
Stamps-Administration .. } 542
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. }

Removal of Speaker from his Office (R) .. 32, 49–45

M

MADHAVAN, THIRU S.—

Kodarangulam Inam Estate, Ambasamudram Taluk, non-collection of levy or melvaram from ryots and failure to auction buildings, usufructuary trees and fishing rights (C. A. St.) .. .. 196–197

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1974–75, Voting—

District Administration .. .. }
Land Revenue Department .. .. } 490-497
Excise Department .. .. .. } 565–566
Stamps Administration .. }
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. }

PAGES

MOHIDEEN, THIRU Thiruppur A. M.—
Budget 1974-75, Voting—
Elections .. .. .. } 340
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities ..
Pensions and other Retirement Benefits ..
Miscellaneous .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government ..

MOSES, Dr, M.—
Budget 1974-75, Voting—
Cinchona .. .. .. .. } 209-214
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. .. ..

MOTION (S)—
B. O. H., Change in order .. .. 98
Suspension of Rule 22 .. .. .. 317

MUNUSAMI, THIRU R. R.—
Ambulance Vans in Medical College Hospitals in Madras city, in crease in number .. 175
Pine apple cultivation, incentive to graowers .. 20-21
Slum Clearance Board tenements, New Residents Welfare Trust, .. .. .. 439-442
Transport Development Council, setting up .. 192-193

MURUGAIYAN, THIRU S.—
Budget 1974-75, Voting—
Cinchona .. .. .. .. } 248-252
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. .. ..



N

PAGES

CHIAPPAN, THIRU N.—
Power generation by increasing level of Damof Sathanur Project .. .. .. 452-454

GARAJAN, THIRU K.—
Budget 1974-75, Voting—
Cinchona .. .. .. .. } 262-264
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. ..

RASIMHAN, THIRU A. C.—
dget 1974-75, Voting —
District Administration .. } 515-516, 518-519, 536 537-543
Land Revenue Department ..
Excise Department .. ..
Stamps Administration .. ..
General Sales Tax and other Taxes and Duties Adminitstration ..
Questions (supplementary), denial of sufficient opportunity to ruling party members (Point of Order) .. .. .. .. 465

ARAYANASAMY, THIRU Mannai P.—
Paddy and rice, soaring price in Tiruchirappalli district and need to arrest the same (C.A. St.) .. 197-198

EDUNCHEZHIYAN, Dr. V. R.—
Appropriation Bill, 1974 .. .. .. 99
B. O. H., Change in order, .. .. 98
Christian 'Paravan' community Students, Cancellation of educational concessions (C.A. St.) 469-470
Removal of Speaker from his Office (R) .. 34-35, 68, 91, 143-152
Suspension of Rule 22 (M) .. .. .. 317

## O

PAGES

OIL—

Kerosene and petrol, seizure in Aminjikarai .. 25–27

## P

PALANIAPPAN, Dr. S. M.—

Budget 1974–75, Voting :—

Cinchona .. .. .. ..
Forest Department .. .. ..
Capital Outlay on Forests .. .. } 224–228

PALANISAMY, PAVALAR C.—

Budget 1974–75, Voting :—

District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other taxes and Duties Administration .. .. .. } 553–555

PALANISAMY, THIRU N. K.—

Artificial Limb Centres, opening in all hospitals .. 173–175
Auto rickshaws, increase in number of licences .. 458–461
Backward Communitieslist, on the basis of economic backwardness .. .. .. 10

Budget 1974–75, Voting :—

District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. .. .. 474, 479,
Stamps Administration .. .. .. 485
General Sales Tax and other Taxes and Duties .. 524–527
Administration .. .. .. 561



PAGES

ALANISAMY, THIRU N.K.—cont.

Chola Art Gallery, Sri Brahadeeswarar Temple, Thanjavur .. .. .. .. .. .. 5–7
Diplomas awarded by Madurai Tamil Sangam, non-recognition .. .. .. .. .. 165–168
Electrical Testing Laboratory, Kakkalur .. .. 180–181
Fishing, legislation to regulate .. .. 436–438
Pallavan Transport Corporation, loans advanced to .. .. .. .. .. .. .. 188–192
Petrol, introduction of rationing .. .. .. 454–458
Sun-flower seeds, fixation of price .. .. 22–24
Weaver from Chinnalapatti, migration to other places 181–182

PAPERS LAID ON THE TABLE—

Appropriation Bill, 1974— 287
Cinchona Department, Policy Note on .. .. 157
Cinemas (Regulation) Act, 1955, Notification .. 424
Commercial Budget on Cinchona Department .. 157
Committee on Government Assurances, Sixth report (Fifth Assembly) .. .. .. .. 287
Co-operative Housing in Tamil Nadu (Tamil) .. 157
Demand No. 4—General Sales Tax and other Taxes and Rules Administration, Note on .. 425
Demands—Land Revenue, Note on .. .. 287
Eighth Annual Report and Statement of Accounts of Tamil Nadu Industries Corporation Limited .. .. 157
Excise Act, 1971, Notification.. .. .. .. 425
Excise Act, 1971 (Tamil Nadu Act 34/1971), notification.. .. .. .. .. .. 590

PAGES

**PAPERS LAID ON THE TABLE**—*cont.*

Forests, Policy Note on .. .. .. .. 157
Housing in Tamil Nadu (Tamil) .. .. .. 157
Indian Stamp Act, 1899, notifications .. .. 297
Indian Stamp (Tamil Nadu Amendment) Bill 1974, with Annexure .. .. .. .. .. 151
Prohibition Laws, Review .. .. .. 436
Welfare Programme for Women and Children and the physically Handicapped .. .. .. 431
Welfare Schemes for Ex-Servicemen, Policy Note.. .. .. .. .. .. .. 42

**PARANDHAMAN**, Thiru A.—

Bridge across Kwshastali on Tiruthani–Nagalapuram Road .. .. .. .. .. .. 179–1

Budget, 1974–75, Voting—
District Administration .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. 498–501, 577

**PAULIAH**, Thiru A.—

Lands acquired for Railway line in Kanyakumari district, non-payment of compensation to owners (C. A.) .. .. .. .. .. .. .. .. 470–471

**PETROL**—

Introduction of Rationing .. .. .. .. 454–45

**POINTS OF ORDER**—

Allotment of seat to Mr. Speaker, during the discuss on on the resolution for his removal from office, etc. .. .. .. .. 29, 1

Demand for Grant Moving of by Public Works Minister, instead of by Chief Minister as notified 4



PAGES

**POINTS OF ORDER**—*cont.*

Privilege Matter against Mr. Speaker, seeking information re. notice of .. .. .. .. 198–205
Questions (supplementary), denial of sufficient opportunity to ruling party members .. .. 463–465
Motion for Speaker's removal from Office being not spec fic .. .. .. .. .. 29–30
Suspension of Question Hour, communication to Members before decision of the House .. .. 317–318

**PONNAPPA NADAR**, Thiru R.—

Budget, 1974–75, Voting—
Elections .. .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff..
Relief on account of Natural Calamities .. ..
Pensions and Other Retirement Benefits .. ..
Miscellaneous .. .. .. .. .. ..
Compensations and Assignments .. .. ..
Compensation to Zamindars .. .. ..
Loans and Advances by the State Government ..
} 322, 340, 348, 395–403

Removal of Speaker from his Office (R) .. .. 128–147, 155

**PRIVILEGE MATTER**—

Agricultural University Management Board, convening of meeting by Vice Chancellor during Assembly Session .. .. .. .. .. 465–468

## R

**RADHAKRISHNAN**, Thiru M. S.—

House Building Societies (Co-operative), Chengam taluk .. .. .. .. . .. .. 186–188

PAGES

**RAJA, THIRU A. M.—**

Budget, 1974–75, Voting—

District Administration .. .. .. } 507–515, 540
Land Revenue Department .. .. ..
Excise Department, .. .. .. ..
Stamps Administration .. .. .. ..
General Sales Tax and other Taxes and Duties Administration .. .. .. .. ..

**RAJAGOPAL, THIRU K. M.—**

Budget, 1974–75, Voting—

Elections .. .. .. .. .. } 351–356
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities
Pensions and Other Retirement Benefits .. ..
Miscellaneous .. .. .. .. ..
Compensations and Assignments .. .. ..
Compensation to Zamindars.. .. .. ..
Loans and Advances by the State Government ..

**RAMAN, THIRU O. P.—**

Budget, 1974–75, Voting—

Cinchona .. .. .. .. .. .. 205, 206
Forest Department .. .. .. .. .. 207, 208
Capital Outlay on Forests .. .. .. .. 271, 27[illegible], 284, 28[illegible]

**RAMASAMY, THIRU G.—**

Ayyaneri canal in Kothandampatty, Thiruppathur taluk, remodelling, .. .. .. .. .. 1[illegible]

Bharat Sevak Samaj, grant.. .. .. .. 434–43[illegible]

Flood channel near Thiruppathur, remodelling .. 10–1[illegible]

**REPATRIATES—**

[illegible] Lanka, .. .. .. .. .. 12–1[illegible]



PAGES

**RESOLUTION:** 28–29

Removal of Speaker from his Office .. .. 31–97, 100–156

**ROAD(S):**

Bye-pass road at Salem, formation .. .. .. 438

Metal road along banks of Ayyavayyanar river, Mayuram taluk .. .. .. .. .. 22

Then Pudukkottai Road in Manamadurai Panchayat Union, black topping .. .. .. .. 438

## S

**SADIQ PASHA, THIRU S. J.—**

Budget, 1974–75, Voting—

Cinchona .. .. .. .. .. .. } 281
Forest Department .. .. .. .. ..
Capital Outlay on Forests.. .. .. } 473, 475, 476, 477, 479, 482–489, 497, 498, 502, 514, 515, 523, 532, 533, 540, 541, 554, 555, 559–561, 562–565, 566–567, 568–571, 572–577
District Administration .. ..
Land Revenue Department .. ..
Excise Department .. ..
Stamps Administration .. ..
General Sales Tax and other Taxes and Duties Administration .. ..

PAGES

SADIQ PASHA, THIRU S.J.—cont.

Elections .. .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities ..
Pensions and Other Retirement Benefits ..
Miscellaneous ..
Compensations and Assignments ..
Compensation to Zamindars ..
Loans and Advances by the State Government .. } 401

Kodarangulam Inam Estate, Ambasamudram Taluk non-collection of Levy or melvaram from ryots and failure to auction buildings, usufructuary trees and fishing rights (C. A. St.) .. 193–196

Occupants of Kudikiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974— .. 473

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Children's Day Care Centres for Working mothers in Slum Clearance Board areas .. 442–444

Kerosene and petrol seizure in Aminjikarai .. 25–27

Kodarangulam Inam Estate, Ambasamudram taluk non-collection of levy or melvaram from ryots and failure to auction bulidings, usufructuary trees and fishing rights (C.A.) .. 193, 196

Lands acquired under Inam Estates Act, eviction of cultivating tenants .. 17–20

Murugan Temple, Pazhamudir Solai, construction 27–28

SCHOOL(S)—

Middle, in Pailmadu at Kolli Hills .. 431

School Improvement Conferences .. 170–171



PAGES.

SEENIVASAN, THIRU P.—

Budget, 1974–75, Voting—

District Administration ..
Land Revenue Department ..
Excise Department ..
Stamps–Administration ..
General Sales Tax and other Taxes and Duties–Administration .. } 503

Elections ..
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities ..
Pensions and Other Retirement Benefits ..
Miscellaneous ..
Compensations and Assignments ..
Compensation to Zamindars ..
Loans and Advances by the State Government .. } 384, 421

Removal of Speaker from his Office (R) .. 81, 83

SELLADURAI, THIRU V.—

Overbridge across railway line near Omalur town 15–16

SHANMUGHAM, THIRU P. U.—

Lands acquired for railway line in Kanyakumari district, non-payment of compensation to owners (C. A. St.) .. 470–472

SIVAPRAKASAM, THIRU D.S A.—

Houses for dhobies and barbers .. 9–10

School Improvement Conferences .. 170–171

SOCIAL WELFARE—

Bharat Sevak Samaj, grants .. 434–435

Shops in Slum Clearance Board tenements, lease to private parties .. .. .. 444

Slum Clearance Board tenements, New Residents Welfare Trust .. .. .. .. 439–442

PAGES.

**SONIAH, THIRU T.—**

Kandagai Supply channel, Ramanathapuram district, desilting .. .. .. .. 178

Overbridge near Madurai Mills at Pazhanganatham, Madurai .. .. .. .. 177–178

Periakottai Kanmoi in Manamadurai Panchayat Union deepening .. .. .. .. 439

Then. Pudukkottai Kanmai in Manamadurai Panchayat Union, deepening .. .. .. 439

Then. Padukkottai Road in Manamadurai Pnchayat Un on, black topping .. .. 438

**SOUNDARAPANDIAN, THIRU P.—**

Atomic power plants, establishment .. .. 445–451

Budget, 1974–75 Voting:

Cinchona .. .. .. .. ..
Forest Department .. .. .. ..
Capital Outlay on Forests .. .. .. } 205

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Taxes and other Taxes ..
and Duties-Administration .. .. } 473. 478

Elections. .. .. .. .. ..
Head of State, Ministers and Headquarters Staff
Relief on account of Natural Calamities. ..
Pensions and other Retirement Benefits. ..
Miscellaneous .. .. .. ..
Compensations and Assignments .. ..
Compensation to Zamindars .. ..
Loans and Advances by the State Government } 318–323

**Family cards issued in Madurai .. .. 25**



PAGES

**SOUNDARAPANDIAN, THIRU P.—*cont.***

Paddy and rice soaring price in Tiruchirappali District and need to arrest the same (C.A) .. .. .. .. 197,198

Pension and welfare funds to retired teachers of Kulithalai Panchayat, Union primary schools, disbursement .. .. .. .. 24

Removal of Speaker from his Office (R). ... 92

Scheduled Caste students, scholarships .. 11–12

**SUBBIAH, THIRU A.K.—**

Budget, 1974–75, Voting H.—

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other taxes .. ..
and Duties Administration .. } 474,475 478,480 556,559

**SUBRAMANIAM, THIRU A.—**

Footwear production Centre, Mappedu, representation from employees .. .. 461–463

Privilege Matter against Speaker Mr. seeking, information re. notice of (point of order) .. .. 198,199 202

Removal of Speaker from his Office (R) .. 100–105

**SUBRAMANIAM, THIRU K.M.—**

Budget, 1974–75, Voting—

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps Administration.. .. ..
General Sales Tax and other ..
Taxes and duties Administration .. } 480,516 518,519 520 540,576

Questions (supplementary), denial of Sufficient opportunity to ruling party membezs (Point of order) 464

PAGES

SUBRAMANIAM, THIRU S.K.—

Budget, 1974–75. Voting—

Chinchona .. .. .. .. }
Forest Department .. .. .. .. } 256–258
Capital Outlay on Forests .. . .. }

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—

Budget 1974–75, Voting :—

Cinchona .. .. .. .. .. } 205,206
Forest Department .. .. .. .. } 208
Capital Outlay on Forest .. .. . } 232,235

Removal of Speaker from his Office (R) . 30–40
68–69

SURENDRAN, THIRU M.—

Bhoodan movement, extent of land recived .. 433–434

Budget, 1974–75, Voting—

Elections. .. .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff. }
Relief on aceount of Natural Calamities. .. }
Pensions and Other Retirement Benefits. .. }
Miscellaneous. . .. .. .. } 318,319
Compensation and Assignments. .. .. } 320
Compensation to Zamindars. .. .. } 361–363
Loans and Advances by the State Government .. }

Questions (supplementary), denial of Sufficient opportunity to ruling party members (Point of order) .. .. .. .. .. 464

Removal of Speaker from his office (R) .. 68



PAGES

SWAMIDHAS, THIRU A.—

Budget 1974–75, Voting—

District Administration .. .. .. }
Land Revenue Department .. .. . }
Excise Department .. .. .. .. } 474
Stamps Administration .. .. .. } 502–507
General Sales Tax and other .. .. }
Taxes and Duties–Administration .. .. }

Elections. .. .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff. }
Relief on account of Natural Calamities. .. }
Pensions and Other Retirement Beneifits. .. }
Miscellaneous. .. .. .. .. } 319–321
Compensations and Assignments. .. .. }
Compensations to Zamindars. .. .. }
Loans and Advances by the State Government. }

T

ANGAMANI, THIRU K.T.K.—

Budget, 1974–75, Voting—

Cinchona .. . .. .. .. }
Forest Department. .. .. .. } 206–208
Capital Outlay on Forests. .. . }

District Administration .. .. .. }
Land Revenue Department .. .. .. }
Excise Department .. .. .. .. } 476–541
Stamps Administration .. .. .. } 575–575
General Sales Tax and other taxes .. .. }
and Duties Administration .. .. }

Elections. .. .. . .. .. }
Head of State, Ministers and Headquarters Staff. }
Relief on account of Natural Calamities. .. }
Pensions and other Retirement Benefits. .. } 319,372
Miscellaneous. .. .. . .. } 385–395
Compensations and Assignments. .. .. }
Compensation to Zamindars. .. .. }
Loans and Advances by the State Government .. }

B.O.H., Change in order, .. .. .. 98

T—*cont.*

PAGES

TANGAMANI, THIRU K.T.K.—*cont.*

Demand for grant, moving of by the Public Works Ministers instead of by Chief Minister as notified (Point of order) .. .. 481

Privilege Matter against Mr. Speaker seeking information re. notice of (Point of order) .. 202–203

Removal of Speaker from his Office (R) .. 31,32 46,47 108–122

TEACHERS

Pension and welfare funds to retired teacher of Kulithali Panchayat Union primary schools disbursment 24

Stipend for trainees .. .. .. 427–430

TEMPLES

Maintained by Central Government .. 7–9

Murugan Temple, Pazhamudir Solai, construction 27–28

THIRUVENGADAM, THIRU THOPPUR

Budget 1974–75, Voting:—

Cinchona .. .. .. .. ..
Forest Department .. .. .
Capital Outlay on Forests .. .. .. } 228–232

T OOYAMANI, THIRU M.C.

Fruit Research Station at Kallar, expansion, .. 21–22

THYAGARAJAN, THIRU E.S.—

Budget 1974–75, Voting—

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other taxes .. ..
and Duties Administration .. . .. } 547.54



T—*cont.*

PAGES

THYAGARAJAN, THIRU E. S.—*cont.*

Committee on Government Assurance, Sixth report, presentation .. .. .. 198

Removal of Speaker from his Office (R) .. 105–106

TOURISM

Kovalam Beach, development .. .. 431–433

Rest House at Hogenakkal Project area .. 4–5

TRANSPORT AND COMMUNICATIONS

Autorickshaws increase in number of licences 458–461

Developement Council (Transport) setting up .. 192–193

Pallavan Transport Corporation Loans advanced to. . .. .. .. .. 188–192

Petrol, introduction of rationing .. .. 454–458

Taxies and Autorickshaws, number plying in Madras City .. .. .. .. 458–461

V

VADIVEL, THIRU S.—

Budget, 1974–75, Voting.—

Cinchona .. .. .. ..
Forest Department .. . ..
Capital Outlay on Forests .. .. .. } 205, 253 256, 284

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. . .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other Taxes and
Duties-Administration .. .. .. } 479

PAGES

VADIVELU, THIRU S—*cont.*

Elections .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff |
Relief on account of Natural Calamities .. |
Pensions and other Retirement Benefits .. | 320, 321
Miscellanous .. .. .. . } 323
Compensations and Assignments .. .. | 45–48
Compensation to Zamindars .. .. |
Loans end advances by the State Government .. |
Removal of Speaker from his Office (R) .. }

VEERASAMI, THIRU N.—

Budget, 1974–75, Voting—

Cinchona .. .. .. .. }
Forest Department .. .. .. } 273
Capital Outlay on Forests .. .. }

District Administration .. .. .. }
Land Revenue Department .. .. |
Excise Department .. .. .. |
Stamps Administration .. .. .. } 568
General Sales Tax and other Taxes .. |
and Duties-Administration .. .. }

Elections. .. .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff |
Relief on account of Natural Calamities .. |
Pensions and other Retirement Benefits .. |
Miscellaneuos .. .. .. } 380–385
Compensations and Assignments .. .. | 420
Compensation to Zamindars .. .. |
Loans and Advances by the State Government .. .. .. .. }

Demands (supplementary), denial of sufficient }
opportunity to ruling party members (Point of } 463
order) .. .. .. .. .. }

Removal of Speaker from his Office (R) .. 73–82
88–89
90, 91
124



PAGES

VELAPPAN, THIRU C.V.— }
Budget, 1974–75, Voting— |
District Administration .. .. |
Land Revenue Department .. .. .. |
Excise Department .. .. .. } 520–524
Stamps Administration .. .. .. | 571,572
General Sales Tax and other .. .. |
Taxes and Duties-Administration .. .. }

VENKATASWAMY, THIRU B.—

Budget, 1974–75, Voting—

District Administration .. .. .. }
Land Revenue Department .. .. .. |
Excise Department .. .. .. | 476 478
Stamps Administration .. .. .. } 479
General Sales Tax and other .. . |
Taxes and Duties – Administration .. .. }

Removal of Speaker from his Office (R) .. 106–198

VEZHAVENDAN, THIRU K.—

Budget, 1974–75, Voting—

Elections .. .. .. .. .. }
Head of State, Ministers and Headquarters Staff |
Relief on account of Natural Calamities .. |
Pensions and other Retirement Banefits .. |
Miscellaneous .. .. .. .. }
Compensations and Assignments. .. .. |
Compensation to Zamindars .. .. |
Loans and Advances by the State Government .. } 333–337

Kovalam Beach, development .. .. 431–433

Temples, maintained by Central Government .. 7 8

## W

PAGES

WAHAB, THIRU K.A.—

Budget, 1974–75, Voting—

District Administration .. .. ..
Land Revenue Department .. .. ..
Excise Department .. .. ..
Stamps Administration .. .. ..
General Sales Tax and other .. ..
Taxes and Duties–Administration .. .. } 473,475, 480, 534–537, 576

6/1656

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

## IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Son., Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil Kanyakumari district.
Messrs. Baby Stores Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A- -1,00,000-30-1-84.